T.N.L.A Debates

OFFICIAL REPORT

VOL: XLIII No: 4 and 5

March 7 and 8 1983

C


V2ll,81 'N83
N83.43.4&5
135789

வெளியீடு 8-11-1983] [Issued 8-11-1983

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
10 சன 1984
2678
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

1/6

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை மார்ச் 7, 1983—தொகுதி XLIII எண் 4

Monday 7th March 1983—Volume XLIII No. 4

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

Legislative Assembly Department, Fort St. George
Madras-600009

விலை ரூ. 3-50 காசுகள்]

135989

# உள்ளடக்கம்.

## 7—3—1983.


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 355—391 |
| 2. டெல்லியில் கூடும் அணிசேரா நாடுகளின் மகா நாட்டிற்கு வாழ்த்து .. .. .. | 391—398 |
| 3. தகவல் கோரல்— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 399 |
| 4. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| கரும்புக்கு சென்ற ஆண்டு அறிவித்த விலையை இவ்வாண்டு அரசு குறைத்துள்ளது | 399—412 |
| 5. அறிக்கை அளித்தல்— | |
| உரிமைக் குழு .. .. .. .. | 413 |
| 6. அரசினர் சட்ட முன் வடிவுகள்— | |
| (அ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983. | 413 |
| (ஆ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1983 .. .. .. .. | 414 |
| (இ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1983 .. .. .. .. .. | 414 |
| (ஈ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983 .. .. .. .. .. | 414 |
| (உ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1983 .. .. .. | 414 |
| (ஊ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983 .. .. | 415—489 |
| (எ) பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாப்பளித்தல்) சட்டமுன்வடிவு, 1983 .. .. | 501—489 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 501 |

V211,31 N83
N83·43·4
135989
சென்னை 600 008

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**திங்கட்கிழமை 1983 மார்ச் 7**

**மாசி 23, துந்துபி, திருவள்ளுவர் ஆண்டு 2014**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

'' ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் ''.

ஒழுக்கமே எல்லார்க்கும் மேன்மையைத் தருவதாகும். எனவே அந்த ஒழுக்கத்தை உயிரைவிடச் சிறந்ததாகப் போற்ற வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### மீன்வளர்ப்போர் அபிவிருத்தி அமைப்புகள் ஏற்படுத்தும் திட்டம்

***வினா எண் 300—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை, பெரியார், கன்னியாகுமரி, வடாற்காடு ஆகிய மாவட்டங்களில் மீன் வளர்ப்போர் அபிவிருத்தி அமைப்புகள் ஏற்படுத்தும் உத்தேசம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இம்மாவட்டங்களில், கீழ்க்காணும் தேதிகளில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகின்றன :—

(1) புதுக்கோட்டை மாவட்டம் 19—6—1982.

(2) பெரியார் மாவட்டம் 1—7—1982.

(3) கன்னியாகுமரி மாவட்டம் 2—6—1982.

(4) வட ஆற்காடு மாவட்டம் 19—5—1982.

போய்விட்டது. இன்றையதினம்வந்து 155 ரூபாய்தான் கரும்பு விவசாயிகளுக்கு கொடுப்போம்என்கிற நிலையில் இந்த அரசாங்கம் அறிவித்து இருக்கிறார்கள் என்றால் விவசாயிகள் மீண்டும் கரும்பு நட. வேண்டாமா? அப்படி நடப்படாததன் மூலமாக அடுத்த ஆண்டுக்கு கரும்பு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு கிடைக்காத அளவுக்கு நீங்கள வழிவகைகளைத்தான் செய்கிறீர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் சில மாதங்களுக்கு முன்னதாக சொன்னார்கள், மத்திய அரசாங்கம் நாங்கள் அதிகமாக விலை கொடுப்பதற்கான முயற்சிகளில் எங்களுடைய கைகளை கட்டி விட்டார்கள் என்று. 130 ரூபாய் என்று அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் அவர்கள் சொல்லியிருப்பதற்கு மேலாக நாங்கள் அறிவிக்க வேண்டுமானால் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் அறிவிக்கவேண்டும் என்றும் எங்களை அறிவிக்கமுடியாமல் எங்கள் கைகளை கட்டி விட்டார்கள் என்று மேடையிலோ எங்கேயோ பேசியதாக பத்திரிக்கையில் வந்தது. இப்போது அந்த நிலமை கூட கிடையாது. எங்களை கலக்காமல் உரிய விலையை, நியாயமாக விலையை விவசாயிகளுக்கு பெற்றுத்தரலாம், விலையை அறிவிக்கலாம் என்று அண்மையில் மத்திய அரசாங்கம் முன்பு இருந்ததை தளர்த்து சொல்லியிருக்கிறார்கள். இப்படி சொன்ன பிறகு கூட என்ன காரணத்திற்காக நீங்கள் 155 ரூபாய் என்று அறிவித்து இருக்கிறீர்கள் என்பதை எங்களால் புரிந்துக்கொள்ளமுடியவில்லை.

அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் 130 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவே தப்பு தான். அதை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. ஏன் என்றால் மத்திய அரசாங்கம் நிர்ணயித்து இருக்கக்கூடிய அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் சென்ற ஆண்டிலேயும் சரி இந்த ஆண்டிலேயும் சரி மினிமம் பிரைஸ் 155 என்று அவர்கள் சிபாரிசு செய்தார்கள். ஆனால் மத்திய மந்திரி சபையில் 130 ரூபாய்க்கு மேல் ஏற்றினால் அது மத்திய அரசுக்கு பஞ்சப்படி, நிவாரணப்படி கொடுப்பதற்கு 300 கோடிக்கு அதிகமாக வரும் என்ற காரணத்தினால் ரூபாய் 130ஐ வைத்துவிட்டு அதை உயர்த்தாமல் அந்த உயர்த்தும் பொறுப்பினை மாநில அரசின் தலையில் கட்டியிருக்கிறார்கள். அந்த சிரமம் எங்களுக்குப் புரிந்தது தான். இருந்தாலும் இந்த 155 என்று சொல்வது இந்த விவசாயிகளுக்கு கட்டுப்படி ஆகாது. ஏற்கெனவே வறட்சி நிலையாக இருக்கிறது. ஏற்கெனவே 40 டன் 45 டன் ஒரு ஏக்கருக்கு கிடைத்தது என்றால் இன்றைய தினம் 30 டன் தான் ஒரு ஏக்கருக்கு கிடைக்கக்கூடிய நிலமை இருக்கிறது. வறட்சியால் கரும்பு காய்ந்து போய்விட்டது. யீல்டு குறைந்துவிட்டது. சென்ற ஆண்டு தமிழ்நாட்டிலே 80 லட்சம் 82 லட்சம் டன் கிரஷ் பண்ணினார்கள். இந்த ஆண்டிலே 68 லட்சம் டன்னைக்கூட எட்டமுடியாத அளவுக்கு இன்றையதினம் நிலமை இருக்கிறது. அதோடு மட்டும்



அல்ல. சென்ற ஆண்டு இந்த மாதத்தில் எவ்வளவு கரும்பு நட்டார்
கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஆலைகளில் எவ்வளவு
கரும்பைப் பிழிந்தார்கள். அதேபோல் இந்ததேதி வரை இன்றைய
தினம் தமிழ்நாட்டில் எவ்வளவு கரும்பை நட்டு இருக்கிறார்கள்.
எாவளவு கரும்பை சர்க்கரை ஆலையில் பிழிந்தார்கள் என்ற
கணக்கைப் பாருங்கள். இதற்கு உரிய விலை நியாயமான விலை
கிடைத்தால் தான் இந்த துறையைக் காப்பாற்ற முடியும்.
விவசாயிகளைக் காப்பாற்றமுடியும். இந்த விவசாயத்தை நம்பி
இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களைக் காப்பாற்ற முடியும்
என்கிற நிலமைக்கு நீங்கள் வரமுடியும்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். மாநில
அரசாங்கமே, மத்திய அரசாங்கத்திற்கு கரும்புக்குக் குறைந்த
பட்ச விலையாக 200ரூபாய் நிர்ணயிக்க வேண்டுமென்று எழுதி
யிருக்கிறீர்கள், முதலமைச்சரே பரிந்துரை செய்ததற்குப்
பிறகு இந்த அரசாங்கமே 200 ரூபாய் கரும்புக்கு குறைந்த
பட்ச விலையாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி 8.5 பர்
சன்ட் ரிக்கவரி கொடுக்கவேண்டுமென்று பரிந்துரை செய்த
தற்குப் பிறகு 155 ரூபாய் என்று நிர்ணயித்து இருக்கிறீர்களே
இது எந்த விதத்திலே நியாயத்தின்பாற்பட்டது என்று திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் கேட்க விரும்புகிறேன்.

இதனைச் சற்று உயர்த்துவது விவசாயிகளுக்கு மட்டுமல்ல
பல நூற்றுக்கணக்கான கோடிக்கணக்கான ரூபாய்களை அந்தத்
தொழிலிலே போட்டிருக்கிறீர்களே, அரசாங்கத்தின் சார்
பில் 8 சர்க்கரை ஆலைகளும், தனியார் சார்பாக
9 சர்க்கரை ஆலைகளும் நடக்கின்றனவே, அடுத்த
ஆண்டு முழுவதும் அந்த ஆலைகள் எல்லாம் வேலை
செய்யவேண்டுமென்றால் உடனடியாக நீங்கள் மத்திய அரசுக்கு
சிபாரிசு செய்திருக்கிறீர்களே, அந்த 200 ரூபாயாவது பெற்றுத்
தரவேண்டும். அப்படிப் பெற்றுத் தருவதற்கு என்ன வழிவகை?
இப்போது மில்களிலே 155 ரூபாய் கொடுக்கமாட்டேன், அவர்களே
நஷ்டப்படுகிறார்கள் என்ற வாதங்களையெல்லாம் கூட அரசாங்
கத்தின் சார்பிலே சொல்லமுடியும். நான் அதற்காக இந்த
அவையை ஒத்திவைத்துப் பேசவேண்டுமென்று நினைக்கிறேன்.
அந்தக் கருத்துக்களை இப்போதே நான் சொல்கிறேன். மாநில
அரசாங்கம் கரும்பு விவசாயிகளிடமிருந்து பர்ச்சேஸ் டாக்ஸ்
ஆகவும் கரும்பு செஸ் ஆகவும் ஆண்டு ஒன்றுக்கு 25 கோடி ரூபாய்
வசூலிக்கிறார்கள். கரும்பு விவசாயிகளின் அந்தப் பணத்தி
லிருந்து தான் சர்க்கரை ஆலை அதிபர்கள் கட்டுகிறார்கள். இந்த
ஆண்டு ரோடு போடுவதற்கு மட்டும் $2\frac{1}{2}$ கோடி ரூபாய் அவர்கள்
ஒதுக்கியிருக்கிறார்கள். மீதியிருக்கக்கூடிய $22\frac{1}{2}$ கோடி ரூபாயை
வறட்சி நிவாரணப் பணியாகக் கருதி இந்த ஆண்டு 70 லட்சம்
டன் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு
30 ரூபாய் மாநில அரசாங்கம் கொடுக்கச் செய்து விவசாயி
களுக்கு ரீப்ளோ என்ற முறையிலே மீண்டும் கொடுப்பீர்களானால்

செய்யவில்லை, கண்ணீரையும், செந்நீரையும் பாய்ச்சித்தான் விவசாயம் செய்ய வேண்டிய பரிதாபமான நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் விவசாய உற்பத்திச் செலவு இன்று கடுமையாகக் கூடி இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையில் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 155 ரூபாய் என்று நிர்ணயித்திருப்பது வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போன்றதாகும். இது நியாயத்திற்கும் ஒத்துக்கொள்ளாது, தர்மத்திற்கும் ஒத்துக்கொள்ளாது. எந்தவிதமான முயற்சியும் இல்லாமல், தண்ணீர் பாய்ச்சாமல், உரம் இடாமல் வளர்க்கப்படுகின்ற வேலிக்கருவை விறகுகூட டன் ஒன்றுக்கு 300 ரூபாய் என்று இருக்கின்றது. ஆனால் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து, களை எடுத்து பயிர் செய்து அறுவடை செய்கின்ற விவசாயிக்கு டன் ஒன்றுக்கு கரும்புக்கு 155 ரூபாய் என்பது எப்படிப் பொருத்தமானதாகும்? எனவே உடனடியாக இதை எல்லாம் இந்த அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும். எத்தனையோ செலவுகளைச் செய்கின்றது இந்த அரசு. லட்சக்கணக்கான பணம் கூட அல்ல, கோடிக்கணக்கான பணத்தை எதற்கெல்லாமோ செலவிடுகின்றது. எனவே விவசாயிகள் நன்றாக வாழ்வதற்குக் கூட இல்லை, உயிரோடு இருப்பதற்காகவாவது டன் ஒன்றுக்கு 200 ரூபாய் என்ற வகையிலே நிர்ணயம் செய்ய தமிழக அரசு முன்வர வேண்டும். கரும்பு விவசாயம் செய்கின்ற விவசாயிக்கு டன்னுக்கு 200 ரூபாய் கொடுத்து மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறோம் என்ற பெயரைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

நான் சில நாட்களுக்கு முன்பு பார்த்தேன். தொழில் துறை அமைச்சர் அவர்கள் டன் ஒன்றுக்கு 155 ரூபாய் என்று அறிவித்தார்கள். தொழில்துறை அமைச்சர் தொழில்களுக்குச் சாதகமாகத்தான் அறிவிப்பார். ஆனால் வேளாண்மைத்துறை அமைச்சர் வேளாண்மைக்குச் சாதகமானவராக இருக்கவேண்டும். ஆனால் வேளாண்மைத்துறை அமைச்சரின் அறிவிப்பு வேளாண்மைப் பற்றி வருவதில்லை. வேண்டாத சில யோசனைகளைச் சொல்வதும், காங்கிரஸைச் சாடுவதும் என்ற நிலைமையில்தான் அவரது அறிக்கைகள் வருகின்றன.

[முற்பகல் 10-40]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வப்போது எந்த எந்த வைத்தியம் தேவையோ அவைகளைத்தான் செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேளாண்மை இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். 100-க்கு 80 சதவீத பெருமக்கள் இந்த வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கிற காரணத்தினால் அவர்கள்பேரு



அக்கறை காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் தமிழக மக்களின் கருத்தை அவர்கள் சார்பாக சொல்கிறேனே தவிர வேறு இல்லை. டன் ஒன்றுக்கு 200 ரூபாய்க்கு அதிகமாக இந்த அரசும் அறிவிக்க வேண்டும் என்று தொடர்ந்து கரும்பு விவசாயம் செய்கின்ற சாதாரண விவசாயி என்ற முறையில் தமிழக விவசாய பெருமக்கள் சார்பாக உங்கள் மூலமாக இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன். இது மெத்த அவசரமான நிலை. இதைக் காட்டிலும் அவசரமான நிலை தமிழகத்தில் எதுவும் கிடையாது. ஆகவே இதுபற்றி விவாதிக்க மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 21 சர்க்கரை ஆலைகளுக்கு பல இலட்சக்கணக்கான கரும்பு விவசாயிகள் கரும்பினை சப்ளை செய்கிறார்கள். அவர்களுக்கு உரிய விலை நடப்பு கரும்பு பிழியும் சீசனில் கிடைத்தால்தான் அடுத்த ஆண்டுக்கு ஆலைக்கு தேவையான கரும்பினை அவர்கள் நடுவார்கள். இந்த ஆண்டு போதுமான விலை கிடைக்கவில்லை என்றால் கரும்பு விவசாயிகள் அடுத்த ஆண்டுக்கு நடக்கூடிய சாத்தியம் இல்லாமல் போய்விடும். ஏறக்குறைய 21 சர்க்கரை ஆலைகள் இன்றைக்கு ஆடக்கூடிய கரும்பிலே பாதி அளவுக்கு கூட கரும்பு கிடைக்காமல் மூடக்கூடிய சூழ்நிலைதான் இன்றைய தினம் தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அக்டோபர் மாதத்திலே கரும்பு சீசன் ஆரம்பிக்கிறது. மற்றைய மாநிலங்களில் என்ன செய்கிறார்கள், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசாங்கத்தை நடத்தக்கூடியவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். ஆந்திராவில் நவம்பர் மாதம் 28 ஆம் தேதி விலையை நிர்ணயித்து அறிவித்து இருக்கிறார்கள். 196 ரூபாய் என்று மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னது போல். ஒரு டன்னுக்கு 196 ரூபாய் என்று நவம்பர் மாதத்திலே சொல்லிவிட்டார்கள். அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் அந்த 196 ரூபாய் போதுமான விலை என்று கருதினால் அவர்கள் மீண்டும் கரும்பு நடுவார்கள். அது குறைவாக அங்கே சொல்லியிருந்தால் அவர்கள் அதை விட்டு விட்டு வேறு மகசூலுக்குச் சென்று விடுவார்கள். அக்டோபர் மாதம் போய், நவம்பர் மாதம் போய் டிசம்பர் மாதம் போய் ஜனவரி மாதம் 8ஆம் தேதி கரும்பு விவசாயிகளுடைய உயர் மட்ட குழுவினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்களும் கூட்டினார்கள். நானும், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அருமை சகோதரரும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். அவர்கள் சொன்னார்கள் இன்னும் ஒரு வாரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கலந்து கொண்டு அன்றைய தினம் எடுத்த முடிவுகளை நாங்கள் அறிவிக்கிறோம் என்று சொன்னார்கள். ஜனவரியும் போய்விட்டது. பிப்ரவரியும்

அந்த 155 ரூபாயோடு மேலும் ஒரு 30 ரூபாய் அவர்களுக்குக் கிடைக்கும். திரு என். டி. ஆர். ஆந்திராவிலே சொல்கிறார் 196 ரூபாய் கொடுக்க வில்லையென்றால் நான் சர்க்கரை ஆலைகளை எடுத்துக்கொள்வேன் என்று மிரட்டுகிறார். இங்கே முதலமைச்சர் அ. இ. அ. தி. மு. க. அமைச்சர்கள் நீங்கள் சொல்லக்கூடிய விலையை கொடுக்கவில்லை என்றால் மில்களை எடுத்துக்கொள்வோம் என்று மிரட்டுங்களேன், இந்த ஆண்டு ரிசர்வ் பண்டிலிருந்து ஒவ்வொரு ஆலையும் ஒவ்வொரு கோடி ரூபாய் கொடுக்கலாம், அப்படிக் கொடுப்பதன் மூலமாக 155 ரூபாயோடு 15 ரூபாய் மேலும் சேர்த்து கொடுக்கலாம். அரசாங்கத்தினுடைய பணத்திலிருந்து நாங்கள் கேட்கவில்லை. கரும்பு விவசாயிகளுக்கு, பர்ச்சேஸ் டாக்ஸ், செஸ் ஆகியவை மூலமாக கிடைக்கின்ற அந்தப் பணத்தை மட்டும் திருப்பிக் கொடுத்தால் விவசாயிகளுக்கு 200 ரூபாய் கிடைக்கும். அப்படிக் கிடைப்பதன் மூலமாக விவசாயிகள் பலன் அடைவார்கள், அதன் காரணமாக அடுத்த ஆண்டு கரும்பு உற்பத்தி பாதிக்கப்படாது, அதன் மூலமாக மில்கள் மூடப்படாமல் பொருளாதார சிக்கல்கள் ஏற்படாமல் பத்தில் ஒரு பங்கு உற்பத்தி செய்யக்கூடிய சர்க்கரை ஆலைகள் உள்ள நம் தமிழ் நாடு என்ற பெருமைக்கு குறைவு ஏற்படாமல், அது காப்பற்றப்படவேண்டும்—அந்த நிலையில் தமிழ்நாடு முன்னுக்கு வரவேண்டும், விவசாயிகள் காப்பற்றப்படவேண்டுமென்று கூறி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த அவையை ஒத்திவைத்து இன்னும் விரிவாக அதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நம் மாநில அரசு 155 ரூபாய் ஒரு டன் கரும்புக்கு என்று நிர்ணயித்து இருப்பது போதாது என்று கூறி பல காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். சென்ற ஆண்டு இருந்ததைவிட இந்த ஆண்டு உற்பத்திச் செலவு அதிகமானது என்பதைப் பல நேரங்களிலே இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். உற்பத்திச் செலவு அதிகமானதற்குக் காரணம் இந்த ஆண்டு பல விதமான செலவுகள் அதிகமாகியிருக்கின்றன, மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக பல இடங்களில் ஆயில் இஞ்சின் மூலமாக பயிர் செய்திருக்கிறார்கள் என்ற நிலமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே வறட்சியின் காரணமாக ஏக்கருக்கு 40 டன்னாக இருந்த கண்டுமுதல் 30 டன் என்ற அளவுக்குக்கூட விளையுமா என்று நினைக்கக்கூடிய அளவுக்கு கண்டுமுதல் குறையக்கூடிய நிலைமை

[முற்பகல் 10·50]

ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசு இப்போது மாநில அரசுகள் தங்களுடைய இஷ்டம் போல் ஆங்காங்கு இருக்கிற நிலைமைகளுக்கு ஏற்ப விலை நிர்ணயித்துக்கொள்ளலாம் என்ற அதிகாரத்தை வழங்கியிருக்கிறது. மற்ற மாநிலங்களை



ஒப்பிட்டுப் பார்த்தால் ஆந்திராவும் மகாராஷ்டிரமும், கர்நாடகமும் நம்மைவிட அதிகமான விலையை விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். இங்கே சொல்லக்கூடிய நேரத்தில் ஆலை முதலாளிகள், எங்களுக்கு கட்டுப்படியாகாது; கடந்த ஆண்டைவிட இப்போது லெவி சர்க்கரையின் விலையும், வெளி மார்க்கெட்டிலுள்ள விலையும் இரண்டும் ஒன்றாக இருப்பதின் காரணமாக 130 ரூபாய்க்கு மேலே விலை கொடுப்பதோ, 150 ரூபாய்க்கு மேலே கொடுப்பதோ இயலாது என்று சொல்கிறார்கள். இது தவறோ, நியாயமோ அதற்குள் போக விரும்பவில்லை. இன்றைக்குக் கட்டுப்படியாகவில்லை என்று சொல்கிறபோது கடந்த ஆண்டுகளில் பெற்ற அதிகப்படியான லாபத்தைப் பற்றியும், அல்லது கூட்டுறவு ஆலைகளில் ரிசர்வ் நிதி என்று சொல்லக்கூடிய முறையிலே அதிகமான நிதி ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே விவசாயிகளுக்கு கட்டுப்படியாகவில்லை என்று சொன்னால் எப்படி அவர்கள் அடுத்த ஆண்டு பயிர் செய்வார்கள்? என்ற கேள்வி நம் அனைவரின் மத்தியிலும் பிரதானமான கேள்வியாக அமைந்திருக்கிறது. கடந்த காலங்களில் கரும்பு பயிர் செய்வது குறைந்து நெல்லுக்குச் சென்றார்கள். இப்போது கரும்பிற்கு அதிகமான விலை கிடைக்குமென்று அவர்கள் வந்தபோது கரும்பிற்கும் குறைந்த விலை கொடுப்பதன் காரணமாக வருகிற காலங்களில் கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகள் அறவே கரும்பு உற்பத்தியை நிறுத்தி விடுவார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. கடந்த ஆண்டில் கூட நாம் கொடுத்த 175 ரூ. விலை கட்டுப்படியாகாமல் ஈரோடு வட்டத்திலே திண்டல் என்ற கிராமத்தில் கரும்பு விவசாயம் செய்த பலபேர் விவசாயிகள் தங்களுடைய கரும்பைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் கட்டுப்படியாகவில்லை என்பது முக்கிய காரணம். ஆலைகளுக்கும் கொடுக்க முடியவில்லை; வெல்லமாக ஆக்கினாலும் கூட கட்டுப்படியாகாத நிலை ஏற்பட்டதறகு பின்னால் அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போதுகூட வெட்டுக்கூலி லாரி வாடகை முதலியவைகள் அதிகமாக ஆனதற்கு பின்னால் கடந்த ஆண்டைவிட அதிகமான விலை வேண்டுமென்று அத்தனை சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகளும், அத்தனை அரசியல் கட்சிகளும் கூட, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் கூட கேட்கிறார்கள் 250 ரூபாய் ஒரு டன்னுக்கு கொடுத்தால் தான் விவசாயத்தில் கரும்பு சாகுபடி செய்கிறவர்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய ஒரு நிலை இருக்கும். அதற்கு குறைந்த விலை என்று சொன்னால் நஷ்டம் வரும்; அடுத்த ஆண்டு அந்தப் பயிரை செய்யமாட்டார்கள், என்ற நிலையை அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படியிருக்கிற போது 155 ரூபாய்தான் கொடுக்க முடியும் என்று நம்முடைய மாநில அரசு அறிவித்திருக்கிறது என்றால்,

அடுத்த ஆண்டிற்கு கரும்பே வேண்டாம், சர்க்கரை ஆலைகள் வேண்டாம், சர்க்கரை ஆலைகளை மூடிவிடலாம் என்று ஒரு நிலைக்கு அவர்கள் வந்திருக்கிறார்களா என்று நான் அறியவிரும்புகிறேன். கடந்த ஆண்டு கொடுத்த விலை கட்டுப்படியாகவில்லை என்ற நேரத்தில் இந்த ஆண்டு உற்பத்திச் செலவு அதிகரித்து இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் வறட்சி வேறு கடுமையாக பாதித்திருக்கிறது. கண்டுமுதலும் குறைந்து போயிருக்கிறது. இப்படியிருக்கிற நேரத்தில் 155 ரூபாய் தான் கொடுப்போம் என்று சொன்னால் எந்த விதத்தில் அது நியாயம்? மத்திய அரசு விலை நிர்ணயக் கமிஷன் விலை 155 ரூபாய் என்று சொல்கிறது. விலை நிர்ணயக் கமிஷனைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு ஆதரவாக அது இருக்கிறதா? அல்லது விவசாயிகளை கொள்ளையடித்து ஆலை முதலாளிகள் அதிகமான கொள்ளை லாபம் அடைவதற்கு அனுசரணையாக இருப்பதற்கு மத்திய அரசாங்கம் விலை நிர்ணயக் கமிஷனை ஏற்படுத்தியிருக்கிறதா? என்பதைப் பற்றியெல்லாம் சர்ச்சை இருக்கிறது. உற்பத்தி செய்யக்கூடிய நெல்லானாலும் சரி, கரும்பானாலும் சரி, விலை நிர்ணயம் செய்யக்கூடிய நேரத்தில், உற்பத்தி செய்கிற விவசாயிகளுடைய நலனைக்கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு யோசனையுடன்அந்தக் கமிஷன் செயல்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் இருக்கிற 21 சர்க்கரை ஆலைகளும் சீராகச் செயல்பட வேண்டுமென்று சொன்னால், அதிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை பெற வேண்டுமென்று சொன்னால், கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்கவேண்டும். அவர்கள் போட்ட முதலுக்கு நஷ்டமில்லாமல், போட்ட முதலை அவர்கள் எடுக்கக்கூடிய ஏற்பாட்டை மாநில அரசாங்கம் செய்துதர வேண்டும். அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்ற சர்ச்சைகுப் போக விரும்பவில்லை. ஏனென்றால் மத்திய அரசாங்கம் நீங்களே விலைநிர்ணயம் செய்து கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்கள். அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது ஆலை முதலாளிகள் கட்டுப்படியாகவில்லை என்று சொல்கிறார்கள் என்று சொல்வார்கள். இந்த வருஷம் அவர்கள் என்னதான் சொன்னாலும்கூட, கடந்த காலத்தில் அவர்கள் அதிகமான லாபம் சம்பாதித்த பணம் இருக்கிறது. ரிசர்வ் நிதி இருக்கிறது. ஒரு ஆண்டில் அவர்கள் கொஞ்சம் லாபம் குறைந்தாலும் கூட, விவசாயிகள் காப்பாற்றப்பட வேண்டும். ஆந்திராவில் ராமாராவ் அவர்கள் 196 ரூபாய் கொடுக்கவேண்டும், இல்லையென்றால் லைசென்ஸ் தர மாட்டேன்; அரசு அந்த ஆலைகளை எடுத்துக்கொள்ளும் என்று சொல்கிறார்கள். அந்த முறையில் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மையை அபிவிருத்தி செய்யக்கூடிய முறையிலே வழிவகை செய்யவேண்டும். நம்முடைய 21 ஆலைகளும் சரியாக இயங்க வேண்டும். கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகள்



நஷ்டம் இல்லாமல் கரும்பு உற்பத்தி செய்யவேண்டும். கரும்பை விட்டுவிட்டு வேறு பயிர்களுக்கு அவர்கள் சென்றுவிட்டால் கரும்பு கிடைக்காது. ஆலைகளை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுவிடும். வருகிற காலங்களில் விவசாயிகளுக்கு 250 ரூபாய் விலை கொடுக்கவேண்டும்; 155 ரூபாய் என்பது போதாது. இதுபற்றி ஆளும் கட்சியினரும் சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிற வகையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரம் முதலிய இடு பொருள் செலவு, டீசல் செலவு, கூலி உயர்வு முதலியவை உயர்ந்துள்ளதாலும், வறட்சியின் காரணமாகவும், கரும்புக்கு விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலையை நிர்ணயிக்கவேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் அவா, இலட்சியம். அதன் காரணமாகவே சாகுபடி செலவுக்கு ஏற்ப கரும்புக்கு விலையை நிர்ணயிக்கும்படி மைய அரசுக்குத் தமிழ்நாடு அரசு பரிந்துரைத்தது; வற்புறுத்தியது.

ஏ.பி.சி. எனப்படும் விவசாய விலை நிர்ணயக் குழு குறைந்தபட்ச விலையை டன்னுக்கு ரூ. 155 என நிர்ணயிக்கலாம் என மைய அரசுக்குப் பரிந்துரைத்தது. மைய அரசு, 1981—82-ல் நிர்ணயித்த டன்னுக்கு ரூ. 130 என்ற அதே விலையை 1982—83-க்கும் நிர்ணயித்து அறிவித்துள்ளது.

1981—82-ல் குவிண்டால் ரூ. 302.13 ஆக இருந்த 'லெவி' சர்க்கரை விலையை 1982—83-ல் ரூ. 309 ஆக மைய அரசு உயர்த்தியுள்ளது. அதே நேரத்தில் சென்ற ஆண்டில் குவிண்டால் ரூ. 450 ஆக இருந்த வெளிச் சந்தை சர்க்கரை விலை, கடந்த நவம்பர் 1982-ல் ரூ. 332 ஆகக் குறைந்துள்ளது.

மைய அரசின் ஆணைப்படி உற்பத்தியில் 65 சதவீதத்தை லெவிக்கும் 35 சதவீதத்தை வெளிச் சந்தைக்கும் கொடுக்க வேண்டியுள்ளது. வெளிச் சந்தை விலை குறைந்துவிட்ட நிலையில் தமிழக சர்க்கரை ஆலைகள் இடர்ப்பாட்டிலே இருக்கின்றன.

மைய அரசு அறிவித்த குறைந்தபட்ச விலை ரூ. 130-ஐக் கொடுப்பதென்றாலே தமிழகத்தைச் சேர்ந்த 2 ஆலைகளில் மொத்தம் ரூ. 70.11 இலட்சம் இழப்பு ஏற்படும் நிலை உள்ளது. ஆயினும் இந்த அரசு விவசாயிகள் நலன் காக்க வேண்டும் என்ற எண்ணத்திலேதான், ஏ.பி.சி. பரிந்துரைத்த ரூ. 155 என்ற விலையை அறிவித்தது. இந்த விலைப்படி கொடுக்கும் போது தமிழகத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகள் 12-ல் 10 ஆலைகளில் ஏறத்தாழ ரூ. 679·33 இலட்சம் இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பை ஈடுசெய்ய அரசு வழிவகை செய்ய வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது. எனவே, கரும்புக்கு டன்னுக்கு ரூ. 155-க்கு மேல் நிர்ணயிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாம் இந்த நேரத்தில் ஏதோ ஆலைகளின் பக்கம் பேசு
கிறோம், அல்லது கரும்பு விவசாயிகளின் பக்கம் பேசுகிறோம்
என்கிற நிலையில்லாமல் இந்த இரண்டு தரப்பையும் கருத்
திலே கொண்டு விலை நிர்ணயிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி
இருக்கிறது. ஆகவேதான் இதிலே நாம் நெய்க்குத் தொன்னை
ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா என்று பார்க்காமல்
ஆலைகள் இயங்குகின்ற நேரத்திலேதான் கரும்பு விவசாயி
களும் அதிலே பலன் அடைய முடியும். கரும்பு விவசாயிகள்
கரும்பைப் பயிரிட்டால்தான் ஆலைகளும் தனது பணியை
ஒழுங்குற நிறைவேற்ற முடியும். அதிலேயிருக்கிற பணியாளர்
களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்க முடியும். ஆக, இந்த
இரண்டையும் கருத்திலே கொண்டு நாம் இந்த விலையை நிர்ண
யிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இது தொடர்
பாக மைய அரசு நீங்களே அறிவித்துக் கொள்ளுங்கள் என்று
அறிவித்திருக்கிறார்களே, இதற்காக ரிசர்வ் வங்கி கடன்
கொடுக்குமா என்றால் நிச்சயமாகக் கடன் கொடுக்காது. ஆகவே
நம்முடைய நிதி நிலைமைக்குள்ளேதான் இவைகளையெல்லாம்
சரிக்கட்ட வேண்டிய நிலைமையிருக்கிறது. இருந்தாலும்
இருக்கிற சூழ்நிலையை எண்ணிப் பார்த்து, மாண்புமிகு உறுப்
பினர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்த கருத்துக்களை எண்
ணிப் பார்த்து, கரும்பு விவசாயிகள் உற்சாகம் இழக்காமல்
அவர்கள் மீண்டும் கரும்புப் பயிரிடத்தக்க நல்ல மன நிலையில்
மகிழ்ச்சியோடு அவர்கள் ஆலைகளுக்குக் கரும்பை அனுப்பத்தக்க
வகையில், அரசு இதைத் தனியாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். மேலும், பேரவைத் தலைவர் அவர்களே,
இங்கே ஒத்திவைத்து விவாதித்ததைப்போன்ற அளவுக்குக் கருத்துக்
கள் சொல்லப்பட்டுவிட்ட காரணத்தினால், இதை இனி விவாதிக்க
அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டியதில்லை
யெனக் கூறி அமர்கின்றேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** ' டெசிஷன் ' எப்போது என்று சொல்லவேண்டும் சார், 'டிலே ' செய்யக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காலம் கடத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறார்.

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.**



## 5. அறிக்கை அளித்தல்

### உரிமைக் குழு

**மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9—2—1983 ஆம் தேதியன்று பேரவைத் தலைவர் அவர்களால் உரிமைக்குழுவுக்கு அனுப்பப்பட்ட பிரச்னை குறித்து உரிமைக் குழுவின் இடைக்கால அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 6 சட்ட முன்வடிவுகள் ஊராட்சிகள் பற்றி இருக்கின்றன. அவைகளை எல்லாம் ஒன்றாக எடுத்துக் கொண்டு விவாதித்தால் கடைசியாகப் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவற்றைத்தனித் தனியாக நீங்கள் மொழியுங்கள். அதற்குப் பிறகு விவாதத்தை பொதுவாக வைத்துக் கொள்ளலாம்.

### (அ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1983.

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் ''.

* 1983 ஆம் ஆண்டு மார்ச் 4-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(முற்பகல் 11–00)

(ஆ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 20/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ".

(இ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'

(ஈ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 22/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

(உ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன் வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 23/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

* 1983 ஆம் ஆண்டு மார்ச் 4 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.


அரசினர் சட்ட முன்வடிவுகள்



(ஊ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு. 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1983 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 24/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் மொழியப் பெற்ற சட்ட முன்வடிவுகளின் மீது பொது விவாதம்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, திருத்தங்களை எப்பொழுது எடுத்துக் கொள்வது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு சட்ட முன்வடிவையும் தனித் தனியே பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்பொழுது அவைகளை எடுத்துக் கொள்ளலாம். இப்பொழுது பொது விவாதம்தான்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு பெ. க. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சிகள், சென்னை மாநகராட்சி போன்ற மக்களுடைய அமைப்புக்களில் மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாமல் பல்லாண்டு காலமாக தனி அதிகாரிகளினுடைய நிர்வாகத்தின் கீழே நிர்வாகம் சீர்குலைந்து இருக்கின்ற நிலையைப் பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்திலே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் அறிந்திருந்தாலும் இந்த அரசாங்கத்திற்கு இந்த நேரத்தை நான் பயன் படுத்திக் கொண்டு, விரைவிலே நீங்கள் தேர்தலை நடத்த வேண்டிய ஒரு கடமையிலே இருக்கிறீர்கள் என்பதை உணர்த்துவதற்காக நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

* 1983 ம் ஆண்டு மார்ச் 4ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

நான் ஏற்கெனவேகூட இந்தப் பேரவையிலே சொல்லியதைப் போன்று, பல்லாண்டு காலமாக, பேரவை கூடுகிறது என்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இந்த மசோதாக்களைத் தாக்கல் செய் வார்கள். ஆண்டுக்காண்டு ஜமாபந்தி நடைபெறும், அந்த ஜமாபந்தியைப் போல, அந்த ஜமாபந்தியிலேயாவது ஏதாவது மக்கள் பிரச்சனை தீருமா என்றால் தீராது, அதைப் போல, பேரவைக் கூட்டம் வருகிறது என்றால் இங்கே, தனி அதிகாரி களினுடைய பதவிக் கால நீட்டிப்பு மசோதா கட்டாயம் வரும்.

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள், இளைஞர் தான். அவர்கள் இப்பொழுது தனது மகளுக்குத் திருமணம் செய்கின்ற வயதை எய்தியிருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் குடும்பப் பொறுப்பை நன்கு உணர்ந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆனால் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லையே, சீரழிக்கப்படுகின்றனவே என்பதைப் பார்க்க வேண்டும். அர சாங்கம் ஏதோ சில நல்ல திட்டங்களைப் போட்டாலும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு அது போய்ச் சேரவில்லையே என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தாலும், இந்தப் பேரவையில் அவர்கள் தங்களுக்கு உள்ள சாமர்த்தியத்தை வைத்து ஏதோ மக்கள் இந்தத் திட்டத்தால் சுபிட்சத்தோடு வாழ்வதைப் போல ஒரு மாயையை உண்டாக்குவதற்கு முயற்சிக்கிறார்கள். ஆனால் இந்த மாயை விரைவில் அகல வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே எல்லா மாவட்டங்களிலேயும் கடும் வறட்சி ஏற்பட்டிருப்பதைப் பற்றி பேரவையில் எங்களைப் போன்ற சட்டப் பேரவை உறுப்பினர்கள் சொல்கிறோம் ; மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலேயும் சொல்கிறோம்; குடிக்கத் தண்ணீர் இல்லை. பல கிராமங்களில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் இருந்தாலும், கிணற்றில் நீர் இருந்தாலும், அந்த மோட்டார்களைப் பழுது பார்க்கக்கூட நாதியில்லை.

பல்வேறு கிராமங்களிலே அரிஜனங்களினுடைய காலனி களிலே இருக்கின்ற தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டிகளில் ஏற்பட்டு இருக்கின்ற ஒரு சிறிய பழுதைக் கூட கவனிப்பதற்கு ஆட்கள் இல்லை என்று சொன்னால், அமைச்சர் அவர்கள் தங்களுக்கு இருக்கின்ற வசதியையும் வாய்ப்பையும் வைத்துக் கொண்டு ஏதோ இவைகள் எல்லாம் நடைபெறுவதாகச் சொல்ல லாம். அண்ணா அவர்கள் கூட ஒரு முறை சொன்னார்கள். ஜன நாயகத்திலே தங்களுக்கு மெஜாரிட்டி இருக்குமேயானால் பறப்



பது வெள்ளைக் காக்கை என்று சொன்னால், ஆமாம் அது வெள்ளைக் காக்கை என்று ஒத்துக் கொள்வார்கள் என்று சொன்னார்கள். ஏன் என்றால் தங்களுக்கு மெஜாரிட்டி இருக்கின்ற காரணத்தாலே, இங்கே நாங்கள் ஒத்துக் கொள்ள லாம், இந்த அவையிலே மெஜாரிட்டி இருக்கின்ற காரணத்தால், ஆனால் நாட்டிலே இருக்கின்ற மக்கள் நடைபெறுகின்ற விவா தத்தைக் கவனிக்கிறார்கள். இது என்ன உண்மையை விவாதிக் கின்ற பேரவையா ? அல்லது உண்மைக்கு மாறானவற்றைத்தான் அங்கே பேசுவார்களா என்று மக்கள் எல்லோரும் சிந்திக்கின்ற ஒரு சூழ்நிலையை இன்றைய தினம் தமிழகத்திலே இருக்கின்ற கிராம மக்கள் எண்ணிப் பார்க்கின்ற ஒரு சந்தர்ப்பத்திலே இருக் கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. என்ன நிலைமை ? இங்கே கூட நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வறட்சிக்காக இத்தனை கோடி ரூபாயை, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு ரூபாய் என்ற முறையிலே ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அவைகள் எல்லாம் முறையாக செலவழிக்கப்பட்டதா ? கிராமங் களிலே இருக்கின்ற குடி தண்ணீர்க் கிணறுகள் ஆழப்படுத்தப் பட்டனவா ? ஆழப்படுத்தப்படவில்லை. என்ன காரணம் ? நீங்கள் கிணறுகளை ஆழப்படுத்த நிர்ணயித்திருக்கின்ற தொகை கட்டுப்படியாகக் கூடியதாக இல்லை என்று ஒப்பந்தக்காரர்கள் வரவில்லை. இதை யாரிடத்திலே சொல்வது. மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலே சொன்னால் என்ன சொல்கிறார். நாங்கள் அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம் என்று சொல்கிறார். அரசாங்கத்திற்குச் சொன்னால் அரசாங்கம் என்ன சொல்கிறது? தொகையை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கிறது. இப்படிப் பட்ட ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை தமிழகத்திலே இன் றைய தினம் நிலவுகிறதை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண் டும். காரணம் மக்களுடைய பிரதிநிதிகள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள், நகர மன்றத் உறுப்பினர்கள், ஒன்றியத்தினுடைய பெரும் தலைவர்கள் இருப் பார்களேயானால், பல நேரங்களிலே சட்டமன்ற உறுப்பினர் களைப் போன்று அவர்களும் அக்கறையோடு மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அமைச்சர்களையோ, அதிகாரிகளையோ அணுக முடியும். இன்னும் விரைவாக இந்தப் பணி நடைபெறும்.

நான் ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். எவ்வளவு கிராமங்களிலே, நடை முறையிலே இந்தத் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்திலே கிராமங்கள் சீரழிந்து இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக என்னுடைய தொகுதியிலே நடந்த ஒன்றிரண்டு விவரங்களைச் சொல்ல விரும்பு கிறேன். என்னுடைய தொகுதியிலே, கலசப்பாக்கம் தொகுதி யிலே கடலாடி என்ற கிராமம் இருக்கிறது. பேரூராட்சியாக அது இல்லை என்றாலும், அதிகமாக மக்கள் தொகை கொண்ட

ஒரு கிராமம். அங்கே மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இருக்கிறது. ஓரளவிற்கு இந்த நேரம் வரையிலும்கூட தண்ணீர் அதிக அளவிலே இல்லாமல் இருக்கிறது. மின்சாரம் இல்லை. ஏற்கெனவே அந்த ஊராட்சியிலே தலைவர் இருந்த நேரத்திலே ஒரு ஆயில் என்ஜின் வாங்கப்பட்டது. இப்போது அது பழுதடைந்திருக்கிறது. அதை ஒரு மணி நேரத் திலே யாராவது ஒரு மெக்கானிக்கை கூட்டி வந்தால் அதைப் பழுது பார்த்து இருந்தால் இந்தக் கிராமத்திற்கு தண்ணீர் தர முடியும். நான் 3 மாத காலமாக கோட்ட வளர்ச்சி அதிகாரி யிலேருந்து, ஊராட்சி ஆணையர் வரையிலே நேரடியாகவும்,. தொலைபேசி மூலமாகவும், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத் திலேயும் எடுத்துச்சொல்லியும், இந்தத் தேதி வரையிலேயும், அந்த ஆயில் என்ஜின் பழுது பார்க்கப்படவில்லை. என்ன காரணம்? அந்தக் கிராமத்திற்கு என்று தலைவர் இருந்திருப் பாரானால், 24 மணி நேரத்திற்குள்ளாக அந்த ஆயில் என்ஜினைப் பழுது பார்த்திருக்க முடியும். அந்த கிராம மக்களுக்கு குடி தண்ணீர் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தியிருக்க முடியும். ஆனால் இன்றையதினம் இப்படிப்பட்ட ஒரு அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அதைப்போன்று இன்னொரு விஷயம். துரிஞ்சாபுரம் தொகு தியிலே இன்னொரு ஒன்றியும் இருக்கிறது. நார்த்தாம்பூண்டி என்ற அந்தக் கிராமத்திலே தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி —நான் தலைவராக இருந்த காலத்திலே அப்போது அமைச்ச ராக இருந்தவர்களை வைத்து திறந்து வைத்திருக்கிறேன்.— அந்தத் தொட்டியிலேகூட ஓரளவு தண்ணீர் இருக்கிறது. மின் சார மோட்டார் இருக்கிறது. இப்போது ஓரளவிற்கு மின்சாரம் வந்தாலும்கூட அதிலிருந்து தண்ணீர் இறைக்க முடிகிறதா? இல்லை ஏன்? அந்த மின்சாரமோட்டாரின் தண்ணீர் இறைக்கமுடியவில்லை அங்கே இருக்கின்ற பைப்புகளிலே காற்று ஏறிக்கொண்டால் சில நேரங்களிலே தண்ணீர் அது எடுக்காது. அந்த சிறிய ரிப்பேரைக் கூட அங்கே இருக்கின்ற அதிகாரிகள் பழுதுபார்க்க முடியவில்லை. எத்தனை மாதங்களாக என்றால், $1\frac{1}{2}$ ஆண்டுகளாக. சட்டமன்றப் பேரவை உறுப்பினர் என்ற முறையிலே போகின்றபோது மக்கள் என்னிடம் சொல்லுகிறார்கள். நான் சம்பந்தப்பட்ட ஆணை யரிடத்திலே சொல்லியிருக்கிறேன். கோட்ட வளர்ச்சி அதிகாரிகள் இடத்திலே சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலை வரிடத்திலே சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு அதற்கு பணம் கூட அந்த ஊராட்சி நிதியிலேயிருந்து 500 ரூபாய் பணம் எடுக்கப் பட்டுவிட்டன. இதுதான் வேடிக்கை. ஆனால் பழுது பார்க்கப் பட்டுவிட்டதா? இல்லை. நான் நேற்று, ஞாயிற்றுக்கிழமை ஊருக்குச்சென்ற அந்த நேரம் வரையிலும் அந்த தரைமட்ட





நீர்த்தேக்க தொட்டி பழுதுபார்க்கப்படவில்லை. இப்படிப்பட்ட ஒரு அவல நிலைமை இருக்கலாமா? இதற்கு ஒரு ஆட்சிதேவையா? ஒரு அமைச்சர் தேவையா? ஒரு சட்டமன்றம் தேவையா? எத்தனை பேர்கள் இருந்தாலும் காரியம் நடைபெறுகிறதா? கேட்டால் நீங்கள் உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம் என்று சொல்லக்கூடும். இவைகள் எல்லாவற்றிற்கும் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நாம் இவ்வளவு பேர்கள் இருந் தாலும் காரியங்கள் நடைபெறவில்லை. இதற்கென்ன செய்யப் போகிறீர்கள் என்றுஉங்கள் மூலமாக கேட்க விரும்புகிறேன்....

(முற்பகல் 11–10)

அதேபோல இன்றைய தினம் நம்முடைய ஊராட்சி ஒன்றியங்களிலே வறட்சி காலங்களில் குடிதண்ணீர் கிடைப்ப தில்லை. ஆங்காங்கே கைப் பம்புகள் போடவேண்டுமென்று அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகள், மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் சரிவர நடைபெறவில்லை. பல கிராமங் களில் ஏற்கனவே போடப்பட்ட கை பம்புகளில் பழுது ஏற்பட்டு அவைகள் பழுது பார்க்கப்படவில்லை. நமது குடிதண்ணீர் வடிகால் வாரியத்துறை அமைச்சர் அவர்கள்—தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சொல்வார்கள்—10 மணிக்கு இங்கே சொல்லுங்கள் 11 மணிக்கு அங்கே பழுது பார்க்கப் படும் என்று சொல்வார்கள். கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது.

10 மணிக்கு அல்ல, நீண்ட காலமாகவே—6 மாத கால மாகவே—பல மாதங்களாக எத்தனையோ முறை சொல்லி யும் அந்த மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிபழுது பார்க்கப் படாத நிலையில் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் அரிய மங்கலம் என்ற கிராமம் இருக்கிறது. அங்கே ஏற்கனவே குடிதண்ணீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஏற்படுத்தப்பட்டது. அதனுடைய மோட்டார் பழுது அடைந்துவிட்டது. 1977–லிருந்து நான் சட்டப் பேரவை உறுப்பினராக இரண்டாவது முறை வெற்றி பெற்று அதைப் பற்றி இங்கேயும் எடுத்துச் சொன்னேன். அதிகாரிகளிடத்திலும் சொல்லி இருக்கிறேன். ஆனால் என்ன சொல்லியும் அது பழுது பார்க்கப்படவில்லை. இதற்கு எப் போதுதான் விடிவுக்காலம்? எங்களுக்கு உச்ச நீதிமன்றமோ உயர் நீதி மன்றமோ தேவை இல்லை. தேர்தல் தேவை. அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். அதைப்போன்று எத்த னையோ பிரச்சினைகள். சில இடங்களில் நகரங்களில் பாருங்கள்—எத்தனையோ கைப்பம்புகள் போடப் பட்டுள்ளன. ஓர் இடத்திலே நீரோட்டங்களைப் பார்த்து, கைப்பம்புகள் அமைக்கின்றபோது அங்கே தண்ணீர் கிடைக்கிறது. அதிலே போர் பம்பைப் போட்டுத் தண்ணீரைத் தாருங்கள் என்று அவர்களிடத்திலே சொல்லுகிறோம் ........ (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் மானியக் கோரிக்கை மீது விவாதத்தை நடத்திக்கொண்டிருப்பது போல் தெரிகிறது. சட்டமுன்வடிவின் மீது விவாதத்தை நடத்துவதுபோல் தெரியவில்லை. ஆகவே தயவுசெய்து சட்டத்தைப் பற்றி வாதம் நடத்தினால் நல்லது. இப்போதே விளக்கம் வேண்டாம். 17 ஆம் தேதி மானியம் வரப்போகிறது. அப்போது விவாதித்துக் கொள்ளலாம். இப்போது சட்டத்திலே பேசினால் ஏதுவாக இருக்கும்.

**திரு பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்திலே ஒன்றுமே இல்லை. தேர்தல் நடக்கப் போவது இல்லை. நீங்கள் தனி அதிகாரி பதவியை நீட்டித்துக் கொண்டே போகிறீர்கள், அப்படி நீட்டிப்பதானால், கிராமங்களிலுள்ள ஏழை எளிய மக்கள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும் என்பதற்காகத் தான் இந்த தகவலை சொல்கிறேன். சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. இதைச் சொல்வதற்கு நீங்கள் அனுமதிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டத்தைப் பற்றி பேசுங்கள்.

**திரு பெ. சு. திருவேங்கடம் :** சட்டம் ஒரு இருட்டறை என்று அண்ணாவே சொல்லியிருக்கிறார். என்னுடைய வாதம் அதற்கு விளக்காக இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அதேபோல கிராமங்களிலே குடிதண்ணீர் பிரச்சினை நியாயமான நிலையிலே போக்கப்படவில்லை. ஆனால் இவைகள் எல்லாம் தனி அதிகாரியுடைய தாமதத்தினால் சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லை என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி பல முறை சொல்லியிருக்கிறார்கள். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. இரு முறை அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்திருந்தார்கள். அன்றைய தினம் 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம்—சட்டம் சட்டம் என்று சொல்கிறார்களே அந்த சட்டத்திலே சொல்கிறேன், 1960-ஆம் ஆண்டிலே சமுதாய வளர்ச்சித் திட்டம் என்ற பெயரிலே கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம் மாற்றி அமைக்கப் பட்டது. இன்றைய தினம் அதனுடைய நிலைமை என்ன? இந்தத்தனி அதிகாரிகளுடைய நிர்வாகம் நீடிக்குமானால், அரசாங்கம் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்





தவறான பல உள்ளாட்சி நிர்வாகங்களை அதனுடைய அமைப்பு முறைகளை மாற்றுகின்ற முறையில் எத்தனையோ சீர்கேடுகள் நடைபெறுகின்றன.

ஒரு காலத்திலே ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ் கல்வியைச் சேர்த்தார்கள். துவக்கக்கல்வி ஊராட்சிகளின் மூலம் நல்லமுறையில் செய்யப்பட்டு வந்தநிலையில், ஊராட்சி ஒன்றியங்களிடம் அவை ஒப்படைக்கப்பட்டு, அவைகள் செயல் பட்டு வந்தன. ஆனால், இன்றையதினம் கல்வி ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் இருந்து நீக்கப்பட்டு, கல்வித் துறைக்கு மாற்றப்பட்டு விட்டது. காரணம், இதைத் தட்டிக்கேட்க நாதியில்லை. ஊராட்சி ஒன்றியப் பெரும் தலைவர்கள் இருந்து இருந்தால்—378 பெரும் தலைவர்கள் இருந்து இருந்தால்—உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை இதற்காக நெருங்கி, இத்தகைய சட்டம் கொண்டுவருவதைத் தடுத்து இருப்பார்கள். இன்றைக்கு அவர்கள் அங்கேயில்லாததால் பல்வேறு சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து கால்நடை நிர்வாகம் போய்விட்டது. கல்வி நிர்வாகம் போய்விட்டது. விவசாயம் பறிக்கப்பட்டு விட்டது. இன்னும் சொல்லப்போனால், உணவு உற்பத்தி, குடிநீர் பிரச்சினை போன்றவற்றைக்கூட அதன் நிர்வாகத்தில் இருந்து எடுத்து விட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் ஏற்கனவே குறுக்கிட்டுக் கூறியதுபோல, மாண்புமிகு உறுப்பினர் மானியக் கோரிக்கை மீது பேசுவதுபோல் பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. இந்தச் சட்டமுன்வடிவின்மீது மட்டும் பேசவேண்டும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** இப்படிப்பட்ட நிலையில் ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து பணிகள் கொஞ்சம் கொஞ்சமாக பறிக்கப்பட்டு, அந்த அமைப்புகளே அழிந்துவிடுமோ என்ற அச்சம் தரத்தக்க வகையில் செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை.

தேசீய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பல வேலைகள் செய்யப்படுகின்றன. ஆனால் அதில் நடக்கின்ற உண்மை நிலை என்ன? தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் * *

---

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் மிகச்சிறந்த முறையில் தமிழ் நாட்டில்தான் நிறைவேற்றப் பட்டு வருகிறது என்று மைய அரசே சமீபத்திலே கூட தெரிவித்து இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், கடந்த ஆண்டு மைய அரசு கொடுத்த தொகையை ஒழுங்காக, முறையாக செல வழித்துக் கணக்குக்காட்டிய மாநிலம் தமிழ் மாநிலம்தான் என்றும் மத்திய அரசு நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறது. இந்த ஆண்டுகூட அதற்காக ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேல் 155 சதவீதம் இந்த தேசீய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் நாம் ஒழுங்கான முறையில் செலவுகள் செய்து இருக்கிறோம் என்று மத்திய அரசாங்கம் தெரிவித்து இருக்கிறது. இந்த நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

* * *

இந்த மாதிரி குற்றச்சாட்டுகள் கூறுவதாக இருந்தால், அதற்கான விவரங்களையும், விளக்கங்களையும் தயவு செய்து இந்த மன்றத்தில் அவர்கள் தெரிவிக்கவேண்டும். இந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்தின் திட்டம். மைய அரசு 50 சதவிகிதமும், மாநில அரசு 50 சதவிகிதமும் என்று கொடுத்து, இந்தத் திட்டம் சிறந்த முறையில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்திலே ஏதேனும் குறை பாடுகள் இருந்தால், அவற்றைக் குறிப்பிட்டுக் கூறினால், விளக்கமாக எடுத்துத்தெரிவித்தால் நல்லது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டு, அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பெறவேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : அதைப் பற்றி ஒரு விளக்கம் அளிக்க வாய்ப்புக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்டபிறகு, அதைப் பற்றி விளக்கம் கோருவதற்கு அனுமதி அளிக்க இயலாது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆதாரம் இருந் தால், என்னிடத்தில் காட்டிவிட்டு, அனுமதிபெற்று, அதன் பிறகு பேசலாம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மற்ற மாநிலங்களை விட தமிழ் நாடு நல்லமுறையில் செய்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

* * *

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : * * * மத்திய அரசாங்கம் நம்முடைய மாநிலத்திற்கு நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறது. ஆகவே, இதிலே தவறுகள் இருக்கிறது என்று சொன்னால் அதைப்பற்றி இங்கே விளக்கவேண்டும். நமக்கு மத்திய அரசாங்கம் ஒதுக்கிய தொகை 30 கோடி ரூபாய். ஆனால் நாம் 46 கோடி ரூபாய் இதற்காகச் செல வழித்து அந்த அளவிற்கு வேலைகள் நடைபெற்று இருக்கின்றன.

திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு உறுப்பினர் திரு வேங்கடம் கூறிய குற்றச்சாட்டுகளை நீக்கியதுபோல், மாண்பு மிகு அமைச்சர் கூறிய அந்த வாசகங்களையும் நீக்க உத்தர விடுவீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுவும் நீக்கப்படுகிறது.

(முற்பகல் 11-20)

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவரர்களே, இன்றைய தினம் தமிழ்நாட்டிலே இந்த தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தில் நாம் பல்வேறு தொல்லைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். சொல்லமுடியாத அளவுக்கு பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகள் நடைபெறுகின்றன. அதற்கு அமைச்ச ரவர்கள் ஆதாரம் கேட்டார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறோம்.

முக்கியமாக பணம் எடுக்கின்ற அதிகாரம் ஆணையரிடம் இருக்கிறது. சாதாரணமாக 1,500 ரூபாய் வரையில் பணம் எடுத் தால் ஏற்கெனவே, ஆணையாளர் தலைவர் என்ற பெயரால், தலைவர் மெஷர்மென்ட் புக்கில் ரிக்கார்டு பண்ணலாம். இந்த டிபார்ட்மெண்டில் இருக்கிற மேற்பார்வையாளர் செக்மெஷர் செய்யலாம், இப்படி செலவிடலாம் என்ற விதி இருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற் கெனவே இந்த அவையில் சொன்னார்கள். ஆணையாளர் தலைவ ராக ஆனபிறகு அதை செக்மெஷர் பண்ணுகிற அதிகாரம் மேலான

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

சென்று விவாதிக்க முடியும் என்ற காரணத்தால்தான், இந்த
தனி அதிகாரிகளின் பதவியை நீடிக்கக் கூடாது என்று நாங்கள்
வற்புறுத்துகிறோம்.

அதுமட்டுமல்ல. அந்த மன்றங்களில் மக்களுடைய பிரதிநிதி
கள் இல்லாத காரணத்தால் ஊராட்சி ஒன்றியங்களிலும், மாநக
ராட்சிகளிலும் ஆளும் கட்சியில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள்
சொல்கிற காரியங்கள்தான் நடைபெறுகின்றன. எங்களைப்
பொறுத்தவரையில் அந்த இடங்களில் எங்களுக்கென்று ஒரு
அறை இருக்கிறது. அங்கே மேசையிருக்கிறது. மேலே காற்
றாடி இருக்கிறது. அத்தோடு திருப்தி படவேண்டியதுதான்.
ஆனால் முக்கியமான நடவடிக்கைகளும் முக்கியமான வளர்ச்
சிப் பணிகளும் எப்படி நடைபெறுகின்றன என்று பார்த்தால்,
உள்ளபடியே சொல்வதற்கும் வேதனையாகத்தான் இருக்கிறது.
இதுவரையில் வேறு எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு
ஆளும் கட்சியினருடைய தலையீடு அதிகமாக இருக்கிறது
என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும். உடனே நம்
முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்பார். இப்படி
பொதுப்படையாக பேசலாமா? ஆதாரம் உண்டா? ஆதா
ரம் இருந்தால் எடுத்துச் சொல்லலாம் என்றெல்லாம் கேட்பார்.
(குறுக்கீடு) உங்கள் மூலமாக பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, நான் அவருக்குச் சொல்ல விரும்புகிறேன், நம்முடைய
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மதிய
உணவு திட்டத்தில் பொறுப்பாளரை நியமனம் செய்வதற்கு
தேர்வு தமிழகம் பூராவிலும் நடைபெற்றது. பல்வேறு ஊர்
களில் இருந்தும் அந்த தேர்வில் கலந்து கொள்வதற்கு வந்
திருந்தார்கள். ஆனால் அந்தத் தேர்தல் எப்படி நடந்தது என்
றால் . . . .(குறுக்கீடு)

தனி அதிகாரிகளுடைய பதவி நீட்டிப்பு செய்யக்கூடாது என்
பதற்காகத்தான் இவைகளையெல்லாம் அரசின் கவனத்திற்கு
கொண்டு வர விரும்புகிறேன். அந்த தேர்வில் ஆளும் கட்சியினைச்
சேர்ந்தவர்களிடமிருந்து ஒரு பட்டியலைப் பெற்று அந்த
பட்டியலின் அடிப்படையில்தான் அந்த பொறுப்பாளர்கள்
சத்துணவு திட்டத்தின்கீழ் நியமனம் செய்யப்பட்டார்கள். இம்
மாதிரியான முறைகள் இங்கு அங்கு என்றல்ல, எல்லா இடங்
களிலும் நடைபெற்றிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலை
மைகள் உருவாகாமல் தடுக்கும் காரியங்களில் அரசு கவனம்
செலுத்தாவிட்டால், எப்படி நல்ல நிர்வாகம் தமிழகத்தில் அமைய
முடியும். எப்படி தூய்மையான நிர்வாகம் அமைய முடியும் என்கிற
வேதனையான என்னுடைய உணர்வினை இங்கே சொல்லிக்
கொள்ளாமல் என்னால் இருக்க முடியவில்லை.

எங்களுக்குப் பெயர் சட்டமன்ற உறுப்பினர்கள், ஆனால்,
எங்களால் எந்த நல்ல பணிகளையும் விரைவாகச் செய்ய முடிவ
தில்லை. வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்குப் போகிறோம். அங்கே



தீர்மானங்களையும் நிறைவேற்றுகிறோம். தொடர்ச்சியாக
நூற்றுக் கணக்கில் அங்கே தீர்மானங்களை நிறைவேற்றுகிறோம்.
ஆனால், அந்தத் தீர்மானங்கள் என்னவாயிற்று ? ஒன்றிரண்டா
வது நிறைவேற்றப்பட்டிருக்கின்றதா ? இல்லை. ஊராட்சி
ஒன்றிய ஆலோசனைக் குழு என்று ஒரு குழு போடப்பட்டிருக்
கிறது. அது எங்கே நடைபெறுகிறது ? எவ்வாறு கூடுகிறது ?
வாரத்திற்கு ஒரு முறையா ? மாதத்திற்கு ஒரு முறையா ?
6 மாதங்களுக்கு ஒரு முறையா அல்லது ஒரு ஆண்டுக்கு ஒரு
முறையா ? அந்தக்குழு எப்படி கூடுகிறது? என்ன நடவடிக்கை
களை எடுத்து வருகிறது ? அந்த நடவடிக்கைகளின் பின் விளைவு
கள் என்ன ஆகிறது என்று பார்த்தால், எல்லாமும் வெறும்
சம்பிரதாயமாகவும், சடங்காகவும்தான் இருக்கிறதே தவிர
மக்களுக்கு தேவையான பணிகளில் முழுமையான பலன் கொடுப்ப
தாக எதுவும் இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே
தான் இன்று எடுத்துக் கொண்ட இந்த மசோதாவை அரசாங்கம்
திரும்பப் பெற்றுக் கொண்டு, தேர்தலை உடனடியாக நடத்து
வதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று நாங்கள்
கேட்கிறோம். உடனேயே நம்முடைய மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் தடை இருக்கிறது என்ற காரணத்
தைச் சொல்லி தப்பித்துக் கொள்வார்கள். வெகுசௌகரியமான
சாக்கு அது. தடையை திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கை
களில் முழுமையாக அரசு முயற்சி எடுக்கலாமே. . . . . . . . . . . .

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் ஏற்கென
வே 4-ஆம் தேதியன்று நடைபெற்றது. அப்போதே நான் பதில்
சொன்னேன். உங்களுடைய கட்சிக்காரர் வெங்கடாசலம்
வழக்கறிஞர், அவர்களுடைய மேல் முறையீட்டை வாபஸ்
பெற்றுவிட்டால், எந்தப் பிரச்சினையும் இருக்காது என்று.
தயவு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் காரி
யத்தைச் செய்யலாம். அப்படி அவர் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு
மீறி செயல்படுவாரேயானால், கட்சியிலிருந்து அவரை நீக்க
உங்களுக்கு அதிகாரம் உண்டு. ஆகவே, அப்படிப்பட்ட நிலை
மைகளை எடுக்காமல், இங்கே விவாதம் செய்துக் கொண்டிருப்
பது பயன் இல்லை என்று அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் அதைத்தான் முன் எச்சரிக்கை
யாகச் சொன்னேன். உங்களுக்கு நல்ல வேளையாக உச்ச
நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது என்று. ஆனால், அதற்கு
முன்னாலேயே இங்கே நீங்கள் சொல்லவில்லையா, யாராவது
டெல்லியிலே உச்சநீதி மன்றத்திலே தடை வாங்காமல் இருந்தால்
நாங்கள் தேர்தல் நடத்துவோம் என்று எத்தனை தடவை
அதை சொல்லியிருக்கிறீர்கள். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த

ருக்கு இருக்கலாமா என்று கேட்டார்கள். ஒன்றிய ஆணையாளருக்குக் கீழே இருக்கிற மேலாளர் செக்மேஷர் செய்வது சரியாக இருக்குமா என்று சொன்னார்கள். அப்போது அதை மாற்றுகிறோம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். சொல்லி இத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன; மாற்றினார்களா? இன்னும் மாற்றவில்லை. அதனால்தான் ஊழல் ஏற்பட வழிவகை உண்டாகிறது. தேர்தலுக்கு முன்னாலாவது அந்த மாற்றத்தை செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரி நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, நகராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, மாநகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவுகள் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் கொடுத்திருக்கிற திருத்தங்களையொட்டி ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

திருச்செந்தூர் தேர்தலிலிருந்து ஒரு பழமொழி தமிழ் நாட்டில் பிரபலமாகி வருகிறது. ''யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே'' என்ற அந்தப் பழமொழியைப் போன்று தமிழ்நாட்டில் ''சட்டமன்றக் கூட்டம் வரும் முன்னால்; ஊராட்சிகள், நகராட்சிகள் அதிகாரிகள் பதவி நீட்டிப்பு மசோதா வரும் பின்னால்'' என்று சொன்னால் அது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் ஒவ்வொரு சட்டமன்ற கூட்டத் தொடரிலும் இந்த தனி அதிகாரிகள் பதவிக்கால நீட்டிப்பு மசோதா வந்துகொண்டே இருக்கிறது.

நான் ஒரு வார ஏட்டிலே பார்த்தேன்; அமைச்சர் அவர்களும் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். தூக்குத் தண்டனைப் பெற்ற ஒரு கைதி சிறையிலே இருக்கிறான், அவனைப் பார்க்க சிறையின் தனி அதிகாரி வருகிறார், அந்தக் கைதியைப் பார்த்து உன்னுடைய கடைசி ஆசை என்ன என்று கேட்கிறார். இந்த ஊராட்சி ,நகராட்சித் தேர்தலை ஒருமுறை பார்த்துவிட வேண்டுமென்று அவன் சொல்கிறான். உடனே அந்த அதிகா 'இது நடக்க முடியாத காரியம்' என்று சொல்வது போல அந்த வார இதழில் கேலிச் சித்திரம் போடக்கூடிய நிலைமை இன்றைக்கு தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதப் பார்க்கிறோம்.



பொதுவாக ஊராட்சிகள், ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள் எல்லாம் ஜனநாயகத்தின் தொட்டில் என்று சொல்வார்கள். ஜனநாயக முறைப்படி இந்த அமைப்புகள் செயல்பட்டால் தான், இந்த அமைப்புகளிலே பணியாற்றி, பயிற்சி பெற்று, பின்னால் நம்முடைய சட்டமன்றம் போன்ற பெரிய அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாக பணியாற்ற முடியும் என்பதால் அப்படிச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டில் 6, 7 ஆண்டுகளாக இந்த ஜனநாயகத் தேர்தல் அமுக்கப்பட்டிருக்கிறது, ஜனநாயகத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது என்று நான் கருதுகிறேன். முதலிலே, இந்த அரசு பதவியேற்றத்திற்குப் பின்னாலே அன்றைய நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு காளிமுத்து அவர்கள் ஒவ்வொரு முறையாக இந்த தனி அதிகாரிகளின் பதவி நீட்டிப்பை நீட்டித்துக் கொண்டே வந்தார்கள். இரண்டாவது, முறையாக இந்த கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகும் தற்போது நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கிற மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள், அந்தத் தனி அதிகாரிகளின் பதவி காலத்தை நீட்டிக் கொண்டே வருகிறார்கள். இதில் எங்களுக்கு இருக்கும் கவலையும், வேதனையும் என்னவென்றால், தேர்தலை தள்ளிப் போடுவது சரியில்லை, விரைவிலே தேர்தல் நடக்குமேயானால், பல ஆயிரக்கணக்கான மக்களின் பிரதிநிதிகள் அந்த மன்றங்களிலே போய் அமர்வார்கள். அங்கே நேரிடையாக மக்களின் பிரச்சனைகளை எடுத்துச் சொல்வதற்கும், தீர்வு காண்பதற்கும் ஏதுவாக இருக்க முடியும். ஆனால் தற்போது அப்படிப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகள் அந்த மன்றங்களில் இல்லாத காரணத்தால், சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நாங்கள், ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தாலும் சரி, எதிர் கட்சி உறுப்பினராக இருந்தாலும் சரி, கிராமங்களுக்குச் செல்ல முடியவில்லை.

காரணம், கிராமங்கள் தோறும் இன்று வரலாறு காணாத வறட்சி. கடுமையான குடிதண்ணீர் தட்டுப்பாடு, மின்சார தட்டுப்பாடு, சாலைகள் சரியாக இல்லை—இப்படி ஒவ்வொரு இடத்திலும் பிரச்சனைகள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அவருடைய தொகுதியின் கீழ் ஏறத்தாழ 300 வரையில் கிராமங்கள் வரலாம். ஒரு கிராமத்திற்கு 10 பிரச்சனைகள் என்று வைத்தாலும் கூட, ஆயிரக்கணக்கில் பிரச்சனைகள் விஸ்வரூபம் எடுக்கின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால், நேரிடையாக ஒவ்வொரு பிரச்சனையிலும் ஈடுபட்டு, சட்டமன்ற உறுப்பினராகிய நாங்கள், தொகுதி பணியிலே ஈடுபட முடிவதில்லை. இப்படி உள்ளாட்சி, மாநகராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் வருவார்களேயானால் இப்படிப்பட்ட பிரச்சனைகளில் பாதிக்குமேல் அங்கே எடுத்துச்

வரையில் டெல்லியிலே சுப்ரீம் கோர்ட்டிலே இதற்கென தடை உத்தரவு வாங்குவதற்காக, யாருக்கும் அனுமதி கொடுத்தது கிடையாது. விரைவாக தேர்தல் நடத்த வேண்டும் என்று தான் நாங்கள் விரும்புகிறோம். அதுதான் எங்கள் கட்சியினுடைய கொள்கைகளில் ஒன்றாகவும் இருந்திருக்கிறது. அதிலிருந்து நாங்கள் ஒரு அணுவளவும் பின் வாங்கவில்லை. நீங்கள் தான் அவ்வப்போது வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் எதையாவது சொல்லி தள்ளிப் போட்டுக் கொண்டேயிருக்கிறீர்கள்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது எப்படி இருக்கின்றது என்று சொன்னால், பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுவதுபோல் இருக்கின்றது. இங்கே தேர்தலை நடத்து என்று சொல்வதும், நெமிலி பஞ்சாயத்து யூனியனின் முன்னால் தலைவராக இருந்த திரு. வெங்கடாசலம் பிள்ளையை உச்சநீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்யச் செய்து தடையைப் பெறவேண்டும் என்று சொல்வதும் எப்படிச் சரியானதாகும் ? ஆகவே, அப்படிப்பட்ட நிலைமையில் இரட்டை வேடம் போட்டுக் கொண்டு இந்திரா காங்கிரஸ் கட்சியின் நண்பர்கள் பேசுவது எப்படிச் சரி ?

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் இது மேடைப் பேச்சுக்குச் சரியானது. ஆனால் உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். யாரோ ஒருவர் பெயரைச் சொல்லி, அவர் கட்சிக் காட்டுப்பாட்டினை மீறி இருக்கிறார் என்று சொல்லி அவர்மீது நடவடிக்கை எடு என்று சொல்வது நியாயத்திற்கு சரியாக இல்லை. எங்களுடைய கட்சி யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை. அவர் தனிப்பட்ட முறையிலே போட்டால் என்ன செய்வது ? ஆகவே இது ஊராட்சி ஒன்றியங்கள் பற்றிய பிரச்சினை. ஆனால் நகராட்சிக்கும், மாநகராட்சிக்கும் என்ன கோர்ட் தடை வந்தது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே' நான் ஏற்கெனவே சொன்னேன். 4-ஆம் தேதியன்று சொன்னேன், பஞ்சாயத்துத் தேர்தல் இந்த நிலையில் இருக்கின்றது. நகராட்சி, மாநகராட்சி தேர்தல் பற்றி முடிவு செய்வதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்ட இருக்கிறோம் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதே மன்றத்தில் சொல்லி இருக்கிறார்கள். அந்த முடிவினை நான் அறிவிக்க இருக்கிறேன். நகராட்சி, மாநகராட்சித் தேர்தலை எப்போது நடத்தாலம் என்று ஆலோசனை செய்கின்ற வகையில் அந்தக் கூட்டத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம் என்று முடிவை நான் அறிவிக்கப் போகிறேன்.



திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, எங்களுக்கு இருக்கின்ற கவலை எல்லாம் விரைவாகத் தேர்தலை...

திருமதி ர. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெமிலி பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்தவர் வழக்கு போட்டிருக்கிறார் என்று சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் பிரிக்கின்றபோது சுயநலமும், கட்சிக் கண்ணோட்டமும் இல்லாமல் பிரித்திருந்தால் அது இவ்வளவு தூரத்திற்கு இழுத்துக் கொண்டு போய் இருக்குமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இப்போது திரு சித்தன் அவர்களுக்கும் எனக்கும் மத்தியிலே அம்மையார் அவர்கள் புகுந்திருக்கிறார்கள். உண்மையிலேயே நான் அம்மையார் அவர்களிடத்திலே கேட்டுக் சொல்கிறேன். இப்போது மேல்முறையீடு செய்தது நெமிலி பஞ்சாயத்து பெண்களுக்கா அல்லது ஆண்களுக்கா என்ற பிரச்சினைக்காக அல்ல. பெண்களுக்கு என்று ஒதுக்கீடு செய்தது தவறு என்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்தது தவறு என்றும் அந்த கோட்பாட்டின் அடிப்படையிலே மேல் முறையீடு செய்திருக்கிறார்களே தவிர வேறல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே ஜனநாயகத்தின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்கள் மேல் முறையீடு செய்வதற்கு உரிமை இருக்கின்றது. எனவே, அதிலே ஏன் கட்சியைக் கொண்டு வர வேண்டும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, உரிமை இருக்கின்றது. பாதிக்கப்பட்டவர்கள் கோர்ட்டுக்குப் போகலாம். அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் உரிமை இருக்கின்றது என்ற அதே சமயத்தில் ஒரு கட்சியிலே இருந்துகொண்டு கட்சிக் கட்டுப்பாட்டை மீறி ஒருவர் செய்கிறார் என்றால் ஏன் அந்த நபரைக் கண்டிக்கக் கூடாது என்ற கேள்வியைத்தான் நான் எழுப்பக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே கட்சி என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும், யார்கட்சியில் இருக்கிறார்கள் என்பதெல்லாம் கட்சிக்குத் தெரியும். ஆகவே இந்தப் பிரச்சினையைச் சொல்லி விஷயத்தைத் திருப்பவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது ? திரு. வெங்கடாசலம் பிள்ளையைச் சஸ்பெண்ட் செய்திருக்கிறீர்களா ? தற்காலிகமாக அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறாரா ? (குறுக்கீடு). . . . . .

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஒன்று கேட்க விரும்புகிறேன். இந்தப் பேர வையில் இல்லாத ஒருவரைப்பற்றிச் சொல்லி குற்றச்சாட்டு சொல்லக் கூடாது என்ற மரபு இருக்கின்றதே........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது குற்றச் சாட்டு இல்லை கோர்ட்டுக்குப் போனவருடைய பெயரைச் சொன்னார்கள் அவ்வளவுதான்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தலை நடத்தவேண்டும். மத்திய அரசிலும், மாநில அரசிலும் ஆளக்கூடியவர்கள் ஒத்துழைத்து தேர்தலைச் சீக்கிரமாகநடத்துவதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும், அதைவிட்டுவிட்டு.......

**திரு. ப. நெடுமாறன் :** தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்திரா காங்கிரஸ் கட்சி யின் துணைத் தலைவர் திரு. சித்தன் அவர்களும், சுவையான வாதம் புரிந்தார்கள். நான் ஒன்றை உங்கள் மூலமாக அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருப்பவர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக வேண்டு மானாலும் இருக்கட்டும். ஆனால் உச்ச நீதிமன்றத்திலே இந்த ரிசர்வேஷனை எதிர்த்து வழக்கு போட்டிருப்பவர் யாராக இருந் தாலும் அந்த வழக்குகளை வாபஸ் வாங்கவேண்டும் என்று எல்லா கட்சித் தலைவர்களும் சேர்ந்து அறிக்கை கொடுக்கலாம். அப்படி ஒரு அறிக்கை கொடுப்பதற்கு இந்த இரண்டு கட்சித் தலைவர்களும் ஒத்துக் கொள்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவும் கூட ஏற்கெனவே அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டத்தில் பேசப்பட்டது. நாம் எல்லா கட்சிகளும் ஒன்று சேர்ந்து அந்த வெங்கடாசலம் பிள்ளை செய்து இருக்கின்ற மேல் முறையீட்டை வாபஸ் பெறச் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் உண்மை யிலே அதற்குரிய நடவடிக்கையை யார் முனைப்பாக செய்ய வேண்டுமோ அவர்கள் அதை முனைப்பாக இதுவரையில் செய்ய வில்லை. நான் ஏற்கெனவே அந்தக் கூட்டத்திலும் சொன்னேன். திண்டிவனம் ராமமூர்த்தி அவர்கள் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அவர்களிடத்திலும் சொன்னேன். அந்த வெங்கடாசலம் பிள்ளை அவர்களை நீங்களே அழைத்து உடனடி யாக அந்த மேல் முறையீட்டை வாபஸ் பெறச் செய்யுங்கள் என்று சொன்னோம். இதுவரை செய்யவில்லை.



**திரு. எல். இளையபெருமாள்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது வெங்கடாசலம் பிள்ளைப் பற்றி சொன்னார்கள். உச்ச நீதிமன்றத்திற்கு போக யாருக்கும் உரிமை இருக்கிறது என்பது ஒன்று. மற்றொன்று எந்த அடிப் படையில் பெண்களுக்கோ அல்லது அரிசன மக்களுக்கோ, அல்லது மலைவாசிகளுக்கோ இந்த கவுன்சிலர் மூலமான வழியில் பிரிக்கப் பட்டது என்பதை ஆதாரமான முறையில் என்ன ரேஷியோ பிரகாரம் செய்தார்கள். அவர்கள் பாப்புலேஷன் என்ன ? ஜெனரல் பாப்புலேஷன் என்ன ? என்ன பாப்புலேஷன் பிரகாரம் அல்லது என்ன கணக்கீட்டு பிரகாரம் என்ன ரேஷியோ வைத்து இந்த தொகுதிகள் பிரிக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கினால் உண்மையில் யார் செய்த தவறு என்று இந்த சபை தெரிந்துக்கொள்வதற்கு உசிதமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் விவாதத்தை முக்டுகி விடப் பார்க்கிறார். மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள். நான் அதற்கு பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த மன்றம்ஏற்றுக்கொண்டால், இந்த விவாதத்தை இப்போது நடத்தலாம் என்று துணைத் தலைவர் அவர்கள் கட்டளையிட் டால் நான் அதற்கு பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. இளைய பெருமாள் அவர்கள் பேசியது பாயிண்டு ஆப் ஆர்டரில் வராது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக இந்த பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மலைவாழ் பகுதியினருக்கும் ஒதுக்கீடு செய்யப் பட்டதில் முறைகேடுகள் நடைபெற்று இருக்கின்றன. எங்கே அதிகமாக வாழ்கிறார்களோ அந்த பகுதியில் இல்லாமல் வேறு பல பகுதிகள் அங்கே சேர்க்கப்பட்டிருக்கின்றன, என்பது பல்வேறு இடங்களில் இருக்கின்றன. நான் கூட ஒரு ஊராட்சி மன்றத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் கவனத் திற்கு கொண்டு வந்தேன். மேல் முறையீடு போடுவது என்பது பாதிக்கப்பட்டவருக்குள்ள பிரச்சனை. நான் வேண்டி விரும்புவது எல்லாம் நகராட்சி, மாநகராட்சி தேர்தல் பற்றி சொன்னார்கள், இந்தக் கூட்டத்தொடர் முடிவதற்குள் அனைத்துக் கட்சி தலைவர்களையும் அழைத்து அதற்கான தேதி நிர்ணயம் செய்யப் போகிறோம் என்று சொன் னார்கள். இது உறுதியானதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இதில் அனைத்துக்கட்சித் தலைவர்கள் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஜனநாயக மரபில் விரை வாக தேர்தலை நடத்தவேண்டும் என்று தான் ஆர்வமாக இருப்பார்கள். அதற்காக இந்தக் கூட்டத்தொடர் முடியும் வரை காத்து இருக்க வேண்டியது இல்லை. இந்த கேர்கல்

தேதியை அவர்கள் விரைவில் அறிவிக்க வேண்டும். இந்த ஊராட்சி ஒன்றியங்களின் தனி அதிகாரிகளின் கால நீட்டிப்பு மசோதா இனியும் வரக்கூடாது என்கின்ற என்னுடைய ஆதங்கத்தையும், ஆர்வத்தையும் சொல்லி வெகு விரைவில் தேர்தலை நடத்துவதன் மூலமாக மக்களுக்கு நல்ல பயனை இனியாவது செய்ய வேண்டும் என்று சொல்லி என் திருத்த தீர்மானத்தை வலியுறுத்தி அமைகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11–40)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் ஊராட்சிகள், ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றில் உள்ள தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீட்டிக்கின்ற மசோதாவை சட்டமாக்குவதற்காக இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த மசோதாவின் பேரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களை ஆரம்பத்திலே கலைக்கிறபோது ஒரு சில ஊராட்சி ஒன்றியங்கள் தவறு செய்வதாகச் சொல்லி 1977 ஆம் ஆண்டிலே அனைத்து ஊராட்சி ஒன்றியங்களையும் கலைத்தார்கள். இரண்டு ஆண்டுக் காலத்திற்குப் பிறகு 1979ஆம் ஆண்டிலே ஊராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டன. 5 ஆண்டுகள் ஆகிவிட்டன, இந்த ஐந்தாண்டுக் காலத்திலே எந்த அளவுக்கு நாம் ஜனநாயகத்தை மேலும் மேலும் பாதுகாத்து வருகிறோம் என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும். ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு இடைத் தேர்தல் அல்லது முழுமையாக தேர்தல் வந்தால்கூட 6 மாத காலத்திற்குள்ளாக தேர்தல் நடத்தவேண்டும். ஆனால் இன்றைக்கு கிராமப்புறங்களிலே நகராட்சி மன்றங்களாகட்டும், ஊராட்சி ஒன்றியங்களாகட்டும், மாநகராட்சியாக இருக்கட்டும் இன்னும் பல்வேறு துறைகள் அனைத்திலும் தேர்தலே நம் ஆட்சியிலே கேலிக்கூத்தாக ஆக்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு நீதிமன்றத்தை நாம் சொல்லி வருகிறோம், பெண்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்குப் இடம் ஒதுக்டு செய்கிறபோது தேர்தல் அறிவிக்கப்பட்டதற்குப் பின்னால் உயர் நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். தமிழ்நாட்டில் உள்ள நீதிமன்றத்தில் முடிந்து இப்போது சுப்ரீம் கோர்ட்டிற்கு சென்றிருக்கிறார்கள். மேற்கு வங்கத்திலே தேர்தல் நடந்தபோது வாக்காளர் பட்டியல் சரியல்ல என்று சொல்லி உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அப்போது உச்ச நீதிமன்



றத்திலே அழகான தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். என்னவென்றால் ஜனநாயக முறையில் மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்வதற்காக தேர்தலை நடத்தவேண்டுமே தவிர அதற்கான காரணங்களைச் சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது என்று சுட்டிக்காட்டி ஸ்டே கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு மக்கள் பக்கம் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி தமிழக அரசும் வெங்கடாசலம் போன்றவர்கள் தேர்தலை நிறுத்திவைக்கவேண்டுமென்று சொன்னாலும் ஒரு நபர் கொடுத்ததை ஏற்கக்கூடாது என்ற முறையிலே நீதிமன்றத்திலே துரிதமாக வேகமாக நடவடிக்கை எடுக்கச் செய்து அதைத் தள்ளுபடி செய்யக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகளை அரசு எடுத்து ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல்களைக் கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாமல் மக்கள் குழு, மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இருந்தும் இல்லாததுபோல் இருக்கின்றன. மக்கள் குழு இருக்கிறதே தவிர மக்கள் குழு வழங்கக்கூடிய தீர்மானங்கள் செயல்படுத்தப்படவில்லை. மக்கள் குழு கூடுவதில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாம் நூற்றுக்கணக்கான தீர்மானங்களைக் கொடுக்கிறோம், விவாதிக்கிறோம், ஏதாவது நிறைவேற்றப்படுகிறதா என்றால் இல்லை. நிறைவேற்றுவதற்கு அதிகாரிகள் இருக்கிறார்கள், ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. அதிகாரிகள் ஆளக்கூடிய ஆட்சி இருக்கிறதா என்று ஐயப்படக்கூடிய நிலையில் மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். குடிநீரை எடுத்துக்கொண்டாலும், சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆகியும்கூட இரண்டு தினங்களுக்கு ஒரு முறை தண்ணீர் வழங்கக்கூடிய நிலைதான் இருக்கிறது, காசுக்கு தண்ணீர் வழங்கக்கூடிய அபாயம் வளர்ந்து கொண்டிருக்கிறது. கிராமங்களிலே உள்ள குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க அதிகாரிகள் தயாராக இல்லை. தீர்க்கப்படுவதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லை.

ஏதோ சில சாலைகள் போடுவதாகச் சொல்கிறார்கள், தன்னிறைவுத் திட்டம், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் என்று சொல்கிறார்கள், ஆனால் அந்த வேலைகள் எல்லாம் எந்த அளவுக்கு செம்மையாக நடக்கின்றன என்பது ஆளுங் கட்சியினருக்கே கூட தெரியும், வெளியே சொல்லமுடியாமல் இருக்கிறார்கள், அந்த அளவுக்கு மோசமாக நடந்துகொண்டிருக்கிறது காண்டிராக்டர்கள் மூலமாக. மின் விளக்குகள் எரிவதில்லை, கிராமங்கள் இருட்டறைகளாக இருக்கின்ற நிலைமையில் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை மூலமாக—பல்புகள் எரியாவிட்டாலும்—நிதியைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

அதே நேரத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு
ஏற்பட்ட பிறகு உள்ளாட்சித்துறை தேர்தல் நடைபெறாமல்
இருந்த காலத்தில் கூட இந்தியாவிலே தன்னிகரற்ற பணிகளை
உள்ளாட்சித்துறையில் செய்து காட்டியிருக்கிறது என்று சொன்
னால் அது மிகையாகாது. கிராமப்புற வேலை வாய்ப்புத்
திட்டத்தின் மூலமாக மத்திய, மாநில அரசுகள் இணைந்து,
100 சதவீதம் தான் குறிக்கோள் என்று சொன்னால் 155 சத
வீதம் என்ற அளவிற்கு மிகச்சிறப்பாக செய்து காட்டியிருக்
கிறோம். சத்துணவுத் திட்டமானலும் சரி, கிராமப்புற வேலை
வாய்ப்புத் திட்டமானாலும் சரி, தன்னிறைவுத் திட்டமானாலும்
சரி, கிராம அபிவிருத்தித் திட்டமானலும் சரி, இவைகளில்
எல்லாம் இந்தியா சுதந்திரம் பெற்று 35 வருடங்களாகியும்
கிராமப்புற மக்கள் எண்ணிப்பார்க்காத பல்வேறு பிரச்னைகளில்,
நாம் முன்னேற்றத்தை ஐந்தாண்டுகளில் செய்து காட்டியிருக்
கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு எடுத்துச்சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11—50]

ஒரு ஊராட்சியின் மொத்த வருவாய் ஒரு அரசுக்கு ரூ.
500 தான் என்று சொன்னால், 5 இலட்சம் ரூபாய்களுக்கு
மேலாக அந்தப் பகுதியிலே நாம் செலவு செய்திருக்கிறோம்.
அந்த அளவுக்கு இன்றையதினம் கிராம அபிவிருத்தி ஏற்பட்டிருக்
கிறது. கிராமம், நகரம் என்ற பாகுபாடுகள் கொஞ்சங்கொஞ்ச
மாக மறைந்து சிறு நகரம், பெரு நகரம் என்று சொல்லத்
தக்க வகையிலே முன்னேற்றம் கண்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, எனது தொகுதியிலே பெருந்தலைவர்
காமராஜர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். அவர்கள் அடிக்கல்
நாட்டியது அப்படியே இருந்தது. அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக அரசில்தான், 1983 ஆம் ஆண்டிலே
தான் அந்தப் பிரச்னையிலே முன்னேறி, முடித்து, இன்றைய
தினம் குடிநீர் வழங்கக்கூடிய மிகப் பெரிய பெருமையை,
நாகரசம்பட்டி என்ற கிராமத்தில், காவேரிப்பட்டினம் தொகுதி
யில், தர்மபுரி மாவட்டத்தில் செய்து காட்டியிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்த
பல்வேறு பிரச்னைகள், செக்கசமுத்திரம் என்கிற இடத்திலே ஒரு
பாலம் வேண்டுமென்று, அதுவரையிலும் போராடி, எந்தக் கட்சி
யும் நிறைவேற்றாமல், உள்ளாட்சி மன்றத்தில் இருந்த தலைவர்
கள் எல்லாம் நிறைவேற்றாத அந்தப் பிரச்னையில், உள்ளாட்சித்
தேர்தல் இல்லாத நேரத்திலேகூட இந்த அரசு நிறைவேற்றி
யிருக்கிறது என்பதை பெருமையோடு வரவேற்கக்கூடிய ஒரு
விஷயம்தான்.



ஆனால், அதே நேரத்தில் எவ்வளவுதான் நாம் செய்திருந்தாலும்கூட, எவ்வளவுதான் நாம் வளர்ச்சி பெற்றிருந்தாலுங்கூட, எவ்வளவுதான் கிராம அபிவிருத்தி திட்டங்கள் இருந்துகொண்டிருந்தாலும்கூட, தனது பெண் குழந்தைக்குத் தாய் தந்தையர் சேலை வாங்கிக் கொடுத்து, பூ வாங்கிக் கொடுத்து, வேண்டிய உணவு போட்டு, எவ்வளவுதான் வளர்த்தாலுங்கூட ஒரு கணவனிடத்திலே சென்று அவனுடைய அரவணைப்பிலே வளர்வதில் ஒரு இன்பம் அந்தப் பெண்ணுக்கு எப்படி இருக்குமோ, அதுபோல், தேர்தலிலே வரக்கூடிய ஒரு தலைவரை வைத்து அந்தக் கிராமத்திலே சில காரியங்களை முடித்துக் கொள்ளக்கூடிய ஒரு உணர்வு இப்பொழுது இல்லையென்கிற ஒரு சங்கடம் இருப்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உணர்கிற காரணத்தினால் அரசு இந்தத் தொடர் கூட்டத்திலேயே சகல கட்சித் தலைவர்களையும் கலந்து, தேர்தல் தேதியினை சட்டமன்றத்திலே அறிவிக்க வேண்டும். நீதிமன்றத்தாலே பாதிக்கப்படுமானால், பாதிக்கப்படுகின்ற ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் போன்றவற்றை விடுத்து, ஊராட்சி நகராட்சி, மாநகராட்சி, போன்றவற்றிற்கு உடனடியாகத், தேர்தலைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த சகல கட்சியினரையும் அழைத்துப் பேசி, தேதியை அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்கள் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நம்புகிறது. ஆகவே, தேர்தல் என்பதை நீங்கள் மட்டுமல்ல, நாங்களும், வரவேற்கிறோம். எதிர்கட்சிகள் சொல்லி மட்டுமே வரவேற்க வேண்டுமென்பது அல்ல. ஆளுங்கட்சியேகூட வற்புறுத்துகின்றது. அரசாங்கமேகூட, எப்பொழுதும் தேர்தலைக் கண்டு அஞ்சாத பயப்படாத அரசு என்பதையும், இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஏற்பட்ட பிறகு எதிலும் எந்த வகையிலும் தோல்வியே பெறவில்லையென்பதை மனதிலே வைத்து, இன்றிருக்கிற சூழ்நிலையில் இந்தத் தொடர் கூட்டம் முடிவதற்குள் நல்ல ஒரு தேர்தல் தேதியினை அறிவிக்கக் கூடிய முறையில் சகல கட்சிகளையும் அனுசரித்து, தெரிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை, விரும்பி, வேண்டிகேட்டுக்கொண்டு, அந்தத் தேர்தலை நடத்தும் காலம் வரை, தனி அலுவலர்கள் தேவை என்பதால், இந்த சட்ட முன் வடிவுகளை வரவேற்று முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆய்விலிருக்கிற சட்டமுன்வடிவுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆட்சேபணையையும் எதிர்ப்பையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் இந்தச் சட்ட முன்வடிவை அரசு முன் மொழிகிறபொழுது, நிலைமைகள் முழுவதையும் ஆய்ந்து உடனடியாகத் தேர்தலுக்கான முயற்சியை மேற்கொண்டிட வேண்டுமென்று நான் வற்புறுத்துகின்றேன்.

[திரு. போ. உத்திராபதி] [1983 மார்ச் 7

பஞ்சாயத்துக்களிலே நிதி இல்லை. என்னுடைய தொகுதியை நான் சுற்றிப்பார்த்தபோது எந்தக் கிராமத்திலேயும் மின் விளக்கு எரியவில்லை. சாலைகளைப் போடுவதாகச் சொல்கிறார்களே தவிர உண்மையிலேயே என்ன நடக்கிறது என்றால் அதிகாரிகள் கணக்கு காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பேசியபோது கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் தமிழ்நாட்டில் நன்றாக இருக்கிறது என்று மத்திய அரசு பாராட்டியதாகச் சொன்னார்கள், நம் அதிகாரிகள் கணக்கு சரியாகக் காட்டியிருப்பதாகச் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். அதிகாரிகள் சரியாக கணக்கு எழுதியிருப்பார்கள், காண்ட்ராக்டர்கள் மூலமாக வேலைகள் நடக்கின்றன, எந்த அளவுக்கு அவைகள் நடக்கின்றன என்பதை ஆராய்ந்தோமானால் முழுமையும் நடைபெறவில்லை என்பது தெரியும், அதற்குக் காரணம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லை என்பதுதான். அதிகாரிகள் தங்கள் இஷ்டம் போல் செயல்படுகிறார்கள். குறிப்பாக கை பம்புகள் 100-க்கு 70 வேலை செய்யாமல் ரிப்பேராகி இருக்கிறது. அதை செய்யச் சொன்னால் வேலை செய்வதாகச் சொல்கிறார்களே தவிர ரிப்பேர் செய்வதில்லை. ஆனால் கணக்கு எழுதப்படுகிறது. 5 ஆண்டுக்காலமாக மின் விளக்கு இல்லை, குடிநீர் இல்லை, சாலை வசதிகள் இல்லை, கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் போன்றவற்றின் பலன்கள் முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. மக்கள் அவற்றை முழுமையாக அனுபவிக்கவேண்டுமானால் இனி மேலும் காலத்தைக் கடத்தாமல் உச்ச நீதிமன்றத்திலே உள்ள வழக்குகளை உடனடியாக பைசல் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரிசனங்கள், பெண்கள் இடப்பிரிவினை, பிறகு வாக்காளர்கள் சேகரம் செய்வது போன்ற மூன்று விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் ஆட்சியினர் நினைத்தால், அதிகாரிகள் கையில் ஒப்படைத்தால் வேகமாக முடிந்துவிடும். இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு இந்த மசோதாதான் கடைசி மசோதாவாக இருக்க வேண்டும். இனி மேல் இந்த மன்றத்தில் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் மேலும் காலத்தை நீட்டிக்காமல் இந்த மசோதா தான் கடைசியாக நிறைவேற்றக்கூடிய மசோதா என்ற அளவிற்கு அமைச்சர் அவர்கள் இருக்க வேண்டுமென்று கூறி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த மசோதாவை கண்டித்து என் உரையை முடிக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக்கூடிய, உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட மசோதாக்களின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் ஒரு சில கருத்துக்களைக் கூற முன்வருகிறேன்.



1983 மார்ச் 7] [டாக்டர் கே. சமரசம்]

ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி என்று இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளில் தேர்தலை நடத்தவேண்டும் என்பதில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஒருமனதாகவும், முழுமனதாகவும் விரும்புகிறது. இந்த தேர்தலை நடத்தினால் அது மிக நல்லமுறையில் ஜனநாயகத்தை காக்கமுடியும் என்று அரசு உணர்ந்திருப்பதை என்னாலும் இங்கே சுட்டிக்காட்ட முடிகிறது. அதே நேரத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான், ஆதி திராவிடர்களுக்கும், பெண்களுக்கும் ஆள்வதற்கு வாய்ப்பினை தரவேண்டுமென்று ஒரு சட்ட திருத்தத்தைக்கொண்டு வந்து, அதை சட்டமன்றத்தில் நிறைவேற்றி, அதை வருகிற உள்ளாட்சித் தேர்தல்களில் கடைப்பிடிக்கவேண்டுமென்று முழுமுயற்சியோடு ஈடுபட்ட போது, எந்தெந்த கட்சிகள் இந்தத் தேர்தலை வரவேண்டுமென்று இங்கே வற்புறுத்துகின்றனவோ, அவற்றில் இருப்பவர்கள்கூட நீதிமன்றத்திற்குச் சென்று தேர்தல் வரவிடாமல் தடுப்பது, எதிர்ப்பது அல்லது முட்டுக்கட்டைப் போடுவது என்பது துரதிஷ்டவசமாகும். உயர்நீதிமன்றமும், உச்ச நீதி மன்றமும் உங்களுக்கு ஒரு சாக்காக அமைந்து விட்டது என்று கூட சிலர் சொன்னார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் பேசுகிறவர்கள் எல்லாம், மொட்டை அடித்து தான் ஆகவேண்டுமென்று சொல்லிவிட்டு, பூ வைத்துக் கொள்ளவில்லையே என்று ஏங்குவது சரிதானா என்று பார்க்கிறபோது வேதனையாகத் தான் இருக்கிறது. இங்கே இன்னொரு உறுப்பினர் அவர்கள் பேசுகிற போது சொன்னார்கள். சட்டம் ஒரு இருட்டறை என்று அண்ணாவே சொல்லிவிட்டார் என்று குறிப்பிட்டார்கள். சட்டம் ஒரு இருட்டறை என்று அண்ணா அவர்கள் தான் சொன்னார்கள். வழக்கறிஞர்களின் வாதமும் அதிலே ஒரு விளக்காக, வெளிச்சம் தரவேண்டும் என்பதாக இருக்கவேண்டும் என்பதல்ல; சட்டமன்ற உறுப்பினரின் வாதம் ஒரு விளக்காகவும் வெளிச்சம் தரத்தக்கதாகவும் இருக்கவேண்டுமே தவிர, இருக்கிற விளக்கை அல்லது வெளிச்சத்தை அணைத்து விடக்கூடியதாக இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்தாகும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு ஏற்பட்ட பிறகு தான், மதுரை மாநகராட்சி தேர்தலை கூட சந்தித்து மிகப் பெருமையான வெற்றியை அதில் பெற்றது என்று சொன்னால் அது மிகையாகாது. தேர்தலை நடத்துவதில் அல்லது அதில் ஈடுபடுவதில் அரசுக்கோ அல்லது அரசை உருவாக்கிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ எந்தவிதமான பிற்போக்கும் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், ''செற்றலரை வென்ற திருமலைராயன் கரத்தில் வெற்றிபுரியும் வாளே, வீரவாள்; மற்றைய வாள்—போவாள்—வருவாள்—புகுவாள்—புறப்படுவாள் ஆவாளிவாள வாளாம்'' என்ற அளவிற்குதான் எங்களுடைய வெற்றி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெளிவாக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேரதல் நடத்துவதற்கு உச்ச நீதிமன்றத்தினுடைய தடை இருக்கிறது என்ற நிலையிருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அது சம்பந்தமாக, ஏற்கனவே கூட்டப்பட்ட அனைத்துக் கட்சியின் கூட்டத்திலே இந்தத் தடையை நீக்குவதற்கான விரைவு முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அந்த முயற்சியை மேற்கொண்டிட வேண்டும். அவவாறு இருக்கும்போது நகராட்சிகளில்—கோவை மாநகராட்சி, சென்னை மாநகராட்சி போன்ற பகுதிகளில்—தேர்தல் நடத்துவதற்கு இப்பொழுது எந்தவிதமான தடையும் இல்லை.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் பெண்களுக்கு, ஆதி திராவிடர்களுக்கு, ஆதிவாசிகளுக்கு ரிசர்வேஷன் என்பதை ஏற்றுக்கொள்கிறது. ஆனால், நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் இந்த ரிசர்வேஷனைக் கொண்டு வருகிறோம் என்ற காரணத்தினாலே தாமதப்படுத்த தேவையில்லை. அதைக் கொண்டு வருவதற்கு நாம் முயற்சி செய்யலாம். ஆனால், அதே நேரத்தில், இன்றைக்கிருக்கக்கூடிய சட்டத்தை உபயோகப்படுத்தி, 1983 ஜனவரியிலே 18 வயதானவர்களுக்கு ஓட்டுரிமையையும், ஜனக் கணக்கெடுப்பின்படி வார்டு பிரிவினையையும் மேற்கொண்டு, இந்த 3, 4 மாத காலத்திற்குள்ளேயே நகராட்சிகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான ஆலோசனை, மேற்கொள்ள வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆலோசனையை எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

அதற்கான தேதியை இந்தக் கூட்டத்திலேயே அறிவித்தாலும் சரி அல்லது அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி அதிலே இந்தத் தேர்தல் தேதியை அறிவித்தாலும் சரி, அது உதவியாக இருக்கும். கிட்டத்தட்ட நம்முடைய மாநிலத்தில் உள்ள பல சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் இந்தத் தேர்தல்களை நடத்திட சர்க்கார் முன்முயற்சி எடுக்க வேண்டுமென்று கட்சியின் சார்பாக ஆலோசனை கூற விரும்புகிறேன்.

இந்த நிலையில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. எந்தக் கட்சி தேர்தலை நடத்தச் சொல்கிறது என்ற சர்ச்சையில் ஈடுபட வேண்டாம். 1969 ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலுள்ள மக்கள் நகராட்சித் தேர்தலில் ஓட்டுப் போட்டார்கள். 1971 ஆம் ஆண்டில்தான் இந்தத் தமிழ் நாட்டிலுள்ள கிராமப்புறத்து மக்கள் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றிற்கு ஓட்டளித்தார்கள். இன்னும் இந்த





நிலைமை நீடித்தால், இப்படிப்பட்ட தேர்தல்களில் ஓட்டளிக்க வேண்டுமா என்ற நினைவைக்கூடத் தமிழ்நாட்டு மக்கள் மறந்துவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டு விடும். 12 வருடங்கள், 11 வருடங்களாக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாத அவல நிலை இருக்கிறது என்பது ஜனநாயகத்தை எவ்வாறு பாழ்படுத்தும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்குப் பல கட்சிகள் குரல் கொடுக்கிறார்கள் என்றால் நாம் அதைக் கண்டு அதிசயப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். பரவாயில்லை, ஜனநாயகத்தைப் பாதுகாக்க இப்பொழுதாவது குரல் கொடுக்கிறார்களே என்று அதிசயப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இதிலே பல கோடி ரூபாய்த் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தால், மாநில அரசு பல கோடி ரூபாய் செலவழிக்கிறது என்று சொன்னால், சட்டசபை இல்லாமல் இருந்தால் பரவாயில்லை அல்லவா என்ற இப்படிப்பட்ட வாதத்தை வேறொருவர் கேட்கக் கூடும். எனவே, இருக்கின்ற திட்டங்களைச் சரியாக நடத்துவதற்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற அமைப்புகள் கண்காணிக்க வேண்டும் என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய மிகப் பெரிய ஜனநாயக உண்மையாகும். அவைகள் இன்றைக்குச் சரியாக அமல் நடத்தப்படவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். ஆகவே, அரசை நான் வற்புறுத்த விரும்புவதெல்லாம், இன்றைக்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

தமிழ்நாட்டில் குடிதண்ணீர் நிலைமை எல்லை கடந்து போய்க் கொண்டிருக்கிறது. விளக்குகள் கிராமங்களில் மட்டுமல்லாமல் நகராட்சிப் பகுதிகளிலேயும் சரியாக எரிவதில்லை. ரோடு வசதி, தண்ணீர் வசதி, கழிப்பிட வசதி ஆகியவை பல பகுதிகளில் இல்லாமல் இருக்கின்ற காட்சி இருக்கிறது. சானிடேஷனைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா பூராவும் மோசமான நிலைமைதான் இருக்கிறது; இதில் தமிழ்நாட்டில் மட்டும்தான் மோசமாக இருக்கிறது என்று சொல்லவில்லை. இப்படிப்பட்ட பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு, நகராட்சிகளிலேயும், பேரூராட்சிகளிலேயும், ஊராட்சி மன்றங்களிலேயும் நிதி ஆதாரம் இல்லை. அந்த உண்மையைப் பேசாமல் தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிப் பேசிப் பிரயோசனம் இல்லை.

பல பேரூராட்சிகளில் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்குக்கூடப் பணம் இல்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு அவைகளுக்கு மானியத்தொகை ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது ஜனத்தொகை பெருகியிருக்கிறது; தொழில்கள் பெருகியிருக்கின்றன; நகரங்கள் பெரிதாகியிருக்கின்றன. அதனால்

சுகாதாரக் கேடுகள் மலிந்து கிடக்கின்றன. எனவே, அந்தச் சுகாதாரத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும். பல நகராட்சிகளில் மூன்று நான்காண்டுகளாக வற்புறுத்தியும்கூட ஒரு நபரைக்கூட உயர்த்த முடியாத நிலையிருக்கிறது. அப்படிப்பட்ட நகராட்சிகளில் இந்தப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க முடியவில்லை. பிறகு எப்படி அந்த இடம் துப்புரவாக இருக்கும்; சுத்தமாக இருக்கும் ?

திண்டுக்கல் பகுதியில் இன்னும் ஒரு மாதத்தில் கடும் தண்ணீர் நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய நிலைமையிருக்கிறது. அதற்குப் பக்கத்தில் உள்ள சின்னாளப்பட்டி நகரத்தையும் சேர்த்தால் கிட்டதட்ட மூன்று இலட்சம் மக்கள் கடும் குடிதண்ணீர் நெருக்கடியில் சிக்கித் தவிக்கவிருக்கிறார்கள். அவர்கள் கேட்கிறார்கள், வைகைப் பேரணையிலிருந்து முன்னோடித் திட்டத்தை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று. சில மைல்களுக்கு அப்பால் உள்ள தனியார் தண்ணீர்க் கிணறுகளை அரசோ அல்லது நகராட்சியோ குத்தகைக்கு எடுத்துக்கொண்டு லாரிகள் மூலமாகத் தண்ணீரை விநியோகித்திட வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆழ்குழாய்களை சின்னாளப்பட்டியில் பெரிதும் போட வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இன்னும் இருப்பதைச் சொல்ல வேண்டுமென்றால், அதிகாரிகள் நம்மிடத்திலே சொல்கிறார்கள், இத்தனை ஆழ்குழாய்களைப் போட்டிருக்கிறோம் என்று லிஸ்டைக் கொடுக்கிறார்கள். ஆனால் நாம் அவைகளைச் சுற்றிப் பார்த்தால் 100-க்கு 50 சதவீதம் அல்லது 60 சதவீதம் பழுதுபட்டிருக்கின்றன. அந்தப் பழுதைப் பார்த்து ரிப்பேர் செய்வதற்குத் தொழிலாளர்கள் ஏத்தனைப் பேர் என்று பார்த்தால், ஒரு யூனியனுக்கு ஒருவர் இருக்கிறார். அவர் இந்த வேலைகளையெல்லாம் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். பல கோடி ரூபாய்களைச் செலவு செய்து குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாகக் குழாய் கிணறுகளை அமைக்கும் பொழுது டெக்னிகல் நுணுக்கத்தோடு பார்த்தால், குழாய் 200 அடி இருக்கிறது; ஆனால் ராடு 60 அடிதான் இருக்கிறது, ஆகவே தண்ணீர் வற்றி விட்ட நிலையில் ராடைக் கூடுதலாகப் போட்டால் தண்ணீர் கிடைக்கும். ஆகவே, இப்படிப்பட்ட டெக்னிக்கல் பிரச்னைகளைப்பற்றிக் கூட அதிகாரிகள் கவனிப்பதற்கு மறுக்கிறார்கள் என்பது நாம் போகும் இடங்களில் நடக்கும் விவாதங்களில் இருந்து உண்மை தெரிகிறது. இதை அவர்கள் எங்கே போய்ச் சொல்ல முடியும் ? நகராட்சிகளோ, ஊராட்சி மன்றங்களோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களோ இருந்தால் அப்படிப்பட்ட கூட்டங்களில் இந்த வாதத்தை வைப்பார்கள். அதன் மூலம் அதிகாரிகளின் அலட்சியப் போக்கத் தடுத்து நிறுத்தவும் முடியும்.

அமைச்சரவர்களுக்கே தெரியும். மதுரை மாநகராட்சி தேர்ந்தெடுக்கப்பெற்ற அமைப்பாக இருப்பதால் அங்கு கருத்துப் பரிமாற்றம் நடைபெறுகிறது.



[நண்பகல் 12.00]

எவ்வாறு சொத்து வரி விதிக்கவேண்டுமென்பது சம்பந்தமாக கூட அங்கே சர்ச்சைகள் எழுகின்றன. இதையெல்லாம் நம்முடைய அரசு கூர்ந்து கவனிக்கவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை இல்லாததால் பல இடங்களிலே இந்தப் பணிகள் சரியாக நடைபெற முடியாமல் தடுக்கப்படுகிறது. சில இடங்களிலே அது ஊதாரித்தனமான செலவுகளுக்கு இட்டுச்செல்கிறது. அப்படிப்பட்ட தனி அதிகாரிகளுடைய போக்கு எவ்வாறு இருக்கும் அவர்கள் இன்று மக்கள் ஆட்சி இல்லாத இடங்களிலே தன்னிச்சையாக காரியங்கள் செய்வதாலே பலவிதமான தவறுகள் நடைபெறுகிறது. அந்தத் தவறுகளிலே பலர் சம்பந்தப்படுகிறார்கள். அதற்கான காரணம் என்ன ? நான் மதுரை மாவட்டத்தினுடைய அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலே சொன்னேன். ஒரு ஓடையைக் கட்டுகிறார்கள், அந்த ஓடையிலே கட்டவேண்டிய பாலத்திற்குப் பதிலாக இன்னொரு இடத்திலே கட்டுவிட்டு, அதற்கு பில்லைப் போட்டு பணத்தை வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். அப்படிப்பட்ட காரியங்கள் கூட பல இடங்களில் நடைபெறுகிறது. இவைகளையெல்லாம் கண்காணிக்க, ஏற்படும் தவறுகளைக் கண்டிக்க, திருத்த, இப்படிப்பட்ட முயற்சிகள் தேவைப்படுகிறது.

அதேபோல்தான் இன்றைக்கு ஆலோசனைக் குழுக்கள் என்று அமைத்திருக்கிறார்கள். அந்த ஆலோசனைக் குழுக்களை அந்த அதிகாரிகள் இஷ்டம்போல் கூட்டுவார்கள். இதற்கு என்று ஏதாவது ஒரு நிகழ்ச்சி குறிப்புகள் உண்டா ? இந்தந்த மாதத்திற்குள் அது கூட்டப்பட வேண்டும் என்று ஏதாவது கட்டாயம் உண்டா ? சட்டம் உண்டா ? இல்லை. அப்படி கூடி விவாதித்தாலும் அது பெயரளவில்தான் இருக்கும். அதில் நிறைவேற்றப்படுகிற தீர்மானங்கள், ஆலோசனைகள் அமுல்படுத்தப்படுகிறதா? இந்த சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறபோது, ஆட்சேபணை எழுப்புகிறபோது மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் கூடச் சொன்னார்கள். கோவை மாநகராட்சியிலே44 கோடி ரூபாய்க்கு திட்டங்கள் நிறைவேற்றுகிறோம் என்று சொல்லி, பிரயோஜனம் இல்லை. அந்த மாநகராட்சிக்கு என்று ஒரு ஆலோசனைக் குழு ஏன் அமைக்கக்கூடாது? அதனுடைய பொறியாளரும் அங்கே இருக்கக்கூடிய கமிஷனரோ அங்கே நடக்கக்கூடிய மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலே வந்து ஏன் கலந்து கொள்ளக் கூடாது. அவர்களை எல்லாம் கட்டுப்படுத்துகிற அதிகாரங்கள் யார் கையிலே இருக்கிறது ? அவர்களை எல்லாம் கட்டுப்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை இல்லையா? அவர்கள் எல்லாம் தனிக்காட்டு ராஜாக்களா ? அப்படி இவர்கள் எல்லாம் அந்த மாநகராட்சியைச் சேர்ந்தவர்களோ, நகராட்சியைச் சேர்ந்தவர்களோ, ஊராட்சியைச் சேர்ந்தவர்களோ, ஒன்றியக் குழுக்களிலே இருக்கக்கூடிய கமிஷனர்களோ, யாராக இருந்தாலும்

காந்தி காங்கிரஸ் (குறுக்கீடு) தாங்குவது சுலபம். ஏதாவது சொல்ல வேண்டும் என்றிருந்தால் எழுந்து சொல்லலாம். அவர் சொன்னால் நல்லது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இங்கு பிரதம அமைச்சர் அவர்கள் உற்பத்தி ஆண்டு என்று சொன்னது தமிழ்நாட்டிலே கொசு உற்பத்தி அல்ல. கொசு உற்பத்தி அதிகமாக இருக்கிறது. எனவே, அதை அவர்களுக்கு காணிக்கையாக அளிக்கவேண்டுமென்று இந்திய மார்க்கிஸ்ட் கட்சி உறுப்பினர் வரதராஜன் அவர்கள் சொன்னார்கள். இதை அவர்களுக்கு ஏன் காணிக்கையாக அளிக்க வேண்டும்? தொழில் உற்பத்தி என்று சொன்னால், உணவு உற்பத்தியைப் பற்றி சொன்னார்கள். கொசுவைப் பொறுத்தவரைக்கும் மாநில அரசின் கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்கிறது. அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கவேண்டாம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன்) :** இதையெல்லாம் நகைச்சுவையாக சொல்வதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, நகைச்சுவைக்காகப் பேசும்போது கூட தமிழ்நாட்டினுடைய உண்மையான விவரங்களைப் பேசுவது நல்லது தான். நாமும் இந்த சட்டப் பேரவையில் இருக்கக்கூடிய மற்ற உறுப்பினர்களும், தமிழ்நாட்டினுடைய இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். அவர் சொன்னார். உரலுக்கு ஒரு பக்கம் இடி. மத்தளத்துக்கு இரு பக்கம் இடி என்று இந்திரா காங்கிரஸ் கட்சி இடி வாங்கிக் கொண்டு சமாளிக்கிறதே, அதற்காக நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, இன்றைக்கு மத்திய அரசினிடம் நாம் போதுமான நிதி ஆதாரங்களை வேண்டுமென்று கேட்டு வருவதை வற்புறுத்தி வருகிறோம். அதனாலேயே நமக்கு நகராட்சி, ஊராட்சிகளுக்கு நிதி ஆதாரங்களை கொடுக்க முடியாமல் தவிக்கிறோம். கொசு அதோடு சேரும். ஆகவே, இன்றைக்கு சிரமங்கள் இருந்தாலுங்கூட, இந்த கொசுத் தொல்லையை நாம் ஒழித்துக்கட்டுவதற்காக புது முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

மொத்தம் ஒரு லட்சம் மக்கள் திண்டுக்கல்லில் தூங்குவது இல்லை. அதைத் தான் நான் சொல்ல முடியும். அதிலே இட்டுக் கட்டி சொல்வதோ அல்லது அண்ணா தி.மு.க. அரசுக்கு கெட்டப் பெயர் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்வதாகவோ நீங்கள் கருதாதீர்கள். உண்மை நிலையை உண்மை நிலை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட காரியங்கள் கூட நிறைவேற்ற முடியாத ஒரு துயரமான நிலையில் நம்முடைய



நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், மாநகராட்சிகள் இருக்கின்றன. இந்த உண்மையை நீங்கள் எடுத்துக்கொண்டால், அதற்கான காரியத்தை நிறைவேற்றிட நாம் தேர்தலைக் கொண்டுவர முனைப்பாக செயலாற்ற வேண்டும் என்பதை வற்புறுத்தி அமர்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஐ ஆம் ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர் சார். சற்றைக்கு முன்னாலே எனக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி கிடைத்திருக்கிறது. தமிழகம் பெரிதும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிற அரிசியும், கோதுமையும், இந்தியப் பேரரசு அனுப்பி இருப்பதாக எனக்கு ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. அந்தச் செய்தியை அரசின் சார்பிலே உறுதிப்படுத்துவார்களேயானால், அந்த மகிழ்ச்சியிலே நாமும் சேர்ந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன்) :** அதாவது இந்த நேரங்களில் பாய்ன்ட் ஆப் ஆர்டரை எழுப்பக் கூடாது. இருந்தாலும் கேட்டு விட்டீர்கள். அரசு தரப்பிலே ஏதாவது தகவல் இருந்தால் அமைச்சரவர்கள் தெரிவிக்கலாம். (குறுக்கீடு) அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர் வந்த பிறகு விசாரித்துச் சொல்லலாம்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு சித்தன் அவர்களுக்கு அவை முன்னவர் செய்யக் கூடிய இந்த வேலைஎப் போதிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பட்டசெய்திகள் வந்தால் அவை முன்னவர் சொல்ல வேண்டுமே தவிர, இப்படிப் பட்ட செய்திகள் எங்களுக்கு கிடைத்திருக்கிறது. நாங்கள் கொடுத்துக் கொண்டே இருப்போம். பேசிக்கொண்டே இருப்போம். என்றால் அவையினுடையகட்டுப்பாட்டை காப்பாற்ற முடியாது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இதைச் சொல்வதனால் அவர்கள் எந்த விதத்தில் பாதிக்கப்படுகிறார்கள். தமிழ்நாடு முழுவதற்கும் தெரிய வேண்டிய செய்தி.

**(பிற்பகல் 12-10).**

**திரு கு. ரமணி :** அரசாங்கம் கேட்டு இருக்கிற அரிசிக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து உத்தரவு வந்து இருந்தால், அரசாங்கத்திற்கு அது தெரியும். பத்திரிகைகளில் செய்தி வந்து இருக்கிறது என்று அவையில் சொல்லிவிட்ட பிறகு, நாளைக்கு அரிசி கிடைக்கவில்லை என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் கொடுக்கப் போகிறரா ?

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் அரிசி வேண்டும் என்று சொல்கிறாரா, அல்லது வேண்டாம் என்று சொல்கிறாரா என்று எனக்குத் தெரியவில்லை.

என் கவனத்திற்கு வந்த செய்தியை நான் இங்கே தெரிவித்தேன். அரசாங்கத் தரப்பில் அவர்களுக்குச் செய்தி வந்திருந்தால் அதை அவர்கள் தெரிவிக்கட்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன்):** அது பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள், முனிசிபாலிட்டிகள், கோயம்புத்தூர், சென்னை மாநகராட்சிகள் ஆகியவற்றில் தனி அதிகாரிகள் நியமனத்தை நீட்டிப்பதற்கான வகையில் கொண்டு வரப்பட்டுள்ள மசோதாக்கள் மீது நான் தந்து இருக்கின்ற திருத்தங்களை வலியுறுத்திப் பேச விரும்புகிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் இதே மசோதாவை திரும்பத் திரும்ப ஆண்டுக்காண்டு இந்த அவைமுன் வைக்கின்ற காரியத்தை தொடர்ந்து செய்து வருகிறார்கள். இதற்கு முன்னாலே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த திரு. காளிமுத்து அவர்கள் இந்தப் பணியைச் செய்து வந்தார்கள். இப்படி ஒவ்வொரு அமைச்சரும் அந்தத் துறையைப் பொறுப்பேற்றுக் கொள்கிற நேரத்தில் ஆண்டுக்காண்டு இத்தகைய மசோதாக்களை இந்த அவையின் முன் கொண்டு வருவது வழக்கமாகி விட்டது. இந்த தனி அதிகாரிகள் நியமனத்திற்கு நீட்டிப்புக்கேட்டுக் கொண்டு வருவது எப்படி இருக்கிறது என்று சொன்னால்— என்னுடைய தந்தை ரொம்பவும் பக்திமான். நான் 4–5 வயது சிறுவனாக இருந்த போது, என்னுடைய தந்தையார் என்னை பார்த்தசாரதி கோவிலுக்கு ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதத்தில் அழைத்துச் செல்வார். நான்காவது வாரம் கருட சேவை வருகிற போது ஒரு புத்தகத்தை எடுத்து சில வாசகங்களைப் படிக்கச் சொல்வார். இது ஒவ்வொரு ஆண்டும் நடக்கும்— அந்த மாதிரி நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்த ஸ்பெஷல் ஆபீசர் நியமனத்திற்கான எக்ஸ்டென்ஷன் கேட்டுக்கொண்டு வருவது வாடிக்கையாகிவிட்டது.

சென்னை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்துவது குறித்து நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். போன வருஷம் இந்த மசோதா சென்னைக்கு என்று கொண்டுவருகிற போது, என்ன காரணம் சொன்னீர்கள்? அதற்கு முன்னாலே இதே போன்ற மசோதா கொண்டு வந்தபோது என்ன காரணம் சொன்னீர்கள்? இப்போது என்ன காரணம் சொல்கிறீர்கள்? இது தான் வினோதமாக இருக்கிறது. முன்னால் சென்னைக் கார்ப்பரேஷனுக்கு எக்ஸ்டென்ஷன் கேட்டபோது என்ன சொன்



னீர்கள் என்றால், மஸ்டர்ரோல் வழக்கு இருக்கிறது, அது தீர வேண்டும் என்று 2–3 வருஷம் இழுத்தீர்கள். அதற்கு அடுத்த ஆண்டும், போன ஆண்டும் என்ன சொன்னீர்கள் என்றால், Census work has to be done by the Commissioner, Corporation of Madras. The Government of India has requested the State Govt. not to entrust any important work to the Commissioner, Corporation of Madras. என்று சொல்லி எக்ஸ்டென்ஷன் கேட்டீர்கள். அதைக் கூட நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இப்போது ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசன்சில் என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்று சொன்னால், அது தான் வினோதமாக இருக்கிறது. முதலமைச்சர் தந்து இருக்கிற வாக்குறுதி மீறப்படுமோ என்ற அச்சம் இருக்கிறது. இதைக் கிளியர் செய்ய வேண்டியது சம்பந்தப்பட்ட அமைச்சரின் பொறுப்பு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எஸ். சி. எஸ். டி. மற்றும் பெண்களுக்கு ரிசர்வேஷன் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அது இருக்கட்டும். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால், அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி கருத்துத் தெரிவிக்கின்ற நேரத்தில், இந்தப் பிரச்னை சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் வராது என்று சொல்லி இருப்பதாக நான் அறிகிறேன். ஆனால் இன்றைக்கு அதையும் காரணம் காட்டியிருக்கிறார்கள்.

Reservation will be examined as far as Corporation is concerned and Municipality is concerned.
என்று சொல்கிறார்கள். இதை எடுத்துக்கொள்வீர்கள் என்றால் நீங்கள் தந்து இருக்கின்ற வாக்குறுதி பிரகாரம், அனைத்துக் கட்சித் தலைவர்கள் எடுத்துச் சொன்னாலும் கூட, தேர்தல் நிச்சயமாக நடைபெறுமா என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டு இருக்கிறது.

அது மட்டுமல்ல. இன்னொன்றையும் சேர்த்திருக்கிறார்கள். அதில் ஒரு வினோதம். உரிய வயது வந்தவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை வழங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். 1–1–1983 முதல் 21 வயது அல்லது 18 வயது வந்த அனைவரையும் வாக்காளர் பட்டியலில் சேர்த்து, அவர்களுக்கெல்லாம் வாக்குரிமை தர இருக்கிறோம் என்று சொன்னால், வாக்காளர் பட்டியல் தயார் செய்ய பல நாள் ஆகலாம், மாதங்கள் ஆகலாம். இதிலே பட்டவர்த்தனமாகத் தெரிவது என்னவென்றால், பஞ்சாயத்துத் தேர்தல் சம்பந்தமாக உச்சநீதி மன்றத்திலிருக்கும் வழக்கைக் காட்டி, தேர்தலை நடத்துவதில் காலம் தாழ்த்துவதைப் போல வாக்காளர் பட்டியல் தயார் செய்ய வேண்டும்; ரிசர்வேஷன் செய்ய வேண்டும் என்று காரணம் காட்டி கூட நீங்கள் காலம் தாழ்த்தலாம் என்ற அச்சம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதை நிவர்த்தி செய்கிற பொறுப்பு அமைச்சருக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அவர்கள் இந்த மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்திற்கு
வரவேண்டும். இந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் கூட சட்ட
ரீதியாக உள்ள ஆலோசனைக் குழுவாக மாற்றப்பட வேண்டும்.
பல கோடி ரூபாய் மானியமா என்று அமைச்சர் அவர்கள் கேட்
டார்கள். மானியத்தை விட இது முக்கியமானது. மானியம்
மீது இன்றைக்கு நாம் என்ன செலவழித்திருக்கிறோம் என்பதை
பற்றித்தான் பேசமுடியும். அந்த மானியத்தை கண்காணிக்கக்
கூடிய ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும். என்று வற்புறுத்து
கிறேன். இப்படி பல கோடிக்கணக்கான ரூபாய்களை செல
வழிக்கிறபோது அந்தச் செலவு உண்மையிலே செலவழிக்கப்படு
கிறதா, தேவையான முறையிலே செலவழிக்கப்படுகிறதா என்
பதை நீங்கள் கண்காணிக்கவேண்டும். ஆகவேதான் இந்த சட்டத்
திருத்தம் என்பது தமிழகத்தினுடைய ஜனநாயகத்திற்கு நாம்
வைக்கக்கூடிய ஒரு வேட்டாக முடியும். இது நீடிக்க நீடிக்க
இன்னும் பல காலத்திற்கு இந்த அமைப்புக்களிலே யார் எல்லாம்
தவறான நபர்கள் இன்னும் நுழையவேண்டுமோ—ஆளும் கட்சியை
சேர்ந்தவர்களுக்கும் சொல்வேன்—அவர்கள் நுழைவதற்கு
வாய்ப்பு ஏற்படும். தமிழ்நாட்டிலே உங்களை ஆதரிக்கக்கூடிய
மிகப் பெரிய பத்திரிகை ஒன்று நேற்றைக்கு கூட ஆலோசனை
சொல்லியிருக்கிறது. ஏதோ நாங்கள் வெற்றி பெற்றிருக்கி
றோம் என்ற மமதையிலே கூட இருக்காதீர்கள், உங்கள் கட்சிக்
குள்ளே கூட மக்கள் என்ன நினைப்பார்கள் என்று கருதாமல்
கூட இருக்கக்கூடிய நபர்கள் தோன்றக்கூடும் என்று உங்களை
ஆதரிக்கும்படியான பத்திரிகைகூட நேற்று உங்களுக்கு ஆலோ
சனை சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது என்பதை நாம்
மறந்துவிடக்கூடாது. ஆகவே, எதிர் தரப்பிலேயிருந்து ஜன
நாயக பூர்வமாக சொல்லுகின்ற ஆலோசனைகளுக்குச் செவி
சாய்க்கவேண்டும். இன்றைக்கு பல்வேறு நியமனங்களிலே தவறு
கள் நடைபெறுகிறது. ஆளும் கட்சிக்காரர்கள் தலையிடுகிற
போது அதற்கு செவி சாய்க்கக்கூடிய அலுவலர்கள் இருக்கிறார்
கள். அவர்களுக்கு பல நோக்கங்கள் இருக்கும். அமைச்சர்
சொல்லித்தான் இவ்வாறு செய்தார்கள். அரசு சொல்லித்தான்
இவ்வாறு செய்திருக்கிறது என்றெல்லாம் சொல்வார்கள். இன்
றைக்கு அவர்கள் பல தவறுகளைச் செய்தால் அந்த வட்டாரத்
திலே இருக்கக்கூடிய சட்ட மன்ற உறுப்பினர்களையோ அல்லது
வேறுசில நபர்களையோ அவர்கள் தாஜாபடுத்தி போகலாம் என்ற
எண்ணம் இருக்கலாம். ஆகவே கூடுதலாகத் தவறுகள் செய்யலாம்.
அப்படிப்பட்ட தவறுகள் இன்றைக்கு நடப்பதை தடுக்க வேண்டு
மென்று சொன்னாலும் நீங்கள் தேர்தல் நடத்த வேண்டும். அதன்
மூலம் தலையீடுகள் குறைக்கப்படும். அது இல்லாத காரணத்
தாலே பல இடங்களிலே நிச்சயமாகத் தவறுகள் குறைவதற்குச்
சாத்தியபாடுகள் உண்டு, இருக்கிறது என்பதை நான் சொல்ல
விரும்புகிறேன்.



அதே போல்தான் இன்னொன்றையும் நான் உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்குச் செய்ய வேண்டியது ஒரு முக்கியமானது. போதுமான நிதி வசதிகள் இல்லாத ஒரு பெரிய குறைபாடுகள் இருக்கின்றன. பல ஊராட்சிகளிலே பேரூராட்சிகளிலே நிதி இல்லாமல் மிக நெருக்கடியான நிலைமையில் இருக்கிறது. அது ஏனோ தெரியவில்லை. இந்த உண்மையை நாம் உலகறியச் சொல்லித் தீரவேண்டும். அவைகள் தங்களுடைய சிப்பந்திகளுக்கு சம்பளம் போடுவதோடு சரி. ஒரு காரியத்தைக் கூட செய்ய முடியாது. ஒரு ரோட்டைப் போட முடியாது. அதைப் பழுது பார்க்க முடியாது. அப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு இருக்கிறபோது, அதற்கு நிதி ஆதாரத்தை நாம் உடனடியாக கொடுக்கவேண்டும்.

நான் கடைசியாக அரசை வற்புறுத்த விரும்புவது, நகர சுத்தி தொழிலாளர் பற்றி திரும்ப சொல்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டினுடைய சுகாதாரத்தில் பாதுகாப்பிலே மிக முக்கியமானது. மதுரையிலோ, திண்டுக்கல்லிலோ கோயம்புத்தூரிலோ, சென்னையிலோ பல நகராட்சிகளிலிருந்து உங்களுக்கு மனு வந்திருக்கிறது என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். நகர சுத்தி தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு ஒரு 50 பேர், 30 பேர் தான் நகராட்சிகளில் கூடுதலாக்க வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். நகரம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. நகரத்திலே பலவிதமான பகுதிகள் வளர்ந்திருக்கிறது. எல்லைக்கு அப்பாற் கூட வேண்டிய நிலையிலே நகரம் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது. அந்த எக்ஸ்டென்ஷன் ஏரியாக்களில் எல்லாம் முழுவதும் தண்ணீர் இல்லை, ரோடு இல்லை, லே அவுட் கூட போடப்படவில்லை என்று கமிஷனர் சொல்லி விடுகிறார். அந்த சாக்கடைத் தண்ணீர் அங்கே தேங்கிக் கிடக்கிறது. தமிழ்நாட்டில் எது உற்பத்தி ஆகிறதோ இல்லையோ, இந்திராகாந்தி அவர்கள் உற்பத்தி ஆண்டு என்று சொன்னார்கள்-தமிழ்நாட்டிலே கொசு உற்பத்தி அதிகமாக பெருகி இருக்கிறது. அதைத் காணிக்கையாக இந்திரா காந்திக்கு சமர்ப்பிக்கலாம். (குறுக்கீடு) இருங்க சார், அவதி படுவீங்க—இந்த கஷ்டத்தை இந்திரா கஷ்டப்பட்டுத்தான் தீரணும்.

அது மட்டுமல்ல. இப்போது சென்னை மாநகராட்சியின் நிலைமையை நாம் பார்க்கிறோம். கவர்னர் உரையிலும் சரி, நிதிநிலை அறிக்கையிலும் சரி, கிராமப்புறங்களில் கழிப்பிடம் கட்ட 20 கோடி ரூபாய்க்கு மேல் நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். மகிழ்ச்சி ; கட்டுங்கள் ; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் சென்னையில் ஏற்கனவே இருக்கிற கழிப்பிடங்கள் கதி என்ன ? எப்படி இருக்கின்றன தெரியுமா? சைனா பஜாரில் போனால் மல்லிப்பூ வாடை, சென்னை நகரில் எங்கே போனாலும் மல வாடை, இன்றைக்கு சென்னை மாநகரின் நிலைமை இது தான். ஆகவே, முதலிலே கட்டப்பட்ட கழிப்பிடங்கள் பராமரிப்பு, மெயின்டனன்ஸ் ஓர்க், ஒழுங்காக இருக்க வேண்டும். அதற்கு இந்த இலாகாவில் என்ன ஏற்பாடு செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. நான் இலாகாவினரை குறை சொல்லவில்லை. இன்றைக்கு மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப மாநகராட்சியில் தொழிலாளர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நானும் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நேரத்தில் கூட அவரிடம் சுட்டிக்காட்டினேன்.

உள்ளாட்சி நிறுவனங்களின் தேர்தலைத் தள்ளிப் போடுவதினால், மக்களுக்கு ஏற்படும் கஷ்டம், அவதி, சுகாதார கேடு ஏராளம். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் சொன்னார். கொசு பெருகி விட்டது, கொசுத் தொல்லை அதிகரித்துவிட்டது, தாங்க முடியவில்லை என்று சொன்னார். அது மட்டுமல்ல. எங்கு பார்த்தாலும் குப்பைக் கூளங்கள் பெருகிவிட்டன. சாக்கடை ஸ்டிரைக் செய்கிறது. ''நான் உள்ளே ஓடமாட்டேன், வெளியே தான் ஓடுவேன்'' என்று ஸ்டிரைக் செய்கிறது.

ஆனால் சில நேரங்களில் மட்டும் பராமரிப்பு முறையாக இருக்கிறது. என்ன காரணம் ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ''மெட்டர்னிட்டி அன்ட் சைல்டு வெல்பேர் சென்டர்'' ஒன்றுக்கு கால்கோள் விழாவிற்காக வந்தார்கள். அந்த நிகழ்ச்சி நடைபெற்றபோது நானும் அதிலே கலந்து கொண்டேன். அந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னால் அங்கே ரோடு வசதி இல்லை ; சாக்கடை சரியாக இல்லை ; ஆங்காங்கே குப்பைக் கூளங்கள் காட்சியளித்தன. உள்ளாட்சித் துறை அமைச்சர் அந்த நிகழ்ச்சிக்கு வரப்போகிறார் என்று சொன்னவுடனே அந்த மேடைக்கு முன்னால் வரை ரோடு ''பேச் ஓர்க்'' செய்யப்படுகிறது ; லைட் எரிகிறது ; சாக்கடை சரியாக ஓடுகிறது ; குப்பைக் கூளங்கள் இல்லை. ஆனால் மேடைக்குப் பின்னாலே ரோடு சரியாக இல்லை ; ரோட்டின்மேலே சாக்கடை பெருக்கெடுத்து ஓடுகிறது, லைட் கிடையாது. அதே நேரத்தில் மேடைக்கு முன்னாலே ரொம்ப சீராக, அழகாகத் தெரிகிறது. ஆக, அமைச்சர்கள் வந்தால்தான் அந்த இடம் சீராகும் நிலைமை இருக்கிறது ; வரவில்லை என்றால் ஆங்காங்கே குண்டும், குழியும், சாக்கடை நாற்றமும்தான்.





என்னுடைய தொகுதியில் தண்டையார்பேட்டை, வண்ணாரப்பேட்டை போன்ற பகுதிகளில் பல இடங்களில் குப்பை எடுப்பதில்லை. கேட்டால் வண்டியில்லை என்கிறார்கள் ; வண்டி இருந்தால் மாடு இல்லை என்கிறார்கள் ; வண்டியும் மாடும் இருந்தால் ஆள் இல்லை என்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைதான் இன்றைக்கு சென்னையில் இருந்து கொண்டு இருக்கிறது.

அடுத்து ஒரு வினோதம் என்னவென்றால், மெட்ராஸ் கார்ப்பரேஷன் மேயரைப் பார்த்திருக்கிறது ; இன்றைக்கு தமிழ்நாட்டில் மூன்று மாநகராட்சிகள் இருக்கின்றன ; மூன்றிலும் மேயரையே பார்க்காத மாநகராட்சி ஒன்று இருக்கிறது. அது தான் கோவை மாநகராட்சி. மாநகராட்சி என்றால் மேயர் இருக்க வேண்டும். ஆனால் ''நாங்கள் மேயரைக் காட்ட மாட்டோம் ; ரகசியமாக வைத்துக் கொள்வோம் ; அதனால் தேர்தலை நடத்த மாட்டோம்'' என்று இந்த சர்க்கார் ஒரு முடிவு செய்திருக்கிறது.

இன்றைக்கு கோவை மக்கள், ''நாங்கள் மாநகராட்சியில் தானே இருக்கிறோம் ; எங்களுக்கு ஒரு மேயரைக் காட்டக் கூடாதா ; சீக்கிரம் மேயரைக் காட்டுங்கள்'' என்று கேட்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். அவரும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான். அவரை மேயர் வரவேற்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டும். அதை செய்வார் என்று நினைக்கிறேன்.

இன்னொன்று. இன்றைக்கு சுகாதார வசதி, விளக்கு வசதி, ரோடு வசதி, சாக்கடை வசதி எப்படி இருக்கிறது என்றால், அதைப்பற்றி சொல்லி முடியவில்லை. என்னுடைய தொகுதியில் மக்கள் என்னைக் கேட்கிறார்கள். என்னுடைய டெலிபோன் செலவில் மூன்றில் இரண்டு பகுதி என்னுடைய தொகுதி மக்களுக்காக போன் செய்வதாகத்தான் இருக்கும். அதிலும் குறிப்பாக இந்த கார்ப்பரேஷன் வாட்டர் போர்டு பற்றியதாகத் தான் இருக்கும்.

(பிற்பகல் 12–20)

நானே அது சம்பந்தமாக அடிக்கடி பலரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசுவதன் காரணமாக, பல ஆயிரக் கணக்கில் எனக்கு செலவாகிறது. என்னுடைய தொகுதியில் நடைபெற்ற பல கூட்டங்களில் மக்களிடத்தில் சொன்னேன் உங்களுக்கு சுகாதார வசதி வேண்டுமா, நல்ல மின்சார விளக்குகள் வேண்டுமா, சரியான ரோடு வசதி வேண்டுமா அதற்கு முதலில் நான் சாகவேண்டும். சட்டமன்ற உறுப்பினராகிய நான் சாகவேண்டும். செத்தால் தான் பை-எலக்ஷன் வரும். பை-எலக்ஷன் வந்தால் தான் ஓட்டுக் கேட்க வருவார்கள். வரும்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இறந்தால்தான் இடைத்தேர்தல் வரும் என்பது அல்ல. அந்தத் தொகுதியினுடைய உறுப்பினர் ராஜினாமா செய்தாலும்கூட வரும்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த மட்டில் ராஜினாமா செய்கிற உறுப்பினர் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி செய்திருந்தாலும்கூட, ஏதாவது ஆதாயம் இருந்தால்தான் பண்ணியிருப்பார்கள். அது வேறு விவகாரம் . . . . .

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொது மக்களுடைய நன்மையைக் கருதி, நீங்களே ஒரு முன் உதாரணமாக விளங்கலாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தொகுதியினைப் பொறுத்தவரையில் திருப்திகரமாகப் பணியாற்றுகிறேன். தொகுதியை விட்டுவிட்டு வேறு எங்கேயாவது சுற்றுகின்றவர்களுக்கு வேண்டுமானால் அது பொருத்தமாக இருக்கலாம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பொறுத்தவரையில் அவரவர்கள் அன்றாடம் தொகுதி மக்களைச் சந்திக்கின்ற பணியினைத் தான் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டமன்றப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அண்மையில் வெளிவந்த பத்திரிகையில் ஒரு பக்தன் ஆண்டவனிடம் வரம் கேட்கிறான், அதற்கு என்னவரம் என்று ஆண்டவன் கேட்கிறான். நூறாண்டு வாழ்க என்ற விஷயத்திற்காகச் சொல்கிறேன் . . (குறுக்கீடு) . . அமைச்சர் அவர்கள் அனுமதித்தால் சொல்கிறேன். அண்மையில் ஒரு பத்திரிகையில் ஒரு கார்ட்டூன் வந்திருக்கின்றது . . . . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன் :) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. எஸ். இராசு அவர்கள் அமரவேண்டும். உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் கார்ப்பரேஷனுடைய ஸ்பெஷல் ஆஃபீஸருடைய பதவிக்காலம் எப்போது முடிகின்றது என்றால் 11–6–1983 அன்று. சென்னையைப் பொறுத்தவரையில் ஸ்பெஷல் ஆஃபீஸரின் பதவிக் காலம் 30–5–1983 அன்று முடிகின்றது. சட்டமன்றம் கூடுகின்ற இந்தக் காலக்கட்டத்திலே அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசுவது என்று மாண்புமிகு முதலமைச்சர்கூட



அறிவித்தார்கள். நீங்கள் மனது வைத்தால் இந்த காலக்கட்டத் திற்குள்ளேகூட தேர்தலை அனவுன்ஸ் பண்ணலாம். மாநகராட்சித் தேர்தலைப் பொறுத்தவரையிலே இந்த ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசனைச் சுட்டிக்காட்டிச் சொன்னபோதுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்பது மாதிரி தலையாட்டினார்கள்.

As far as Corporation is concerned, Scheduled Castes, Scheduled Tribes and Women Reservation.

அந்த ரிசர்வேஷன் இல்லை என்பது மாதிரி தலையாட்டினார்கள். அதுபற்றி எக்ஸாமின் பண்ணப்போவதில்லை என்ற மாதிரி தலையாட்டினார்கள். மேலும் 1–1–1983 வரையிலான வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படும் என்று ஜாடை காட்டியதிலிருந்து நம்பிக்கை வருகின்றது. எனவே இன்னும் இரண்டு மூன்று திங்கள் பதவியில் இருக்கலாம் என்ற எண்ணம் ஸ்பெஷல் ஆஃபீஸருக்கு இருக்கின்றது. ஆனால் ஒரு திங்களுக்குள்ளாகவே இந்த சட்டமன்றம் நடைபெறுகிற காலக்கட்டத்திலேயே அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப்பேசி தேர்தலை நடத்தியாக வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் கூடச் சொன்னார், 'எதிர் கட்சியினைச் சேர்ந்த நீங்களும், திரு. ஹாஜா செரீஃப் அவர்களும் தேதியைச் சொல்லுங்கள், தேர்தலை நடத்தலாம்' என்று சொன்னார்கள். ஆகவே நான் கேட்டுக் கொள்வது இதற்குள்ளாகத் தேர்தலை நடத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். எனவே தேவையில்லாமல் இதுபோன்று ஸ்பெஷல் ஆஃபீஸர்களுக்கு எக்ஸ்டென்ஷன் கொடுத்துக்கொண்டே போய் மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க முடியாத நிலையினை உருவாக்காதீர்கள் என்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. வெ. இராஜசேகரன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டினுடைய ஊராட்சிகள், நகராட்சி மன்றங்கள், மாநகராட்சிகள் ஆகியவற்றின் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதைப் பொறுத்த வரையில் சில தினங்களுக்கு முன்பு சட்ட முன் வடிவுகள் கொண்டுவரப்பட்டு அதற்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய எதிர்ப்பையும் கருத்துக்களையும், அன்றைக்கே எடுத்துச் செல்லியிருக்கிறேன். அது தொடர்பாக இன்றைக்கு கொண்டுவரக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றியும் சில விளக்கங்கள் மூலம் சில விவரங்களின் மூலம் அமைச்சரும், அரசும் நாட்டுமக்களுக்கு தெரிவிக்கவேண்டியது கடமை என்ற காரணத்தால் சில விளக்கங்களைப் பெற முயலுகிறேன். எதிர்க்கட்சி என்பதற்காக இந்தச் சட்ட முன்வடிவை எதிர்ப்பதாகவோ அல்லது ஆட்சேபணை சொல்வதாகவோ நீங்கள் கருதினால் அது உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்வதாகத்தான் அர்த்தமாகும். சில காரணங்களுக்காக

போது சும்மா வரமாட்டார்கள். போரிங் பம்ப் வேண்டுமா, ரிக்ஸ் போடவேண்டுமா, புதியதாக ரோடுகள் போட வேண்டுமா, லைட்டுகள் வேண்டுமா என்று கேட்டு கேட்டு போடுவார்கள். குழாய் இந்த இடத்தில் போடப்பட்டிருக்கிறது ஐயா என்றுசொன்னாலும் கூட, மேல் இடத்தில் பக்கத்திலேயே குழாய் போடச் சொன்னார்கள் என்று பக்கத்திலேயே இன்னொரு குழாயையும் போட்டுவிட்டுப் போவார்கள்.

ஆக ஒரு உறுப்பினர் செத்தால்தான் அந்த தொகுதி மக்களுக்கு ,குடிநீர் வசதியும், சுகாதார வசதியும் கிடைக்கமுடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது. அப்படி ஒரு அவல நிலைமை இருக்கிறது. அதற்கு என்ன காரணம்? மக்கள் பிரதிநிதிகள்——மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை என்பதுதான், நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பேசும்போதே சொன்னேன். எங்களுக்கு சட்டமன்ற உறுப்பினருக்குரிய மரியாதையே இல்லை. எங்களை பஞ்சாயத்து உறுப்பினராகவும், மாநகராட்சி உறுப்பினராகவும் நடத்துகிறார்கள். சாக்கடை அடைத்துக் கொண்டு விட்டதா, எம். எல். ஏ. விடம் போய் கேள். குழாயில் தண்ணீர் வரவில்லையா எம். எல். ஏவிடம் போய் கேள். விளக்கு எரியவில்லையா எம். எல். ஏவிடம் ஓடிப்போய் கேள். இதற்கெல்லாம் எம். எல். ஏ. என்ன செய்ய முடியும் என்றால், அதற்குத்தானே நாங்கள் ஓட்டுப்போட்டோம் என்கிறார்கள். இங்கே சட்டமன்றத்தில் வந்து சட்டபிரச்னைகளை, மக்களுடைய வளர்ச்சித் திட்டங்களில், சட்டப்பிரச்னைகளில் பங்கு பெற்று பணியாற்றவேண்டிய எங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால் எங்களை ஒரு கவுன்சிலரைப்போல நினைத்து ஒவ்வொரு உள்ளூர் பிரச்னைகளுக்கும் எங்களிடம் ஓடி வருகிறார்கள். ஆகவே, சீக்கிரம் தேர்தலை நடத்துங்கள். இல்லை என்றால் எங்களை சட்டமன்ற உறுப்பினராக நடத்தவேண்டும் என்பது அவர்களுக்கு மறந்தே போய்விடும். கவுன்சிலராகத்தான் நடத்துவார்கள். இப்படி கேவலமாக நினைக்க வைக்க ஒரு ஆட்சி இருக்க வேண்டுமா? அதற்கு ஒரு சட்டமன்றம் வேறு இருக்கவேண்டுமா என்கிற கேள்வியை நான் இரண்டாண்டுகளுக்கு முன்பே இங்கே எழுப்பியிருக்கிறேன் . . . . .

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் தான் இறந்தால்தான் தன்னுடைய தொகுதி கவனிக்கப்படும் என்பது போன்ற கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள். உண்மையிலேயே அவர் இறக்கக்கூடாது. பல ஆண்டு காலம் வாழ வேண்டும். பன்னெடுங்காலம் அவருடைய சேவை இந்த நாட்டுக்குத் தேவை. அப்படிப்பட்ட கருத்தினை அவர் சொல்வது கூட இந்த மாமன்றத்திற்கு ஏதுவாக இருக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



அதே நேரத்தில் ஒரு தொகுதியிலே காரியங்கள் நடைபெறுகின்றன என்று சொன்னால், அங்கே இடைத் தேர்தல் வந்தால்தான் நடைபெறும் என்பது போன்ற தவறான கருத்தை இந்த மாமன்றத்திற்கு சொல்வது சரியாக இருக்க முடியாது. இன்று ஏறத்தாழ 378 ஊராட்சி ஒன்றியங்களுக்கு தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அப்படி செயல்படுத்தப்பட்டபோது அதில் எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் இருக்கக்கூடிய பகுதிகளுக்கும் அந்தத் திட்டம் போய்ச் சேர்ந்தது. அந்த திட்டத்தின் நடைமுறைகள் கட்சி வேறுபாடின்றி, எந்தவித மாச்சரியங்களும் இன்றி நடைபெற்றன. அந்தப் பகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் இருக்கின்றனர், இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் இருக்கின்றனர், கம்யூஸ்னிட் கட்சி உறுப்பினர்களும் இருக்கின்றனர், கா. கா. தே. கா. கட்சியினரும் இருக்கின்றனர். அப்படிப்பட்ட நேரத்திலே கூட இந்தப் பணிகள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆகவே, தயவுசெய்து அவர் இறக்க வேண்டும் என்று சொன்ன அந்த வார்த்தையை மட்டும் அவைக்குறிப்பிலேயிருந்து எடுத்துவிட்டால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஏனென்றால், அவர் பல 100 ஆண்டுக்காலம் நன்றாக வாழ வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். அவர் எந்த இறைவனை வேண்டுகிறாரோ, அதே இறைவனையே வேண்டி அவர் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அந்த வார்த்தையை எடுத்துவிட வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் தொகுதியில் தாம் பல இடங்களில் அவ்வாறு பேசி வருவதாக கூறுகிறார், தொகுதி வேறு, இந்த மன்றத்தில் பேசுவது வேறு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. ஆர். டி. கோபாலன்): நடவடிக்கைக் குறிப்பைப் படித்து பார்த்துவிட்டு பின்னர் வேண்டுமானால் நீக்குவதற்கு உத்தரவிடலாம் என்று கருதுகிறேன். (குறுக்கீடுகள்)

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேறு யாரையாவது சொன்னால், அவர்கள் சண்டைக்கு வரக்கூடும் என்பதற்காகத்தான் அவர் தன்னையே சொல்லிக் கொண்டிருக்கிறார். பை-எலக்ஷன் வந்தால்தான் வளர்ச்சிப்பணி காரியங்கள் நடக்கும் என்பதுதான் அவர் சொன்ன கருத்து.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நான்என்னைத்தானே சொல்லிக்கொண்டேன் வேறு யாரையும் சொல்லவில்லையே, அது மட்டுமல்லாமல் இதை நான் தொகுதி பூராவும் சொல்லிக் கொண்டு வருகிறேன். பை-எலக்ஷன் வந்தால்தான் இந்தப் பணிகள் நடைபெற முடியும். பை-எலக்ஷன் வருவதற்கு சட்டமன்ற உறுப்பினர் சாக வேண்டும். அது நானாகவும் இருக்கலாம், வேறு யாராக இருக்கலாம் என்றாலும், என்னையே சொல்லிக்கொள்வதில் தவறு இல்லை என்பதால் அப்படிக் குறிப்பிட்டேன். . . . . .

பொதுமக்களின் நன்மை கருதி தேர்தல் நடத்துவதை
ஒத்தி வைத்திருந்தால் அதன் காரணமாக காலக்கெடுவை
நீட்டிக் கேட்கின்றபோது ஆட்சேபணையும் எதிர்ப்பும் செய்
வோமேயானால் அது முறையாக இருக்கமுடியாது என்று
நாட்டுமக்கள் கருதுவார்கள்.

(பிற்பகல்—12–30)

ஆனால் 1979 ஆம் ஆண்டில் இருந்தே சென்னை மாநகராட்சியின்
தேர்தலையும், 1971 ஆம் ஆண்டிலிருந்தே ஊராட்சி ஒன்றிய,
பஞ்சாயத்து தேர்தல்களையும் நடத்தப்படாமல் இருக்கின்ற
காரணத்தைப் பார்க்கின்ற போது உங்களுக்கு தேர்தல்களை
நடத்துகின்ற ஒரு முடிவு இல்லாத அந்த அடிப்படையில்
இருக்கிறது. நிச்சயமாக 5 ஆண்டு கால ஆட்சியில் ஊராட்சி
மன்றத் தேர்தலையும் மாநகராட்சி தேர்தலையும் நடத்த
மாட்டோம் என்ற உள்நோக்கத்தோடு ஒரு நிரந்தரமான முடி
வோடு நீங்கள் இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொரு ஆண்டும்
ஒவ்வொரு விதமான காரணத்தை நீங்கள் சொல்லிக்கொண்
டிருக்கிறீர்கள். முதலிலே சொன்ன காரணம் 100 வட்டமாக
இருந்த சென்னை மாநகராட்சி 150 வட்டமாக மாற்றப்
பட்டிருக்கிறது, ஆகையால் புதிதாக சேர்த்த 50 வட்டங்க
ளுக்கு அதனுடைய வாக்காளர் பட்டியல் எடுக்க வேண்டும்
என்று சொல்லி தள்ளி வைத்தீர்கள். அடுத்து இடையில்
கேட்கின்றபோது சென்னை மாநகராட்சியினுடைய மஸ்டர்
ரோல் வழக்கு இருக்கிறது. அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட
வர்கள் இருக்கிறார்கள். அந்த வழக்கு முடிந்ததும் தேர்தலை
நடத்தலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
இந்த சட்டமன்றத்தில் கூறியிருக்கிறார்கள், ஒரு காலக்
கெடுவை நீட்டிக்கும் போது சொன்னார்கள் 21 வயது வந்த
வர்களுக்கு ஓட்டு போடும் உரிமை பொதுத்தேர்தலில் இருக்
கிறது. இளைஞர்கள் அதிகமாக நாட்டின் மேல் பற்றுக்
கொண்டு இருக்கிற காரணத்தால் அவர்களுக்கும் வாக்களிக்க
வாய்ப்பு கொடுக்க இந்த அரசு முன் வருகிறது. அந்த அடிப்
படையில் 18 வயதான இளைஞர்கள், மாநகராட்சி, நகராட்சி,
உள்ளாட்சி தேர்தலில் வாக்களிக்க சந்தர்ப்பம் கொடுக்க
வேண்டும் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி மீண்டும்
ஒரு முறை தள்ளி வைத்தீர்கள்.

அதற்கு பின்னால் கடந்த ஆண்டு நீங்கள் சொன்ன
காரணம் மக்கள் தொகை கணக்கெடுப்பு மத்திய அரசு
கணக்கு எடுத்துக் கொண்டு இருக்கிறது. அந்த புள்ளி
விவரங்களை அடிப்படையாக வைத்து ஒரு வாக்காளர்
ஜாபிதா கிடைத்தால் நிச்சயமாக அது ஒழுங்காக இருக்கும்
என்ற காரணத்திற்காக அந்த சென்ஸஸை வைத்து ஒரு
முறை தள்ளி வைத்தீர்கள். அடுத்து பின்னால் இப்போது





சொல்லுகின்ற காரணம் பெண்களுக்கும், ஆதி திராவிடர்களு
க்கும் இட ஒதுக்கீட்டில் உயர்நீதி மன்றத்தில் வழக்கு உச்ச
நீதி மன்றத்திற்கு சென்று இருக்கிறது. ஆகையால் தான்
அந்த தேர்தல் நடத்தப்படமுடியவில்லை என்றும் இப்போது
நீங்கள் கூறுகிறீர்கள். உள்ளாட்சி, நகராட்சி தேர்தல்களுக்கு
வேண்டுமானால் அந்த வெங்கடாசலம்பிள்ளை அவர்கள்
உச்ச நீதிமன்றத்திற்கு சென்று இருக்கலாம். மாநகராட்சியை
பொறுத்த அளவில் எந்த வழக்கும் எந்த தரப்பிலும் எந்த
நீதிமன்றத்திலும் இல்லை. அமைச்சர் அவர்கள் மாண்புமிகு
உறுப்பினர் சித்தன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள்.
அந்த வெங்கடாசலம்பிள்ளை ஒரு கட்சியைச் சேர்ந்தவர்
என்றும் கட்சியின் மேலிடம் அவரிடம் சொல்லி வழக்கை
வாபஸ் பெறச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் தேர்தலை
விரைவாக நடத்தலாம் என்று சொன்னார்கள். வெங்கடா
சலம் பிள்ளை அவர்கள் உச்ச நீதி மன்றத்திற்கு சென்று
இருக்கிறார் என்று நீங்கள் கூறுகிறீர்கள். சர்வ கட்சித்
தலைவர்கள் கூட்டத்தைக்கூட்டி அவரை அந்த வழக்கை
வாபஸ் பெறச் செய்யுங்கள் என்று சொன்னதாக கூறுகிறீர்
கள். ஆனால் நீங்கள் சொல்லுகின்ற அந்த வெங்கடாசலம்
பிள்ளை உச்ச நீதி மன்றத்திலிருந்து வழக்கை நிச்சயமாக வாபஸ்
பெறவே மாட்டார் என்று சொல்லுகிறீர்கள். எனக்கு ஏற்படுகிற
சந்தேகம் எல்லாம் அந்த வெங்கடாசலம்பிள்ளை வழக்கை
உச்ச நீதி மன்றத்திலிருந்து வாபஸ் வாங்க மாட்டேன்
என்று அவர் கூறுவதற்கு பதிலாக அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவை
யின் மாற்று தலைவர் அவர்களே, வெங்கடாசலம்பிள்ளை அவர்
கள் வழக்கை வாபஸ் பெற மாட்டார் என்று நான் சொல்ல
வில்லை. இந்த மாமன்றத்தில் அந்த குறிப்புகள் இல்லை என்று
நான் நினைக்கிறேன். ஏன் என்றால் வெங்கடாசலம்பிள்ளை
அவர்கள் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர் இருக்கின்ற
கட்சி இந்திரா காங்கிரஸ் கட்சி. அந்த இந்திரா காங்கிரஸ்
கட்சி உறுப்பினர் இந்த மேல் முறையீட்டை உச்ச நீதி மன்றத்தில்
செய்திருக்கிறார். ஆகவே, கட்சியில் இருக்கின்றவர்கள்,
தலைவர்களாக இருக்கின்றவர்கள் உடனடியாக அப்படிப்பட்ட
உறுப்பினரைப் பார்த்து இந்த வழக்கை நீ வாபஸ் வாங்கு
என்று சொல்லி வாபஸ் பெறச் செய்தால் உடனடியாக
பஞ்சாயத்து தேர்தலை நடத்தமுடியும் என்ற கருத்தைத்தான்
நான் சொன்னேன். தவிர அவர் வாபஸ் பெற மாட்டார்
என்று நான் சொல்லவில்லை. இப்போதும் வாபஸ் பெறு
வதற்கு அவர் தயாராக இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்
இராஜசேகரன் அவர்கள் அந்த கருத்தை இங்கே வெளி
யிட்டால் நலமாக இருக்கும்,

திரு. வெ. இராஜசேகரன் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன கருத்து பல முறை அவரை நீங்கள் கேட்டுக் கொண்டாகிவிட்டது. அவர் அந்த வழக்கை வாபஸ் பெறுவதாக தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இங்கே இருக்கின்ற இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் யாரும் அந்த கூட்டத்திற்கு வரவில்லை, ஆனால் மேல் சபை உறுப்பினராக இந்திரா காங்கிரஸ் தலைவராக இருக்கக்கூடிய திண்டிவனம் ராமமூர்த்தி அவர்கள் அந்த கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அவர்களிடத்தில் நாங்கள் உடனடியாக இந்த வழக்கை வாபஸ் பெறுவதற்கான முயற்சியில் நீங்கள் ஈடுபடவேண்டும் என்று சொன்னோம். ஒரு கட்சியைச் சேர்ந்தவர் உச்ச நீதி மன்றத்திற்கு சென்று இருக்கிறார். ஆகவே அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒரு தலைவர் அவரைக் கேட்பது நலமாக இருக்கும் என்ற கருத்தைத்தான் நாங்கள் அங்கே வெளியிட்டோம்.

திரு. வெ. இராஜசேகரன் : மாற்றுத் தலைவர் அவர்களே. சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையிலே வழக்கு மன்றத்திலே கிடையாது. ஆகவே அவர்கள் வெங்கடாசலம் பிள்ளையைக் காரணம் காட்டுவதற்கு அதிலே நியாயம் கிடையாது. ஆனால் ஏன் தேர்தல் நடத்தவில்லை என்று கேட்கிறபோது அமைச்சர் பதிலிலே உடனே அலகாபாத்தைப் பாருங்கள், அகமதாபாத்தைப் பாருங்கள், ஹைதராபாத்தைப் பாருங்கள் என்று சொல்கிறார், உதாரணங்களைக் கூறுகிறார். அலகாபாத், அகமதாபாத், ஹைதராபாத் ஆகிய இடங்களிலே தேர்தல் நடக்கவில்லை என்றால் அந்த மாநகராட்சிகளின் மக்கள் மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களைப் பார்த்து ஏன் தேர்தல் நடத்தவில்லை என்று கேட்கமாட்டார்கள். அந்த மாநிலத்தினுடைய உள்ளாட்சித் துறை அமைச்சரைப் பார்த்துத்தான் ஏன் தேர்தலை நடத்தவில்லை என்று கேட்பார்கள்.

அவர்கள் இன்னொன்றையும் கேட்கிறார்கள். ஹைதராபாத்திலே தேர்தல் நடத்தாமல் இருந்தாலும் ஆந்திர மாநிலத்திலே உள்ள அத்தனை பஞ்சாயத்துக்களுக்கும் நகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டு அங்கே தேர்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்தான் ஒன்றியங்களுடைய தலைவர்களாக இன்றைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணம் சொல்கிறபோது தமிழ்ப் பண்பாடு, தமிழ் முறை, தமிழ்ப் பற்றுக் கொண்ட நல்ல உதாரணங்களாகச் சொல்ல வேண்டுமென்று





கேட்டுக் கொள்கிறேன். ஒன்றைக் கேட்டால், நடக்காத மாநிலத்தை நீங்கள் சுட்டிக்காட்டுவது எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்று கேட்கிறேன்.

திருமண நிகழ்ச்சிகளிலே புராணம் படித்தவர்கள் வாழ்த்துகிறபோது கூட ராமனும் சீதையும் போல் வாழுங்கள் என்று வாழ்த்துவது கிடையாது. காரணம் ராமனும் சீதையும் 14 ஆண்டுக்காலம் வாழ்க்கையிலே பிரிந்திருந்தவர்கள். அதைப்போலவே காப்பியத்திலே ஈடுபட்டுள்ள நீங்கள் சிலப்பதிகாரத் தலைவனும் தலைவியும், கண்ணகியும் கோவலனும் போல் வாழுங்கள் என்று வாழ்த்துவது இல்லை, காரணம் அந்தக் காப்பியத்திலே கணவனும் மனைவியுமாக அவர்கள் வாழ்ந்த காலம் குறைவு. ஆனால் நீங்கள் ஏன் செய்யவில்லை என்றால் அமைச்சர் அலகாபாத்தைச் சொல்கிறார். சொல்கிற உதாரணங்கள் காட்டுகிற மேற்கோள்கள் பழமொழிகள் நல்லவைகளாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். அமைச்சர் வேண்டுமானால் திருமண நிகழ்ச்சியைச் செய்கின்ற போது இவைகளை எல்லாம் விடுத்து ரிச்சர்ட் பர்ட்டனையும் எலிசபெத் டெய்லரையும் போல் நீங்கள் வாழவேண்டுமென்று வாழ்த்துவாரோ என்னவோ எனக்குத் தெரியாது. காரணம் அவர்களுடைய உதாரணங்கள் முரண்பாடாக இருக்கின்றன.

திரு. ஜி. மூர்த்தி : இப்போது எல்லாம் திருமணங்களிலே வாழ்த்துகிறவர்கள் காங்கிரஸையும் காங்கிரஸ் கட்சித் தலைவரையும் போல் என்று வாழ்த்துவது கிடையாது.

திரு. வெ. இராஜசேகரன் : அவர்களுடைய உதாரணங்கள் முரண்பாடானவை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் சொன்னேன். சென்னையிலே ஏன் கற்பழிக்கிறார்கள் என்று கேட்டால் உடனே அமைச்சர் அவர்கள் பதிலிலே டெல்லியிலே கற்பழிக்கவில்லையா என்று கேட்பார்.....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன்) : தாங்கள் பில்லைப்பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. வெ. இராஜசேகரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்கள் சற்று முன்னே சொன்னீர்கள், நகைச்சுவையாக சொன்னார் என்று. அதைப்போல் நகைச்சுவைக்காக என்று நீங்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர்கள் சொல்கிற கருத்துக்கள் முரண்பட்ட கருத்துக்களாக இருக்கின்றன என்பதற்காக நான் சொன்னேன். உங்களுடைய கொள்கைகளிலே மாறுபட்ட கருத்துக்கள் எங்களுக்கு உண்டு. உங்களுடைய கருத்துக்களுக்கு வேறுபாடான எண்ணங்கள் எங்களுக்கு உண்டு, ஆனால் தேர்தலில் அதிகப்

படியான இடங்களை நீங்கள் பெற்றிருக்கிற காரணத்தினால் ஆட்சி பீடத்தில் இருக்கிறீர்கள். நாங்கள் தேர்தலிலே தோற்று விட்டதால் எதிர்க்கட்சியில் இருக்கிறோம். எங்களுக்கும் உங் களுக்கும் வேறுபாடு இருக்கிற காரணத்தினால் உங்களுக்கு வரி கொடுக்கமாட்டோம் என்று நாங்கள் சொல்வதில்லை. அதைப்போல் எங்களுடைய கொள்கைக்கு எதிர்ப் புடையவர்கள் நீங்கள். ஆகவே உங்களுடைய வரி யைப் பெற்று நாங்கள் ஆட்சி நடத்தமாட்டோம் என்று நீங்கள் சொல்வதும் இல்லை. தமிழ்நாட்டினுடைய, சென்னை மாநகராட்சியினுடைய குடிமகன் என்ற முறையிலேயும் சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலேயும் வரிகொடுப்பவன் என்ற முறையிலேயும் அமைச்சரைப் பார்த்துக்கேட்கிறேன்.

(பிற்பகல் 12-40.)

நீங்கள் வாங்குகிற சம்பளம், இல்லையென்றால்கூட, நீங்கள் வாங்குகின்ற ஒரு நாள் படி, அந்தப் படியிலே இருக்கிறது எங் களுடைய வரிப்பணம். ஆகவே நான் கேட்கிறேன். சென்னை நகரத்தில் வரி கொடுப்போன் என்ற முறையில், ஏன் நீங்கள் தேர்தலை தள்ளி வைக்கிறீர்கள் ? பதில் சொல்ல வேண்டியது உங்கள் கடமை. கேட்பது என்னுடைய உரிமை. ஆரம்பத்தில் ரேட் பேயர்ஸ் இன்ஸ்ட்டிடியூஷன் என்று இருந்த அமைப்பு இன்றைக்கு சிவிக் அமெனிட்டிஸ் பாடி என்று பெயர் மாற்றப் பட்டிருக்கிறது. அதற்கு முழுமையான பொருள், மக்களுடைய, வரி கொடுப்போருடைய அடிப்படை உரிமைகள் ; அடிப்படைத் தேவைகள் ; அத்யாவசிய தேவைகள் ; உயிர்நாடியான தேவை கள் ; இவைகளை செய்து கொடுக்க வேண்டிய பொறுப்புதான் முனிசிபல் கார்ப்பரேஷனுக்கு இருக்கிறது. அந்த அடிப்படை யிலே இன்றைக்கு இருக்கிற சென்னை மாநகராட்சி அடிப்படை யான தேவைகளை வரி கொடுப்போருக்கு செய்து கொடுக் கிறதா ? என்றால் நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல முடியும். இதுபற்றி ஆங்கிலப் பத்திரிகைகளிலும், தமிழ் பத்திரிகைகளிலும், சென்னை மாநகராட்சியின் சீர்கேடுகள், சுகாதார அவலநிலை, மின் விளக்குகள் பற்றாக்குறை, இருக்கிற கம்பங்களில் எரியாத விளக்குகள், இவற்றைப் பற்றியெல்லாம் விமர்சனங்கள், ஆசிரியருக்கு கடிதங்கள் என்று நூற்றுக் கணக்காக வருகின்றன. அமைச்சர் அவர்களுடைய பார்வைக் கும் அந்த கடிதங்கள் வந்திருக்கலாம். ஆனால் எதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அடுத்து மாண்புமிகு உறுப் பினர் பொன்னுரங்கம் அவர்கள் கூறியதைப் போல சென்னை மாநகராட்சியின் இருக்கிற கழிப்பறைகள்—இப்போது வேண்டு மானால் தண்ணீர் பற்றாக்குறை இருக்கலாம்—சுத்தம் செய்யப் படாமல் இருக்கின்றன. செப்டிக் டாங்க் அப்ஸ்ட்ரக்ஷன் என்பது சென்னை மாநகராட்சியின் எல்லா கழிப்பறைகளிலும் இருக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சி. அதனுடைய காரணமாக மக்கள் கழிப்



பறைகளின் உள்ளே செல்ல முடியாத நிலை. அவர்கள் சுவற்றுப் பகுதியிலே போகிற காரணத்தால் காலரா நோய் எங்கும் பரவு கிற முறையிலே அந்த கழிப்பறைகள் இருக்கின்றன. இன்றைக்கு கூட காசு கொடுத்து வெளியே போகக் கூடிய அளவிலே சென்னை மாநகராட்சியினுடைய நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக் கின்றன.

சாலைகளைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்களுக் கும், எம்.ஆர்.எப்க்கும், மோடி கான்டினென்டல் கம்பெனிக்கும் தொடர்பு இருக்கிறதோ என்று சந்தேகப்படுகிற அளவிலே ரோடுகள், பள்ளமும், மேடுமாக இருக்கின்றன. சாலைகள் அப்படி இருப்பதால் டயர்கள் அதிகமாக பழுதுபடுவதற்கு காரணமாக இருக்கிறது. அதே நேரத்தில் அண்ணா பெயரால் இருக்கிற சாலையையும், பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பெயரால் இருக்கிற சாலையையும் நீங்கள் அடிக்கடி செப்பனிடு கிறீர்கள். 6 அங்குலம், 9 அங்குலம், 12 அங்குலம் என்று சாலை களை உயர்த்திக் கொண்டே போகிறீர்கள். ஒரு தலைவர் ஏழை யின் சிரிப்பிலே இறைவனை காண்கிறேன் என்று சொல்லியவர். இன்னொருவர் ஏழைகளின் பங்காளன் என்று பெயர் பெற்ற தலைவர். அவர்களுடைய எண்ணங்களை 6 அங்குலம், 9 அங்கு லம் 12 அங்குலம் என்று உயர்த்தி, மேலே ரோடு ரோலர்களைப் போட்டு சமாதி கட்டுகிறீர்கள். உங்களுடைய பார்வையெல் லாம் அண்ணா சாலையில் இருப்பதைப் பற்றி எனக்கு ஆட் சேபணை இல்லை ; பெருந்தலைவர் சாலையில் இருப்பதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. சற்று வட சென்னை பக்கத்தில் உள்ள சாலைகளின் மீது உங்கள் கண் திரும்புமா என்று தான் கேட்க ஆசைப்படுகிறேன். அங்கே இருக்கிற ரோடுகளை பார்த்து இருக்கிறீர்களா ? அங்கு சந்துப் பகுதிகளில் இருக்கிற சாலைகள் எந்த ஆண்டு போடப்பட்டது என்று உங்களுக்குத் தெரியுமா ? என்று தான் கேட்க ஆசைப்படுகிறேன். அந்த அளவிற்கு அந்த சாலைகள் பராமரிக்கப்படாமல், பழுது பார்க்கப்படாமல், நடந்து போகிறவர்கள் தடுக்கி விழக்கூடிய அளவிற்கு அங்கே இருக்கின்றன. விளக்குக் கம்பங்களில் இருக்கிற விளக்குகள், எரிந்து பல நாட்கள் ஆகிவிட்டன. சென்னை மாநகராட்சியின் தென் பகுதி மட்டும் தினந்தோறும் பௌர்ணமியாகவும் ; வட சென்னை பகுதிகள் தினந்தோறும் அமாவாசையாகவும் இருக்கிற நிலை இருக்கிறது. குறிப்பாக எனது பகுதியில் திருவொற்றி யூரில் வியாபாரிகளுக்கு கிராமப் பகுதியிலிருந்து மாநகராட்சிப் பகுதிக்கு வந்து விட்டோம் என்ற நினைவே இல்லை. காரணம் விளக்கு பொருத்துவதற்கு முன்னால் பெட்ரோமாக்ஸ் லைட்டை பொருத்தி வைத்துக் கொண்டு தான் மின் சுவிட்சையே போடு கிறார்கள். கையில் வைத்திருக்கிற விசிறிகளை தான் உப படுத்துகிறார்கள். மின் விசிறிகளைப் பற்றிய நினைவே அவர் களுக்கு கிடையாது. அந்த அளவிற்கு அந்தப் பகுதியிலே இருக்கிற வியாபாரிகள் சிரமப்படுகிறார்கள்.

அன்றாடம் நிர்வாகத்தை பார்ப்பதற்குத் தான் விசேஷ
அதிகாரிகளுக்கு நேரம் இருக்கிறது. வளர்ச்சிப் பணிகளை செய்
வதற்கு வேண்டிய பொருளாதார வசதி கிடையாது. 23 கோடி
ரூபாய் வருமானமுள்ள மாநகராட்சி 22 இலட்சம் ரூபாய்க்கு
செலவு செய்து, வளர்ச்சிப் பணிகளில் நாட்டத்தை செலுத்த
முடியாமல் இருக்கிறது.

என்னுடைய பகுதியில் கொருக்குப்பேட்டைக்கு அருகில்
மேல்நிலைத் தொட்டி கட்ட வேண்டுமென்று மூன்று ஆண்டு
களுக்கு முன்னால், குடிநீர் வடிகால் வாரியமும், மாநகராட்சியும்
ஒன்றாக இருந்தபோது, அதற்காக எஸ்டிமேட் போடப்பட்டு,
இன்றுவரையில் அந்த மேல்நிலைத் தொட்டி கட்டப்படவில்லை.
அந்த மேல்நிலைத் தொட்டிக்குப் பதிலாக இப்போது 'சப்-வெல்'
என்று எஸ்டிமேட்டை மாற்றக் கூடிய அளவிற்கு அங்கே நிலைமை
இருக்கிறது. அதேபோல தொண்டையார்பேட்டை மணிக்
கூண்டை ஒட்டி, ஜீவா பூங்கா என்று ஒன்று இருக்கிறது. அந்த
பூங்கா இன்று ஜீவனற்று இருக்கிறது. அமைச்சர் அவர்கள்
சென்னை மாநகராட்சியில் 440 பூங்காக்களை சீர் படுத்துவேன்
என்று சொன்னார்கள். ஆனால் என்ன நடந்தது ? இன்னும்
அந்த ஜீவா பூங்கா பணிகளை துவக்காமல் பயனற்று கிடக்கிறது
நீங்கள் உங்களை பாப்புலர் கவர்ன்மெண்டாக....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன்) :
இன்னும் 5 பேர்கள் பேசவேண்டும். அமைச்சர் வேறு பதில்
சொல்ல வேண்டும். சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. வெ. இராஜசேகரன் : தேர்தலை தள்ளி வைப்பதன்
மூலம் நீங்கள் உங்கள் அரசாங்கத்தை பாப்புலர் கவர்ன்மென்ட்
டாக ஆக்கிக்கொள்ள விரும்புகிறீர்கள். எல்லா காரியங்களை
யும், அமைச்சர் அவர்களே, ஆளுங் கட்சியே செய்ததாக ஒரு
மாயையை, ஒரு பிரம்மையை, தமிழக மக்கள் மத்தியிலே உண்டு
பண்ணப் பார்க்கிறீர்கள். நாடகங்களில் வருவதைப் போல,
'சிங்கிள் பிளே', 'ஒன் மான் ஷோ' நடத்திக் காட்ட முயற்சி
பண்ணுகிறீர்கள். காரணம் அமைச்சர் அவர்கள் நினைத்தால்
சுடுகாட்டிலே இருக்கிற காவலாளிக்குக் கூட தான்தான் உத்திரவு
போட வேண்டுமென்ற அளவிலே இன்றைக்கு நிர்வாகத்தைத்
தன் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். கொக்கிரகுளம்
பஞ்சாயத்தினுடைய உறுப்பினராக நானே இருக்க வேண்டும்,
கோமாளிப்பட்டி பஞ்சாயத்து தலைவராகவும் நானே இருக்க
வேண்டும், கோவை மாநகராட்சியினுடைய மேயராகவும்
நானே இருக்க வேண்டுமென்ற எண்ணம்தான் உங்கள் மத்தியி
லிருக்கிறது. அதன் காரணமாகத்தான் நீங்கள் தேர்தலைத்
தள்ளி வைக்கிறீர்கள். விசேஷ அதிகாரியினுடைய காலத்தை
நீட்டிக்கிறீர்கள்.



மேலும் ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. முதல்வர் அவர்களும்,
வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் சில நேரங்களில், சில
விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். சென்னை நகரத்திலு
டைய தலை நகரம் திருச்சிக்கு மாற்றப்படும்—மாற்றக் கூடிய
ஒரு சூழ்நிலை வரும் என்று சில கருத்துக்களையும் ஐயப்பாட்டை
யும் தெரிவித்தார்கள். (மணியடிக்கப் பெற்றது).

முதல்வர் சொன்னார், வருவாய்த்துறை அமைச்சரும் சில
கேட்புகளிலே சொன்னார். புதிய மாவட்டங்கள் ஆரம்பிக்கப்
படும்போது முதலமைச்சருடைய ஒப்புதலும் வருவாய்த்துறை
அமைச்சருடைய ஒப்புதலும் இருந்தால்தான் புதிய மாவட்டங்
கள், தலை நகரங்கள் உருவாகும் என்பது பட்ஜெட்டினுடைய
நிலைமை. அந்த அடிப்படையிலே, அவர்கள் சொன்னதை
வைத்து, ஒருவேளை அமைச்சர் அவர்கள், முதல்வரும், வரு
வாய்த்துறை அமைச்சரும் சொல்கின்ற காரணத்தால், சென்னை
நகரம் திருச்சிக்கு மாற்றப்படுமா என்ற ஐயத்தில் இந்தத்
தேர்தலை இப்பொழுது நடத்தி, வரிப் பணத்தை, சென்னை
நகரத்தினுடைய தேர்தலுக்காக செலவழிக்காமல், அந்தத் தலை
நகரத்தை மாற்றுகின்ற பிரச்சினைக்கு முடிவு வந்ததற்குப்
பிறகு சென்னை நகரத்தை செங்கல்பட்டோடு இணைத்து, பல்ல
வர்களுடைய நினைவுச் சின்னமாகிய சென்னைப் பட்டணம் என்று
மாற்றி, பஞ்சாயத்து யூனியன் தேர்தலோடு சென்னை
நகரத்தினுடைய ஊராட்சி ஒன்றியத் தேர்தலையும் நடத்தலாம்
என்ற எண்ணத்தில் இந்தத் தேர்தலை தள்ளி வைக்கிறார்களோ
என்ற எண்ணம் சென்னை நகர மக்களுக்கு இருக்கிறது.

கடைசியாகச் சொல்கிறேன், அடுத்த ஆண்டு 1983—84 ஆம்
ஆண்டு—ஒரு ஆண்டு மீதம் இருக்கிறது—தேர்தலைத் தள்ளி
வைத்து, நீங்கள் கூறுவீர்கள். அப்பொழுது நீங்கள் ஒரு காரணம்
சொல்வீர்கள். அந்தக் காரணம் நான் சொல்வதாகக் கூட இருக்
கலாம். அல்லது, அதற்கு மேலே கூட ஒரு நல்ல காரணத்தை
அமைச்சர் தேர்ந்தெடுத்து வைத்திருக்கலாம்.... (மணியடிக்கப்
பெற்றது).

திரு. எஸ். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள், நகராட்சி, மாநக
ராட்சி மன்றங்களின் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்
கிற இந்த மசோதாவை முதலிலே, ஆரம்பத்திலேயே, கொண்டு
வருகிறபொழுதே, எங்களுடைய கட்சியின் சார்பிலே நாங்கள்
எதிர்த்தோம். இன்றைய தினம் அதற்குச் சட்ட உருவம் தருகிற
நிலையில், அமைச்சர் அவர்கள் நம் முன்னால் கொண்டு வந்
திருக்கிறார்கள். இந்தத் தேர்தலை ஒத்தி வைப்பதற்காகச் சொல்
லப்படுகிற காரணங்கள், ஊராட்சி மன்றத் தேர்தல் வழக்கு
நீதிமன்றத்தில் இருக்கிறது என்பது. மற்றொன்று, வாக்காளர்
கணக்கெடுப்பு என்பது. இப்படி, பல்வேறு காரண காரியங்களை

சொல்லி இருக்கிறார்கள். ஊராட்சி மன்றத் தேர்தலுக்குக் கோர்ட்டில் தடையிருக்கிறது என்பது ஒன்று. அதைக் கோர்ட்டிலே சந்திக்க வேண்டும். அங்கே நம்முடைய அரசு வேகமாகச் செயல்பட்டு, உடனடியாக, எப்படித் தீர்க்க வேண்டுமென்று பார்த்து, அதற்கேற்ற நிலையை உருவாக்கி, தடையை நீக்க அங்கே முயற்சிக்க வேண்டும். மதுரைக்குத் தேர்தலை நடத்திய நம்முடைய மாநில அரசு மெட்ராசுக்குத் தேர்தலை நடத்த ஏன் மறுக்கிறார்கள் என்பதை நம்மால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. மதுரையிலே தேர்தல் நடத்தினார்கள். இங்கே இல்லை, அது ஒன்று, இரண்டாவது, இந்தத் தேர்தல் தடை சம்பந்தமாக விவாதங்கள் வருகிறபொழுதே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று உணர்ச்சி வசப்படுகிறார்கள். அன்பாக பேசக் கூடியவர், முக மலர்ச்சியோடு இருக்கக் கூடியவர் அவர். எங்கள் கட்சியின் தோழர் திரு. மு. அம்பிகாபதி அவர்கள் தேர்தலை ஒத்தி வைப்பது சம்பந்தமாக ஒரு பிரச்சினையை விளக்குவதற்காக, எடுத்துச் சொல்வதற்காக, தெளிவாகப் புரிய வைப்பதற்காக, உங்கள் தேர்தல் சின்னம் இரட்டை இலையாக இருக்கிறது. இந்த நிலையில் ஏன் இரட்டை நிலைக்குப் போகிறீர்கள் என்று பேசினார்கள். நகராட்சிகளுக்குத் தேர்தலை நடத்தத் தடையில்லை. மாநகராட்சிகளுக்குத் தேர்தலை நடத்தத் தடையில்லை. அப்படியிருக்க ஏன் தேர்தலை நடத்தவில்லை என்பதற்காக அப்படிச் சொன்னார்கள். உடனடியாக, அமைச்சர் அவர்கள் உணர்ச்சி வசப்பட்டு நாங்கள் அப்படி இல்லை, உங்கள் கட்சியில்தான் இரட்டை வேறுபாடு என்று சற்று வேகமாகச் சொன்னார்கள்.

(பிற்பகல் 12--50)

நான் இந்தப் பேரவையில் என்றைக்கும் அப்படி பார்க்கவில்லை. ஆனால், அன்றைக்கு அவர்கள் அப்படிச் சொன்னார்கள். உங்களுக்கு ஒரு நல்ல அருமையான கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள் ; ஆளுங் கட்சியின் சார்பில் அநேக காரணங்களைச் சொல்லி இல்லை என்று சொல்கிறார்கள். இப்பொழுதுள்ள எதிர்க்கட்சியும், ஆளுங்கட்சியும் ஒன்றாக இருந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகமாக ஒன்றாக இருந்த நேரத்தில் ஒரு திரைப் படத்தை எடுத்தார்கள். திரும்பிப்பார் என்ற அந்தத் திரைப் படத்திலே சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. தொழிற்சங்கத்தைப் பலகீனப்படுத்தும் வகையில், அதன் தலைமையைக் கேவலப்படுத்தும் நிலையில் உள்ள கதையைக் கொண்ட படம் அது. இதை நான் ஏன் இப்பொழுது சொல்கிறேன் என்றால், ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் நகரசபைகளைக் கலைத்தார்கள். அது காங்கிரஸ் ஆட்சிக் காலம். அவர்கள் இப்பொழுது தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். பிறகு, ஆளுங்கட்சிக்காரர்களாகிய நீங்கள் ஊராட்சி மன்றங்களைக் கலைத்தீர்கள். கேட்டால், ''ஸ்டே'' என்று சொல்கிறீர்கள்.



தேர்தலை விரைவில் நடத்த வேண்டுமென்று நாங்கள் சொல்வதற்கான அடிப்படைக் காரணம், நாடு முழுவதும், குறிப்பாகத் தமிழ்நாட்டில் கடும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. எல்லாக் கிராமங்களிலேயும் அநேகமாக மக்கள் வேலைவாய்ப்பின்றி, விவசாயத் தொழிலையும் செய்ய முடியாமல் அவர்கள் நகர்ப்புறங்களுக்குச் செல்ல ஆரம்பிக்கிறார்கள். நகர்ப்புறங்களுக்குச் சென்று கூலி வேலை செய்தோ, மூட்டை சுமந்தோ தங்கள் பிள்ளைக் குட்டிகளைக் காப்பாற்றலாம் என்று வருகிறார்களா அதனால், நகரங்களுக்கு வரும் மக்கள் எண்ணிக்கை அதிகமாகிறது. நகரங்களில் மக்களின் எண்ணிக்கை கூடுவதால் அங்கே குடிநீர்ப் பஞ்சம் ஏற்படுகிறது: அதனால் சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன. நகரங்களில் மக்கள் வாழ்வதற்கு இடமில்லை என்ற அவல நிலை பல நகராட்சிகளில் ஏற்பட்டிருக்கிறது. இது அமைச்சரவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும் ஏன் நகராட்சி தேர்தலை நடத்துவதற்கு மறுக்கிறார்கள் என்பது புரியவில்லை. இந்த ஜனங்கள் கிராமங்களைவிட்டு நகரங்களை நோக்கி வருவதற்கான காரணம், அங்கே பஞ்சம் வேலையில்லை, குடிநீர் இல்லை, எனவே, நகரங்களுக்குச் சென்றால் வாழ முடியும் என்ற நிலையில் அவர்கள் வருகிறார்கள். இந்தியாவில் வாழும் மக்கள் என்ற முறையில் அவர்கள் அப்படி வருகிறார்கள். அந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக நாம் விரைவில் அந்தத் தேர்தல்களை நடத்த வேண்டும்.

கோயம்புத்தூர் நகராட்சி மாநகராட்சியானதற்குப் பிறகு இதுவரையில் தேர்தல் நடைபெறவே இல்லை. மற்ற நகராட்சிகளிலும் உரிய நேரத்தில் தேர்தல்கள் நடைபெறவில்லை. அண்மையில் நடைபெற்ற தேர்தலில் நீங்கள்தான் ஜெயித்தீர்கள். அப்படியிருந்தும் தேர்தலை நடத்துவதற்கு ஏன் தயங்குகிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. தேர்தல்களை ஒத்திவைப்பது நாட்டின் நலனுக்கு உகந்தது அல்ல. நகராட்சி மன்றங்களை அவர்கள் கலைத்தார்கள், 13,000-த்துச் சொச்சம் ஊராட்சி மன்றங்களை நீங்கள்தான் கலைத்தீர்கள். இப்படி கலைத்துவிட்டு இப்பொழுது தேர்தல் நடத்த வேண்டுமென்றால் வாய்ப்பு இல்லை, நேரம் இல்லை, என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இந்த நிலைமை மாறி உடனடியாகத் தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விழுப்புரத்தில் காலரா நோய் ஏற்பட்டு, நான்கு பேர் செத்துப் போனதாகவும் செய்தி வருகிறது. இப்படிப்பட்ட நிலைமை தமிழகம் முழுவதும் பரவும் நிலைக்கு வந்துவிடக்கூடாது. எல்லா நகராட்சிகளிலேயும் சுகாதார ஊழியர்கள் குறைவாக இருக்கிறார்கள். முப்பதாண்டுக் காலத்திற்கு முன்னால் எந்த அளவிற்கு இருந்தார்களோ அதே எண்ணிக்கையில்தான் ஊழியர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். அவர்களை அதிகரிக்க வேண்டும் என்பது ஒன்று. இரண்டாவதாக, தொழிலாளி என்று எடுத்

**டாக்டர் கே. சௌரிராஜன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சியினுடைய சிறப்பு அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை மேலும் ஓர் ஆண்டுக்கு நீடிக்க வேண்டும் என்று கொண்டு வந்திருக்கிற இந்த மசோதா மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றி கூறிக் கொள்கிறேன், இந்த மசோதா கொண்டு வந்து இருப்பது

It is only administrative compulsicn

அதாவது நிர்வாகத்திற்கு அவசியமும், அவசரமும் ஆக இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர இதிலே வேறு எந்தவிதமான பிரச்சினையும் நாம் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. தேர்தல் நடத்த முடியவில்லை, தேர்தல் நடக்கவில்லை என்ற ஒரு காரணத்தினால், அவசரமாகவும், அவசியமாகவும் இந்தச் சிறப்பு அதிகாரிகளுடைய பதவிக்காலத்தை நீட்டிக்க வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு இந்த அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது. இது பாராளுமன்றத்திற்கானாலும் சரி, சட்ட மன்றங்களுக்கானாலும் சரி, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தியே தீர வேண்டுமென்பது,

It is a constitutional obligation.

அதேபோல் 5 ஆண்டுகளுக்குள்ளாக நடத்த முடியாமல் போகுமானால் ஜனாதிபதியினுடைய ஆட்சி 6 மாத காலத்திற்கு வரும். தேவைப்பட்டால் மீண்டும் ஒரு 6 மாதத்திற்கு நீட்டிக்க முடியும். அதற்குள்ளாகவே இந்த மாநிலங்களுக்கும், பாராளுமன்றத்திற்கும் தேர்தலை நடத்தியே தீர வேண்டும் என்று அடிப்படை அரசியல் சாசனத்தில் விதி உள்ளது, ஆனால், இவர்கள் இதையெல்லாம் மறந்துவிட்ட காரணத்தால், இந்த அரசியல் சட்டத்திலே உள்ள ஓட்டையின் அடிப்படையிலே புகுந்து கொண்டு இந்த மாநிலத்தை ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் காலம் காலமாக இந்தப் பஞ்சாயத்துக்கள் அல்லது மாநகராட்சிகளுடைய தேர்தலை நடத்தாமல், தங்களுடைய சௌகரியத்தை, தங்களுடைய வசதிக்காக, தாங்கள் எப்போது வைத்தால் தேர்தலில் ஜெயிக்க முடியும் என்ற அள



விற்கு அதை பிரயோகப்படுத்தக்கூடிய, அதை உபயோகப்படுத்
தக்கூடிய அளவிற்கு இன்று ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று
சொன்னால், உள்ளபடியே நாம் அனைவரும் வருத்தப்படவேண்
டிய ஒரு விஷயமாகும். அதுவும் குறிப்பாக சிவிக் பிராப்ளம்ஸ்
என்று வருகின்ற நேரத்திலே இது கேலிக் கூத்தாக மாறிக்கொண்
டிருக்கிறது. மற்ற இடங்களைப் பற்றி அவர்கள் மேற்கோள்
காட்டலாம். ஆனால், அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை.
தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஜனநாயகத்திலே நம்பிக்கை
உடைய மக்கள் இங்கே வாழ்கிறார்கள். அதிலும் குறிப்பாக
பஞ்சாயத்து நிர்வாகங்களிலே அல்லது மாநகராட்சி நிர்வாகங்
களிலே, தேர்தல்கள் ஜனநாயகத்தின் அடிப்படையிலே நடக்க
வேண்டும் என்ற உணர்வு உள்ள மக்கள் அதிகமாக இருக்கும்
காரணத்தால் ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக ஆக்கக் கூடாது
என்ற காரணத்தால் அதிலும் குறிப்பாக ஆளும் கட்சியில் உள்ள
வர்கள் பொறுப்பாக இருக்கக்கூடாது என்ற அந்த நல்ல எண்
ணத்தின் அடிப்படையிலே அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்
டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1-00]

மாநகராட்சியே ஏலம் போய் விடும் அல்லது கடனுக்கு ஆளாகி
விடும் என்று சொல்லி அதைக் கலைத்துவிட்டார்கள். 73-ஆம்
ஆண்டிற்குப் பிறகு அது அரசாங்கத்தினுடைய நேரிடைப்
பொறுப்பில் இருந்து வருகிறது. கிட்டத்தட்ட 9 ஆண்டு காலங்
கள் பூர்த்தியாகி இருந்தபோதும் கூட ஒரு காரியம் செய்கின்ற
போது அதனுடைய விளைவுகள் நல்ல பயனளிக்கக் கூடிய விளை
வாக இருந்திருக்க வேண்டும். 73-க்கு முன்பு இருந்த ஊழல்
அல்லது 73-ல் நடந்த ஊழல், இன்று வரை நடக்கவில்லை என்று
அமைச்சர் உத்தரவாதம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்களா?
அந்த ஊழல்கள் அப்படியே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே
இருந்துகொண்டிருக்கிறது. மாநகராட்சியைப் பொறுத்தவரை
யில், அன்று வேண்டுமானால் மக்களுடைய பிரதிநிதிகள் 150பேர்
அதில் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள், என்று குற்றம் சாட்டி
னார்கள். ஆனால் அந்த 150 மக்கள் பிரதிநிதிகளை வெளியே

துக்கொண்டால் எங்கள் நகராட்சியில் ஒரு டெம்பரரி தொழி
லாளிக்கு 7 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆற்காட்டில், சின்ன
நகரம், அங்கே 9 ரூபாய் கொடுக்கிறார்கள். இரண்டு ஊர்களுக்
கும் வித்தியாசம் இருக்கிறது என்று எழுதிக் கொடுத்திருக்கிறேன்.
அதற்குப் பிறகு பதில் சொல்வார்கள் என்று கருதுகிறேன்.
ஆனால், சட்டமன்ற விடுதியில் பணியாற்றுகின்ற பெண் ஊழி
யருக்கு 4½ ரூபாய் தான் தருகிறார்கள். இது என்ன நியாயம்?
இது என்ன நீதி? இது என்ன தர்மம்? நகராட்சியிலேயே
ஒரு ஊரில் 9 ரூபாயும், இன்னொரு ஊரில் 7 ரூபாயும் அங்கே
யிருக்கின்ற அதிகாரிகள் தருகிறார்கள். இங்கே இப்படி நிலை
மை இருக்கிறது. சுகாதார ஊழியர்கள் குறைவாக இருப்பதால்
காலரா வருகிறது. இத்தனைக்கும் அடிப்படைக் காரணம் தேர்தல்
இல்லாததுதான். தேர்தல் விரைவில் வரவில்லை என்றால் இந்த
நிலைமைகள் தொடர்ந்து நீடித்துக்கொண்டுதான் இருக்கும். இந்த
நிலைமைகள் போக்கப்பட வேண்டுமென்றால், தமிழகத்திலே,
நல்லாட்சி நடைபெற வேண்டுமென்றால், நாம் போடும் திட்
டங்களும், எல்லாத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட வேண்டு
மென்றால், அதன் பலன்கள் மக்களுக்கு நியாயமாகக் கிடைக்க
வேண்டுமென்றால் பஞ்சாயத்து போர்டு மெம்பர்கள் இருக்க
வேண்டும்.

தொகுதி முழுவதும் லைட் சரியாக இல்லை. நான் வேலூ
ரில் இருக்கிறேன். நான் அமைச்சரிடம்கூடத் தெரிவித்திருக்கி
றேன். காட்பாடியில் இறங்கி காரில் போய் விட்டால் ரேடா
நன்றாகத்தான் தெரியும். முதலமைச்சர் வருகிறார் என்ற நேரத்
தில் ஆயிரக்கணக்கான லைட்டுகளைப் போட்டார்கள், ரோட்டை
அகலப்படுத்தினார்கள். என்னுடைய தொகுதியில் 50-க்கும் மேற்
பட்ட முறை அமைச்சர்கள் வந்தால் அங்கேயுள்ள எல்லா
ஊராட்சிகளுக்கும் நல்ல ரோடு வரும் என்ற முறையில்
எல்லா அமைச்சர்களையும்கூடக் கூப்பிட்டேன்.

நான் கூப்பிடாத அமைச்சரே கிடையாது. முதல் அமைச்
சரைக் கூப்பிட்டேன். ஊள்ளாட்சித்துறை அமைச்சரைக் கூப்
பிட்டேன் பல தடவை. ஏன் வர மறுக்கிறார்கள், என்பது
தெரியவில்லை. வந்து பாருங்கள் என் தொகுதியை என்று கூப்
பிட்டேன். என்னுடைய தொகுதியில் தண்ணீர் இல்லை. லைட்
இல்லை. வைத்திய வசதி இல்லை. (குறுக்கீடு). இல்லை
இல்லை. வரவில்லை. மறுத்துவிட்டார்கள். தேதி கொடுத்து
நிறுத்திக்கொண்டார்கள். அதே போல் இராஜா முகமது அவர்
களும் மறுத்துவிட்டார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்
கள் வருவதாகச் சொன்னார்கள். ஆனால், வரவில்லை. அன்
றைக்கு ஒரு வேகத்திலே ஒரு வார்த்தையைச் சொன்னார்கள்.
மன்னார்குடிக்கும், மெட்ராசுக்கும் என்ன சம்பந்தம் என்ற வினா
வை எழுப்பினார்கள். மன்ற உறுப்பினர் என்ற முறையிலே
கேட்கிறேன். நீங்கள் தமிழ்நாட்டுக்கும் அமைச்சர். ஒரு



தொகுதிக்கு மட்டும் அமைச்சர் அல்ல. இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள், பிரச்சினைகளை எடுத்துச் சொல்கிறார்கள். சட்டப்படிச் சொல்கிறார்கள். நீங்கள் தொகுதிகளுக்கு வரவேண்டும். மக்கள் குறைகளைத் தீர்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே. ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் வேலூரிலே நடைபெற்ற பள்ளிக் கட்டிட திறப்பு விழாவிற்கு வந்து கலந்து கொண்டிருக்கிறோம். அந்தப் பகுதி அவருடையத் தொகுதியைச் சேர்ந்ததா இல்லையா? என்பதை அவர்கள் தயவு செய்து சொல்ல வேண்டும். நான் எல்லாத் தொகுதிகளுக்கும் போய் வரவேண்டுமென்ற எண்ணம் உடையவன்தான். நான் பல்வேறு தொகுதிகளுக்குச் சென்றிருக்கிறேன். தொடர்ந்து தொகுதிகளுக்குப் போக வாய்ப்பு எப்போது கிடைக்கிறதோ அப்போதெல்லாம் நான் போகிறேன். உங்களுடைய தொகுதிக்கும் வந்திருக்கிறேன். அது இல்லை என்று மறுக்கமுடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. என். ஏ. பூங்காவனம்:** விழாவிற்கு வந்து கலந்து கொண்டார்கள். அது என்னுடைய தொகுதி அல்ல. வி. என். தேவராஜ் தொகுதியில் உள்ள செவ்வாய்ப்பேட்டை. அது என்னுடைய தொகுதி அல்ல.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தொகுதிக்கெல்லாம் போகாதீர்கள். பில்லை ஒட்டிப் பேசுங்கள்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏதோ விமர்சனம் செய்ய வேண்டுமென்று நான் இவைகளைச் சொல்லவில்லை. தொகுதியிலே இருக்கின்ற உண்மையான, யதார்த்தமான நிலைமையைத்தான் நான் சொல்கிறேன். எனவே, இன்றைக்கு கொண்டுவந்து இருக்கிற திருத்தச் சட்டத்தை வாபஸ் பெற்று உடனடியாக சட்டப் பேரவைக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்னாலே நீங்கள் தேர்தலுக்கான தேதியை அறிவிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

தள்ளிவிட்டு ; மாநகராட்சி அதிகாரிகளே நீங்கள் ஊழலை கன்டிநியூவஸ்-ஆக தொடர்ந்து நடத்திக் கொண்டிருங்கள் என்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்த நிலையில் தான் இன்று இந்த அரசாங்கம் இருக்கிறது என்பதை — அந்தக் கடமையில் நீங்கள் தவறிவிட்டீர்கள், என்று நான் இங்கே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநகராட்சியைப் பொறுத்தவரையில், ரோடு போடுவதிலிருந்தும் சரி, மற்றும் தெரு விளக்கு எரிவதிலிருந்தும் சரி, கக்கூஸ், கழிவறைகளை கழுவுவதிலிருந்தும் சரி, எந்த காரியத்தை எடுத்துக் கொண்டாலும் கூட, சாதாரணமாக ஒரு பிளான் வாங்குவது என்ற நிலைமையை எடுத்தாலும், ஊழல் இல்லாத ஆட்சி நடைபெறுகிறதா, ஊழல் இல்லாத நிர்வாகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறதா, இந்த ஊழல்களைத் தடுப்பதற்காகவே உறுப்பினர்களுடைய கஸ்டோடியன்ஸ், அவர்களுடைய விஜிலன்ஸ், அவர்கள் பார்த்திருந்தார்கள். சிலர் சம்பந்தப்பட்டிருந்தார்கள். ஆனால் பலர் சம்பந்தப்படவில்லை. அவர்கள் ஒரு மேற்பார்வையாளராக இருந்துகொண்டு ஒரு பாதுகாப்பாக ., அதிகாரிகள் தவறு செய்வதைத் தடுப்பதற்கு இருந்துகொண்டு இருந்தார்கள். ஆனால் இன்று நிலைமை என்ன ? சென்னை நகரில் இருந்து 14 சட்டமன்ற உறுப்பினர்கள் வந்திருக்கிறோம். கேவலம் இன்றைக்கு நகராட்சி பட்ஜெட் என்ன என்று கூட தெரியாமல் இருக்கிறோம். மாநகராட்சியினுடைய வரவு-செலவுத் திட்டத்தை அப்போதெல்லாம் இந்த பிப்ரவரி-மார்ச் மாதங்களில் எப்படி சட்டமன்றத்தில் வைக்கிறார்களோ அதைப்போல மாநகராட்சியிலே வைப்பது வழக்கம். இன்று இந்த மாநகராட்சியினுடைய வருமானம் என்ன ? இந்த மாநகராட்சியினுடைய செலவு என்ன ? பற்றாக்குறை என்ன ? எது எதற்காக நிதிகள் ஒதுக்கீடு செய்கிறார்கள் என்பது கூட தெரியாத நிலைமையில் இன்று 14 சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னை நகரில் இருந்து கொண்டிருக்கிறோம் — சென்னை நகரத்திலிருந்து—மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம் என்று சொன்னால், நாங்கள் உள்ளபடியே வெட்கி தலை குனிந்து கொண்டிருக்கிறோம்.



மக்கள் எங்களிடம் வந்து கேட்கின்ற இந்த நேரத்தில், இன்று மாநகராட்சி உறுப்பினர்கள் இல்லை என்ற காரணத்தால் அவர்கள் அடிக்கடி சட்டமன்ற உறுப்பினர்களை, மாநகராட்சி உறுப்பினர்கள் என்று நினைத்துக்கொண்டு எங்கள் வீட்டு சாலைகளில் கூட்டம் கூட்டமாக நின்று, அடிப்படைத் தேவைகள்—எங்களுக்கு ரோடு போடவில்லை, இந்த கக்கூஸ் சரிவர எடுக்கப்படவில்லை என்றெல்லாம்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே திரு. பொன்னுரங்கம் அவர்கள் எல்லா பாயிண்ட்ஸ்-ம் பேசிவிட்டார்கள்.

**டாக்டர் கே. சௌரிராஜன்:** எங்களுக்கு பட்ஜெட் புரவிஷன் காப்பி கூட, கொடுக்கப்படவில்லை. நாங்கள் பட்ஜெட் புரவிஷன் என்ன என்று கூடத் தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிற துர்பாக்கியமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக மாநகராட்சி நிதிவசதியைப் பற்றி மாண்புமிகு புரட்சித் தலைவர், முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். 18 கோடி ரூபாய் வருமானம். இதில் 11 கோடி ரூபாய் அவர்களுக்குச் சம்பளமாக கொடுக்க வேண்டிய நிலைமை என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்த நிலைமை ஏன் உருவாகியது என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாநகராட்சிக்கு உள்ள ஒரே வருமானம் சொத்து வரி. அந்தச் சொத்து வரி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை 'குவின் குவினியல் ரிவிஷன்' என்று சொல்வார்கள். அதன் மூலமாக அவை மாற்றி அமைக்கப்பட வேண்டும். கடைசியாக சொத்து வரி எப்போது மாற்றி அமைக்கப்பட்டது என்று எங்களுக்குத் தெரியவில்லை. அதே நேரத்திலே இந்த மாநகராட்சியினுடைய வருவாயைப் பெருக்குவதற்கு என்னென்ன வழிமுறைகளைச் செய்ய வேண்டுமென்று இருக்குமேயானால்,— இது ஒரு எலெக்டட் பாடி—ஒரு மாநகராட்சி—ஒரு கார்ப்பரேஷன் இருக்குமேயானால், நிச்சயமாக அது அவர்களுடைய தலை வலி.

அவர்களைத் தான் குறை கூறுவார்கள். அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் செய்து கொண்டிருப்பார்கள். அதை விடுத்து நாம் சக்தியும் இல்லாமல், நம்மிடத்திலே வசதியும் இல்லாமல், இந்த அரசாங்கம் கூடுதல் சுமையை எதற்கு தங்களுடைய தலையிலே சுமந்திக் கொண்டிருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஊரிலே தண்ணீர் வரவில்லை என்றால் — அண்ணா தி.மு.க. அரசாங்கம்—ரோட்டில் தண்ணீர் வராமல் குட்டையும் குளமுமாக இருந்தால் அண்ணா தி.மு.க. அநியாயமாக நீங்கள் வேண்டாத தொந்தரவை வம்பை விலைக்கு வாங்கிக்கொண்டு இந்த நிலைமைக்கு ஆளாகி இருக்கிறீர்கள் என்பதை உங்களுக்கு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். உடனடியாக மாநகராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் (மணியடிக்கப்பெற்றது.)

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி, மாநகராட்சி ஆகியவற்றின் தனி அதிகாரியின் பதவியை நீடிக்கக் கோரும் இந்த மசோதாக்களின் மீது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால், நிர்வாகத்தை நடத்துவதற்காக அந்த அதிகாரிகளின் பதவிகளை நீடிக்க வேண்டும் என்று சொன்னாலும் கூட, இன்றைக்கு அங்கேயுள்ள அதிகாரிகள் எந்த முறையில் நடந்து கொண்டு வருகிறார்கள் என்பதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு வருகிறோம் என்ற முறையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அதிகாரிகள் தன்னிஷ்டம்போல், சர்வாதிகாரத்தனமாக நடந்து கொண்டு இருக்கிறார்கள். நாம் எந்தப் பகுதியில் சாலை போட வேண்டும், பாலம் கட்ட வேண்டும் என்று சொல்கிறோமோ அந்தப் பகுதியை விட்டுவிட்டு, அதிகாரிகளுக்குச் சாதகமாக, அந்தக் கான்ட்ராக்டர்களுக்குச் சாதகமாக எந்தப் பகுதி இருக்கிறதோ அந்தப் பகுதியில் சாலை போடுகிறார்கள்.



பாலம் கட்டுகிறார்கள். மேலும், ஒரு சட்டமன்றத் தொகுதியில் 60 பஞ்சாயத்துகள், 250 சிற்றூர்கள், 300 சிற்றூர்கள் இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், சட்டமன்ற உறுப்பினரிடம் தான் மக்கள் குறைகளை வந்து சொல்கிறார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொரு இடத்திற்கும் சென்று அவற்றை நிவர்த்தி செய்ய முடியாது. அதற்கான வாய்ப்பும், வாகன வசதியும் அவருக்குக் கிடையாது.

அதிகாரிகள் இஷ்டம்போல் பணி செய்வது மட்டுமல்ல. அரசாங்கப் பணத்தையும் சுரண்டும் வாய்ப்பு இன்றைய தினம் ஏற்பட்டு இருக்கிறது. இங்கே எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னார்கள். தன்னிறைவுத் திட்டம் சிறப்பாக நடைபெறுகிறது என்று ஆளும் கட்சியினர் விவாதிக்கலாம். ஆனால் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக, வறட்சிப் பணி மூலமாக இணைப்புச் சாலைகள் போடுதல், ஆழ்குழாய் கிணறுகள் போடுதல் போன்ற பணிகள் செய்யப்பட்டதாகச் சொல்லலாம். ஆனால் எத்தனை இடங்களில் சாலைகள் உண்மையிலேயே போடப்பட்டன எத்தனை ஆழ்குழாய் கிணறுகள் இன்றைக்கு நல்ல நிலையில் பணி செய்கின்றன என்பதைப் நாம் பார்க்க வேண்டும். போடப்பட்ட ஆழ்குழாய் கிணறுகளில் 75 சதவீதம் சரியாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவரின் அனுமதியோடு, நான் ஒன்றை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு 'தினமலர்' பத்திரிகையில் ஒரு செய்தி வருகிறது. 'சாலை போடாமலேயே பணம் பெற்ற மோசடி' என்று தலைப்பிட்டு ஒரு செய்தி வந்துள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்தில், திருத்தணி தாலுக்காவில் மாலூர் என்ற கிராமத்திற்கு 1981 ஆம் ஆண்டிலே வறட்சி நிவாரணப் பணியின்கீழ் மாலூர்-கூனார் இணைப்புச் சாலைக்காக 25,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும், அதற்காக 1982 ஆம் ஆண்டில் 22,700 ரூபாய் அதிகாரிகள் பெற்றுக்கொண்டார்கள் என்றும் புள்ளிவிவரம் தரப்பட்டுள்ளது.

(பிற்பகல் 1·10)

ஆனால் சாலை போடப்படவில்லை. இன்று பத்திரிகையில் அதுபற்றி வந்திருக்கிற செய்தியை நீங்கள் பார்த்திருக்கலாம். அந்த அளவுக்கு, அரசாங்கம் நல்ல எண்ணத்தோடு ஏழை எளிய மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று எண்ணி காரியங்கள் செய்தாலும் அந்தப் பணம் கிராம மக்களுக்குப்

போகாமல் தனி அதிகாரிகளின் கைகளுக்குப் போய்விடுகிறது என்ற காரணத்தால் இந்த பதவி நீட்டிப்பு சட்டத்தை மேலும் கொண்டு வராமல் இன்னும் 2, 3 மாதங்களுக்கு உள்ளாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சென்னை மாநகராட்சி ஸ்பெஷல் ஆபீசர் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். அதோடு கூட ஆதிதிராவிடர், மலைவாழ் மக்கள், பெண்கள் ஆகியோருக்கு ஸ்தானங்கள் ஒதுக்குவது பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், ஏற்கெனவே ஒருமுறை அமைச்சரவர்கள் முனிசிபாலிட்டிகளிலும் கார்ப்பரேஷன்களிலும் அவர்களுக்கு இட ஒதுக்கீடு இல்லை என்று சொன்னதாக கருதுகிறேன். இப்போதாவது அரசாங்கம் நினைந்து, அவர்களுக்கு ரிசர்வேஷன் கொடுக்குமானால், நல்ல எண்ணம் கொண்டு அதைச் செய்தால் வரவேற்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் கொடுப்பதாகச் சொல்லி, பிறகு இல்லை என்று ஏமாற்றுகின்ற அவலநிலை ஏற்படாது என்று அமைச்சர் அவர்கள் உறுதியளிக்க வேண்டும்.

இன்னொன்று கோடிக்கணக்கான ரூபாயை நாம் வரவு-செலவுத் திட்டமாக வைத்திருக்கிறோம்; வரி விதிக்கிறோம். மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் இதிலே சில தவறுகள் நடக்கின்றன என்பது அமைச்சருக்கும் தெரிந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது ஒரு ஆலோசனைக் குழு போடுவதிலே என்ன கஷ்டம் இருக்கிறது? 2, 3 மாதத்திற்குள் தேர்தல் நடக்கும் என்றால் ஆலோசனைக் குழு தேவையில்லை.

அமைச்சரவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது சென்னை மாநகராட்சியில் 150 டிவிஷன்கள் இருக்கின்றன; ஆலோசனைக் குழு போடுவதாக இருந்தால் 150 பேர்களைப் போட வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு பஞ்சாயத்து யூனியனில் 40, 50, 60 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஆனால் மக்கள் குழுவில் 7, 10, 12 பேர்களுக்குமேல் போடவில்லை. அதைப்போல இங்கேயும் 150 டிவிஷன்கள் இருந்தாலும் 5 பேர் அல்லது 10 பேர் அல்லது கட்சிக்கு ஒருவர் என்ற முறையிலே போட்டாலும் போதும். அந்தவகையில் எது சரியென்று தோன்றுகிறதோ அந்தவகையில் ஆலோசனைக் குழுவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக நகரின் அவலநிலைபற்றி பல பிரச்சனைகளைச் சொல்லியிருக்கிறேன்; முடிந்ததை செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு முக்கியமான பிரச்சனை. பள்ளிக்கூடங்களில் போதுமான அளவுக்கு மேசை, நாற்காலிகள் இல்லை;



பிள்ளைகள் உட்கார இடம் இல்லாத ஒரு அவலம் இருக்கிறது புத்தகங்கள் கொடுக்கப்படவில்லை. புரசவாக்கத்திலே லாசர் நகரில் ஒரு கட்டிடம் கட்டுவதாகச் சொல்லி இரண்டாண்டுகள் ஆகியும் இன்னும் கட்டப்படவில்லை. அந்தப் பள்ளிக்குப் போய் பிள்ளைகள் படிக்கமுடியவில்லை. எனக்கு கமிஷனரும் வேண்டியவர்தான்; ஸ்பெஷல் ஆபீசரும் வேண்டியவர்தான்; எஜுகேஷனல் ஆபீசரும் வேண்டியவர் தான். அப்படி இருந்தாலும் இரண்டரை ஆண்டுக்காலம் ஆகிவிட்ட பிறகும் அந்தப் பள்ளிக்கூடம் கட்டப்படவில்லை. அதற்கு என்ன காரணம்? அங்கே ஆலோசனைக் குழுவும் இல்லை; தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் இல்லை. அதிகாரிகளுக்கு இருக்கிற பல வேலைகளில் இந்த வேலை விடுபட்டுப்போகிறதா என்பது தெரியவில்லை. அல்லது பணம் இல்லையா என்றும் தெரியவில்லை. இந்த அவல நிலைகளை மாற்ற அங்கே ஆலோசனைக் குழு இருக்க வேண்டும். அப்படியானால்தான் எந்தக் காரியமும் நடைபெறும்.

அதைப்போன்று பஞ்சாயத்து யூனியன்களுக்கு தேர்தல் நடகாமல் காங்கிரஸ் நண்பர்கள் தடை வாங்கிவிட்டார்கள் என்று சொன்னார்கள். அவர் யாராக இருந்தாலும் தவறு நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கம்தான். ஆனால் கார்ப்பரேஷனுக்கும் முனிசிபாலிட்டிக்கும் யாரும் தடை வாங்கவில்லை. அவற்றுக்காவது உடனடியாகத் தேர்தலை வைக்கலாம். 1973ஆம் வருஷத்திலிருந்து 1983 வரை தேர்தல் நடக்கவில்லை; மக்கள் பிரதிநிதிகள் அங்கே இல்லை என்கிற அவலநிலைமை இருக்கிறது.

கோவை மாநகராட்சி மட்டுமல்ல; எந்த மாநகராட்சிக்கும் ஆலோசனைக் குழு போடப்படவில்லை. ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்திற்கு வரவில்லை என்றால் கண்காணிக்க வேண்டும். குறைந்த எண்ணிக்கை உறுப்பினர்கள் இருந்தாலும் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று கலெக்டருக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். பல இடங்களில் கூட்டம் நடக்கவில்லை. இந்த அவலத்தைப் போக்க விரைவிலே தேர்தலை நடத்துவதைத் தவிர வேறு வழி ஒன்றும் தெரியவில்லை.

கோவை மாநகராட்சிக்கு 44 கோடி ரூபாய் செலவிடுகிறோம். ஒரு ஆலோசனைக் குழு போடுவதிலே எத்தனை கோடி செலவாகிவிடப் போகிறது? அல்லது யாருக்கு அந்தப் பணம் போய்விடப் போகிறது? ஆகவே, உடனடியாக அங்கே ஆலோசனைக் குழு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

இப்போது சென்னை மாநகரில் பல இடங்களில் பள்ளிக்கட்டிடங்கள் சரியாக இல்லை; கழிப்பிடங்கள் இல்லை. சாக்கடை வசதி இல்லை. தண்ணீர் வசதியும் இல்லை. பல கட்டிடங்கள் கட்டப்பட்டும் அவை திறக்கப்படவில்லை. இதை எல்லாம் உடனடியாக சரிசெய்ய வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த தனி அதிகாரிகளின் பதவி நீட்டிப்பு சம்பந்தமான திருத்த மசோதாவிலே ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சொல்வதற்கு அனுமதி வழங்கியதற்காக முதலிலே தலைவருக்கு நன்றியைக் கூறி, என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

இப்போது ஒன்றியங்களிலேயும், நகராட்சிகள், ஊராட்சிகளிலேயும் தற்போது பதவியில் இருக்கிற தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை இன்னும் நீட்டித்துக் கொண்டே போவோமேயானால், எந்த அளவுக்கு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், இன்னும் பாதிக்கப்படுவார்கள் என்பதற்கு மாத்திரம் ஒன்றிரண்டு உதாரணங்களைக் கூறிவிட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு).

இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் 4 மாதங்களுக்கு முன்னால் நான் என்னுடைய தொகுதியில் சம்பந்தப்பட்ட பிளாக் அதிகாரிகளை அழைத்துக்கொண்டு பார்வையிடச் சென்ற போது மட்டப்பாறை என்ற ஊரில் ஒரு புகார் வந்தது. பல லட்சம் ரூபாய் செலவு செய்து, மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டி, அதன் மூலமாக அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதிலே லீக்கேஜ் ஏற்பட்டு வீணாக வெளியேறிவிடுவதால் தண்ணீர் கிடைப்பதில்லை என்ற புகாரை ஊர் பொது மக்கள் திரண்டுவந்து முறையிட்டனர். அப்போது உடனேயே என்னோடு வந்திருந்த என்ஜீனியர், ஈ. ஓ., கமிஷனர் போன்றவர்களை எவ்வளவு நாளைக்குள் இதைச் சீர் செய்வீர்கள் என்று கேட்டபோது, ''அக்கா 15 நாட்களுக்குள்ளேயே அதை செய்து முடித்து விடலாம்'' என்று சொன்னார்கள். சரி, அதைச் செய்து விடுங்கள் என்று சொல்லிவிட்டு, சென்று விட்டேன். ஆனால் சென்ற மாதம் நான் மீண்டும் அங்கே போனபோது, அந்தத் தொட்டியில் இருந்து லீக்கேஜ் வழியாக இன்னமும் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்த நிலை தான் இருந்தது. தண்ணீர் வரவில்லை. அந்த மக்கள் சொல்கிறார்கள், பஞ்சாயத்தில் பணம் 50,000-க்கு மேல் இருக்கிறது. ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்தக் குழாய்களை மாற்றிப் போடும் சூழ்நிலையில் இல்லை. இதன் விளைவு நாங்கள் தண்ணீர் இல்லாமல் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம், நீங்கள் பார்த்தாவது இதை உடனடியாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று முறையிடுகிறார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவர், யூனியன் தலைவர் இருந்தால், இந்த அளவுக்கு ஒரு குழாயை ரிப்பேர் செய்வதற்கு காலதாமதம் காட்ட மாட்டார்கள் என்ற முறையிலேதான் இதைக் குறிப்பிட்டுச் சொன்னேன்.



நான் இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரியிடத்தில் சென்று கேட்டபோது, குழாய்களை எல்லாம் வாங்கிவிட்டோம், அதற்குத் தேவையான மற்றச் சாமான்களையும் வாங்கிவிட்டோம். அவைகளை டிரான்ஸ்போர்ட் செய்து கொண்டு வருவதிலேதான் கால தாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இந்த அவல நிலை ஏன் இருக்கிறது என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் அந்த மன்றங்களிலே இருப்பார்களேயானால் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்பட வழியேயில்லை என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும் சற்று சிந்திக்க வேண்டும். எவ்வளவு சீக்கிரத்தில் தேர்தலைக் கொண்டு வர முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல இன்னொரு பிரச்னை. அதே மட்டப்பாறையில் பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரி ஒன்று வேண்டும் என்று 1973 ஆம் ஆண்டில் ரூ. 5,000-ம் கட்டி அந்தப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நானும் சட்டமன்றத்தில் எனக்கு நேரம் கிடைத்த போதெல்லாம் இது குறித்து எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களின் அறைக்குச் சென்று நேரில் இது பற்றி பேசியபோது, அதற்குரிய பணத்தை கட்டிவிடச் சொன்னார்கள். அவருடைய அறையிலேயே உட்கார்ந்துக் கொண்டு நானும் டிரங்கால் புக் பண்ணி, கமிஷனரிடம் சொல்லி, அந்தப் பணத்தை அன்றே கட்டுவதற்கு ஏற்பாடு செய்யச் சொன்னேன். அதற்கான பணமும் கட்டியாகிவிட்டது. அங்கே ஆஸ்பத்திரி கட்டவேண்டும் என்பதற்காக 5 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டது. அப்படி இருந்தும் கூட இதுவரையில் அங்கே ஆஸ்பத்திரி கட்டி முடிக்கப்படவில்லை. இவ்வளவும் ஏன்? அங்கே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பிரதிநிதிகள் இருந்தால் அந்த யூனியன் அதாவது அந்தக் கவுன்சில் இன்னும் யோசித்துக் கொண்டிருக்காது. அவர்கள் உங்களை கேட்க வேண்டிய அவசியம் கூட இல்லை. இன்-ஆன்டிசிபேஷன் ஆப் சாங்ஷன் என்று எழுதி அனுப்பி விட்டு, ஆஸ்பத்திரியைக் ஆரம்பித்து இருக்கலாம். அப்படி ஒரு அமைப்பு இல்லாத காரணத்தாலேதான், இந்த வேலைகள் இப்படிதாமதப்படுகின்றன. (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உள்ளாட்சி மன்ற தனி அதிகாரிகள் சட்ட மசோதாவில் ஆஸ்பத்திரியைப் பற்றி எல்லாம் சொல்லிக் கொண்டே போகிறீர்களே. சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: அதை சொல்லி முடித்துவிட்டு இந்த பாயின்ட்டிற்கு வந்துவிடுவேன். ஐ வில் கம் டு தி பாயின்ட். இப்படி வேலைகள் காலதாமதம் ஆவதைத் தவிர்க்க வேண்டும் என்றுதான் அந்த மன்றங்களின் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். தனி

அதிகாரிகளின் பதவியை அவர்களின் காலத்தை நீட்டித்துக்
கொண்டே போவதில் அர்த்தம் இல்லை என்று குறிப்பிட
கிறேன். காலையில் கூட காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்த ஒரு
பெரிய பிரமுகர் ஒருவர் இது சம்பந்தமாக வழக்கு மன்றத்திற்குச்
சென்றது பற்றி இந்த அவையிலே குறிப்பிடப்பட்டது (மணி
யடிக்கப் பெற்றது).

ஆகவே இவைகளையெல்லாம் தவிர்த்து, சீக்கிரத்தில் பெண்
களுக்கு கொடுக்க வேண்டிய ஒதுக்கீட்டையும், முன் உரிமையையும்
கொடுத்து, அரிசனங்களுக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்டதை
யும் முறையாக அளித்து, வெகு விரைவில் தேர்தலை நடத்த
வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்
துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1—20)

**திரு. சு. பாலன் :** பேரவைத்தலைவர் அவர்களே, இந்த
மாமன்றத்திலே ஊராட்சி, நகராட்சி, சென்னை மாநகராட்சி,
கோயம்புத்தூர் மாநகராட்சி போன்றவற்றின் தனி அதிகாரி
களின் பதவிக் காலத்தை நீடிக்கக்கூடாது என்றும் தேர்தலை
உடனடியாக நடத்தவேண்டும் என்றும் பல உறுப்பினர்கள்
கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். நான்
சென்னை மாநகராட்சியினைப் பற்றி ஒரு சில வார்த்தை
களைச் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.
சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு கிட்டத்
தட்ட 7,8 தனி அதிகாரிகள் மாறி மாறி பதவி ஏற்றிருக்கிறார்கள்.
சென்னை மாநகராட்சி கலைக்கப்படுகின்றபோது திரு.
டி. வி. அந்தோணி என்பவர் தனி அதிகாரியாக இருந்தார்.
அவர் இரண்டு ஆண்டுகள் 7 மாத காலம் பணி புரிந்தார்.
அவரால் சில நல்ல காரியங்களை ஆற்ற முடிந்தது. அ ன்
பின்னர் திரு. சி. தங்கராஜ் ஓராண்டுகாலம் இருந்தார். தனி
அதிகாரியாக வருபவர்கள் மாநகராட்சியின் மேயர் பதவியின்
அந்தஸ்தைப் பெற்றவர்கள். அந்த முறையிலே பார்க்கின்ற
போது சென்னை மாநகராட்சியிலே பணி புரிபவர்களுக்குத்
தனிச் சிறப்பு இருக்கின்றது. திரு. தங்கராஜ் அவர்கள்
ஓராண்டுகாலம்தான் பதவியில் இருக்கக்கூடிய நிலைமை
இருந்தது. எனவே அவரால் எந்தத் திட்டத்தையும் ஆற்ற
முடியவில்லை. அதன் பின்னர் திரு. ஆர். ஏ. சீத்தாராமதாஸ்
என்பவர் 10 மாத காலம்தான் இருந்தார். அவர் மாஸ் கான்
டாக்ட் ப்ராகிராம் என்ற திட்டத்தை உருவாக்கினார்.
மக்களை நேரடியாகச் சந்தித்து சட்டமன்ற உறுப்பினர்
களின் கருத்துக்களைப் பெற்று நல்ல முறையிலே பணி
யாற்றக்கூடிய நிலைமையை உண்டாக்கினார். ஆனால் அவரா
நீண்டகாலம் பதவியில் இருக்க முடியவில்லை. 10 மாத காலத்
திலேயே அவர் மாற்றப்பட்டு விட்டார்.



அதன் பின்னர் திரு. சி. ராமதாஸ் என்பவர் வந்தார். அவர்
இரண்டாண்டுகாலம் இருந்தார். அவர் 6 மாத காலத்திலே
நிலைமைகளை எல்லாம் தெரிந்து கொண்டு அதன் பிறகு திட்டங்
களை நல்லமுறையில் நிறைவேற்றினார். அதன் பின்னர் திரு.
டீ. ராமச்சந்திரன் என்பவர் வந்தார். அவர் 10 மாத காலம்
தான் இருந்தார். அதன் பின்னர் திரு. முருகராஜ் என்பவர்
வந்தார். அவர் ஓராண்டுகாலம் இருந்தார். இப்படி இவர்கள்
எல்லாம் இருந்து நல்ல திட்டங்களை நிறைவேற்றுகின்ற
நேரத்திலே மாற்றப்பட்டு விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை
சென்னை மாநகராட்சியினைப் பொறுத்த வரையில் இருக்
கின்றது. இப்போது கடைசியாக திரு. டி. டீ. சுந்தரராஜ்
பதவி ஏற்றிருக்கிறார். நாங்கள் அடிக்கடி தனி அதிகாரிகளை
யும் பார்க்கிறோம். சம்பந்தப்பட்ட மற்ற அதிகாரிகளையும்
பார்க்கிறோம். அவர்கள் எல்லாம் சென்னை மாநகராட்சி
யினைப் பொறுத்தவரையில் காரியங்கள் ஆற்றவேண்டும் என்
றால் போதிய வருவாய் இல்லை என்று சொல்கிறார்கள்.
குடிநீர் மூலம் கிடைக்கின்ற வருவாய் நிறுத்தப்பட்டுவிட்டது.
ஆகவே இங்கே மாண்புமிகு பெரியவர், வயதான அமைச்சர்
மாண்புமிகு திரு. எஸ். ராகவானந்தம் அவர்கள் பேசுகின்ற
போது மத்திய சர்க்கார் சில திட்டங்களை தீட்டுகின்றபோது
பணத்தையும் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொண்டார்கள். 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றவதற்கு
மத்திய அரசு அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டும் என்று
சொன்னார்கள். நான் இந்தச் சர்க்காரைக் கேட்டுக் கொள்
கிறேன். சென்னையைப் பொறுத்தவரையில் பல காரியங்
களை நிறைவேற்ற வேண்டும் என்றால் மாநகராட்சிக்குட்
போதிய நிதியினை இந்த அரசு அளிக்க வேண்டும். சென்னை
மாநகராட்சியின் நிதி நிலைமை சரியாக இல்லாததன் காரணத்
தால்தான் அவர்களால் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல்
இருக்கின்றது. ஆகவே அரசு உடனடியாக போதிய நிதியுதவி
களை மாநகராட்சிக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

தனி அதிகாரிகளை அடிக்கடி மாற்றாமல் அடுத்த தேர்தல்
நடைபெறுகிற வரையிலே இருக்கின்ற ஒரே அதிகாரியை மாற்
றாமல் வைத்துக்கொண்டு காரியங்களை ஆற்றுவதற்கு உதவி
யாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சென்னை மாநகரின் சூழ்நிலை எப்படி இருக்
கின்றது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதுபற்றி
அதிகாரிகளும் அறிவார்கள். அமைச்சரும் அறிவார். சென்
னையிலே படித்தவர்களின் கருத்தரங்கு நடைபெற்றிருக்கின்
றது. அதிலே சில காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

சென்னையை நோக்கி கிராமங்களிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்து குடியேறிக் கொண்டிருக்கிறார்கள். இது நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் இந்த சென்னைப் பெருநகர் மக்கள் வாழக்கூடிய இடமாக இருக்காது, இந்த நகரம் நகரமாகக் காட்சியளிக்காது, நரகமாகத் தான் காட்சியளிக்கும் என்ற கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள்.

மேலும் அதிகாரிகளை மாற்றாமல் மக்களுக்கு நன்மை அளிக்கின்ற வகையில் திட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய வகையில் உதவி புரிய வேண்டும். மேலும் அதிகப்படியான நிதியினை மாநகராட்சிக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்திற்கு உரிய மசோதா பற்றி ஒரே ஒரு கருத்தைத் மட்டும் இந்த மன்றத்திற்கு சொல்லி என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். இங்கே பஞ்சாயத்து தேர்தலை தள்ளிப்போட வேனடும் என்ற வகையில் வருகின்ற மசோதாவுக்கு சுட்டிக்காட்டப்படுகின்ற காரணம் தேர்தல் நடத்துவதற்கு உச்ச நீதி மன்றம் தடை விதித்து இருக்கின்றது என்று, ஒருவேளை உச்ச நீதி மன்றத்தில் இருக்கின்ற கேஸ் வாபஸ் ஆன பிறகும் அல்லது உச்ச நீதி மன்றத்திற்கு சென்று இருக்கிறவர் தன்னுடைய அப்பீலை வாபஸ் பெற்றுக் கொண்ட பிறகும் தேர்தல் நடைபெறுமா என்று எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. காரணம் ஒரு வேளை இந்த கேஸ் பைசல் ஆனபிறகும் கூட உயர்நீதி மன்றத்தில் தந்து இருக்கின்ற ஜட்ஜ்மெண்டைப் பார்க்கின்றபோது இட ஒதுக்கீடு செய்தற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறது அரசு செய்தது சரிதான் என்று சொல்லியிருக்கிறதே. தவிர இட ஒதுக்கீடு செய்த வழிமுறையை உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொள்ள வில்லை. எனவே மீண்டும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது. அப்படி இருக்கும்போது இட ஒதுக்கீடு செய்வது எல்லோருக்கும் திருப்தி அளிக்கும் வகையிலும் குறையற்ற முறையிலும் இந்த அரசு செய்து முடித்துவிடுமா என்று சந்தேகம் இருக்கிறது. ஒரு வேளை குறையற்ற முறையில் செய்தாலும் கூட இட ஒதுக்கீடு காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் இதை வழக்கு மன்றத்திற்கு எடுத்துச் செல்லலாம். அப்படி செல்வதாக இருந்தால் உயர்நீதிமன்றம் அதற்கு அடுத்தபடியாக உச்ச



நீதி மன்றம் இப்படி பல ஆண்டுகளை கடந்து வ்ரக்கூடிய நிலை ஏற்படுமோ என்று நான் எண்ணுகிறேன். அப்படி வருகின்றபோது எந்தப் பிரிவினருக்கு இட ஒதுக்கீடு செய்யவேண்டும் என்பதற்குசட்டம் கொண்டு வந்தோமோ அந்த எண்ணம் நிறைவேறாமல் பல ஆண்டுகள் போய்விடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. எனவே நான் கேட்டுக்கொள்வது எல்லாம் ஏற்கனவே திருத்தத்திற்கு முன்பு இருந்த சட்டத்தின் அடிப்படையில் தேர்தலை இப்போது நாம் முடித்துவிடுவோம். அடுத்த தேர்தலுக்கு இடைபட்ட கிடைக்கின்ற சமயத்தை பயன்படுத்திக்கொண்டு இட ஒதுக்கீடு பற்றிய பிரச்சனைகளை முழுமையாக தீர்த்து விடுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதற்கு பிறகு பஞ்சாயத்து தேர்தலை வைத்துக் கொள்வோம் என்ற நிலை இல்லாமல் ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையில் பஞ்சாயத்து தேர்தலை நடத்தி முடிக்கும்படி நான் இந்த அரசை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

ஹைகோர்ட்டில் அல்லது உச்ச நீதிமன்றத்தில் நகராட்சி தேர்தலைப் பொறுத்த அளவிலும் மாநகராட்சி தேர்தலுக்கு தடை கிடையாது. எனவே தடை இல்லாத மாநகராட்சி தேர்தல்களை நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் நகராட்சியைப் பொறுத்த அளவில் அரசு சொல்லுகின்ற காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இடம் விஸ்தரிக்கப்படுகிறது எனவே வார்டுகள் மாற்றி அமைக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஏனைய அமைப்புகளுக்கு தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். எத்தகைய அதிகாரிகளை வைத்து எவ்வளவு நல்ல ஆட்சியாக இருந்தாலும் நிச்சயமாக அதை சிறந்த ஆட்சியாக யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை உணர்ந்து உடனடியாக உள்ளாட்சிக்களுக்கு தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்து கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் 6 மசோதாக்கள் கொண்டுவரப்பட்டு 6 மசோதாக்களின் மீதும் எல்லா கட்சியையும் சேர்ந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர்களும் விரிவாகவும் , விளக்கமாகவும் பஞ்சாயத்து தேர்தல்கள், நகராட்சி, மாநகராட்சி தேர்தல்களை பற்றி பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே 4-ம் தேதி நடந்த விவாதத்தின் போதும் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டு அதற்குப் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதிகமான நேரத்தை எடுத்துக் கொள்ளாமல் தேர்தலை நடத்துவதற்கு உண்டான நிலைமைகளை மட்டும் நான் இங்கே எடுத்துச் சொல்லி உடனடியாக முடித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றங்களுக்கு உறுப்பினர்கள்-அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தனித் தொகுதி வருவதற்கு முன்னாலே, சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னாலே—ஆகியோர்களுக்கு தனித் தொகுதி களைக் கொடுத்த பெருமையைப் பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் பெண்களுக்கும் இடம் ஒதுக்கியதிலே யாருக்கும் வித்தியாசம் கிடையாது. ஆனால் இட ஒதுக்கீடு அரசாங்கம் செய்தது எந்த முறையில் செய்தது எப்படிச் செய்தது என்று அறிவிக்காத ஒரே காரணம் தான் இந்த நாட்டு மக்களிடத்திலே சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது. தனிப்பட்ட முறையிலே இருந்தாலும் கட்சிக்காரராக இருந்தாலும் அவர்களுக்கு கோர்ட்டு முறையிலே அணுகுவதற்கு வாய்ப்பு சட்டப்படி உரிமை இருக்கிறது. நான் அரசாங்கத்தை கேட்டுக் கொள்வது எல்லாம் பெண்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் நீங்கள் எந்த வகையிலே இடம் ஒதுக்கினீர்கள்? அந்த முறையற்ற செயலால் கோர்ட்டிற்கு போக வேண்டிய அவல நிலை ஏற்பட்டதே தவிர, இதற்கு அரசாங்கம்தான் பொறுப்பே தவிர, தனிப்பட்ட மனிதரையோ அல்லது ஒரு கட்சியையோ சொல்வது சரியல்ல, அதற்கு சரியான பதிலை அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலே இந்த வழக்குகள் எல்லாம் பதிவாகி அதன் மீது தீர்ப்புகள் கூறப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த அந்த புரட்சிகரமான சட்டம் செல்லும் என்ற தீர்ப்பினை தான் உயர்நீதிமன்றம் அளித்திருக்கிறது. பெண்களுக்கென்று 15 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது செல்லும் ; ஆதிதிராவிடர், மலைவாழ் மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கீடு செய்தது செல்லும் என்ற தீர்ப்பினை கொடுத்தார்கள். இதிலே எந்தெந்த ஒன்றியங்கள், யார் யாருக்கு ஒதுக்குவது என்பதிலே தான் சில சிக்கல்கள் ஏற்பட்டு, அதற்கும்கூட சில வழிமுறைகளை இன்றைக்கு உயர்நீதிமன்றம் நமக்கு கொடுத்திருக்கிறது. ஆகவே அந்த வழிமுறைகளின் அடிப்படையில் ஒதுக்கீடுகளை இனிமேல் நாம் செய்ய இருக்கிறோம். ஆகவே நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் தான் இந்த ஒதுக்கீடுகளை செய்யவிருக்கிறோம். அதிலே மாறுதல் இல்லை. ஆகவே இன்று உச்சநீதிமன்றத்திற்கு போன காரணத்தினால் தான் உச்சநீதி மன்றத்தினுடைய தீர்ப்பினை எதிர்பார்க்க வேண்டிய ஒரு சூழ்நிலை, கட்டாயம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நகராட்சி, மாநகராட்சி தேர்தலைப் பொறுத்தவரையில் வருகிற 13—3—1983 அன்று காலை 10-30 மணிக்கு அனைத்துக் கட்சிகளின் தலவர்களின் கூட்டத்தில் முடிவெடுக்க இருக்கிறோம்.



அந்த முடிவிற்கேற்ப தேர்தலை நடத்த இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆறு மசோதாக்களின் மீது உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் பதில் சொல்லமுடியாத நிலையில் இருக்கிறேன். ஆனாலும் மானியம் வருகிற நேரத்தில் இவைகளுக்கு பதில் சொல்வேன் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த ஆறு மசோதாக்களையும் தனித் தனியே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

### ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

### பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

''பிரிவு 2-ல், 'நான்கு ஆண்டு' என்னும் சொற்களுக்குப் பதிலாக 'மூன்று ஆண்டுகள் ஒன்பது திங்கள்' என்ற சொற்களைச் சேர்க்கவும்''.

திருத்தம் முறையே வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்குப் விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

குறிப்பாக் ஊராட்சி மன்ற தேர்தல்கள், பஞ்சாயத்து
தேர்தல்களை பொறுத்த அளவில் உச்ச நீதிமன்றத்தில் மேல்
முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டு அது அந்த வழக்கு மன்
றத்தில் இருக்கின்ற நிலை காரணமாக அந்த தேர்தலை நடத்த
முடியாத நிலையில் இருக்கிறோம். கடந்த 26—11—82-ல்
நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இந்த
நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி உடனடியாக அந்த
வழக்கை எவ்வளவு சீக்கிரம் நடைமுறைப்படுத்த முடியுமோ
அவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்தி அந்த வழக்கின்
மூலமாக தீர்ப்பினை பெறமுடியுமோ அதற்குரிய நடவடிக்கை
களை எடுக்க வேண்டும் என்று அனைத்துக் கட்சித் தலைவர்
களும் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் கேட்டுக் கொண்ட
அடிப்படையில் கடந்த 15—12—82 அன்று இதை உடனடியாக
விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற எக்ஸ்
பெடிஷன் பெட்டிஷன் அங்கே தாக்கல் செய்து இருக்கிறோம்.
ஆகவே உடனடியாக வழக்கு மன்றத்திலும் அதை எடுத்துக்
கொண்டு சீக்கிரமாக தீர்ப்பு உரை கூறுவார்கள் என்று நாம் எதிர்
பார்க்கிறோம். ஆகவே பஞ்சாயத்து தேர்தல்களைப் பொறுத்த
அளவில் மேல் முறையீடு மீது என்ன தீர்ப்பினை, வழிமுறைகளை
அவர்கள் சொல்கிறார்களோ அந்த தீர்ப்புகளின் அடிப்படை
யில் எவ்வளவு சீக்கிரமாக அதை நடைமுறைப் படுத்த
முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்தப்படும்
என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சி, மாநகராட்சி தேர்தல்களை பொறுத்த அளவில் 1—1—83 அன்று 18 வயது வந்தவர்களை எல்லாம் சேர்த்து மீண்டும் வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டிய நிலை இருக்கிறது. நமக்கு அந்த கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1—30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆகவே இவை
களையெல்லாம் தயார் செய்ய வேண்டுமென்று
சொன்னால் ஏறத்தாழ இரண்டு மாதங்களாவது பிடிக்கும்
என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டு மாதங்கள்
வாக்காளர்கள் பட்டியல்களைத் தயார் செய்வதற்கு எடுத்துக்
கொண்டு அதே நேரத்திலே இருக்கக்கூடிய வார்டுகளைப் பிரித்து,
அதன் மூலம் வார்டுகளின் எண்ணிக்கையை கூட்டுவதா குறைப்
பதா என்ற நிலைமைகளையெல்லாம் பரிசீலிப்பதாக இருக்கி
றோம். இதையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு நக
ராட்சிகள், மாநகராட்சிகள் தேர்தல்களை எப்படி வைத்துக்
கொள்ளலாம், எந்தத் தேதியில் வைத்துக் கொள்ளலாம் என்று
முடிவு எடுக்க அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை
வருகின்ற 13—3—1983 அன்று, அதுவும் இங்கே செயலகத்திலே



பத்தாவது மாடியிலே காலை பத்தரை மணிக்கு அந்தக் கூட்டம் நடைபெற இருக்கிறது. ஆகவே அனைத்துக் கட்சித் தலைவர்களும்கூட அந்தக் கூட்டத்திலே என்ன முடிவுகளை எடுக்கிறார்களோ அந்த முடிவுகளுக்கு ஒப்ப நகராட்சிகள் மாநகராட்சிகள் தேர்தல்களை எவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப் படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்த இருக்கிறோம். ஆகவே இந்தத் தேர்தல்களை தள்ளிக் போடவேண்டுமென்றோ அல்லது நடத்துவதற்கு பயம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றோ யாராவது கனவு கண்டால் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன், கடல் எல்லாம் வற்றி கடலில் இருக்கிற மீனை கருவாடாக்கித் தின்ன வேண்டும் என்று யாராவது கனவு கண்டால் அவர்கள் குடல் வற்றி சாவதைப் தவிர வேறு வழியில்லை. ஆகவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் எந்தத் தேர்தலுக்கும் நாங்கள் பயந்தவர்கள் அல்ல, தேர்தலைக் கண்டு பயந்து போனவர்கள் எல்லாம் யார் யார் எந்தப் பக்கத்திலே இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜசேகரன் அவர்கள் கூடச் சொன்னார்கள். நான் ஊராட்சி மன்றத்திற்குச் தலைவராக வேண்டுமென்று நினைக்கிறேன் என்றும் ஒன்றியத்திற்குத் தலைவராக வரவேண்டுமென்று நினைக்கிறேன் என்றும் நகராட்சியினுடைய தலைவரவாக வரவேண்டுமென்று நினைக்கிறேன் என்றும் மாநகராட்சியினுடைய மேயராக வரவேண்டுமென்று நினைக்கிறேன் என்றும் எல்லாம் சொல்லி கோமாளிபட்டி, கோணங்கிப்பட்டி போன்றவற்றை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன், வேண்டுமானால் அடுக்குமொழிக்கு கோமாளிபட்டியும் கோவையும் ஒன்றாக தெரியுமே தவிர எங்களுக்கு அந்த எண்ணம் கிஞ்சித்தும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற முஸ்தீபு செய்து உடனடியாகத் தேர்தலுக்குண்டான தேதிகளைக் குறிப்பிட்ட நேரத்திலே தான் இந்திரா காங்கிரஸ் கட்சிதான் இதற்குத்தடை பெறுகின்ற முயற்சியிலே ஈடுபட்டு இன்று மேல்முறையீடு செய்திருக்கிறது என்பதை நான் விவரமாகவும் விளக்கமாகவும் சொல்லியிருக்கிறேன் (குறுக்கீடு). உண்மைகளைத்தான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

திரு. வே. இராஜசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலிருந்தே அமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர்களுக்கும் பெண்களுக்கும் கொடுத்த தேர்தல் தனித்தொகுதி முறையைப் பற்றி வெங்கிடாசலம்பிள்ளை என்ற காங்கிரஸ்காரர் ஆட்சேபித்து உயர்நீதி மன்றத்திற்கு, உச்சநீதி மன்றத்திற்குப் போகிறார் என்று குற்றச்சாட்டைச் சொல்லி, காங்கிரஸ் காங்கிரஸ் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். இந்திய நாட்டினுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியாவிலே இருக்கக்கூடிய 21 மாநில

[1983 மார்ச் 7

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1983) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 20/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

''பிரி 2-ல், 'ஆறு ஆண்டு எட்டு திங்கள்' என்ற சொற்களுக்குப் பதிலாக 'ஆறு ஆண்டுகள் நான்கு திங்கள்' என்ற சொற்களைச் சேர்க்கவும்.

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, தோல்வியுற்றது.



1983 மார்ச் 7]

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 201/983) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 1-40)

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன். :

''பிரிவு 2-ல், 'ஆறு ஆண்டு இரண்டு திங்கள்'' என்ற சொற்களுக்குப் பதிலாக, ''ஆறு ஆண்டுகள்' என்ற சொற்களைச் சேர்க்கவும்''.

திருத்தம் முறையே மொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்குப் விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

“தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண். 21/1983) நிறைவேற்றப் பெற வேண்டும்.”

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1983.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம் )திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 22/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.,‘

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

“பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.”

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

பிரிவு 2ல், உட்பிரிவு [ ] மற்றும் [ii]ல், “ஏழு ஆண்டு ஒன்பது திங்கள் காலத்திற்கு” என்ற சொற்களுக்குப் பதிலாக “ஏழு ஆண்டுகள்” என்ற சொற்களைச் சேர்க்கவும்.

திருத்தம் முறையே வழி மொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

“தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம் திருத்தச்சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 22/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்.”

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

“1983-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 23/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.”

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

''பிரிவு 2ல், ''ஒன்பது ஆண்டுகள் ஆறு திங்களுக்குள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''எட்டு ஆண்டுகள் ஒன்பது திங்கள்'' என்ற சொற்களைச் சேர்க்கவும்.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:,

''1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 23/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.



பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரியபகுதி யாக ஆக்கப்பெற்ற வேண்டும்.''

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

''பிரிவு 2-ல் 'மூன்று ஆண்டு காலம்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'இரண்டு ஆண்டுகள் மூன்று திங்கள்' என்ற சொற்களைச் சேர்க்கவும்.''

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1983 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1983) நிறைவேற்றப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

---

* 1983-ம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றிவிடுகிறார்கள். அத
னால்தான் நிலச்சுவான்தாரர்கள் பயன் அடைகிறார்கள்
அங்கே சாகுபடி செய்கின்ற குத்தகையாளர்கள் உழுது கொண்டு
இருப்பவர்கள் இதனால் நஷ்டம் அடைகிறார்கள். அங்கே
அப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் இருந்து வருகின்றன.
விவசாயிகளுக்கு நீங்கள் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று இந்த எனவே
நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் தற்போது
பாதிக்கு மேற்பட்ட கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட
கிராமங்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படிப் பாக்
கின்றபோது இந்தச் சட்டம் முழுமையாக தஞ்சை மாவட்டத்
திற்குப் பொருந்துமா என்ற ஐயப்பாடும் எங்களுக்கு எல்லாம்
இருக்கின்றகாரணத்தினால்தான் தஞ்சை மாவட்டத்தை டெல்டா
ஏரியா, நான்-டெல்டா ஏரியா என்று பிரிக்காமல், தஞ்சை
மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவித்து
இந்தச் சட்டத்தை நிறைவேற்றி குத்தகை பாக்கியை அடியோடு
ரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்
கொள்கிறேன். அதேபோன்று இன்னும் (குறுக்கீடு) கிராமங்
களில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்ய
வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.
அதேபோல் இனாம் கிராமம் ரயத்துவாரி கிராமமாக மாற்றப்
பட்டும் அப்படிப்பட்ட நிலங்கள் உரியவர்களுக்கு இதனால் ஒப்
படை செய்யப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக கும்பகோணம்
வட்டத்தில் சீனிவாச நல்லூர் என்ற கிராமம் இனாம் கிராமமாக
இருந்தது ரயத்துவரி கிராமமாக மாற்றப்பட்டது. மாற்றப்
பட்டதற்குப் பிறகும்கூட நில சாகுபடியாளர்களிடம் அந்த
நிலத்தை ஒப்படைக்க முடியவில்லை. இன்னும் அந்த நிலங்கள்
மிராசுதார்களின் கையிலே இருக்கின்றன. இதையும் கவனிக்க
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டம்
ஒரு தற்காலிகப் பாதுகாப்புதான். எனவே நிரந்தரப் பாதுகாப்பு
அளிக்கின்ற வகையில் குத்தகை பாக்கியை அடியோடு தள்ளுபடி
செய்து சாகுபடியாளர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று
கேட்டுக்கொண்டு நான் அமர்கிறேன். வணக்கம்.

*திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, குத்தகை விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக, அவர்
களை நிலத்திலிருந்து வெளியேற்றுவதைத் தடுக்கின்ற வகையில்
உள்ள இந்த மசோதாவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பில் ஆதரிக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு
வந்து தஞ்சை மாவட்டத்திலேயும் தமிழகம் முழுவதும் பாதிக்கக்
கூடிய குத்தகை விவசாயிகளைப்பாதுகாக்க வேண்டுமென்று நாங்
கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். அந்த வகையிலே இந்
தச் சட்டம் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே
இந்தச் சட்டத்தை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்



சார்பிலே ஆதரிக்கிறேன். முன்னாலே அளிக்கப்பட்ட சலுகை
கள் முழுவதும் அனைத்து விவசாயிகளுக்கும் போய்ச் சேர
வில்லை. அதிலே பல்வேறு சங்கடங்கள், கஷ்டங்கள் இருந்த
காரணத்தாலே, அவைகளைப் பெறமுடியவில்லை. இதனால்
பல்வேறு விவசாயிகள் நிலத்திலேயிருந்து வெளியேற்றப்பட்டிருக்
கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நிலத்தைத் திரும்ப பெறக்
கூடிய முறையிலே சட்டத் திருத்தம் அமைய வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டம் 1984 ஜனவரி
15ஆம் தேதி வரையிலும் அந்த விவசாயிகளை நிலத்திலேயிருந்து
வெளியேற்றக்கூடாது என்று இருக்கிறது. அதை 6 மாத காலம்
மேலும் நீட்டித்து இந்தச் சட்டத்தை கொண்டுவரவேண்டும்.

அதேபோல் 1982 ஜூலை 1 ஆம் தேதியில்
இருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்குத்தான் பாதுகாப்பு அளிக்
கின்ற வகையில் அவர்கள் நிலத்தைத்திருப்பிக் கொடுக்கலாம் என்
றிருக்கிறது. அதற்கு முன்னாலே நூற்றுக்கணக்கான ஆயிரக்
கணக்கான விவசாயிகள் குத்தகை நிலத்திலேயிருந்து வெளியேற்
றப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்தச் சட்டத்தைப்
பொருந்துகின்ற வகையில் அவர்களுக்கும் அந்த நிலத்தை திருப்பி
அளிக்க வேண்டுமென்ற வகையில் அமைக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். இவைகள் மட்டும் போதாது.
இப்போது தஞ்சை மாவட்டம் முழுவதும் வறட்சியால்
பாதிக்கப்பட்டிருக்கிற குத்தகை விவசாயிகளுக்கும் இந்த ஆண்டு
முழுவதும் குத்தகை தள்ளுபடி செய்யவேண்டும். இதற்கு முன்
னாலே பழைய பாக்கிக்காக, இயற்கையின் காரண
மாக பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக அவர்கள் ஏராளமாக
பாக்கி கட்ட வேண்டியிருக்கிறது. அந்த பாக்கியை எல்லாம்
ரத்து செய்து அந்த குத்தகை விவசாயிகளைப் பாதுகாக்க
வேண்டும். குத்தகை பாக்கிக்காக எந்தக் காரணத்தைக் கொண்
டும் குத்தகை விவசாயிகளை நிலத்திலேயிருந்து வெளியேற்று
வதைத் தடுக்கவேண்டும். 75:25 என்ற வாரம் முறை இன்று இருக்
கிறது. கோவில் நிலங்களில் எல்லாம் சாகுபடி செய்கிறவர்கள்
அறங்காவலர்களிடம் சாகுபடி செய்யும்போது அந்த நெல்லை
அளக்க இன்னும் கோவில் அதிகாரிகளுக்கு உத்தரவு வரவில்லை
என்றுகூட சொல்லப்படுகிறது. இருந்தாலும் 75:25 என்ற வார
அடிப்படையில், களத்து மேட்டுகளிலே அவர்களிடம் அந்த வாரங்
களை நிலச் சொந்தக்காரர்கள் வாங்கிப் போகின்ற நிலையிலே
அந்த சட்டங்கள் வகைசெய்ய வேண்டும்.

குத்தகை விவசாயிகளுக்கு, அந்த குத்தகை விவசாயிகள் சாகு
படி செய்கின்ற நிலங்கள் அத்தனையும் அவர்களுக்கே உரிமை
யாக்கக்கூடிய வகையிலே நிலச் சீர்திருத்த சட்டத்தில் போது
மான திருத்தங்களைக் கொண்டுவந்து இந்த நிலச் சீர்திருத்த
சட்டத்தை, உடனடியாகக் கொண்டுவரவேண்டும். இன்றைக்கு
கிராமப் புறங்களிலே வேலையில்லாத வறுமை நிலையில்
வாடக்கூடிய ..... (குறுக்கீடு)

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, 1983 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் வெளி யேற்றப்படுவதனின்றும் பாதுகாப்பு அளிக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களைச் கூற விரும்பு கிறேன். 1.7.82 முதல் 15.1.84 வரையில் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படும் என்ற குறிப்பு இங்கே காணப்படுகிறது. நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். 1.7.82-க்கு முன் னால் வெளியேற்றப்பட்ட விவசாயிகளுக்கும் இதில் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். அவர்களுக்கும் அப்படிப் பாதுகாப்பு அளித்தால்தான், நீங்களே ஒப்புக்கொண்டு இருக்கிறீர்கள், 1980-81 ஆம் ஆண்டில் புயல், வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டிருக் கிறது என்பதையும் 1981-82ஆம் ஆண்டிலும், 1982-83 ஆம் ஆண் டிலும் பருவ மழை தவறியதால் வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நீங்கள் ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே நீங்கள் அறிவித்திருக்கின்றபடி 1.7.82க்கு முன்னாலும் வெளி யேற்றப்பட்ட விவசாயிகளுக்கும் இந்தச் சட்டத்தின் மூலம் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டம், பயிரிடும் சாகுபடியாளர்களுக்கு ஒரு நிரந்தர உதவியாகவோ, நிவாரணமாகவோ அமையாது. காரணம், அள விற்கும் அதிகமான சுமையை அந்த விவசாயிகள்மீது ஏற்றி வைத்திருக்கிறீர்கள். அவர்களுடைய குத்தகைப் பாக்கியைத் தள்ளிப்போடுவதால் மீண்டும் அந்தக் கடன் சுமை அதிகரிக்குமே தவிர குறையாது. எனவே, நிரந்தர நிவாரணமாக இந்தக் குத்தகை பாக்கியை தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற கொள்கையின்படி திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்த பொழுது ஒரு திட்டத்தைத் தீட்டி வந்தது உங்களுக்குத் தெரியும். அதே கருத்தையொட்டித்தான் சில நாட்களுக்கு முன்னால் சிருங் கேரி மடத்தின் ஜீயர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக் கிறார்கள். சிருங்கேரி மடத்தின் ஜீயர் அந்தக் கருத்தைச் சொல்லி யிருப்பதால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நான் கருது கிறேன். உழுபவனுக்கே அந்த நிலத்தைச் சொந்தமாக ஆக்க லாம், அப்படிச் சொந்தமாக்குவதன் மூலமாகத் தற்பொழுது கிடைக்கின்ற அந்த விலை மதிப்பீட்டின் மூலமாக தற்பொழுது கிடைக்கின்ற குத்தகையைவிட இரண்டு மடங்கு அதிகமாக வங்கி யின் மூலம் வட்டி கிடைக்கும்; அந்த நிதியிலிருந்து மடாலயங் களுக்கும், அறநிலையங்களுக்கும், கோயில்களுக்கும் தேவையான காரியங்களை அதிக அளவில் செய்ய முடியும், அங்கே பணி யாற்றுகின்ற சிப்பந்திகளுக்கு இரண்டு மடங்கு ஊதியம்கூட வழங்க முடியும் என்று சிருங்கேரி ஜீயர் அவர்கள் சில நாட்களுக்கு முன் ஒரு அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்கள். ஆகவே, அந்தக் கொள்கையின் அடிப்படையிலே, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற வகையில் அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குத்தகைதாரர்கள் பாது காப்பு என்பது பற்றிய சட்டம். இதிலே நிலம் உழுபவர்களுக்கே சொந்தமாக்குவது என்று பிரச்னையை ஆரம்பித்தால் எப் பொழுது முடிப்பது?

**திரு. செ. இராமலிங்கம்:** அவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன்.

• தஞ்சை மாவட்டத்தை பொறுத்தவரையிலே ஏறத்தாழ 80 சதவீத நிலங்கள் அறநிலையங்களுக்கும், மடாலயங்களுக்கும் கோவில்களுக்கும் சொந்தமானவை.

(பிற்பகல் 1—50)

எனவே குத்தகை உடமையாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நிவாரணம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அறிவித்ததுபோல குத்தகை பாக்கியை உடனடியாகத் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும். சிறிய நிலச்சுவான்தாரர்களுக்கு நீங்கள் கிஸ்தியை தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் இருவருமே ஆட்சே பிக்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சையைப் பொறுத்தவரையில் மாவட்டம் முழுவதும் வறட்சி நிவாரணப் பணியாக 4 ஆயிரம் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும் என்ற உறுதியை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் குத்தகை நிலங்களில் அந்த குழாய்க் கிணறுகளை இறக்க முடியாது. ஏற்கெனவே பினாமியாக சொந்தமாக நிலம் வைத்து இருப்பவர்கள் மட்டும் தான் அந்தக் குழாய் கிணற்றுத்திட்டத் தின் கீழ் கடன் வசதியைப் பெறமுடியும். எனவே சிறிய சாகு படியாளர்கள், சிறு குத்தகைதாரர்கள் பயன் பெறத்தக்க வகை யில் கூட்டுறவு வங்கிகள் மூலமாக அவர்கள் கடன் பெறுவதற்கு இந்த 4 ஆயிரம் குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் குத்தகை சாகுபடியாளர்கள் நிலத்திலேயும் இந்தக் குழாய்க் கிணறுகளை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பயிரிடும் சாகுபடியாளர்களை வெளியேற்றுகின்ற வகையில் தற்போது நிலச்சுவான்தாரர்கள் அல்லது மடாலயங் களைச் சேர்ந்தவர்கள் ஒரு குறுக்குவழியைக் கையாண்டு கொண் டிருக்கிறார்கள். பயிரிடுகின்ற குத்தகைதாரர்களை அங்கே யிருந்து வெளியேற்றவேண்டுமானால் அரசாங்கத்திற்கு அதை ஆர்ஜிதம் செய்யச்சொல்லுகிறார்கள். அந்த நிலத்தை தாழ்த்தப்பட்டவர்களுக்கு குடியிருப்புப் பகுதிஅமைக்க நான் தரு கிறேன், அங்கே நீங்கள் ஆர்ஜிதம் செய்து கொள்ளுங்கள் என்று சொன்னால், அங்கே சாகுபடியாளர்களாக இருக்கின்றவர்களுக் கும் எந்தவிதமான நிவாரணமும் அல்லது நஷ்ட ஈடும் இல்லாமல்

தள்ளுபடி செய்திருக்கின்றது. தண்ணீர் வரியை தள்ளுபடி செய்திருக்கிறது. ஆனால் குத்தகையை மட்டும் பாக்கி போட்டு பின்னால் செலுத்த வேண்டும் என்று சொல்வதிலே நியாயம் இருக்க முடியாது.

(பிற்பகல் 2.00)

ஆகவே, தொடர்ந்து இந்த வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஏற்கனவே தொடர்ந்து குத்தகை பாக்கி இருந்து, அரசு அறிவித்திருக்கக்கூடிய சலுகைகளைக்கூட பயன்படுத்தி செலுத்த முடியாத நிலையில் இருக்கும் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் முறையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறையில், அந்தக் குத்தகையைத் தள்ளுபடி செய்து, முழுமையான பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் சட்டம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டத்தை வரவேற்று அமர்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய முறையில் கொண்டுவந்து இருக்கக்கூடிய இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இதிலே அமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். சாதாரணமாக கைம்பெண்கள், அனாதைக் குழந்தைகள், அங்கஹீனமுடையவர்கள் 2 ஏக்கர், 1 ஏக்கர், 3 ஏக்கர் என்று வைத்துக்கொண்டு அவர்கள் குத்தகைக்கு நிலத்தை விட்டிருக்கின்றனர். அவர்களுக்கு வரவேண்டிய குத்தகையையும் நாம் ரத்து செய்து விட்டால், அவர்களுக்கு வேறு எந்தவிதமான வருமானமும் இல்லாத நிலையில் மிகவும் கஷ்டப்படுவார்கள். இந்தத் தள்ளுபடி என்பதை நாம் அதிகமான அளவில் நிலம் வைத்திருப்பவர்களுக்கு கொண்டு வரலாம். அம்மாதிரியான நிலச்சுவான்தார்கள் நாம் தடுப்பதற்காக சட்டம் கொண்டு வரலாம். அதை நாம் வரவேற்கிறோம். ஆனால், மிகக் குறைந்த நிலம் வைத்திருக்கும் விதவைகள்,அங்கஹீனமானவர்கள், அனாதைக் குழந்தைகள் ஆகியோர்களையும் அவர்களுக்கு வரவேண்டிய குத்தகையையும் நிலச்சுவான்தார் என்று பேனர் படுத்தி— தள்ளுபடி செய்தால், அந்த மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதால், அவர்களுக்கு எல்லாம் விதிவிலக்கு அளித்து, சட்டம் கொண்டுவரவேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு. உறுப்பினர்கள் எல்லாம் இந்தச் சட்டத்தைப் பொதுவாக வரவேற்று இருக்கிறார்கள். பொதுவாக என்று சொல்வதை விட, சிறப்பாக வரவேற்று இருக்கிறார்கள். சிறப்பாக வரவேற்று இருக்கிறார்களே தவிர, இந்தச் சட்ட முன்வடிவின் மீதும் ஏதாவது சொல்ல



வேண்டும் என்பதாலும், அதில் சிலவற்றை இந்த அரசு செய்யும் என்பதாலும், இந்த அரசின்மீது அவர்கள் கொண்டிருக்கின்ற அசைக்க முடியாத நம்பிக்கை காரணமாகவும் இங்கே சில நல்ல கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அதேபோல் அருமைசட்டமன்றஉறுப்பினர்திரு. இராமலிங்கம் அவர்கள் சொல்கிறபோது இடையிடையே திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். யாராவது நாட்டிலே திராவிட முன்னேற்ற கழகத்தை மறந்து விடப்போகிறார்களே என்று இடையிடையே திராவிட முன்னேற்றக் கழகம் இதைச் செய்தது, அதைச் செய்தது என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அவற்றையெல்லாம் செய்கிறபோது நாங்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தோம் என்பதையும், அப்போது செய்யப்பட்ட நல்ல காரியங்களிலே திரு. இராமலிங்கத்திற்கு இருப்பதைவிட—கூட அல்ல என்றாலும் குறைவாக எனக்கோ மற்றவர்களுக்கோ அக்கறை இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல நன்மைகளை திராவிட முன்னேற்றக் கழகம் செய்தது என்று சொல்கிற போது நான் சொல்லியிருக்கிறேன், இப்போது கொண்டுவந்தது அதைவிடச் சீர்திருத்தமானது என்று. இதற்கு முன்னாலே கூட அதைப்பற்றி நான் பேசியிருக்கிறேன். அதற்கு பிறகும் அதை இங்கே திருப்பிச் சொல்லி இருக்கிறார் என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப்பின்னால் வந்த அரசு அதைவிடச் சீர்திருத்தமாக எதையும் செய்யவில்லை என்ற எண்ணம் நாட்டு மக்கள் மனதில் உருவாக்குவதற்கு அது உதவலாம் என்று மாண்புமிகு உறுப்பினர்திரு. இராமலிங்கம் முயற்சிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், இப்படி குத்தகைதாரர்களை வெளியேற்றுவதனின்றும் பாதுகாக்கும் சட்டம் 1955-லேயே கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு படிப்படியாக அதிலே சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் கொண்டு வந்த சட்டம் கூட முதல் சட்டம் 2–4–1968-ல் கொண்டு வரப்பட்டது. அதிலே என்ன சொல்லப்பட்டது என்றால், இதற்கு முன்னாலே எவ்வளவு பாக்கி இருந்ததோ அந்த எல்லா பாக்கிகளையும் நான்கு ஆண்டுகளில் தவணைகளில் செலுத்தவேண்டும் என்பதாகும். அதற்கு முன்னாலே கொண்டுவரப்பட்ட சட்டத்தை விட இந்த 1968 லே கொண்டு வரப்பட்ட சட்டம் சிறப்பானதாக, சீர்திருத்தமானதாக இருந்தது, அதைவிட மிகச் சீர்திருத்தமானதாக, வேண்டும் என்று அடிப்படையில் 1972 ல் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. 1381 ம் பசலிக்கு குத்தகை கட்டிவிட்டால் மற்ற பாக்கிகளை, அதாவது 1972 க்கு முன்னாலே உள்ள பாக்கிகளையெல்லாம் கட்டியதாக வைத்துக் கொள்வோம் என்று கொண்டு வரப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்டத்தில் மட்டும் பேசுங்கள். மற்றவைகள் எல்லாம் இந்தப் பசி நேரத் தில் பேசினால் எடுக்காது. போதும், நல்ல பாயின்ட் எல்லாம் சொல்லியாகி விட்டது.

திரு எம். செல்லமுத்து : இன்று குத்தகை பதிவு கோரி நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான மனுக்கள் தாசில்தார் அலு வலங்களில் தேங்கிக் கிடக்கின்றன. அங்கே கேட்டால் எங் களுக்கு இருக்கின்ற வேலையிலே நாங்கள் என்ன செய்ய முடியும் என்று அவர்கள் சொல்கிறார்கள். அதற்கான ஊழியர்களை எல்லாம் நியமித்து, அந்த குத்தகை விவசாயிகளை கிராமத்தில் போய் ஸ்தல விசாரணை செய்து, குத்தகை விவசாயிகளை யெல்லாம் பதிவு செய்து, இந்த குத்தகை விவசாயிகளைப் பாது காக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உரிமையாளர்களுக்கு கொடுக்க வேண்டிய குத்தகை தொடர்பாக பாக்கி வைத்திருக்கின்ற பயிரிடும் குத்தகைதாரர்களை வெளியேற்றுவதிலிருந்து தடுத்து நிறுத்து வதற்கும், அவர்களைப் பாதுகாப்பதற்கும் கொண்டு வந் திருக்கக்கூடிய இந்த சட்ட முன்வடிவை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன்.

தமிழகத்திலே ஒரு கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், அந்த வறட்சியின் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே சாகுபடி செய்யக் கூடிய விவசாயிகளை, குத்தகைதாரர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுவதிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று இந்த சட்டமன்றத்திலும், வெளியிலேயும் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்ற கட்சிகளும் பாதுகாக்க வேண்டும் என்று கோரியதை ஒட்டி அமைச்சரவர்கள் இந்த சட்டத்தைக் கொண்டுவந்திருப்பதை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பாராட்டுகிறோம், வரவேற் கிறோம்.

அதே நேரத்திலே சில குறிப்பிட்ட விஷயங்களை அமைச்ச ருடைய கவனத்திற்கு கொண்டுவ்ர விரும்புகிறேன். ஏற்கனவே முந்தைய ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டுகள் குத்தகை பாக்கி இருந்த நேரத்தில், ஒரு ஆண்டு குத்தகையை செலுத்தினால் அவர்களுக்கு முழுமையாக அந்த பாக்கியிலிருந்து விலக்களிக்கப் படும் என்றும், அதற்குப் பிறகு 1980–81 ஆம் ஆண்டுகளில் ஏற்கனவே புயல் வறட்சியினால் பாதிக்கப்பட்ட நேரத்தில், அந்த விவசாயிகள் தவணையாக அவர்கள் ஒரு அளவு குத்தகை பாக்கியை செலுத்த வேண்டும் என்கிற முறையில் சலுகையை அளித்து சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், அவற்றைக்



கூட விளைச்சல் இல்லாத காரணத்தினாலே விவசாயிகள் முழுமையாக அதை அனுபவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதே மாதிரி இந்த மசோதாவை கொண்டுவருவதற்கான காரண நோக்க விளக்கத்திலே 1981–82 ஆம் ஆண்டிலும், 1982–83 ஆம் ஆண்டிலும் பருவ மழை தவறிவிட்டது என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைய தினம் குத்தகையை செலுத் தவில்லை என்று வெளியேற்றுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்ற அதே நேரத்தில் இந்த விவசாயிகள் பருவ மழை தவறியதன் காரணமாக குத்தகையை செலுத்து வதற்கு சக்தியற்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்ற நிலைமையை அரசும் அமைச்சரும் உணருகின்ற நேரத்தில் இந்த குத்தகையை செலுத்துவதற்கும் நிவாரணம் அளிக்கக் கூடிய முறையிலே இந்த குத்தகை பாக்கிகளை தள்ளுபடி செய்வதற்கான முறையிலே வழி வகைகளை ஏற்படுத்தக்கூடிய சட்டத்தை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து கொண்டு வர வேண்டும் என்று நான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இன்றைய தினம் மடங்கள், கோவில்களுக்கு சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. அவற்றிலும் விவசாயிகள் குத்தகை பாக்கிகளுக்காக வெளி யேற்றப்படுவது தொடர்கிறது. ஆகவே, இந்த நிலங்களை அரசாங்கம் அவர்களுக்கு சொந்தமாக்கிக் கொடுப்பதிலே எந்த விதமான தடையும் இருக்க முடியாது.

ஏனென்றால், திரு. பக்தவத்சலம் போன்றவர்கள்கூட இந்த கோவில் நிலங்களை (குறுக்கீடு)....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மடங்கள் கோவில்களுக்கு எல்லாம் குத்தகை தருகிறார்களா ? அவர்களை எங்கே வெளி யேற்றுவது ? அதுதான் அனுபவம். மற்றது ஏதாவது இருந் தால் சொல்லுங்கள்.

திரு. இரா. கருப்பையா : அதற்காகத்தான் கோர்ட்டு களில் வழக்கு போட்டு வெளியேற்றப்படுகிறார்கள். ஆகவே நம்முடைய அமைச்சர் அவர்கள் மிகவும் பகுத்தறிவுக் கொள்கை யிலே மிகுந்த நம்பிக்கை உடையவர்கள். ஆகவே அதற்கு அடிப் படையாக, அந்த நிலங்களை விவசாயிகளுக்கு கொடுப்பதற்கான சட்டத்தைக் கொண்டுவருவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். அதைச் செய்வார் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அந்த அடிப்படையில் தொடர்ந்து குத்தகை பாக்கி களை ஏற்கனவே செலுத்த முடியாத நிலையில் இருக்கிற விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையிலே அர சாங்கம் வரிகளை தள்ளுபடி செய்திருக்கின்றது. வாய்தாவில்

ஆனால் இப்படி கொண்டு வருகிறபோது 1972ஆம் ஆண்டுக்கு முன்னால் 1381-ஆம் பசலி அல்லது 1380 ஆம் பசலி அல்லது 1379-ஆம் பசலி அல்லது 1378 ஆம் பசலி—இந்த பசலிகளில் கால் பாகமோ, அரை பாகமோ, முக்கால் பாகமோ எதைக் கட்டியிருந்தாலும், அது கணக்கிலே எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

ஆனால், இதற்கு முன்னாலே பூராவும் கட்டியிருந்தாலும் இந்த 1382-வது பசலி அல்லது 1972 ஆம் ஆண்டு கட்ட வேண்டுமென்பது இந்தச் சட்டம். அதற்கு முன்னாலே கட்டியவர்களும் கட்ட வேண்டும். அப்படி இருக்கும்போது அதற்கு முன்னாலே கட்டியவர்களுக்கு இலாபம் இல்லை. கட்டாமல் இருப்பவர்களுக்கு லாபம். இருந்தாலும் அதை வரவேற்கிறோம் என்று சொன்னோம்.

ஆனால் இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவந்திருக்கின்ற சட்டம் என்னவென்றால், இந்த 5 ஆண்டுகளில், நம்முடைய சி.பி.ஐ., சி. பி. எம். துணைத் தலைவர்கள் சொல்லியதைப் போல், 5 பசலிகளில் ஒரு பசலி கட்டினால் போதும் என்று சொன்னார்கள். அப்படியானால் ஒரு பசலி என்றால் எந்த பசலி என்று இதில் கூறப்படவில்லை. அதற்குக் காரணம் 5 பசலிகளில் எந்தப் பசலி கட்டியிருந்தாலும் அது ஏற்றுக் கொள்ளப்படும். 5 பசலிகளில் அரை பாகம் கட்டியிருந்தாலும், கால் பாகம் கட்டியிருந்தாலும் அது வரவேற்கப்படும். இந்த 5 பசலிகளில் பணம் எங்கே கட்டியிருந்தாலும், எந்தப் பணத்தைக் கட்டியிருந்தாலும், பூராவாகக் கட்டியிருந்தாலும், பகுதியாகக் கட்டியிருந்தாலும், கால் பாகம் கட்டியிருந்தாலும், அரைக்கால் பாகம் கட்டியிருந்தாலும் அத்தனையையும் கணக்கிட்டு ஒரு பசலிக்கு கட்டவேண்டியது வந்துவிட்டால் தேவையில்லை. முக்காலே அரைக்கால் பாகம் கட்டியிருந்தால் அரைக்கால் பாகம் கட்டினால் போதும். ஆகவே, நாம் எல்லாம் 1972 ஆம் ஆண்டு சேர்ந்து கொண்டுவந்த சட்டம் வரவேற்கத்தக்கது. இப்போது வருகின்ற சட்டம் அதைவிட ஒருபடி மேலே சென்று வரவேற்கத்தக்கது என்று விளக்கமாக திரு. இராமலிங்கம் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, 1980-81ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறோம். 1981-82, 1982-83 ஆம் ஆண்டுகளிலும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று 'ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸில்' சொல்லியிருக்கிறோம். அதனால், 1-7-1982 தேதிக்கு முன்னால் வெளியேற்றப்பட்ட விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, 1972-ஆம் ஆண்டு சட்டத்தைவிட அதற்கு முன்னாலே கொண்டுவரப்பட்ட சட்டம் நல்ல சட்டம் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்று கருதுகிறேன். 1972 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டம் அல்லது 1381 ஆம் பசலியில் யாராவது சட்டத்தைப் பயன்படுத்தி கட்டாமல் இருந்தால்கூட, அதைக் கட்டுவதற்குரிய வாய்ப்பு இல்லாமல் போனால்கூட, அவர்களுக்கும் கட்டினால் வாய்ப்பு உண்டு என்றும் அதை மூன்று தவணைகளில் கட்டலாம் என்றும் இந்த அரசு சட்டம் கொண்டுவந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சட்டமன்றத்திலே உறுதி மொழி கொடுங்கள் என்று கேட்டார்கள். நான் உறுதி மொழி கொடுக்காமலே சிரித்துக் கொண்டு போய்விட்டேன் நான் சிரித்தவுடனே, உறுதிமொழி கொடுக்காவிட்டாலும், இது வரப் போகிறது என்று அவர்களுக்குத் தெரியும். அதனால் முதல்நாள் சந்தித்து, மறுநாளே இரவோடு இரவாக அச்சடித்து, அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமுன்வடிவு இது என்பதை இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அறிந்து, மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவை அவையில் முன்மொழியும்போது நான் இல்லை ; நிதி அமைச்சர் அவர்கள் இருந்தார்கள். முன்மொழிந்த பின்னால் வந்து சொன்னார்கள், 'நீ இல்லாவிட்டாலும் உன் சட்டம் வந்துவிட்டது' என்று. ஆக, நான் இருந்தாலும், இல்லாவிட்டாலும் சட்டம் வரும் என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறது.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் சொல்லவேண்டுமானால் 1984-ஆம் ஆண்டு ஜனவரி வரையில் யாரையும் வெளியேற்ற முடியாது. ஏன் 1984 ஜனவரி என்று சொல்லியிருக்கிறோம் என்றால், அதற்கு முன்னால் மழை பெய்து, 1983 அக்டோபர், நவம்பர் மாதத்தில் அறுவடை வந்து கட்டுவதற்கு வாய்ப்பு வரும் என்பதால் அப்படிச் சொல்லியிருக்கிறோம். அதன் பிறகு குத்தகைப் பாக்கியை எப்படிக் கட்டுவது என்பது பற்றி தனியாக ஒரு சட்ட முன்வடிவு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஏன் இதை 1982 ஆம் ஆண்டு ஜூலை 1-ந்தேதியும் அதற்குப் பிறகும் என்று சொல்லியிருக்கிறோம் என்றால் அதற்கு முன்னாலே கட்டவேண்டிய தவணை 30—6—1982. ஆனால், 30—6—1982-க்குள் கட்டாவிட்டால், அவர் மீது என்றைக்கு வழக்குப் போட முடியும் என்று கேட்டால், ஜூலை மாதம் 1ஆம் தேதிதான் வழக்குப் போட முடியும். அப்படி முன்னாலே கட்ட

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS
IN MADRAS CITY.

Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Company, Madras-4.
Higgimbothams (Private) Limited. Madras-2.
P. Varadachary and Company, Madras-1.
C. Subbiah Chetty and Company, Madras-5.
The Universal Book House, Moore Market, Madras-3.
C. Sitharaman and Company, Madras-14.
Mohan Pathippagam and Book Depot, Madras-5.
C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
New Century Book House (Private) Limited. Madras-2.
Kalaivani Book Centre, No. 1. Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU.

A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
Appar Book Stall, Thanjavur.
P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
Palaniappa Bros., Tiruchirappalli-2.
S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
B. Aruldoss, Villupuram (South Arcot District).
Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
Ganesh Stores, South Car Street, Sivakasi.
Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
Meenakshi Pathippagam, Pudukkottai.
K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-13.
Kumaran Book Depot, Booksellers, Erode-1.
Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
Ajentha Book Centre, Salem-1.
Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

IN OTHER STATES

Jain Book Agency, New Delhi.
International Book House, Trivandrum.
The Book Syndicate, Hyderabad-1.
Labour Law Publications, Hyderabad.
Puthaghaleyam, Pondicherry.
Prabu Book Service, Gurgaon, Haryana.
K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

L NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT
BLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL
DU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED
15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE
AND PRINTING, MADRAS.

வெளியீடு 22 9-1983] Dated 22 9 1983

ஆணையர்
எழுதுபொருள் மற்றும்
அச்சுத்துறை
7 8 1983
தமிழ்நாடு அரசு அச்சகம்
சென்னை-600 008

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## பதிவுத்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 8, 1983—தொகுதி XLIII எண் 5

Tuesday, 8th March 1983—Volume XLIII No. 5

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George
Madras-600009

விலை ரூ. 3-50 காசுகள்]

வேண்டிய தவணைகளில் எந்த ஒரு வருஷ தவணையைக் கட்டாமல் இருந்தாலும், அவர்களை வெளியேற்றப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திரு. சோ. அழகர்சாமி அவர்களுக்கும் இது மிக நன்றாகத் தெரியும்.

1983 ஆம் வருடம் என்றாலும், 1982 ஆம் ஆண்டிலே கட்ட வேண்டிய தவணையை கட்டாமல் இருந்து வெளியேற்றப்பட்டிருந்தாலும், அப்படி வெளியேற்றப்பட்டது செல்லாது என்பது தான் இதில் சொல்லப்பட்டிருக்கும் முக்கிய நோக்கம். அப்படி வெளியேற்றப்பட்டிருந்தாலும், வெளியேற்றியதைக் குறித்து, வெளியேற்றி விட்டார்கள் என்று வருவாய்த்துறை அதிகாரிகளிடத்திலே மனுக்களை 3 மாதங்களுக்குள் கொடுத்தால், அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டது செல்லாது என்று கேட்க வாய்ப்பு இருக்கிறது. குத்தகைதாரர்களுக்கு எவ்வளவு வாய்ப்புகள் பாருங்கள். இந்தச் சட்டம் நிறைவேற்றிய பிறகு 90 நாட்கள், காலாண்டுக்காலம் அவர்களுக்கு மேலும் வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அந்தக் காலாண்டு காலத்திற்குள் மனு கொடுக்க அவர்கள் தவறிவிட்டாலும் கூட அதற்கும் வாய்ப்பு கொடுத்து, அப்படி மனு கொடுக்கத் தவறியதற்கு சரியான காரணம் சொல்லி அவர்களுடைய நிலத்தை திருப்பித் தரவேண்டும் என்று சொல்வதற்கு இதிலே வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தச் சட்டத்தினை நிறைவேற்றித் தருவதிலே யாருக்கும் சங்கடம் இருக்காது என்று சொல்லி நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ;

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 15/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும், பாதுகாப்பளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண். 15/1983) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 8—3—1983 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-12 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 7. அவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

168. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் அறக்கட்டளைகள் துறையின் 28—12—1982 ஆம் தேதியிடப் பெற்ற 1434 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண். 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

169. இராமநாதபுரம் மாவட்டம் விருதுநகர், மதுரை ரோட்டிலுள்ள சுங்கச் சாவடியை மாற்றுவது தொடர்பாக வணிக வரி அறக்கட்டளைகள் துறையின் 16—9—1981 ஆம் தேதியிடப்பெற்ற 1059 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

#### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

—

8—3—1983.

S.No. 141/556

உள்ளடக்கம்.


1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 503—543

2. தகவல் கோரல்—

(அ) பத்திரிகையாளர் குறித்து பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டம். .. .. 543—544

(ஆ) சத்துணவுத் திட்டத்தின் கீழ் மேற்பார்வையாளர்களை நியமித்தல். .. .. 544

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

சென்னை அருகில் பெட்ரோல் லாரி விபத்தில் பலர் இறந்துள்ளது. .. .. .. 545—550

4. அறிவிப்பு—

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. .. 551

5. கவன ஈர்ப்பு—

சென்னை பல்கலைக் கழகம் நடத்தும் செமஸ்டர் தேர்வு முறை. .. .. .. 551—554

6. வரவு—செலவுத் திட்டம் 1983–84 பொது விவாதம் (தொடர்ச்சி)— 554—609 610—631

திரு. துரைமுருகன் .. .. .. 554—575
டாக்டர் கே.பி. இராமலிங்கம் .. .. 575—584
திரு. நா. சுந்தரராஜ் .. .. .. 584—599
திரு. கோவைத்தம்பி .. .. .. 601—609
திரு. கு. ரமணி .. .. .. 610—618
திரு. தி. அன்பழகன் .. .. .. 618—622
திரு. இரா. கருப்பையா. .. .. 622—631

7. ஒழுங்குப் பிரச்னை—

வரவு செலவுத் திட்டம் விவாதிக்கப் பெறும்போது நிதித்துறை செயலாளர் அதிகாரிகள் மாடத்தில் இல்லாதது. .. .. .. 609—610

8 பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.. 631

2678

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1983 மார்ச் 8.

மாசி 24, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.''

தான் அறிந்த குற்றத்தில் தன் மனம் தங்குமானால், வானத்தைப்போல் உயர்ந்த தவக்கோலம் ஒருவனுக்கு என்ன பயனைத் தரும்?

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### மானாமதுரை— பரமக்குடி மின்சாரப் பாதையில் களவு போன செப்பு கம்பிகள்.

* வினா எண். 282—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை—பரமக்குடி மின்சார பாதையில் சுமார் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள செப்பு கம்பிகள் களவு போனது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) களவுகளைக் குறித்து மானாமதுரை காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். காவல் துறையிடம் இந்தப் புகாரின் பேரில் தொடர்பு கொள்ள கோட்டப் பொறியாளர் மின் வாரியத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, மானாமதுரை—பரமக்குடி மின்சாரப் பாதையில் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள செப்புக் கம்பிகள் திருடு போனதாக நான் கேள்வி

போட்ட அடுத்த மாதத்திலேயே அதே பகுதியிலேயே அதே லைனிலே மீண்டும் திருடப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்து தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. இந்த திருட்டைக் கண்டுபிடிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றது ? குறிப்பாக மானாமதுரை திருடர்கள்தான் அதிகமாகத் திருடுவதாகத் தெரிகிறது. இது குறித்து என்ன நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் 24-11-81 அன்று திருட்டு நடந்திருக்கின்றது. அதன் மதிப்பு ரூபாய் 20,000. இரண்டாவது முறை 24-1-82 அன்று நடந்தது. அதன் மதிப்பு 21,080 ரூபாய். எனவே மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் என்று சொல்வது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி போட்ட வுடன் மீண்டும் திருடினார்கள் என்று சொன்னார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து கேள்வி போட வேண்டாம் என்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) மானாமதுரைப் பகுதியில் திருடு நடந்திருக்கின்றதே தவிர திருடர்கள் அங்கேதான் இருக்கவேண்டும் என்றில்லை, வேறிடங்களிலிருந்து அங்கே வந்தும் திருடலாம்.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மானா மதுரை திருட்டு பற்றிக் கேள்வி போட்ட உடனேயே மீண்டும் திருட்டு நடந்ததால் கேள்வி போட வேண்டாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிக் கேள்வி போடா விட்டால் மேலும் திருட்டு அதிகமாக ஆவதற்கு உதவி செய்தது போன்ற நிலைமை ஏற்பட்டுவிடும். எனவே இப்படிப்பட்ட கேள்வி போட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. தொடர்ந்து திருட்டு மூன்றாவது முறையாக ஆர். எஸ். மங்கலம் பகுதியில் நடந்திருக்கின்றது. எனவே இப்படிப்பட்ட திருட்டைக் தடுக்க எங்கெங்கே செப்புக் கம்பிகள் இருக்கின்றன என்பதை அறிந்து கொண்டு அவற்றை எடுத்து பந்தோபஸ்து பண்ணக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அந்த அடிப்படையில்தான் செப்புக் கம்பிகள் அகற்றப்பட்டு அலு மினியம் கம்பிகள் போடப்படுகின்றன. மேலும் தமிழ்நாடு முழு வதும் உள்ள செப்புக் கம்பிகள் எல்லாம் ஓரிடத்திற்குக் கொண்டு வரப்பட்டு அது மேட்டுப்பாளையத்தில் சேமித்து வைக்கப் படுகின்றது. எனவே செப்புக் கம்பிகள் திருடப்படுவதை, எந் தெந்த வகையில் தடுக்கவேண்டுமோ அந்தந்த வகையில் மின் வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, செப்புக் கம்பிகளைத் திருடுகின்றபோது மின்சாரத்தை ஷட் டவுன் பண் ணிக்கான் நடக்கின்றது. லாரிகளில் செப்புக் கம்பிகளை ஏற்றிச்





செல்வதாகக்கூட புகார் வருகின்றது. ஆகவே இதற்கு மின்சார வாரியத்தின் ஊழியர்கள் துணை போகிறார்களா ? அப்படியா னால் அது கண்டுபிடிக்கப்பட்டு ஏதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த விவரங்கள் எல்லாம் புலன் ஆய்விலேதான் தெரியவரும்.

**திரு. ஏ. எம். சேதுராமன் :** தலைவர் அவர்களே, இராணிப் பேட்டைக்கு அருகில் ஆற்காட்டிற்கு வருகின்ற சப் லைனிலே இதுபோன்ற செப்புக் கம்பிகள் திருடுவது நடந்து வருகின்றது. அதைப் போக்குவதற்கு அரசு எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத் திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன். அனைத்து செப்பு கம்பிகளும் ஓரிடத்தில் சேகரிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த அளவுக்கு செப்புக் கம்பிகள் சேகரிக்கப்பட்டுள்ளது ? அதன் மறு உபயோகம் என்ன? எதற்கு அது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மின் கம்பித் தொடர்களைப் பொறுத்த வரையில் செப்புக் கம்பிகளைப் பயன்படுத்தக்கூடாது என்று தடுக்கப்பட்டு விட்டது. ஏற்கனவே பயன்படுத்தியிருக்கிற இடங்களில் இப்போது அகற்றப்பட்டு வருகிறது. அதற்கு மாறாக அலுமினிய கம்பிகளை கம்பித் தொடர்களாக இப்போது பயன் படுத்தப்படுகின்றன. அந்த செப்புக்கம்பிகளை எதற்கு பயன் படுத்துகிறீர்கள் என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். செப்புக் கம்பியைப் பொறுத்தவரையில் அது எவ்வளவோ வேலை களுக்கு பயன்படுத்தக் கூடிய ஒரு நல்ல உலோகம். ஆகையால் தான் அதை பாதுகாக்க வேண்டியுள்ளது.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்த திருட்டு நடந்ததாகச் சொன்னார்கள். இன்றைக்குச் 1983 ஆம் ஆண்டு நடக்கிறது. இன்னும் ஆய்வில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த 2 ஆண்டுகளாக உண்மையான குற்றவாளியை கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுக்க காலதாமதம் ஏன் ? அல்லது அதி காரிகள் ஆய்வை சரியானபடி செய்யவில்லையா ? அல்லது அதி காரிகள் இதற்கு உடந்தையாக இருந்து செய்கிறார்களா ? அப் படிப்பட்ட அதிகாரிகள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை அனாவசியமாக இப் போது நாம் சந்தேகப்பட வேண்டிய அவசியம் இல்லை. இருந் தாலும் தற்காலத்தில் திருடர்கள் ரொம்பவும் சாமர்த்தியமாக திருடுகிறார்கள். ஆகவே அவர்களைப் பிடித்துக்கொடுத்தால் போதும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, கோதையாறிலே கிடைக்கிற மின்சக்தியை நாகர்கோயில் நகரத்திற்கு பயன்படுத்தாதற்குக் காரணம் என்ன? 1.10 கே. வி. லைன் மூலமாக நாகர்கோவில் பகுதிக்கு கோதையாற்றிலிருந்து மின் சாரம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, காரணம் ஒன்றே ஒன்றுதான். எல்லா மின் உற்பத்தி நிலையங்களும் ஒரே கிரிட்டிலே இணைக்கப்படுவதுதான்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மேல் கோதையாறுக்கும் கீழ் கோதையாறுக்கும் உள்ள பவர் ஹவுஸில் பல லட்சக் கணக்கான ரூபாய் விலையுள்ள இயந்திரங்கள் எரிந்து விட்டதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா? அப்படியானால் அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய தகவல் எதுவும் இல்லை.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த மின் உற்பத்தி நிலையங்களில் நம் உற்பத்தி சக்திக்குத் தகுந்த அளவுக்கு இப்போது நடைபெறவில்லை என்ற தகவல்கள் வந்து கொண்டே இருக்கின்றன. நான் கேட்க விரும்புவது, பீரியாடிகல் ஓவர்ஹாலிங் என்பது நடைபெறவில்லையென்பதால் மின் உற்பத்தி சக்தி குறைந்துகொண்டிருக்கிறது என்று சொல்கிறார்களே அதற்காக ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு முழு உற்பத்தி சக்தியைப் பெறுவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா? அதன் மூலகாக மின் உற்பத்தியை அதிகப்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனல் மின் உற்பத்தி நிலையங்களைக் கருத்திலேகொண்டு இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். புனல் உற்பத்தி மின் நிலையங்களிலே இந்தப் பிரச்சினைகள் எழவில்லை. அனல் மின் நிலையங்களிலேதான் அப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிறது, அதைப்பற்றி மின்வாரிய நிதிநிலை அறிக்கையிலே நாம் விவாதித்து இருக்கிறோம்.



**குற்றாலத்தில் ஏழை, நடுத்தர மக்களுக்கான விடுதி கட்டும் திட்டம்.**

*வினா எண். 312—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோடைக்கால மலைவாழ் நகரமாகிய குற்றாலத்தில் ஏழை, நடுத்தர மக்களுக்கு வசதியாக சுற்றுலாத் துறையின் கீழ் விடுதி கட்ட அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலத்தில், நடுத்தர பிரயாணிகளின் வசதிக்காக சுற்றுலாத் துறை ரூ. 7.97 லட்சம் நகரீயத்திற்கு ஒதுக்கியுள்ளது. இந்தத் தொகையைப் பயன்படுத்தி, நகரீயம் 100 படுக்கை வசதி கொண்ட ஒரு துயிலக விடுதியை அமைத்து நடத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. பி. துரைராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்தில் நடுத்தர மக்களுக்கு வசதியாக விடுதி கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக்க நன்றி. இந்தத் திட்டமானது அந்த நகரிய மன்றத்தால் எப்போது ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும் என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இதை சுற்றுலாத் துறையின் மூலமே கட்டவேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் இடம் கிடைப்பதிலே வேறு சங்கடங்கள் வந்த காரணத்தால் நகரியத்திற்குச் சொந்தமான 7.27 ஏக்கர் நிலம் இருக்கிற அந்த அடிப்படையிலே வைத்து இப்போதுதான் அந்தத் தொகையை அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிறோம். அநேகமாக இந்த ஆண்டு அவர்கள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்திலே ஏற்கெனவே நகரத்தின் மையப் பகுதியிலே லாட்ஜ்கள் எல்லாம் இருக்கின்றன. இப்போது குறைந்த வாடகை என்ற முறையிலே ஏற்படுத்தப்படக் கூடிய இந்த விடுதி எந்த இடத்திலே கட்டப்பட உள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நகரியத்திற்குச் சொந்தமான இடம் சர்வே எண். 459 பகுதியிலே 63/1, 64/1, 64/4, 65/8, 66, 63 என்று இங்கே தரப்பட்டு இருக்கிறது. அநேகமாக எனக்குத் தெரிந்தவரை குற்றா

திரு. கு. பாலன் : மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, மின்சாரத் தட்டுப்பாடு, கோளாறு ஏற்பட்டு அதை மின்சாரத் துறைக்கு தெரிவிக்கிற நேரத்தில் அவர்கள் வந்து பழுதுபார்க்கும் போது பழுதுபட்ட இடத்தில் தோண்டாமல் ஏராளமான செப்புக்கம்பிகளைக் கொண்ட கேபிள்கள் உள்ள இடத்தில் அதிகமாகத் தோண்டி அவைகளைத் திருடுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டுத் தகவல் தந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

கோதையாறு மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம்.

* வினா எண். 283—திரு. டி. மணி : திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குமரி மாவட்டத்தில் கோதையாற்றிலுள்ள மின்சக்தி நிலையம் இரண்டிலும் எத்தனை மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது ?

(ஆ) இத்திட்டம் நிறைவேற எத்தனை கோடி செலவானது?

(இ) இங்கிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் 1 யூனிட் என்ன விலைக்கு தரப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 100 மெகாவாட்

(ஆ) ரூ. 2,016 இலட்சங்கள்.

(இ) மின்சாரத்தின் விலை மின் நிலையத்தை பொறுத்து அல்லாது வாரியத்தின் வரவு-செலவுகளை பொறுத்து நிர்ணயிக்கப்படுகிறது. கோதையாறு மின் நிலையம் I-ல் மின் உற்பத்திச் செலவு ஒரு யூனிட்டுக்கு 7.75 பைசாவாகவும் மின்நிலையம் II-ல் 9.02 பைசாவாகவும் உள்ளது.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதையாறு மின்நிலையத்தில் அந்த திட்டம் முடிவடைந்தவுடன் அதனுடைய திட்ட மதிப்பீட்டுக்கு ஆன மின்சாரம் இப்போது உற்பத்தி செய்யப்படுகிறதா ? அது இப்போது கிடைக்காததற்குக் காரணம் என்ன ? அப்படிப்பட்ட காரணங்களைக் கண்டு அறிந்து முழுமையாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல மழை பெய்து நீர் நிலையங்கள் நிரம்பினால் நமக்குப் போதிய அளவுக்கு மின் உற்பத்தி அதிலிருந்து



கிடைக்கும். 1979–80-ல் நல்ல மழை பெய்ததன் காரணமாக முதல் மின்நிலையத்தில் 25 கோடி யூனிட்டுகளும், இரண்டாவது மின்நிலையத்தில் 9.78 கோடி யூனிட்டுகளும் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கோதையாறு மின் திட்டத்தில் மழை அதிகமாக இல்லாமல் இருந்தால் கூட கிடைக்கின்ற தண்ணீரில் ஒரு பகுதி தண்ணீர் அந்த டனலில் பெரிய லீக்கேஜ் இருப்பதன் காரணமாக அது பரிபூரணமாக பயன்படுத்த முடியவில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. அந்த லீக்கேஜை அடைப்பதற்கும் அதற்கு மேல் இருக்கின்ற வெள்ளச்சிகோடு என்னும் இடத்தில் வருகிற நீரை தடுத்து நிறுத்தி இன்னும் ஒரு பவர் ஹவுஸ்க்கு ஏற்பாடு செய்தால் இந்தப் பற்றாக்குறை நீங்குவதற்கு வசதி இருக்கும். அதைச் செய்ய அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு மின் உற்பத்தி அமைப்புப் பற்றி தகவல் என்னிடத்தில் இல்லை. ஆனால் இதில் லீக்கேஜ் இருக்கிறது, சில நீர் பிடிப்புகளில் சில குறைபாடுகள் சரி செய்யப்படவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஜே. ஹேம்ச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதையாறு மூலம் 25 மெகாவாட் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது ; மேல் கோதையாறிலிருந்து கீழ் கோதையாறுக்கு தண்ணீர் வரக்கூடிய நேரத்தில் அந்த தண்ணீரை சரியான முறையில் சேகரித்து அதிலிருந்து மின் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தால் இந்த 25 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய முடியும் என்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசினிடத்திலோ, அமைச்சரிடத்திலோ பரிசீலனையில் உள்ளதா ? அப்படி இருந்தால் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—10)

ம்ாண்புமிகு திரு. ச. இராம்ச்சந்திரன் : தலைவர் அவர்களே, கோதையாறு ஒன்றிலிருந்து கோதையாறு இரண்டிற்கு வருகிற அந்தப் பகுதியிலே அதிகமான நீரைச் சேகரிப்பதற்கான அந்த குறிப்பு தான் எனக்கு நினைவு இருக்கிறது. ஆனால் அதன் மூலமாக 25 மெகவாட் கிடைக்குமா என்ற விவரம் மட்டும் என்னிடத்திலே இல்லை.

லத்திலே நகரத்திலே நுழைகிற போது ஆண்டுதோறும் பொருட் காட்சி நடத்துகின்ற அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருப்ப தாக நான் அறிகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, குற்றா லத்திற்கு சீஸன் காலங்களில் ஏழை எளிய மக்கள் அதிகமாக வருகி றார்கள். கூட்டம் அதிகமாக வரக்கூடிய நேரங்களில் தனியார் லாட்ஜ்களில் அங்கே வருகிற கூட்டத்தைப் பார்த்து அதிக அள வில் வாடகை கூடுதலாக கேட்கிறார்கள். அவர்கள் இவ்வளவு தான் வாடகை வாங்க வேண்டுமென்று அரசாங்கமே நிர்ணயித்து ஒரு சுற்றறிக்கை அனுப்புவார்களா? கூடுதலாக வாடகை கேட்கும் லாட்ஜுகளை அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகை நிர்ணயிக்கிற அதிகாரம் சுற்று லாத் துறையிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக கேள்வி போட்டால் சம்பந்தப்பட்ட துறையினர் அதற்கு பதில் அளிப்பார்கள். ஆனால் சீசன் நேரத்தில் இப்படி இட நெருக் கடி ஏற்படுகிறது என்பதை மனதில் வைத்து, குறைந்த வருமானக் காரர்கள் தங்குவதற்கு இன்னும் அதிக அளவில் வசதியை ஏற் படுத்துவதற்கு கட்டிடங்களாகவே விலைக்கு கிடைக்குமானால் அவற்றையும் வாங்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக் கிறது.

பவானி அருகே காவிரி ஆறும், பவானி ஆறும் கூடுகின்ற இடமான கூடு துறையை அழகு படுத்தும் திட்டம்.

*வினா எண். 313—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத்தில் பவானி அருகே காவிரி நதியும், பவானி நதியும் கலக்குமிடமான 'கூடுதுறையினை' சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அழகுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆம். பெரியார் மாவட்டத்தில் பவானி ஆறும் காவிரி ஆறும் கூடுகின்ற இடமான கூடுதுறையை முதற்கட்டமாக மாவட்ட சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனை யில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எத்தனை லட்சம் பொருள் செலவில் இந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்ற இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடம் பொதுவாகவே தமிழகத்தில், அதிலும் குறிப்பாக கோவை, பெரியார், சேலம் மாவட்டப் பகுதிகளில் மிகச் சிறந்த இடமாக போற்றப்பட்டு வருகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பல விழாக்களை ஒட்டி அந்த இடத்தில் கூடுகிறார்கள். சுற்றுலா தலமாக ஆக்க வேண்டும், யாத்திரை தலமாக ஆக்கவேண்டும் என்று வேண்டு கோள்கள் வந்ததையொட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் தலை மையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் பரிசீலனை செய்து ரூ. 35 லட்சம் செலவில் பல பணிகளை நிறைவேற்ற வேண்டு மென்று அரசிற்கு அறிக்கை தந்திருக்கிறார்கள். பல்வேறு துறை களின் மூலமாக இப்பணிகளை நிறைவேற்றுவதற்கு திட்டங்கள் இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

திரு. பி. ஜி. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி கூடுதுறையினை அழகுபடுத்தும் திட்டத்தில் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன ? இந்தத் திட்டம் நீண்ட காலமாக நிலுவையில் இருக்கிறது என்பதை உத்தேசித்தாவது இந்த ஆண்டே பணிகள் துவங்கப்படுமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 11 அல்லது 12 இனங்களில் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவை களை எல்லாம் படிப்பது என்றால் நேரம் அதிகமாகும். இருந் தாலும் இந்த ஆண்டிலேயே நம்முடைய போக்குவரத்துத் துறை ரூ. 3 இலட்சம் செலவிலும், பொதுப்பணித்துறை சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவிலும், இந்து சமய அறநிலையத் துறை 2 இலட்சம் ரூபாய் செலவிலும், மற்றும் பவானி நகரசபை, சுற்றுலாத் துறை என்று இந்த ஆண்டிலே அவரவர்கள் சில வேலைகளைப் பிரித்துக்கொண்டு செய்ய வேண்டுமென்று இந்த குழுவினர் கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கான ஆணைகள் பிறப்பிப்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது.

இராமேசுவரத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம்

*வினா எண். 314—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல கோடி ரூபாய் செலவில் இராமேசுவரத்தை அபி விருத்தி செய்யும் தமிழக அரசின் பெரிய திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதா ?

(ஆ) தமிழக அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) சுற்றுலா மற்றும் ஒருங்கிணைந்த முறையில் இராமேசுவரம் மேம்பாடு பெருந் திட்டம் ஒன்றை தமிழக அரசு தீட்டியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசின் அனுமதி தேவையில்லை ; எனவே, மத்திய அரசின் அனுமதி கேட்கப்படவில்லை. ஆனால் இம்மேம்பாட்டுத் திட்டத்தின் சில பகுதி திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கேட்கப்பட்டுள்ளது. இதற்கு பதில் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) இப்பெருந் திட்டத்தைச் செயல்படுத்துவது மூலம் பிற்பட்ட மாவட்டமான இராமநாதபுரத்தின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்துக்கு உதவுமாகையால் நிதி நிலைமைக்கேற்றவாறு மேம்பாட்டுத் திட்டத்தை எல்லா துறைகளும் செயல்படுத்த வேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் திட்டங்கள் படிப்படியாக நிறைவேற்றப்படுகின்றன.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெரிய திட்டத்தில் அடங்கியிருக்கிற அம்சங்கள் என்னவென்பதையும், அரசாங்கம் இதற்காக ஒதுக்கியிருக்கும் தொகை எவ்வளவு என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெரிய திட்டம் என்பது ரூ. 28 கோடி திட்டம். இவ்வளவு பெரிய திட்டம் இந்தப் புத்தகத்திற்குள்ளே இருக்கிறது. ஆகவே ஒரு கேள்விக்கு பதில் அளிக்கிற வகையில் இதை தெரிவிக்க இயலாமல் இருக்கிறது. இன்னொரு கேள்வி போட்டால் விரிவாக பதில் அளிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். இருந்தாலும் இதை இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் நிறைவேற்ற வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. மத்திய அரசினுடைய உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் மாநில அரசே பல்வேறு துறைகளின் மூலம் இதை நிறைவேற்றுகிற முயற்சியில் இப்போது ஈடுபட்டிருக்கிறது. இப்போது நடைபெறுகின்ற நிதியாண்டில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் ரூ. 22½ இலட்சம், சுற்றுலாத் துறை மூலம் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கி செலவிடப்பட்டு வருகிறது. அதைப் போலவே அடுத்த நிதியாண்டிலே அப்படிப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைச் செய்து படிப்படியாக இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



(முற்பகல் 9-20)

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திலே சில தேவைகளுக்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. அது இன்னும் வரவில்லையென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்குப் பிறகு மீண்டும் நினைவுபடுத்தி, அந்த அனுமதியைப் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ? வழக்கம் போல், நாளாக, நாளாக, மத்திய அரசு காலம் கடத்திக் கொண்டு வருகிறது. அவைகளை நினைவுபடுத்தி, மீண்டும் வற்புறுத்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, முன்னாலே நான் குறிப்பிட்டிருக்கிறேன், அனுமதி பெறுவது என்பது தேவையில்லை. நாம் அனுமதியையும் கேட்கவில்லை. நிதி உதவியைத் தான் கேட்டிருக்கிறோம். அப்படி நிதி உதவியைக் கேட்கிற நேரத்திலே கூட, மத்திய அரசு நிதியிலிருந்து கொடுக்க முடியவில்லையானால் உலக வங்கிகள் போன்ற நிறுவனங்களிலேயிருந்து கடன் பெறுவதற்கு வசதி செய்து தரவேண்டுமென்றும் கேட்டிருக்கிறோம். காரணம், அந்த மேம்பாடுத் திட்டம் என்பதே ஒரு வளர்ச்சித் திட்டம் என்ற அடிப்படையிலே உருவாக்கப்பட்டிருக்கிற திட்டம். அதனாலே திரும்பவும் அதை நாம் திருப்பிச்செலுத்த முடியும், அங்கே வருமானம் வரும் ; அதை வைத்து இந்தக் கடனை ஈடுகட்டிவிட முடியும் என்ற அந்த உணர்விலே நாம் இன்றைக்கு மைய அரசைக் கேட்டிருக்கிறோமே தவிர, நாம் அனுமதியை எதிர்பார்த்து இதை நிறுத்தி வைக்கவில்லை ; உதவியைக் கேட்டிருக்கிறோம்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் தீவை அபிவிருத்தி செய்வதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் அமெரிக்காவிலுள்ள மியாமி போன்ற உல்லாசமான கடற்கரை ஸ்தலத்தைப் போன்ற வகையிலே அமைக்கப்படும் என்ற ஒரு செய்தியை வெளியிட்டு இருக்கிறார்கள். இப்பொழுது சொல்கின்ற பெரிய திட்டம் அந்த அடிப்படையிலா அல்லது வேறு அடிப்படையிலா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மியாமி கடற்கரையைப் போன்ற ஒரு குறிப்பிட்ட திட்டத்தைப் போன்று இல்லை. பொதுவாக, அந்தத் தீவு முழுவதுமே உலகத்திலேயிருந்து வருகின்ற பயணிகளைக் கவருகின்ற வகையிலே, அந்த இராமேஸ்வரம் ஆலயத்திற்கு வருகின்ற உள்நாட்டு யாத்திரிகர்களுக்கு வசதி அளிக்கின்ற வகையிலேயும், மேலும் அங்கே வாழ்கின்ற மக்களுக்கு, அங்கே வேலை வாய்ப்புகளை உருவாக்குகிற அந்த வகையிலேயும் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, தங்கும் வசதி அதிகரித்தல்—ரூ. 793 இலட்சம் ; உச்சிப்பிள்ளைக்கல் விமானக் கூடத்தை மேம்படுத்துதல்—ரூ. 982.60 இலட்சம் ; குடி தண்ணீர் மற்றும் கழிவு நீரகற்றல் வசதிகளை அதிகரித்தல்—ரூ. 205 இலட்சம் ; மருத்துவ வசதிகளை அதிகரித்தல்—ரூ. 49 இலட்சம் ; மின் வசதி அதிகரித்தல்—ரூ. 32.75 இலட்சம் ; நிலத்தைக் கையகப்படுத்துதல், உணவுக் கூடம் போன்றவைகள், பொழுது போக்கு வசதிகள் அமைப்பதற்கு—ரூ. 474.05 இலட்சம் ; மீனவர் குடியிருப்புகளை மேம்படுத்துதல் ; பொது அங்காடி அமைத்தல், விளம்பரம் மற்றும் பிற பணிகளுக்காக ரூ. 273.85 இலட்சம், இப்படி சமுதாய மக்களுக்குத் தேவையான அடிப்படைத் திட்டங்களாக இது அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்கு மைய அரசின் அனுமதி தேவையில்லையென்ற அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், இம்மாதிரியான சில பல காரியங்களுக்கு மைய அரசின் அனுமதி தேவைப்படுகிறது என்று கூறப்படுகிறது. இம்மாதிரியான காரியங்களுக்குக் கூட மைய அரசின் அனுமதி தேவையில்லையென்ற அடிப்படையில் நமது மாநில அரசு, இன்றைய அரசு, அண்ணாவின் வழியிலே நடக்கின்ற நமது மாநில அரசு, இதை ஒரு தீர்மானமாக நிறைவேற்றி, மைய அரசுக்கு அனுப்ப இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக இந்த இராமேஸ்வரம் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மைய அரசினுடைய பொது அனுமதி எதுவும் தேவையில்லை. ஆனால்,இங்கே நிறைவேற்றப்படுகிற திட்டங்களில் சில திட்டங்கள் மத்திய அரசினுடைய அனுமதிக்கு உட்பட்டிருக்கிறது. அதிலே, ஒன்று போக்குவரத்தை மேம்பாடு செய்வதற்காக சிறிய துறைமுகத்தை அபிவிருத்திச் செய்கிற திட்டமாகும். ஆகவே, அந்தத் திட்டத்திற்கு நாம் நம்முடைய போக்குவரத்துத் துறையின் மூலம் முதலில் ரூ. 107 இலட்சம் செலவில், ஆர். சி. சி. கப்பல் தளம் ஒன்று கட்ட வேண்டுமென்ற முயற்சியை எடுத்து மத்திய அரசுக்குத் தெரிவித்தோம். அவர்கள் இப்பொழுது, ''நாங்கள் அறிவிப்பது வரை அந்தத் திட்டத்தைத் தொடங்க வேண்டாம்'' என்று தெரிவித்து இருக்கிறார்கள். அதைப் போன்று மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற வேண்டிய திட்டங்களில் மாத்திரம் மாநில அரசு தகுந்த முயற்சிகளை மேற்கொண்டு, மத்திய அரசினுடைய அனுமதி கிடைக்கவில்லை என்கிற காரணத்தினாலே திட்டங்கள் தடைப்படாதவாறு கவனமாகப் பார்த்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. செ. சிவசாமி : மத்திய அரசினுடைய அனுமதி தேவை இல்லை என்று அவ்வளவு சுலபமாக ஒதுக்கிவிடுவது நல்லதல்ல என்று நினைக்கிறேன். தமிழ்நாட்டை விட வட நாட்டிலிருந்துதான் அதிகப்படியான யாத்திரீகர்கள் அங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த அபிவிருத்தித் திட்டத்திற்கு மத்திய அரசு எந்தளவிற்கு அதிகமான உதவி செய்ய முடியுமோ அந்தளவிற்கு செய்ய வேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது கூட ஏப்ரல் முதல் தேதியிலிருந்து மெயின் லைனில் போய்க்கொண்டிருந்த ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸை கார்ட்லைனில் விட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே கூட்டம் இன்னும் அதிகமாக வட நாட்டிலிருந்து வரக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகவே இராமேஸ்வரத்தை அபிவிருத்தி செய்து மக்கள் அதிகமான அளவிற்கு தங்குவதற்கு வேண்டிய வீடுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும் முயல் தீவு, குரிசடைத் தீவு,நல்ல தண்ணீர் தீவு போன்ற தீவுகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் இதோடு இணைக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ; இந்தியா முழுவதுமே சுற்றுலாத் துறை பற்றி, அதன் வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று எல்லா மாநில அரசுகளும் மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டு இருக்கின்றன. சமீபத்தில் கூட ஒரு செய்தி, நாலைந்து நாட்களுக்கு முன் வந்தது. டெல்லியில் நடைபெற்ற அகில இந்திய ஹோட்டல் உரிமையாளர்கள் மாநாட்டில் சுற்றுலாத் துறை பற்றி மத்திய அரசு கவனம் செலுத்தவில்லை என்பதைச் சொல்லி ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றி அதில் டைரக்டர் ஜெனரல் ஆப் டூரிஸம் அவர்களும் அங்கிருந்து அவர்களும் எழுந்து நின்றார் என்ற செய்தியெல்லாம் வந்தது. இப்போது அங்கே சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கூட ஒரு குழுவாக அமைத்து அடுத்த மாதத்தில் அதைப்பற்றி ஒரு மாநாடுபோல் இதை விவாதிப்பதற்கு ஒரு கூட்டத்தையே கூட்ட இருக்கிறார்கள் ஆகவே இந்தச் சூழ்நிலையில் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் இராமேஸ்வரம் என்பது இந்தியா முழுவதற்குமே ஒரு முக்கியமான யாத்திரை ஸ்தலமாகவும் சுற்றுலா ஸ்தலமாகவும் இருக்கிற ஒரு நகரமாகும். அவைகளையொட்டி மத்திய அரசு இதைத் தீவிரமாக பரிசீலிக்க வேண்டும் என்ற கருத்தை மாநில அரசு வலியுறுத்தும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தச் சிறிய தீவுகளையெல்ளாம் வளப்படுத்த வேண்டும், மேம்படுத்த வேண்டும் என்ற திட்டமும் அதற்குள்ளே இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்த இராமேஸ்வரம் அபிவிருத்தித் திட்டத்திற்காக போடப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையில் மத்திய அரசிடம் கடனாகக் கேட்ட தொகை எவ்வளவு ? அல்லது மானியமாக கேட்டிருக்கிற தொகை எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நாம் பொதுவாக இப்படிப்பட்ட பெரும் திட்டம் ஒன்றை அவர்களுக்கு அனுப்பினோம். இதில் எந்தெந்தத் திட்டங்களை அவர்கள் ஏற்றுக் கொள்ள முடியும், இதிலே எது எது வருமானம் வருகிற திட்டம் என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் கணக்கெடுத்து நமக்கு அறிவிக்க வேண்டும். இதில் உச்சிப்பிள்ளைக்கல் விமானக் கூடத்தை மேம்படுத்துதல் என்ற திட்டம் ரூ. 982·60 இலட்சம். இவைகளையெல்லாம் மத்திய அரசினுடைய உதவி அல்லது கடன் அளிப்பதன் மூலம்தான் நிறைவேற்ற முடியும். அதுபோலவே துறைமுகத் திட்டம். ஆகவே இப்படிப்பட்ட குறிப்பிட்ட திட்டங்களுக்காவது மத்திய அரசு உதவி அளிக்க வேண்டும் அல்லது கடன் அளிக்க வேண்டும் என்பதுதான் மாநில அரசின் விருப்பம்.

**வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் எண்ணிக்கை.**

*வினா எண். 247—திரு. எஸ், இராசாராமன்: மாண்மிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980—1981, 1981—82-ஆம் ஆண்டுகளில் வேளாண்மை பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) மாணவர்கள் எந்தத் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) அரசு வேளாண்மைப் பள்ளிகளில் 1980—81-ல் 384 பேர்களும், 1981—82-ல் 255 பேர்களும் பயின்றுள்ளனர்.

(ஆ) 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாயலும் உள்ள 8-வது வகுப்பு தேறி, பயிர்த் தொழிலில் இரண்டாண்டு அனுபவம் உள்ள மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. செ. இராமலிங்கம் : வேளாண்மைப் பயிற்சிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது விவசாயிகள் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டும் என அரசு ஆணை பிறப்பிக்குமா ? அல்லது குறைந்தபட்சம் முன்னுரிமையாவது வழங்கப்படுமா ?



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பெரும்பாலும் விவசாயக் குடும்பங்களிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், ஏனென்றால் இரண்டாண்டுகள் விவசாயத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் என்கிறபோது பொதுவாக அந்தக் குடும்பங்களிலிருந்துதான் அப்படிப்பட்டவர்கள் வரமுடியும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : 1980—81 81—82ம் ஆண்டுகளில் பயிற்சி பெற்ற மாணவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை கிடைத்துவிட்டதா ? எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இதில் வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளித்து இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுவதில்லை. வேளாண்மைத் துறை முன்னேற்றத்திற்காகத்தான் இந்தப் பயிற்சி வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்புகள் கிடைக்கிற நேரத்தில் அவ்வப்போது அவர்கள் வேலை பெறுகிறார்கள்.

[முற்பகல் 9.30]

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எந்தெந்த இடங்களில் வேளாண் பயிற்சிப் பள்ளிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அது ஒரு நீண்ட பட்டியல். ஏறத்தாழ 13 இடங்களில் இந்தப் பயிற்சி பள்ளி செயல்படுகிறது. தனிக் கேள்வியாகக் கேட்டால், அவைமுன் வைக்கலாம்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண் பயிற்சிப் பள்ளியிலே படிக்கின்றவர்களுக்கு இப்போது தமிழக அரசின் மூலமாக பயிற்சி வழி தொடர்புத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த பயிற்சி வழி தொடர்புத் திட்டத்தில், அந்தப் பகுதிகளில் அவர்களுக்கு தேர்வு வைத்து, அதிலே வேலைக்கு ஆட்கள் எடுப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, இதுபோன்ற பயிற்சியில் அவர்கள் வேலை பெறுகின்ற அளவில், வகை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, இந்த பயிற்சி வழித் திட்டத்தில், அவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய ஜாயிண்ட் டைரக்டர் மூலமாக தேர்வு நடத்தி, வேலையில் சேர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது வேலை வாய்ப்புக்காக நடத்தப்படுகின்ற பயிற்சி அல்ல. வேளாண் துறையின் முன்னேற்றத்திற்காக, கிராமத்திலே அவர்கள் முற்போக்கு விவசாயிகளாக இருந்து, மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக அமையும் வகையில் இருக்க இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது. அவ்வப்போது ஏற்படுகின்ற பதவிகளில் இவர்கள், வயல்விளக்க, செயல்விளக்க உதவியாளர்கள் பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றார்கள்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த வேளாண் பயிற்சிப் பள்ளி, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தலைமையில் செயல்படுகின்ற திட்டம் என்று கருதுகிறேன். இந்த வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்ற பெரிய ஆராய்ச்சியாளர்கள், இந்தப் பயிற்சிப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு பயிற்சி கொடுக்கின்றார்கள். அங்கே வேலையில் இருக்கும் இவர்களுக்கு நியாயமான ஊதியம், பதவிகள் கிடைக்காமல் அவர்கள் கிளர்ச்சியை நடத்துகிறார்கள். எனவே, அவர்களைக் கூப்பிட்டு, நமது அமைச்சர் அவர்கள் அவர்களோடு பேசி, இந்தப் பிரச்னையை ஒழுங்காக முடிவு செய்வார்களா என்றும், இந்தப் பயிற்சியை அவர்கள் நல்ல முறையில் நடத்துவதற்கு வழிசெய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை வைத்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். இந்தப் பயிற்சிப் பள்ளிக்கும், வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கும் தொடர்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் அந்த ஆராய்ச்சியாளர்களை அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

திரு. பி. துரைராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு அரசாங்கம் எவ்வளவு உதவித் தொகை கொடுக்கின்றது? அந்த உதவித் தொகை போதவில்லையென்றால், அதை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாதம் ரூ. 70 உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. உதகமண்டலத்தில் ரூ. 75 உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றது. போதவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பிரச்னையைக் கிளப்ப வேண்டாம்.

### புதுக்கோட்டை மாவட்டம் வம்பனில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம்.

*வினா எண் 315—திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் வம்பனில் விவசாயக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மற்றுமொரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது. கல்லூரியை அமைப்பது என்று முடிவு செய்யும்போதுதான், இடம் எது என்பதை முடிவு செய்யலாம்.

திரு. பெ. திருமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே புதுக்கோட்டை மாவட்டத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரிலே, குடுமியான்மலையிலே ஒரு வேளாண்மைப் பண்ணை மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. அதேபோல்; வம்பனில் 500 ஏக்கர் பரப்பிலே ஒரு விதைப் பண்ணை நடந்து கொண்டிருக்கிறது. வலசரவகையில் 1,000 ஏக்கர் பரப்பிலே ஒரு பழப் பண்ணை நடந்து கொண்டிருக்கிறது: அந்த வகையில் புதுக்கோட்டையில் மண் வளம் வசதியாக உள்ளது. அங்கே உள்ள பண்ணையில் இப்போது 25 போர் வெல்கள் போட்டிருக்கிறார்கள். எனவே, புதுக்கோட்டை, மாவட்டத்தில் இந்த வேளாண்மைக் கல்லூரியை அமைத்தால், புதுக்கோட்டை மாவட்ட மக்கள் நலம் பெறுவதற்கும், வறட்சியாக உள்ள புதுக்கோட்டை மாவட்டம் முன்னேறுவதற்கும் ஒரு வாய்ப்பு உள்ளது. எனவே, அமைச்சர் அவர்கள் இந்தக் கல்லூரியை புதுக்கோட்டையில் அமைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கல்லூரி அமைக்க முடிவு செய்ததற்குப் பிறகு, அது வம்பனிலா அல்லது குடுமியான்மலையிலா என்பதை முடிவு செய்யலாம். இப்போது வம்பு செய்ய வேண்டாம்.

### தென்னை மரங்களை நோய் தாக்காமல் தடுக்கும் திட்டம்.

*வினா எண் 316—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை மரங்களை நோய் தாக்காமல் இருக்க தடுப்புமுறை (preventive method) ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) 1. தென்னை நெற்று தேர்ந்தெடுக்கும்பொழுது ஆரோக்கியமான நோய் தாக்காத தாய் மரங்களிலிருந்து விதை கொள்முதல் செய்வது. 2. தென்னங்கன்று நடும் முன்னர் 6 அடி ஆழம் வரை வெட்டி, பாறை இருக்கிறதா என்பதை அறிவது. அவ்வாறு கடினப் பகுதி இல்லையெனில், குருத்து அழுகல் நோய் பாதிப்பிராது. 3. தென்னங்கன்று நடும் முன், தோண்டப்பட்ட பகுதியில் அரை கிலோ பி.எச்.சி. 50 சதம் தூள் இடுவது மூலம் கரையான் தொல்லை தவிர்க்கப்படுகிறது. 4. சரியான உரம் இடுவது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே,
இது கடந்த 2—10—1980 யிலிருந்து தமிழகத்திலே
யிருக்கும் 378 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்
டிருக்கிறது. ஆகவே, எல்லா ஒன்றியங்களுக்கும் இந்த ஒருங்
கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கறவை
மாடுகள், பல்வேறு விவசாயக் கருவிகள் இவைகளெல்லாம்
கொடுக்கப்பட்டு வருகின்றன.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ;** மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, அமைச்சரவர்கள் வைத்திருக்கின்ற பட்டி
யலில் சிறு பாசனப் பணிகளுக்கு நிறையப் பணம் ஒதுக்கப்பட்
டிருக்கிறது. தற்பொழுது மக்கள் தண்ணீர் இல்லாமல் மிகவும்
கஷ்டப்படும் நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே உள்ள கிணறு
களை ஆழப்படுத்துவதற்கு இந்த மானியம் அளிக்கப்படுமா ?
மலைவாழ் மக்களுக்கு 50 சதவீதம் மானியமாகக் கொடுக்கப்
படுகிறது என்று இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை
யில் .03 சதவீதம்தான் மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள்.
ஆனால் பிற ஜாதியைச் சேர்ந்தவர்களும் மலைவாழ் மக்கள்
என்ற சர்டிபிகேட்டை வாங்கி அரிசனங்களுக்குக் கிடைக்கும்
அத்தனை பணத்தையும் எடுத்துக் கொள்ளுகின்ற சூழ்நிலை
இருக்கிறது. அதை அமைச்சரவர்கள் ஆராய்ந்து கண்டுபிடித்து
எஸ். சி. மக்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகளை அளிக்க முன்
வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே,
குறிப்பாக நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்தவரையில் இருக்
கின்ற ஏரிகளைப் பழுது பார்த்தல், புதிய கிணறுகளை வெட்டு
தல், பழைய கிணறுகளை ஆழப்படுத்துதல், ஆயில் என்சின்களை
வாங்கிக் கொடுத்தல் ஆகியவைகளை ஐ.ஆர்.டி.பி. மூலம் செய்து
கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 600
குடும்பங்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் உதவி செய்ய வேண்டு
மென்ற விதிமுறை இருக்கிறது. 600 குடும்பங்களில் ஏறத்தாழ
60 சதவீதம் ஆதி திராவிட மக்களுக்குத்தான் செய்ய வேண்டு
மென்ற விதிமுறைகளெல்லாம் இருக்கின்றன. ஆகவே, அப்படித்
தான் இந்தத் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்திக் கொண்
டிருக்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்
தைப் போலவே தன்னிறைவுத் திட்டமும் ஒரு முக்கியமான
திட்டமாகும். இன்றைக்கு வறட்சியின் காரணமாகத் தன்னிறை
வுத் திட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் சொன்னதாக நான் அறிகிறேன். ஆனால்
நிதிநிலை அறிக்கையில் தன்னிறைவுத் திட்டம் தொடர்ந்து
செயல்படுத்தப்படுவதாகக் குறிப்பு காணப்படுகிறது. ஆகவே,



தன்னிறைவுத் திட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறதா அல்லது
தொடர்ந்து செயல்படுகிறதா என்பதை அமைச்சர் மூலம் நான்
அறிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே,
கேள்வி ஐ.ஆர்.டி.பி. பற்றியது ; தன்னிறைவுத் திட்டம் பற்றி
யது அல்ல.

[முற்பகல் 9-40]

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
சொல்லும்போது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 8 லட்சம்
ரூபாய் இதற்காக இந்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்
டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு
உதவி செய்வதற்காக ஒதுக்கி இருப்பதாகச் சொன்னார்கள்.
இந்த 8 இலட்சம் ரூபாயை அவர்கள் பெற வேண்டும் என்று
சொன்னால் அவர்கள் 24 இலட்சம் ரூபாய் கடன்
வழங்குவதற்கு வங்கிகள் தயாராக இருக்க வேண்டும்.
இப்போது வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற
அரிஜன மக்கள் அல்லது மற்ற குறைந்த வருமானமுள்ள சிறு
விவசாயிகள் இந்தச் சலுகையைப் பெற முடியாததற்குக் காரணம்,
ஆங்காங்குள்ள தேச உடமையாக்கப்பட்ட வங்கிகளோ அல்லது
நம்முடைய கூட்டுறவு வங்கிகளோ முறையாக அவர்களுக்கு
கடன் கொடுப்பதில்லை என்பதை அமைச்சரவர்கள் தெரிந்து,
அரசாங்கமே இந்த 24 இலட்சம் ரூபாயை கடனாக வழங்கு
வதற்கு இந்த ஊரக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின்
கீழ் மானியம் கொடுக்கின்ற அதே இலாகா மூலமாக ஏற்பாடு
செய்தால்தான் அவர்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே வரு
வதற்கு உதவுவதாக இருக்கும். அமைச்சரவர்கள் இதை அறிந்து
இந்த (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரம் : சொற்
பொழிவு ஆற்ற நேரம் இருக்காது. இப்போதே மணி 9—41.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே,
இந்தத் திட்டத்தின் மூலமாக சிறு விவசாயிகள், விவசாயத்
தொழிலாளர்கள், ஆதி திராவிட மக்கள், மலை வாழ் மக்கள்
இவர்களுக்கெல்லாம் மானியம் கொடுக்கின்றோம். இந்தத்
திட்டத்தை அமல் படுத்துவது என்று சொன்னால் தேசீய
வங்கிகளின் மூலமாகத்தான் நாம் அமுல் படுத்திக் கொண்
டிருக்கின்றோம். ஏற்கெனவே மத்திய அரசின் உத்தரவு
மாநில அரசு சார்பாக தேசீய வங்கிகளாக இருக்கிற
வர்கள் இதற்கு உரிய பணத்தை உடனடியாக அவர்களுக்குக்
கொடுப்பதில்லை. அப்படி அவர்கள் கடன் கொடுப்பதாக
இருந்தாலும் கூட செகியூரிட்டி முதலில்லை கொடுந்தால்தான்
கொடுப்போம் என்கிற நிலையை உருவாக்கிக் கொண்டிருக்
கிறார்கள் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி இருக்கிறோம்.
ஆகவே மத்திய அரசு தான் இதற்கு உரிய நடவடிக்கைகளை
எடுக்க வேண்டுமென்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவரவர்களே இந்த ஐ.ஆர்.டி.பி. யில் சில ஒன்றியங்கள் சில பழக்க வழக்கங்களினால் அங்கே இருக்கின்ற சூழ்நிலையிலும் மற்ற சீதோஷ்ண நிலைமையிலே, கலப்பின கிடாரிகள், ஏனைய கால் நடை வளர்ப்பு மற்ற திட்டங்களையெல்லாம் பயன்படுத்த முடியாமல் இருக்கின்றன. அதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை வேறு ஒரு இனத்திற்கு, உதாரணமாக கறவை மாடுகள் வாங்குகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த இனத்திற்கு மாற்றுவதற்கு அரசு உத்தரவு இட ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன். சில இடங்களில் சில இனத்திற்கு பயன்படுத்த முடியாத நிலைமையில் இருக்கிறது. ஆகவே அந்த ஹெட்டில் இருப்பதை வேறு ஹெட்டிற்கு மாற்றம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவன செய்வாரா அல்லது அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து செய்யக் கூடிய திட்டம். ஆகவே ஏதாவது மாறுதல்கள் இருந்தாலும் கூட மத்திய அரசினுடைய ஒப்புதலோடுதான் நாம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே எந்தெந்த அடிப்படையிலே மானியங்கள் கொடுக்க முடியுமோ அவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு ஒன்றியங்கள் இருக்கின்றன. அந்த ஒன்றியத்திற்கு ஏற்ற முறையில் எங்கெங்கு ஆதி திராவிட மக்கள் அதிகமாக இருக்கிறார்களோ அங்கே அதிகமாக கொடுக்கிறோம். அதே போல விவசாயிகள் அதிகமாக இருந்தால் அவர்களுக்கு கொடுக்கின்றோம். அப்படிப்பட்ட நிலையில்தான் இவைகள செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாட்டிலுள்ள நெடுஞ்சாலைகள்.

*வினா எண் 290—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள நெடுஞ்சாலைகள் 8 டன் பளுவை தாங்கக்கூடிய அளவிற்கு முன்பு போடப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் தற்பொழுது 20 டன் பளு உள்ள வாகனங்கள் பெருமளவில் செல்வதால் சாலைகள் மாற்றி அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) அரசின் நிதி வசதிக்கேற்ப படிப்படியாக மாற்றி அமைக்கப்படும்.



திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே ஏற்கெனவே போடப்பட்டிருக்கிற நெடுஞ்சாலைகள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. அவைகளை சரிசெய்யும் வகையில் அரசு தற்போது எவ்வளவு சாலைகளை பழுது பார்க்க ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, கேள்வி பாலங்களைப்பற்றியது. இங்கே மான்யம் வருகிற நேரத்தில் அதை விவரமாகச் சொல்கிறேன்.

## சின்னசுரைக்காய்ப்பட்டியில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள்.

*வினா எண். 291—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் இராஜபாளையம் நகராட்சிக்குச் சொந்தமான, சின்னசுரைக்காய்ப்பட்டியில் கட்டி இருக்கும் குறைந்த வருமானமுள்ளவர்களின் குடியிருப்புகளில் அதிக வருமானமுள்ளவர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்பது உண்மையா ?

(ஆ) மேற்படி குடியிருப்புகளை விற்பனை செய்வதற்கு நகராட்சி முயற்சி செய்கிறது என்பதும் உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) திரு. பார்வதிநாதன் என்பவரைத்தவிர, மற்றவர்கள் குறைந்த வருமானம் உள்ளவர்கள்தான். திரு. பார்வதிநாதன் குடியிருந்த வீட்டை அவருக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யும் போது அவருடைய மாத வருமானம் ரூபாய் 730 ஆக இருந்தது. மாத வருவாய் ரூபாய் 600-க்குக் கீழ் இருப்பவர்கள்தான் குறைந்த வருவாய் வகுப்பில் சேர்க்கப்படுவர் என்றாலும் மற்ற 9 பேர்களுக்கும் வீடுகள் வழங்கப்பட்டதாலும் இவர் ஓர் ஆதி திராவிடராக இருப்பதாலும் இதனை பரிவுடன் ஆராய்ந்து இவருக்கு விசேட சலுகை அளித்து இவ்வீட்டினை கொடுக்கலாமென அரசு முடிவெடுத்துள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இராமநாதபுரம் மாவட்டம் இராஜபாளையம் நகராட்சிக்குச் சொந்தமான சின்னசுரைக்காய்ப்பட்டியில் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காக கட்டி உள்ள வீடுகளில், குறைந்த வருமானம் உள்ளவர்கள், நகராட்சிகளில் பணிபுரிகின்றவர்கள் இருந்தும்கூட, அவர்களுக்கு இந்த வீடுகளைக் கொடுக்காமல், அதிகமாக வருமானம் உள்ள, வெளியே இருப்பவர்களுக்குக்

**திரு. எஸ். சிவராமன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக தற்சமயம் கிராமங்களில் இருக்கும் தென்னைகளில் பூஞ்சான் என்ற நோய் வந்து, சிகப்பு புழு மரத்தையே அழித்து விடுகின்றது. அதோடு மட்டுமல்லாமல், அந்த நோய் அடுத்த மரத்திற்கும் பரவுகின்றது. அதைத் தடுப்பதற்கு அரசு தீவிர மாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, ஏற்பட்டிருக்கிறது என்ன என்பதைக் கண்டறிந்து தான் அதற்குத் தக்க வகையில் முறையான நடவடிக்கை எடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அவர்களுடைய பகுதியில் அப் படிப்பட்ட நிலையிலிருந்து அதைத் தெரிவித்தால் வேளாண்மைத் துறை அலுவலர்கள் உரிய நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர் கள் கூறும்போது சில முறைகளைச் சொல்லி, உரத்தைப் போட்டு நடலாம் என்று அறிவுரை கூறியிருக்கிறார்கள். ஆனால் அடி மட்டக் காய் அல்லது குருத்துக் காயில் நோய் வருகிறதே, அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று அமைச்சரவர்கள் அறி விப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, அதுபற்றி நாம் உரிய நடவடிக்கை எடுத்து, குமரி மாவட்டத்திலும் தஞ்சை மாவட்டத்திலும் ஏற்படுகின்ற வாடல் நோயை தடுப் பதற்கு உரிய மானியம் வழங்கப்பட்டு வருகிறது. தென்னையை காப்பாற்றுவதற்கு அதில் ஏற்பட்டிருக்கும் நோய் என்ன என் பதை அந்த வட்டாரத்தில் இருப்பவர்களுக்குத் தெரிவித்தால் அவர்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. டி. மணி:** பேரவைத் தலைவரவர்களே, தென்னை மரங்களைத் தாக்குகின்ற ஒருவிதமான வாடல் நோய் அடுத்த மரங்களுக்கும் பரவுகின்றது. மேலும் பக்கத்தில் நிற்கின்ற பாக்கு மரங்களுக்கு ஏற்படுகின்ற வாடல் நோய் போன்ற கொண்டை ஒடிந்து போகும் நிலைமை ஏற்பட்டு, பாக்கு மரத்திற்கு ஏற்படுகின்ற நோய் தென்னை மரத்திற்கும் பரவுகின்றது. இதைத் தடுப்பதற்கு பரவலாக என்ன நட வடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, நோய் என்ன என்பதைக் கண்டறிந்து தான் நடவடிக்கை எடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் பாக்கு மரத் திற்கு வருகின்ற நோய் தென்னை மரத்தையும் தாக்குகிறது என்று சொல்கிறார்கள். குமரி மாவட்டத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருந்தால் அதை உரிய வகையிலே பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம்.



## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள்.

*வினா எண் 289—**திரு. மா. சுப்பிரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிறு விவசாயிகளுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின் றன ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை ** பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. மா. சுப்பிரமணியன் :** மாண்புமிகு தலைவரவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கென எவ் வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ? மைய அரசும் மாநில அரசும் தனித்தனியாக இத்திட்டத்திற்கு எவ்வளவு தொகை வழங்கு கிறது? ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் எவ்வளவு தொகை இத்திட்டத்திற்காக ஒதுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 131 கோடியே 60 இலட்சம் ரூபாய் மானியமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை யில் மத்திய அரசு 50 சதவீதமும், மாநில அரசு 50 சதவீதமும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்பொழுது ஒவ்வொரு ஒன்றியத் திற்கும் சுமார் எட்டு இலட்சம் ரூபாய் மானியமாகக் கொடுக் கப்படுகிறது.

**திரு. மா. சுப்பிரமணியன் :** மாண்புமிகு தலைவரவர்களே, வறட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இத்திட்டத்தின் மூலம் ஊக்கு விக்கப்படுகிறது. நெற் களஞ்சியமான தஞ்சை மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, உழவு மாடுகள், மாட்டு வண்டிகள், கறவை மாடுகள் வழங்குவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

---

** 632-ம் பக்கத்தில் இணைப்பு 1 ஆக அச்சிடப் பெற்றுள் ளது.

கொடுக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையா? அப்படி இருந்தால் இப்போதாவது குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு அந்த வீடுகள் கொடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன். அத்தோடு அந்த வீடுகளை வெளியில் உள்ளவர்களுக்கு விற்பதற்கு முயற்சிகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுவும் உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குத்தான் அந்த வீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரே ஒருவருக்குத்தான், திரு. பார்வதி நாதன் என்ற ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவருக்கு, ஒதுக்கப்பட்டது. அவர் அரசுக்கு கோரிக்கை அனுப்பிபரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற்குப் பிறகு அரசு இவருக்கு மட்டும் விதிகளைத் தளர்த்தி இவருக்கு குடியிருப்பு வீடு ஒதுக்கப்பட்டது. தவிர. வீடுகளை வெளியில் உள்ளவர்களுக்கு விற்பது பற்றி எந்தத் தகவலும் அரசுக்கு வரவில்லை அப்படி வந்தால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

### பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களால் வெளியிடப்பட்ட ஆணைகள்.

*வினா எண். 292—திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளில் முதல்நிலை பேரூராட்சிகளைத் தேர்வுநிலை பேரூராட்சிகளாக்கி, முதல் நிலை நிர்வாக அதிகாரிகளை தேர்வுநிலை நிர்வாக அதிகாரிகளாக நியமனம் செய்து பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களால் இடப்பட்ட உத்தரவு திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் அமுல்படுத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் நிறுத்தப்பட்டுள்ளதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்திலும் தக்க ஆணைகள் வெளியிட பேரூராட்சி இயக்குநருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளில் முதல்நிலை பேரூராட்சிகளை தேர்வுநிலை பேரூராட்சிகளாக்கியும், முதல்நிலை நிர்வாக அதிகாரிகளை தேர்வு நிலை அதிகாரிகளாக நியமனம் செய்தும், மாற்றியிருக்கிறார்கள். ஆனால், திருநெல்வேலி மாவட்டத்தில்



மட்டும் ஏன் தாமதம் செய்து இன்னமும் தேர்வுநிலை அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. அதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திற்கு தக்க நடவடிக்கை எடுத்து ஆணைகள் வெளியிட இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர் நவநீதகிருஷ்ணபாண்டியன்: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை முதல் நிலை பேரூராட்சிகள் தேர்வுநிலை பேரூராட்சிகளாக மாற்றப்பட்டு உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் ஆணைகள் வெளியிடப்பட்டு இருக்கின்றன. ஆகவே, இனிமேல்தான் எத்தனை முதல்நிலை பேரூராட்சிகள் தேர்வு நிலைப் பேரூராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன என்பது தெரியும்.

### அரசு மருத்துவ மனைகளில் மருந்துகள் திருடுபோவதைத் தடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகள்.

*வினா எண். 317—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அரசு மருத்துவமனைகளில் மருந்து திருடி விற்றதாக மருத்துவ ஊழியர்கள் 1981 ஏப்ரலில் கைது செய்யப்பட்டு உள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்து திருடு போகாமல் இருக்க அரசு பிரத்தியேக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஒரு விவர அறிக்கை * பேரவை முன்வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் திருவொற்றியூர் மற்றும் சென்னை ராயப்பேட்டை, ஸ்டான்லி போன்ற மருத்துவ மனை

*633-ம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது

களில் மருந்து திருடு சம்பந்தமாக பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு இந்த மருந்துகள் திருடு போவதைத் தடுப்பதற்காக லோகோ முத்திரை இடுகின்ற மருந்துகளைத்தான் வாங்க வேண்டுமென்று விதிமுறை ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நான் கேட்க விரும்புவதெல்லாம், இந்த திருடு போனதற்குப் பிறகுதான் இந்த முறைகளை அரசாங்கம் கையாளுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதற்குப் பிறகுதான் இந்த களவுகள் நடைபெற்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு 23 ஆம் தேதி டிசம்பர் மாதம் இந்த உத்தரவை நாம் போட்டிருக்கிறோம்.

Drugs and Medicine—Introduction of special package system of drugs and Medicines supply to Government Medical Institution—orders issued என்று உத்தரவிலே நாம் தெளிவாக போட்டிருக்கிறோம். அந்த இந்த திருட்டு எப்போது நடந்தது என்றால், ஆனால், ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்திருக்கிறது. ஆகவே நாம் 1981ஆம் லோகோ முத்திரை போட்டால் ஓரளவு தடுக்க முடியும் என்றுதான் போட்டிருக்கிறோம். அப்படிப் போட்டாலும் பல இடங்களில் திருட்டு நடக்கிறது. அப்படி நடக்கின்ற இடத்திலே நாம் உடனடியாக கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க ஆயத்தங்கள் செய்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதனுடைய விரிவான அறிக்கையைத்தான் நான் இங்கே வைத்திருக்கிறேன்.

(முற்பகல் 9–50)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அளிக்கப்பட்டு இருக்கின்ற அறிக்கையில் சம்பந்தப்பட்ட மருத்துவ மனையில் இருக்கின்ற அந்தத் தலைமைப் பொறுப்பாளர் மருந்து கிடங்குகளில் உள்ள மருந்துகளைச் சோதனையிடுவதாகவும், அந்த வகையில் அந்தத் திருட்டு நடவடிக்கைகள் தடுப்பதாகவும் சொல்லப்பட்டு இருக்கிறது. இப்படி திருடு போகின்றபோது அதிகாரிகள் அந்தக் காலகட்டத்தில் சோதனை இட்டு இருக்கிறார்களா என்பதை அரசு அறியுமா ? பல்வேறு மருத்துவமனையில் இப்படி பரவலாக தமிழ்நாடு முழுவதிலும் மருந்துகள் திருடு போவதால், அந்த மருந்து கிடங்குகளைத் திடீர் திடீரென்று சோதனையிடுவதற்காக தனி அதிகாரிகள் நியமனம் செய்து, அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காகத் தனிப்பிரிவு தேவையில்லை என்று அரசு கருதுகிறது. இப்போது எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகளின் காரணமாக அது கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. சோதனையிடும் முறையும் எந்த வகையில் செய்யப்பட வேண்டும் என்று திட்டவட்டமான முறையில் நாம் அறிவுரைகள் கொடுத்து இருக்கிறோம்.

System of checks and counter—checks ; ஒவ்வொரு மருத்துவ மனையையும் ஒரு அதிகாரி போய் சோதனையிட வேண்டும் என்று விளம்பரப்படுத்தாமல் செய்துகொண்டு இருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் அதை நாம் கண்டுபிடித்தோம்.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில பகுதிகளில் உள்ள அரசு மருத்துவ மனையில் அரசு மருந்துகள் திருடப்படுகின்றன என்ற தகவலைத் தந்து இருக்கிறார்கள். நான் கருதுகிறேன் தற்போது பல ஊசி மருந்துகள் பேரில் 'நாட் பார் சேல்' என்று தான் போடப்பட்டு இருக்கிறது. தமிழில் ' விற்பனைக்குரியது அல்ல ' என்று போடப்பட்டு இருக்காது. நான் தினம் தினமும் ஊசி போட்டுக்கொண்டு, அதிலே ஊறிப்போய் இருப்பதால் இதை நன்றாக அறிவேன். தமிழ் அதிகமாக உள்ள நம்முடைய மாநிலத்தில் ' நாட் பார் சேல் ' என்று போடுவதை விட ' விற்பனைக்குரியது அல்ல ' என்று போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை.

திரு. கோவைத் தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, மருந்துகள் திருடு போவது என்பது வருந்தத்தக்கது. இந்தியாவிலே எப்படி ' கரன்சி நோட்டுகளுக்குப் ' பாதுகாப்பு அளிக்கப்படுகிறதோ, ' தங்கத்திற்கு பாதுகாப்பு ' அளிக்கப்படுகிறதோ, அதைவிட முக்கியம் வாய்ந்ததாக, மதிப்புள்ளதாக இந்த மருந்துகள் இருக்கின்ற காரணத்தால், வங்கிகளில் கரன்சி நோட்டுகளுக்கும், தங்கத்திற்கும் அளிக்கப்படும் பாதுகாப்பைப் போல, மருந்துகளுக்கும் பாதுகாப்பு அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்ன மாதிரியாக மருத்துவ மனைகளில் உள்ள மருந்துகளை அவ்வப்போது ஒரு அதிகாரி சென்று சோதனை செய்து வருகிறார். முன்பு டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீசஸ் மூலமாக மருத்துவமனைகள் சோதனை செய்யப்பட்டதை விட 3 மடங்கு, 4 மடங்கு

அதிகமாக அந்தப் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. திடீர் திடீரென்று சோதனை செய்கிறோம். அது மட்டுமல்லாமல், அமைச்சர் என்ற முறையில் நானே பல இடங்களுக்குச் சென்று சோதனை செய்கிறேன். அப்படிச் செய்வது வெளியில் தகவல் வராது. ஓரிரு இடங்களில் வந்து இருக்கலாம். ஆனால், பல இடங்களில் நான் சோதனை செய்து, அதிலே குறைபாடுகள் இருந்தால், அது குறித்து அறிக்கை அனுப்பி, உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு இருக்கிறோம். இந்தச் செக்கிங் சிஸ்டம் நன்றாக நடந்து கொண்டு இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களிலும் மற்ற தாலுக்காவிலும் உள்ள மருத்துவமனைகளில் உள்ள வியாதியஸ்தர்களுக்கும், அங்கே செல்லக்கூடிய வியாதியஸ்தர்களுக்கும் தேவையான மருந்துகள் அங்கே கிடைக்காமல், அந்த நோயாளிகளையே வெளியில் அந்த மருந்துகளை வாங்கச் சொல்லி மருத்துவர்கள் சொல்வது அரசுக்குத் தெரியுமா? குளுகோஸ் வேண்டும் என்றால்கூட டாக்டர் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அதைக்கூட வெளியில் இருந்து வாங்கிக் கொள்ளவேண்டியிருக்கிறது. நம்முடைய விடுதியில் இருக்கும் மருத்துவமனையில் 'இன்சுலின்' மருந்து கூட இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை இங்கே இருக்கின்றபோது, கிராமங்களில் இருக்கும் சாதாரண மருத்துவமனையில் தேவையான மருந்துகள் எப்படி கிடைக்கும்? இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அவர்கள் மூலக்கேள்விக்கு சம்பந்தமில்லாத வேறொரு கேள்வியைக் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். மருந்து கிடைக்கிறதா என்று கேட்டார்கள். மருந்து கிடைக்கிறது. ஸ்டாக் முடிந்தவுடனே கிடைக்கவில்லை என்றால், அந்தந்த மருத்துவ அதிகாரிகள் 200 ரூபாய் வரையிலான மருந்துகளை வாங்கிக் கொள்ளலாம் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். அத்தகைய மருந்து அங்கே இருந்தும் கொடுக்கவில்லை என்றால், அதுபற்றி நமக்குத் தகவல் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கிறோம். இன்னொரு விஷயத்தையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட 'பிராண்ட்' மருந்து — உதாரணமாக 'பைசர்', 'காம்போஸ்' போன்றவை — கிடைக்கவில்லை என்றால், இதற்கு ஈடான வேறொரு பிராண்ட் கிடைக்கிறது. வேறு ஒரு கம்பெனி மருந்து கிடைப்பதாக இருந்தாலும் நோயாளிகள் அந்த குறிப்பிட்ட பிராண்ட் மருந்துதான் வேண்டுமென்று கேட்கும்போது இப்படிப்பட்ட சில இடையூறுகள் வருகின்றன. மருந்துகள் இல்லை என்ற குறை அடியோடு தீர்க்கப்படவில்லை என்றாலும் முன்பு இருந்ததைவிட இப்போது பெருமளவு குறைந்திருக்கிறது.



குறிப்பிட்ட புகார் எதுவும் வந்தால் உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருக்கிறோம். அப்படி குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கோவை மற்றும் திருப்பூரிலுள்ள மருத்துவமனைகளில் பிணங்களை எடுத்துச் செல்ல வாகன வசதி ஏற்படுத்தும் திட்டம்.**

*வினா எண். 318—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் திருப்பூர் மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும் நோயாளிகள் இறந்துவிட்டால், அவர்களின் உடல்களை எடுத்துச் செல்ல வாகன வசதி ஏற்படுத்த ஏற்பாடுகள் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) கோவை மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலும், திருப்பூர் மாவட்ட தலைமை மருத்துவமனையிலும் பிணங்கள் எடுத்துச் செல்ல பிண ஊர்திகள் உள்ளன.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, சாதாரண மக்கள் அந்த மருத்துவ மனைகளில் இறந்துவிட்டால் அவர்களுடைய சடலங்களை எடுத்துச் செல்ல இந்த ஊர்திகளைக் கேட்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் ஏழை எளிய மக்களுக்கு இந்த ஊர்திகள் கிடைக்காததால், அந்த சடலங்களை எடுத்துச் செல்ல 500 ரூபாய், 1,000 ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது., ஆகவே, இந்த மாவட்ட மருத்துவ மனைகளிலும், வட்ட மருத்துவ மனைகளிலும் குறைந்தபட்சம் இந்த வண்டிகளை கராராக வைத்திருந்து, தேவையானவர்களுக்கு கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இந்த கேள்வியை எழுப்பியவுடனே இன்னொரு தகவலையும் நான் [illegible], எத்தனை பிணங்கள் அங்கே கிடங்குகளில்

வைக்கப்பட்டன ; எத்தனை பிணங்கள் இந்த ஊர்திகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன என்ற தகவலையும் கேட்டு வாங்கியிருக்கிறேன். 1982 ஆம் ஆண்டு இறந்தவர்கள் சடலங்கள் இந்த போஸ்ட்மார்ட்டம் மார்ச்சுவரியில் வைக்கப்பட்டவை 240 ; இந்த ஊர்திகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டவை 179. 240 சடலங்களில் 179 இந்த ஊர்திகள் மூலம் அகற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த வண்டிகள் சரியாகப் பயன்படுத்தப்படும் நிலைமை இருக்கிறது என்று கண்டறிந்திருக்கிறோம். ஒன்றிரண்டு இடங்களில் சரிய க பயன்படவில்லை என்று தகவல் கிடைத்த உடனே நடவடிக்கை எடுக்கிறோம். அதுமட்டுமல்லாமல், ஜட்கா வண்டிக்காரர்களோடு பேரம் பேசி, இந்த ஊர்திகள் பழுதடைந்து விட்டன. இயங்காது என்று சொல்வதாக புகார் வருகிறது. அதுபற்றியும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே இறந்த சடலத்தைக் கொண்டு போக இந்த ஏற்பாடுகள் ஓரளவுக்கு சரியாகச் செய்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் நோயினால் பாதிக்கப்பட்ட சிலர் வட்ட மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று, மேலும் அங்கே போதிய மருந்து இல்லாததாலோ அல்லது வேறுவிதமான சிகிச்சை அளிக்க போதிய வசதி இல்லாததாலோ பெரிய மருத்துவ மனைக்கு அந்த நோயாளிகள் அனுப்பப்படும் சூழ் நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் அங்கே ஆம்புலன்ஸ் வண்டிகள் இருந்தும்கூட அந்த நோயாளிகளை எடுத்துச் செல்ல மறுத்துவிடுகிறார்கள். அதைப்போல சடலங்களை எடுத்துச் செல்லவும் மறுக்கிறார்கள். உடுமலைப் பேட்டையில் உரிய நேரத்தில் ஒரு நோயாளியை எடுத்துச் செல்லாத காரணத்தால் அங்கே இறந்துவிட்ட நிலைமை எல்லாம் ஏற்பட்டது. இதிலே பாரபட்சம் காட்டாமல் தேவையானவர்களுக்கு இந்த ஊர்திகள் கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு உத்திரவாதம் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே நிச்சயமாக உத்திரவாதம் செய்யப்படும்.

### குமரி மாவட்டத்தில் முன்னாள் அரசு போக்குவரத்துத் துறையில் பணி :ாற்றிய ஊழியர்கள்.

*வினா எண் 319—திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் முன்னாள் அரசு போக்குவரத்துத் துறையில் பணியாற்றி பின் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் பணியில் சேர்ந்தவர்களுக்கு அரசு போக்கு



வரத்தாக இருந்த காலத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய ஈட்டுப் பணிக்கொடை ஈட்டு ஓய்வூதியம் முதலியன கொடுக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) இல்லையெனில், உடனடியாகக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) முன்னாள் அரசு போக்குவரத்துத் துறையில் பணியாற்றி பின் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் பணியில் சேர்ந்தவர்களுக்கு அரசு போக்குவரத்தாக இருந்த காலத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய பணிக் கொடையை உடனடியாகவும், ஓய்வூதியத்தைக் கழகத்திலிருந்து ஓய்வு பெறும்போதும், வேலையை விட்டுச் செல்லும் போதும் கணக்கினை முடிப்பதற்கு, முன்னாள் அரசு போக்குவரத்துத் துறை ஊழியர்கள் அனைவரிடமிருந்தும் அரசு ஆணை 284, நிதித் துறை (சி.எப்.சி.), தேதி 31—3—1980 -ன்படி, விருப்புரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டது. ஆனால் முன்னாள் அரசு போக்குவரத்துத் துறை ஊழியர்களை ஆறு பேர்களைத் தவிர, எவரிடமிருந்தும் விருப்புரிமை வரவில்லை.

(ஆ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் வேலை பார்த்துவரும் முன்னாள் அரசு போக்குவரத்துத் துறை ஊழியர்கள் தங்களுடைய விருப்புரிமையை அளித்தபின் அவர்களுக்கு உடனடியாக பணிக்கொடையை பணமாகவும், ஓய்வூதியத்தை கழகத்திலிருந்து ஓய்வுபெறும்போதும் கொடுக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில், பணியாற்றுகிற முன்னாள் அரசு போக்குவரத்து ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஈட்டுப் பணிக்கொடை, ஈட்டு ஓய்வூதியம் தொகைகளை வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்த பிறகும், அதற்கான விருப்பை அவர்கள் தரவேண்டும் என்று அறிவித்த பிறகு, சிலர் விருப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்றாலும், ஊழியர்களில் சிலர் காலமாகியிருக்கிறார்கள். அவர்களுடைய வாரிசுகளுக்கு அந்தத் தொகையை கொடுப்பதற்கு என்ன முடிவுகள் எடுக்கப்பட்டு உள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக சில ஊழியர்கள் இப்போது நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். சில பேர்கள்

மட்டும் விருப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி கொடுத்த வர்களுக்கு சேர வேண்டிய தொகை சேர்க்கப்பட்டுவிட்டது. விருப்புரிமை கொடுக்காதவர்களுக்கு, ஒட்டு மொத்தமாக ஏதாவது தீர்ப்பு நீதிமன்றத்திலிருந்து வழங்கப்படுமேயானால் அந்த அடிப்படையிலோ, அல்லது நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஒப்பந்தம் ஏதாவது ஏற்படுமேயானால், இறந்தவர்களாக இருந்தாலும் சரி, ஓய்வு பெற்றவர்களாக இருந்தாலும் சரி, தற்போது பணியில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, தேவையான காரியங்களைச் செய்ய நிர்வாகம் தயாராக இருக்கிறது.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே அந்தப் பணியாளர்களை நேரில் அழைத்துப் பேசி முடிவு எடுக்க முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அவர்கள் நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். அந்த வழக்கை அவர்கள் வாபஸ் பெற்றுக் கொண்டோ அல்லது, இதை முடித்துக்கொண்டு வாபஸ் பெறுவதற்கு அவர்கள் தயாராக இருந்தாலோ, அரசாங்கம் பேசுவதற்கு தயக்கம் காட்டாது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கப் போக்குவரத்துத் துறையின் கீழ் இருந்த அந்த போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு கடந்த காலத்திலே சேர வேண்டிய தொகையை சரியாக வழங்க வேண்டும் என்று கேட்டு, தொழிற்சங்கங்கள் மூலமாக அவர்கள் அரசாங்கத்தை அணுகிய காலத்தில், அதற்குத் தகுந்த பரிகாரம் கொடுக்காததன் காரணமாகத்தான் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறையை அழைத்துப் பேசியோ அல்லது தொழிலாளர்களை அழைத்துப் பேசியோ, கொடுக்க வேண்டிய கிராச்சுவிட்டியை காலாகாலத்தில் கொடுக்க ஏற்பாடு செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கனவே சொன்னேன், தொழிலாளர்கள் தயாராக இருந்தால், அரசு எந்த நேரத்திலும் தயாராக இருக்கும், தயக்கம் காட்டாது என்று.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் 1975-ல் அமைக்கப்பட்டதற்குப் பிறகு, அரசு ஊழியர்களாக இருந்த காலத்திற்கான பணம், அவர்களுக்கு முன் பணமாகத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர அவர்களுடைய கணக்குகள் முழுமையாக முடிக்கப்படவில்லை என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டும், ஏற்கனவே 378-வது ஜி. ஓ. படி தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுவதாக இருந்த அதிகபட்சப் பணம், இரண்டாவதாக போடப்பட்ட 284-வது ஜி. ஓ. படி குறைக்கப்பட்டதன் காரணமாகவும் தான் அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் அதன் காரணமாக ஓய்வு பெறக்கூடிய தொழிலாளர்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் சம்பந்தப்பட்ட எல்லாச் சங்கங்களையும் அழைத்துப் பேசி இதற்கு ஒரு முடிவு காண அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இது சம்பந்தமாக நாம் பேசியிருக்கிறோம். பேசிய பின்னும் கூட இந்தப் பிரச்சினை முடிவு அடையவில்லை. எனவே தொழிற்சங்கத் தலைவர்கள், இது பற்றி முழுமையாகப் பேசத் தயாராக வருகிறபோதுதான், எந்த ஜி. ஓ.வை எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு எடுக்க வேண்டும். எனவே ஜி.ஓ. வைப் பொறுத்துத்தான் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள் என்பது இல்லை. வேறு விதமான சூழ்நிலைகளின் காரணமாகக் கூட கோர்ட்டுக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது. எனவே அந்த முறையில் அழைத்துப் பேசி முடிவு எடுக்கலாம்.

## ஸ்டாண்டர்டு மற்றும் மெட்டாடர் வேன்களுக்கு சுற்றுலா அனுமதி வழங்கும் திட்டம்

*வினா எண். 320—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஸ்டாண்டர்டு, மெட்டாடர் வேன்களுக்கு சுற்றுலா அனுமதி (Tourist Permit) வழங்க அரசு செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மெட்டாடர் மற்றும் ஸ்டாண்டர்டு 20 மூடு வண்டிகளுக்கு சுற்றுலா வாடகைச் சீருந்து அளிப்பது குறித்து அரசு பரிசீலித்து ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி ஓட்டுநர் நீங்கலாக ஆறு பயணி இருக்கைகள் கொண்ட மெட்டாடர் மற்றும் ஸ்டாண்டர்டு-20 மூடு வண்டிகளுக்கு சுற்றுலா வாடகைச் சீருந்து வழங்க அனுமதித்துள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சுற்றுலா கழகத்திற்கு வழங்கப் பட்டுள்ள வேன்களுக்கு எவ்வளவு கட்டணங்கள் தற்போது வசூலிக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டாக்ஸ் எவ்வளவு என்று கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். ஒரு இருக்கைக்கு 25 ரூபாய் வீதம் 6 இருக்கைகளுக்கு 150 ரூபாய் வசூலிக்கப்படுகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாடு முழுவதும் எத்தனை வண்டிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது? இப்போது அனு மதிக்கப்பட்டுள்ள 6 இருக்கைகளுக்குக் கூடுதலாக உயர்த்துவதற்கு அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 143 மெட்டாடர் வண்டிகளுக்கும், 318 ஸ்டாண்டர்டு 20 வண்டிகளுக்கும் அனுமதி அளிக்கப்பட்டிருக் கின்றது. இது போக 345 வண்டிகளைப் பொறுத்தவரையில் 6 மாதங்களுக்குள்ளாக வண்டிகளைக் கொண்டு வந்து காட்ட வேண்டும் என்று சொல்லி ஒரு கண்டிஷன் போட்டு அதன்படி அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றது. 6 இருக்கை களுக்குமேல் அதிகப்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை. ஏனென் றால் 6 இருக்கைகளுக்குமேல் போனால், அது சீருந்துவாக இருக் காது, மினி பஸ்ஸாக ஆகிவிடும். அதற்கு டாக்ஸ் அதிகம்; எனவே அந்தக் காரணத்தால் இருக்கைகளை அதற்கு மேல் அனு மதிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, இருக்கை களின் எண்ணிக்கை அடிப்படையில் வரி விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இருக்கை எண்ணிக்கை அடிப்படையிலே வரி விதிக்க வேண்டும் என்றுதான் ஆணையிடப்பட்டு இருக்கின்றது. எனவே 6 இருக்கைகளுக்கு மேலே மெட்டாடர் மற்றும் ஸ்டாண்டர்டு-20 வண்டிகளுக்கு அனுமதி அளிக்கப்படுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் கேட்கப்பட்ட கேள்விக்கு என்ன பதிலைச் சொன்னார்கள் என்று தெரிந்து கொண்டு உறுப்பினர்கள் மேலும் கேள்வி கேட்க வேண்டுமே தவிர, கேட்ட கேள்வியினையே திரும்பவும் கேட்கக்கூடாது.



## மோட்டார் வாகனங்களுக்கு குறிப்பிட்ட எண் கிடைக்க வசூலிக்கப்படும் சிறப்புக் கட்டணம்

*வினா எண். 321—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோட்டார் வாகன சொந்தக்காரர்கள் குறிப்பிட்ட எண் தங்களுக்கு கிடைக்கக் கோரினால் சிறப்புக் கட்டணம் வசூ லிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) ரூ. 100 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

திரு. ஆர். டி. கோபாலன் : தலைவர் அவர்களே, வண்டி களின் எண்களைப் பொறுத்தவரையிலே அதிர்ஷ்டத்தின் அடிப் படையிலும் அந்த எண்களைக் கூட்டுவதால் உண்டாகும் எண் குறிப்பிட்ட ஒரு எண்ணாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை யிலும் சிலர் அந்த எண்களைப் பெறுவதற்கு விரும்புகிறார்கள். எனவே அப்படிப்பட்ட எண்களைப் பொது ஏலத்தின் மூலம் கொடுத்தால் அதனால் அரசுக்கு அதிக வருமானம் வரும். எனவே அவ்வாறு அரசுக்கு அதிக வருமானம் வருகின்ற வகை யிலே அந்த எண்களைப் பொது ஏலத்தில் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அரசாங்கம் எல்லாவற்றையும் ஏலம் போட்டுக் கொண்டிருக்க முடியாது. சிலவற்றை சில நன்மைகளைக் கருதி கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் எல்லாவற்றையும் ஏலம் போட முடியாது. ஆனால் ஸ்பெஷல் எண்களை வாங்குவதற்கு 100 ரூபாய் என்ற கட்டணம் மிகவும் குறைவு. 80,000 ரூபாய் ஒரு இலட்சம் ரூபாய் என்று பணம் கொடுத்து வண்டிகளை வாங்குகின்றபோது இந்த கட்டணம் மிகவும் குறைவாக இருக்கின்றது. எனவே இதனை 100 ரூபாய் என்பதற்குப் பதிலாக 500 ரூபாய் என்று மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது குறித்து நிதித்துறை தேவையான நேரத்தில் ஆய்வு செய்யும் என்று கருதுகிறேன்.

மற்ற மாவட்டங்களில் ஒரு பனைத் தொழில் மையம் அமைத்துக் கொடுக்கிற போது நெல்லை மாவட்டத்தில் மட்டும் 3 இடங்களில் அதாவது வள்ளியூர், அந்தோணியார்புரம், டி. நாப்பாத்தி ஆகிய 3 இடங்களில் அந்தத் தொழில் மையங்கள் உருவாக்கப்பட்டு இந்த பாம்கோலா போன்ற தொழில்கள் அங்கு ஆரம்பிக்கப் பட்டது. ஏறக்குறைய ஆயிரம் பேர்களுக்கு மேல் பனைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு ஆய்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**கால்நடை தீவன உற்பத்திக்காக வழங்கப்படும் அரசு மானியம்.**

*வினா எண். 323—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கால் நடை தீவன உற்பத்திக்காக அரசு மானியம் வழங்கி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், வழங்கும் தொகை எவ்வளவு ?

(இ) எந்த அடிப்படையில் அது நிர்ணயிக்கப்படுகிறது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) மானியம் ரூபாய் 100 முதல் 300 வரை வழங்கப் படுகிறது.

(இ) புல் துணுக்குகள் வழங்குதல், பசுந்தீவனத் தழை தரும் மரச் செடிக் கன்றுகள் வழங்குதல், செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல், புல் வெட்டும் கருவிகள் வழங்குதல், தீவனப் பயிர் பராமரிப்பு மானியம் வழங்குதல் மற்றும் சைலேஜ் குழிகள் அமைத்தல் என்ற ஆறு பிரிவுகளின் கீழ் மானியம் வழங்கப்படுகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த எந்தப் பகுதிகளில் இப்படிப்பட்ட மானியம் வழங்குகிற முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது என்ற விவரத்தையும் மேலும் இந்த வசதிகளை எந்த எந்த இடங்களுக்கு விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீவன உற்பத்திக்கான தீவிர கால் நடை அபிவிருத்தி திட்டம் 9 பகுதிகளில் அதாவது திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, மதுரை, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, பண்ருட்டி மற்றும் தாம்பரம் ஆகிய பகுதிகளில் செயல்பட்டு வருகின்றது. இதில் உசிலம்பட்டி மற்றும் வாடிப்பட்டி பிரிவு 1979—80-லிருந்து செயல்படத் துவங்கியுள்ளது. மேலும், பண்ருட்டி மற்றும் தாம்பரம் பிரிவுகள் 1981—82-லிருந்து செயல்படத் துவங்கியுள்ளது. கால்நடை தீவன அபிவிருத்தியில் விஞ்ஞான முறைகளைக் கையாளுவது நமது விவசாயிகளிடையே குறைவாக காணப்படுகிறது. அதை முறையாக உரமிட்டு உரிய வழியில் வளர்ப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக விவசாயிகளுக்கு ஆகும் செலவில் ஒரு பகுதி மானியமாக வழங்கப்படுகிறது. மானியம் வழங்கும் பொழுது ஒரு நபருக்கு ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் மட்டும் மானியம் வழங்கப்படுகிறது. இதனால் பரவலாக பெருமளவு விவசாயிகள் பலனடைகின்றனர். பாசன வசதியுடன் ரோடுக்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் விவசாயிகளுக்கு முதலிடமாக மானியம் வழங்கப்படுகிறது. தீவன பயிர் உற்பத்தி செய்யும் விவசாயி மானியம் பெற, உழவு மாடுகள் அல்லது கறவை மாடுகள் கண்டிப்பாக வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும்.

**ஊனமுற்றோர்கள் வேலை வாய்ப்பிற்கான பயிற்சி பெற்றிடும்போது வழங்கப்படும் உதவித் தொகை.**

*வினா எண். 324—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் ஊனமுற்றோருக்கு தனியார் துறையில் வேலை வாய்ப்புக்குப் பயிற்சி கொடுக்கும் போது, அரசாங்கம் உதவித் தொகை கொடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) தமிழ் நாட்டில் ஊனமுற்றோர்கள் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்பிற்கான பயிற்சி பெற்றிடும் போது அவர்களுக்கு உதவித் தொகை வழங்கிடும் திட்டம் 1979—80 முதற் கொண்டே செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவர்களுக்கு மாதம் ரூ. 150 உதவிப் பணமாக ஓராண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது.

பர்கூர் தொகுதியிலுள்ள மத்தூரில் பாம்கோலா தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 322—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் பர்கூர் தொகுதியில் உள்ள மத்தூர் பகுதியில் பாம்கோலா தொழிற்சாலை கட்டுவதற்காக ஏற்கெனவே ரூபாய் 24 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்ட திட்டம் இதுநாள் வரை செயல்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) இத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) மற்றும் (ஆ) : பர்கூர் தொகுதியில் உள்ள மத்தூரில் ரூபாய் 15·28 இலட்சம் செலவில் நிறுவியுள்ள பனைப் பண்ணைத் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பனைத் தொழில் கூடத்தில் என்னென்ன பணிகளைச் செய்கிறார்கள்? என்னென்ன பொருட்களைத் தயா ரிக்கிறார்கள்? அதனால் வேலைவாய்ப்பு பெற்றோர் எவ்வளவு பேர்? பாம்கோலா தயாரிப்பு எவ்வளவு என்ற விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு பனைத் தொழில் கூடம் என்ற அடிப்படையில் தர்மபுரி மாவட்டத்தில் மத்தூரில் உருவாக்கப் பட்ட பனைத் தொழிற்கூடத்தில் பனை ஏறும் பயிற்சி, பனஞ் சீனி ஆலை, பிரஷ் உற்பத்தி, நார்ப் பொருள் உற்பத்தி, பனை ஓலைப்பொருள் உற்பத்தி, பனங்கற்கண்டு உற்பத்தி, பனஞ்சீனி மிட்டாய் உற்பத்தி, பாம்கோலா உற்பத்தி போன்றவை நடை பெறுகின்றது. இதன் வாயிலாக புதிதாகபயிற்சி அளிக்கப்படுகின்ற பெண்கள் மட்டும் 200-க்கும் மேல் இருக்கிறார்கள். பணி யாற்றுகிறவர்கள் 100-க்கும் மேல் இருக்கிறார்கள். எனவே ஏறக்குறைய 300 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கின் கின்றது. பாம்கோலா தயாரிப்பது 1981-லிருந்து ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது. 1981—82-லே 66,956 ரூபாய் மதிப்புள்ள பாம்கோலா பானங்கள் உற்பத்தி செய்யப்பட்டு 71,620 ரூபாய் மதிப்புள்ள பானங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவு 14—12—1980-ல் துவங்கி உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றது. தர்மபுரி மாவட்டத்தில் ஆறு தாலுக்காக்களில் பாம்கோலா விற் பனை செய்யப்பட்டு வருவதுடன் கர்நாடக மாநிலத்திலுள்ள



ஆனைக்கல் என்ற இடத்தில் விற்பனை செய்யப்பட்டு வரு கின்றது. இந்தப் பிரிவு 1980 முதல் 1982 வரை உள்ள காலத் தில் 1,01,645 பாட்டில்கள் உற்பத்தி செய்து 1,00,948 பாட்டில் களை விற்றதுடன் 1—4—82 முதல் 31—7—82 முடிய ரூ. 46,682 ரூபாய் மதிப்புள்ள 66,689 பாட்டில்களை உற்பத்தி செய்து 54,282 ரூபாய் மதிப்புள்ள 65,781 பாட்டில்களை விற்பனை செய்துள்ளது.

(முற்பகல் 10-10)

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலுள்ள மத்தூரில் துவங்கப்பட் டுள்ள இந்த பாம்கோலா பாக்டரியை மேலும் விரிவுப்படுத்தி அந்தப் பகுதியில் பனை மரத்தை நம்பி வாழும் மக்களுக்கு அதிக மாக வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்கோலா உற்பத்தியை அபி விருத்தி செய்வதன் வாயிலாக பனை மரம் ஏறும் தொழிலாளர் களுக்கு அதிகமான வேலை வாய்ப்பு கிடைக்காது. தர்மபுரி மாவட்டத்தில் பனை மரம் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு அங்கு வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்காக பனை ஏறும் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக தர்ம புரி மாவட்டத்தில் ஊத்தங்கரை வட்டத்தில் ஏக்கூர், கீழ் மத்தூர் ஆகிய இடங்களில் பனையேறும் தொழிலில் 45 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்கள் ஏப்ரல் மாதத்தில் 1,178 லிட்டர் பதநீரை இறக்கிக் கொடுத்தனர். இப்பதநீரை பயன் படுத்தி 230 கிலோ பனைவெல்லம் உற்பத்தி செய்யப்பட்டது. அம்மன் கோவில் பதி, திருவனப்பட்டி, ஆகிய இடங்களில் புதிய தாகப் பனையேறுவதற்குக் கற்றுக் கொண்டவர்கள் பதநீர் இறக்கவும் பனை வெல்லத்தை உற்பத்தி செய்யவும் ஊக்குவிக்கப் படுகிறார்கள். இதன் அடிப்படையில் அங்குள்ள தொழிலாளர் களை ஊக்குவித்து வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து வருகிறோம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பனை மரங்கள் அதிகமாக உள்ளன. திருநெல்வேலி மாவட் டத்தில் இப்படி ஒரு பாம்கோலா தொழிற்சாலையை உரு வாக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பனை மரங்கள் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு

விரும்புகிறேன், கௌரவத்தைப் பார்க்காமல் தமிழ்நாடு அரசும் இன்றைக்கு அந்த உதாரணத்தைப் பின்பற்றி பத்திரிகையாளர்களின் உரிமைகளைப் பறிக்கக்கூடிய அந்த ஜனநாயக விரோதமான சட்டத்தை கைவிடுவதற்கு முன்வருமா ?

(முற்பகல் 10—20)

ஏன் அவர்கள் அந்த மாதிரி அறிவிப்பை வெளியிடுவதற்கு காலதாமதப்படுத்துகிறார்கள் ? அதில் அரசாங்கத்தின் நிலை என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திடீரென்று ஒரு பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். முறைப்படி ஒரு கேள்வி மூலமாகவோ. குறுகிய கால வினா மூலமாகவோ கேட்பார்களேயானால் இருக்கிற நிலைமையை அரசு தெளிவுபடுத்த இயலும்.

### (ஆ) சத்துணவுத் திட்டத்தின் கீழ் மேற்பார்வையாளர்களை நியமித்தல்.

*THIRU T. VENKATA REDDY : Point of order. Sir, under our Chief Minister's Nutritious Meals Programme Tamil supervisors have been appointed for Tamil Schools. So far, no Supervisor has been appointed in Minority language Schools teaching Kannadam, Telugu, etc. There are a number of minority people in our State they are as good Tamilians as others. They are also interested in the programme. So far, the intention of the Chief Minister is only to appoint people in Tamil Schools. So far, no Supervisor has been appointed in the Minority language Schools. Already more than one month has passed. I would like to know whether the Government has decided to include Minority languages people also in the appointment of Supervisors and if so whether the Government will come forward to appoint minority language Supervisors to the Schools urgently ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூப்பர்வைசர் என்று நியமிக்கப்படுகிறவர்கள் திருக்குறளைச் சொல்லித் தரவேண்டுமென்று அரசு எதிர்பார்த்துத்தான் நியமித்து வருகிறோம். தெலுங்குப் பள்ளியில் அவர்கள் எப்படி திருக்குறளைச் சொல்லிக் கொடுப்பது என்பது ஒரு புதிய பிரச்னையாக வந்திருக்கிறது, அதுபற்றி நாம் ஒரு முடிவை எடுத்ததற்குப் பின்னால் நியமிக்கப்படுவார்கள்.



### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை அருகில் பெட்ரோல் லாரி விபத்தில் பலர் இறந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டி. மணி, எம். செல்லமுத்து, மு. அம்பிகாபதி, சோ. அழகர்சாமி, ப. பொன்னுரங்கம், செ. சிவசாமி, சு. பாலன், அ. செல்வராசன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். பழனிவேல், து. இராசரத்தினம், கே. எம். தங்கமணி, திருமதி தா. இராசாம்பாள், திருவாளர்கள் பெ.சு. திருவேங்கடம் இரெ. இராசமாணிக்கம், ரா. கிருஷ்ணன், கே. ஆர். சுந்தரம், என். வரதராஜன் என்.எஸ்.வி. சித்தன் ஆகியோர் ''மார்ச் 1-ஆம் தேதியன்று சென்னையை அடுத்த வானகரம் பகுதியில் பெட்ரோல் லாரி ஒன்று கவிழ்ந்து, இதுவரையில் 28 பேர்கள் மரணம் அடைந்துள்ளதாலும், பலர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் இருந்து வருவதாலும் மக்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களை மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை ஏன் விவாதிக்க வேண்டுமென்பதற்கான காரணங்களை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். 1—3—1983 ஆம் தேதியன்று திருவேற்காடு பக்கத்திலேயிருக்கிற வானங்குப்பத்திலே ஒரு பெட்ரோல் லாரி கவிழ்ந்திருக்கிறது. கவிழ்ந்து பல மணி நேரமாகியுங்கூட அந்த லாரியை உடனடியாக நேர்முறையிலே திருப்பி, அதனை முறைப்படுத்த எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

ஏற்கனவே உங்களுக்கெல்லாம் தெரியும், இந்த அசெம்பிளியிலும்கூட பல தடவை நாம் பேசியிருக்கிறோம். தொடர்ச்சியாக பல இடங்களிலே லாரிகளாலேதான் விபத்துக்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக, இது பெட்ரோல் லாரி. அத்தியாவசியப் பண்டங்களை ஏற்றிச் செல்கிற, உடனே தீ

பிடித்து எரியக்கூடிய இது போன்ற பொருள்களை எடுத்துச் செல்லக்கூடிய லாரிகளுக்கு எல்லாம் போதுமான பாது காப்புகள் செய்யப்பட வேண்டுமென்று நாம் முன்பே பேசி யிருக்கிறோம். அதனைச் சரியான முறையிலே அமுல் நடத்தாததனுடைய விளைவு ஒரு லாரி கவிழ்ந்திருக்கிறது. அது கவிழ்ந்தது மாத்திரம் அல்ல, உடனடியாக ஏற்பாடு செய்யாததன் விளைவு அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள், ஏற்கெனவே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக் கூடிய அந்த மக்கள் எல்லாம் பெட்ரோல் எடுத்திருக்கிறார்கள். அதைச் சொல்லும்போது ஒரு விஷயத்தை உங்களுடைய கவனத்திற்கு மீண்டும் கொண்டுவர விரும்புகிறேன். திண்டுக் கல்லிலே ஒருவர் கஷ்டப்படுகிற மக்களுக்குத் துணி கொடுக்கிறோம் என்று சொன்னவுடனேயே, அதை வாங்க வேண்டுமென்ற முறையிலே, வறுமையிலே வாடுகின்ற மக்கள், தங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று, முண்டியடித்து, நெரி சலிலே சிக்கி, பலர் இறந்ததை நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே, வறுமையின் நிலை காரணமாக, பெட்ரோல் எடுக்கும் போது, ஏற்கெனவே பெட்ரோல் லாரியில் தீ பிடித்துவிட்டது. அந்தத் தீ பரவி, அந்த மக்களையும், அந்தத் தெரு பக்க மிருந்த மக்களையும் தாக்கி, சுற்றி தீயின் மத்தியில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, கிட்டத்தட்ட 60, 70 மக்கள் தீயிலே கருகி, பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. அவ்வளவு கடுமையான நிலைமையிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் பத்திரிகையை எடுத்துப் பார்த்தால், இன்று 6, இன்று 8, இன்று 10 என்று இருந்து, கடைசியிலே, இன்றைய தினசரியைப் பார்த்தால், சாவு எண்ணிக்கை 40-ஐத் தாண்டியதாக இருக்கிறது. இன்னுங் கூட பலர் அபாய நிலையிலே இருப்பதாகத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அதைப்பற்றியெல்லாம் விரிவாக விவாதித்து, பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம். அவைகளைப் பற்றியெல்லாம் விரிவாக விவாதித்து, பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு நிவாரணம் அளிக்கவேண்டியிருப்பதன் காரணமாக, இன் றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது குறித்து விவா திக்க அனுமதி அளிக்குமாறு நான் வேண்டிக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1—3—1983-ஆம் தேதி அன்று (குறுக்கீடு) 28—2—1983-ஆம் தேதி அன்று, சென்னை மதுரவாயல் அருகே, பெட்ரோல் லாரியில் தீ பிடித்ததன் காரணமாக உடனடியாக 6 பேர்கள் இறந்திருக்கிறார்கள். இன்றுவரையில் 40 பேர்கள் இறந் திருப்பதாக இன்றைய பத்திரிகைச் செய்தி கூறுகிறது. 52 பேர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். திடீரென்று பிரேக் போட்டதன் காரணமாகவோ, அல்லது ஓடித்ததன் காரணமாகவோ, அல்லது டிரைவர் என்ன நிலையில் இருந் தாரோ தெரியவில்லை, அந்த லாரி கவிழ்ந்திருக்கிறது. அங்க



லாரி கவிழ்ந்த உடனேயே சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள் ஓடிவந்து பார்த்திருக்கிறார்கள். பெட்ரோல் ஒழுகிக் கொண்டிருந்தது தங்களுடைய வறுமையின், காரணமாக பக்கத்திலே சங்கல் காளவாயிலே வேலை செய்துகொண்டிருந் வர்கள் ஓடி வந்து அந்த பெட்ரோலைப் பிடித்து அதன் மூலமாகவாவது ரூ. 6, ரூ. 7 அன்றைக்கு கிடைக்கும் என்ற நிலையிலே அந்தப் பெட்ரோலைப் பிடித்திருக்கிறார்கள். சிறிது நேரத்திலே தீப்பிடித்துக் கொண்டிருக் கிறது. தீ பிடித்தும்கூட, அந்த மக்கள் வேடிக்கை பார்த்திருக்கி றார்கள். இன்னும் சிறிது நேரத்திலே அந்த டாங்கானது வெடித்து விட்டது. வெடித்ததன் காரணமாக, பக்கத்திலே யிருந்த பலர் தீயிலே கருகி, பல பேர்கள் இன்றைக்குப் பொது மருத்துவ மனையிலும், கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையிலும் அனுமதிக்கப்பட்டு, அங்கும்கூட தொடர்ச்சியாக செத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு உதவி செய்யும் முறையிலே இறந்தவர்களின் ஒவ் வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 5,000 வரைக்கும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தீ பிடித்தால் பிறகு நிலைமை என்ன என்பது உங்களுக்குத் தெரியாத விஷயம் இல்லை. தீ பிடித்ததன் காரணமாக, உருவமே அற்ற முறையிலே, செயலற்ற முறை யிலே, இயங்காத முறையிலே, அவயவங்கள் கூட பாதிக்கப்படக் கூடிய நிலையிலே இருக்கிறது. உயிரோடு இருப்பவர்கள் வாழ் வதற்கு வழி செய்ய வேண்டுமென்ற முறையிலே அதிகமான தொகை ஒதுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்வதோடு, கிட்டத்தட்ட 41 பேர்கள் உயிரிழந்திருக்கி றார்கள். இன்னும் ஆஸ்பத்திரியிலே இருக்கக்கூடியவர்களில் பலர் இறக்கக்கூடிய நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. வறுமையின் காரணமாக, இந்த மக்கள் இப்படிப்பட்ட செயலில் ஈடுபட்டு இறந்திருக்கின்றார்கள் என்ற முறையிலே, இதுகுறித்து தீர்க்கமாக விவாதிக்க வேண்டிய நிலைமையிருப்பதால் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1—3—1983-ஆம் தேதியன்று மகாராஷ்டிராவிலேயிருந்து சென் னைக்குப் பெட்ரோல் ஏற்றி வந்த லாரியானது (குறுக்கீடு) 28-ஆம் தேதிதான்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் என் னிடம் எழுதிக் கொடுத்தது 1—3—1983 என்று. அதைத்தான் சொன்னேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : நான் 28-ஆம் தேதி என்றுதான் எழுதிக் கொடுத்தேன். 28-ஆம் தேதியன்று மகாராஷ்டிராவிலே யிருந்து சென்னைக்குப் பெட்ரோல் ஏற்றி வந்த டாங்கியானது எதிரே வந்த, அல்லது பின்னால் வந்த ஒரு பஸ்ஸுக்கு வழி விடுவதற்காக ஒதுங்கிய நேரத்தில் அந்த லாரி கவிழ்ந்திருக்கிறது என்று தகவல்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையிலே வேலை வாய்ப்புக்குப் பயிற்சி கொடுக்கும் போது அதற்காக அரசாங்கம் இதுவரை எவ்வளவு உதவித் தொகை கொடுத்திருக்கிறது? எத்தனை பேர்களுக்குக் கொடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, 1979–80 ஆம் ஆண்டு 30 நபர்கள் தொழில் பழகுவதற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அதற்காக 16,500 ரூபாய் தமிழக அரசின் மூலமாக அந்த நிறுவனங்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. 1980–81 ஆம் ஆண்டில் 245 பேர்கள் தொழில் பழ்குவதற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள், அதற்காக 2 இலட்ச ரூபாய் அரசு பணம் வழங்கியிருக்கிறது. 1981–82 ஆம் ஆண்டில் 362 பேர்கள் தொழில் பழகுவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அதற்காக 3 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் தமிழக அரசு வழங்கி உள்ளது.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் முக்கியமாக தொழு நோய் பிடித்தவர்களுக்கு தனியார் நிறுவனங்களிலே வேலை கொடுக்கிற முறையிலே தனியார் துறையில் இருக்கின்ற லெப்ரஸி ஹாஸ்பிடல் போன்றவற்றில் அப்படிப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் திட்டத்தை வைத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த அரசும் முன்னுரிமை அதிகமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழு நோய் இல்லம் என்று அமைத்துக் கொடுத்து அதன் மூலமாக அவர்கள் பிற்காலத்திலே சுயமாக வாழ வேண்டுமென்ற எண்ணத்திலே பாய் பின்னுதல், தையல் தொழில் செய்தல் இப்படி எந்தத் தொழிலிலே அவர்களுக்கு பிடித்தம் இருக்கிறதோ அந்தத் தொழிலிலே பயிற்சி கொடுத்து உதவித் தொகையும் கொடுத்து பிற்காலத்திலே அவர்களை வாழச் செய்வதற்கு ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ஊனமுற்றோர்களுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பிலே முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஊனமுற்றோர்களுக்கு 1980–81 ஆம் ஆண்டில் உலக ஊனமுற்றோர் ஆண்டாக அதை நாம் கொண்டாடியபோது ஊனமுற்றோர்களுக்கு கண்டிப்பாக தனியார் துறையாக இருந்தாலும் சரி, அரசுத் துறையாக இருந்தாலும் சரி அவர்களுக்கு



முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று அரசு மூலமாகவும் நானும் எழுதியிருக்கிறேன், பல இடங்களிலே கூட்டங்களில் பேசுகின்ற போது நான் தெரிவித்திருக்கிறேன், தனியார் நிறுவனங்களிலே ஊனமுற்றோர்களுக்கு கண்டிப்பாக வேலைவாய்ப்பில் முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல் தொழில் பழகுவதற்காக நாம் ஊனமுற்றவர்களை அனுப்புகிறபோது குறிப்பாக தனியார் நிறுவனங்களுக்கு அனுப்புகிறபோது எவ்வளவு பேர்களை நாம் அனுப்புகிறோமோ அவ்வளவு பேர்களுக்கும் தக்க பணத்தை நாம் கொடுத்து வருகிறோம். அப்படி நாம் அவர்களை அனுப்புகிறபோது ஒரு ஒப்பந்தத்தின் மூலமாக ஒரு ஆண்டு அவர்கள் தொழில் பழகியதற்குப் பிறகு அங்கே பெர்மனன்ட்டாக வேலைவாய்ப்பு பெறக்கூடிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்ற ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு தான் அனுப்புகிறோம். அரசு நிறுவனங்களிலே அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) பத்திரிகையாளர் குறித்து பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டம்.

திரு. என். சங்கரய்யா : . பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு ஒரு மிக முக்கியமான பிரச்சினையை நான் கொண்டுவர விரும்புகிறேன். பத்திரிகையாளர்களுடைய உரிமைகளைப் பாதிக்கக் கூடிய ஒரு சட்டத்தை இங்கே நாம் நிறைவேற்றினோம். அதற்கு எதிர்க்கட்சிகளும் பத்திரிகைகளும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. அப்போது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தலைமையில் ஒரு குழுவைப் போட்டு இதை மறுபரிசீலனை செய்வதாக ஒரு அறிவிப்பு பத்திரிகைகளிலே வெளிவந்தது. ஆனால் இதற்கு இடையில்—இதேபோன்று ஒரு சட்டத்தை நிறைவேற்றுகின்ற பீகார் மாநிலத்தினுடைய முதலமைச்சர் கடுமையான எதிர்ப்புக்குப் பிறகு, அனுபவத்திற்குப் பிறகு—அந்தச் சட்டம் செத்துவிட்டது என்று அவர் ஏற்கனவே அறிவித்து இருக்கிறார், இப்போது நான் கேட்க

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, 28—2—1983 அன்று பிற்பகல் 2-45 மணிக்கு பள்ளிக்குப்பம் இராமத்தில், எம். ஆர். என். 1915 என்ற பதிவு எண் கொண்ட ஸ்பிரிட் ஏற்றிவந்த லாரி ஒன்று பின்னாலே வந்த வண்டிக்கு வழி விடுவதற்கு ஓரமாக சென்றபோது கவிழ்ந்தது. அதில் இருந்த ஸ்பிரிட் கீழே கொட்டியது. அந்த இடத்தின் அருகாமையில் உள்ள 2 செங்கல் சூளைகளில் வேலை பார்த்து வந்த சிலர் கொட்டிய ஸ்பிரிட்டை எடுக்க முயற்சி செய்தனர். திடீர் என்று லாரி தீப்பற்றி விட்டதால் அவ்விடத்திலேயிருந்த 6 பெண்கள் தீக்காயம் பட்டு மாண்டனர். சுமார் 50 பேர்கள் தீக்காயம் உற்றனர். காயம் உற்றோர்கள் சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலும், பொது மருத்துவ மனையிலும், ராயப் பேட்டை மருத்துவ மனையிலும் சேர்க்கப்பட்டனர். 2 பேர்கள் காயம் அடைந்ததற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அனுப்பப்பட்ட னர். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று தக்க நடவடிக்கை எடுத்தார்கள். காஞ்சிபுரத்திலுள்ள மாவட்ட ஆட்சியர், வருவாய்த் துறை? சைதாப்பேட்டை விசேஷ துணை ஆட்சியர், உதவி ஆட்சியாளர் பொறுப்பிலே உள்ளவர் மற்றும் தாசில்தார் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர் களிடத்திற்கும் சென்று நடவடிக்கை எடுத்தார்கள். தீயணைக்கும் படையினரும், காவல் துறையினரும், தீயை அணைப்பதற்கும், மீட்புப் பணிகளிலும் ஈடுபட்டனர். காயம் அடைந்த பலரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. அனுமதிக்கப்பட் டவர்களில் 21 ஆண்களும், 11 பெண்களும் பின்னர் இறந்தனர்.

மொத்தம் இறந்தவர்களின் எண்ணிக்கை 39. இவர்களில் 18 பேர்கள் ஆண்கள். 21 பேர் பெண்கள். தற்போது 6 ஆண் களும், 11 பெண்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த லாரியை ஓட்டி வந்த பம்பாயைச் சேர்ந்த ரத்ன சிங் என்பவருடைய மகன் தர்சன் சிங் 5—3—1983 அன்று போலீ சாரால் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகிறது. இறந்தவர்களது குடும்பத்திற்கு இழப்பு ஈட்டு உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே இந்தப் பொருள் குறித்து விவாதிக்க இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க அவசியம் இல்லை என்ற கருத்தை தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.



## 4. அறிவிப்பு.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9-ன் கீழ், கீழ்க்கண்டவர்களை மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்.

திருவாளர்கள்—

சி. கோபால்

எம். எஸ். மாணிக்கம்

கு.பா. பழனியப்பன்

இ.எஸ்.எம். பக்கீர் முகமது

ரா. கிருஷ்ணன்.

## 5. கவன ஈர்ப்பு.

### சென்னை பல்கலைக் கழகம் நடத்தும் செமஸ்டர் தேர்வு முறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் அ. ரகு மான்கான், என். பழனிவேல் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வியமைச்சரின் கவனத் திற்குக் கொண்டுவருவார்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, ''சென்னைப் பல்கலைக் கழகம் 5-ஆவது செமஸ்டர் தேர்வு முடிவினை அறிவிக்காமல், 6-வது செமஸ்டர் தேர்வை அறிவித்திருப்பதால் மாணவர்களிடையே நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

சென்னைப் பல்கலைக்கழகம் 6-வது செமஸ்டர் தேர்வு முடிவுகளை அறிவித்து 5-வது செமஸ்டர் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படாமல் இல்லை. 5-வது செமஸ்டர் தேர்வு முடிவு 14—6—1982-லும், 6-வது செமஸ்டர் முடிவு 24—7—1982-லும் அறிவிக்கப்பட்டன. ஆனால் கடந்த ஆண்டு நடந்த 5-வது செமஸ்டர் தேர்வுகளின் முடிவுகளை அறிவிப்பதில் சில

அதனால்தானோ என்னவோ தெரியவில்லை, மத்திய அரசுகூட ஒரு அறிவிப்பைத் தந்திருக்கிறது.

Fifteen year old vehicles should be re-registered. என்று 15 ஆண்டுகள் ஆன வாகனங்களை எல்லாம் மறுபடியும் சர்க்கார் ஆர். டி. ஓ. ஆபீசில் ரெஜிஸ்தர் செய்ய வேண்டுமென்ற கருத்தைச் சொன்னதாக நேற்றையத் தினம் பத்திரிகையிலே பார்த்தேன். அந்த வண்டி எந்த நிலைமையிலே இருந்ததோ தெரியவில்லை. அந்த வண்டி மதுரவாயலுக்குப் பக்கத்தில் வானகரம் என்ற இடத்தில் கவிழ்ந்து இருக்கிறது. அதற்கு 3 கிலோ மீட்டருக்குப் பக்கத்தில்தான் இருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தெரிவிக்கும் அடிப்படையிலே உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். போலீஸ் மட்டும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்பது எனக்குக் கிடைத்த தகவலாகும். ஏனென்றால், அந்த டேங்க் தொண்டி செய்யப்பட்டு, துளை செய்யப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்துதான் அந்த பெட்ரோலைப் பிடித்திருக்கிறார்கள். போலீஸ் உடனடியாகச் சென்றிருந்தால் அதைத் தடுத்திருக்கலாம். அரசாங்கமோ அல்லது இலாக்காக்கலோ குறிப்பாக போலீஸ் இலாக்கா முறையாக இயங்கியிருந்தால் இதை நிச்சயமாக நாம் தவிர்த்திருக்க முடியும்.

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் ஃபயர் சர்வீஸ் தாராளமாக டிலே செய்கிறது. அண்மையில் என்னுடைய தொகுதியில் ஏற்பட்ட ஒரு தீவிபத்தில் எல்லாம் சாம்பலானதற்குப் பிறகுதான் அதை அணைக்க வருகிறார்கள். அதைப்போல வானகரத்திலேயும் எல்லாம் எரிந்து அடங்கிய பிறகு ஃபயர் சர்வீஸ் வந்ததாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட காலதாமதத்தை, இப்படிப்பட்ட மந்தத் தனத்தை உடனடியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். நாம் பார்க்கிறோம், ஒருவனுக்கு ஜுரம் ஏற்பட்டால், படிப்படியாக ஏறிக்கொண்டே போய் விடுவதைப்போல, விபத்து ஏற்பட்டு ஒரு வாரத்திற்கும் மேலாகின்றது; மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள், முதலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 6-ஆக இருந்து, பிறகு 8-ஆக ஆகி, மறுபடியும் 10 என்று உயர்ந்து, இப்பொழுது 40 என்று ஆகும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதிலேயிருந்து என்ன தெரிகிறது என்றால், அங்கே சென்று வந்தவர்கள் சொல்லுகின்ற தகவல் என்னவென்றால், மருத்துவமனையில் தீக்காயங்களுக்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றவர்கள் முறையாக, சீராகப் பொறுப்போடு கவனிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அந்த உண்மையை என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். இப்படி அரசாங்கத்தின் தவறுகளின் காரணமாக சாவுகளின் எண்ணிக்கை கூடுதலாகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



ஆகவே, இதுபோன்ற விபத்துக்களை நாம் தவிர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்க வேண்டும். அதன் மூலம் மக்களுடைய உயிரைப் பாதுகாக்க உள்ள அனைத்து விவகாரங்களைப்பற்றியும் விவரங்கள் தெரிந்த உறுப்பினரவர்கள் அனைவரும் பங்கெடுத்துக்கொள்ளும் முகந்தான் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடுகூட, இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உரிய நஷ்டயீட்டையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் கடந்த மாதம் 28-ந் தேதி பூந்தமல்லிக்கு அருகிலுள்ள வானகரம் என்றயிடத்தில் பெரிய விபத்து ஏற்பட்டிருக்கிறது. ஓடிவந்து கொண்டிருந்த லாரி, ஒரு பஸ்ஸுக்கு வழிவிட்டு ஒதுங்கியபொழுது அந்த லாரி கவிழ்ந்து இருக்கிறது. அதன் விளைவாக 40 பேர் இறந்து விட்டதாசச் செய்தி வந்திருக்கிறது. விபத்து ஏற்பட்டவுடன் போதிய அளவிலே போலீஸ் அங்கே போய் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தால் யாரும் அதிலே பெட்ரோல் பிடிப்பதற்கான வழி ஏற்பட்டிருக்காது. அந்த நிலைமை உருவாகி இருந்தால் மக்கள் அந்த இடத்திற்குப் போயிருக்க மாட்டார்கள். அந்த வகையில் இதற்குப் போலீசார் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்று கூற விரும்புகிறேன்.

உயிரிழந்த 40 பேர்களின் குடும்பங்களுக்கும் முதல்வர் நிதியிலேயிருந்து ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைப்பதுடன், சட்டமன்றத்தில் இதைப்பற்றி விரிவாகப் பேச வேண்டியிருப்பதால் அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த சம்பவம் நடந்த இடத்திற்கு பக்கத்திலே 2 உறுப்பினர்கள், திருவாளர்கள் இராஜரத்தினம், ஜே. சி. டி. பிரபாகரன் ஆகிய இரண்டு பேரும் அது தங்களுடைய தொகுதியைச் சார்ந்தது என்று சொல்லி கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உட்பட 40 பேர்களுக்கு மேலே இதுபற்றி கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இது ஒத்தி வைப்புத் தீர்மானமாக எடுத்துக் கொண்டிருப்பதால் இவர்கள் பெயர்கள் எல்லாம் சொல்லாத காரணத்தால் அவைகள் விடுபட்டு போய்விட்டன என்று அர்த்தம் அல்ல. இதனை மனதில் வைத்துக் கொண்டு பதிலளிக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

தவிர்க்க முடியாத காரணங்களால் கால தாமதம் ஏற்பட்டது. இதன் காரணமாக முடிவுகள் அறிவிப்பதற்கு முன்னதாக 6-வது செமஸ்டர் தேர்வுகள் நடத்த வேண்டியிருந்ததால், அதற்கான ஏற்பாடுகளைப் பல்கலைக்கழகம் செய்தது. இந்த நிலையில் 5-வது செமஸ்டர் எழுதிய மாணவர்கள் இந்தத் தேர்வுகளின் முடிவுகளை அறிவிக்காமல் 6 (ஆறாவது) செமஸ்டர் தேர்வுகள் நடத்தினால், ஏதாவது ஒரு சில பாடங்களில் தேர்ச்சி பெறாமல் இருந்தால் அப்பாடங்களில் மீண்டும் தேர்வு எழுத இயலாது என்று அறிவித்ததின்பேரில், சென்னைப் பல்கலைக்கழக மாணவர்கள் யாராவது தாங்கள் எழுதிய 5-வது செமஸ்டர் தேர்வில் ஏதாவது பாடத்தில் தான் தேர்ச்சி பெற இயலாது என்று எண்ணினால், தேர்வு முடிவுகள் தெரிவிக்கப்படவில்லை என்றாலும் கூட அந்தப் பாடங்களில் அபிவிருத்தித் தேர்வு (Improvement Test) எழுதலாம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த வாய்ப்பினை மாணவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் காரணமாக 5-வது செமஸ்டரில் ஒரு சில பாடங்களில் தேர்வு பெறாமல் 6-வது செமஸ்டரில் எல்லா பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தாலும், மேற்கொண்டு படிப்பினைத் தொடர்வதோ அல்லது வேலை வாய்ப்பினை தேடிச் செல்வதோ ஒரு சிலருக்கு இயலாமல் இருந்தது. தேர்ச்சி பெறாமல் இருந்த இந்த மாணவர்களுக்கும், 1982 ஆகஸ்ட் மாதம் தனியாக ஒரு தேர்வு சென்னைப் பல்கலைக்கழகம் நடத்தியது. இதன் முடிவு 31—1—1983 அன்று அறிவிக்கப்பட்டு கல்லூரிகளுக்கு அனுப்பப்பட்டது. ஆகவே, 5-வது செமஸ்டரில் எல்லாப் பாடங்களிலும் தேர்வுபெற்று, மீண்டும் 6-வது செமஸ்டரில் தேர்வு எழுதியவர்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை. ஆனால் யார் யார் 5-வது செமஸ்டரில் ஒரு சில பாடங்களில் தேர்வு பெறவில்லையோ அவர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகம் குறித்த காலத்தில், தேர்வு நடத்தி, தேர்வு முடிவுகளை அறிவிப்பதற்குத் தக்க முயற்சி எடுத்து வருகிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் தற்போது 31-1-1983 ஆம் தேதி அந்த தேர்வு முடிவுகள் எல்லாம் அறிவிக்கப்பட்டு விட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மாணவர்கள் கடந்த ஓராண்டு காலமாக அந்த தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. ஆகவே நாங்கள் போராடப் போகிறோம் என்று சொல்லி சமீபத்தில் ஜனவரி மாதம் எங்களிடத்திலே மனுக்களைக் கொடுத்து இங்கே வந்து தங்கி இருந்தார்கள். அதன் பிறகு இந்த தீர்மானத்தைக் கொடுத்த பிறகு தான் அந்த ரிசல்டை வெளியிட்டிருக்கிறார்கள். அப்போது இதிலே கொடுத்



யிருக்கிறார்கள், தவிர்க்கமுடியாத காரணத்தால் அந்த 5-ஆவது செமஸ்டர் தேர்வு முடிவு வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டது என்று. அது தவிர்க்கமுடியாது என்று சொன்னால் என்ன என்பதை இங்கே அறிவிக்கவேண்டும். அத்தோடு இந்த செமஸ்டர் நான் செமஸ்டர் என்ற கொள்கைகளை சென்னைப் பல்கலைக்கழகம் அனுஷ்டிப்பதால் மாணவர்களுக்கு பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக சொல்கிறார்கள். என்னவென்று சொன்னால்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு கேள்விகள் கேட்கலாம். விளக்கம் கொடுத்துக் கொண்டு இருக்காதீர்கள்.

திரு. என். பழனிவேல் : மூன்று ஆண்டு பட்டப் படிப்பை படிக்கக் கூடிய அந்த மாணவர்களுடைய படிப்பில் செமஸ்டர் நான் செமஸ்டர் என்று இருப்பதால் அவர்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. ஆகவே செமஸ்டர் முறை தான் அவர்களுக்கு இலகுவாக இருப்பதாகச் சொல்லுகின்றார்கள். மதுரைப் பல்கலைக்கழகத்திலே அப்படித்தான் நடத்துவதாகச் சொல்கிறார்கள். ஆகவே அம்மாதிரி செமஸ்டர் முறை அனுஷ்டிப்பதற்கு அரசு உத்தரவிடுமா?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செமஸ்டர் முறை வேண்டுமா, வேண்டாமா என்கிற பிரச்னை எல்லாம் கவனிக்கவேண்டியது பல்கலைக்கழகம். இதிலே அரசு தலையிடமுடியாது. ஆனால் இப்போது மாணவர்கள் சார்பாக கொண்டு வரப்பட்டுள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் அடிப்படையிலே சில விவரங்களை நாம் தந்திருக்கிறோம். இது மாணவர்களை பாதிக்கக்கூடியது என்ற அடிப்படையிலே இனிமேல் இத்தகைய முடிவுகளின் தாமதம் ஏற்படக்கூடாது என்று அரசு தன்னுடைய கருத்தை பல்கலைக்கழகத்திற்கு தெரிவித்து இருக்கிறது. அவர்களும் இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதிலே ஐந்தாவது செமஸ்டரின் தேர்வு முடிவுகளை வெளியிடாத காரணத்தால் ஆறாவது செமஸ்டர் தேர்வுகளை எழுதுகின்ற நேரத்திலே யார் எழுதுவது, பெயில் ஆனவர்கள் தான் எழுத வேண்டும். அப்படி அவர்கள் பெயில் ஆனோமா இல்லையா என்று தெரியாத நேரத்திலே இப்படிப்பட்ட ஒரு குழப்பமான நிலை இருந்தது. ஆனால் மாணவர்கள் பாதிக்கப்படாத வகையிலே அந்த மாணவர்களுக்கு தனியாக ஒரு தேர்வு வைத்து அதனுடைய முடிவுகளை வெளியிட்டு இருக்கிறார்கள். இதிலே மேற்கொண்டு ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளில் பல்கலைக்கழகம் ஈடுபட்டிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாமதங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துவருகிறது என்று சொன்னார்கள். நன்றி. இன்றைக்கு இந்த சென்னைப் பல்கலைக் கழகம் மாணவர்கள்

கட்டணங்களை வசூலிப்பதில் திடிரென்று அதிகரித்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அதோடு கம்யூட்டர் மூலமாக மார்க் லிஸ்ட்டு தருகிறோம் என்று 3 ரூபாய் வசூலித்துவிட்டு அவர்களுக்கு கையாலேயே மார்க் லிஸ்ட் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் இப்படி வசூலிப்பதை நிறுவத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன். ஏற்கனவே ஒரு பேப்பருக்கு 8 ரூபாய் என்று வாங்கிக்கொண்டு இருப்பது தற்போது 12 ரூபாய் என்று அதிகரித்து இருப்பதாகச் சொல்கிறூர்கள். அதையும் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்படுகிற செலவுகளை வைத்து அவர்கள் சில முடிவுகளை செய்கிறார்கள். ஆகவே அப்படி அவர்கள் அதிகமாக உயர்த்துவதாக இருந்தால் அதை அரசுக்குச் சொல்லி பரிசீலிக்கச் சொல்லும். அந்த அடிப்படையிலே தான் நாம் பிரச்னைகளைக் கவனிக்கவேண்டும். அதோடு இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் கவன ஈர்ப்புக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

## 6. வரவு—செலவுத் திட்டம் 1983–84 பொது விவாதம்.

***திரு. துரைமுருகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் 1983–84ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வைத்திருக்கிறார்கள். நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

1971 ஆம் ஆண்டிலேயிருந்து இந்த மாமன்றத்திலே நிதிநிலை அறிக்கையை படிக்கிற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட நிதி நிலை அறிக்கையை நான் பார்த்ததில்லை என்று நான் சொல்வதற்கு வருத்தப்படுகிறேன். இதைப்போல ஒரு மோசமான நிதிநிலை அறிக்கையை நான் படித்ததே இல்லை. வந்த நிதி நிலை அறிக்கையிலே இது ஒரு திருஷ்டிபரிகாரமாக இருக்கிறது என்பது என்னுடைய முதல் குற்றச்சாட்டு, எந்த விதமான செயல் திட்டமும், ஒரு ஸ்டேட் வெல்பேர் ஸ்டேட்டாக ஆக்கவேண்டுமென்ற கொள்கை எதுவும் இதிலே காணப்படவில்லை. நம்முடைய நாவலர் அவர்கள் என்னைக் கேட்கலாம். என்னை ஏன் துளைத்து எடுக்கிறாய். கொள்கை இருந்தால் தானே அதை நான் சுட்டிக்காட்ட முடியும் என்று என்னைக் கேட்கலாம். பதில் அதுவாக இருக்குமானால் நான் அதற்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதி நிலை அறிக்கை என்று சொல்லுவது ஒரு மாநிலத்தினுடைய வரவு செலவுத் திட்டத்தை மட்டும் காட்டுகிற வட்டிக்கடை புத்தகம் அல்ல.



Budget being an instrument of policy—an arthmatic expression of a Government's programme of Action it is proper that the Executive should have adequate freedom to work out the financial implications of the policy laid down by Parliament

என்று ஷக்தர் அவர்கள் மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த இலக்கணத்திற்கு இந்த நிதி நிலை அறிக்கை பொருந்தி வருகிறதா என்றால் நிச்சயமாக கிடையாது. நிதிநிலை அறிக்கையைப் படித்தால் பாதி அழுது வடிகிறது. பாதி அவதூறை வாறித் தூற்றுகிறது. பாதி செய்த வேலைகளை பற்றி திருப்பித் திருப்பி, பப்ளிக்மீட்டிங் மாதிரி பேசுகிறது. இன்றைக்கு எங்கேயோ பாபர், அக்பர் காலத்து நிதிகளைக் கொண்டு வந்து புகுத்தி இருக்கிறார்கள். எனவே, இதைச் சுருக்கமாகச் சொன்னால், போலித் தனமாக செய்திகளைக் கொண்ட ஒரு புராணக் கட்டு. தமிழின் பெயரால் தகிடுதித்தம் செய்கின்ற வேறும் தாளக்கட்டு. நாட்டு வளர்ச்சியோ அதைப் பற்றிய சிந்தனையோ செயலாக்கத் திட்டமோ இல்லாத ஒரு பழைய காலண்டர் இது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது நிதி அமைச்சர் அவர்களிடத்திலே நான் நேரடியாக ஒரு கேள்வியைக் கேட்கிறேன். இவர்கள் மழுப்பாமல் பதில் சொல்லவேண்டும். நடப்பு நிதி ஆண்டில், அதாவது, 82-83ஆம் ஆண்டில் அவர்கள் கொடுத்து இருக்கிற கணக்குப்படி பற்றாக் குறை 89 கோடி. அடுத்த நிதி ஆண்டு, அத வது 1983-84 ஆம் ஆண்டுக்கு பற்றாக்குறை 95 கோடி. ஆக மொத்தம் 184 கோடி ரூபாய். இதிலே புதிய வரிகள் என்று போட்டு இருக்கிறீர்களே அது ஒரு 26 கோடி ரூபாய். அதைத் கழித்தால் 158 கோடி ரூபாய். ஒரு கோடிக்கு வரிச்சலுகை கொடுத்துள்ளீர்களே அதை கழித்தால் 157 கோடி ரூபாய். இந்த 157 கோடி ரூபாய் எப்போது இருக்கும், அடுத்து ஆண்டு (1984) மார்ச்சு மாதம் 31-ம் தேதி இந்த அளவிற்கு டெபிசிட் இருக்கும். இது 'அன்கவரெபிள் டெபிசிட்'. இந்த டெபிசிட்டை, இந்தப் பற்றாக் குறையை நிரப்புவதற்கு என்ன வழிவகைகளைச் செய்து இருக்கிறார் என்பதை மட்டும் நிதி அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும்.

இவ்வளவு வரவு, இவ்வளவு செலவு என்று சொல்லிவிட்டுப் போவதற்கு சோ. மா. அருணாசலம் செட்டியார் விட்டுக் கணக்கு பிள்ளையே போதும், அதற்காக ஒரு நாட்டின் நிதி அமைச்சர் தேவையில்லை. என்னிடத்தில் இவ்வளவு பற்றாக்குறை இருக்கிறது. இந்தப் பற்றாக்குறையைப் போக்க எனக்கு இந்த இந்த வகையில் பைனான்சியல் ரிசோர்ஸ் இருக்கிறது. நான் அவைகளின் மூலம் இதை ஈடுகட்டுவேன் என்று சொல்லியிருக்க வேண்டும். நீங்கள் என்ன மத்திய சர்க்காரா? டெபிசிட் வந்தால் நோட்டு அடிப்பதற்கு? உங்களுக்கு என்ன லாட்டிரி அடிக்குமா? ஒன்றும் அடிக்காது. ஆகவே, எங்கே போய் நீங்கள் இந்த 157 கோடியைப் பெறப்போகிறீர்கள் என்பதை திட்டவட்டமாக இந்த மாமன்றத்தில் அறிவிக்க வேண்டும் என்பது என்னுடைய முதல் கணக்காகும், கேள்வியாகும்.

பஞ்சகாலத்தில் நீங்கள் ஆட்சியை செம்மையாக நடத்தியிருந்தால் உங்களுக்கு ஒரு சபாஷ் போடலாம். ஆனால் நிலைமை என்ன? இந்த ஆட்சி வந்த பிறகு இயற்கையால் வந்த பஞ்சம் பாதி, ஆட்சியின் திறமையின்மையால் வந்த பஞ்சம் பாதி. இதுதான் இன்றைக்கு நாட்டில் இருக்கிற நிலைமை. மழை இல்லை; சரி. மின்சாரம் இல்லை. புனல் மின்சாரம் தடை பட்டுவிட்டது. சரி. அனல் மின்சாரம் என்ன ஆச்சு? தெர்மல் பவர் ஸ்டேஷன் ஃபெயில்யூர் ஆனதற்கு யார் காரணம்? நீங்கள்தான் காரணம். அதை நான் சொல்லவில்லை. சென்ட்ரல் எனர்ஜி மினிஸ்டர் ஒரு ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார். என்ன ரிப்போர்ட்?

[முற்பகல் 10-50]

Energy Ministry sources said on Sunday that the Tamil Nadu Government itself was responsible for the present power crisis in the State.

While the immediate cause for the crisis has no doubt been the failure of monsoon and the consequential fall in hydel power generation, this could have been made up if the thermal power stations in Tamil Nadu had operated with reasonable efficiency.

உங்களுடைய தெர்மல் ஸ்டேஷன் ரீசனபிள் எஃபிசியன்சியோடு இயங்கியிருந்தால் இந்த மின்சாரப் பஞ்சம் வந்திருக்காது.

Between April and December 1982, it is pointed out the plant load factor of thermal plant in Tamil Nadu was only 42 per cent against the all-India average of over 48 per cent.

ஆல் இந்தியாவில் 48 சதவீதம் இருக்கும்போது நீங்கள் என்ன சதவீதம் பெற்றீர்கள்? 42 சதவீதம்தான் பெற்றிருக்கிறீர்கள். யாரால்? உங்களால்தான்.

The Neyveli power station run by the Central Government had recorded a plant load factor of 70 per cent and was supplying power to the State.

அது மட்டுமல்ல. அவர் 1979–லே பண்ணியிருக்கிறார். அது மட்டுமல்ல.

The feasibility report for the expansion of the Tuticorin and Mettur thermal power units was submitted by the Tamil Nadu Electricity Board to the Central Electricity Authority only in 1982.

தூத்துக்குடி தெர்மல் ஸ்டேஷனுக்கும் மேட்டூர் தெர்மல் ஸ்டேஷனுக்கும் எப்போது நீங்கள் ரிப்போர்ட் சப்மிட் பண்ணினீர்கள்? 1982–லேதான் ரிப்போர்ட் தந்திருக்கிறீர்கள். இவ்வளவு நாள் நீங்கள் என்ன பண்ணினீர்கள்? வறட்சி நேற்றா முளைத்தது? 1981 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை எடுத்து படித்துப் பாருங்கள். அதிலே இந்த வறட்சி பற்றி ஒரு பக்கம் அழுதிருக்கிறீர்கள். போன வருஷம் நிதிநிலை அறிக்கையைப் படியுங்கள்.



அதிலும் வறட்சி இருக்கிறது. ஆக, என்றைக்கு நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்களோ அன்றைக்கே இந்த வறட்சியும் வந்திருக்கிறது நாவலருக்குத் தெரியும், சிலப்பதிகாரத்தில், ஏன் மழை வரவில்லை; மன்னன் சரியில்லை. ''வான்கோடு கரிக்கும்...'' என்ற பாட்டெல்லாம் அவர் சொல்வார், எனக்கு கருத்து மட்டும் தெரியும். 1982–லேதான் தெர்மல் ஸ்டேஷன் பற்றி ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறீர்கள்.

எலெக்ட்ரிசிட்டி மினிஸ்டரைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை; அவர் பாவம். அவருடைய இலாகாவில் என்ன நடக்கிறது என்று அவருக்குத் தெரியாது. அவருக்குத் தெரியாமல் சேர்மேன் 'கார், கீர்' எல்லாம் எடுத்துவிட்டார். எலக்ட்ரிசிட்டி மினிஸ்டர் சும்மா உட்கார்ந்திருக்கிறார். இட் ஈஸ் ரன் பை தி சேர்மேன், விஜயராகவன். அவரிடம்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல.

These certainly could not have helped the State in the present crisis.

1982–லேதான் நீங்கள் ரிப்போர்ட் கொடுத்த காரணத்தால் இப்போது உங்களுக்கு உதவி செய்ய முடியவில்லை; நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள்.

The Centre had given its investment approval for the expansion of the Neyveli mines.

1979–லே நாங்கள் கொடுத்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். ஆகையால் மின்சாரத்தினுடைய கோளாறு ஏற்படுவதற்கு, தெர்மல் ஸ்டேஷன் ஃபெயில்யூருக்கு நீங்கள்தான் காரணம்.

நாவலருடைய அறிக்கையைப் பாருங்கள். நாங்கள் மின்சாரத்தை பக்கத்து மாநிலங்களில் வாங்கலாம் என்றால், அண்டை மாநிலங்களும் மின்சார உற்பத்தியில் சிரமப்பட்டு வருவதால் அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரம் பெறமுடியவில்லை என்கிறார். பாவம். பக்கத்தில் எல்லாம் காலி பண்ணிவிட்டார். ஆனால் கர்நாடகத்தைப் பாருங்கள். நேற்றுத்தான் வந்தார் இராமகிருஷ்ண ஹெக்டே வந்து, பங்காரப்பாவோடு குருக்ஷேத்திரமே இன்னும் ஓயவில்லை. பக்கத்தில் வேறு, ஆந்திராவுக்குப் போனால், ஒரு யூனிட்டுக்கு 48 பைசா என்று சொல்லி அக்ரிமென்ட் போட்டார். இந்து பத்திரிகையில் எழுதுகிறார்கள்.

Tamil Nadu is still dragging its feet.

இன்னும் தமிழ்நாடு இழுத்துக்கிட்டிருக்கிறது. நேற்று வந்த ஹெக்டே ஆந்திராவில் போய் மின்சாரம் வாங்கிவிட்டார். ஆனால் நாவலர் சொல்கிறார், அண்டை மாநிலங்களில் மின்சாரம் இல்லை என்று. ஏன் சார், நாங்கள் பத்திரிகை படிக்கவில்லையா? நாட்டு நடப்பு எங்களுக்குத் தெரியாதா? ஹெக்டே கேட்டார், ராமராவ் கொடுக்கிறார். ராமராவ் யார்? நம்முடைய முதலமைச்சருக்கு தம்பி தானே. அவர் சொல்கிறார்.

'மா அண்ணகாரு அக்கட உண்ணாரு, மா தம்பிகாரு இக்கட உண்ணாரு....ஆகவே, நீங்கள் போய் கேட்டிருக்க வேண்டும். பக்கத்தில் இருக்கிற ஆந்திராவில் கரண்டு வாங்க முடிய வில்லை; அறிக்கை விடுகிறீர்களே! எவ்வளவு, உண்மைக்கு மாறாக நீங்கள் சொல்கிறீர்கள்! உண்மைக்கு மாறாக எழுது கிறீர்கள்! நீங்கள் தூங்கிவிட்டீர்கள், அவ்வளவுதான். வேறு ஒன்றும் இல்லை.

'' நல்ல பொழுதை எல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டான் ''

என்று பாடினால் மட்டும் போதாது.

படத்திலே நடித்தால் மட்டும் போதாது. ஆக்சுவலாக அதே மாதிரி நடக்க வேண்டும். உங்களுக்கு பக்கத்திலே நடப்பதே தெரியவில்லை. உள்ளூரிலே ஓணான் பிடிக்க முடியாதவன், அய லூரிலே போய் யானையை பிடித்த கதையாக, உங்களால் ஆந்தி ராவிற்குப் போய் கரண்ட் வாங்க முடியவில்லை, ஆஸ்திரேலியா விற்குப் போய் நிலக்கரி வாங்குவதற்கு குலோப் டெண்டர், கால் ஃபார் பண்ணியிருக்கிறீர்கள். மத்திய சர்க்காரின் அனுமதியில் லாமல் பண்ணிவிடுவீர்களா? அதுவும் ஃபாரினிலிருந்து. எதைக் கேட்டாலும் ஃபாரின். ஃபாரின் ஃபாரின். அரிசி ஃபாரின், சிமெண்ட் ஃபாரின், நிலக்கரி ஃபாரின் என்று எல்லாமே ஃபாரின் என்று உங்களுக்கு ஒரே ஃபாரின் மயமாகத்தான் இருக்கிறீர் களே தவிர லோக்கலே வராதா?

Everything is in foreign. Because everything is settled in foreign. Therefore you are always thinking about foreign.

ஆகையினால்தான் சொல்கிறேன் இந்த மின்சார கோளாறு வருவதற்கு உங்களுடைய கையால் ஆகாத தனம் தான் காரணம் என்று.

இன்னொன்று வறட்சி. இந்த வறட்சிக்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? திடீர் என்று ஒரு நாள் காலையில் எழுந்த வுடன் பாம் வெடிக்கிற மாதிரி வறட்சி வந்துவிட்டதா? 81-வது ஆண்டிலேயிருந்து வறட்சி வறட்சி, என்று சொல்லுகிறார்கள். அந்த வறட்சிக்கு நிரந்தரப் பரிகாரம் காண என்ன செய்திருக் கிறார்கள். ஒன்றுமே கிடையாது.

இந்த நாட்டிலே எத்தனையோ பிரச்னைகள். உங்களுக்கு அதைப்பற்றி அக்கறை கிடையாது. நேற்றைக்கு பார்லிமென்ட் டிலே ஒரு மந்திரி பேசியிருக்கிறார். அந்தச் செய்தி வந்திருக் கிறது. அதைப் பார்த்தால் எனக்கே வெட்கமாக இருக்கிறது. உங்களுடைய எம். பி. திரு. மோகனரங்கம் அவர்கள் பேசிய தற்கு பதில் சொல்லியிருக்கிறார், அமைச்சர் ராவ்பீரேந்திர சிங் அவர்கள். என்ன சொல்கிறார்கள் என்றால், that the drought had reportedly affected the State some time in October and wondered why it submitted its memorandum only in February this year.



என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்கும் தெரிய வில்லை. ஆச்சரியமாக இருக்கிறது என்று அவர்கள் கேட் கிறார்கள். மேலும், Again when the Centre wanted to send a central team to assess the damage to crops due to drought, the State Government declined to receive it. உங்களுடைய ரிப்போர்ட்டை எப்பொழுது கொடுக்க வேண்டும்— அக்டோபரில். அக்டோபர் எப்பொழுதோ போய்விட்டது. நவம் பர் மாதம் 15 ஆம் தேதிக்கு மேல் மழையே பெய்யாது.

1974-ல், நாங்கள் இருக்கும்போது வறட்சி வந்தது. என்ன ஆயிற்று? நாங்கள் டிசம்பர் மாதமே அந்த வறட்சி நிவாரணப் பணிகளை ஆரம்பித்து விட்டோம். நீங்கள் அக்டோபரில் வந்த டிரவுட்டுக்கு. பிப்ரவரி மாதம்தான் ரிப்போர்ட் அனுப்பி இருக் கிறீர்கள். அதற்கு உடனடியாக டீம் வருகிறது. வருகிற டீமை வரவேண்டாம் என்று சொல்லி இருக்கிறீர்கள். இது என்ன காரியம்? அவர்கள் நாங்கள் போயிங்கில் வருகிறோம் என்று சொன்னாலும் கூட, வேண்டாம் வேண்டாம் கன்கார்டிலே வாருங்கள் என்று தானே நீங்கள் சொல்ல வேண்டும்? ஆனால் நீங்கள் வர வேண்டாம் என்று சொல்லி இருக்கிறீர்களே. உல கத்திலேயே இப்படி பார்வையிட்டு நிவாரணம் அளிக்க ரிப் போர்ட் கொடுக்க வரும் டீமை வேண்டாம் என்று சொல்லிய ஒரே அரசாங்கம் அ.தி.மு.க. அரசாங்கமாகத்தான் இருக்க முடியுமே தவிர, வேறு எந்த சர்க்காரும் இருக்க முடியாது.

உடனேயே உங்களுடைய எம்.பி. மோகனரங்கம் அவர்கள் அதற்கு அங்கே என்ன பதில் சொல்லியிருக்கிறார் என்றால், since the Assembly was sitting the State Government could not receive the team. அசெம்பிளி வந்ததால், அந்த டீமை அவர்களால் ரிசீவ் பண்ண முடியவில்லை என்று சொல்லி யிருக்கிறார். சும்மா சொல்லப்படாது. முதல்மந்திரியிலிருந்து ....(குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் பதிலுரையிலே கூறயிருக்கிறேன். பிப்ரவரி மாதம் அறிக்கை வைக்கப்பட்டதற்கு என்ன காரணம் என்புதை யும், மற்றவைகளையும் பிறகு விளக்கமாக சொல்கிறேன். இப்போது சொல்ல விரும்பவில்லை. ஆனால் மத்திய அரசி னுடைய டீம் இங்கே வருகிறோம் என்று சொன்னதும் இல்லை. அவர்களை வர வேண்டாம் என்று இந்த அரசும் சொல்ல வில்லை. எப்பொழுது வரலாம் என்று கேட்டதற்கு, அறிக்கையை வைத்ததற்குப் பிறகு வரலாம் என்று பதில் சொல்லி, இப்படி எங்களோடு கலந்து கொண்டுதான் அவர்கள் நாளைக் குறிப் பிட்டார்களே தவிர, அவர்களாகவே வர வேண்டும் என்று கேட்டு, வர வேண்டாம் என்று நாங்கள் சொன்னதே இல்லை. ஆகவே, அவர்கள் இதனால் வராமல் இருக்கவில்லை.எங்களோடு

உங்களுக்குத் தெரியாதா? ரிசர்வ் பேங்க் என்று ஒன்று இருக்கிறது. அதிலிருந்து ஓ.டி. வாங்குகிறோம் என்று சொல்லலாம். ஓ.டி. வாங்கிய கதை கேரளத்திலே நாம் அறியவில்லையா? மறுநாளே பேமென்ட் தர மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். டெல்லியில் அவர்கள் ஆட்சி இருக்கின்ற காரணத்தால், போனால் போகிறது என்று சொல்லி, ஏதோ அந்த ஆட்சி தப்பிப் பிழைத்து தாக்குப்பிடிக்கிறது. ஓ.டி. என்று போனாலே ஓடிப்போ என்று தான் ரிசர்வ் பாங்க் அறிவிக்கும். எனவே, அங்கே சென்றும் ஓ.டி. வாங்கமுடியாது. அப்படியானால் என்ன நிலைமை? 31—3—1983-க்குப்பிறகு இப்போதே 89 கோடி டெபிசிட்—ஏப்ரல் 1-ம் தேதிக்குப் பிறகு நீங்கள் திவாலாகப்போகிறீர்கள். இந்தச் சர்க்கார் திவாலாகப் போகிறது என்பதை உங்களுடைய புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

நிதி அமைச்சர் அவர்கள் சொல்லலாம். உங்களுக்குத் தெரியாதா? பல்வேறு இனங்களில் வருமானம் வருகிறது. அவைகளை யெல்லாம் பதுக்கி வைத்து இருக்கிறோம். அவைகளை வெளியே கொண்டு வருகிறபோது, கருப்பு வெள்ளையாகி இந்தப் பற்றாக்குறை பறந்தோடிப்போய்விடும் என்று நிதியமைச்சர் சொல்லலாம்.

நான் கேட்கிறேன். இந்த மாநிலத்திற்கு இருக்கின்ற கர்ப்பதரு, காமதேனு என்ன தெரிமா? ஒன்று, மாநில ஆயத்தீர்வை, மற்றொன்று, விற்பனை வரி. இதிலே நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். ஆயத் தீர்வை 82-83-ல் 110 கோடி என்று அக்கௌண்ட் ஆகியிருக்கிறது. இதிலே சென்ற ஆண்டு எவ்வளவு எஸ்டிமேட் போட்டீர்கள் 146 கோடி ரூ. வந்தது எவ்வளவு 150 கோடி. ரூபாய். இப்போது எவ்வளவு எதிர் பார்க்கிறீர்கள் 155 கோடி ரூபாய். விற்பனை வரியைப் பொறுத்த வரையில் அது ஒரு பெரிய ரிசோர்ஸஸ். அதிலே 1981-82-லே அக்கௌண்ட் செய்துள்ளது எவ்வளவு 543 கோடி ரூபாய். போன வருஷம் எவ்வளவு எதிர்பார்த்தீர்கள்—620 கோடி ரூபாய். கிடைத்தது எவ்வளவு 660 கோடி ரூபாய். 1981-82லிருந்து 1982-83 வரையிலே இதிலே 116 கோடி வந்துள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் திடீரென்று இந்த ஆண்டு எவ்வளவு எஸ்டிமேட் போட்டு இருக்கிறீர்கள். 710 கோடி ரூபாய் 50 கோடி ரூபாய் எப்படி திடீரென்று இன்கிரீஸ் ஆகும். சென்ற ஆண்டு 110 கோடி ரூபாய்க்கு மேல் — 116 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்று புள்ளிவிவரம் கொடுத்துவிட்டு, அடுத்த ஆண்டு 50 கோடி அதிகம் வரும் என்று சொல்கிறீர்கள் அதனுடைய தத்துவம் என்ன? பின்னர் மறைந்து இருந்து வரிபோடப்போகிறீர்களா? நிதி வருகின்ற வழிவகைகளை இந்த மாமன்றத்தில் சொல்லாமல் நீங்கள் யாரிடத்தில் போய்ச்சொல்லப்போகிறீர்கள்? இந்த மாமன்றம் தான் சுப்ரீம் பாடி. இந்த மாமன்றத்தில் நிதி ஆதாரங்களைச் சொல்ல மறுக்கிறீர்கள் என்றால், கள்ளக்கணக்கு எழுது



கிற வேலையா செய்கிறார் நிதியமைச்சர். இதற்கு உடனடியாக நிதியமைச்சர் அவர்கள் நேரடியான பதிலைத்தரவேண்டும். இன்னின்ன இனங்களில் வருமானம் வரும் என்று அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

63 பக்கம் நிதி அறிக்கை தந்திருக்கிறீர்கள். நாவலருக்கு வயது 63. ஒரு வயதிற்கு ஒரு பக்கம் என்ற முறையில் 63 பக்கங்கள் கொடுத்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. வதவத என்று அவர்களே சொல்கிற மாதிரி உப்பு இல்லை, சப்பு இல்லை, ஒன்றும் இல்லை. கடுகளவும், இம்மியளவும் இதிலே எந்தவிதமான திட்டமும் இல்லை. துரியோதனன் வைக்கோலை வாங்கி வீடு நிறைய நிரப்பி வைத்ததுபோல், 63 பக்கம் நிதி நிலை அறிக்கையை வைத்திருக்கிறார்கள். பத்திரிகையிலே போட்டு இருக்கிறார்கள். 6 முறை நாவலர் தண்ணீர் குடித்தார். ஆகவே அவருக்கே தண்ணீர் காட்டியிருக்கிறது இந்த நிதி நிலை அறிக்கை. அப்படிப்பட்ட ஒரு நிதி நிலை அறிக்கை இங்கே வைக்கப்பட்டு இருக்கிறது.

இதிலே கொள்கை உண்டா, குறிக்கோள்கள் உண்டா என்றால் இல்லை. கொள்கையற்ற குறிக்கோள் அற்ற பட்ஜெட் ஆளுகிற திறமையற்றுப் போன காரணத்தால் இன்றைக்கு நாட்டிலே நிலைமை என்ன? உண்ண உணவு இல்லை, உடுக்க உடையில்லை, குடிக்கத் தண்ணீர் இல்லை. ஆடுமாடுகள் தீவனம் இல்லாமல் செத்து மடிகின்றன. விலைவாசிகள் விஷம் போல் ஏறுகின்றன. மகாதேவனைப் பார்த்தாலும், பார்த்து விடலாம். மண்ணெண்ணெயைப் பார்க்க முடியவில்லை. ஊரை விட்டு மக்கள் ஓடிப்போகிறார்கள். வடாற்காடு மாவட்டம் காலியாகிக் கொண்டு இருக்கிறது. கலெக்டர் அறிக்கை விடுகிறார். திருவண்ணாமலை, செங்கம் பகுதிகளில் உள்ள மக்கள் பெங்களூர் செல்கிறார்கள் என்றால் அவர்கள் வழக்கமாகச் செல்வதைப்போல் செல்கிறார்கள் என்று கலெக்டர் அறிக்கை விடுகிறார். அவர்கள் என்ன 'எக்ஸ்கர்ஷனா' போகிறார்கள்.? அல்லது வேடிக்கை பார்க்கவா போகிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் சாகிறார்கள். பட்டினி, பசி, வேலையில்லை, குடிநீர் இல்லை, ஆகவே, பெங்களூர் நோக்கி ஓடுகிறார்கள். எனவே, நாட்டிலே இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது, இவைகளைப் போக்க என்ன நடவடிக்கை என்று கேட்டால் நீங்கள் சொல்கிற ஒரே பதில்—நாங்கள் என்ன செய்வது, மத்திய அரசிடம் அரிசி கேட்டோம், கொடுக்கவில்லை. கருநாடகம் தண்ணீர் கொடுக்கவில்லை. கேரளா மின்சாரம் கொடுக்க வில்லை. வானம் மழையைக் கொடுக்கவில்லை. ஆகவே, நாங்கள் சும்மா உட்கார்ந்து இருக்கிறோம். எல்லாம் கொடுத்தால் நீங்கள் என்ன செய்வது? 5-ம் 3-ம் அடுக்காக இருந்தால், அறியாப் பெண்ணும் சரியாகச் சமைப்பாளே, அதற்கு நீங்கள் என்ன மந்திரி வேண்டிக்கிடக்கிறது. மணல் நிலத்தில் நடப்பவன் வழுக்காமல் நடந்து விட்டேன் என்று சொன்னால், அது பெருமை இல்லை. வழுக்குகிற நிலத்தில் நடக்கிறபோது வழுக்காமல் நடந்து சென்றால் தான் அது பெருமை.

பேசி கலந்து முடிவு எடுத்ததற்குப் பிறகுதான் அவர்கள் நாள் குறிப்பிட்டு 1ஆம் தேதி வந்தார்கள். ராவ் பிரேந்திர சிங் அவர்கள் 28 ஆம் தேதி வருகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். 28 ஆம் தேதி அல்ல. அவர்கள் குறிப்பிட்டது 1-ஆம் தேதிக்குப் பிறகு தான், என்பதை நான் குறிப்பிட்டு கூற விரும்புகிறேன். ஆகவே, அவர்கள் நாள் குறிப்பிட்டுச் சொல்லி, அதற்கு இந்த அரசு ஆ்வர வேண்டாம் என்று சொன்னதேயில்லை.

திரு. துரைமுருகன் : ஆனால் ஒன்று, வேறு யாராவது சொல்லியிருந்தால், இதை நான் நம்ப மாட்டேன். நாவலர் அவர்களுக்கு அப்படி மாற்றிச் சொல்லத் தெரியாது. அதனால் அவர் சொல்வதை நான் நம்புகிறேன். ஆகவே, அந்த ரிப்போர்ட்டை பிப்ரவரியில் அனுப்பி வைக்கத்தான் நாம் இங்கே தயார் செய்து, தகராறு எல்லாம் செய்தோம். ஆனால் 14-10-1982-ல், நம்முடைய ரெவின்யூ அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்,—தமிழக அரசினுடைய டிரவுட் நிலையைப் பற்றி பார்லிமெண்டிலே திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் விவாதிக்கிறபோது, அதைப் பற்றி நம்முடைய அமைச்சர் மாண்புமிகு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் கூறியிருக்கிறார்கள் ; ' நம்முடைய விவர அறிக்கையை ஏறத்தாழ 3 மாதங்களுக்கு முன்பே மத்திய அரசுக்கு அனுப்பி யாகிவிட்டது' என்று. திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசியது அக்டோபரில், அப்போது போய் 3 மாதங்களுக்கு முன்னால் அனுப்பியாகிவிட்டது என்று பத்திரிக்கையிலே ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள்.

இங்கே என்ன சொன்னார்கள், நாங்கள் தந்துவிட்டோம், பின்னால் ஆபிசர் எடுத்துக் கொண்டு போனார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே இப்படி முன்னுக்குப் பின் முரணாக பேசுவதில் உங்களைத் தவிர வேறு யாரும் வல்லவராக இருக்க முடியாது. இங்கே டீம் காரர்கள் வரவில்லை என்று சொல்கிறீர்கள். அங்கே உங்கள் எம். பி. வேறு மாதிரி சொல்லியிருக்கிறார்கள். சட்டசபை இருந்தால் என்ன ? சட்டசபையிலே மந்திரிகள் அப்படியே காலையிலிருந்து எழுந்திரிக்காமல் உட்கார்ந்திருப்பது போல் என்ன பேச்சு. சரி, அதை விட்டு இந்த பட்ஜெட்டைப்பார்த்தால், இதிலே என்ன முக்கியமான செய்தியாகச் சொல்லியிருக்கிறீர்கள். இது வரையில் ஒன்றும் கிடையாது. ஒரே ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறீர்கள் எங்களுடைய மகத்தான சாதனையாக நாங்கள் என்ன பண்ணப் போகிறோம் என்று கேட்டால், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதுதான் நீங்கள் சொன்ன உருப்படியான ஒன்று.

(முற்பகல் 11–00)

இதுதான் நீங்கள் சொல்லியிருப்பது. அதுவும் உருப்படியாகச் சொல்லி இருக்கிறீர்களா ? படிப்படியாகச் சொல்லுகிறோம் அதைப்பற்றி என்று சொல்லி இருக்கிறீர்கள் ? பிறகு என்ன சொன்



னீர்கள் ? இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்த நிதியாண்டில் 15 கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று சொல்கிறீர்கள். 15 கோடி ரூபாய் இருந்தால் போதுமா ? தமிழ்நாட்டிலே ஒருத்தன் கூட வேலையில்லாமல் இல்லை என்ற நிலைமையை ஏற்படுத்திவிட முடியுமா ?

அடுத்து பட்ஜெட்டில் என்ன சொல்கிறார், இந்த நிதியாண்டில் என்று சொல்கிறார். இந்த நிதியாண்டு என்றால் 1982–83வது ஆண்டா ? 1983–84-வது ஆண்டு மார்ச் மாதம் முப்பதாம் தேதி தானே வரும் ? எனவே இந்த நிதியாண்டு என்று சொல்வதிலும் ஒரு குழப்பம் வருகின்றது ? அதையும் நாவலர் அவர்கள் விளக்கவேண்டும். யாருக்கு வேலை கொடுக்கப் போகிறீர்கள்? ஒரு திட்டம் என்றால் அதை எங்களிடம் சொல்லி, நாங்களும் கருத்துக்களைச் சொல்லி, நீங்களும் கருத்துக்களைச் சொல்லி கருத்து மோதல்களை ஏற்படுத்தி பின்னர் ஒரு முடிவுக்கு வரலாம். ஆனால் நீங்களோ என்ன திட்டம் என்றே சொல்ல மாட்டேன் என்கிறீர்களே.

அடுத்து விவர அறிக்கை பின்னாலே வரும் என்று சொல்கிறீர்கள். அப்படியானால் விவரம் இல்லாமல் இதை ஒதுக்கிவிட்டீர்களா ? யாருக்கு வேலை கொடுக்கப் போகிறீர்கள்? அன் எம்ப்ளாயிடுக்கா ? அண்டர்-எம்ப்ளாயிடுக்கா? வீட்டுக்கு ஒருவன் என்றால் வீட்டிலே எத்தனை பேருக்கு ஒருத்தன்? படித்தவனுக்கா அல்லது படிக்காதவனுக்கா ? நாவலர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள் மொட்டைக் காதன் குட்டையிலே விழுந்தான் என்று. அந்த மாதிரி 15 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம் இந்தத் [illegible]த்திற்கு என்று சொல்லி இருக்கிறீர்கள். இதற்கு விவரம் [illegible]ா ? கேட்டால் சொல்வார்கள். இந்தத் திட்டத்தின் விவ[illegible] தயாரிக்கப்பட்டு வருகின்றது என்று, இனிமேல்தான் [illegible]த்தைச் சேகரிக்கப் போகிறீர்களா ? வீட்டுக்கு ஒருவருக்கு [illegible]லை என்பதற்கு என்ன அர்த்தம்.

[illegible]டைட்டில் இப்போதுதான் வந்திருக்கின்றது. இனி மேல்தான் [illegible]நாயகன் காதாநாயகியைத் தேட வேண்டும். சிலருக்கு [illegible]ட்டில் கிடைத்துவிட்டால் போதும், அதைப் பிடித்துவைத்துக் [illegible]ாண்டு பிறகு கதை எழுதுவார்கள். அதைபோன்று சினிமா [illegible]ணியிலேயே பட்ஜெட்டும் வந்துவிட்டது.

அடுத்து இன்னொரு திட்டம். இந்தச் சத்துணவுதிட்டம் என்பது பிள்ளைகளுக்கு பயன்படுகின்றதோ இல்லையோ உங்கள் விளம்பரத்திற்கு நன்றாக பயன்படுகின்றது. எங்கே பார்த்தாலும் விளம்பரம்தான். பத்திரிகையிலேயும் விளம்பரம் தான். எம்.எல்.ஏ. டைரிலேயும் விளம்பரம்தான். ஹண்டே அவர்கள் எதிர்கட்சியில் இருந்தபோது கலைஞரின் ஃபோட்டோ எங்கோ ஓரிடத்தில் வந்துவிட்டது என்பதற்காக personality cult of Chief Minister என்று பேசினார்கள்,

சொல்கிறேன். இந்த 100 பசங்களுக்கும் 100 கிராம் வீதம்
சாப்பாடு போட வேண்டும். ஆனால் அங்கு மற்ற பசங்கள்
இருக்கிறார்களே அவர்கள் சும்மா இருப்பது இல்லை.
அவர்களும் தட்டை எடுத்துக் கொண்டு உட்கார்ந்து கொள்
கிறார்கள். எனவே அந்த சத்துணவு அவர்களுக்கும் போடு
கிறார்கள். பிறகு என்ன ஆகுது. 100 கிராம் போட
டிய இடத்தில் 70 கிராம் போட்டு மீதி 30 கிராமை இன்னொரு
பையனுக்கு போடுகிறார்கள். ஆக சாப்பிட்டும் பட்டினி, சாப்
பிடாமலும் பட்டினி, சத்துணவு போட்டும் பட்டினி, போடா
மலும் பட்டினி, சத்துணவால் ஏறவில்லை, இறங்குது. இது
போன்ற ஒரு குழப்பமான நிலை இந்த ஆட்சியின் கொள்கை
மாதிரி சத்துணவு நிலைமையும் இருக்கிறது என்பதை நாவலர்
அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தெருவே தட்டாக
இருக்கிற நிலைமை இருக்கிறது.

அடுத்து, நாவலர் அவர்கள் நிதி அமைச்சராக வந்த பிறகு
ஒரு அருமையான ஐடியா வந்தது. துரைமுருகன் என்ன கேட்டார்?
நிதி எப்படி பைனான்ஸ்க்கு எப்படி ரீக்குப் பண்ணப்போகிறீர்கள்
என்று. நான் போட்டிருக்கிறேனே அக்ட்ராய் வரியைப் பார்த்
தீர்களா. இந்த மாதிரியான வரி யாராவது போட்டிருக்கிறார்
களா ? இந்த வரியைப் பற்றி நான் ஒன்றைச் செல்கிறேன். இஸ்ட்
டாரியில் படிக்கும் போது பாபர், அக்பர் காலத்தில் போடு
வார்கள். அதனால் தான் தோல்கேட் வைத்தார்கள். எங்கி
ருந்தாவது எடுத்து வந்தால் காசு கொடுத்துவிட்டு போக வேண்
டும் என்று தோல்கேட் வைத்தார்கள். இப்போது மாடர்ன்
முறையில் வரி விதிக்கும் தன்மையில் மாடர்ன் எக்கனாமிக்
தியரியில் இப்போது இருக்கிற வளர்ந்து வரும்
பொருளாதாரத்தில் it is n ı-reactiona:y tax out modern
என்று சொல்கிறார்கள். இது தேவையில்லாமல் ஊழலுக்கு வழி
வகுச்கிறது என்று சொல்கிறேன். ஆகையால் எல்லா மாநிலத்
திலும் இதற்கு கம்பல்சரி ரிட்டையர்மென்ட் கொடுத்து,
எடுத்து இருக்கிறார்கள். ஆக அந்த வரியினை எடுத்து
எல்லோரையும் பொருள்களை தூக்கிக்கொண்டு போகச்
சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த வரி இருக்கவேண்டுமா,
இருக்கக்கூடாதா என்பதைப் பற்றி ஒன்றைச்
சொல்கிறேன். indirect tax enquiry c mmittce என்று
ஒரு கமிட்டி போட்டார்கள். எல். கே. ஜா, இன்றைக்கு
பிரைம்மினிஸ்டருக்கு எக்கனாமிக் அட்வைசர் அவர் தான்.
ஜனதா காலத்தில் அவர் தலைமையில் ஒரு கமிட்டி போட்டு
ஆராய்ந்தார்கள். ஆராய்ந்து என்ன சொன்னார்கள். பீகார்
போன்ற இடங்களில் இந்த மாதிரியா வரி போட்டிருக்கிறார்
கள். இது தேவையில்லாத வரி ஏன் என்று கேட்டால்
இது கடைசியில் யாரைப் பாதிக்கும் என்றால் கன்சுமரைத்தான்
பாதிக்கும். இதில் ஊழல் வரும். இது அவுட் மாடர்ன் என்றும்
இதை எடுத்துவிடவேண்டும் என்றும் எல்.கே. ஜா ரிப்போர்ட்
கொடுத்து எல்லோரும் அதை ஒத்துக்கொண்டு நடைமுறைப்



படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். நாவலருக்கு வேண்டுமானா
அல்லது மந்திரிகளுக்கு வேண்டுமானால் அல்லது மற்றவர்களுக்கு
வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். ஆனால்—Finance
Secretary—They di. not know th. consequences of these facts—
என்ன பண்ணுகிறார் அந்த பைனான்ஸ் செகரட்டரி. அந்த
பைனான்ஸ் டிபார்ட்மென்டிலே. பைனான்ஸ்லே என்ன சார்
கேட்கிறீர்கள் யானைக்கு அல்வாவா, எழுதிக்கொள்ளுங்கள்
100 ரூபாய். நாங்கள் எழுதிக்கொடுக்கிறோம் என்று கணக்
குப்பிள்ளைக்கு ஒரு ஏஜெண்டு மாதிரி பைனான்ஸ் டிபார்ட்
மென்டு ஆக்ட் செய்கிறதே தவிர எல். கே. ஜா ரிப்போர்ட்டை
படித்தது உண்டா? அந்த பைனான்ஸ் செக்ஷன், அவர்
கள் என்ன பணணுகிறார்கள்? உங்கள் முகத்தைப் பார்க்
கிறார்கள். நீங்கள் சிரித்துக்கொண்டு இருக்கிறீர்களா, நீங்
கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா என்று பார்த்து அது மாதிரி
நாங்கள் எழுதி விடுகிறோம் என்று சொல்கிறார்கள்.

அடுத்து இன்னொரு டிராபேக்-ஐ அந்த கமிட்டி சொல்
கிறது. ' சில பொருள்களுக்கு மத்திய சர்க்கார் வரி போடும்,
மாநில சர்க்காரும் வரி போடும்; தெரியாமல் வரி போடும்.
உதாரணமாக சர்க்கரைக்கு அவர்கள் எடுத்துவிட்டார்கள்.
இப்போது நீங்கள் சர்க்கரைக்கு வரி போட்டிருக்கிறீர்கள்.
சிமெண்டுக்கு அவர்களும் போட்டார்கள் . நீங்களும் போட்
டீர்கள். இப்படி இரண்டு பேரும் போட்டால் அதனுடைய
நிலைமை உயர்ந்துபோய் விடும் என்று சொல்வதற்காக இந்த
மாதிரி வரி எல்லாம் போடக்கூடாது. ஊழல் பெருகும்
என்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதில் நீங்கள் எதை
எதை சேர்த்து இருக்கிறீர்கள் என்பதைப் படித்துப் பார்க்கும்
போது எனக்கு அச்சமாக இருக்கிறது. டிரக்ஸ் அண்டு
மெடிக்கல்ஸ். இதற்கு எல்லாம் அந்த அக்ட்ராய் வரியைப்
போட்டிருக்கிறீர்கள். அதை நாவலர் அவர்களே படித்துச்
சொல்கிறார்கள். சர்க்கரை வியாதி. இது எல்லோருக்கும்
பேமஸ். நாவலருக்கும் சபாநாயருக்கும் எல்லோருக்கும் இது
பேமஸ் தமிழ்நாட்டில் தான் அதிகமான சர்க்கரை வியாதி
இருக்கிறது என்று கண்டுபிடித்து எ.ல்த் ரிப்போர்ட் கூறுகிறது.

(முற்பகல் 11–10)

அதற்கு இன்சுலின் என்ற மருந்து போடுகிறார்கள்,
எல். கே. ஜா சொல்கிறார், இந்த இன்சுலின் மருந்து விலை
யிலே 30 சதவீதம் டாக்ஸாகவே போகிறது, அந்த விலை
யிலே 30 சதவீதம் டாக்ஸ் இருக்கிறது என்று சொல்கிறார்.
அவரவர்கள் சர்க்கரை வியாதியால் காலையில்
எழுந்தவுடன் ஒவ்வொரு ஊசியை குத்தவேண்டும், இந்த நிலையில்
அந்த மருந்துக்கு வரியைப்போடுகிறீர்கள். முனிசிபாலிட்டிக்
குள்ளே நுழைந்தால் வரி, குனிந்தால் வரி, நிமிர்ந்தால்
வரி, எழுந்தால் வரி என்றால் இது என்ன வரி? மெட்
ராஸிலே ஒருவன் வாங்கினான் என்றால் காஞ்சிபுரத்திற்கு

ஆனால் இன்று எம்.எல்.ஏ. டைரியிலே பக்கத்திற்கு பக்கம் முதலமைச்சர்தான். எக்ஸிபிஷனுக்குச் சென்றால் அங்கேயும் எல்லா அமைச்சர்களுக்கும் கட்அவுட் இருக்கின்றது. நாவலர் அவர்களுக்கு இருக்கின்றதோ இல்லேயோ நான் பார்க்கவில்லை. திரு. ராகாவனந்தம் அவர்களுக்கும் ஒரு கட்அவுட் இருக்கிறது. இப்படி விளம்பரப்பிரியர்களாகவே இருக்கிறீர்களே.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்தத் திட்டம் என்பது அருவமாக இருந்தது. அப்புறம் கொஞ்சநாள் ஆனவுடனே துணை மானியக் கோரிக்கையில் அது உருவமாக மாறி 12½ கோடி ரூபாய் என்று வடிவெடுத்தது. இப்போது 134 கோடி ரூபாய் என்று விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது. எங்கே அது ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று பெரிய பெரிய தலையணை போன்ற புத்தகங்களை எல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். அதாவது சத்துணவிற்காக அரிசி ஓரிடத்திலே, காய்கறி ஓரிடத்திலே வாங்குவார்களே அது போன்று ஆங்காங்கே ஒதுக்கி இருக்கிறீர்கள். அதைக் கண்டுபிடித்துவிட்டாலே ஒருவன் பெரிய ப்ரஃபஸராக ஆகிவிடுவான். இரண்டு நாட்களாகக் கஷ்டப்பட்டு நான் கண்டுபிடித்தது 101 கோடி ரூபாய்தான். மீதி எங்கே என்று நாவலர் அவர்கள் கொஞ்சம் சொன்னால் பரவாயில்லை. இப்படிப்பட்ட திட்டத்திற்கு என்ன நிலைமை? அது ராஜா வீட்டு கன்றுக்குட்டி. முதலமைச்சர் என்ற பட்டத்தைத் தாங்கி இருக்கின்றது அது. ராஜா வீட்டுக் கன்றுக்குட்டி நாட்டாமைக்காரர் வயலில் மேயும், அது எங்கு வேண்டுமானாலும் போகும், எங்கே வேண்டுமானாலும் மேயும், எந்த இடத்திலே வேண்டுமானாலும் படுத்துக்கொள்ளும் எந்த இலாக்கா பணத்தை வேண்டுமானாலும் சாப்பிடும், எந்த அதிகாரியை வேண்டுமானாலும் வேலை வாங்கும். அதற்கு முதலமைச்சர் என்ற பட்டுக் குஞ்சம் கட்டப்பட்டிருக்கின்றது. அது அந்த இலாக்காவினுடைய நிலைமை.

இதிலே இன்னொன்றும் சொல்கிறார்கள். எங்கே பார்த்தாலும் இதே நிலைமைதான். சிட்கோவைப் பற்றிப் பேசும்போது கூட முதலமச்சர் சத்துணவுத் திட்டத்திற்கு பாத்திரமும், பல்பொடியும் தயாரித்தல் என்று வருகிறது. ஆகவே முதலமைச்சர் திட்டம் என்று அதைப் பற்றியே சொல்கிறார்கள். பரவாயில்லை, அவரைப் ப்ளீஸ் பண்ணி இருக்கிறார்கள். 6 முதல் 14 வயது வரை உள்ள பிள்ளைகள் 2 லட்சத்து 63 ஆயிரம் பேர் புதிதாக பள்ளியிலே சேர்ந்திருக்கிறார்கள் இந்தத் திட்டத்தால் என்று சொன்னார்கள். உடனே நான் சென்ற ஆண்டு கவர்னர் உரையிலே பேசும்போது கேட்டேன். கிட்டத்தட்ட 40 ஆயிரம் பேர் ஆசிரியர்களை நியமித்திருக்க வேண்டுமே, என்ன செய்யப் போகிறீர்கள் என்று. ஆனால் இப்போது சொல்கிறார்கள் 1250 உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களையும், 150 தமிழ் பண்டிதர்களையும், ஹையர் எலிமென்டரி ஸ்கூல் பி.டி. வாத்தியார்கள் 100 பேரையும், ஹையர் செகண்டரி ஸ்கூல் பி.எட். ஆசிரியர்



200 பேரையும், உடற்பயிற்சி ஆசிரியர் 50 பேரையும் நியமிக்க அனுமதி அளிக்கிறோம் என்று சொல்கிறீர்கள். 6 வயது முதல் 14 வயது வரை சேருவது ஆரம்பப் பள்ளியிலே, அங்கே வாத்தியாரைக் காணோம். அதை விட்டுவிட்டு பி. எட்., ஏ. எட். சாயட் எல்லாம் சேர்த்திருக்கிறீர்களே அதற்கு என்ன அர்த்தம்? அப்படியானால் கணக்கை உபரியாகக் காட்டுவதற்காகவா? திரு. கேதார் பாண்டே இங்கே வந்தபோது அதிகமான மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்றும் செண்ட் பெர்சன்ட் சேர்ந்திருக்கிறார்கள் என்றும் கணக்குக் காட்டுவதற்காகவா இதைச் சொன்னீர்கள். பிள்ளைக்கு படிப்பு சொல்லிக் கொடுக்க வாத்தியாரை நாங்கள் அப்பாயின்ட் பண்ணப் போகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் போன வருஷம் என்ன நிலைமை? போன வருஷம் நிதிநிலை அறிக்கையில் சொல்லி இருக்கிறீர்கள். 6 வயது முதல் 11 வயது வரை, 11 வயது முதல் 14 வயதுள்ள மாணவர்கள் கூடுதலாகச் சேர்ந்துள்ளதாக 82—83-லே சொல்லியிருக்கிறீர்கள். இப்போது சொல்கிறீர்கள் சத்துணவால் மாணவர்கள் சேர்ந்து இருக்கிறார்கள் என்று. போன வருடம் பட்ஜெட்டைப் பார்த்தால் 6 முதல் 11 வயதுள்ளவர்களை சேர்த்துவிட்டோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகவேதான் ஆசிரியர்களை நியமிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள் ஆயிரம் இடைநிலை ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் 50 பேர், உடல்பயிற்சி ஆசிரியர்கள் 150 பேர் பீ.ஈ.டீ. ஆசிரியர்கள் 50 பேர் இன்னொரு ஆசிரியர்கள் 30 பேர் மேல்நிலை ஆசிரியர்கள் 100 என்று போன வருடம் பட்ஜெட்டிலே 82—83-லே 6 முதல் 11 வயதுள்ள மாணவர்கள் எக்கச்சக்கமாக சேர்ந்த காரணத்தினால் நியமிக்கிறோம் என்று படித்து இருக்கிறீர்கள் நீங்கள். அதையே இப்போது இந்த வருடம் ஆக்டிவ் வாய்சில் படித்ததை பாசிவ் வாய்சில் படிப்பது போல் இந்த வருடம் மறுபடியும் மாணவர்கள் சேர்ந்து இருக்கிறார்கள் என்று சொல்லுகிறீர்கள் அதில் எது உண்மை என்பதை நிதி அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

சத்துணவு எப்படி போடுகிறார்கள். பசங்கள் வந்து வாங்குகிறார்கள். வாங்கியவுடன் பறந்துபோய்விடுகிறார்கள். பாலசேவிகாக்களுக்கு விறகு வாங்குவதற்கு காய் வாங்குவதற்கு 3 மாதம் ஆகியும் கூட காசு கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள் அதில் பி.டீ.ஓ. வேறு 6 சதவீதம் பிடித்துக்கொள்வார்கள். 3 மாதம் வரை கொடுக்கவில்லை என்றால் அவர்கள் என்ன செய்வர்கள்? பாலசேவிகாவுக்கு 150 ரூபாய் சம்பளம், ஆயாவுக்கு 60 ரூபாய், இன்னொரு ஆயாவுக்கு 30 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். இதை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படி செய்வார்கள், 3 மாதம் பணம் கொடுக்கவில்லை என்றால் ஊழல் நடக்குமா, நடக்காதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இரண்டாவதாக பிராக்டிகலாக கேட்கிறேன் ஒவ்வொரு ஹையர் எலிமென்டரி ஸ்கூலிலும் 100 பசங்களுக்கு சாப்பாடு. பையனுக்கு 100 கிராம் சாப்பாடு போடவேண்டும். உதாரணமாக

மென்று கேட்டால் விலை கொடுக்கமுடியாது, காரணம் ரிசர்வ் பாங்க் தடுக்கிறது என்று சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் அவர் என்ன சொல்கிறார்,

When Mr. Sing's attention was drawn to the State Finance Minister's reported remarks that though the State was willing to fix a higher procurement price for sugarcane the Reserve Bank's clearance was not forthcoming, he observed that the Reserve bank was not in the picture at all "Reserve Bank of India does not fix sugarcane prices. If the sugar mills want credit to pay the farmers in view of higher prices they can apply under the regular norms.

என்று சொல்கிறார், நீங்கள் கொடுங்கள் என்று சொன்னால் நீங்கள் ஏன் எங்களை வாயில் போட்டுக் கொள்கிறீர்கள் என்று கேட்கிறார். ஆனால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? ரிசர்வ் பாங்க் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறது என்று சொல்கிறீர்கள். ஆகவே இப்படிப்பட்ட ஒரு வரியை போட்டு மக்களை வதைப்பது சரியல்ல. இது தேவையில்லாத வரி. அக்பர் காலத்தில், பாபர் காலத்தில் இருந்த வரி. தேவையில்லாத இந்த வரி ஊழலைப் பெருக்கும். இந்த வரி தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் நாவலர் அவர்கள் கேட்கலாம். பழைய வரி என்றால் போடக்கூடாதா? பழையன கழிதலும் புதியன புகுதலும் தொல்காப்பியத்திலே சொல்லியிருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் எப்படி சொல்லப் போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

இந்த பட்ஜெட்டிலே மிக முக்கியமாக இருக்கவேண்டியது தொழில். ஆனால் இண்டஸ்ட்ரீசே கிடையாது. என்ன இண்டஸ்ட்ரீஸ்கள் நீங்கள் வைத்திருக்கிறீர்கள் ஒன்றும் கிடையாது. ஆனால் பக்கத்தை நிரப்பியிருக்கிறீர்கள். சிட்கோ, டிட்கோ, டாமின் ஆகியோர் ஆற்றிய பணிகளுக்காக கொடுத்த கடன்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதுபற்றி பேசுகிறீர்களே தவிர எந்தவிதமான நிலைமைகளிலும் தொழிலே செய்யவில்லை. இதில் ஒன்றைப் பெரியதாக சொல்கிறார்கள். ரெஜிஸ்ட்டர் பண்ணினார்களாம், அவ்வளவு பேர்களுக்கும் உடனே வேலை கிடைத்து விடும். நடப்பு நிதியாண்டில் 76 கோடி மதிப்புள்ள விற்பனைப் பொருள் திட்டம். இதை உடனே ரெஜிஸ்ட்டர் பண்ணினால் 33 ஆயிரம் பேர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்கிறீர்கள். காட்பாடியில் வெடிமருந்து தொழிற்சாலை, அரக்கோணம் தொழிற்சாலை, தூத்துக்குடி ஆல்காலிக் தொழிற்சாலை என்றெல்லாம் சொல்கிறீர்கள். இதெல்லாம் ஏற்கெனவே சொன்னது. ஆனால் இதை மறுபடியும் வேறு லைனில் சொல்லியிருக்கிறீர்களே தவிர, தொழில் வரலாற்றில் திருப்புமுனையாக எதையாவது சொல்கிறீர்களா? ஆனால் ஒன்றை மட்டும் நான் பார்த்தேன். இவ்வளவு சொன்ன நீங்கள் ஒன்றை மட்டும் ஏன்



சொல்லவில்லை. அதைத்தான் நாவலரே சொன்னார். திருப்புமுனையாக அமையப்போகிறது——எது? காகிதத் தொழிற்சாலை. 200 கோடி ரூபாய்க்கு மேலே புகளூரில் கொண்டு போய் கொட்டி, பப்ளிக் செக்டாரில் ஒரு பிரைவேட் கம்பெனியுடைய மானேஜிங் டைரக்டர், விஸ்வநாதனை அதிலே கன்சல்டட்ன்டாக போட்டு, 11 லட்சம் ரூபாய் கன்சல்டன்ட் பீஸ் மட்டும் வாங்கிவிட்டார். நகரவில்லை பாக்டரி. 84-லே புரொடக்‌ஷன் வந்திருக்கவேண்டும். கிட்டதட்ட 50 ஆயிரம் டன் நியூஸ் பிரின்ட் வந்திருக்கவேண்டும். ஆனால் 50 ஆயிரம் டன் நியூஸ் பிரின்ட்டும், 40 ஆயிரம் டன் எழுது பொருள் காகிதமும் வந்துவிடும்; 552 ஏக்கரில் தொழில் கூடம்; 30 ஆயிரம் கே. வி. மின்சக்தி; தனி இருப்புப் பாதை; இவ்வளவும் போட்டீர்களே? அது பற்றி ஒரு வரி கூட காணவில்லையே? ஏன் என்று நான் நாவலரைக் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன். இந்த பேப்பர் மில்லுக்கு 1981-1982ல் 27 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். போன பட்ஜெட்டிலே 4 கோடி ரூபாய்; இந்த முறை நாவலர் அவர்களை நான் கேட்கிறேன். .021 தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். அது ஏன்? 200 கோடி மதிப்புள்ள அந்த பேப்பர் மில்லுக்கு முதலில் 27 கோடி ரூபாய் ஒதுக்கியீருக்கிறீர்கள். போன பட்ஜெட்டில் 4 கோடி; ஆனால் இந்த வருடம் .021 தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். என்ன காரணம்? அது வராதா? என்ன நிலைமை? கரும்பு சக்கையெல்லாம் கொண்டு போய் காகிதமாக்கி, கரும்பு ஆலைகளில் எரிவதற்கு நிலக்கரி கொடுப்பது என்று ஒரு ஒப்பந்தம். 30 ஆயிரம் டன் ஷுகர் பாக்டரிக்கெல்லாம் கொடுக்க வேண்டும். ஆனால் தெர்மல் ஸ்டேஷனுக்கே நிலக்கரி இல்லை. உடையாரே உதறுகிறார், சிவாலயத்திற்கு பஞ்சகச்சமாம்; இருக்கிற தெர்மல் ஸ்டேஷன்களுக்கே கரி இல்லை; நீங்கள் சர்க்கரை ஆலைகளுக்கு கொடுக்கிறேன் என்று சொல்லி இருக்கிறீர்களே. இது என்னவென்று தெரியவில்லை. நிறைய போட்டு இருக்கிறார் நாவலர் அவர்கள். அந்த கார்ப்பரேஷன், இந்த கார்ப்பரேஷன் என்று நிறைய போட்டிருக்கிறார். வீட்டிற்கு ஒருவருக்கு வேலை கொடுப்பதை விட்டு, தலைவர் அவர்களே, நம் எம்.எல்.ஏ. களுக்குகெல்லாம் வேலை கொடுக்கலாம். நிறைய கார்ப்பரேஷன்கள் இருக்கின்றன. இன்னொன்றையும் பார்த்தேன். இறைச்சி கார்ப்பரேஷன் அதற்கு 1981-லும் ஒன்றும் ஒதுக்கவில்லை; 1982-லும் ஒன்றும் ஒதுக்கவில்லை; 1983, 84-லும் ஒன்றும் ஒதுக்கவில்லை. அது என்ன, அப்படி ஒரு கார்ப்பரேஷன் இருக்கிறதா? காலணா ஒதுக்கப்படாத ஒரு கார்ப்ரேஷன். நாவலர் குடும்பம் சைவம் என்பதாலே ஒதுக்கமாட்டேன் என்று விட்டுவிட்டாரோ எனக்குத் தெரியவில்லை. ஆகவே தொழில் வளர்ச்சியிலே இந்த சர்க்கார் மிக மந்தமாக இருக்கிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டாகும்.

அடுத்து மிக முக்கியமான ஒன்றை நம்முடைய நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்க் கலைகளும் பண்பாடும் என்ற ஒன்றை வைத்திருக்கிறார்கள். இது பற்றி ரொம்பவும்

போனால் வரி, வாலாஜாவுக்குப் போனால் வரி, இராணிப் பேட்டைக்குப் போனால் வரி, வேலூருக்குப் போனால் வரி, ஆம்பூருக்குப் போனால் வரி வாணியம்பாடிக்கு போனால் வரி என்றால் அவன் போய்ச் சேருகிற வரையில் வரி வரி வரி என்று வரிக்கோடாகி விடுகிறது. வரிகளைப் போட்டிருக்கிறீர்கள், அதற்கு ஒரு கொள்கை இல்லையா? இது சுகாதாரக் கொள்கைக்கு எதிரான வரியில்லையா? இப்படி நீங்கள் போடுவதால் என்ன ஆகும். மருந்துகளின் விலைகள் உயர்ந்து போகும்.

அது மட்டுமல்ல, சிமிண்டிற்கு வரி போடுகிறீர்கள், பெட்ரோலுக்கு வரி போடுகிறீர்கள், மருந்துப் பொருட்களுக்குப் போடுகிறீர்கள், இரும்புக்கு போடுகிறீர்கள், பெட்ரோலியம் புராடக்ட்ஸ்க்கு வரி என்று போடுகிறீர்கள். இப்படிப்போட்டால் என்ன ஆகும்? பிறகு வெட்டியெடுக்கப்பட்ட கனிப்பொருள். ஏன் வெட்டாமல் எடுக்கப்பட்ட கனிப்பொருளுக்குக் கிடையாதோ? நான் கேட்கிறேன், இண்டஸ்ட்ரிஸ் வளருமா? ஏற்கனவே இண்டஸ்ரிஸ் வளரவில்லை, கொஞ்சம் நஞ்சம் முளைத்தால் கூட முளையிலேயே அதைக் கிள்ளியெறியும் வேலையைச் செய்கிறீர்களே, சிமிண்டிற்கு வரிப் போடுகிறீர்கள், இரும்புக்கு வரிப் போடுகிறீர்கள், பெட்ரோலியம் புராடக்ட்ஸ்க்கு வரிப் போடுகிறீர்கள், நேற்றைய தினம் ஒரு நண்பர் பெங்களூரிலிருந்து ஃபேன் வாங்கிக் கொண்டு வந்தாராம் அவருக்கு 30 சதவீதம் நுழைவு வரி கட்டவேண்டுமென்று சொன்னார்களாம். உடனே அவர் நீயே எடுத்துக் கொண்டுபோ என்று செல்லி அங்கேயே வைத்துவிட்டு வந்து விட்டாராம்.

இந்த வரிகள் வியாபாரிகளைப் பாதிக்காது என்று செல்கிறார்கள். நாவலர் கெட்டிக்காரத்தனமாகச் சொல்லியிருக்கிறார். வியாபாரிகளைப் பாதிக்காமல் போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள், காரணம் என்னவென்றால் அவர்கள் உங்களுக்கு ரொம்ப வேண்டியவர்கள். யார் யார் பாதிக்கப்படுவார்கள் என்றால் கன்ஸ்யூமர்ஸ்தான். இது நியாயம்தானா? நாவலர் சொன்னார், உனக்குத் தெரியாது துரை முருகன், எப்போதுமே ஒட்டகத்திலே சாமான்கள் ஏற்றுகிறவர்கள் 2 மூட்டைகளை அதிகமாகத்தான் ஏற்றுவார்கள், கடைசியிலே இரண்டு மூட்டைகளை எடுத்துவிட்டால் ஒட்டகம் வேகமாகப் போகும், அந்த மாதிரி நான் கடைசியிலே பேசி முடிக்கும் போது சில வரிகளை எடுப்பேன் என்று சொல்ல வேண்டாமா, அதற்காகத்தான் போட்டிருக்கிறேன் என்று. போன வருஷம் பட்டுக்கு 5 சதவீதம் போட்டீர்கள். அப்புறம் நாங்கள் வேண்டாம் வேண்டாம் என்று பேசினோம். நீங்கள் அதை வேறு மாதிரி கம்ப்ளீட் பண்ணி, செட்டில் பண்ணி குளோஸ் பண்ணிவிட்டீர்கள். அதற்கப்புறம் எடுக்கிறமாதிரி அதை எடுத்துவிட்டோம். பிறகு நீங்கள் விளம்பரம் போட்டுக் கொண்டீர்கள், பட்டுக்கு வரியை எடுத்த முதலமைச்சருக்கும்

1983 மார்ச் 8]		[திரு. துரைமுருகன்]

நிதி அமைச்சருக்கும் பாராட்டு என்று கத்தோ கத்து என்று கத்தியது நாங்கள், எதிர்கட்சிகள். ஆனால் பாராட்டு உங்களுக்கு. அதற்கு மேலேயும் வருகிறது உங்களுக்கு. மற்றது எல்லாம் உங்களுக்கு. அதேமாதிரி நீங்கள் கத்தோ கத்து என்று கத்திப் பேசுங்கள், நாங்கள் அதற்கப்புறம் வியாபாரிகள் நலனை முன்னிட்டு எதிர்கட்சித் தோழர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு ஜனநாயக முறைப்படி எதிர்க்கட்சியினுடைய கருத்துக்களுக்கு மதிப்பு அளிக்கவேண்டுமென்ற காரணத்தினால் இந்த அக்ட்ராயை எடுப்போம் என்று சொல்வதற்கு——அதற்குள் வியாபாரிகள் வருவார்கள், அது வேறு; புட்டிங் வேறு நடக்கும்—ஆகவே அந்த வேலைகளைச்செய்வதற்கு எங்களை விட்டிருக்கிறீர்களே தவிர இவைகள் எல்லாம் வரிகளா?

நாட்டிலே மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. பத்திரிகையிலே க்யூ என்று படம் போடுகிறார்கள், மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள், க்யூவிலே குழந்தையும் குட்டியும் தூங்குகிறார்கள், டின்னும் தூங்குகிறது, கடையும் தூங்குகிறது, ஊரே தூங்குகிறது. ஆனால் சற்றே பார், திரிக்கு வரியில்லை என்று சொல்கிறீர்கள். ஒருவன் சொன்னானாம், வீட்டிலே சாப்பிடுவதற்கே இல்லை, என்ன குழம்புடி என்று கேட்டானாம், பிட்டுக்கவே காணோம், தொட்டுக்க வேறா என்று கேட்டாளாம். மண்ணெண்ணெயையே காணோம், திரிக்கு வரியை எடுத்திருக்கிறோம் என்கிறீர்கள். திரி எல்லாம் கிளீன் பண்ணி கம்ப்ளீட் பண்ணி திரித்து எடுத்திருக்கிறீர்கள், பரவாயில்லை. ஆனால் அந்த வரிகளையெல்லாம் போட்டிருக்கிறீர்களே அவைகளைப் போடக்கூடாது என்பது தான் எல்லோருடைய எண்ணமும்.

இன்றைக்கு வந்திருக்கிறார், ரிசர்வ் பாங்கின் சேர்மன், மக்மோகன்சிங், உங்களுடைய குட்டை உடை உடை என்று உடைத்து இருக்கிறார். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே ரிசர்வ் பாங்க் சேர்மன் சொன்னதைப் போட்டிருக்கிறார்கள். என்ன சொல்கிறார், அக்ட்ராய் வரிப் போட்டிருக்கிறீர்களே நுழைவு வரி அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள் அவரிடம். அவர் சொல்கிறார் If it was desirable for more States to resort to levy of octroi he said that in an ideal society octroi should not find a place என்று. அந்த வரிக்கு இடம் இல்லை என்று ரிசர்வ் பேங்க் சேர்மன் சொல்கிறார், ஐடியல் சொஸைடியில் இதற்கு இடம் இல்லை என்கிறார், இங்கே ஐடியல் சொசைடி இல்லையா? இது வியாபாரத்தைத் தடுக்கும் என்று சொல்கிறார். அவர் சொல்கிறார். it came in the way of free flow of trade. என்று. இது வியாபாரத்தைக் தடுக்கும் ஊழலைப் பெருக்கும் என்று சொல்கிறார். ஏதாவது நாங்கள் சொன்னால் உடனே உட்காரவைக்கிறீர்கள். நாங்கள் கரும்புக்கு விலை வேண்டு

பிற நாட்டு நூல்களை மொழி பெயர்ப்பதற்காக, மகாராசன் அவர்கள் தலைமையில் ஒரு குழு. பெரியவர், பாவம், அவர் செத்துப் போய்விட்டார். அவர்கள் பிறநாட்டு நூல்களை மொழி பெயர்க்கிறார்களாம், "To add fe tility to Tamil" என்பதற்கு, தமிழ் விந்துக்குத் தெம்பூட்ட என்று டிரான்ஸ்லேட் செய்திருக்கிறார்கள். தமிழ் விந்துக்குத் தெம்பூட்ட "To add fe.tility to Tamil" தமிழ்த்தாய் சிலையைப் பக்கத்தில் வைத்துத் கொண்டு தமிழ் விந்துக்கு என்று எழுதியிருக்கிறார்கள். It is a bad and unwise thing for the words "To add fertiilty to Tamil" தமிழ் விந்துக்குத் தெம்பூட்ட என்று எழுதியிருக்கிறார்களே, இதுவா நீங்கள் தமிழ் வளர்க்கிற இலட்சணம். ஒன்றே ஒன்று, நீங்கள் தமிழைப் பற்றி பேசாமல் இருங்கள், தமிழ் தானாக வள ரும். அதைத்தான் நான் உங்களைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்கிறேன். நாவலருக்கு நெஞ்சம் துடிக்கும் — தமிழ் நெஞ்சம் அது ; நான் அறிகிறேன், மறுக்கவில்லை. ஆனாலும், என்ன செய்திருக்கிறார்கள், தமிழ்த் துறையிலே, தமிழை ஒழிக்கின்ற நிலைமைக்கு இன்றைக்கு வந்திருக்கிறது.

நான் நாவலரை ஒன்று கேட்கிறேன், பத்திரிகையிலே எல் லாம் வந்திருக்கிறதே, எவ்வளவு சிறிய விவகாரம். தமிழ் இலக் கியத்திலே உள்ள மலர்களும் செடிகளும் வளர்க்க புதிதாக பண்ணை. ஏன் இப்பொழுதிருக்கிற பண்ணையிலே வைத்தால் விளையாதா ? ஊருக்கு ஊர் ஒரு அரும்பொருள் காட்சியகம் வைக்கப் போகிறார்களாம். பழங்காலப் பொருள் வைக்கப் போகிறார்களாம். இப்பொழுது என்ன புதுப் பொருளா வைத் திருக்கிறார்கள். பக்கத்தை நிரப்ப வேண்டுமென்பதற்காக, எதையாவது எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

நான் நம்முடைய நாவலர் அவர்களைக் கேட்கிறேன், எவ் வளவு திட்டங்கள் அடிபட்டுப் போயிருக்கின்றன. Mass rapid transit system என்னவாயிற்று ? முன்பே ஜனதா ஆட்சிக் காலத் திலே நீங்கள் பதில் எழுதாததால், அது அப்பொழுது நின்று விட்டது.

The Planning Commission has approved the Rs. 54 crores project for laying a 8.4 km mass rapid system in Madras from Beach to Luz. The work is expected to begin during 1983-84.

என்று இந்துப் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள். இது வந்து விடும். இதற்கு பிளானிங் கமிஷன் ஒப்புதல் கொடுத்திருக்கிறது என்று பிப்ரவரி 12 ஆம் தேதியே இந்துப் பத்திரிகையிலே எழுதி யிருக்கிறான். இந்துப் பத்திரிகையிலே எழுதியதைப் பார்த்த பிறகாவது, இந்த பட்ஜெட்டிலே சேர்க்க வேண்டுமென்ற எண் ணம் உங்களுக்கு வந்ததா ? உங்களுக்கு அந்த மாதிரி எண்ணங் களே கிடையாது. ஒரே ஒரு எண்ணம் உங்களுக்கு ? எதையாவது, எப்படியாவது, நடத்திக் கொண்டு போக வேண்டும், விளம்பரத்தை வாங்கவேண்டும். நான் ஒன்றை



நாவலரிடம் கேட்கிறேன், கடைசியாக. தயவு செய்து புள்ளி விவரத்தோடு சொல்லுங்கள். நாட்டிலே பற்றி எரிகிறது. மந் திரிகளைப் பார்த்தீர்களா ?

Salary of Ministers 2.73 lakhs in 198.-82. In 1982-83 2.93 lakhs. இப்பொழுது எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் 3.88 lakhs சரி; To r expe s s 6.8 lakhs in 1981-82 In 1983-4 estimate 3.00 lakhs அடுத்து 4 lakhs revised estim te. அதெல்லாம் போட்டும் other expensos Rs. 33.4 lakhs in 1981-82 Rs. 30.77 lakhs in 1982-83 1981-82 லே இப்பொழுது Revised எஸ்ட்டிமேட்டு போட்டு Rs 35.88 lakhs ஆகியிருக்கிறது இப்பொழுது எவ்வளவு உயர்த்தியிருக்கிறார் கள். அதர் எக்ஸ்பென்சஸ் 36.02. இவ்வளவு உயர்த்தியிருக்கி றார்கள். இந்த அதர் எக்ஸ்பென்சஸ் என்றால் என்ன ? தயவு செய்து மந்திரி வாரியாக டூர் எவ்வளவு, டி.ஏ., எவ்வளவு, டெலிபோன் பில் எவ்வளவு என்ற இந்தக் கணக்குகளை நிதி அமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திலே வைத்தே ஆக வேண்டும். "அதர் எக்ஸ்பென்சஸ்" என்று போட்டுக்கொள்கிறீர்களே, அது என்ன ? நான் முதலிலே 1971-லே எலக்‌ஷனிலே நின்றபொழுது தேர்தல் செலவுக்காக என்று ஒருவரிடத்தில் 500 ரூபாய் கொடுத் தேன். அவர் 200 ரூபாய் செலவு செய்துவிட்டு, 300 ரூபாயைக் கன்னாம்பின்னாம் செலவு என்று எழுதிவைத்தார். கன்னாம் பின்னாம் செலவு என்றால் என்ன என்று கேட்டேன். அதற்கு கண்டமேனிக்குச் செலவு செய்வது என்றார்கள். அந்தமாதிரி கன்னாம்பின்னாம் என்று செலவு செய்திருக்கிறீர்களே ?

இதிலே நாட்டு நடப்பைப் பற்றித் தெரிந்து சொல்லியிருக்கி றீர்களா ? இது பட்ஜெட் அல்ல, இது ஒரு காகிதப் பூ, அண்ணா அவர்கள் சொன்னது மாதிரி, இது மணக்காது. இது ஆட்டின் கழுத்திலே உள்ள தாடிக்குச் சமம். இது காட்டில் கனிந்த கனிகளுக்குச் சமம். ஆற்றோரத்திலே, மலர்ந்து இருக்கின்ற நாணல்களுக்குச் சமம். இது பட்ஜெட்டே அல்ல என்பதை நான் எடுத்துக் கூறுகிறேன். இதில் உப்பு இல்லை, சப்பு இல்லை என்று தான் சொல்வேன். இது படிப்பதற்கு உரிய பட்ஜெட்டே அல்ல ; இதைப் படிக்கிறதே வேஸ்ட் ஆஃப் டைம்.

டாக்டர் கே பி இராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1983—84 ஆம் ஆண்டினுடைய தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய உரையை இந்த மன்றத்திலே ஆற்ற ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாமன்ற உறுப்பினர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கை யைப்பற்றி பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்லி, இதைப் பற்றி பல்வேறு அறிவுரைகளையும் சொல்லிவிட்டுப் போயிருக் கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்த நிதிநிலை அறிக் கை பாலைவனத்துப் பசுஞ்சோலை ; தங்கத்தாம்பாளத்தில் வைக்கப்பட்டுள்ள மாணிக்கக் கற்கள் என்பதைக் குறிப்பிட விரும் புகிறேன்.

பேசியிருக்கிறார்கள். அதிலே என்ன நிலைமை? நாவலர் அவர்கள் சொல்கிறார்கள். தமிழர்களின் பெருமைவாய்ந்த மரபினையும் அவர்களின் நுண்மாண் நுழைபுலத்தை, கலை ஆர்வத்தை வெளிப்படுத்தும் கலை, பண்பாட்டினையும் உலகறியச் செய்வதே இவ்வரசின் தலையாய கொள்கையாகும். ஆகவே பண்பாட்டையும், ஆர்வத்தையும் உலகத்திற்கு அறிவிக்க போகிறார்களாம். அதற்கு என்ன செய்யப்போகிறார்களாம். கங்கைமுத்துப்பிள்ளை எழுதிய நாட்டிய சாஸ்திரத்தை புத்தகம் போடப் போகிறார்களாம். நான் கேட்கிறேன், தமிழ் வளர்ச்சி நிறுவனம், தமிழ் மொழிபெயர்ப்பு நிறுவனம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ் பல்கலை நிறுவனம் எத்தனையோ டிபார்ட்மெண்ட்களை வைத்திருக்கிறோம். அவர்களை கூப்பிட்டு சொன்னால் போதும். ஆனால் நாட்டிய புத்தகத்தைப் போடுவதற்கு ஒரு பட்ஜெட்டா? நாட்டிலே சிரிக்க மாட்டார்களா? தங்களுடைய பட்ஜெட்டின் மகத்தான சாதனை கங்கைமுத்துப்பிள்ளை எழுதிய நாட்டிய நூலை புத்தகமாக பிரின்ட் பண்ணவேண்டுமென்று சொல்வது; அடுத்து சுவாமி விபுலானந்தா——நாவலர் அவர்களைக் கேட்கிறேன். சுவாமி விபுலானந்தா, விவேகானந்தா, என்று இங்கிலீஷில் சொல்வார்கள். ட்ரான்ஸ்லேஷன்னில் விபுலானந்தர் என்று போடுவார்கள்.

(முற்பகல் 11–20 )

ஈழத்து பிரமுகர் (குறுக்கீடு) விவேகானந்தா என்று ஆங்கிலத்தில் போட்டால் தமிழில் ''விவேகானந்தர்'' என்று போடவேண்டும். ஈழத்துப் பிரமுகர் ''விபுலானந்தா'' என்று ஆங்கிலத்தில் போட்டால், தமிழில் ''விபுலானந்தர்'' என்று தானே ''டிரான்ஸ்லேட்'' செய்ய வேண்டும். ''விபுலானந்தா'' என்று அப்படியே தமிழில் மொழிபெயர்த்து உள்ளார்கள். எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான், பாடியவன் பாட்டை கெடுத்தான் என்ற வகையில் மொழி பெயர்த்துள்ளார்கள். ''விபுலானந்தா'' எழுதிய தமிழ், ஆங்கில நாடகங்கள் பற்றி ஒப்பாய்வு நூலாகிய ''மதங்கசூளாமணி''யை மீண்டும் அச்சிடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். அது ஏற்கெனவே அச்சான புத்தகம். 200 பக்கங்கள் தான் வரும். சைவ சித்தாந்த நூற்பதிடபுக் கழகத்திற்குப் ''ஃபோன்'' பண்ணினால், இலட்சக்கணக்கில் நாளைக்கே அச்சடித்துக் கொடுத்து விடுவார்கள். அதை ஒரு பெரிய காரியமாக செய்திருக்கிறோம் என்று பட்ஜெட்டில் சொல்லியிருக்கிறீர்கள் தமிழ்ப் பண்பாட்டு மையம் என்று முதலிலே இருந்தது. கலைஞர் அவர்கள் ஒருவரை, ஒரு அசிஸ்டன்ட் டைரக்டரை, டிரான்ஸ்லேஷன் டிபார்ட்மென்டிலிருந்து தேர்ந்தெடுத்து இதன் இயக்குநராகப் போட்டார்கள், அவர்மீது கலைஞர் அவர்கள் இந்த மாமன்றத்திலே குற்றச்சாட்டு சொன்னவுடனே, அவரை வீட்டுக்குப் போங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அவர் வீட்டுக்குப் போய்விட்டார். அதோடு விடுங்கள். அடுத்து யாரைக் கொண்டுவந்து போட்டார்கள் தெரியுமா? திரு. மீ. பா. சோம



சுந்தரம் என்பவரை, இராஜாஜிக்கு மிக வேண்டியவரைக் கொண்டு வந்து போட்டார்கள். அவர் ஒரு வருஷம் இருந்தார். அவர் என்ன செய்தார்? தேவாரம், திருவாசகம் பாடல்களை எல்லாம் டேப் செய்தார். அரசாங்கம் செய்கிற வேலையா, இது? ஏ.வி.எம். செய்கிறார் அந்த வேலையை. உங்களுக்கு வேண்டிய மணியம் செய்வார் அந்த வேலையை—தேவாரம், திருவாசகம் பாடல்களை டேப் செய்யும் வேலையை. சர்க்கார் என்ன செய்தார்கள் 5 வருஷத்திலே என்று கேட்டால், நாங்கள் தேவாரம், திருவாசகத்தை டேப் செய்தோம் என்று சொன்னால், நாடு உங்களைப் பார்த்து சிரிக்காதா? ரூபாய் 5 இலட்சத்துக்கு டேப் செய்துவிட்டு அவர் போய்விட்டார். உடனே, தேசியம் வளர்த்த ஒருவர் ஆட்சிக்கு வந்தார் முக்கியமான பதவிக்கு. முன்னால் இருந்தவர் இராஜாஜிக்கு வேண்டியவர், அனுப்புங்கள் என்று சொல்லிவிட்டு, உடனே என்ன செய்தார்கள்? திரு. கு. இராஜவேலுவை நியமித்தார்கள். நாவலரைக் கேட்டாலே சொல்வார். திராவிட பராம்பரியத்தினுடைய முதல் எதிரி, என்று. 1975-லே அவர் வீட்டுக்குப்போய் விட்டார். நாலவருக்கே தெரியும்; நாவலர் சொல்லி நான் கேள்விப்பட்டிருக்கிறேன், அவரைப் பற்றி. 1975-லே வீட்டுக்குப்போனார்; ஏனோ தெரியவில்லை, 7 வருஷம் வீட்டிலே இருந்தவரைக் கொண்டு வந்து இயக்குநராகப் போடுகிறீர்களே, அப்படி என்ன அசகாய சூரர், அஷ்டாவதானி அவர்? அப்பேர்ப்பட்டவரைக் கொண்டுவந்து போட்டிருக்கிறீர்கள். அவர் என்ன செய்தார்.

கலைக் களஞ்சியக் தயாரிக்கும் பணி மூடப்பட்டிருக்கிறதே, பெரியார் நூற்றாண்டு விழாவிலே, ரூபாய் 2 இலட்சம் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது, என்று முதலமைச்சர் பேசினார்களே இதுவரைக்கும் அதற்கு ஏதாவது உண்டா?

அடுத்து தேவநேயப் பாவாணர், உலகத் தமிழ் மாநாட்டுக்கு அவர் போனார். அதோடு அவரும் போனார். பாவாணர் ''அ'' மட்டும் தான் எழுதியிருக்கிறார். ஆனால், இதுவரைக்கும் அது பிரிண்ட் ஆகவில்லை. அதிலே, இடைச்செருகல்கள் எல்லாம் நடப்பதாகக் கேள்வி.

அது போகட்டும், கான்ஸ்டிடுயூஷனைத்தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். என் கையிலுள்ள இந்தப் புத்தகத்தைப் போல் இரண்டு மடங்கு புத்தகம். 10 இலட்சம் காப்பி போட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ரூபாய் 15 இலட்சம் செலவு. மொழியா பெயர்த்திருக்கிறீர்கள், இல்லை. அதனுடைய விழியையே பெயர்த்திருக்கிறீர்கள். நிலைமை என்ன தெரியுமா? மொத்தமும் தப்பு. வரிக்கு, வரி தப்பு. உடனே, திரவியம் அவர்களைத் தலைவராகக் கொண்ட திருத்தும் கமிட்டி போட்டு அவர்கள் அதைத் திருத்திக் கொண்டிருக்கிறார்கள், சார், 15 இலட்சம் காப்பிகள். எவ்வளவு பணம்? தமிழை வளர்க்கிறீர்களா? யார் அப்பன் வீட்டுப் பணம்? ஒன்றே ஒன்று, அதையும் செய்யவில்லை. சரி, அதுவும் போகட்டும்.

காரணம் என்னவென்றால், ரூபாய் 15 கோடி செலவிலே குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம். அதிலேகூட கிண்டல் அடித்தார்கள். எப்படித் தரப்போகிறார்கள்? 15 கோடி ரூபாயை அறிவித்துவிட்டால் எத்தனை ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுத்து விட முடியும்? அதனால் தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை குடும்பங்களுக்கு வேலை அளித்து விட முடியுமா என்ற கேள்விக் கணையை எழுப்பினார்கள். இதே போலத்தான் கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்னால் தமிழக அரசு, இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தை அறிவித்த நேரத்தில் பிரச்சினையை எழுப்பினார்கள். இது நடக்குமா? நடந்துவிடுமா என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால், இன்றைக்கு அது வெற்றிகரமாக நடத்தப்பட்டு, கிராமப்புறங்களிலே நல்லதொரு மறுமலர்ச்சியை உருவாக்கியிருக்கிறோம். அதற்குப் பின்னாலே கடந்த முறை அறிவிக்கப்பட்ட சத்துணவுத் திட்டத்தை எள்ளி நகையாடினார்கள். இதற்கு பணம் எங்கே இருக்கிறது என்று கேட்டார்கள். இப்பொழுது அவர்கள் திருவாயாலேயே, பல்வேறு துறைகளிலேயிருந்தும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்ற அடிப்படையிலே எல்லாத் துறைகளிலேயும் இருக்கின்ற உபரி நிதியை இதற்குத் தருகிறார்கள் என்று அவரே ஒரு ஆண்டுக் கழித்துச் சொல்கிறார்கள். அதற்காக இந்த மாமன்றம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. அவரிடம், ஒரேயொரு கேள்வியை எழுப்ப விரும்புகிறேன்.

ஒரு துறையிலே உபரியாக இருக்கின்ற அந்தப் பணத்தை வைத்து இந்தத் திட்டம் நல்ல திட்டம் என்ற வகையிலேயும், சமுதாய அடிப்படையிலே ஏழைகளுக்கு நன்மை பயக்கும் என்ற வகையிலே இந்தத் திட்டத்தை நடத்த வேண்டுமென்று சொல்கிறார்களா அல்லது வேறு துறைகளிலேயிருந்து இந்தப் பணத்தைப் பெற்று நடத்தக் கூடாது, இந்தத் திட்டம் நடைபெறக் கூடாது என்று எண்ணுகிறார்களா, அந்த எண்ணத்தில் அவர்கள் பேசினார்களா என்பதை மட்டும் அவருக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1971 ஆம் ஆண்டிலேயிருந்து இந்த மாமன்றத்திலே பணியாற்றியிருக்கிறேன், இதுவரையில் எத்தனை நிதிநிலை அறிக்கைகளைப் பார்த்திருக்கிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். 1977-க்குப் பின்னால் புரட்சித் தலைவரவர்கள் ஆட்சியில் வைக்கப்பெற்ற நிதிநிலை அறிக்கைகளையும் அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அவைகளையெல்லாம் நன்றாக இருந்தது, ஆனால் இது ஒன்றுதான், திருஷ்டிப்பரிகாரம் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், அவர் ஒவ்வொரு முறையும், இந்த மாமன்றத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, நிதிநிலை அறிக்கையை வைத்த பிறகு சொல்லும் வாதம்தான் இது. ஆகவே, அதைப் பெரிதுபடுத்தும் விதத்தில் இந்த மாமன்றம் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்



பற்றாக்குறை, பட்ஜெட் ஃபைனான்ஷியல் ரிசோர்சஸ் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 156 கோடி ரூபாய் பற்றாக்குறைக்கு ஃபைனான்ஷியல் ரிசோர்ஸ் இல்லை என்று சொல்கின்றார்களே, 1,550 கோடி ரூபாய்க்குப் பற்றாக்குறையாக அறிவித்து இருக்கின்ற மத்திய பட்ஜெட்டைப் பற்றி அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்ற கேள்வியை அவர்கள் முன்னால் வைக்கிறேன்.

ரூபாய் 273 கோடி செலவிலே புதிதாகத் துவக்கப்படும் மின் உற்பத்தித் திட்டங்கள், பல்வேறு கட்டங்களாகச் சிறுசிறு மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்க, சிலவற்றிற்கு மத்திய அரசு அனுமதி அளித்தும், சிலவற்றிற்கு மத்திய அரசு முட்டுக்கட்டையாக இருந்தும், இந்த ஆண்டு ரூபாய் 273 கோடியை, மொத்த நிதிநிலையிலே 30 சதவீதத்தை மின்சார உற்பத்திக்காக ஒதுக்கி, அதன் அடிப்படையிலே மின்சார உற்பத்தியைக் குறைந்த பட்சம் இனிமேலாவது நல்ல முறையில் செய்ய வேண்டும், கடந்தகால ஆட்சியாளர்களின் ஏழரை ஆண்டுக் காலத்திலேயும் சரி, 19 ஆண்டுக் காலம் ஆண்டவர்களின் காலத்திலேயும் சரி, வருமுன் காக்கத் தவறிய காரணத்தால் இன்றைக்கு நீண்ட நெடுநாட்களுக்குப் பிறகு இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கு நாம் ஆளாக்கப்பட்டிருக்கிறோம்.

[முற்பகல் 11 30]

இனியாவது இப்படிப்பட்ட சூழ்நிலை நமக்கு ஏற்படக்கூடாது என்ற அடிப்படையிலே ரூபாய் 273 கோடியை அதற்கு ஒதுக்கி, புதிய மின்சக்தித் திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகின்ற நேரத்திலே நல்ல திட்டங்களை நல்ல நேரத்திலே உருவாக்கியவர்களை... அதற்கென்று துணையாக விஜயராகவன் அல்லது வீரராகவன் என்ற ஒரு தலைவரை நியமித்து இருக்கிறார்கள். ஆகவே, அவர் செய்கிறார், அரசு செய்யவில்லை என்று சொல்லுகிறார். ஆனால் பாதிக்கப்பட்ட நேரத்திலே பொறுப்புகள் அத்தனையும் அரசின் மீது சுமத்துகிறார்கள். பாதிப்பு இல்லாமல் நல்ல முறையிலே நடக்கின்ற நேரத்தில் அதிகாரிகளுக்கு அளித்து விடுகிறார்கள். இது எப்படி இருந்தாலும், அதிகாரிகளை, நடக்கக்கூடிய ஆட்சியிலே ஒரு அங்கமாகத்தான் நாங்கள் கருதிக்கொண்டு இருக்கிறோம். அரசாங்கத்திலே சில விதிமுறைகளை, நடைமுறைகளை பயனுள்ள வகையிலே ஆக்குவதற்காகத்தான் அவர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். அகவே, அவர்களுக்கு வரக்கூடிய பாராட்டு இந்த அரசுக்குத் தரக்கூடிய பாராட்டு, என்று நாங்கள் கருதிக் கொள்கிறோம்—இதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையிலே தொழிற்துறைக்கு எதுவுமே சொல்லப்படவில்லை என்று சாடி இருப்பது ஒருகால் அந்த நிதிநிலை அறிக்கையை காழ்ப்புணர்ச்சியோடு படித்தாரா அல்லது படிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் படித்தாரா அல்லது இங்கே ஏதாவது சொல்ல வேண்டுமென்று உப்பு இல்லை சப்பு இல்லை என்று வழக்கமாகச் சொல்வது போல,

இன்றைக்கு பட்ஜெட் இல்லை என்று சொல்லவேண்டுமென்பதற்
காக—ஏற்கெனவே குற்றம் காணவேண்டுமென்ற அடிப்படையில்
தான் படித்தாரா? என்று தெரியவில்லை. இவ்வளவு இக்கட்
டான சூழ்நிலையில் நிதிப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு மத்திய
அரசு ஒதுக்குகிற நிதியில் தட்டுப்பாடு, ஏற்றத்தாழ்வு மனப்
பான்மை, மாற்றான் தாய் போக்கு, இத்தனைக்கும் இடையிலே,
இங்கே இரண்டு சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்காக தமிழக
அரசு முடிவு எடுத்திருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே ஒரு சர்க்
கரை ஆலை, தனியார் துறையிலே ஒரு சர்க்கரை ஆலை. எத்
தனை இலட்சம் விவசாயப் பெருங்குடி மக்கள், கரும்புப் பயிரிடு
கின்ற விவசாயப் பெருமக்கள் இதனால் பயன் அடைவார்கள்?
அப்படி அந்த அடிப்படையில் இந்த இரண்டு சர்க்கரை ஆலைகள்
இன்றைக்கு மிகவும் கஷ்டமான சூழ்நிலையில், இது தொழில்
வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையுமா என்ற வினாவை நான்
அவை முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காட்பாடி அருகிலே வெடிமருந்து தொழிற்சாலை 54 ஆயிரம்
தொழிலாளர்களுக்கு, கைத்தறி நெசவாளர் பெருங்குடி மக்க
ளுக்கு 2 ஆயிரம் ரூபாய் கடன் வசதி, 6 நடுத்தர நீர்ப்பாசன
திட்டங்கள், 8 சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள், இப்படி அதனால்
பயன்பெறுகிறார்கள். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள்
பாசனத்திற்கு வகை செய்கிறது. அதனால், அடுத்த ஆண்டி
லிருந்து கூடுதலாக உணவு உற்பத்தி ஏற்படவேண்டுமென்று நம்
பப் படுகிறது. அதை விட 5 கூட்டுறவு நூற்பாலைகளின் அடிப்
படையிலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நூற்பாலைகளுக்
குச் சென்று 5 ஆயிரம், 10 ஆயிரம் தொழிலாளர்கள் பயன்
பெறுகிற அளவுக்கு, நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற கைத்
தறி நெசவாளர்களுக்கு, தொழிற்துறையிலே இருக்கிற மில்களி
லிருந்து அவர்களுக்கு நூலைப்பெற்றுதருவதிலே ஏற்றத்தாழ்வு
கள் ஏற்பட்டு அவர்கள் விலையை அதிகப்படுத்தி, சில நேரத்திலே,
பதுக்கி வைத்து, அவர்களுக்கு நூல் வரும் இடத்திலே சில தட்டுப்
பாடுகளை உருவாக்கி நெசவாளர் பெருங்குடி மக்கள் பெரிதும்
பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அதைத் தடுக்கும்
பொருட்டு, இந்த அரசு புரட்சித் தலைவர் தலைமையிலான
இந்த தமிழக அரசு இதற்கு 5 நூற்பாலைகளை இந்த நிதி நிலை
ஆண்டிலே, இந்த நிதிநிலை ஆண்டு என்றால், அதிலேகூட குற்
றம் கண்டுபிடிப்பார்கள் மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் துரை
முருகன்—இந்த நிதிநிலை ஆண்டு பட்ஜெட் தரப்பட்டிருக்கிற
1983-84 ஆவது ஆண்டு நிதிநிலையை உடைய ஆண்டுதான்
ஏட்டுவாரியாக வேண்டுமென்றால், மார்ச் 31-ஆம் தேதி வரை
இந்த ஆண்டு—கடந்த ஆண்டுதான் என்று பொருள். நான்
இங்கே வாதிப்பது 1983–84 ஆம் ஆண்டு பட்ஜெட்டே தவிர—
அதைத்தான் டாக்டர் நாவலர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்
கள்—மாண்புமிகு நிதியமைச்சர் இந்த நிதிநிலை என்று குறிப்
பிடுவது 1983–84-ஆவது ஆண்டுக்கு உள்ள பட்ஜெட் தான்.
ஆகவே, அதிலே இருப்பதற்கு வார்த்தை ஜாலங்களை உபயோ



கித்து குதர்க்கம் கண்டுபிடிக்க வேண்டாம். வாதிடுங்கள் அதை
வரவேற்கிறோம். அதே போல் 500 கிலோ மீட்டருக்கு மேலே
அதிகமாக இருக்கிற கிராமங்களில், சாலைகளை புதுப்பித்தல்,
அல்லது சீரமைத்தல், அல்லது புதிதாக அமைத்தல், அதற்கென்று
ரூபாய் 10 கோடி. 29 கோடி ரூபாய் செலவிலே பேருந்துகள்
செல்வதற்காகப் புதிதாக சாலைகள், பேருந்துகளை இதுவரை
அன்கவர்ட் ஏரியாக்கள் என்று சொல்லப்படுகிற பேருந்துகளையே
இதுவரை பார்க்காத கிராமங்களுக்கு பேருந்துகள் விடுவதற்காக
பேருந்துச் சாலைகளை அமைப்பதற்காக, இது ஏறத்தாழ 8,103
கிலோ மீட்டர் பேருந்துகள் சாலைகளை அமைப்பதற்காக ரூபாய்
250 கோடி.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இது எந்த அடிப்படையிலே எழுந்திருக்கிறது. என்றால், புரட்சி
தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் 1977-லே தேர்தல் நேரத்திலே
ஒன்றைச் சொன்னார்கள். தேர்தல் அறிக்கையிலே சொன்னார்
கள். இனி கிராமங்கள் என்பது இருக்காது. அவைகள் எல்லாம்
சிறு நகரங்களாக ஆக்கப்படும் என்று சொன்னார்கள் கிராமங்களை
சிறு நகரங்களாக ஆக்கவேண்டுமென்பது மாட மாளிகைகளை
கட்டி, கூட கோபுரங்கள் கட்டுவது என்பது மட்டுமல்ல. கிராம
மக்களை நகர மக்களோடு தொடர்பு ஏற்படுத்துதல், கிராமப்புற
மக்கள் நகர்ப்புற மக்களோடு, ஆங்காங்கே விளைகின்ற விளை
பொருள்களை நகரத்திற்குக் கொண்டு வந்து நேரடியாக விற்றல்,
அதனால் ஏற்படும் பலனை வைத்து தாங்கள் வாழுதல், அல்லது
நகர்ப்புறத்திலே ஏற்பட்டிருக்கின்ற, உருவாகியிருக்கின்ற நாகரீக
வளர்ச்சியைத் தாங்களும் வளப்படுத்திக்கொள்ளுதல், நகரத்திலே
வாழ்கின்றவர்கள் பெறுகின்ற வசதியைத் தாங்களும் பெற்றுக்
கொள்ளுதல் என்ற வகையிலே சமுதாய மறுமலர்ச்சிக்காகத்தான்
இதைச் சொன்னார்கள். அந்த வகையிலே சமுதாய மறுமலர்ச்
சியை உருவாக்குவதற்காகத்தான் கிராமப்புறத்திலே இருக்கின்ற
அத்தனை சாலைகளையும் சீரமைத்தல், ஒவ்வொரு கிராமத்
திற்கும் குடிதண்ணீர் வசதி, அடிப்படை சுகாதார வசதிகள்
போன்ற அடிப்படை வசதிகளை, தன்னிறைவு திட்டத்தின்
அடிப்படையிலே நிறைவேற்றவேண்டும் என்ற வகையிலேதான்
சொன்னார்கள். கிராமப்புற சாலைகளை நகரத்தோடு
இணைத்து அதன் அடிப்படையிலே போக்குவரத்து வசதியும்
பெருக்கவேண்டுமென்று சொல்லி, இவைகளையெல்லாம் நடை
முறையிலே படிப்படியாக நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்.
இவைகளை எல்லாம் படிப்படியாகத்தானே செய்யவேண்டும்.
அப்படிச் செய்வதுதான் ஒரு ஆட்சியினுடைய கடமை. எடுத்த
எடுப்பிலே இதைச் செய்துவிட்டு அதற்கு பின்னாலே இது
போதாது, அதைச் சீரமைப்பதற்கு பணம் இல்லாத நிலைமைக்கு
இந்த அரசாங்கம் வரக்கூடாது என்ற அடிப்படையிலேதான்
தமிழகத்திலே முதல்வர் அவர்களும், நிதி அமைச்சர் நாவலர்
அவர்களும் இன்றைக்கு திட்டமிட்டு செயலாற்றிக்கொண்டு
வருகிறார்கள் என்பதை குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு வறட்சி ஏற்பட்டு நிதிப் பற்றாக்குறை போன்ற இன்னல்கள் உள்ளன. இவ்வளவுக்கும் இடையிலேயும், பேரூராட்சிகள் தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையிலே எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆகவே இவை களை நிறுத்தக்கூடாது என்ற அடிப்படையிலே கடந்த ஆண்டு 100 கோடி ரூபாய் என்று இருந்ததை, இந்த ஆண்டு 200 கோடி யாக அதிகப்படுத்தி, அதை வைத்து அதிகமான பேரூராட்சி களை தன்னிறைவு திட்டத்தின் மூலமாக எடுத்து வசதிகளைப் பெருக்க வேண்டுமென்று வழிவகைகள் இந்த நிதிநிலை அறிக்கை யிலே இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், அடிப்படையான சுகாதார வசதி செய்து தருவதற்கு, கிராமப்புறத்திலே வாழ்கின்ற தாய்மார்கள் அவர்கள் உழைத்த உழைப்பிலே பெருகின்ற அந்த விளை பொருள்களின் வாயிலாக இந்த தமிழ்ச்சமுதாயம், இந்த இந்தியத் துணைக்கண்டம் மற்றும் வெள்ளை சட்டைக்காரர்கள் வாழ்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடிச் சொல்வார் கள். காலை முதல் மாலை வரை கழனி சென்று, கலப்பையைத் தோளில் சுமந்து நெற்றி வேர்வை நிலத்தில் சிந்தி உடைக்கின்ற அந்தப் பாட்டாளி வர்க்கம் என்று சொல்வார்கள். அப்படி எல்லாம் உழைத்துப் பாடுபட்டு அவன் கொடுக்கின்ற வரி, அவன் வாங்குகின்ற பொருள்களுக்குப் போடப்படுகின்ற வரி, இவைகள் மூலமாகத்தான் அவனுக்கு சில வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். ஆதிக்கத்திலே இருப்பவர்கள், அதிகாரிகளாக இருப் பவர்கள், என். ஜி. ஓக்களாக இருப்பவர்கள், இப்படி பல்வேறு வகையிலே இருப்பவர்கள் எல்லாம் பாடுபட்டாலும் கூட, 1947-லே இந்தியா சுதந்திரம் அடைந்து 36 ஆண்டுகளுக்குப் பின்னாலும், இந்திய துணைக்கண்டத்திலே இருக்கின்ற கிராமப் புறத்திலே இருக்கின்ற மக்களைப் பற்றிப் பேசுவார்கள், வாக்கு களைக் கேட்பார்கள். அந்தந்த நேரத்திலே, தேர்தல் நேரத்திலே வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வருவார்கள். இப்படித்தான் இருந்து கொண்டு வந்திருக்கிறதே தவிர, கிராமப்புறத்திலே வாழ் கின்ற மக்களுடைய அன்றாடப் பிரச்னைகளை, காந்தி கண்ட கிராம ராஜ்யம் அமைய வேண்டுமென்ற எண்ணம் இதுவரை இந்தியத் துணைக்கண்டத்தில் ஆண்டவர்கள் அல்லது வேறு மாநிலங்களிலே ஆண்டுகொண்டு இருப்பவர்களுக்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1977-லே புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கிராமப்புறத்தை வளப் படுத்துவதுதான் என்னுடைய கடமை என்று சொன்னார்கள். அதை இன்றைக்குச் செய்துகொண்டு வருகிறார்கள். அதைப் படிப்படியாக செய்துகொண்டு வருகிறார்கள், ஒவ்வொரு நிதி அறிக்கையிலேயும், பல கோடி ரூபாய்களை கிராமப்புறத்திற்காக செலவழிக்கவேண்டியது அதனுடைய அன்றாடத் தேவைகளைக் கவனிப்பதுதான் என்னுடைய முக்கிய கடமை என்று சொன் னார்கள். அங்கே வாழுகின்றவர்கள் கொடுக்கின்ற வரியை [illegible] இந்த சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்கி, சாதாரண



அடிப்படைத் தேவைகளைச் செய்யவேண்டிய முறையிலே, சுதந்திரம் அடைந்த 36 ஆண்டு காலத்திற்குப் பின்னாலே (குறுக்கீடு) செய்து கொண்டு வருகிறார். தமிழர்களுடைய பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பரப்புவதற்கு, 2, 3, நாட்டியப் புத்தகங்களை, வெளிநாடுகளிலே விற்பதனாலே வெளிநாடுகளிலே இருக்கின்ற தமிழ்ச் சங்கத்திலே கொடுப் பதாலே ஏதோ தமிழர்களுடைய கலாச்சாரம் பாதிக்கப்பட்டு விடும் என்பது போலவும், அல்லது தமிழர்களுடைய வளர்ச் சிக்காகவும், தமிழ் வளர்ச்சிக்காகவும் இந்த அரசாங்கம் சும்மா இருந்தாலே போதும், தமிழ் வளர்ந்துவிடும், தமிழ்ச்சமுதாயம் வளர்ந்துவிடும் என்பதுபோலப் பேசினார்கள். நான் இந்த நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழர்கள் காவலன் என்றும், தமிழர்களுக்கு நானே முடிசூடா மன்னன் என்றும், தமிழ் மொழிக்கு நானே காவலன் என்றும் சொன்ன வர்கள் எல்லாம், தங்களுடைய 7½ ஆண்டுக் காலத்தில் ஏற்படுத்த முடியாத, உருவாக்க முடியாத, தமிழ்ப் பல்கலைக் கழகத்தை கண்டவர் எங்களுடைய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள். நீதி மன்றங்களிலே தமிழ் மொழி சட்ட மொழியாக ஆக வேண்டுமென்ற எண்ணம் இல்லாதவர்கள் எல்லாம் அன்றைக்கு இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு நீதி மன்றங் களிலே தமிழ் ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதற்கு சட்டம் இயற்றியவர் எங்களது முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்.

அதேபோல்தான், பாரதி கண்ட தமிழ்ச் சமுதாயத்தை பாரதி கண்ட புதுமைப் பெண்களுக்கும், மகளிருக்கும் என்ற தனியாக ஒரு பல்கலை கழகத்தை உருவாக்கியவர் தமிழக மக்களின் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள். இப்படி படிப் படியாக தமிழர்களுடைய பண்பாட்டையும், தமிழர்களுடைய. கலாச்சாரத்தையும் வளர்ப்பதற்காக, தமிழுக்கு அதிக முக்கியத் துவம் கொடுப்பதற்காக பல்வேறு பணிகளைச் செய்து வருகிறார் கள். இந்த நிதி அறிக்கையிலே தமிழ் பண்பாட்டையும், தமிழ் கலாச்சாரத்தையும் வெளிநாடுகளிலே பரப்புவதற்கான ஏற்பாடு களைச் செய்து கொண்டு வருகிறார்கள்.

(முற்பகல் 11.40)

இவ்வளவும் சொன்னதற்குப் பின்னாலே இந்த நிதிநிலை அறிக்கை எப்படிப்பட்ட சூழ்நிலையில் கொண்டுவரப்பட்டு இருக்கிறது என்பதையும் உங்களுக்கு நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். பருவ மழை பொய்த்ததன் காரணமாக ஏற்பட்டு இருக்கும் வறட்சி, மத்திய அரசு தானே முன்நின்று தீர்த்து வைப்பதற்குக் காலதாமதப்படுத்தியதால் ஏற்பட்டு இருக்கும் காவிரி நதி நீர் பங்கீட்டு பிரச்னை ஆகியவற்றின் காரணமாகவும் தற்போதுள்ள வறட்சியின் காரணமாகவும் காவிரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்னையால் தண்ணீர் வராத காரணத்தாலும், மழை பொய்த்துவிட்ட காரணத்தாலும், நீர்நிலைகள் வற்றிப்

அதுமட்டுமல்ல, நமக்கு 80,000 டன் அரிசியும், 40,000 டன் கோதுமையும் வேண்டுமென்று கேட்டோம். அவர்கள் அனுப்பி யிருப்பதோ 5,000 டன் அரிசியும், 5,000 டன் கோதுமையும் ான். அதற்குத் தக்க நடவடிக்கைகளை நம்முடைய தமிழக அரசு எடுத்து வருகிறது. அந்த நடவடிக்கைகளுக்கு முத்தாய்ப்பு வைத்தது போல் அமைந்ததுதான் திருச்செந்தூர் தேர்தல் வெற்றி.

அதைப்போன்றுதான் மத்திய அரசு......(மணி அடிக்கப் பெற்றது).

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்தில் அளிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் ரெவின்யூ கணக்கில் 1774.88 கோடி ரூபாயும், அந்த வகையிலே செலவு 1653.81 கோடி ரூபாயும், பற்றாக்குறை 184.55 கோடி ரூபாயும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே இப்போது வரி விதிக்கின்ற வகையில் மொத்தம் 26 கோடி ரூபாய் என்றும், வரிச் சலுகை ஒரு கோடி ரூபாய் அளித்த பின்னால் மொத்தம் துண்டு விழுகிற தொகை கிட்டத்தட்ட 159 கோடி ரூபாய் இருக்கும் என்றும் விளக்கி இருக்கிறார்கள்.

எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இந்த 159 கோடி ரூபாய்க்கு என்ன வழிவகைச் செய்யப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து நானும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 159 கோடி ரூபாய் என்பது ஒரு மாநிலத்தின் வரவு—செலவுத் திட்டத்தில் சாதாரணமான தொகை அல்ல. மாநிலத்தினுடைய பொருளாதாரத் திட்டத்தை இது பெருமளவில் பாதிக்கும். ஆகவே, இந்த அரசாங்கம் எந்த வகையிலே இதைச் சரிக்கட்டப்போகிறது என்பதை மாண்புமிகு நாவலர் அவர்கள் தன்னுடைய பதில் உரையிலே உரைப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

மேலும் நாவலர் அவர்கள் எச்சரிக்கை செய்கின்ற வகையில் எங்களால் எதையும் செய்ய முடியாது, நாங்கள் வலிமையற்றவர்கள் என்று சொல்லுகின்ற முறையிலே, முன்கூட்டியே ஒன்றைச் சொல்கிறார்கள். கடந்த ஆண்டிலும் இந்த ஆண்டிலும் பருவமழை தொடர்ந்து பொய்த்துவிட்டதன் காரணமாக இம் மாநிலம் முழுவதும் பாசனம் மட்டுமல்ல ; குடிநீர்ப் பற்றாக் குறை, மின்சாரப் பற்றாக்குறை, போன்றவைகள் ஏற்பட்டி ருக்கின்றன ; சென்னை மாநகரில் தண்ணீர் பற்றாக்குறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்



தொடர்ந்து பருவமழைகள் பொய்த்ததன் காரணமாக வேளாண்மை நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன ; ஆம், பாதிக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தின் உணவு நிலைமை மிகவும் கவலையளிப்பதாக உள்ளது ; ஆம் கவலையளிப்பதாக உள்ளது. ஆக, இந்த மாநிலத்தின் மொத்த பொருளாதார திட்டங்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன ; மிகவும் மோசம் அடைந்திருக்கின்றன ; மிகவும் கவலைக்கிடமாக உள்ளன என்று அழுகின்ற வகையிலேதான் இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

நான் கேட்கிறேன். ஆண் மகனாக இருந்தால், வீரமுள்ள மகனாக இருந்தால், நீங்கள் மாநில அரசினுடைய திட்டங்களை எடுத்துவைத்து, மத்திய சர்க்காரிடமிருந்து பெறவேண்டிய அனைத்தையும் பெற்று, தமிழ்நாட்டை காப்பாற்றியிருக்க வேண்டும். இந்த தமிழ்நாட்டைக் காப்பாற்றும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பொறுப்பிலே பிருந்து நீங்கள் தவறிவிட்டீர்கள் என்று நான் குற்றஞ்சாட்டு கிறேன்.

கடந்த காலத்திலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். முதல் அமைச்சர் எம். ஜி. ஆர். ஆட்சிக்கு வந்த பிறகு மாதாமாதம் மழை பொழிகிறது ; தமிழ்நாடு ஒரு சோலைபோல் இருக் கிறது ; வறட்சி இல்லை என்று சொன்னீர்கள். ஆனால் இன் றைக்குப் பெரிதும் கவலைக்கிடமாக இருக்கிறது என்று சொல் கிறீர்கள். ஆகவே, உங்களுடைய நிலைமையில் எவ்வளவு தடு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த ஆட்சி உள்ளபடியே எவ்வளவு கவலைக்கிடமான நிலைமையில் இருக்கிறது என்பதை உங்கள் அறிக்கை மூலமாக நாங்கள் அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.

(முற்பகல் 11.50)

அதேபோல, நான் தெரிந்து கொள்ள விரும்புவது, இன் றைக்கு 9 மாதங்களிலே, ஆட்சிக்கு வந்திருக்கக்கூடிய ஆந்திராவி னுடைய முதலமைச்சர் மாண்புமிகு என். டி. ஆர். அவர்கள் டெல்லிக்குச் சென்று அங்கே பிளானிங் கமிஷன் அதிகாரிக ளோடும், அரசு அதிகாரிகளோடும் பேச்சு வார்த்தை நடத்தி, அந்த மாநிலத்திற்குத் தேவையான நிதி நிலைகளை பெற்று, அந்த மாநிலத்தின் வருவாயைப் பெருக்குகின்ற வகையில் இன் றைக்குப் பல திட்டங்களைத் தீட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

சாதாரணமாக பேச்சு வார்த்தை நடத்துவது என்பது— முதல் கட்டமாக அதிகாரிகள் மட்டத்தில் நடக்கும், இரண்டா வது கட்டமாக, உச்ச கட்டம் என்ற வகையில், 'பொலிடிகல் கன்சிடரேஷன்' தேவை என்ற அடிப்படையில், மாநிலத்தி னுடைய முதலமைச்சர் பிளானிங் கமிஷனிடம் சென்று பேச்சு

போய்விட்டதனாலும் புனல் மின் நிலையங்கள் இயங்க முடியவில்லை. அனல் மின் நிலையங்களை ஓரளவு இயக்கி நாம் மின் தேவையைப் பூர்த்தி செய்யலாம்'சமாளிக்கலாம் என்று சொன்னால், அதற்கு அடிப்படையாகத் தேவைப்படுகிற உற்பத்திப் பொருளான நிலக்கரி வழங்குவதில் தடை. அதற்குக் கப்பல் வாங்கி கொண்டுவரலாம் என்றால், கப்பல் வாங்க அனுமதி மறுப்பு. இப்படி பல்வேறு பிரச்னைகளுக்கு இடையே இந்த நிதிநிலை அறிக்கை கொண்டு வரப்பட்டு இருக்கிறது.

இதிலே வரிச் சலுகை சிலவற்றிற்கு அளித்து இருக்கிறார்கள். இதைப் பார்த்து கேலியும், கிண்டலும் சொல்லியவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். இன்று இந்தியத் துணைக் கண்டத்திலேயே சாகோ இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படுகின்ற கிழங்கு மாவு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, ஜவ்வரிசி தொழிற்சாலை இருப்பது தமிழகத்தில் மட்டும்தான். அதனை இங்கேயிருந்து மத்தியிலே வாழ்கின்ற, வடபுலத்திலே வாழ்கின்ற மார்வாடிகள் இடைத்தரகர்களாக இருந்து பல லட்சக் கணக்கான, பல கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளை அடித்துக் கொண்டு வந்தார்கள். பல முனை வரி என்ற முறையில் ஏமாற்றிக் கோண்டு வந்தார்கள்.

1971-வரையில் 90 லட்ச ரூபாய்க்கும் மேற்பட்டு அவர்கள் கொள்ளை அடித்து வந்து இருக்கிறார்கள். 1971-க்குப் பிறகு 600-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்ட பின்னாலும், 42 லட்ச ரூபாய் தான் வரி கட்டியிருக்கிறார்கள். உற்பத்தி அதிகரித்து இருக்கிறது. கிழங்கு பயிரிடும் விவசாயிகளும் அதிகரித்து இருக்கிறார்கள். தொழிற்சாலைகளும் அதிகரித்து இருக்கின்றன. ஆனால் வரி வசூலில் முன்னேற்றம் காணவில்லை. அதைப்போக்கவேண்டும் என்ற அடிப்படையில் இரண்டாண்டு காலம் சிந்தித்து ஒரு முனை வரி என்ற முறையில் அதற்கு வரி விதித்து இன்று டாக்டர் நாவலர் அவர்கள் பட்ஜெட்டை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதற்காக நான் இந்த அரசுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட அறிக்கை விட்டு இருந்தார்கள். இங்கே பேசியவர்களும் சொன்னார்கள். ஒரு கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை அளித்துவிட்டு, 26 கோடி ரூபாய்க்கு விரி விதித்து இருக்கிறீர்கள். இதிலே வேடிக்கை என்னவென்று பார்த்தால், கணக்குப் போட்டு பார்த்தால், இங்கே மத்திய அரசு புதிதாகப் போட்டுள்ள வரிகளைச் சமாளிக்கவும், மத்திய அரசாங்கம் ஏற்றியுள்ள வரிகளைச் சமாளிக்கவும், மாநில அரசுகள் செலுத்த வேண்டிய தொகை ஏறத்தாழ 26 கோடிக்குமேல் வருகிறது. ஆகவே, மாநில அரசு இங்கே சிற்றரசர்களைப்போல் இருந்து மக்களிடத்திலே இருந்து வரிகளை வாங்கி மத்திய அரசுக்கு கப்பம் கட்டும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால்



மாநில அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களில் ஏறத்தாழ 8000 பேருந்துகள் ஓடுகின்றன. இந்த 8000 பேருந் துகளும் பயன்படுத்துகின்ற டீசலின் விலையேற்றத்தால் ஏற் பட்டு இருக்கும் இழப்பு கிட்டத்தட்ட 23 கோடிக்கும் அதிகமாக இருக்கிறது.

மாநில அரசு அலுவலகங்களில் இருக்கும் தொலைபேசி கட்டண உயர்வு காரணமாக ஏற்பட்டு இருக்கும் இழப்பையும் நாம் கணக் கில் கொள்ள வேண்டும். டாக்டர் கலைஞர்—எதிர்க் கட்சி தலைவர் அவர்களுடைய அலுவலகத்திற்கு அரசு செலுத்துகின்ற தொலைபேசிக் கட்டணமும் உயர்ந்து இருக்கிறது. இவைகளைச் சமாளிக்கத்தான் மாநில அரசுக்கு வருமானம் தேவைப்படு கிறது. புதிதாக வரிபோடுவதால் இந்த அரசுக்கு எந்தவிதமான லாபமும் இல்லை. இங்கேயுள்ள மக்களிடமிருந்து வசூலித்து மத்திய அரசுக்கு அழவேண்டியிருக்கிறது என்கிற நிலையில் தான் இந்த அரசு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

இங்கே மத்திய—மாநில அரசு உறவுகளைப் பற்றி வெளிப் படையாக எடுத்துத் தெரிவித்து, அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையைத்தான் இந்த அரசு கொண்டிருக்கின்றது என்பதைத் திட்டவட்டமாக அறிவித்து இருக்கிறது. இதற்காகக்கூட பல் வேறு இன்னல்களை இந்த அரசு சந்திக்கவேண்டியிருக்கிறது. நியாயமாக வரவேண்டிய தொழிற்சாலைகள் வரவில்லை. இதை அத்தனைபேரும் பேசிவிட்டார்கள். நேற்றுகூட கூட்டு சேரா நாடுகளின் மாநாட்டை துவக்கி வைத்து பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பேசுகின்ற நேரத்தில், வல்லரசு நாடுகளே அணு ஆயுதத்தைக் காட்டி சிறிய நாடுகளை விரட் டாதே என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு கருத்தை நான் சொல்லிக்கொள்கிறேன். ஆதிக்கத்தையும், மாநிலத்தின் 90 சதவீத வரி வசூல் செய்யும் உரிமையையும் வைத்துக் கொண்டு தமிழகத்தைப் புறக்கணிக்காதீர்கள். அதே போல் மற்றொன்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒவ் வொரு நாடும் தனது வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும் கொள் கைகளை வகுத்துக் கொள்ளவும் உரிமைகள் உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ஒவ்வொரு மாநிலமும் தனது வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும், கொள்கைகளை வகுத்துக் கொள்ளவும் உரிமை உண்டு. அவற்றுக்கு தடையாக இருக்க வேண்டாம்; ஊக்கம் அளிப்பதாக இருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைத்தான் நாங்கள் படிப்படியாக அறிக்கைகளிலே சொல்லிக் கொண்டிருக்கிறோம். 1981-லே 98 உரிமங்கள் கேட்டு கடிதம் எழுதினோம். 1982-ல் 182 உரிமங்கள் கேட்டு கடிதம் எழுதி னோம். ஆக, 280 உரிமங்கள் கேட்டு கடிதம் எழுதியிருக்கிறோம். ஆனால், இதுவரையில் அவர்கள் 176 உரிமங்கள்தான் அளித் துக்கிறார்கள்.

வார்த்தை நடத்தி அதன் மூலமாக தன்னுடைய மாநிலத்திற்கு தேவையான நிதி ஆதாரங்களை பெறக்கூடிய வாய்ப்பை நம் முடைய மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் தவற விட்டு விட்டார்கள் என்ற குற்றச்சாட்டை சுமத்த விரும்பு கிறேன். ஜனவரி மாதத்திலே நம்முடைய முதலமைச்சர் என்ன பணியில் இருந்தார். வெறும் உண்ணாவிரதம் மட்டும் இருந்தால் பிரச்னை தீர்ந்துவிடும் என்று எதிர் பார்க்கிறாரா என்று தெரிய வில்லை. ஆனால் காரியம் நடைபெறவேண்டும் என்ற சிந்தனை யும், அக்கறையும் அவர்களுக்கு உண்மையிலேயே இருக்குமே யானால், டெல்லிக்குச் சென்று அதிகாரிகளிடமும், பிளானிங் கமிஷனிடமும் பேச்சு வார்த்தை நடத்தி, தமிழகத்திற்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெற்று இருக்க வேண்டும். அதில் அவர் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டை நான் சுமத்த விரும்புகிறேன்.

இந்த மாநில அரசாங்கத்திற்கு எல்லாத் துறையிலேயும் குழப்பம்தான். சின்னப் பிரச்சினையிலே இருந்து, பெரிய பிரச்சினை வரையில் குழப்பம்தான். பெயர் மாற்றுவதிலே யிருந்து, இந்த அரசாங்கத்தின் கொள்கை வகுக்கின்ற வரையில் குழப்பம்தான். ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். டி. டி. கிருஷ்ணமாச்சாரி என்ற பெயரில் ஒரு ரோடு, அதற்குப் பெயர் மாற்றம் எப்படி? டி. டி. கிருஷ்ணமா என்று நம் எதிர்கால சந்ததியினர்க்கு யார் இந்த டி. டி. கிருஷ்ணமா என்று சந்தேகம் வரக்கூடிய அளவுக்கு, இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டி ருக்கிறது.

அதேபோல, ஆபீஸ் வெங்கடாஜலம் நாயுடு வீதி என்ற பெயரில் ஒரு வீதி திருவல்லிக்கேணியிலே இருக்கிறது. அதற்கு என்ன காரணம். அந்த வீதியிலே முதன் முதலாக அரசாங்க அலுவலகத்திற்குச் சென்ற வெங்கடாஜலம் என்பவருடைய பெய ராலே அமையப்பட்ட வீதி என்பது. ஆனால் என்ன பெயர் மாற்றம் பண்ணியிருக்கிறீர்கள். வெங்கடாஜல வீதி என்று. ஆனால் அத்தனையும் மாற்றி விட்டு, ஒரே ஒரு பெயரை மட்டும் நீங்கள் ஏன் மாற்றவில்லை, அப்படியே சுருக்கி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்தப் பெயர் பி. மாதவன் நாயர் ரோடு என்பது. அதை எப்படி மாற்றி யிருக்கிறீர்கள்? பி. எம். நாயர் ரோடு என்றுதான் மாற்றியிருக்கிறீர்கள்? அது ஜாதி பெயர் அல்லவா. மற்றப் பெயரெல்லாம் ஜாதி பெயர், நாயுடு ஜாதி பெயர், ஐயர் ஜாதி பெயர். முதலி ஜாதி பெயர், ஆனால் நாயர் மட்டும் ஜாதி பெயர் அல்லவா? அதுவும் ஜாதி பெயர்தான். ஆனால் அங்கே தொடுவதற்கு உங்களுக்கு அச்சம். இந்த அரசாங் கத்திற்கே பயம்—நாயர் என்ற பெயரைத் தொடுவதற்கு. இந்த நிலைமை உங்களுக்கு ஏன்? மாற்ற வேண்டும் என்று கிரைடீரியா வைத்திருக்கவேண்டும் என்று சொன்னால், ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமே தவிர, நாயரை விட்டு விடுவோம். மற்ற எல்லா வற்றையும் எடுத்துவிடுவோம் என்பது போன்ற நிலைமைகள்



அடுத்து, 1976 ஆம் ஆண்டு சென்னை மாநிலத்திற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வந்த நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள். கர்நாடக மாநில முதல்வரும், ஆந்திர மாநில முதல்வரும் சென்னை நகருக்கு கிருஷ்ணா நதிநீரைக் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டு விட்டார்கள், விரைவில் அந்த திட்டம் தீட்டி நடைமுறைப் படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். 77-லே நாங்கள் ஆட்சிக்கு வரவில்லை. திராவிட முன்னேற்றக் கழகமும் வரவில்லை. நீங்கள்தான் ஆட்சிக்கு வந்தீர்கள். 77-லேயிருந்து 83 வரை கிட்டத்தட்ட 5 ஆண்டுகாலம். இதற் காக என்ன முயற்சி எடுத்தீர்கள்? வீராணம் திட்டம்தான் கலைஞர் கொண்டு வந்த திட்டம். ஆகையினால் அது சரி யில்லாத திட்டம். ரைட், ஆட்சேபணையில்லை. நீங்களே ஒரு திட்டம் கொண்டு வந்தீர்கள், கட்டளைக் கால்வாய் திட்டம் என்று, அதிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டிய திட்டம் அது என்ன வாயிற்று? அதன் விளைவாக ஒரு சீஃப் என்ஜினீயருக்கு வேலை வாய்ப்பை போகச் செய் தீர்கள்.

அதற்குப் பிறகு கிருஷ்ணா நதிநீர் திட்டம். அது குறித்து கடைசியாக, ஆந்திராவிலே முதலமைச்சராக இருந்தவர், வாருங்கள், வாருங்கள் கையெழுத்து இடுவோம் என்று சொல்லி யும் கூட நீங்கள் போகத் தயாராக இல்லை. நீங்கள் சென்னை யிலேயே உட்கார்ந்துக்கொண்டு கதை பண்ணிக் கொண்டிருக் கிறீர்களே தவிர, கையெழுத்துப் போட்டிருந்தால் காரியங்கள் ஆகியிருக்கும்..........

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தற்காலிக தலைவர் அவர்களே, உண்மைக்கு மாறானவை களையே தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. அதற்குப் பிறகு வந்த காங்கிரஸ் அமைச்சர்கள் இடத்திலேயும் பேசப்பட்டது. திரு அஞ்சையா அவர்களிடத்திலேயும் பேசப் பட்டது. திரு. வெங்கட்ராம் அவர்களிடத்திலேயும் பேசினோம். அவர்களும் கொடுக்க முன் வந்தார்கள். தண்ணீர் கேட்பது என்றால், இன்றைக்கு முடிவு செய்து, நாளை காலையில் தண்ணீரை எடுத்துக் கொண்டு வந்து, சேர்க்க முடியாது. இரண்டு மாநிலங்களுக்கு இடையே உள்ள தீர்மானங்கள் பொறுப்புகள் நிறைய இருக்கின்றன. காங்கிரஸ் ஆண்டபோதும் சரி, வேறு எந்தக் கட்சி ஆண்ட போதும் சரி, அவர்கள் தண்ணீர் கொடுக்க மறுக்கிறார்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. அது குறித்து பல தடவை இந்த மாநில முதல்வர் அவர்கள் பாராட்டி யிருக்கிறார்கள். ஆந்திராவிலே உள்ள முதலமைச்சர்கள் இதில் முழு ஒத்துழைப்புத் தருகிறார்கள். நாமும் கலந்து பேசிக் கொண்டு வருகிறோம். இரண்டு அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மட்டத்திலே பேச்சு வார்த்தை நடத்திக்

யில்லை. வேலையாவது நடக்கும். எனவே டெண்டர் முறை என்பது முறைகேடானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். என். இராசேந்திரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரண வேலைகளைப் பொறுத்தவரையில் பொதுப்பணித்துறைதான் பொறுப்பேற்றிருக்கின்றது. எனவே அந்தப் பணியினைப் பொறுத்தவரையில் டெண்டர் கொடுக்கவில்லை. ஆங்காங்கே வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையில் ஆயக்கட்டுதாரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறு ஆயக்கட்டுதாரர்களுக்குப் பிரித்து கொடுக்கப்பட்டு, வேலைகள் எல்லாம் செம்மையாக எல்லா இடத்திலும் நடந்து வருகின்றன. அதுபற்றி எந்தவிதமான குறைகளும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. புதுக்கோட்டை செங்கற்பட்டு போன்ற எல்லா இடங்களிலும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அவர்களுடைய இலாக்காவைப் பற்றிச் சொல்கிறார். நான் அவருடைய இலாக்காவை மட்டும் சொல்லவில்லை. நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை என்று ஒன்று இருக்கின்றது. அந்தத் துறையிலே இப்படித்தான் வேலைகள் நடக்கின்றன. அதாவது 50 ஏக்கருக்கு மேல் போகின்ற வேலையைத்தான் பொதுப்பணித்துறை செய்கின்றது. மற்றப்பணிகளை நெடுஞ்சாலைக் கிராமப்பணித்துறைதான் செய்கின்றது. அங்கேதான் முறைகேடு நடக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[நண்பகல் 12.00]

ஆகவே அமைச்சர் அவர்கள் ஏதோ வேலை நடப்பதாகவும், தவறாக தகவல் நான் சொல்வதாகவும் சொல்லவேண்டாம். அவரே நேரடியாக எங்கெங்கே சென்டிரல் டீம் போனது எந்த ரூட்டில் போனது என்று போய் பார்த்தால் அவரே கண்கூடாகப் பார்க்கமுடியும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்டிரல் டீம் என்பது மத்திய அரசினுடைய அக்ரிகல்சுரல் டிபார்ட்மெண்டின் இணைச் செயலாளர் தான் வந்தார். அவருக்கு தமிழ் ட்டின் தலைமைச் செயலாளர் அரசு சார்பில் அளிக்கக்கூடிய விருந்தின் மர்மம் என்ன ? அவசியம் என்ன? தமிழ்நாடு அரசு எல்லா வகையிலும் சிறப்பு பெற்று இருக்கிறது. டெல்லியிலிருந்து யார் வந்தாலும் அவர்களுக்கு விருந்து வைத்து அவர்களுக்கு ஐஸ் வைத்து அவர்கள் திரும்பி போகின்ற வகையில் செய்கிறார்கள். மந்திரி வந்தாலும் ஒரு விருந்து. ஆட்சேபணை இல்லை. சுப்ரீம் கோர்ட் நீதிபதி வந்தாலும் ஒரு விருந்து ஆட்சேபணை இல்லை. நீதிபதிகள் வந்தாலும் விருந்து; ஆட்சேபனை இல்லை. அதேபோல் மத்திய சர்க்கார் அதிகாரிகள் வந்தாலும் விருந்து என்று சொன்னால் தமிழ்நாட்டில் வறட்சி பாதித்து இருக்கின்ற நேரத்தில்......



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வருகிறவர்களுக்கு மரியாதை வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா ? அவர்களை மதிக்கவேண்டாம் என்று கருதுகிறார்களா ? விருந்தினால் அவர்கள் எல்லாம் மயங்கி விடுவார்கள் என்று எண்ணுகிறார்களா ? விருந்துக்கு மயங்கி ஏதாவது செய்துவிடுவார்களா? அவர்களும் மயங்க மாட்டார்கள். நாமும் மதிக்கத் தவறாமல் இருக்கமாட்டோம். ஆக மதிப்போம் என்பது தான் இதற்கு அறிகுறியே தவிர வேறு இல்லை. எல்லா மாநில அரசும் எங்கும் செய்வது தான் இது. ஆக அதில் ஒன்றும் குற்றம் காணவேண்டிய அவசியம் இல்லை, அதைச் செய்யாமல் இருந்தால் தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கலாமே தவிர செய்வது மாநில அரசின் கடமை. அதற்கு அவர்கள் மயங்கிவிடவும் மாட்டார்கள். உண்மையாகத்தான் அவர்கள் நடப்பார்கள் என்ற எண்ணத்தில் தான் நாம் பணி ஆற்றினோம்.

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்கள் மயங்கினார்களா இல்லையா என்பது வேறு. நாம் நினைப்பது அப்படித்தான் என்று நான் நினைக்கிறேன். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ஐ.நா. ஸ்தாபனத்தினுடைய ஐக்கிய நாட்டு தலைமைச் செயலாளர் சென்னைக்கு வருகிறார். மத்திய அரசின் இணைச் செயலாளருக்கு அளிக்கப்படுகின்ற விருந்தைப்போல தமிழ்நாட்டுக்கு அந்த ஐ.நா. ஸ்தாபனத்தின் ஐக்கிய நாட்டு சபையினுடைய தலைமைச் செயலாளர் வருகிறபோது அவருக்கு இந்த மாநில அரசு ஒரு விருந்தை வைத்து இருக்கக்கூடாதா ? அதை நான் கேட்கக் கூடாதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஐக்கிய நாட்டு செகரட்டரி ஜெனரல் அவர்களுக்கு ஆளுநர் அவர்கள் சிறப்பித்து விருந்து ஒன்றை வைத்தார்கள். அவர் போற்றப்பட வேண்டிய அளவுக்கு போற்றப்பட்டு இருக்கிறார். ஒரு மாநிலத்தினுடைய ஹெட் ஆப் தி ஸ்டேட் என்று சொல்லப்படுகின்ற ஆளுநர் அவர்கள் விருந்து வைத்து இருக்கிறார்கள். செகரட்டரி ஜெனரல் வருகின்றபோது அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இப்படி விருந்து வைத்து அவர்களை மரியாதைச் செய்ய வேண்டும் என்று மத்திய அரசும் தாக்கீது தந்து இருக்கிறது. அந்த வகையில் முதலமைச்சர், மற்ற அமைச்சர்கள் வைப்பதை விட ஆளுநர் அவர்கள் விருந்து வைத்து அவர்களுக்கு பெருமை கொடுக்க வேண்டிய அளவுக்கு பெருமையும் படுத்தினார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அதிகாரிக்கு வந்த விருந்தைப்பற்றி எந்த அளவுக்கு பத்திரிக்கையில் விளம்பரப்படுத்தினார்களோ

கொண்டு வருகிறோம். அதிகாரிகள் மட்டத்திலே பேசி முதலமைச்சர்கள் மட்டத்திலே பேசி, கடைசியாக ரு. வெங்கட், ராம் அவர்களிடம் பேச்சு வார்த்தை நடந்திருக்கிறது.

ஆனால் தற்போது என்னவாகுமோ என்று எதிர் பார்த்த நிலையில், அது பற்றி பேசலாம் என்று அவர்களும் சொல்லி யிருக்கிறார்கள். தற்போது அதிகாரிகள் மட்டத்திலே பேசி முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறோமே தவிர, அக்கறையே இல்லை, கவனமே இல்லை, பேசவே இல்லை, பார்க்கவே இல்லை என்பது போன்று பேசுவதெல்லாம். உண் மைக்குப் பொருந்தாது என்பதை மட்டும் குறிப்பிட விரும்பு கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆந்திராவிலே காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சராக இருந்த விஜயபாஸ்கர் ரெட்டி அவர்கள், அதி காரிகள் மட்டத்திலே பேச்சு வார்த்தை முடிந்துவிட்டது. கையெழுத்திட வாருங்கள், தேதி குறிப்பிடுங்கள் என்று சொல்லியும், இன்னும் போகாத காரணம் என்ன ? ஆந்திரா விலே காங்கிரஸ் ஆட்சியிலே இருந்த காலத்திலேயே கையெழுத் திட வேண்டும் என்று சொல்லியாகிவிட்டது. இவ்வளவு தாமதம் செய்வதற்கான காரணம் என்ன என்பதை நிதி யமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாற்றுத் தலைவர் அவர்களே, வேண்டுமானால் அதனுடைய நிலைமை களைப்பற்றி பதில் சொல்கிறேன். ஆனால் அது குற்றச் சாட்டாக ஆகாது என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அதிலே அக்கறையோடுதான் இந்த அரசு இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : மாற்றுத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுகளுக்குப் பின்னாலும் இன்னும் அக்கறையோடு இருக் கின்றது இந்த அரசு என்று சொன்னால் அக்கறை என்ற வார்த்தைக்கு அர்த்தமே இல்லாமல் ஆகிவிடும்.

அடுத்து வறட்சி நிவாரண வேலைகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாநிலம் வறட்சியால் பாதிக்கப்பட்டது. வறட்சி என்பது இன்றைக்கு, நேற்று ஏற்பட்டதல்ல. கிட்டத் தட்ட 6 மாதங்களுக்கு முன்பே தென்மேற்குப் பருவமழையும், வடகிழக்குப் பருவமழையும் பொய்த்துவிட்டதன் காரணத்தால் வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆனால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? நிதிநிலை அறிக்கையில் 45.63 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறீர்களே தவிர, என்ன வேலை நடந்திருக்



கின்றது. மத்திய அரசு ஒரு குழுவினை அமைத்து அது தமிழ் நாட்டிற்கு வந்தது. அவர்கள் வந்து பார்வையிடுகின்றபோது என்ன நடந்தது. நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கின்ற நிலைமையில் ஒரு வேடிக்கை நடைபெற்றது. கீழே வேலை செய்கின்ற இன்ஜினியர் அவருக்கு மேலே இருக்கின்ற டிவிஷனல் இன்ஜினியரை ஏமாற்றி, அவர் அவருக்கு மேலே இருக்கின்ற சூப்பரண்டெண்டிங் இன்ஜினியரை ஏமாற்றி, அவர் போர்டு மெம்பரை ஏமாற்றி, பின்னர் சென்ட்ரல் டீமையே ஏமாற்றுகின்ற நிலைமை ஏற்பட்டது. அதாவது சென்ட்ரல் டீம் எந்தெந்தப் பகுதியில் செல்கிறதோ அங்கங்கே பணிகளை நடத்தவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்படி ஒரு இடத்திற்கு சென்ட்ரல் டீம் செல்கிறது. அங்கே மூன்று நாட்களுக்கு முன்பு தான் வேலை நடக்க ஆரம்பித்திருக்கின்றது. உதாரணமாக கண்மாய், ஏரி போன்றவற்றில் இந்த மாதிரிதான் வேலைகள் நடந்தன. அப்படி குறிப்பிட்ட பகுதியில் அவர்கள் வருகின்ற நேரத்தில் 200 பேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர் களிடம் விசாரணை செய்தபோது 10 ரூபாய் பெண்களுக்கும், 10 ரூபாய் ஆண்களுக்கும் கூலி கொடுக்கப்பட்டு மூன்று நாட்க ளாக வேலை நடக்கின்றது என்று சொல்கிறார்கள். தொடர்ந்து இந்த வேலை நடைபெறுமா என்று சென்ட்ரல் டீம் கேட்டதற்கு நடைபெறும் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும் என்பதுதான் நோக்கம், வேறு எந்தவிதமான லாபமும் இல்லை என்று உண்மைக்கு மாறான தகவல்களைச் சொல்கிறார் கள். சென்ட்ரல் டீம் போனதற்குப் பிறகு என்ன நிலைமை ? அங்கே வேலைப்பார்த்துக்கொண்டிருந்த 200 பேர்களும் வீட்டிற்குப் போய்விடுகிறார்கள். இன்றைக்கு சென்ட்ரல் டீம் செங்கற்பட்டு மாவட்டத்தில் எந்தெந்த இடங்களைப் பார்வையிட்டதோ, புதுக்கோட்டை மாவட்டத்தில் எந்தெந்த இடங்களைப் பார்வையிட்டதோ, வடாற்காடு மாவட்டத்தில் எந்தெந்த இடங்களைப் பார்வையிட்டதோ, அங்கெல்லாம் பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. அவ்வாறு நிறுத்தப்பட்ட தற்குக் காரணம் பணம் இல்லை என்பதுதான்.

அடுத்து இன்னொரு வேலை செய்தார்கள். அதாவது டெண்டர் முறை. வறட்சி நிவாரணம் என்பது போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து காரியங்களை ஆற்றவேண்டு வேண்டும் என்பது. ஆனால் டெண்டர் முறையிலே வேலை செய்தார்கள். அவர்களோ மழை எப்போது வரும் என்று பார்த்திருந்து மழை பெய்ததற்குப் பிறகுதான் வேலையினைத் தொடங்குவார்கள். அதுவரையில் வேலை இல்லாமல் ஏழை மக்கள் என்ன செய்வார்கள் ? அவர்கள் வாங்கிச் சாப்பிடு வதற்கு வழி என்ன ? இந்த அரசு சிந்திக்க வேண்டாமா ? வேண்டுமானால் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கூட்டுறவு சொசைட்டி அமையுங்கள். 10 பேர், 20 பேர் சேர்ந்து அவ்வாறு சொசைட்டி அமைக்கட்டும். அவர்களிடம் வேலை யினை ஒப்படையுங்கள். அவர்கள் சாப்பிட்டாலும் பரவ

அந்த அளவுக்கு இதைச் செய்யவில்லை. இப்போது அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு பின்னால் தான் அவருக்கு ஒரு விருந்து ராஜ்பவனில் ஒரு அறையில் வைத்ததாக தெரிய வருகிறது. பத்திரிக்கைகளில் எதுவும் வரவில்லை.

இங்கே கடந்த காலம் ஆனாலும் சரி, இன்றைக்கும் சரி ஏதோ மத்திய அரசாங்கம் மாநில அரசை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு பார்ப்பதாகவும் சொல்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு தேவையான தொழிற்சாலைகளை அளிப்பது இல்லை என்று சொல்கிறார்கள். 1981 ஆம் ஆண்டு அனுமதி கேட்டு அனுப்பிய கடிதம் 92 என்றும், 1982 ஆம் ஆண்டு 188 என்றும் சொல்லியிருக்கிறார்கள். மொத்தமாக மத்திய அரசு அனுமதி கொடுத்தது 39 கடிதங்கள் என்றும், 82 ஆம் ஆண்டில் 37 என்றும் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களின் நலனில் நீங்கள் எந்த அளவுக்கு அக்கறை காட்டுகிறீர்களோ அந்த அளவுக்கு எதிர் வரிசையில் உள்ள அத்தனை பேரும் அக்கறையோடு இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 5, 6 மாதங்களுக்கு முன்பாக மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதி பாசு அவர்கள் தன்னுடைய மாநிலத்திற்கு தேவையான காரியங்கள் என்ன என்ன என்று மத்திய அரசுக்கு எழுதி கேட்டதை ஒரு புத்தகமாக வெளியிட்டு இருக்கிறார்கள். அது தமிழ்நாட்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூட வந்தது அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அதற்கு உண்டான பதிலை மத்திய அரசு அனுப்பியிருக்கிறது: அது வேறு. நான் இப்போது கேட்க விரும்புவது மாநில அரசு என்ன என்ன தொழில் வேண்டும் என்று மத்திய அரசை கோரியது. அதற்கு மத்திய அரசு என்ன பதிலை அனுப்பியது? அந்த தொழிலுக்கு மத்திய அரசு அனுமதிக்காததற்கு காரணம் என்ன என்பதை புள்ளி விவரங்களோடு இந்த அவையில் இந்த அரசு வைக்க தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். வெறும் மாற்றாந்தாய், மாற்றாந்தாய் என்று சொல்லிக் கொண்டு அரசியல் மேடைகளைப் போல் தயவுசெய்து பேசாதீர்கள். இது உங்களுக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் தேவையான பிரச்சினை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்கார், மாற்றாந்தாய், மாற்றாந்தாய் என்று சொல்கிறார்கள். நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். நான் குற்றச்சாட்டுக் கூறுவதாக நினைக்க வேண்டாம். என்னுடைய தொகுதியிலே தனிப்பட்ட ஒருவர் அரசாங்கத்திற்கு டொனேஷனாக 10 ஏக்கர் நிலமும் சுமார் 20 இலட்சம் ரூபாயும் தருவதாகச் சொல்லி ஒரு பாலிடெக்னிக்கை வைக்கவேண்டுமென்று கோரிக்கை வைத்தார். நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் மூலமாகவும் மாண்புமிகு முதலமைச்சரிடம் நேரிடையாகவும் பேசினார்கள். கடைசியாக என்ன நடந்தது தெரியுமா? முழுத் தொகையையும் அரசாங்கமே செலவு செய்து அந்த பாலிடெக்னிக் எங்கே போனது தெரியுமா? அறந்தாங்கிக்குப் போனது. அதைப்போல



புதுக்கோட்டைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு நூற்பாலை எங்கே போனது தெரியுமா? அறந்தாங்கிக்குப் போனது. அதைப்போல புதுக்கோட்டைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு சர்க்கரை ஆலை எங்கே போனது தெரியுமா? அறந்தாங்கிக்குப் போனது. இந்த அறந்தாங்கித் தொகுதி யாருடைய தொகுதி தெரியுமா? நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சருடைய தொகுதிதான். இதை என்ன சொல்வது? இது மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லையா? ஒரு ஜில்லாவுக்குள்ளேயே இப்படி. இதையெல்லாம் பெரிய பிரச்சினையாக்கி விவாதம் நடத்த வேண்டுமென்று விரும்புவது சரியல்ல. நான் குற்றச்சாட்டாக சொல்லவில்லை. அவர் நல்ல இளைஞர். தன்னுடைய தொகுதியிலே மீண்டும் அவர் வரவேண்டுமென்று ஆசைப்படுகிறார். ஆகவே நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் அதன் மூலமாக மீண்டும் ஆட்சிக்கு அல்லது மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவார். என்று தயவுசெய்து எதிர்பார்க்கவேண்டாம். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொழில் அமைச்சராக இருந்தவர், திரு. மாதவன். அவர்களுடைய தொகுதியில் என்ன என்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ அவ்வளவையும் செய்தார்கள். இப்போது உங்களுடைய பொருளாளர்தான். கன்னியாகுமரியிலே விளைகின்ற ரப்பருக்கு தொழிற்சாலை திருப்பத்தூரிலே ஆரம்பித்தார்கள். கடைசியிலே 1977 ஆம் ஆண்டு திருப்பத்தூரிலே தேர்தல் வந்தபோது சுயேச்சையாக தனியாகப் போட்டியிட்டார். 3-வது இடத்தைப் பெற்றார். ஆகவே தொகுதியிலே செய்வதன்மூலமாக ஒரு அமைச்சர் மீண்டும் வந்துவிடுவார் என்று எதிர்பார்ப்பதைவிட தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்விற்காக அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்பதைத் தெரிவித்து தமிழ் நாட்டிற்கு ஒட்டுமொத்தமாகச் செய்யவேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதுக்கோட்டையிலே தொழிற்சாலை வரவில்லை என்று தெரிவித்தார்கள். சிப்காட் காம்ப்ளக்ஸ் என்ற பெயரால் கிட்டத்தட்ட 500 ஏக்கர் நிலம் 1980 ஆம் ஆண்டு எடுத்தார்கள். ஆனால் இன்று வரை நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. மத்திய அரசாங்கத்தினுடைய 10 கோடி 20 கோடி ரூபாய் செலவிலே ஒரு எலக்ட்ரானிக்ஸ் காம்ப்ளக்ஸ் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டு நில ஆர்ஜிதம் செய்யப்படாததன் காரணமாக அந்தத் தொழிற்சாலையை வேறு மாநிலத்திற்குக் கொண்டு போவதா என்ற சிந்தனையிலே மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகள் இருக்கிறார்கள். அதைப்போன்று அசோக் லேலண்ட் நிறுவனம் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று விரும்பினார்கள். இடம் ஒதுக்காத காரணத்தினால் இடம் கிடைக்காத காரணத்தினால் வேறு மாநிலத்திற்குப் போய் விடலாமா என்று நினைக்கிறார்கள். நீங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற நேரத்திலே எப்படி தொழிற்சாலை வளரும்? இது உங்களுடைய

திறமையின்மையை வெளிப்படுத்துகிறது. இன்னும் மாற்றாந்தாய்
என்று பேச்சுப் பேசாமல் கம்டு ரியாலிட்டி,—யதார்த்த
நிலைக்கு வாருங்கள், உங்களோடு சேர்ந்து நாங்களும் மத்திய
அரசோடு பேசுவோம், வாதாடுவோம் என்பதை மட்டும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சத்துணவு. நம்முடைய வரவு செலவுத் திட்டத்தி
னுடைய மொத்த செலவினம் இது என்றால் மிகையாகாது.
அடுத்த ஆண்டு இந்தத் திட்டத்திற்காக 134 கோடி ரூபாய்
செலவு செய்யப்போவதாக நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தி
ருக்கிறார்கள். இது திட்டத்திலே அதன் மூலமாக வருகிற
செலவு. ஆனால் மறைமுகமாக இந்தத் திட்டத்திலே செல
வாகக்கூடிய செலவு எவ்வளவு தெரியுமா? தெரியாது. அது
எப்படி ? ஒரு கலெக்டர் இரண்டு மணி நேரம் சத்துணவுத்
திட்டம் சம்பந்தமாக மீட்டிங் போடுகிறார், பேசுகிறார், நட
வடிக்கை எடுக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அதிலே
2 மேன் ஹவர்ஸ் செலவழிகிறது. ஒரு நாளைக்கு இந்தச்
சத்துணவுத் திட்டத்திற்காக இரண்டு மணி நேரம் மேன்
அவர்ஸ் ஆகிறது. ஒரு பி.டி.ஓ.வுக்கு 2 மணி நேரம், ஒரு
கமிஷனருக்கு இரண்டு மணி நேரம், ஒரு கிராம சேவக்கிற்கு
இரண்டு மணி நேரம், அப்படிப் பார்த்தால் தமிழ்நாட்டிலே
உள்ள அதிகாரிகளின் ஒட்டுமொத்தமான நேரத்தைக் கணக்கிட்
டுப் பார்த்தால் எத்தனை மேன் அவர்ஸ் இதற்காகச் செலவழிக்
கிறரர்கள் என்பது தெரியும். அதைப்போலவே பெட்ரோல்
செலவு, கலெக்டருடைய காருக்கு பெட்ரோல், ஜீப்புகளுக்கு
பெட்ரோல் இவ்வளவையும் சேர்த்துப் பார்த்தால் கிட்டத்தட்ட
200 கோடி ரூபாய் ''லம்ப் சம்'' ஆக சத்துணவுத் திட்டத்திற்காக
செலவிடப்படுகிறது.

(பிற்பகல் 12-10)

நான் சத்துணவுத் திட்டத்தை குறை சொல்லவில்லை. ஆந்திர
மாநிலத்தின் முதலமைச்சர், உங்களுடைய தம்பி, டெல்லியில்
நிருபர்கள் கேட்கிறபோது பதில் சொல்கிறார். நீங்கள் தமிழ்
நாட்டைப் போல சத்துணவுத் திட்டம் போடப் போகிறீர்களா ?
என்று கேட்கிறார்கள். நான் அப்படிப் போட மாட்டேன். நான்
ரொட்டியும், பாலும் கொடுப்பேன் என்று சொல்கிறார். ஏன்
அப்படி போடமாட்டீர்கள் என்று கேட்கிறார்கள். நான் பள்ளிக்
கூடங்களை சமையல் கூடங்களாக மாற்ற விரும்பவில்லை என்று
சொல்கிறார் இது உங்களுக்கு ஒரு நல்ல உதாரணம் இல்லையா?
அதை பின்பற்றக் கூடாதா ? அண்ணன் தம்பியைப் பின்பற்றலாம்;
தம்பி அண்ணனைப் பின்பற்றக் கூடாதா ? ஆகவே நீங்கள்
இதைப் பின்பற்றியாவது ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கி
தமிழக மக்களுக்கு கன்ஸ்ட்ரக்டிவாக காரியங்கள் செய்வதற்கு
திட்டங்களை தீட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்பு
கிறேன். அடுத்து இன்னொன்றை கேட்க விரும்புகிறேன். இவ்



வளவு கோடி ரூபாய் செலவு செய்கிறோமே, அதற்கு வரவு-
செலவு கணக்கு உண்டா ? இந்த அவையிலே நம்முடைய
நிதி அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை வைக்க வேண்டும்.
சத்துணவுத் திட்டத்தை நீங்கள் ஜுலை மாதத்திலிருந்து ஆரம்
பித்தீர்கள். பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி வரையில் எத்தனை
கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறீர்கள் ? எந்தெந்த மாவட்டங்
களுக்கு எத்தனை கோடி ரூபாய் ? எந்தெந்த ஒன்றியத்திற்கு
எத்தனை இலட்சம் ரூபாய் என்று ஒரு புள்ளிவிவரத்தை நிதி
யமைச்சர் அவர்கள் நம்முடைய அவையில் வைக்க வேண்டு
மென்ற கோரிக்கையை நான் வைக்க விரும்புகிறேன். அப்போது
தான் தமிழ் நாட்டில் வாழ்கிற மக்களுக்கு உண்மை நிலை
என்னவென்று புரியும்.

அதைப்போல இன்றைக்கு போக்குவரத்துக் கழகங்கள்
மூலமாக தமிழக அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.
மேலும் நஷ்டம் ஏற்படலாம். ஆகவே இதற்காக கட்டணங்
களை ஏற்றப் போகிறோம் என்று மறைமுகமாகச் சொல்லியிருக்
கிறீர்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள்
உங்களுடைய பாலிசி என்னவென்பதை கேட்டிகாரிக்கலாக
தெளிவுபடுத்த வேண்டும். ஒன்று, தேசியமயமாக்குகிற
கொள்கை எங்களுடைய கொள்கை என்று சொல்லுங்கள் அல்
லது தனியார்களை ஊக்குவிக்கிற கொள்கை எங்களுடைய
கொள்கை என்று சொல்லிவிடுங்கள். இரண்டையும் ஒன்றாக்கி
குழப்பாதீர்கள். இது குறித்து ஒரே ஒரு விளக்கத்தைச் சொல்ல
விரும்புகிறேன். இன்று என்னுடைய பகுதிகளில் அரசாங்கப்
பேருந்துகளில் பயணம் செய்பவர்கள் எண்ணிக்கை, ஒரு பேருந்
தில் 60 பேர்கள் என்றால் 15, 20 பேர்கள் தான் பயணம் செய்
கிறார்கள். மற்றவர்கள் தனியார் பேருந்துகளில் பயணம் செய்
கிறார்கள். ஏனென்றால் கட்டணம் குறைவு. அவர்கள்
100 பேர், 120 பேர் என்று ஏற்றிச் சென்று விடுகிறார்கள்.
பயணிகள் அவர்கள் பேருந்தில் சென்று விடும்போது அரசாங்கப்
பேருந்துகளுக்கு யாருமே இருக்க மாட்டார்கள். அது மட்டு
மல்லாமல் இன்றைக்கு உங்களுடைய நிர்வாகம் மிகவும் மோச
மான நிர்வாகமாகப் போய் விட்டது. உங்களுடைய அரசாங்க
நிர்வாகத்தைப் போலத்தான் போக்குவரத்துக் கழகங்களின் நிர்
வாகமும் வந்து விட்டது என்று சொன்னால் அது மிகையாகாது.
இங்கே கூட பல நண்பர்கள் கோரிக்கை வைத் ார்கள். காம
ராஜர் அவர்கள் பெயரை ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கு
வைக்க வேண்டுமென்று கேட்டார்கள். எனக்குக் கூட ஆசை
தான். 1977 ஆம் ஆண்டிற்குப் பின்னால் போக்குவரத்து அமைச்ச
ராக பொன்னையன் அவர்கள் இருந்தார்கள். அப்போது
திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு பெயர் வைக்கப்
படாமல், ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் என்று
இருந்தது. அந்த நேரத்தில் அமைச்சர் பொன்னையன் அவர்
களிடம் ஒரு கேள்வியைக் கேட்டோம். அதற்கு அடுத்து பெயர்
மாற்றம் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் விரும்பினால்

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பாயிண்ட் ஆப் ஆர்டர். What does the member mean? பெண்பிள்ளைகளா என்று' சொன்னால் என்ன அர்த்தம் ? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைதியாக உட்காருங்கள். இங்கே கலவரம் வந்துவிடக்கூடாது.

**திரு. நா. சுந்தரராஜ் :** துணைத் தலைவர் அவர்களே, அந்த அளவுக்கு இன்றைக்குத் தமிழ்நாட்டிலே எரிமலை போல கொந்தளித்துக் கொண்டிருக்கிறது என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

கடைசியாக மிக முக்கியமான ஒரு பிரச்சனை. இன்றைக்குத் தமிழ்நாட்டிலே அரிசி கிடைக்கவில்லையென்று பல்வேறு சந்தர்பங்களிலே நாம் நம்முடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறோம். நம்முடைய மாநிலத்தினுடைய முதலமைச்சர்கூட, மத்திய அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்த்து அதன்மூலமாக அரிசி பெற வேண்டுமென்ற நோக்கில் அரிசி கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து, உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆனால், அதே நேரத்தில் தமிழகத்தில் விளைந்த அரிசி கேரள மாநிலத்திற்கு விற்கப்பட்டது, என்பதும் உண்மைதான். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் இன்றைக்குத் தமிழ்நாட்டில் அரிசி இல்லையென்பதைத் தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, எல்லா வியாபாரிகளும் தெரிந்துகொண்டு விட்டார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் ஒரு ஊழல் சொல்லப்பட்டது, அரிசி பேர ஊழல் என்று. அதனுடைய முறை அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தது. இன்றைக்கு அந்த மூளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் போய்விட்டது. இன்றைக்கு அந்த மூளை அதன் வேலையைச் செய்ய ஆரம்பித்து விட்டது. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். அசோகா டிரேடர்ஸ் என்ற பெயரால் கடந்த காலத்தில் தமிழகத்தில் இருந்த அரிசி, அதிக விலைக்குக் கேரள மாநிலத்திற்குக் கடத்தல் செய்யப்பட்டதைப் போல, இன்றைக்கு அசோகா டிரேடர்ஸ் என்ற பெயரில் டெல்லி ஜன்பத் ஓட்டலிலே உட்கார்ந்து கொண்டு, கோடிக்கணக்கான ரூபாயைக் கையிலே வைத்துக்கொண்டு, பஞ்சாபிலே, அரியானாவிலேயிருந்து அரிசியைக் கொள்முதல் செய்து, கூடுதல் விலைக்குத் தமிழக அரசாங்கத்திற்கு விற்பனை செய்வதற்காக இன்றைக்குச் சிலபேர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

அதற்கான காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. நான் இந்த அரசாங்கத்தை எச்சரிக்க விரும்புகிறேன். கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நடந்த மாதிரி அதே தவற்றைச் செய்ய வேண்டாம். அன்றைக்குத்



தமிழ் நாட்டிலேயிருந்து வெளியே போனது. அதற்கு ஒரேயொருவர்தான் காரணமாக இருந்தார். அந்த நபர் இன்றைக்கு உங்களுடைய பொறுப்புக்கு வந்தபிறகு, இன்றைக்கு வெளி மாநிலத்திலேயிருந்து தமிழ்நாட்டிற்கு அரிசி கொண்டு வருவதன் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடிப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். இதை நீங்கள் மறுக்க முடியாது ; மறுப்பதில் அர்த்தமும் இல்லை. ஆனால் நீங்கள் இதற்கு நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்; தமிழ் நாட்டில் கிடைக்கும் வரிப்பணம் பாழாகாமல் பாதுகாக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய ஆசை.

கடைசியாகச் சொல்ல விரும்புகிறேன், இந்த பட்ஜெட்டின் மூலம் கிடைத்த பெருமை என்னவென்றால், ஏதோ ஒன்றே முக்கால் மணி நேரம் நம்முடைய நிதியமைச்சரவர்கள் கால் கடுக்க நின்று பேசியிருப்பதுதான் நன்மையே தவிர, இதன் மூலம் தமிழ் நாட்டு மக்களுக்கு வேறு நன்மைகள் கிடைக்காது. உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை ஆகிய இவை அனைத்தையும் பூர்த்தி செய்து ஒரு வெல்பேர் ஸ்டேட் என்ற முறையில் இயங்க வேண்டிய அரசாங்கம் அதற்குப் பதிலாக எது எதற்கோ தங்களுடைய பணத்தையும் நேரத்தையும் வீணடித்துவிட்டு, இன்றைக்கு அழுகின்ற வகையிலே இந்த பட்ஜெட்டின் மூலம் நாங்கள் எதையுமே செய்ய முடியவில்லை, பருவ மழை பொய்த்துவிட்டது, தண்ணீர் கிடைக்கவில்லை, மத்திய அரசு உதவி செய்யவில்லை என்று கூக்குரல் எழுப்பி அழுகின்ற முறையில் இருக்கின்ற அழுமூஞ்சி பட்ஜெட்டாகக் காட்சியளிக்கிறது என்று கூறி விடைபெறுகிறேன், ஜெய் ஹிந்த்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், அமைச்சரவர்கள் ஒரு தகவலைக் கொடுத்தார்கள். அப்படிச் சொல்லும் பொழுது காமராஜர் அவர்களுடைய பெயரால் எந்தச் செயலைச் செய்வதிலேயோ அல்லது நினைவுச் சின்னங்கள் வைப்பதிலேயோ இந்த அரசு முன் நிற்கிறது என்று சொன்னார்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. இதைப்பற்றி உங்களுக்குள் நேராகப் பேசிக் கொள்ளுங்கள். புரொசீஜரிலே ஏதாவது மிஸ்டேக் இருந்தால்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் வரும். ஒன்றைச் சொல்வது, அதற்குக் கவுண்டர் பண்ணுவது, மறுப்பு கொடுப்பதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது. அதைப்பற்றி வேறுவிதத்திலே கொண்டு வாருங்கள். இதிலே வராது.

காமராஜர் அவர்கள் பெயரைத் தான் வைப்போம் என்று பொன்னையன் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் காமராஜர் பெயர் வைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக திருவள்ளுவர் கழகம் என்று பெயர் வைக்கப்பட்டது. அதில் ஆட்சேபணை இல்லை. அதற்குப் பின்னால் ஜீவா போக்குவரத்துக் கழகம், இன்றைக்கு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம், நேசமணி போக்குவரத்துக் கழகம், இன்றைக்கு சோழன் போக்குவரத்துக் கழகம் கூட இரண்டாகப் பிரிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே என்னுடைய கோரிக்கையெல்லாம், என்னுடைய ஆதங்கத்தின் காரணமாகக் கேட்கிறேன். தயவு செய்து காமராஜர் பெயரை நீங்கள் வைக்கவே வேண்டாம். உங்களுடைய கையால் அவருடைய பெயரை வைக்கவே வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) காரணம் நீங்கள் காமராஜரை அவமதித்து விட்டீர்கள். அவரைப் புறக்கணித்து விட்டீர்கள். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பா. பழனியப்பன்):** உறுப்பினர் சுந்தரராஜன் மட்டும் தொடர்ந்து பேசட்டும். மற்றவர்கள் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுந்தரராஜ் அவர்களுடைய கருத்தைச் சொன்னார்கள். காமராஜர் பெயரை வைக்க வேண்டாம் என்று சொல்கிறார்கள். வைப்பது நம்முடைய விருப்பம். வைக்க வேண்டாம் என்று சொல்வது அவரது விருப்பம். ஆனால் காமராஜர் அவர்களை நாம் புறக்கணிக்கவில்லை. மதுரை பல்கலைக் கழகத்திற்கு காமராஜர் அவர்கள் பெயரை வைத்து நாம் பெருமைப் படுத்தினோம். காமராஜர் இல்லத்தை நினைவு இல்லமாக்க நாம் பெரிதும் முயன்றோம். காமராஜர் அவர்களை இழிவு படுத்த வேண்டுமென்றும், அவமானப்படுத்த வேண்டுமென்றும் என்ற எண்ணம் கிஞ்சித்தும் இந்த அரசிற்கு இல்லை. அரசியல் வரலாற்றை எடுத்துச் சொல்வதென்றால் 30 ஆண்டு வரலாற்றைக் கூட எடுத்துச் சொல்லலாம். அதற்கு இப்போது நேரமில்லை. உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைக் கொண்டிருப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை. வைக்க வேண்டாம் என்பது தங்களுடைய கருத்தாக இருக்கலாம். வைப்பது எங்களுடைய கருத்தாக இருக்கலாம்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**திரு. மி. வின்சென்ட் :** காமராஜரை எதிர்த்து கட்சியை ஆரம்பித்தவர்கள் இவர்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இப்படிப் பேசினால் என்ன அர்த்தம் ? (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எல்லோரும் அமைதியாக அமருங்கள், திரு. சுந்தரராஜ் தொடர்ந்து பேசுவார்.



**திரு. நா. சுந்தரராஜ் :** துணைத் தலைவர் அவர்களே இன்னொன்றை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். 3 ஆண்டுகளுக்கு முன்பாக, தமிழகத்திலே மிகப் பரபரப்பாக ஒரு செய்தி வந்தது. போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த ஆர். டி. ஓக்கள், பிரேக் இன்ஸ்பெக்டர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், 60, 70 பேர்கள் கைது செய்யப்பட்டு, சிறையிலே வைக்கப்பட்டு, வேலையிலிருந்து அவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டதாகப் பத்திரிக்கையிலே செய்தி வந்தது. 3 மாதத்திற்குப் பிறகு மீண்டும் ரெஸ்டோர் செய்யப்பட்டு, அவர்கள் இன்றைக்குத் தொடர்ந்து வேலையில் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. நான் கூட, போலீஸ் மானிய விவாதத்தின் போது முதலமைச்சரிடம் கேட்ட போது, அவர்கள் மீது இலாகா பூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது, வழக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அந்த வழக்குகள் என்ன ஆனது ? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? யாராவது தண்டிக்கப்பட்டார்களா ? இது வரையில் எந்தச் செய்தியும் இல்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் அதற்குண்டான பதிலைச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு, உங்களுடைய ஆட்சிக்குப் பின்னால், குறிப்பாக 1980-க்குப் பின்னால், இன்றைக்கிருக்கிற நிலைமை தமிழ்நாட்டில் வகுப்புக் கலவரங்கள் பெருகிவிட்டன, ஜாதிக் கலவரங்கள் பெருகி விட்டன. இதற்கு ஒரு உச்ச கட்டம் என்ன என்று சொன்னால், பிராமண சங்கத்திலேகூட ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். மீசையை வைத்துக்கொள்ளுங்கள், இடுப்பிலே கத்தியை வைத்துக் கொள்ளுங்கள், உங்களைப் பாதுகாத்துக் கொள்ள என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்குத் தமிழ்நாட்டிலே நிலைமை critical ஆக மட்டுமல்ல, explosite sit ation ஆகி விட்டது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெளியிலே இருக்கிற விவகாரங்களையெல்லாம் உள்ளே பேசவேண்டாம், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. நா. சுந்தரராஜ் :** துணைத் தலைவர் அவர்களே, அந்த அளவுக்கு இன்றைக்குச் சூழ்நிலைகள் மாறியிருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன ? இந்த அரசாங்கத்தினுடைய திறமையின்மைதான், நிர்வாகத் திறமையின்மைதான். இந்த அரசாங்கத்தினுடைய போலீஸ் அதிகாரிகள் சரியான நேரத்தில் சரியான நடவடிக்கை எடுக்காததுதான் இதற்குக் காரணம்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** மாண்புமிகு திரு. சுந்தரராஜ் அவர்கள் சொல்கிறார்கள், 'பிராமண சங்கத்தில்கூட' என்று பிராமணர்கள் என்றால் என்ன பெண் பிள்ளைகளா? இல்லா. விட்டால் அவர்கள் என்ன கோழைகளா?

திரு. எல். இளையபெருமாள் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். சங்ககிரி கல்வி மாவட்டத்தில் சேலம் ஜில்லா, மேட்டூர் தாலுக்கா, மாதவநாயக்கன்பட்டியிலே உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக்கு அரசாங்கமே காமராஜ் உயர்நிலைப் பள்ளி என்ற பெயர் வை என்று உத்தரவு கொடுத்திருந்தும், அந்தத் தொகுதி எம். எல். ஏ., அவர்கள் தலையிட்டு, அந்தப் பெயரை வைக்க வேண்டாமென்று சொல்லி நிறுத்தப்பட்டிருப்பதை நான் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உடனடியாக இந்த நல்ல நம்பிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டு, அந்தப் பள்ளிக்கூடத்திற்கு காமராஜ் பள்ளி என்று பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் பேசும்பொழுது, புதுக்கோட்டை மாவட்டத்திலே ஆரம்பிக்கப்படும் தொழில்களெல்லாம் அறந்தாங்கி தொகுதியிலேதான் ஆரம்பிக்கப்படுகின்றன என்று அதற்கு ஒரு உள்நோக்கத்தையும் கற்பித்து, அடுத்த தடவை தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்பதற்காக இதையெல்லாம் அங்கே செய்து கொண்டிருப்பதாகவும், எனவே இங்கேயுள்ள அமைச்சர் அப்படிச் செய்யும்பொழுது மைய அரசினுடைய திவாரி அவர்களும், பாரதப் பிரதமர் அவர்களும், அவர்களுடைய மாநிலத்திலே செய்வதில் தவறில்லை என்பதைப் போலவும் பேசியிருக்கிறார்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : தப்பாகச் சொல்லவில்லை ; கண்டித்துச் சொல்லவும் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : எனக்குத் தெரியும். நீங்கள் மனப்பூர்வமாகப் பாராட்டுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் என்னுடைய தொகுதியின் சம்பந்தி கூட ; அவர்கள் பெண் எடுத்தது அறந்தாங்கி தொகுதிதான். எனவே, அவர்களுக்கு இதிலே உள்நோக்கம் இருக்கலாம் அல்லது அவருக்கும் கூட தேவை இருக்கலாம், அதனால் சொல்லியிருக்கலாம். அது வேறு விவகாரம். ஆனால் அப்படிச் சொல்வது பொருத்தமாக இருக்காது.

புதுக்கோட்டையிலே இருக்கின்ற தொழில்பேட்டை அல்லது சிப்காட் மூலமாக ஆரம்பிக்கப்படுகிற காம்ப்ளெக்ஸ் புதுக்கோட்டை தொகுதியிலேதான் வருகிறது. அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினருக்கான தொகுதி அல்ல ; காங்கிரஸ் எம்.எல்.ஏ., விஜயரெகுநாத தொண்டமான் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற தொகுதிதான் அது.



அதைப்போல, திருச்சியிலிருந்து மதுரைக்குப் போகும் விராலிமலைப் பகுதியிலே, அதைப் போலவே ஆலங்குடி பகுதியிலேயெல்லாம் வந்திருக்கின்றன.

அறந்தாங்கியைப் பொறுத்தவரைக்கும் கூட்டுறவு நூற்பாலை வந்திருக்கிறது. அதற்குக் காரணம், ஏற்கனவே புதுக்கோட்டையிலே பஞ்சாலை இருக்கிறது ; அவர் பகுதியிலே ஒரு பஞ்சாலை இருக்கிறது என்கிற காரணத்தால் இங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலை வந்திருக்கிறது. ஆகவே, நான் அமைச்சராக இருக்கின்ற காரணத்தால் அல்லது சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற காரணத்தால் ஒன்றுமே வரக்கூடாது என்பதும் அல்ல ; ஒன்று வந்திருக்கின்ற காரணத்தினாலேயே எல்லாமே அங்கே போய்விட்டன என்று சொல்வதும் சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இயற்கை அன்னையின் சீற்றத்தால் ஏற்பட்டிருக்கின்ற தொய்வு தமிழகத்தைத் தத்தளிக்கச் செய்கின்றபோது, பெருகி வருகின்ற வறட்சி, அகில இந்திய ரீதியிலே ஏற்படுகிற பொருளாதார வீக்கம், மின் பற்றாக்குறை இவைகளுக்கு மத்தியில் தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு தமிழகத்தினுடைய நிதி அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, அண்ணா தி.மு.க. உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய ஒரு சில கருத்துக்களை ஆதரித்து இணைத்துக் கொள்ளுமாறு பணிவோடு வேண்டுகின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் மாண்புமிகு துரைமுருகன் உரையாற்றும்போது இது ஒரு மோசமான நிதிநிலை அறிக்கை—இது ஒரு கொள்கையில்லாத நிதிநிலை அறிக்கை—இது ஒரு பழைய காலண்டர் என்றெல்லாம் தனக்கே உரிய பாணியில் இந்த மாமன்றத்தில் எடுத்துச்சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்த மாமன்றத்தில், எங்களுடைய உறுப்பினர்களைப் பொறுத்த அளவு, துரைமுருகன் பாராட்டக்கூடிய அளவுக்கு பைத்தியக்கார அறிக்கையை வைக்க வேண்டிய அவசியம் இந்த ஆட்சிக்குக் கிடையாது என்பதை வெளியேயும், உள்ளேயும் இருக்கக்கூடிய நிலையில் இருப்பவர் மாண்புமிகு துரைமுருகன் என்ற அடிப்படையில், மக்கள் தமிழகத்தில் எதை எதிர்பார்க்கிறார்களோ அதைத்தான் இந்த விவர அறிக்கையில்—இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் வைத்திருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் திட்டுவதில் வல்லமை பெற்றவர் என்று சொன்னாலும், கொஞ்சம் மோசமாக நையாண்டி செய்து இந்த நிதிநிலை அறிக்கையை கேவலப்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபடவில்லை என்று சொன்னாலும், கிண்டல் செய்தார் என்று சொன்னாலும், அந்தக் கிண்டல் எல்லாம்

இந்த மாமன்றத்துக்கு வேண்டுமானால் அழகாக இருக்குமே
யொழிய, நாட்டு மக்கள் இதை ஏற்றுக்கொள்ளத் தயாராக
இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரி
வித்துக்கொள்கிறேன். தயாராக இல்லை என்று நான் சொல்
வதற்குக் காரணம் தேர்தல் தீர்ப்புகளை வைத்து
மாத்திரம் நான் சொல்லவில்லை. இந்த நிதிநிலை
அறிக்கையை சினிமா பட்ஜெட் என்று கடந்த 10 ஆண்டுகள்
5 ஆண்டு காலமாக சொல்லி வருகின்றார். அதே வாசகத்தை
இங்கு உபயோகித்து, பக்கத்து மாநிலமான தன் தம்பி ஆளு
கின்ற மாநிலத்தை உதாரணம் காட்டி—ஏதோ தம்பி—அண்ணன்
என்ற உறவை ஏற்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டிருப்பது
பாராட்டுவதற்குரியது என்று சொன்னாலும் இது மோசமான
நிதிநிலை அறிக்கை—முதலாளித்துவம், பிற்போக்கு, லஞ்ச
லாவண்யப் பேர்வழிகளுக்கு, இது கொள்கை இல்லாத நிதி
நிலை அறிக்கை, நாட்டைச் சுரண்ட வேண்டுமென்ற வர்க்
கத்திற்கு இது ஒரு பழைய காலண்டர், பைத்தியக்கார ஜோசி
யங்களைச் சொல்லுகின்றவர்களுக்கு, பழைய கதைகளைப்
பேசுகின்றவர்களுக்கு, நாட்டுக்கு ஒவ்வாத கருத்துக்களைச்
சொல்லுகின்றவர்களுக்கு, பார்க்கிறவர்களுக்கு ஒரு பழைய
காலண்டராகத்தான் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில்
நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். அருமை மாண்பு
மிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் தேசீய நீரோட்டத்
தில் தன்னை இணைத்துக்கொண்டவர் என்று நான் கருதி
னேன். அவர், நாயர் பிரச்சினையிலும், செட்டியார் பிரச்
சினையிலும் சென்று, நடு வீதியில் தத்தளித்துக் கொண்டு
தனக்கு இருக்கின்ற கொள்கைகளையெல்லாம் மற்றவர்கள்
கேவலமாக நினைக்கின்ற அளவுக்கு இந்த மாமன்றத்தில்
எடுத்துக்காட்டுவார்கள் என்று நான் நினைக்கவில்லை என்
பதை மிகவும் பணிவோடும், பண்போடும் நான் தெரிவித்துக்
கொள்கிறேன். அவர்கள் காமராஜ் அவர்களுக்கு பேர் வைக்க
வேண்டாம் என்று சொன்னார். பேர் வேண்டாம் என்று
சொல்வது அவர் உரிமை என்று மாண்புமிகு நிதியமைச்சர் சொன்
னாலும், இந்தியாவில் இருக்கின்ற எந்த மாநிலத்தில் மாண்பு
மிகு காமராஜ் அவர்களுக்கு நினைவுச்சின்னம் எழுப்பி
இருக்கிறார்கள் என்பதை இந்திய தேசீய காங்கிரசைச் சேர்ந்த
தேசீய நீரோட்டத்தில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்ட
வர்கள். சொல்லவேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டு
கோள் காமராஜ் அவர்கள் உயிரோடு இருந்தபோது அவ
ருடைய தத்துவங்களும் கொள்கைகளும் இந்த நாட்
டிற்கு தேவை என்ற அடிப்படையில் அவர் ஒரு தேசியத் தலைவ
ராக மதிக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்ற நேரத்தில், அந்தத்
தலைவருக்கு மதிப்புத் தந்தவர், வழிகாட்டி என்று சொன்னவர்
நம்முடைய இதயத் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள்.
மாண்புமிகு அமரர் காமராஜ் அவர்களைத் தலைவராக
குறிப்பிட்டபோது தமிழகத்தில் இருக்கின்றவர்களே மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களை பல்வேறு கோணங்களில்



சாடியதை நீங்கள் அறிவீர்கள். புரட்சித் தலைவர் அவர்கள்
அமரர் காமராஜுக்கு அளித்த மதிப்பை இந்தியாவில் எந்த
அரசியல்வாதியும் அளிக்கவில்லை என்பதை நான் பணி
வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

எவ்வளவு கண்ணீரும் கம்பலையுமாக இந்த தமிழ்நாட்டின்
தெருக்களில் கடைசிக் காலத்தை அமரர் காமராஜ் அவர்கள்
இன்று இந்திரா காந்தி அவர்கள் தலைமையை ஏற்று இருக்கின்ற
வர்களுடைய மத்தியில் தமிழகத்திலே தத்தளித்துக்கொண்டு
இருந்தார் என்பதை அவருடைய இறுகிய கூட்டுக்குள்ளே ஒளிந்து
கொண்டு இருக்கின்ற அமரர் காமராஜ் என்ற படத்தை, அமரர்
காமராஜ் என்ற நாமத்தை உச்சரிக்கும் போது, அப்படி உச்சரிப்
பதன் மூலமாக கடைசி காலக்கட்டத்திலே அவர் எவ்வளவு
கொடுமையாக அனுபவித்தார் என்பதை பாரதப் பிரதமர் இந்
திரா காந்தி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு புதிய
ரயில் பாதையை துவக்குவதற்கு வந்த நேரத்திலே சொன்னது
இந்த நாட்டுக்கு நன்கு தெரியும் என்பதை நான் பணிவன்போடு
தெரிவித்துக் கொள்கிறேன். காமராஜ் அவர்கள் அமரர் காமராஜ்
ஆவதற்கு முன்பு கடுமையாக எதிர்த்தவர்கள், கேவலமாக விமர்
சனம் செய்தவர்கள் இன்று அமரர் காமராஜ் பெயரை வைக்க
வேண்டுமென்று தமிழ்நாடு அரசு ஆசைப்படும்போது, அமரர்
காமராஜருக்காகவே தன்னுடைய மேல் சபைப் பதவியை
ராஜினாமாசெய்த புரட்சித் தலைவர் அவர்களைச் சாடுவது எந்த
விதத்திலே லாபம் என்பது எனக்குத் தெரியவில்லை என்பதை
நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

30 ஆண்டு கால வரலாற்றைச் சொன்னால் இந்த அவையே
அலங்கோல படும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். கடைசி 3 ஆண்டுகள் வரலாற்றை இந்திய தேசிய
காங்கிரஸ் என்ற பெயரால் அமரர் காமராஜ் அவர்களுக்கு செய்த
துரோகத்தை நாம் இந்த தமிழகத்திற்கு படம் பிடித்துக் காட்ட
முற்படுவோமானால் அது மிகவும் மோசமாகப் போய்விடும்
என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பதில்
சொல்லும்போது சொல்லுங்கள். நீங்கள் உங்கள் கட்சியிலே
பேசும்போது பதில் சொல்லுங்கள். அப்படிப் பேசக்கூடாது
என்று சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்). அதைத் தடுக்க முடி
யாது. நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது
அதற்கு மறுப்புச் சொல்லலாமே தவிர, பேசவே கூடாது என்று
யாரும் சொல்ல முடியாது. உறுப்பினர்களுக்கு அந்த உரிமை
இருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் பேசும்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கிருஷ்ணா நதி நீர் திட்டதிற்காக மாண்புமிகு முன்னாள் ஆந்திர முதலமைச்சர் விஜயபாஸ்கர ரெட்டி அவர்களோடு கலந்து பேசியும் கூட, அவர் கையெழுத்துப்போட்டு போகவில்லை என்ற தவறான குற்றச்சாட்டை இந்த மாமன்றத்திலே சொன்னார்கள். இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் விஜயபாஸ்கர ரெட்டி அவர்கள் தேர்தல் வருகிறது, தேர்தல் முடிந்த பிறகு வாருங்கள், கிருஷ்ணா நதி நீர் திட்டம் பற்றி பேசுவோம், கையெழுத்துப் போடுவோம் என்று சொன்னார்கள். தேர்தல் முடிந்த பிறகு மாண்புமிகு விஜயபாஸ்கர ரெட்டி அவர்கள் முதலமைச்சர் பொறுப்பில் அங்கே இல்லை என்பதை இந்திய மக்கள் நன்கு அறிவார்கள். இவைகளை எல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், வெளியேதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, அந்த அரசை காரணம் இல்லாமல் நியாயம் இல்லாமல் வாதம் இல்லாமல் ஏசுகிறார்கள் என்றால், இங்கே உள்ளேயும் வந்து தங்களுடைய பேச்சுத் திறமையால் தவறான கருத்துக்களை தமிழக மக்களுக்குத் தராமல் தத்துவ ரீதியான முறையில் இந்த நாட்டில் உள்ள பற்றாக்குறையைப் போக்கவும், வறுமையை ஒழிக்கவும் அதன் மூலம் தமிழகத்தை காப்பாற்றவும் அரிய ஆலோசனைகளை எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் இதுவரையில் எந்த உறுப்பினரும் சொல்லவில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும். கடந்த 30 ஆண்டுகாலமாக தமிழகம் எந்த அளவிற்கு புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம். 30 ஆண்டு காலம் இந்த கஜானாவை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்தியவர்கள், கஜானாவில் என்ன வைத்து விட்டுப் போனார்களோ அதை வைத்துக்கொண்டுதான் கடந்த5ஆண்டுகாலமாகநாங்கள்ஆட்சியை நடத்திக்கொண்டு வருகிறோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, சட்டியில் என்ன இருக்கிறதோ அதுதான் அகப்பையில் வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தலைப்பற்றி அல்லது தேர்தல்களில் வெற்றி பெறுவது அல்லது தோல்வி பெறுவது என்ற கருத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு சுந்தரராஜ் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் மாண்புமிகு தொழில் அமைச்சர் தொகுதிக்குத்தான் எல்லா தொழிற்சாலைகளுமே போகின்றன என்று சொன்னார்கள். முன்னாள் அமைச்சர் மாதவன் என்ன ஆனார் என்பதையும் சொன்னார்கள். ஆகவே, செய்த சாதனைகளை வைத்து ஒருவர் ஒரு தொகுதியில் வெற்றி பெற முடியாது. நான் அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். எவ்வளவுதான் ஒரு அரசு காரியங்களை ஆற்றினாலும், எவ்வள



காரியங்களை மக்களுக்குச் செய் வுதான் ஒரு அரசு பயன் உள்ள காரியங்களை மக்களுக்குச் செய் நடத்திச்செல்கின்றவர் யோக்கியமான தாலும், அந்தக் கட்சியை நடத்திச்செல்கின்றவர் யோக்கியமானவராக இருந்த வராக இருக்க வேண்டும். அப்படி யோக்கியமானவராக இருந்த காரணத்தால்தான் 1980-ஆம் ஆண்டு 17-ம் தேதி நாங்கள் தன்னம் தனியாக தெருக்களில் தத்தளித்த நேரத்தில் மீண்டும் புரட்சித் தலைவர் அவர்களையே இந்த நாட்டு மக்கள் முதலமைச்சராக ஆக்கியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-40)

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் சாதனைகளுக்கும் ஏற்படுத்தியிருக்கிற திட்டங்களுக்கும் நியாயமான உணர்வுகள் என்ற அடிப்படையிலே மக்கள் மத்தியில் இந்த நிதிநிலை அறிக்கையை வைக்கும்போது மக்களுக்கு சாத்தியமான கருத்துக்களைச் சொல்வதற்குப் பதிலாக ‘‘ எரிகிற வீட்டில் பிடுங்கியவரை இலாபம் ’’ என்பதைப்போல, இங்கே ஏற்பட்டிருக்கிற வறுமை அல்லது பற்றாக்குறை, ஏற்பட்டிருக்கிற மின்சாரப் பற்றாக்குறை, ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலை, ஏற்பட்டிருக்கிற உணவுப்பற்றாக்குறை இந்தப் பற்றாக்குறைகளை வைத்துக்கொண்டுஇந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட முடியுமா என்று முயற்சி செய்வது ஜனநாயகத்தில் பலவீனமான எதிர்கட்சிகள் செய்கின்ற வேலையே என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த முயற்சியை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை திருச்செந்தூர் இடைத்தேர்தலிலே நாம் பார்த்தோம். அந்தத் தீர்ப்புக்குப் பிறகாவது உபயோககரமான ஆலோசனைகளை இந்த சட்ட மன்றத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குத் தருவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருக்கிறார் நம்முடைய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள். 1977ஜூலைக்குப் பிறகு இந்த மாமன்றத்திலே என்ன கருத்தைச் சொன்னார்களோ அந்தக் கருத்தைத்தான் இன்றைக்கும் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று டெல்லியிலே கூட்டு சேரா நாடுகளின் மாநாடு நடக்கிறது. தமிழ்நாட்டிலே அக்கறையுள்ள இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினர் 1993-ல் இந்தியாவில் நடைபெற இருக்கின்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை தென்னாட்டில், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற தமிழ்நாட்டில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா? ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு 1,500 கோடி செலவிட்டார்கள். இப்போது நடக்கின்ற கூட்டு சேரா நாடுகளின் மாநாட்டுக்கு 500 கோடி செலவிடுகிறார்கள். ஆக, 2,000 கோடி ரூபாயை டில்லிக்கு செலவு செய்தது போதும், வருகின்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை தமிழ் நாட்டில் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் கோவைத்தம்பி அவர்கள் அமரர் பாரதப் பெருந்தலைவர் காமராஜ் அவர்களைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் சற்று சூடாக, உண்மைக்குப்புறம்பான வாதத்தை வைத்திருக்கிறார்கள் இங்கே. அமரர் காமராஜருடைய இறுதிக் காலத்திலே இந்திய தேசிய காங்கிரஸ் அவருக்கு துரோகம் செய்ததாக ஒரு உண்மைக்கு மாறான, யாரும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு குற்றச்சாட்டை இங்கே சொல்லி, அதை நம்புவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். தயவு செய்து இந்த வாதத்தை நீங்கள் அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்க வேண்டும். இல்லை என்று சொன்னால் அதை அவர்கள் நிரூபிக்க வேண்டும். அல்லது அவர்கள் அதை வாபஸ் பெற வேண்டும். (குறுக்கீடு).

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வரலாற்றைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களுக்கு நன்கு தெரியும். 1969–ஆம் ஆண்டு பெங்களூர் கண்ணாடி மாளிகையில் இருந்து கடைசி காலம் வரை, அமரர் காமராஜ் காலகட்டத்தில் நடந்த சங்கதிகளையெல்லாம் அமரர் சொல்லின் செல்வர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் மூலம் நான் நன்கு தெரிந்து இருக்கிறேன். அந்தக் குற்றச்சாட்டுக்களைச் சொன்னால், ஆதாரத்தோடு நிரூபிக்க வேண்டும் என்று சொன்னால், நான் தயாராக இருக்கிறேன். அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு.).

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார். நாம் வேண்டுமானால் சொல்லலாம். நாட்டுக்கு எல்லாம் தெரியும். நாம் சொல்லித் தெரியப்போவது இல்லை. பொதுவாக எல்லாம் தெரியும். நான் பொதுவாகச் சொல்கிறேன். இந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசுவது நாட்டுக்குத் தெரியும். (குறுக்கீடு). நீங்கள் சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்). இங்கே நாம் இருப்பது நாட்டுக்காகத்தான். இங்கே எந்தப் பிரச்னையைப்பற்றி பேசினாலும் நாட்டிற்காகத்தான் (குறுக்கீடுகள்). நாம் மேற்கொள்கிற நடைமுறையில் உறுப்பினர் பொறுப்பேற்றால் அந்தப் பொறுப்பை அவை ஏற்றுக் கொள்வது வழக்கம். இங்கு அதைப் பின்பற்றுவது நல்லது (குறுக்கீடு). அப்படி என்றால் ஒருவரும் பேசமுடியாது (கூச்சல், குழப்பம்.).

**திரு. என். எஸ். வி. சித்தன்: நீங்கள் சொல்லியாக வேண்டும்.** (குறுக்கீடு).



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். இந்தமாதிரி விவகாரத்தில் டாக்குமென்டா இருக்கிறது, ப்ருவ் பண்ணுவதற்கு. நாட்டிலே பத்திரிகையிலே வந்திருக்கிறது. எல்லோருடைய நடைமுறை, எல்லோருடைய நடவடிக்கைகள், எல்லாத் தலைவர்களும் எப்படி இருந்தார்கள் என்பதை வைத்துத்தான் நாம் எல்லாம் ஊகிக்க முடியும். காமராஜ் அவர்களுக்கு இப்படிச் செய்தார்கள் என்பதற்கு ஒரு டாகுமென்ட் கிடையாது. நாட்டுக்குத் தெரிந்த விவகாரங்கள் எல்லோருக்கும் தெரியும். அதை ப்ருவ் பண்ண முடியாது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் தெரியும். (குறுக்கீடுகள்.)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் தெளிவான தீர்ப்பை வேண்டுகிறேன். ஆளும் கட்சி உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டை தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது குற்றச்சாட்டு அல்ல. குற்றச்சாட்டு என்று சொன்னால், அதிலே ஏதாவது 'இன்சினிவேஷன்' இருக்க வேண்டும். ஏதாவது 'டெபமேஷன்' இருக்கவேண்டும். அதனால் உங்களுக்கு ஏதாவது இழப்பு இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் அது குற்றச்சாட்டு என்று சொல்ல முடியும். அவர் கூறியவற்றை மாண்புமிகு உறுப்பினர் சித்தன் சொந்தப் பொருளாக கருதக் கூடாது.

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமரர் காமராஜர் நிலையைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் எவ்வளவு ஆத்திரப்படுகிறார்களோ அதேமாதிரி உணர்வு எங்களுக்கும் வரும். வரவு செலவுத் திட்டம் என்ற பெயரால் நாட்டிலே ஏற்பட்டிருக்கும் வறட்சியைப் போக்குவதற்கு, நாட்டிலே ஏற்பட்டு இருக்கும் வறுமையைப் போக்குவதற்கு ஒரு மிகப்பெரிய கட்சியான இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கருத்துக்களைச் சொல்லாமல், நாயர் என்ற பெயர் தமிழ்நாட்டில் ஒரு வீதிக்கு வைக்கலாமா, அரசு பயப்படுகிறது என்று கருத்துக்கள் சொல்வது, ஜாதி உணர்வுகளைத்தூண்டிவிடுவது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கையில் தமிழகம் பத்திரமாக இல்லை என்று பேசுவது எந்தவிதத்தில் நியாயம் என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று தமிழகத்தைப் பொறுத்தவரையில், தமிழகம் மிகவும் பத்திரமாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கையில் இருக்கிறது என்பதையும் இவ்வளவு பத்திரமாக தமிழகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கையில் இருப்பதற்குக் காரணம், அடிப்படைக் காரணம், தமிழ்நாட்டிலே வாழ்கின்ற எநத ஜாதியையும் சேராத ஒரு முதலமைச்சராக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இருக்கின்ற காரணத்தால்தான் மைனாரிட்டி மக்கள் தமிழ்நாட்டில் நிம்மதியாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாடு தற்சார்பில் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. பற்றாக்குறை இருக்கிறது. வறுமை இருக்கிறது. வளம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, வரவிருக்கின்ற ஒலிம்பிக் போட்டியை தென்னாட்டில் நடத்த, அதற்காக செலவிட இருக்கின்ற 2,000 கோடி ரூபாயை தமிழ்நாட்டில் செலவு செய்ய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் ஏதாவது சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அதற்குப் பதிலாக பாரத பிரதமர் திருமதி இந்திரா காந்தி தலைமையிலுள்ள அதிகாரிகள் இங்கே வந்து விருந்து சாப்பிடுகிறார்கள், விருந்து வைக்கிறார்கள், ஏதோ நடக்கிறது என்று சொன்னார்கள். அமைச்சர்களுக்கு விருந்து, அதிகாரிகளுக்கு விருந்து, இது நியாயமா என்று சொல்வதற்குப் பதிலாக உபயோகமான கருத்துக்களைச் சொல்லியிருந்தால் நமக்குப் பயன்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி, பணிவோடு விடை பெற்றுக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இதை ஒரு சினிமா பட்ஜெட் என்று சொன்னார்கள். அவர்களுக்கு எதையாவது ஒன்றைச் சொல்லி திட்ட வேண்டும். சினிமா பட்ஜெட் என்று சொல்லி, அதைப் பத்திரிக்கையிலே போட்டு, ‘இது சினிமா பட்ஜெட் என்று சொல்லப்பட்டது’, துரைமுருகன் சொன்னார் என்று விளம்பரப் படுத்திக்கொள்கிற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள். அரை மணி நேரம் திரு. துரைமுருகன் அவர்கள் பேசும்போது எங்களுக்கு ஏதோ உணர்ச்சிவசப்பட்டு, பாலிய உணர்வை தூண்டுகின்ற ஒரு சினிமா படத்தைப் பார்ப்பதுபோல நாங்கள் காதால் கேட்டுக்கொண்டிருந்தோம். அப்படிப்பட்ட படங்களைப் பார்த்துவிட்டு, வெளியே செல்லும்போது உள்ளம் எப்படி வெறிச்சோடி இருக்குமோ அந்த நிலைமைதான் அவர்கள் பேசி முடித்தபிறகு இருந்தது. அவர் பேசியதில் ஒன்றையும் காணோமே என்ற நிலை ஏற்பட்டது.

இந்த மாமன்றத்தை மகிழ்விப்பதற்காகவோ அல்லது இந்த மாமன்ற உறுப்பினர்களைச் சிரிக்க வைப்பதற்காகவோ அவர் எடுத்துக்கொண்ட் முயற்சி வெற்றி பெற்றது என்றாலும் இன்று மிகவும் மோசமாக வாடிக் கொண்டிருக்கிற, பற்றாக்குறையில் தத்தளித்துக்கொண்டிருக்கிற, தற்சார்பில் தத்தளித்துக்கொண்டிருக்கிற தமிழக மக்களைப் காப்பாற்ற தேவையான ஆலோசனைகளைச் சொல்லவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகம் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறது; பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருக்கிறது; தற்சார்பில் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் தமிழ்நாட்டில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், ஏனைய



கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இன்றைக்கு தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் கரத்தை வலுப்படுத்துகின்ற வகையில், உங்கள் ஆசாபாசங்களை மறந்து, விருப்பு வெறுப்புகளை மறந்து, உங்களுக்கு ஏற்பட்டு இருக்கிற கோபாதாபங்களை மறந்து தமிழக மக்களை காப்பாற்ற வேண்டுமென்ற உணர்வோடு தமிழக அரசு எடுக்கின்ற முடிவுகளுக்கு ஏற்ப, கொண்டுவந்திருக்கிற வரவு-செலவுத் திட்டத்திற்கு அங்கீகாரம் அளித்து, மத்திய சர்க்காரிடம் கேட்கின்ற உரிமையை கொடுக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டு, விடைபெறுகிறேன்.

*திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில முக்கியமான கருத்துக்களை நான் முன் வைக்க விரும்புகிறேன். அதற்குமுன்னதாக, முதலாவதாக எங்களுடைய கட்சியின் தலைவர் தோழர் சங்கரய்யா அவர்கள், இன்றைக்குக் காலையில் இங்கே ஒன்றைத் தெரிவித்தார்கள். பத்திரிக்கையாளர்களுக்கு ஜனநாயக உரிமைகளை மறுக்கக்கூடிய ஒரு சட்டம், நமது சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டது. அதை நிறைவேற்றுகிற காலத்திலேயே அதனை நாங்கள் எதிர்த்தோம். ஆயினும் அது சட்ட புத்தகத்திலே ஏறியிருக்கிறது. அதனுடைய விளைவு எப்படியும் இருக்கலாம். இதே போன்று கொடுமையான சட்டத்தின் விளைவு பீகாரிலே எப்படி விளைந்தது என்பதைப் பார்த்தோம். அந்த மாநிலத்தின் மக்கள் கொதித்து எழுந்து, மாநிலமே கொந்தளித்து, அந்தச்சட்டம் செத்தது என்ற நிலைமை ஏற்பட்டது.

7. ஒழுங்குப் பிரச்சினை.

வரவு-செலவுத் திட்டம் விவாதிக்கப் பெறும்போது நிதித்துறை செயலாளர் அதிகாரிகள் மாடத்தில் இல்லாதது.

திரு. துரை முருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். நிதிநிலை அறிக்கை என்பது சட்டமன்றத்திலே மிக முக்கியமான ஒரு பகுதியாக இருப்பது. அதனுடைய தலையான டிபேட் நடக்கிறது. அதன் முதல்நாள் துவக்கம் இன்று. அந்த நிதிநிலை அறிக்கையிலேயே, அது தயாரிக்கப்பட்டதற்காக நன்றி தெரிவிக்கப்பட்டவர் நிதித்துறை செயலாளர் அவர்கள். ஆனால் நான் காலையிலிருந்து பார்க்கிறேன் நம்முடைய பைனான்ஸ் செக்ரட்டரி அவர்கள் இதுவரையில் இங்கே வரவேயில்லை. நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன், இந்த அவையை அவமதிக்க வேண்டும் என்று அதிகாரிகள் முடிவு எடுத்திருக்கிறார்களா? அவருடைய பெயரே இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் வரவில்லை வேறு யாரையோ அனுப்பியிருக்கிறார் ஒப்பக்கு

திருமணத்திற்கு வரமுடியவில்லை. எங்களுடைய வீட்டிலேயிருந்து என்னுடைய மகனை விருந்துக்கு அனுப்புகிறேன் என்று சொல்வது மாதிரி டிபார்ட்மெண்டிலே இருக்கும் யாரையோ அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னால், அதைவிட வேறு அவமரியாதை உண்டா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதிலே அவமானம் ஒன்றும் இல்லை. எப்பொழுதும் நடக்கின்ற ஒன்றுதான் இது. நிதித்துறையைச் சேர்ந்த இணைச் செயலாளர், துணைச் செயலாளர் ஆகியவர்கள் வந்திருந்து குறிப்புகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்புகள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றிய விவரங்களோடு, நான் பதில் உரை அளிக்கும்போது, என்னென்ன விவரங்களை இங்கே சொல்லவேண்டுமோ அவைகளை தயார் செய்து அனுப்புவார்கள். யாரர்வது ஒருவர் வந்திருக்க வேண்டுமே தவிர, முதலிலிருந்து கடைசிவரையில் 8 நாட்களுக்கும் செயலாளர் வரவேண்டும் என்று வற்புறுத்துவது சரியல்ல. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஆட்சியில் இருந்தபோதும் இந்த நிலைமை இருந்தது. குறிப்பிட்ட சில நேரங்களில் தேவையானால் வருவார்களே தவிர, எல்லா நாட்களும் அவர் வரவேண்டும் என்று சொல்வது சரியல்ல. அதிலே ஒன்றும் தவறும் இல்லை. நிதித்துறையின் இணைச்செயலாளரும், துணைச் செயலாளரும் இங்கே வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. வரவு-செலவுத் திட்டம் 1983-84 பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. கு. ரமணி :** ஆகவே, அந்தப் பத்திரிக்கையின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும்படியான சட்டத்தை தமிழக அரசு உடனடியாக வாபஸ் வாங்க வேண்டும். அந்த விஷயத்தை நமது நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கைக்குப் பதில் அளிக்கின்ற நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அந்த நித நிலை அறிக்கையினைப் பற்றி பலவிதமான கருத்துக்கள் சொல்லப்பட்டு உள்ளது.

இந்திய நாட்டில் வறட்சி என்பது தமிழகத்தில் மட்டும் அல்ல, நாடு முழுவதற்கும், இந்த வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தின் வறட்சி முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்பது அல்ல. மின் வெட்டு இந்த நாடு முழுவதும் ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் உள்ள மின் வெட்டை அனுமதிக்கிறோம் என்பது அல்ல. இதுபோன்ற பயங்கரமான ஒரு பொருளாதார நெருக்கடி பல ஆண்டுகளாக இந்திய நாட்டைக் கவ்விக் கொண்டு, அதிலே நின்று ஊசலாடிக் கொண்டு, உறுதியான கொள்கையை நிறைவேற்றுவதற்கு முடியாமல் தவித்துக் கொண்டும் இருக்கிறது



இந்த தமிழக அரசு என்பதையும், அதனுடைய பலவீனங்களையும் தான் இந்த பட்ஜெட்டிலே பிரதிபலிக்கிறதே தவிர, இந்தப் பட்ஜெட்டைத் தவிர வேறு எந்த பட்ஜெட்டை தர முடியும் உங்களால் இந்த மாதிரியான கொள்கையைக் கையாண்டால் என்றுதான் நான் கேட்க விருப்புகிறேன் ?

உதாரணமாக சொல்கிறேன். நாட்டினுடைய பொருளாதார நிலை என்ன? அதிலே ஒரு பகுதி தானே தமிழகம். நிதியமைச்சருடைய உரையிலே அந்தப் பகுதியிருக்கிறது. ஒரு பக்கத்திலே அதைச் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக இந்திய நாட்டிலே ஐ.எம்.எப்.யுடைய கடனை வாங்கி அதன் மீது பல கட்டுப்பாட்டுக்களை ஐ.எம்.எப். மூலமாக விதிக்கப்பட்டு, கடன் சுமையை தலையில் ஏற்றிக் கொள்வதும் அல்லாமல், முன்னேற்றமே காண முடியாத அளவில் இந்திய அரசும் மாநில அரசும் திட்டங்களை வகுப்பதை தானே இதுவரையில் செய்துக் கொண்டு வருகிறார்கள்.

அதற்குக் காரணம் பன்னாட்டு ஏகபோக கம்பெனிகள், இந்த நாட்டிலே புகுந்து சுரண்டுவதற்கு பரிபூரணமாக சுதந்திரம் அளிக்கப்பட்டு உள்ளதுதான். இதில் கருத்து வேறுபாடே கிடையாது. ஒரு வருஷத்தில் 400-லிருந்து 500 ஒப்பந்தங்கள் இந்த நாட்டில் இருக்கிற பெரும் முதலாளிகளாலும், ஏகபோக முதலாளிகளாலும், பன்னாட்டு முதலாளிகளாலும் செய்யப்படுகிறது. அது அனுமதிக்கப்படுகிறது. இங்கேயும் தமிழக அரசாங்கம் அந்த ஐ.எம்.எப். உடைய கடன் வேண்டும் என்று ஓயாமல் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இது எதனால்? இந்த நாட்டிலிருந்து ஏகாதிபத்தியம் ஒழிந்து வெளியேறினால் கூட, அந்த ஏகாதிபத்தியத்தின் மூலதனம் 100-க் கணக்கில் 1000-க் கணக்கில் கூட கோடி கோடியாக முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அதனுடைய சுரண்டல் நடக்கிறது.

(பிற்பகல் 12–50)

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இந்திய ஏகபோக முதலாளிகள் கொழுத்த முதலாளிகளாக வளர்ந்துவிட்டார்கள். 100 கோடி ரூபாய்க்கு மேலே சொத்துள்ள எத்தனையோ முதலாளிகள் தமிழ்நாட்டிலே வளர்ந்திருக்கிறார்கள். இதற்குள்ளே நின்றுதானே இந்த மாநில அரசு செயல்படுகின்றது. நிலப்பிரபுத்துவம் பெயரளவில் ஒழிக்கப்பட்டதே தவிர உண்மையில் அது இன்னும் தொடருகிறது. அதனால்தான் நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று பினாமி நிலத்தைக் கண்டுபிடித்து அந்த நிலங்களை எடுத்து பிரித்துக் கொடுக்க முயன்றபோது அதனை மத்தியிலே உள்ள அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று சொன்னதைப் பார்க்கிறோம். கருப்புப் பணத்தை ஒழிக்கவேண்டாமா ? அத்தனைக்கும் அடிப்படைக் காரணம் அதுவல்லவா? எனவே, இந்த வட்டத்திற்குள்ளே நின்று

என்ன ஜால வித்தையினைச் செய்தாலும் நல்ல நிலைமை நிச்சயமாக ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது உண்மை நடைமுறைக்கு ஏற்றதாக அமையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்நியச் செலாவணி 1981-ஆம் ஆண்டு ஜனவரியிலே 7 ஆயிரம் கோடி ஸ்டாக்கிலே இருந்தது. 1982ஆம் ஆண்டு டிசம்பரிலே 3 ஆயிரம் கோடியாக அது கீழே விழுந்துவிட்டது, இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் அது இங்கேயும் பாதிப்பினை ஏற்படுத்தாதா? பாதிப்பை ஏற்படுத்தும் ஐ.எம்.ஏஃப். கடன் 1800 கோடி ரூபாய் இந்தக் காலத்திலே வாங்கியதற்கு பிறகு இந்த நிலை. இதற்குள் நின்று மாநில அரசு நான் கூறியுள்ள காரியங்களை சாதித்து விட்டேன் என்று கூறுவது எப்படி முடியும்? இதைப் பற்றி நீங்களே சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்திய நாட்டினுடைய இப்படிப்பட்ட பொருளாதாரக் கொள்கையை நீங்கள் எதிர்த்தது உண்டா?இதை எதிர்த்து நீங்கள் குரல் எழுப்பியது உண்டா? உங்களுக்கு தேவையான சில காரியங்களை ஒதுக்கித் தரவில்லை என்று உங்களுக்குத் கோபம் வருகின்றது. அது நியாயமானதுதான். ஆனால் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் இந்த ஃபரேம் ஓர்க் நாட்டிலே இருக்கும்போது எப்படி அதை எதிர்க்காமல் உங்களால் இருக்கமுடிகிறது என்பதுதான் எங்களுடைய கேள்வி. ஐ.எம்.எஃப். கடன் ஏராளமாக வாங்கப்பட்டுவிட்டது. எனவே, இனிமேல் நாட்டை அந்நிய நாட்டின் பிடியிலிருந்து காப்பாற்ற முடியாது. இனிமேல் ஏற்படும் நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாது. இந்திய அரசாங்கம் என்னதான் தலைக்குப்புற அடித்து சாகஸம் செய்தாலும், இந்த நாட்டின் நெருக்கடியைத் தீர்க்க முடியாது. இங்குள்ள மக்கள் பயன்படுத்துகின்ற அத்தனை பண்டங்களின் விலையினையும் திட்டமிட்டே ஏற்றி இங்குள்ள மக்கள் வாங்க முடியாத நிலைமையை ஏற்படுத்தி அதன் மூலம் மிச்சமாகின்ற பொருட்களை ஏற்றுமதி செய்து அதன் மூலம் கிடைக்கின்ற வருவாயை வைத்து ஐ.எம்.எஃப். கடனை அடைப்பது தான் வேலையாக நடக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகளுக்குள்ளே நின்றுதான் இந்த மாநில அரசும் செயல்படவேண்டிய நிலைமைஇருக்கின்றது. இதை நீங்கள் உணருகிறீர்களா என்பதுதான் கேள்வி.

இங்குள்ள பல்வேறு தொழில்கள் மூடப்பட்டிருக்கின்றன. பண வீக்கத்தைக் குறைப்பது என்ற பெயரிலே இந்திய நாட்டினுடைய உற்பத்தியே நாசமாகிக்கொண்டிருக்கிறது. அது உங்களைப் பாதிக்காதா? உங்களையும் அந்தச் சூழலிலே சிக்க வைத்துதான் இருக்கின்றது. அதை நீங்கள் உணருகிறீர்களா?

கடந்த இரண்டாண்டுகளில் இந்தியாவிலே வேலை இழப்பு என்ற நிலைமை மிகவும் பெருகி இருக்கின்றது. கோடிக்கணக்கான மக்கள் வேலையிழந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலும் அந்த அடிப்படையில் மக்கள் வேலையிழந்திருக்கிறார்கள், நீங்கள் அவர்



களுக்கு வேலை கொடுப்பதற்காகக் கொண்டுவரும் திட்டம் எப்படி இருக்கின்றது என்றால் உடம்பே பற்றி எரிந்திருக்கின்றபோது விரல் நுனியிலே மட்டும் ஒரு சொட்டு சந்தனத் தண்ணீரை வைப்பது மாதிரி இருக்கின்றது. ஆனால் நீங்கள் கொண்டுவரும் திட்டத்தை நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்தத் திட்டங்களும் வரட்டும். ஆனால் நிலைமை எப்படி இருக்கின்றது என்பதற்காகச் சொல்கிறேன். இப்படிப்பட்ட ஒரு போக்கிலே இந்தியப் பொருளாதாரம் சென்று கொண்டு இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையில் நாங்கள் மத்திய சர்க்காரிடம் கேட்டோம், கேட்டோம் என்று மாநில அரசு பாடம் படித்துக்கொண்டிருந்தால் பயன் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களை எதிர்த்து நிற்கின்ற கொள்கை உங்களுக்கு இருக்கின்றதா என்பதுதான் கேள்வி. அந்தக் கேள்விக்கு நீங்கள் சரியான விடை சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் வாங்கும் சக்தி கிராம மக்களுக்கு எப்படி ஏற்படும். நிலச்சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டும். நிலச் சீர்திருத்தம் என்பது பினாமி நிலங்களை எடுத்து கொடுப்பது மட்டுமல்ல. லேண்ட் ஹோல்டிங் என்பதைப் பொறுத்த வரையில் அதற்கு வரம்பு கட்டவேண்டும். உங்களைப் பொறுத்தவரையில் பினாமி நிலத்தை எடுப்பதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்தீர்கள். அது அங்கே அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால் அதன் பிறகு புதிதாக ஒரு சட்டத்தைக் கொண்டுவரவில்லை நீங்கள். அதிகப்படியான நிலங்களையும் கோயில் நிலங்களையும் எடுத்து அந்த நிலங்களைப் பங்குபோட்டுக்கொடுக்கும்படியான நிலைமையை ஏற்படுத்தாமல் எப்படி நிலச்சீர்திருத்தம் செய்ய முடியும். எனவே, அடிப்படையான வகையில்— கிராமங்களைச் சீர்செய்கின்ற வகையில் உங்களுடைய கொள்கை இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியச் சர்க்காரைப் பொறுத்த வரையில் எங்களுக்கு பிரச்சனை இல்லை. அவர்கள் நிலச் சீர்திருத்தம் செய்யப் போவது இல்லை. அதற்கு உதாரணமாக 1950ஆம் வருடம் அன்று மகலாநோபீஸ் கமிட்டி 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் கொடுத்தால் 6 கோடி 30 லட்சம் ஏக்கர் நிலம் மிச்சம் கிடைக்கும் என்று சொன்னார்கள் நடக்கவில்லை. 20 வருடத்திற்கு பிறகு 1970-71-ல் தண்டேகர்லாஸ் கமிட்டி அவர்கள் கணக்குப்படி 4 கோடியே 20 லட்சம் ஏக்கர் நிலம் மிச்சம் கிடைக்கும் என்று சொன்னார்கள். செய்யவில்லை. 1972-ல் பார்லிமென்டில் விவசாய அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் 4 கோடி ஏக்கர் நிலம் அப்போது நிலச் சீர்திருத்தம் செய்தால் கிடைக்கும் என்று சொன்னார்கள். செய்யவில்லை. 1975ஆம் ஆண்டு மிச்ச நிலம் பற்றி மத்திய அரசு தந்த கணக்குப்படி 37 லட்சம் ஏக்கர் நிலம் தான் மிச்சம் என்று சொல்லிவிட்டார்கள். இது நிலச்சீர்திருத்தம் செய்யும் ஏற்பாடா? இந்த இடத்தில் தான் நீங்கள் சட்டம் போட்டு கொண்டு போய் கொடுக்கிறீர்கள், இதை ஒப்புக்கொள்ள வேண்டு

கொஞ்சம் நிதி ஒதுக்கம் அதிகமாகக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறீர்கள். இது தான் உங்களுடைய சாதாரணமான கேள்வியாக இருக்கிறது. இந்தக் கேள்விக்கும் இருக்கக்கூடிய நடக்கக்கூடிய நிலைமைகளுக்கும் உள்ள வேறுபாட்டைப் பார்க்க வேண்டும். ஆகவே தான் அதை எதிர்க்கக் கூடிய முறையிலே மத்திய அரசாங்கத்தின் போக்கை எதிர்க்கக் கூடிய முறையிலே இன்றைக்கு கோடிக் கணக்கான விவசாயிகள், தொழிலாளர்கள், உழைப்பாளிகள் மத்திய தர மக்கள், ஜனநாயக இடதுசாரி சக்திகள், கட்சிகள் மத்திய அரசின் போக்கை மாற்ற போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமைக்கு உங்கள் கொள்கை காணாது. தன்னாட்சி என்று சொல்லுகிறீர்கள், ஆனால் கொஞ்சம் கொடுங்கள் கொடுங்கள் என்று கேட்கிறீர்கள். எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 3–3–1983 அன்று மதுரையிலிருந்து வருகின்ற இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வந்திருக்கிறது ஒரு செய்தி. அதில், மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் கொச்சியிலே ஒரு கூட்டத்திலே பேசியிருப்பதால் அவர் சொன்னார், என்று போடப்பட்டு இருக்கிறது.

He would welcome any move for a joint effort by the Southern States for more powers to States. Any such move would have the full support of the Tamil Nadu Government.
But we are not for State autonomy.

என்று சொன்னதாகப் போட்டிருக்கிறார்கள், அது அங்கே பேசப்பட்டு இருக்கிறது. அப்படியானால் ஒரு சமயம் பத்திரிகையிலே தவறாக செய்தி வந்திருக்கலாம், எது உண்மை அல்லது தவறு என்று அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஸ்டேட் அட்டானமி, மாநில சுயாட்சி என்று சொன்னாலே அதை எப்படி புரிந்து கொண்டு இருக்கிறீர்கள் என்பது தெரிய வேண்டி இருக்கிறது. அதற்காக அரசியலமைப்புச் சட்டத்தின் பல்வேறு ஷரத்துக்களை மாற்ற வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்தால் தான் மாநில மத்திய அரசுகளின் உறவு மாறும். அதிகமான அளவுக்கு பைனான்ஷியல் பவர்ஸ் ஸ்டேட்களுக்கு கிடைக்க வேண்டியிருக்கிறது. இன்றைக்கு ஏகபோக பெரு முதலாளிகளின் பன்னாட்டு மூலதனத்தை நம்பியிருக்கக் கூடிய ஒரு மத்திய சர்க்கார் அந்தச் சட்டங்களை அமைத்துத் தருமா என்பதையும் நீங்கள் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. அது இல்லாத நிலையில் தமிழக மக்கள் இடது சாரி ஜனநாயக சக்திகளோடு சேர்ந்து நின்று ஒரு நியாயமான கொள்கைக்காக நின்று போராடுவது தான் சரியாக இருக்கும். அதைச் சொல்லும்போது மத்திய சர்க்காரை எதிர்த்து நின்று எந்தக் காரியத்தையும் நாங்கள் செய்ய மாட்டோம் என்று இதே சட்டமன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. மோதல் என்றால் என்ன? ஒரேடியாக பெரிய தவறான மோதல் நடத்துவது என்பதல்ல. அந்தக் கொள்கைகளை மாற்றுவதற்கு இந்த நாட்டிலே உள்ள



சகல சக்திகளோடும் சேர்ந்து நிற்பார்களா என்பது தான் கேள்வி. அப்படி இல்லையென்றால் என்ன வரும்? நீங்கள் கேட்கக் கூடிய சில சலுகைகளை அவர்கள் கொடுத்தால போதும் என்ற நிலை வரும். அது தான் உங்களுடைய மாநில சுயாட்சி என்று அர்த்தப்படுத்தி இருக்கலாம். அப்படி இருந்தால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. இந்த பட்ஜெட்டிலே வறட்சி பற்றிய விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. வறட்சி போன செப்டம்பர் மாதத்திலே இருந்து இருப்பது உங்களுக்குத் தெரியும், நாங்கள் அப்போதே பேசினோம். சட்டமன்றக் கூட்டத்தை கூட்டி விவாதிக்க வருஷத்திற்கு இரண்டு தடவைகள் தான் கூட்டுகிறீர்கள். அடிக்கடி சட்டமன்றத்தைக் கூட்டி பேசுவதற்கு அனுமதித்திருந்தால் எவ்வளவோ பயன்பட்டிருக்கும். அதை நீங்கள் செய்யவில்லை. (மணியடிக்கப்பெற்றது) சுருக்கமாக முடித்துவிடுகிறேன். அரசு ஊழியர்களைப் பற்றி பேச்சே வரவில்லை. அவர்கள் ரிடையர் ஆகிற போது 10 ஆயிரம் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதைப்பற்றி பேச்சே வரவில்லை. அதே மாதிரி ஆசிரியர்களைப் பற்றிய விஷயத்தை நீங்கள் எடுக்கவில்லை. இன்றைக்கு அவர்களுடைய மனதில் எவ்வளவு வேதனையடைந்திருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அடுத்து விலையேற்றத்தை தடுப்பதற்கான உங்களுடைய பப்ளிக் டிஸ்ட்ரிபியூஷன் சிஸ்டம். அரிசி விலை கொஞ்சம், கொஞ்சமாக ஏறுகிறது, அளவு குறைகிறது. இதில் உறுதியான விநியோகத் திட்டம் வேண்டும். 10, 15 அத்தியாவசிய பொருள்கள் மக்களுக்கு விநியோகத் திட்டத்தை நிறைவேற்றினால் இந்த நிலைமை இப்படி இருக்காது. நிலைமையும் சற்று சீரடையும். விவசாயிகளுடைய பொருள்களுக்கு நியாய விலை கொடுக்கவில்லை என்றால் அவர்களும் எதிர்த்து நிற்பார்கள். அடுத்து தமிழகத்தில் நிலச் சீர்திருத்தம். நில சீர்திருத்தத்தில் புதிய சட்டத்தை கொண்டு வரவில்லை என்றால் கிராமப்புறங்களில் நிலைமை எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். வீட்டிற்கு ஒருவருக்கு வேலை, என்பது மிக நல்ல திட்டம். 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். திட்டம் என்ன என்பதை சொல்ல வேண்டாமா? அதே போல் இட்லி சுட்டு விற்கக் கூடிய கைம்பெண்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவி செய்கிறீர்கள், நல்லது. அதனாலே மட்டும் வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்று ஆகிவிடுமா? வேலைக்கு என்ன திட்டம் என்பதைச் சொல்ல வேண்டும். சத்துணவுத் திட்டம் வருவதற்கு முன்னாலே இந்த சட்டமன்றத்திலே வைக்க வேண்டுமென்று சொன்னோம். வைக்கவில்லை; ஆனால் அமுலாக்கிய பின்னால் பேசப்பட்டது. அந்த நிலைமை மாற வேண்டும். தமிழகத்தில் கிராமங்களில் இருக்கிற தாய்மார்களுக்கு கழிப்பிடங்கள் கட்டுவதற்கு 22 கோடி பணம் ஒதுக்கியிருக்கிறது நல்ல அம்சமாகும். நாங்கள் அதை வரவேற்கிறோம். இந்த 22 கோடி ரூபாய் மற்றும் வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்பதற்கான 15 கோடி ரூபாய் இவைகளில் கான்ட்ராக்டர்களோ அல்லது அதிலே தலையிட்டு பணத்தை எடுத்துக் கொண்டு போகவேண்டும் என்பவர்களோ நுழைய இடம் அளிக்காமல் அந்தத் திட்டங்கள்

என்று. இதை ஒத்துக்கொள்வார்களா? இந்திய நாட்டினுடைய அரசாங்கம் ஒரு முதலாளித்துவ ஏகபோக பெரும் முதலாளித்துவத்துனுடைய ஆதிக்கத்தில் அவர்களுடைய அரசு இருக்கிறது. அதில் நிலச்சுவான்தார்களின் பங்காளிகளாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட முதலாளித்துவ, நிலச்சுவான்தார்கள் நடத்தும்படியான ஒரு அரசாங்கத்தினுடைய கொள்கையை....(மணியடிக்கப்பெற்றது) நான் கொஞ்சம் அதிக நேரம் கேட்டிருக்கிறேன். ஆக அப்படிப்பட்ட ஒரு கொள்கையை இன்றைக்கு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஏன் நிலச்சீர்திருத்தம் நடக்கவில்ல என்று. 1976-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சொன்னார்கள் ''என் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட ஒரு பெரிய பிரச்சனை என்னவென்றால் ஸ்தல ரெவின்யூ அதிகாரிகளுக்கும், பெரும் நிலச்சுவான்தார்களுக்கும் இடையில் ரகசிய உறவு உள்ளது என்பதாகும்''. 1976-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் நாங்கள் நிச்சயமாக நிலச்சீர்திருத்தங்களை முடிப்போம் என்று அன்று இந்திய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நடக்கிறதா, ரெவின்யூ இலாக்காவினருக்கும் நிலச்சுவான்தாரர்களுக்கும் இருக்கும்படியான தொடர்பை உங்களால் அறுக்க முடியுமா? நீங்கள் அறுக்க முயற்சி எடுத்து இருக்கிறீர்களா? எடுக்கவில்லை? எடுக்கிற அன்றுதான் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

அது மாதிரி இந்தியாவில் கருப்புப் பணம், 1953-ம் வருடம் 600 கோடி என்று சொன்னார்கள். 1961-62-ல் இந்த கணக்கு 1,400 கோடி என்று சொன்னார்கள். அதற்கு பிறகு ஒரு கணக்குப்படி 2,803 கோடி என்று சொன்னார்கள், புரபஸர் டி. கே. ரங்கேக்கர் அவர்களுடைய கணக்குப்படி. இது அல்லாமல் கள்ளப் பணத்தை கணக்குப் போடும் சில முறைகளை கள்ளப் பணத்தினுடைய பெரும் முதலாளிகளாக, உலக முதலாளிகளாக இருக்கக்கூடிய அமெரிக்காவிலும் கனடாவிலும் இருக்கிறவர்கள் கணக்கு போடும் முறையை சொல்லியிருக்கிறார்கள். அந்த முறைப்படி பார்த்தால் 1978-79-ல் இந்தியாவில் இருக்கும்படியான கள்ளப் பணம் 46 ஆயிரத்து 866 கோடி. இவ்வளவு கோடிக் கள்ளப்பணம் இந்த நாட்டில் சுற்றிக்கொண்டிருக்கும்போது விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிறது. நாங்கள் என்ன செய்வது என்று சொல்லிக் கொண்டு இருந்தால் என்ன ஆவது, இதை தடுப்பதற்கு தன்னால் ஆன காரியத்தை இந்த அரசு செய்ய வேண்டும். இதனுடைய பிரதான குற்றவாளி டெல்லியில் இருக்கிறது. அதை எதிர்த்து நிற்பதற்கு தமிழக மக்கள் மத்தியில் உண்மைகளை எடுத்துச் சொல்லி அந்த கள்ளப்பணத்தைக் கண்டு பிடித்து எடுக்க முயற்சி செய்யவேண்டும். அப்படிப்பட்ட கொள்கை இல்லாமல் கடிதம் எழுதினோம், நேரில் பார்த்தோம், பேசினோம், தொடர்ந்து பேசினோம் என்று சொன்னால் பிரச்சனை நடக்காது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தானாக கருப்புப் பணம் வருவதற்கு ஒரு திட்டத்தை 1975—ல் மத்திய அரசு வெளியிட்டார்கள். 250 கோடி கிடைத்தது. விசேஷ பத்திரம்



வெளியீடு என்று இப்போது 1980—81-ல் போட்டார்கள். அதில் எவ்வளவு கிடைத்தது என்றால் 961 கோடி. இந்த கள்ள மார்க்கெட்டில் கொள்ளை அடிக்கிறவர்கள் ஆவது அவர்கள் தங்களுடைய பணத்தை கொண்டுவந்து கொடுத்துவிடுகிறார்களா என்றால் கொடுக்கவில்லை. ஆகவே கள்ள மார்க்கெட் இப்படி நிலவும்போது விலை ஏற்றமும் கொள்ளையும் நடக்கும். அதை எதிர்த்து நிற்கும்படியான கொள்கை மத்திய அரசுக்கு இல்லை. அந்த கொள்கையை எதிர்த்து நிற்கும்படியான கொள்கை உங்களுக்கு இருக்கிறதா என்பது தான் என்னுடைய கேள்வி. அதனால் தான் வரி எல்லாம் மத்திய அரசு போட்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் வரி போட்டு ஆகிவிட்டது ஒரு புதுமுறையே வந்து விட்டது. பட்ஜெட் கொண்டு வந்து பார்லிமெண்ட்டில் வைத்து பட்ஜெட்டிலே புதிய வரி போடுவதற்கு பதிலாக பட்ஜெட் வருவதற்கு முன்னாலே வரிபோட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வரி இதுவரைக்கும் சுமார் 1,300 கோடி பட்ஜெட்டில் போட்டு இருப்பது 716 கோடி ரூபாய்க்கு, பட்ஜெட்டிலே போட்டு இருப்பதையும் சேர்த்து 2,600 கோடிக்கு மேல் வரி போட்டு இருக்கிறார்கள். அதில் தான் 57 கோடிக்கு ரயில்வேயில் கன்செஷன் கொடுத்து இருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, 1,555 கோடி பற்றாக்குறை. இந்த இரண்டையும் சேர்த்தால் 4,000 கோடி. ஏன் விலைவாசி ஏற்றம் ஏற்படாது நாட்டில். இதை உணர வேண்டாமா? ஆகவே தான் சொல்கிறோம் இதை எதிர்த்து போராடுகின்ற கோடிக்கணக்கான விவசாயிகள், உழைப்பாளிகள், மத்திய தர மக்கள், அரசு ஊழியர்கள் இப்படிப்பட்ட இவர்களுடைய போராட்டங்களை காணும்போது உங்களுக்கும் சீற்றம் ஏற்படுகிறது. அது சரியல்ல.

(பிற்பகல் 1—00)

எதிர்ப்பு ஏற்படுகிறது, அடக்குமுறை மூலமாக தடுக்க விரும்புகிறார்கள், அது சரியல்ல, நியாயமல்ல. நீங்கள் உங்களுடைய பட்ஜெட்டிலேயே சொல்லியிருக்கிறீர்கள், மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே இணக்கமான உறவு ஏற்பட தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேராவண்ணம் போதிய அதிகாரங்களோடு கூடிய தன்னாட்சி உரிமையை மாநிலங்கள் பேறவேண்டுமென்பதை இந்த ஆட்சி அடிக்கடி நினைவுப்படுத்தி வருகிறது என்று கூறியிருக்கிறீர்கள். 1981—82 ஆம் ஆண்டு பட்ஜெட்டிலேயும் இதேமாதிரி கூறியிருக்கிறீர்கள், 1982—83 ஆம் ஆண்டு பட்ஜெட்டிலேயும் இதேமாதிரி கூறியிருக்கும்படியான நிலையிலே மதிப்பிற்குரிய தலைவராக நீங்கள் கருதுகின்ற அண்ணாவின் கொட்டேஷன்களைக் கொடுத்துக்கொண்டு வருகிறீர்கள், இப்போதும் அதைப்போல கொடுத்திருக்கிறீர்கள். உண்மையாகவே நான் கேட்க விரும்புகிறேன், நீங்கள் மாநில சுயாட்சியை ஒத்துக்கொண்டு தான் நிற்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் கேட்பது என்ன? கொஞ்சம் மின்சாரம் தந்து உதவுங்கள், கொஞ்சம் நிலக்கரி கொடுங்கள், கொஞ்சம் அரிசி கொடுங்கள், கொஞ்சம் பினாமி நிலங்களை எடுக்கும் சட்டத்திற்கு அனுமதி கொடுங்கள்,

நிறைவேற்றப்படுமா என்பது கேள்வி. சுத்தமான அரசைநடத்த
வேண்டும் என்ற எண்ணமுள்ள நீங்கள் ஊழலும், லஞ்சமும்
தலை தூக்க இவற்றில் இடமிருப்பதை கணக்கில் கொள்ள
வேண்டும். இல்லையென்றால் நிலைமை மோசமாகிவிடும்
என்பதை எடுத்துச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. நி. அன்பழகன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே, நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் வைக்கப
பட்டிருக்கிற 1983-84-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை
வரவேற்று என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன்.
அரசு வரியே போடாமல் வருமானத்தை பெருக்க முடியாது. ஒரு
வருமானம் இல்லாமல் திட்டத்தை செயல்படுத்த முடியாது.
ஆகவே தான் இந்த அரசு உயர்த்த வேண்டியவைகளுக்கு வரியை
உயர்த்தி இருக்கிறது. சாதாரண ஏழை, எளிய மக்களுக்கு பயன
ளிக்கிற வகையில் சில வரிச்சலுகைகளையும் அளித்திருப்பதை
கோடிட்டு காட்ட விரும்புகிறேன். டாக்டர் நாவலர் அவர்களின்
நிதிநிலை அறிக்கையில் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருப்பது குடும்
பத்திற்கு ஒருவருக்கு வேலை அளிக்கிற திட்டமாகும். குடும்பத்
திற்கு ஒருவருக்கு வேலை அளிப்பது எந்த வகையில் சாத்திய
மாகும் என்று எதிர்தரப்பிலே இருப்பவர்கள் இங்கே கேள்விக்
கணைகளை தொடுத்து இருக்கிறார்கள். நான் அவர்களுக்கு
பணிவோடு சொல்வது, மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்
பொறுப்பேற்ற பிறகு இந்த அரசு பல புரட்சிகரமான திட்டங்
களை அறிவித்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அப்படிப்
பட்ட திட்டங்களை அறிவித்தபோதும், செயல்படுத்திய போதும்,
இந்த மாமன்றத்திலே இருக்கிற எதிர்க்கட்சிகள் நிச்சயமாக அதை
வரவேற்கவில்லை. ஆனால் தமிழகத்தில் தன்னிறைவுத் திட்
டம் முதன் முதலாக அறிவிக்கப்பட்ட போது, இந்தத் திட்டத்தை
எப்படி செய்வீர்கள் என்ற வினாவை தொடுத்தார்கள். ஆனால்
இன்றைக்கு மூன்றாண்டு காலக்கட்டத்திலே தமிழகம் முழுவதும்
கிராமப்புறங்களில் வாழ்கிற மக்களுக்கு அடிப்படை பிரச்னை
களை தீர்த்து வைக்கிற வகையிலே பல வசதிகளை இந்தத்
திட்டத்தின் வாயிலாக அரசு செய்து முடித்திருக்கிறது. சத்துணவுத்
திட்டத்தை முதன் முதலாக எடுத்துச்சொன்ன போது,
இதை செய்யமுடியுமா என்று கேட்டார்கள். தமிழகம் முழு
வதும் 65 லட்சம் குழந்தைகளும், 2 லட்சம் முதியோர்களும்
சத்துணவுத் திட்டத்தின் மூலமாக பயன்பெற்றுக் கொண்டிருப்
பதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அதேபோல
தமிழகம் முழுவதும் நியாயவிலைக் கடைகள் திறக்கப்படும் என்று
சொன்ன நேரத்தில், தமிழகம் முழுவதும் எல்லா ரெவின்யூ
கிராமங்களிலும் கடைகளை திறக்க முடியுமா என்ற வினாவை
தொடுத்தார்கள். ஆனால் தமிழகம் முழுவதும் இன்றைக்கு 15
ஆயிரம் கடைகளுக்கும் அதிகமாக திறந்து, விலையேற்றத்தைக்
கட்டுப்படுத்துகிற அளவிற்கு, ஏழை எளியவர்கள் மலிவு விலையில்
உணவுப்பொருள்களை வாங்குகிற காட்சிகளை எதிர் தரப்பிலே
இருக்கிறவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.



(பிற்பகல் 1-10)

குடிசைகளுக்கு மின்விளக்கு அளிக்கின்ற திட்டத்தை அறி
வித்தபொழுது, பற்றாக்குறை உள்ள மின்வாரியம் அதைச் செய்ய
முடியுமா என்று அன்றைக்கு வினா தொடுத்தார்கள். ஆனால்,
இன்றைக்கு 5 இலட்சம் குடிசைகளுக்கு இந்த அரசு ஒளி விளக்கு
அளித்திருப்பதைப் பார்த்துக்கொண்டுதானிருக்கிறீர்கள்.

அன்றைக்கு விவசாயிகளுக்குக் கடனைத் தள்ளுபடி செய்
வோம் என்று சொன்ன நேரத்தில் எப்படி முடியும் என்று கேட்
டார்கள். ஏறக்குறைய ரூ. 200 கோடி அளவிற்கு விவசாயி
களுக்குக் கடனையும் வட்டியையும் தள்ளுபடி செய்து இந்த அரசு
அவர்களுக்கு நன்மையை அளித்திருக்கிறது. அந்த வகையிலே
குடும்பத்திலே ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தைப்
படிப்படியாக அரசு செயல்படுத்தும், நிச்சயமாக செய்து முடிப்
போம் என்று இந்த அரசு சொல்லியிருக்கிறது. அதைச் செய்து
முடித்துக் காட்டும் என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது.
இந்த அரசும் புரட்சித் தலைவரும் செய்வதைத்தான் சொல்வார்
கள். சொன்னதை செய்து காட்டுவார்கள். அதை எதிர்க்கட்சி
யிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது.
எதிர்க்கட்சியைப் பொறுத்தவரை ஏதோ ஆளுங்கட்சியினுடைய
எல்லா திட்டங்களையும் குறை கூறுவதையும் குற்றம் சாட்டு
வதையும் வாடிக்கையாக அவர்கள் ஏற்றுக்கொண்டால் நிச்சய
மாக, மக்களுக்கு ஒரு வேடிக்கை பொருளாக நீங்கள் ஆகிவிடுவீர்
கள் என்பதை மனதிலே கொள்ளவேண்டும். இந்த அரசைப்
பொறுத்தவரைக்கும் எந்த அளவுக்கு மக்களுடைய அடிப்படை
பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முன்நின்று பாடுபட்டு வருகிறது
என்பதற்கு ஒருசிலவற்றை கோடிட்டுக் காட்ட வேண்டும். இன்
றைக்குத் தமிழகத்திலே உணவுப் பிரச்னை பெரிய பிரச்னை
யாகிக் கொண்டிருக்கிறது. தமிழக மக்கள் வறட்சியினுடைய
கோரப் பிடியிலிருந்து மீளமுடியாமல் இருக்கிறார்கள். மக்களுக்கு
உணவளிக்க மத்திய அரசு பாரபட்சம் பார்க்காமல், தமிழகத்
திற்கு அரிசியை வழங்கவேண்டும். தமிழக அரசு இன்றைக்
கிருக்கிற நிலைமையை உணர்ந்து மத்திய அரசை 80,000 டன்
அரிசி வேண்டுமென்று கேட்டபொழுது, ஏதோ 5,000 டன் அரிசி
யைத் தரவிருப்பதாக இன்றைக்கு பத்திரிலையிலே செய்தி வந்
திருக்கிறது. யானைப் பசிக்குச் சோளப் பொறி என்று சொல்
வார்களே அந்த அளவுக்கு மத்திய அரசு அளித்திருக்கிறது.
ஆனால், மத்திய அரசினுடைய நிலைமை, மக்களுடைய அடிப்
படை இன்னல்களைத் தீர்க்கின்ற வகையிலே இருக்கவேண்டும்
தவிர ஒரு பாரபட்ச எண்ணத்தோடு மாநில அரசை அவர்கள்
நடத்தக்கூடாது என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ள
வேண்டும்.

தமிழகத்திற்கு வந்திருந்த வறட்சி பற்றிய நிபுணர் குழு
வினுடைய தலைவர் ஸ்ரீவத்சவா அவர்கள் ஒரு கருத்தை இங்கே
சொல்லியிருக்கிறார்கள். தமிழக அரசு, இதற்கு முன்பு தவறு

செய்திருந்தாலும்கூட நிச்சயமாக அவர்கள் அரிசி கேட்பது நியாயம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்திலேதான் நீங்கள் தமிழகத்திற்கு நிச்சயமாக அரிசியினை வழங்க வேண்டுமென்று அந்த நிபுணர் குழு அதைச் செய்து முடிக்கின்ற அளவு, இங்கே அமர்ந்திருக்கிற ஆளும் தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதற்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் உபரியாக உள்ள மாநிலத்திலிருந்தும் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின்மூலமாக அரிசியை வாங்குவதற்கும், வெளிநாடுகளிலேயிருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்கும் மத்திய அரசு அனுமதி அளித்தாக வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், தமிழகத்திலே இன்றைக்கு வறட்சி நிலைமை ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. தமிழகத்திலே பருவ மழை தவறியதன் காரணமாக, வறட்சிக் கடுமையாக ஏற்பட்டிருக்கிறது. சென்ற முறை வறட்சியைச் சமாளித்த தமிழக அரசு இந்த முறை இதற்கு அறைகூவல் விடுகின்ற அளவுக்குப் பல அரிய சாதனைகளைச் செய்து வருகிறது. பருவ மழை பொய்க்காலும் தான் செய்கின்ற பணிகள் பொய்க்கவில்லை என்ற அளவுக்குத் தமிழக அரசு முன்னெச்சரிக்கையாக துயர் துடைப்புப் பணிகளைச் சிறப்பாக இன்றைக்கு செய்து கொண்டிருக்கிறது. இதுவரை துயர் தணிப்பு பணிகளுக்காக ஏறத்தாழ ரூ. 45.63 கோடி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. 1982 ஆகஸ்ட்டிலிருந்து ஜனவரி 1983 வரை ரூ. 17 1/2 கோடி செலவிலே ஏறத்தாழ 7,600 குடிநீர்க் கிணறுகளை அமைப்பதற்கு அரசு ஆணையிட்டு செயல்படுத்தியிருக்கிறது.

அது மட்டுமல்ல, கிராமத்தினருக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையிலே, பல வேலைகள் துவக்கப்பட்டு இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்றன. தமிழக வறட்சி நிலைமையைப் பொறுத்த வரை, அறிக்கையை அனுப்புவதிலே இந்த அரசு காமதம் செய்து விட்டதாக மாண்புமிகு பிரதான எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் குற்றம் சாட்டினார்கள். ஆனால், அவர்களுக்கு நான் இங்கே ஒரு விளக்கத்தினைக் கூற விரும்புகிறேன். தமிழகத்திற்கு வந்த மத்திய நிபுணர் குழு ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறது. ஜனவரி இறுதிவாக்கில்தான் மழை பெய்யாததனுடைய நிலைமை தெரியவரும். அதற்கு முன்னால் தமிழக அரசு அறிக்கை அனுப்பியிருந்தால் அது முழுமையாகவும் விவரமாகவும் இருந்திருக்காது என்று அவர்கள் தெள்ளத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு உரிய நேரத்திலே, நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதை மத்தியிலிருந்து வந்த நிபுணர் குழுவும் பாராட்டியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசினுடைய அனுமதியை எதிர்பார்க்கும் திட்டங்களுக்கு விரைவாக அனுமதி அளிக்க வேண்டும்; மாநில அரசின் தொழில் துறையின் பரிந்துரைகளை ஏற்று அதற்கு விரைவாக உரிமங்களை வழங்க வேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு மத்திய அரசு முன் வரவேண்டும். மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்கிறது. சென்ற இரண்டாண்டுக் காலத்தில் பார்த்தால், 1981-ஆம் ஆண்டு 92 விண்ணப்பங்களும், 1982-ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 107 விண்ணப்பங்களும் பரிந்துரை செய்யப்பட்ட நிலையில், 1981-ஆம் ஆண்டிலே 39 உரிமங்களுக்கான அனுமதிகளையும், 1982-லே 37 உரிமங்களுக்கான அனுமதிகளையும் அளித்திருக்கிறது. ஆகவே, மத்திய அரசின் தொழில் கொள்கையில் புதிய மாற்றத்தைச் செய்யும் அளவில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மாநில அரசுகளுக்குத் துரிதமாக உரிமங்களை வழங்கும்பொழுது தமிழகத்திற்கு முன்னுரிமை கொடுத்துச் செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் கல்வித் துறை மிகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. இந்த ஆண்டு கல்விக்காக 359.79 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. புதிதாக மாணவர்கள் 2.63 இலட்சம் பேர் பள்ளிகளிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க வசதியாக 1,750 ஆசிரியர்களை அரசு நியமிக்க இருப்பதைக் கண்டு நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே, தொடக்கப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் எல்லாப் பள்ளிகளுக்கும் நிரந்தரமான கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டிட வசதியில்லாத நிலைமை இருக்கிறது. இதுபோன்ற பள்ளிகளுக்குப் போதிய *கட்டிடங்களைக் கட்டுவதற்காக சிறப்புத் திட்டம் ஒன்றினைத் தீட்டி தமிழகத்தில் உள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் புதிய கட்டிட வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானலிலே மகளிர் பல்கலைக் கழகம் தொடங்க விருப்பதைப் பாராட்டுகின்றேன்.

வடார்க்காடு மாவட்டதில் பிற்பட்ட பகுதியாக அமைந்திருக்கும் திருப்பத்தூர் பகுதியிலே தொழில் நுட்பக் கல்லூரியைப் புதிதாக அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1983—84-ஆம் ஆண்டுக்கான நிதிநிலைஅறிக்கையின் மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கருத்துக்களைக்



கூற விரும்புகிறேன். மொத்தமாக 1983—84-ஆம் ஆண்டில் பற்றாக்குறை 184.55 கோடி ரூபாயாக இருக்கும் என்று நிதி அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது எந்த நிலைமையிலே என்று பார்த்தால் மத்திய அரசு மாநில மக்களின் நலன்களை நிராகரிக்கிறது. மாநில அரசின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கும் மத்திய அரசின் அதிகாரம் குறுக்கிடுகிறது.

(பிற்பகல் 1.20)

மத்திய பட்ஜெட் 1,718 கோடிக்கும் அதிகமாக வரிகளை விதித்து பெரிய மக்கள் மீது சுமையை ஏற்றியிருக்கிறது. இன்றைய நிலையில் தமிழகத்திலே இன்றைக்குக் கடுமையான வறட்சி நிலை நீடிக்கிறது. மூன்று பருவ மழை தொடர்ந்து, பொய்த்துப் போய் இருக்கிறது. தாங்க முடியாத அளவுக்கு குடிதண்ணீர் பஞ்சம் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. சென்னை போன்ற நகரங்களிலே இரண்டு நாளைக்கு ஒரு முறை குடிதண்ணீர் கிடைக்கும் என்கின்ற முறையிலே அரசினுடைய அறிவிப்பு இருக்கிறது. உணவுப் பற்றாக்குறை. மற்றும் மின் பற்றாக்குறை, இவற்றின் விளைவாக அரிசி விலையும், மற்றும் அத்தியாவசியப் பண்டங்களினுடைய விலையும் உயர்கிறது. அவை அனைத்தாலும் அவதியுறும் தமிழக மக்களுக்கு மத்திய அரசு சுமத்தியிருக்கும் சுமைகளுக்கு மேலே, தமிழக அரசும் புதிய வரிகளை இன்றைய தினம் விதித்து இருக்கிறது. ஆகவே அந்த அளவுக்கு மத்திய அரசினுடைய சுமைக்கு மேலே மாநில அரசு தூக்கி வைத்திருக்கிற சுமை தமிழக மக்களை மேலும் அவதிக்குள்ளாக்குமென்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலேதொழில் வளர்ச்சி சம்பந்தமாக விவசாய வளர்ச்சிக்கான திட்டங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்றால், நாம் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு இல்லை என்பதை நான் வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன் 1983—84ஆம் ஆண்டு 6ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நம்முடைய மாநிலத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடு திட்டக் கமிஷனிடமிருந்து பெற்று—ஒப்புதலைப் பெற்று வந்திருக்கிறது என்பதை நிதி அமைச்சரவர்கள் பெருமையோடு கூறுகிறார்கள். ஒதுக்கி இருக்கிற தொகை, ஒப்புதல் அளித்திருக்கிறது தொகை ரூ. 845 கோடி. ஆனால் திட்டச் செலவு 893.46 கோடி ரூபாயாக உயரும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு பெற்று இருக்கக்கூடிய நேரத்தில், தொழில் வளர்ச்சிக்காக இதிலே ஒதுக்கி இருக்கக்கூடிய தொகை ரூ. 40.08 கோடி என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். 5 கோடி மக்களைக் கொண்ட தமிழகத்திலே வேலை இல்லாத் திண்டாட்டம் எந்த அளவுக்கு பெருகியிருக்கிறது என்பதும், அது மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்திலே அதிகமான அளவிற்கு, வேலையில்லாத் திண்டாட்டத்திலே அவதியுறுகின்ற இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற நேரத்தில், தொழில் வளர்ச்சிக்காக அதிகமான நிதி ஒதுக்கீடு

அது மட்டுமல்ல, இன்றைக்கு இந்த நிலைமையைப் போக்க வேண்டுமென்றால், மத்திய அரசு வறட்சி துயர் துடைப்பு பணிக்காகத் தமிழக அரசு கோரியிருக்கிற முழுத் தொகையையும் அளித்து, தமிழக மக்களுக்கு மறு வாழ்வையும் பாதுகாப்பையும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே தொழில் துறை எந்த அளவிற்குத் தாழ்ந்திருக்கிறது என்று மற்றவர்கள் சொல்லும்பொழுது, அதற்குக் காரணம் என்ன என்பதை நாம் பார்க்க வேண்டும். விரைந்து தமிழ்நாட்டை மேலும் தொழில் மயமாக்க வேண்டுமென்பதற்காகத் தமிழகத்திலே பெரும் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள் ஆகியவைகளுக்குப் பல அடிப்படை வசதிகளைத் தமிழக அரசு செய்து கொண்டு வருகிறது.

தொழில் வளர்ச்சிக்காக ஒரு மாநிலம் நிதி ஆதாரங்களை எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவையும் தமிழக அரசு இன்றைக்குச் செய்திருக்கிறது. ஒரு மாநிலம் தொழில் துறையில் முன்னேற வேண்டுமென்றால் மத்திய அரசின் தொழில் முதலீடு கண்டிப்பாக இருந்தாக வேண்டும். அதற்காக மத்திய அரசு எத்தனை கோடி ரூபாய்களை வேண்டுமானாலும் செலவழிக்கலாம். ஆனால், இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்த வரையில் அதன் தொழில் வளர்ச்சியைப் பார்க்கும்பொழுது, ஒரு மாநிலத்தின் முதலீட்டை அடிப்படையாக வைத்துக் கணக்கிடுகிறார்களே தவிர, ஒரு மாநிலத்தில் மைய அரசின் தொழில் முதலீடு எவ்வளவு என்பதை அடிப்படையாக வைத்துக் கொண்டு கணக்கிட்டு மத்திய அரசு தொழில் முதலீடு செய்திருக்கிறதா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு, ஏறத்தாழ 16 ஆண்டுக் காலத்தில் மத்திய அரசின் தொழில் முதலீடு தமிழகத்தில் மிகவும் குறைவகாத்தான் அமைந்திருக்கிறது. எனவே, தொழில் கொள்கையைப் பொறுத்த வரையில் மத்திய அரசு பல மாற்றங்களைச் செய்தாக வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு, இந்தியத் திருநாட்டில் 82 மாவட்டங்களைப் பிற்பட்ட மாவட்டங்களாக அறிவித்து, அவைகளில்தான் தொழில் வளர்ச்சிக்கான பணிகளைச் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறது. அந்த வகையிலே பார்த்தால், தமிழகத்திலே எந்த மாவட்டமும், அந்தப் பிற்பட்ட பகுதியிலே சேர்க்கப்படவில்லை. இப்படியிருக்கும்பொழுது ஒவ்வொரு மாநில அரசும் எப்படித் தொழில் துறையிலே முன்னேற முடியும் என்பதை மத்தியிலே உள்ள அரசு உணர வேண்டும்.

தஞ்சை மாவட்டத்திலே, வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட அரியலூர் பகுதியிலே உள்ள உடையார்பாளையம் என்ற கிராமத்திலே விவசாயிகள் அறுவடை செய்ய சொல்கிறார்கள். அவர்கள் அறுவடை செய்து கிடைத்த தங்களுடைய கூலி நெல்லை கொள்ளிடம் பாலம் வழியாகக் கொண்டு வரக்கூடிய நேரத்திலே, தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய கொள்முதல் அதிகாரிகள் அதைப் பறித்துவிடுகிறார்கள். திருச்சி மாவட்டத்திலே லால்குடி, குளித்தலை போன்ற தாலுகாக்களிலே அறுவடை செய்த அந்த நெல்லை அவர்கள் கொண்டு வந்த அந்த அறுவாளோடு, பெண்களிடத்திலிருந்தும், ஆண்களிடத்திலிருந்தும் பறித்துக்கொண்டு, நீங்கள் கொள்முதலுக்குக் கொடுக்கவேண்டும் என்ற முறையிலே நிர்ப்பந்தம் செய்து அந்த நெல்லைப் பறித்திருக்கிறார்கள். குளித்தலைத் தாலுக்காவில் அதைத் திருப்பி வாங்குவதற்காக அவர்கள் மீண்டும் அந்த அதிகாரிகளை அணுகிய நேரத்திலே அவர்கள் நங்கவரத்திற்கு வாருங்கள் என்று சொல்கிறார்கள். கையிலே இருக்கக்கூடிய காசையும் செலவு செய்து அங்கே போகவேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலைக்கு இன்றைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள் விவசாயத் தொழிலாளர்கள் போன்றவர்கள். ஆகவே கொள்முதல் என்பது எந்த இடத்திலே எப்படிச் செய்யவேண்டும் என்பதற்கான திட்டவட்டமான கொள்கை இல்லாத காரணத்தாலே இந்த மாதிரி நிலையுள்ளது. விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை வீட்டுக்குக் கொண்டுவர முடியவில்லை. இந்தமாதிரியான கொடுமைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நிவாரணம் சம்பந்தமாக வரி, வாய்தா தள்ளுபடி செய்வது சம்பந்தமாக அதிகாரிகள் ஒரு அறிக்கை கொடுக்கிறார்கள். நேற்றைய தினம் பத்திரிகையிலே அரசாங்கம் ஒரு உத்தரவை அறிவித்திருக்கிறார்கள். 37 பைசாவுக்கு கீழே விளைச்சல் இருக்கக்கூடிய பகுதியிலே இருக்கக்கூடிய அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் தள்ளுபடி செய்யப்படும். ஆனால் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் ஒரு அறிக்கையை நேற்றையதினம்—இரண்டும் ஒரே நாளிலே பத்திரிகையிலே வருகிறது. 50 சதவீதத்திற்குக் குறைவாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இந்தச் சலுகை கிடைக்கும் என்ற முறையிலே வருவாய் துறை அமைச்சர் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதிலே எது சரி என்று நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இரண்டும் ஒரே நாள் பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆக கொள்முதல் சம்மந்தமாக திட்டவட்டமான கொள்கை இல்லாத நிலையில் தேவையான் சேமிப்பைப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, காவல்துறை சம்பந்தமாக சில வார்த்தைகள். எற்கனவே இந்த மன்றத்திலே பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. லாக்-அப்பிலே சாவுகள் அதிகரிக்கப்படுகின்



றன. இந்தமாதிரியான நிலைமை ஏற்படுவது என்பது ஒரு சேம நல அரசாங்கம் நடக்கக்கூடிய ஒரு மாநிலத்திலே நடைபெறுவது விரும்பத்தக்கதல்ல. அது தினசரி அதிகரித்துக் கொண்டு வருகிறது. காவல் நிலையத்திற்குப் புகார் செய்யப் போனால் அவர்கள் மீதே வழக்கு பதிவு செய்கிறார்கள். ஏற்கனவே நான் இதைப் பற்றி குறிப்பிட்டு இருக்கிறேன். எங்களுடைய கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு சி. கோபால்): பேரவையின் முன் அனுமதியுடன், பேரவையின் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

திரு இரா கருப்பையா: அரியலூரிலே எங்களுடைய கட்சிச் செயலாளர், அவரது மனைவி கொலை செய்யப்பட்டார் என்று புகார் செய்யச் சென்ற நேரத்தில், அவரைப் பிடித்து வைத்துக்கொண்டு, தகனக் கிரியைக்குக் கூட காலத்திலே செல்ல முடியாத அளவிற்கு காவல் நிலையத்தில் பிடித்து வைத்து இருக்கும் கொடுமை இந்தக் காவல் துறையால் நடத்தப்பட்டு இருக்கிறது. இம்மாதிரி நூற்றுக்கணக்கான உதாரணங்களை என்னால் சொல்ல முடியும். ஆகவே, இந்தக் கொள்கை இன்றையதினம் யாரைப் பாதுகாப்பதற்காக இருக்கிறது என்று சொன்னால், காவல் துறையினர் அத்து மீறிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத்தான் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

தொழிலாளர்கள் சம்பந்தமாக அரசாங்கத்தின் கொள்கை இன்றையதினம் எப்படியிருக்கிறது என்று சொன்னால் முதலாளிகளைப் பாதுகாப்பது என்ற கொள்கை நடை முறையில் திட்டவட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைதினம் தொழிலாளர்கள் மீது அடக்குமுறைச் சட்டங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. வேலை நிறுத்தத் தடைச் சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. தொழிலாளர்கள் நீண்டநாள் போராடி, அவர்களாகவே முடிவுக்கு வந்து வேலை நிறுத்தத்தைக் கைவிடும் நிலை உருவாக்கப்படுகிறது.

பெரியார் மாவட்டம் ஈரோடு கந்தசாமி நூற்பாலையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 700 தொழிலார்களின் நிலை என்ன? சென்னையில் கே.சி.பி. ஆலையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் ஆகியவைகளை எடுத்துக்காட்ட முடியும். இதைத்தவிர, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 1947 ஆம் ஆண்டு ஷாப் அன்ட் எஸ்டாப்லிஷ்மென்ட் ஆக்ட்டை ரத்து செய்து புதிய சட்டம் இயற்றப் போவதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இருக்

செய்து, மேலும் புதிய தொழில்களை ஏற்படுத்துவது என்பது அதைப் போக்குவதற்கும், தொழில் வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும். ஆனால் அது அந்தத் துறையிலே கவனம் செலுத்தப்படவில்லை என்பதை நான் குறிப்பிடுகிறேன். ஏற்கனவே சென்ற ஆண்டும், அதற்கு முன்னரும் குறிப்பிட்டு இருக்கிற முறையெல்லாம், அரக்கோணம் மறு உருக்கு ஆலை மற்றும் காட்பாடி வெடிமருந்து தயாரிப்பு தொழிற்சாலை போன்ற சில தொழில்களுக்காக சிறு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்—துவங்கப்படும் என்கிற அறிவிப்புகள் இருக்கின்றன. ஆகவே மத்திய அரசினுடைய மாற்றாந்தாய்க் கொள்கையின் விளைவாக தமிழகத்திலே தொழில் வளர்ச்சி எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது, மாநில தொழில் வளர்ச்சிக்காக மத்திய அரசினுடைய திட்டங்களிலே ஒதுக்கீடு செய்யவில்லை என்பது ஒரு புறத்திலே அது அனைவருக்கும் தெரியும். இன்றைய தினம் சென்னையிலே துவங்கப்படவேண்டிய டிரைடாக்-அது அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை, அது நிறைவேற்றப் படாமல் இருக்கிறது. மற்றும் பல தொழில்கள்—நான் அவை அனைத்தையும் முழுமையாகச் சொல்வதற்கான நேரம் இல்லை. இம்மாதிரியான பல்வேறு தொழில்கள்—மத்திய அரசாங்கத்திடம் இன்றைய தினம் கரூர், திண்டுக்கல் அகல ரயில் பாதை போன்றவற்றிலே நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே மத்திய அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்காக செய்யக் கூடிய முயற்சிகள், ஏற்பாடுகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. மாநிலத்திலே இன்று ஒதுக்கீடாகி இருக்கிற நிதியிலே, அதிகமான தொகை இந்தத் தொழில் வளர்ச்சிக்காக பயன்படுத்தப்படுவது அதிகமாக பயனுள்ளதாக இருக்குமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றொரு விஷயம். ஏற்கனவே நம்முடைய மாநிலத்தில் பாளையத்திலே மதுரை மாவட்டத்திலே சிமெண்ட் தொழிற்சாலைக்கு மறுக்கிறார்கள். இம்மாதிரி பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. 1981-ல் நிதியமைச்சர் குறிப்பிட்டிருப்பதுபோல், 39 தொழில்களுக்கு மட்டும் மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. 1982-ல் 37 தொழில்களுக்கு மட்டும் அனுமதி வழங்கியிருக்கிறது. இம்மாதிரியான நிலைமை ஒருபுறத்திலே இருக்கிறது. ஆகவே இந்த நிலையிலே மேலும் அதிகமான தொழில்களைப் பெருக்குவதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து வாதாடிப் பெறுவது என்கிற ஒரு முறை நமக்கு எந்த அளவுக்குப் பயன் அளிக்கும் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆகவே அதை பெறுவதற்கு அடுத்த நடவடிக்கை என்ன என்பதை நம்முடைய மாநில அரசாங்கம் சிந்திக்க வேண்டுமென்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

அடுத்து விவசாய உற்பத்தி சம்பந்தமாக இன்றைய தினம் இருக்கக்கூடிய நிலைமை, வறட்சியினால் விவசாயம் பாதிக்கப் பட்டிருக்கிறது. அந்த விவசாயிகளுக்கு இருக்கின்ற கடன்சுமையை



குறைப்பதற்கான நிவாரண நடவடிக்கைகள் இந்தத் திட்டத்திலே அறிவிக்கப்படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக, விவசாயிகள் மீது இருக்கின்ற கடன் பளுவைக் குறைப்பதற்காக வறட்சி நிவாரணம் கொடுக்கின்ற முறையிலே நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். விவசாயிகள் உற்பத்தி பொருள்களுக்கு நியாயவிலை இல்லை அதேநேரத்தில் தமிழகத்திலே இருக்கின்ற சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு சென்ற ஆண்டு கொடுத்த விலையைக்கூட இந்த ஆண்டு மாநில அரசாங்கம் கொடுப்பதற்கு மறுக்கிறது. ஆகவே உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு கட்டுபடியாகக்கூடிய விலை கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை இன்றைய தினம் தமிழக அரசு நடைமுறையிலே நிறைவேற்றத் தவறி இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் இன்றைய தினம் வறட்சி சம்பந்தமாக, வறட்சி நிவாரணம் சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வறட்சி சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திற்கு காலத்திலே அறிக்கை அனுப்பப்பட்டதா? மத்திய அரசாங்கத்தினுடைய குழு எப்போது வந்தது? என்பதெல்லாம் இன்றைய தினம் ஒரு பெரிய சர்ச்சையாக இருக்கிறது. வறட்சி என்பது திடீரென்று ஏற்பட்டதல்ல என்பது அனைவருக்கும் தெரியும். இந்தச் சட்டமன்றத்திலே சென்ற செப்டம்பர் மாதத்திலேயிருந்து தொடர்ந்து வறட்சி நிலை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பது தொடர்ந்து வற்புறுத்தப்பட்டுவருகிறது. நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. வரும் பொருளை முன் கூட்டியே உரைப்பது அமைச்சருக்கு அழகு என்று சொல்வார்கள். ஆனால் அந்தமாதிரியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சட்டமன்றத்திலே கூறிய நேரத்திலே கூட, அதற்கான உரிய நடவடிக்கைகள் காலத்திலே எடுக்கப் படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இன்றையதினம் கொள்முதல் சம்பந்தமாக அரசாங்கத்திற்கு திட்டவட்டமான எந்தக் கொள்கையும் இருப்பதாகத் தெரியவில்லை. கட்டுத்தரையிலே விட்டுவிட்டு மேய்ச்சல் தரையிலே மாட்டைப் பிடிப்பது போல இன்றையதினம் அரசாங்கம் கொள்முதல் சம்மந்தமாக ஒரு புதிய கொள்கையை அறிவித்திருக்கிறது. அதன் விளைவாக விவசாயிகள், பொது மக்கள் அவதிப்படக்கூடிய நிலைமைகள் இன்றையதினம் சாதாரணமாக ஏற்பட இருக்கிறது. விவசாயத் தொழிலாளர்கள் தாங்கள் அறுவடை செய்து அதற்குப்பெறும் கூலி நெல்லை வீட்டிற்குக் கொண்டு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்கள். என்பதை நான் பல உதாரணங்கள் மூலம் சொல்லமுடியும்.

கின்ற சட்டம் சரியான முறையில் அமலாக்கப்படவில்லை யென்றாலும், ஓரளவு சட்டம் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு இருப்பவர்களைக் கூட இந்த ரத்து செய்யும் நிலை மாற்றிவிடும். இது வருந்தத்தக்கது.

பாசனம் சம்பந்தப்பட்ட வரையில் இன்றையதினம் குளங்கள், கண்மாய்கள் ஆகியவை வீடுகட்டும் மனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. உதாரணமாக தாம்பரம் அருகில் இருக்கும் சேலையூர் ஏரி மனைக்கட்டாக மாற்றப்படுகிறது. அரசாங்க அதிகாரிகளும், தனியார்களும் கூட்டாக இம் மாதிரியான காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்று நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

கிராமப்புற வீடு கட்டும் சங்கம் சம்பந்தமாக 40,000 வீடுகள் கட்ட திட்டமிட்டு இருப்பதாக இங்கே அறிவிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டன? சென்ற ஆண்டு கடன் தவணைகள் 1—2 வாங்கியவர்களையும் அவர்களிடம் கடன் மனுக்களை திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று கிராம வீட்டு வசதி சங்கத்திற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, கடன் வழங்குவது முழுமையாக நிறுத்தப்பட்டு இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்பு கிறேன்.

சத்துணவுத் திட்டம் சம்பந்தமாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்று 134 கோடி ரூபாய் இதற்காகச் செலவி டப்பட இருக்கிறது. சென்ற 6 மாதத்திற்கு ஒதுக்கப்பட்டி ருக்கும் தொகை 112 கோடி ரூபாய். அப்படியானால் ஓராண் டுக்கு 134 கோடி என்பது சரிதானா என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

பல்வேறு இனங்களில், கல்வி, மருத்துவம், சமுதாய நல வளர்ச்சி, சமூக நலன்; போன்றவற்றிற்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற நிதி குறைக்கப்பட்டு இருக்கிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். சத்துணவுத் திட்டம் பாச உணர்வோடு கொண்டுவரப்பட்ட திட்டம், குழந்தைகள் பசி பட்டினியின்றி இருக்கவேண்டும் என்று கொண்டுவரப்பட்ட திட்டம்; இந்த உணவை நாம் கொடுத்தாலும், கிராமப்புறங்களில் அடிப் படையாக உள்ள ஏழ்மையை நாம் தீர்க்கவில்லையென்றால் இந்த சத்துணவுத் திட்டத்தின் மூலம் உணவு பெற அதிகரிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையை, குறைக்க முடியாது. அதை கிராம வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் செலவு செய்தால் பயன் உள்ளதாக இருக்கும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.



கொடுப்பதற்காக குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 15 கோடி ரூபாயில் எவ்வளவு பேருக்கு வேலை கொடுக்க முடியும்? தமிழகத் திலே இருக்கின்ற குடும்பங்களைக் கணக்கிட்டு, அவர்களில் எவ் வளவு பேருக்கு வேலை கொடுக்க முடியும் என்று கணிக்கப் பட்டு இருக்கிறதா? எந்த அடிப்படையில் வேலை கொடுக்கப் போகிறீர்கள்? இது மக்களைத் திருப்திப்படுத்துவதற்கான ஒரு அறிவிப்புதானே தவிர நடைமுறையில் பயன் அளிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தால் புதிதாக 2,63,000 மாணவர்கள் சேர்ந்திருக்கின்றனர் என்று சொல்லப்பட் கல்வி கற்க பள்ளியில் அளவிற்கு ஆசிரியர்கள் நியமிக்க டுள்ளது. அதற்குத் தகுந்த செய்யப்படவில்லை. 1250 ஆசிரியர்கள்தான் வழிவகைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சத்துணவு நியமிக்க ஆணைகள் மக்கள் மீது விதித்து இருக் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வரி 'நுழைவு வரி மாநகராட்சிகள் சிறப்பு கின்ற பலமுனை நகராட்சிகளின் எல்லைக்குள் நகராட்சிகள் மற்றும் தேர்வுநிலை மீது—குறிப்பாக, சர்க்கரை, கொண்டுவரப்படும் பொருள்களின் பொருள்கள்—மற்றும் இதர துணிவகைகள், பெட்ரோலியம் பொருள்கள் மீது விதிக்கப்படுள்ளன.

இது விற்கின்ற வர்த்தகர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தாது என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால் வர்த்தகர்கள் பாதிக்கப் படாவிட்டாலும் சாதாரண மக்கள் பாதிக்கப்படும் நிலைமை ஏற்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்தில் இந்த 25 கோடி ரூபாய் வரி தேவையா? இன்றைக்கு தமிழக மக்கள் விலைவாசி உயர்வால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; இந்த நேரத்தில் வரி உயர்வு கூடாது. இந்த வரியை ரத்து செய்ய வேண்டும். சாதாரண மக்கள் பயன்படுத்தும் பொருட்களுக்குத் தான் இந்த வரி உயர்வு. ஆகவே இதை ரத்து செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்பு கிறேன். புகையிலைக்கு வரி, அதிலிருந்து உற்பத்தியாகும் பொருட்களுக்கு வரி, நகரத்திற்குள் நுழைந்தால் வரி என்று சொல்லப்பட்டிருக்கிறது. புகையிலை உற்பத்தியாவது கிராமங் களில். அதை சுருட்டாகச் செய்து நகரங்களுக்குக் கொண்டு வருகிறார்கள்; புகையிலையாகவும் கொண்டு வருகிறார்கள். வெற்றிலை பாக்கு இல்லாமல் புகையிலையில் ஒரு துண்டை சாதாரணமாக மக்கள் அதை கன்னத்தில் அடக்கிக் கொள்கிற நிலை உள்ளது நாம் பார்க்கிறோம். அம்மாதிரியான பொருட் களுக்குக் கூட வரி என்றால் எங்களுக்கெல்லாம் அச்சத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, இந்த வரிகளை எல்லாம் முழுமை யாக ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## இணைப்பு I.

( 521 ம் பக்கத்திலுள்ள உடுக் குறியிட்ட வினா எண் 289-க்கான விடையைக் காண்க.)

### அவையின் முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கை

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் மானிய உதவி கீழ்க்கண்ட திட்டங்களுக்கு வழங்கப்படுகிறது.—

சிறு பாசனப் பணிகள்.

வடிகால் வசதியுட்பட சமுதாயப் பாசனப் பணிகள்;

தோண்டப்பட்டு, நீர் கிடைக்காத கிணறுகளை மறுபடியும் தோண்டுதல் ;

மண்வளப் பாதுகாப்பு நிலை மேம்பாடு ;

மண்வளத்தைப் பாங்குபடுத்துதலும் மேம்படுத்துதலும்;

கறவை மாடுகளை வழங்குதல் ;

கலப்பினக் கிடேரிகளுக்கான சிறப்புத் திட்டங்களும் ;

ஏனைய கால்நடை வளர்ப்பு உற்பத்தித் திட்டங்களும் ;

செம்மறியாடுகள், பன்றிகள் போன்ற ஏனைய விலங்குகள்; கோழிகள், வாத்துகள் முதலிய பறவையினங்களையும் வழங்குதல் ;

உழவு மாடுகள்/மாட்டு வண்டிகள் ;

தோட்டக்கலை ;

மீன்வளம் ;

வாடிக்கைப் பணிகள் ;

பட்டுப்புழு வளர்ப்பு ;

பண்ணைக்காடு வளர்ப்பு ;

தேனி வளர்ப்பு.

பயனடைவோர் தேவைக்கேற்ப பிற திட்டங்களுக்கும் மானிய உதவி வழங்கப்படும். திட்டங்கள் மைய அரசு வழி முறைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் அவசியம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சம் ரூ. 3,000 தான் மானியமாகத் தரப்படலாம். வறட்சிக்குட்பட்டப் பகுதி திட்டம் செயல் படுத்தப்படும் இராமநாதபுரம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் அதிகபட்சம் ரூ. 4,000 மானியமாகத் தரப்படலாம். மலை வாழ் மக்களுக்கு வழங்கும் மானியம் 50 சதவீதம். அதிக பட்சம் ரூ. [illegible],000 மானியமாகத் தரப்படலாம்.

## இணைப்பு II.

( 527 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 317க்கான விடையைக் காண்க.)

(அ) ஆம்.

(ஆ) திருவொற்றியூர் ஈ.எஸ்.ஐ. மருந்தகத்தில் வேலை பார்க்கும் திரு. இ. முருகையா மற்றும் திரு. சத்தியமூர்த்தி என்பவர்கள் 7–4–1981 அன்றும் அம்மருந்தகத்தின் மருந்தாளரான திரு. எஸ். எஸ். ராமர் என்பவர் 28–4–1981 அன்றும் அரசு மருந்துப் பொருட்களை களவாடியதற்காக கைது செய்யப்பட்டனர். அரசுப் பணியிலிருந்து தற்காலிக வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளனர். இராயப்பேட்டை மருத்துவமனையில் மருந்தாளராக வேலை செய்யும் திரு. கே. கணேசன் என்பவர் 1–4–1981 அன்று கைது செய்யப்பட்டு வேலை நீக்கம் செய்யப் பட்டார். அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையில் ஆண் செவிலியர் உதவியாளராக வேலை பார்க்கும் ஆர். தியாகராஜன் என்பவர் 1–4–1981 அன்று கைது செய்யப்பட்டு தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

(இ) அரசு மருத்துவமனைகளில் திருடு போவதைத் தடுப்பதற்காக அரசு அங்கீகரித்த லோகோ முத்திரையிட்ட மருந்துகளையே வாங்க வேண்டுமென்ற விதிமுறை ஏற்படுத்தப் பட்டுள்ளது. இந்த அரசாணையின்படி அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் மருந்துகளின் உறைகள், பாட்டில்கள், மீதுள்ள சீட்டுகள், மாத்திரைகள், டியூப் மாத்திரைகள் ஆகியவற்றில் அரசு முத்திரைகள் அச்சிடப்பட்டு தயாரிக்கப்படுகின்றன.

மேலும் மருத்துவமனைகளில் தலைமைப் பொறுப்பிலுள்ளவர்கள் அவ்வப்போது பண்டகத்தில் உள்ள மருந்துகளை எண்ணி சரி பார்க்கின்றனர். இதைத் தவிர, திடீரென்று பண்டகத்திலுள்ள மருந்துகளை சோதனை செய்து சரியாக உள்ளதா என்றும் பார்க்கின்றனர். ஆய்வுக்குழுவினரால் பண்டகத்திலுள்ள மருந்துகள் சரியாக உள்ளதா என்றும் இருப்புப் பதிவேடுகளை சோதித்து ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கின்றனர். ஏதேனும் குறிப்பிட்ட நிகழ்ச்சி அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் அவைகள் மீது விசாரணை செய்யப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அடுத்து, மோட்டார் வாகன வரி விதிப்பானது பயணிகள் கட்டணத்தை மேலும் உயர்த்த வகை செய்யும். அதனால் இந்த வரியையும் ரத்து செய்ய வேண்டும்.

மண்ணெண்ணெய் விளக்கு, விளக்கு திரிக்கு வரி விலக்களிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு யாரும் வரி கட்டுவது இல்லை. அமைச்சர் அதற்கு விலக்கு என்று சொல்லியிருக்கிறார். தெருவிலே மண்ணெண்ணெய் சிம்னியை விற்கிறார்கள். அதற்கு யாரும் வரி செலுத்துவதில்லை. இதற்கு விதி விலக்கு என்று கூறுகிறார்கள். ஆகவே எல்லா வரிகளையும் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலங்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்க வேண்டும். இன்றைக்கு மத்திய சர்க்கார் எட்டாவது நிதிக் கமிஷனை அமைத்திருக்கிறது. நம்முடைய அரசாங்கம் அதற்கு அறிக்கை தயார் செய்து கொண்டிருக்கும் என்று கருதுகிறேன். நம்முடைய அரசின் சார்பிலே கொடுக்கப்படுகின்ற அறிக்கையை இந்த மாமன்றத்திலே வைத்து, விவாதித்து, எல்லோருடைய கருத்தையும் பெற்று, அந்தக் கமிஷனுக்கு அனுப்புவதுதான் சரியாக இருக்கும். ஏற்கெனவே நான்காவது நிதிக் கமிஷனுக்கு வரையில் அறிக்கை அனுப்பும் சட்டமன்றத்திலே வைத்து, விவாதித்து, அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, நமக்குத் தேவையான நிதி ஆதாரத்தை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு, மத்திய சர்க்கார் நியாயம் வழங்குவதற்கு ஏற்ற வகையில் தமிழக சர்க்கார் அறிக்கை தயாரித்து, இந்த மன்றத்திலே வைத்து, விவாதித்து, ஒப்புதல் பெற்று அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது இன்றைய தினம் மத்திய அரசின் கொள்கை, மக்கள் நலன்களுக்கு எதிரான கொள்கையில் மாற்றம் காண என்பதிலே மாநில அரசு என்ன முடிவை எடுக்கப் போகிறது? காவேரி நீர்ப் பிரச்சினையா? மத்திய அரசு நமக்கு உதவி செய்யாது. வறட்சியால் வாடுகிறோமா? மத்திய அரசு நமக்கு காலாகாலத்தில் உதவ நடவடிக்கை எடுக்காது. வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறோம். நமக்கு அரிசி வேண்டுமா? மத்திய அரசு ஒதுக்கீடு செய்யாது. இங்கே இல்லை என்றால் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதி கேட்கிறோமா? அதற்கு மத்திய சர்க்கார் அனுமதி கொடுக்காது. அரிசி உபரி இருக்கும் மாநிலங்களிலிருந்து நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் கொள்முதல் செய்ய அனுமதி கேட்கிறோம். அதற்கும் அனுமதி கொடுக்க மாட்டார்கள். இந்தமாதிரி கொள் முதல் செய்கிற அரசுக்கு நிதி உதவி வேண்டும்; ரிசர்வ் பாங்க் அந்த நிதி உதவி செய்ய அனுமதி வேண்டுமென்று கேட்டால் அதற்கும் மத்திய சர்க்கார் அனுமதி கொடுக்காது.



இங்கே மின்சாரப் பற்றாக்குறை கடுமையாக இருக்கிறது. இந்தப் பற்றாக்குறையைப் போக்க புதிய திட்டங்களை நிறைவேற்ற அனுமதி வேண்டுமென்று கேட்கிறோம்; அதற்கும் அனுமதி கொடுக்கமாட்டார்கள். அனல் மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரியைக் கொண்டு வர கப்பல் கேட்டால் அதையும் கொடுக்க மாட்டார்கள். அரிசி கொண்டுவர, நிலக்கரி கொண்டு வர கப்பல் வாங்க வேண்டுமென்று கேட்டால் அந்த கப்பலை வாங்க அனுமதி கொடுக்க மாட்டார்கள். (குறுக்கீடு) சாப்பிடப் போக வேண்டுமென்கிறார்கள். மத்திய சர்க்கார், நம்மை பட்டினி போட்டு சாகடித்துக் கொண்டிருக்கிறது; தமிழக மக்கள் கஷ்டப் படுகிறார்கள். இந்தக் கஷ்டதைப் போக்காமலிருப்பது நியாயமா? நமக்கு உதவியும் செய்ய மாட்டார்கள், நாம் கேட்பதற்கு அனுமதியும் தர மாட்டார்கள். அது மட்டுமல்லாமல் மாநிலங்கள் சொந்தமாக நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ளும் இனங்களிலேயும் கை வைக்க ஆரம்பிக்கிறார்கள். இந்த அடிப்படையில் தான் மத்திய அரசின் கொள்கை இருக்கிறது.

ஆகவே மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இருக்கிற உறவு சம்பந்தமாக, நிதி ஆதாரம் சம்பந்தமாக, பொருளாதாரக் கொள்கை சம்பந்தமாக முழுமையாக ஆய்வு நடத்தும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அதற்கான நடவடிக்கையை மாநில சர்க்கார் எடுக்க வேண்டும். மற்ற மாநிலங்களோடு இணைந்து, மாநில நிதி ஆதாரங்களைப் பெருக்க, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை வகுக்க தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 9-3-1983 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-40 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

ஏதுவுமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, மீன் வளர்ப்போர் அபிவிருத்தி அமைப்புகள் எந்த அடிப்படை யில் அமைக்கப்படுகின்றன ? இதனால் ஏற்படும் நன்மைகள் என்ன ? இதனால் அரசுக்கு எவ்வளவு செலவாகின்றது என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அர்ர்களே, தீவிர மீன் பிடிப்புத் திட்டத்தின் கீழ் மீன் உற்பத்தியை அதிகப்படுத்தவும், அதன் மூலம் அரசின் வருவாயைப் பெருக்கவும், கிராம மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தவும், மைய அரசு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அளிக்குமாறு அரசுக்குப் பரிந்துரை செய்தது. அத னுடைய அடிப்படையிலேதான் மைய அரசு, மாநில அரசு ஆகிய இரண்டினுடைய ஒத்துழைப்பினுடைய அடிப்படையில் இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எந்தெந்த ஊர்களிலே தண்ணீர் நிலையாக குளம் குட்டைகளிலே நிறைந் திருக்கும் என்று கண்டறிந்து எதிலே மீன் வளர்க்க முடியும் என்பதை அறிந்து ஆராய்ந்ததற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதியுடன் முகமைக்காக உறுப்பினர்கள் மீனவர் வகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பிறகு அவர்களுக் குப் பயிற்சி அளித்த பின்னர் இத்திட்டத்திற்கு என தேர்ந் தெடுக்கப்பட்ட குளங்கள், அவர்களுக்கு அதிகபட்சமாக பத்து ஆண்டுக் காலம் வரையில் குத்தகைக்கு விடப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல், அவர்கள் மீன் வளர்ப்பினைத் தீவிரப் படுத்துவதற்காகப். பல்வேறு வகைகளிலே உதவி செய்வதற்கும் அரசு பல்வேறு ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகின்றது. அவர்களுக்கு 75 சதவீத கடனாகவும், 25 சதவீத மானிய மாகவும், 1977-78 முடிய 1,000 ரூபாய் அளித்தது. 1978-79-லிருந்து 1981-82 முடிய 1,250 ரூபாய் அதிலே 75 சதவீதம் கடன், 25 சதவீதம் உதவி, அதைப்போன்றே 1982-83 ஆம் ஆண்டில் 2,000 ரூபாய் வழங்க முடிவெடுக்கப்பட்டு, 75 சத வீதம் கடனாகவும், 25 சதவீதம் மானியமாகவும் அமையும். ஆகவே, அவர்கள் இதைப் பயன்படுத்தி மீன்வளர்க்க வேண்டு மென்பதுதான் இதனுடைய முக்கிய நோக்கம். ஓரளவுக்கு அது பரவலாக நல்ல பலனை அளித்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கடும் வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் குடிப்ப தற்கே போதிய தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற நேரத்தில் மீன் வளர்ப்பதற்குப் போதிய தண்ணீர் குளங்களிலேயும், ஏரி களிலேயும் இருக்கிறதா ? இதனால் மீன் வளர்ப்பதற்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுகிறதா என்பதை அறிய விரும்புகின்றேன்,



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்மிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களே, குடிக்கவே தண்ணீர் இல்லை என்று சொல்லிவிட்டதற்குப் பிறகு மீனுக்கு மட்டும் எப்படித் தண்ணீர் கிடைக்கும் என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. ஆகவே, எந்தெந்த நீர் நிலைகளிலே மீன்வளர்ப் பதற்கேற்ற தண்ணீர் இருக்கிறதோ அங்கு இந்த முகமைகள் பணி யாற்றும். எங்கெங்கு வறண்ட நிலை ஏற்பட்டுள்ளதோ அங்கு மீன் வளர்ப்பு முகமைகள் பணியாற்ற இயலாது. வேறு வகைகளிலே தான், நீர் நிறைந்ததற்கு பிறகுதான் அதிலே பணியாற்ற முடியும்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன் வளர்க்கும் தீவிரத் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திலே ஏற்கெனவே கடந்த ஆண்டு பல்வேறு குளங் களிலே, கல்குளம், தோவாளை போன்ற தாலுக்காக்களிலே எடுத்துக்கொள்ளப்பெற்று, நீர் வற்றாத குளங்கள் இருந்தது. ஆனால் இப்பொழுதுள்ள வறட்சியின் காரணமாக அந்தத் தண்ணீர் பூராவும் வற்றியிருக்கிறது. ஆகவே, அதைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் விவசாயிகள் அந்தப் பணத்தைத் திரும்பக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். எனவே, அந்தப் பணத்தைக் கட்டுவதற்கு நீண்ட காலக் கெடுவிலே ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய குறிப்பு தற்போது இல்லை. நிலைமையை விளக்கி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித் தால், அதை ஆராய்ந்து தக்க முடிவை எடுக்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே இந்த மீன் வளர்ப்பு பயிற்சி ஆரம்பிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த இடத்திலே அது ஆரம்பிக்கப்பட உள்ளது. அதற்காக ஒதுக்கப் பட்ட நிதி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே சென்ற ஆண்டு—நான் முதலிலே குறிப்பிட்டதுபோல் 19–5–1982 அன்று ஆரம்பிக்கப்பட்டது. எந்த எந்த இடம் என்று குறிப்பு இல்லை. ஆனால் நான் முதலில் கூறியபடி நிலையான நீண்ட நாள் தண்ணீர் தங்கக்கூடிய அளவிற்கு எந்தெந்த இடங்கள் இருக் கின்றதோ அந்த இடங்களிலேயும், மீன் வளர்ப்பதற்கு வாய்ப்பு வசதிகள் எங்கே இருக்கின்றதோ அங்கேயும், மீன் வளர்க்கும் உள்ளம் கொண்டவர்கள் யார் யார் இதற்காக முன்வருகிறார் களோ அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த வகை யிலே வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு, 4,07,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, மீன் வளர்ப்பு பயிற்சிக் கழகத்தின் மூலமாக குட்டைப் பகுதிகளுக்கு மட்டும் உதவி அளிப்பது பற்றிச் சொன்னார்கள். ஆனால் ஏரிப்பகுதி களிலே உதவி அளிக்க முடியாது என்று சொல்கின்ற காரணத்தால் அதை மாற்றி ஏரிப் பகுதிகளுக்கும் உதவி அளிக்க அரசு ஆவன செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஆராயப் படவேண்டிய ஒன்று. அதைப் பற்றி ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச் சேர்ந்த காசிமேட்டுப் பகுதியிலே உள்ள கடற் கரைப் பகுதியிலே இரால் மற்றும் உள்ள மீன்களை வளர்ப்பதற் காக இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கான வேலைகளைச் செய்யாமல் நீண்டகாலமாக இருக்கிறது. ஆகவே உடனடியாக அங்கே மீன் வளர்ப்பதற்கான வழிவகைகளைச் செய்வதற்கு எந்த அளவுக்கு திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது உள்நாட்டு நீர் நிலைகளின் தன்மையை பொறுத்ததுதான். ஆகவே உள்நாட்டு குளங்கள், ஏரிகள், குட்டைகள் போன்றவற்றிற்காக முகமைகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. சென்னையைப் பொறுத்தவரை, 10 கோடி ரூபாய்ச் செலவில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டு பெரும்பாலான பணிகள் முடிவடைந் துள்ளன. மத்திய அரசின் உதவியோடு மாநில அரசும் சேர்ந்து இதிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறது. விரைவிலே இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்படும். இன்னும் சில பல மாதங்களில் முடியும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### சென்னையில் 1982 ஆம் ஆண்டு மே மாதத்தில் மீனவ மகளிர்களுக்கு அளிக்கப்பட்ட தனிப்பயிற்சி

*வினா எண் 301—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மீனளத்துறை இயக்குனர் அலுவலகத் தில் 1982 மே மாதத்தில் மீனவ மகளிர்களுக்கு தனிப்பயிற்சி அளிக்கப்பட்டதா?



(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) அதன் நோக்கமென்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் செயல் பட்டுவரும் வங்காள விரிகுடா நிறுவனம் மற்றும் மீன் துறையும் சேர்ந்து 1982 மே திங்களில் மீனவ மகளிர்க்கென ஓர் பயிற்சி வகுப்பு துவங்கியது.

(ஆ) இப்பயிற்சியானது சமூக அமைப்பு உள்ளுரை பயிற்சி திட்டமாகும். மொத்த பயிற்சி காலம் 5 பிரிவுகளாக பிரிக்கப் பட்டு, ஒவ்வொரு பிரிவும் இரண்டு வாரகாலம் நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி காலத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் பற்றி கல்வியளிக்கப்படுகின்றது :—

1. மீனவர் சமுதாய அமைப்பு.
2. மீன்களை கையாளுவது மற்றும் மீன்களை பதப் படுத்துதல்.
3. சுகாதாரம் மற்றும் குடும்ப நல திட்டம்.
4. அரசு நடைமுறைப்படுத்தி வரும் மீனவர் நல திட்டங்கள்.
5. தலைமை பொறுப்பேற்கும் பயிற்சி.

(இ) மீனவ மகளிரிடையே விழிப்புணர்ச்சி உண்டாக்கி அரசாங்கத்திற்கும் மீனவ சமுதாயத்திற்கும் இடையே பால மாக அமைந்து அரசுத் திட்டங்களை நன்கு புரிந்து பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ளவும், அவ்வப்போது அடிப்படை தேவைகளை அரசிடமிருந்து கேட்டுப் பெற அணுக வேண்டிய முறை பற்றியும் கற்பிப்பதுதான் இப்பயிற்சியின் நோக்கம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர் களே, இதுபோன்ற பயிற்சி சென்னையைத் தவிர தமிழ்நாட்டில் வேறு இடங்களில் நடத்த அரசுக்கு உத்தேசம் உண்டா? அந்தப் பயிற்சிக் காலத்தில் ஏதாவது உதவித் தொகை அளிக்கப்படுகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னையிலே பரிட்சார்த்த மாக நடத்தப்பட்டு வருகிறது. ஓரளவுக்கு பலன் ஏற்பட்டது என்று ஆராய்ந்ததற்குப் பிறகு பிற இடங்களில் தொடங்குவது பற்றி ஆராய்வோம். ஆகவே இதிலே அவர்களுக்கு இலவசமாக 3 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியில் சேர விரும்புபவர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருக்க

வேண்டும். கல்யாணம் ஆனவர்களாக இருக்க வேண்டும். 40 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஏழை எளிய வர்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டவர்களாக இருக்கவேண்டும். தங்கிப் படிப்பதற்கு விருப்பம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். பெண்கள் கூட்டத்திலே கலந்து கொண்டு புதியவற்றை கற்றுக் கொள்ள ஆர்வம் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார் கள். அவர்களுக்கும் ஏதேனும் உதவித் தொகை தரப்படுகிறதா என்ற விவரம் என்னிடம் இல்லை.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர் களே, மற்ற இடங்களிலே, குறிப்பாக ராமேஸ்வரம் போன்ற பகுதியிலே உள்ள கடற்கரைப் பகுதியில் இத்தகைய பயிற்சி நடத்தப்படுமா ? இன்னும் பெண்கள் ஆர்வத்தோடு கலந்து கொள்ளும் வகையில் இந்தப் பயிற்சிக் காலத்தில் உதவித் தொகை அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பிற இடங்களில் பெண்களுக்கும் இப்படிப் பட்ட பயிற்சி அளிக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக் கிறது. ஆனால் இப்போது பிற இடங்களில் துவக்குவதற்கான செயற்குறிப்பு இல்லை. ஆகவே அவர்களுக்கு உதவித் தொகை இப்போது தரப்படுகிறதா என்ற விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

(முற்பகல் 9—10)

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீனளத் துறையின் மூலமாகப் பயிற்சி அளிப்பதற்குத் திருமணம் ஆனவர்கள் 40 வயதுக்கு உட்பட்டவர் களாக இருக்கவேண்டுமென்று அமைச்சரவர்கள் தெரிவித் தார்கள். அப்படி திருமணமானவர்கள் என்றால், திருமணமாகி கணவனை இழந்த விதவைகளும் இந்தப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். திருமணமாகி இருக்க வேண் டும் என்பது தான் கண்டிஷனே தவிர கணவன் உயிரோடு இருக்க வேண்டுமென்பது நிபந்தனையாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 302, 303 மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.



## வறுமை நிலையிலுள்ள கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டம்.

*வினா எண். 104—திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. எஸ். இராசாராமன், திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு சிரம நிலையில் உள்ள கலைஞர் களுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் எந்த தகுதி அடிப்படையில், வழங்கப்படு கிறது ?

(இ) எவ்வளவு பேர் பயனடைகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(ஆ) இயல், இசை, நாடகம், நாட்டியம், கிராமியக் கலைகள், ஓவியம், சிற்பம், திரைப்படம், இசைக் கருவிகள் மற்றும் நுண் கலைகள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பணியாற்றி 58 வயது பூர்த்தியடைந்த கலைஞர்கள் வருமானமின்றி வறுமை நிலையி லிருந்தால், கலைத் தகுதியின் அடிப்படையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பரிந்துரையின்கீழ் அரசு உதவி மான்யம் அளித்து வருகிறது.

(இ) தற்பொழுது 1416 கலைஞர்கள் மாதம் ரூ. 150/ வீதம் உதவி பெற்று வருகிறார்கள்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே மொத்தம் 150 ரூபாய் வீதம் மான்யம் பெறுகிறார்கள் என்று அமைச்சரவர்கள் தெரிவிக்கிறார்கள். மொத்தம் இதற்கு ஏற்கெனவே விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர் ? அரசாங்கம் அந்த விண்ணப்பித்த அத்தனை பேருக்கும் இந்த உதவி அளித் திருக்கிறார்களா ? அல்லது அதிலே சிலரைத் தேர்ந்தெடுத்து அளித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதிலே நிறைய பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள். ஆனால் அத்தனை பேருக் கும் தருவதாக இல்லை. வறுமை நிலையில் இருக்கிறவர்கள் என்ற அடிப்படையில்தான் அவர்களைத் தேர்ந்தெடுக் கிறோம். இதுவரையில் வருமான அளவு ரூ. 150 என்று இருந் தது. 1980ஆம் ஆண்டுக்குப் பிறகு, இந்தத் திட்டம் மாநில அரசுத் திட்டமாக மாற்றி அமைக்கப்பட்டபிறகு, ரூ. 400 ஆக உயர்த்தியதன் மூலம் நிறைய பேருக்கு கிடைக்கிற வாய்ப்பை தந்திருக்கின்றோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : விண்ணப்பித்தவர்களை தேர்ந்தெடுப்பதற்கு, ஏதாவது தனியாக ஒரு கமிட்டி அமைக்கப் பட்டு இருக்கிறதா அல்லது அரசு அந்த அதிகாரிகளைத் தனி யாகத் தேர்ந்தெடுக்கிறார்கள் அல்லது பரவலாக கிடைக்க வேண்டியவர்களுக்கு கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. அதை அரசு கவனிக்குமா ? அதற்கு அரசுக்கு ஆண்டுக்கு என்ன செலவாகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நிறைய பேர் விண்ணப்பித் திருக்கிறார்கள். இதிலே குறிப்பிடத்தக்க ஒரு தகுதி என்று பார்க்கின்றபோது கலைத்துறையிலே ஈடுபாடு என்று இருக்கின்ற காரணத்தால் ஒரு நாளைக்கு ஒரு நாடகத்திலே நடித்தவர்கள் கூட கலைத்துறையிலே ஈடுபட்டதாக சொல்லக் கூடிய வாய்ப்பு எல்லாம் இருக்கிறது. விண்ணப்பங்கள் செய்யும் அத்தனை பேருக்கும் தர முடியாது. இதற்கு கமிட்டி வைத்திருக் கிறோம். அந்த கமிட்டியிலே தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற செயலாளர், தமிழ்நாடு திரைப்படக் கல்லூரியின் தலை வரை தலைவராகவும், தமிழ்நாடு நாடக நடிகர் சங்கத் தலை வர், தென்னிந்திய வண்ணங்கூட்டுதல் குழுவின் தலைவர், தமிழ் நாடு ஓவிய நுண்கலைக் குழுவின் உறுப்பினர், செயலர் ஆகிய வர்கள் அடங்கிய உறுப்பினர்கள் கொண்ட உயர்மட்டக் குழு பரிசீலனை செய்கிறது. அவர்களுடைய வறுமை நிலையைப் பற்றி அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் அறிக்கை தருகிறார்கள். இவர்களை வைத்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வறுமை நிலையிலே இருக்கின்ற கலைஞர்களுக்கு இந்த அரசு உதவி செய்து கொண்டிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர்களுக்கு 58 வயதுக்கு மேலே ஒய்வூதியம் கொடுப்பதாக அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். கலைஞர்கள் தாங்கள் திறமை மிகுந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு அதிர்ஷ்டம் இல்லாமலோ அல்லது வேறு வகையில் ஆதரவு இல்லாத காரணத்தினால், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர் களுக்கு அதற்கு முன்னதாகவே வயது வரம்பைத் தளர்த்தி, அவர்களுக்கு ஒய்வூதியம் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது அப்படிப் பட்ட எண்ணம் இல்லை. நாம் அவர்களுக்கு உதவி செய்வதே அவர்களுக்கு உதவி செய்கிறோம் என்பது மட்டுமல்லாது, அவர்களைப் பார்த்து இளைஞர்களாக இருக்கிறவர்கள், அவர் களே இப்படி இருக்கின்றார்களே, இனி நாம் இந்தத் துறையிலே போய் இறங்கக் கூடாது என்ற மனச் சோர்வு அடையாமல் இருக்க, அரசு காப்பாற்றும் என்ற ஒரு நம்பிக்கையைத் தருவதற்குத்தான் இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.



திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த பென்ஷனை பெறும் கலைஞர்களிலே, நம்முடைய தமிழ்நாட்டிலே பழம்பெறும் கலையாக உள்ள வில்லி சைக் கலையில் ஈடுபட்டு இருந்து, இப்போது வறுமையில் இருக்கும் பலர் மனுசெய்து இருந்தும், அவர்களுக்குக் பென்ஷன் கொடுக்கப் படவில்லை. வில்லிசைக் கலைஞர்களுக்கும் பென்ஷன் தற்போது வழங்கப்படுகிறதா? இல்லையென்றால் இனியாவது அந்தக் கலையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அந்தப் பென்ஷன் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கிராமக் கலை என்ற அடிப்படையில் அவர்களும் பென்ஷன் பெறத் தகுதிபெற்றவர்கள்தான். அப்படிப்பட்டவர் களுக்குத் தரப்பட வேண்டுமென்ற விருப்பம் அரசுக்கும் இருக் கிறது. குறிப்பாக யாருக்காவது நியாயமான முறையில் கிடைக்க வேண்டிய நிலை இருந்து கிடைக்க வில்லை என்றால், அது பற்றிய விவரம் தெரிவித்தால் நான் அதைப்பற்றி பரிசிலனை செய்யச் சொல்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, வறுமை நிலையில் உள்ள தமிழ் எழுத்தாளர்களுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும், தமிழ் கலைஞர்களுக்கும் இந்தப் பென் ஷன் அளிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அவர்களுக்காக வேறு ஒரு திட்டம் செயல்பட்டு வருகிறது. தமிழ் அறிஞர்களுக்கு அதன் மூலம் பென்ஷன் தரப்பட்டு வருகிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிரம நிலையில் உள்ள கலைஞர்களுக்கு இப்போது பென்ஷன் 3 ஆண்டுகளுக்கு மட்டும் தான் வழங்கப்படுவதற்கு உத்தரவிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, அவர்கள் வாழ்நாள் முழுவதும் இந்தப் பென்ஷன் பெறுவதற்கு அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 1980-ஆம் ஆண்டுக்கு முன்பு இது ஒரு ஆண்டுக்குத்தான் தரப் பட்டு வந்தது. அதற்குப் பிறகு முழுமையாக இதை மாநில அரசு திட்டமாக ஏற்றுக்கொண்டபிறகு செய்த முதல் மாற்றம் அந்த ஓராண்டு என்பதை 3 ஆண்டு என்று கொண்டு வந்து இருக்கிறோம். அந்த 3 ஆண்டுகாலத்திற்குப் பிறகு அவர்கள் மறுபடியும் விண்ணப்பித்தால், அந்த நேரத்தில் அவர்களுக்கு உதவி அளிக்கவேண்டிய நிலை இருக்கிறது என்று அரசு கருதி னால், மறுபடியும் அதை அளிக்கலாம்.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தெருக்கூத்து கலைஞர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை விண்ணப்பிப்பது என்பது முடியவில்லை. அவர்கள் படிப்பு அறிவு இல்லாதவர்கள். அதனால் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்குத் தொடர்ந்து கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு அவர்களிடமிருந்து என்னென்ன விவரங்கள் தேவையோ அதை அரசு பெறுவதற்கு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் இதற்காகப் பெரிய அளவிலே விண்ணப்பங்கள் எதையும் பூர்த்தி செய்யவேண்டும் என்று இல்லை. எங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்காக சில விவரங்களை அவர்கள் கலெக்டருக்கு தெரிவித்தால் அவர்கள் அவர்களைப் பற்றிய தகவல்களை சேகரித்து, அவர்கள் வறுமைநிலையில் இருக்கிறார்களா என்பதைப் பரிசீலனை செய்து, அந்த அடிப்படையில் அவர்களுக்கு உதவி செய்யப்படுகிறது. அந்த அளவிற்குக் கூட விவரங்கள் தர முடியவில்லையென்றால், அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்யும் வாய்ப்பைத் தரமுடியாது. அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் இன்று கிராம அளவில் இருந்துகொண்டு, பொதுச்சேவை செய்துவருகிறார்கள். அப்படிப்பட்ட நண்பர் அந்தக் கலைஞர்களுக்கு கிடைக்காத நிலை இன்று இல்லை என்பது என்னுடைய திண்ணமான எண்ணமாகும்.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்தில் உள்ள வறுமைக்கோட்டிற்குக் கீழேவாழும் கலைஞர்கள் இந்தப் பென்ஷன் பெறுவதில் கஷ்டமான நிலை இருக்கிறது. ஆகவே, மாவட்ட அளவிலே இந்த நிதியுதவி செய்யக்கூடிய அளவிற்கு ஒரு குழு அமைத்து, அதன் மூலம் இந்த உதவியைச் செய்ய அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இப்போது மாநில அளவிலே இந்தக் குழு இருந்து செயல் பட்டு வருகிறது. இப்போது கலை வளர்ச்சிக்காக இருக்கும் இயல், இசை, நாடக மன்றமும் மாநில அளவிலே இருந்து செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவிலே ஒரு குழு இருந்து செயல்பட்டு இந்தக் கலைகளை வளர்ப்பதற்காக ஒரு குழு இருக்க வேண்டும் என்று அரசும் கருதுகிறது. அதைப்பற்றி இப்போது நாம் பரிசீலித்து வருகிறோம். ஒரு வேளை அந்தக் குழு அமையுமானால் இத்தகைய குறைகளைப் போக்குவதற்கு முடியும்.



## மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்களை மாவட்டத்திற்கு ஒன்று வீதம் ஏற்படுத்தும் திட்டம்.

* வினா எண் 105—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அதிக பள்ளிகளை தன் ஆளுகையில் வைத்துள்ள மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலங்களை வருவாய் மாவட்டத்துக்கு ஒன்று வீதம் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** புதுக்கோட்டை, தர்மபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்கள் ஏற்கனவே திறக்கப்பட்டுவிட்டன. இந்த மாவட்டங்களில் மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்படும் கருத்துருக்கள் வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப ஆராயப்படும்.

## திருப்புவனத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி துவங்கும் திட்டம்.

* வினா எண் 106—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுகா திருப்புவனத்தில் அரசு உயர் நிலைப்பள்ளி ஒன்று நிறுவ செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (ஆ) : திருப்புவனத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி ஒன்றை 1982-83-ம் கல்வியாண்டு முதல் துவக்க தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுமதி வழங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(முற்பகல் 9-20)

**திரு. செ. இராமலிங்கம் :** தலைவரவர்களே, இது ஓராண்டுக்கு முன்னால் எழுப்பப்பட்ட கேள்வி. தற்போது அந்தப் பள்ளி நடைபெற்றாலும் போதிய கட்டிட வசதி, விளையாட்டு மைதானம் இல்லாத நிலை இருக்கிறது. அதற்கு அருகாமையில் 'சிப்காட்' நிறுவனத்திற்கு என்று 100 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. தற்போது அந்த நிறுவனம் அதில் ஒரு ஏக்கர் நிலத்தைதான் பயன்படுத்தி வருகிறது. எனவே, அந்த இடத்தில் அந்தப் பள்ளிக்கான விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒரு பள்ளி ஆரம்பிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால்தான் பள்ளி தொடங்க அனுமதி அளிக்கிறோம். ஆனால், இப்படிப்பட்ட சில சந்தர்ப்பங்களில் அந்த நிபந்தனைகளை பின்னால் பூர்த்தி செய்துவிடுவார்கள் என்று கருதி, அனுமதி அளிக்கப்படுகிறது. ஒரு பள்ளிக்கூடம் தொடங்க வேண்டுமென்றால் போதிய இடவசதி, கழிப்பிட வசதி செய்து தரவேண்டும்; அந்தப் பள்ளிக்கு புதிய கட்டிடம் தேவைப்பட்டால் அதைக் கட்டுவதற்கு இடவசதி செய்து தர வேண்டும்; விரிவாக்க இட வசதிக்காகவும் மற்ற வசதிகளுக்காகவும் 12,500 ரூபாய் கட்ட வேண்டும்; அந்தப் பள்ளியின் நிர்வாகப் பங்கு தொகையாக 10,000 ரூபாய் கட்ட வேண்டும்; விளையாட்டு மைதானத்திற்கு இடவசதி செய்துதர வேண்டும்; 5 ஏக்கர் நிலத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிபந்தனைகளின் பேரில்தான் பள்ளி தொடங்க அனுமதி தந்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிலே ஆர்வம் எடுத்துக்கொண்டு, நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, திருபுவனம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்து அந்தச் சங்கத்தின் பெயரை அந்தப் பள்ளிக்கு வைக்க வேண்டுமென்று கேட்டு கோரிக்கை ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா ? அப்படி வந்திருந்தால் அந்தப் பணத்தை உடனடியாகப் பெற்றுக்கொண்டு, அந்தப் பெயரை வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ? அது மட்டுமல்லாமல் அந்தப் பள்ளிக்கு கணித ஆசிரியர், அறிவியல் ஆசிரியர் பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளன. அந்த இடங்கள் உடனடியாக நிரப்பப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவைபற்றி பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, ஒரு உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்படுவதற்கு 5 ஏக்கர் நிலம், 12,500 ரூபாய் எல்லாம் அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் கொடுக்க வேண்டுமென்று விதி இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சில இடங்களில் 5 ஏக்கர் நிலம் பெறுவதில் பெரும் சிரமம் இருக்கிறது. 12,500 ரூபாய் கட்டுவதும் சிரமமாக இருக்கிறது. அதனால் பல கிராமங்களில் உயர்நிலைப்பள்ளிகளை ஆரம்பிக்க முடியவில்லை. அதைப் போக்க, அரசு அந்த உதவிகளை நேரடியாக செய்கின்ற வகையிலே உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட பிரச்சனைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த சட்டமன்றத்திலே வந்தபோது அவ்வப்போது நான் ஒரு பதிலை தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். மக்களுடைய ஈடுபாடு. மக்களுடைய பங்கு அதிலே இல்லை என்றால் அந்தப் பள்ளிகூடத்தினால் அந்த மக்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லாமல் போய் விடும். அந்தப் பள்ளிகூடத்திற்கும் அங்கே இருக்கிற பொதுமக்களுக்கும் தொடர்பு இல்லாமல் போய்விடும். ஆகவேதான் பள்ளிக்கூடம் தொடங்க அந்தப் பகுதியில் உள்ள மக்களே ஒரு குழு அமைத்து, அந்தக் குழுதான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்ற ஒரு முறையை நாம் வைத்திருக்கிறோம். இதுவரையில் அந்த முறை வெற்றிகரமாகத்தான் இருக்கிறது. எங்காவது ஒரு இடத்தில் ஒரு பிரசிச்னை இருந்தால் அதை தனிப்பட்ட முறையில் ஆராய்ந்து பார்த்து, அதற்கு உரிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு ஊரின் பிரச்சனையை எடுத்துக்கொண்டு, இப்போது நல்லமுறையில் நடைபெற்று வரும் ஒரு நடைமுறையை மாற்றியமைக்க வேண்டுமென்று விரும்புவது சரியல்ல.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, பொதுமக்கள் பங்கு கொண்டால் நிச்சயமாக இப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேறும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பொதுமக்கள் சார்பிலே 20,000 ரூபாயும், 10 ஏக்கர் நிலமும் கொடுத்து பல்லாண்டு காலம் ஆனபிறகும் ஒரு பள்ளி ஆரம்பிக்கப்படாமல் இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அதற்கு வேறு என்ன ஏற்பாடு செய்ய வேண்டும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதற்கு இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று சொல்லுகின்ற போது, பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்படுகின்ற சூழ்நிலையில் நாங்கள் ஆங்காங்கே இருக்கிற சூழ்நிலைமைகளையும் ஆராய்ந்து பார்த்துதான் அனுமதி தரவேண்டிய நிலை இருக்கிறது. ஏனென்றால் அதற்குப் பக்கத்திலே ஏற்கெனவே ஒரு பள்ளிக்கூடம் இருந்து, இந்தப் பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதினால் அந்தப் பள்ளிக்கூடம் பாதிக்கப்படக்கூடிய நிலை, மாணவர்கள் எண்ணிக்கை குறையக் கூடிய நிலை ஏற்படுமானால் வீணாக இந்த இரண்டு பள்ளிக்கூடங்கள் வகையிலும் இரண்டு செலவுகள் அரசுக்கு ஏற்படும். இப்படிப்பட்ட சூழ்நிலையும், வேறு ஏதாவது காரணமும் இருந்தால் அதன் அடிப்படையிலேதான் அனுமதி நிறுத்தி வைக்கப்படுகின்ற நிலைமை ஏற்படுகிறதே தவிர மற்றபடி கேட்கின்ற பள்ளிகளுக்கு தேவையிருந்தால் தருகிறோம். சென்ற ஆண்டு கூட 50 பள்ளிகளுக்கு அனுமதி தந்திருக்கிறோம்.

திரு. இ. ரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் உயர்நிலைப்பள்ளி கீற்றுக் கொட்டகைகளில் இயங்குகின்றன. அரசாங்கத்தில் போதுமான நிதி ஒதுக்கப்பட்டு, அவற்றுக்கு நிரந்தரமான கட்டிடம் கட்டிக்கொடுக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இதை நாம் வேறு வகையில் கடனாகப் பெறுவதற்கு ஒரு முயற்சி மேற்கொண்டு வருகிறோம். இப்போதிருக்கிற நிலைமையில் நமக்கு 100 கோடி ரூபாய் தேவைப்படுகிறது, குறைந்த பட்ச வசதிகளை மட்டும் செய்து தருவதற்காக. அவ்வளவு பெரிய தொகையைக் கடனாகப் பெறுவதற்கு மத்திய அரசு எல். ஐ. ஸீ. நிறுவனமோ அல்லது வேறு ஏதாவது நிதி நிறுவனமோ முன்வருமேயானால் நாம் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளமுடியும் என்று கருதி அவர்களை அணுகிக்கொண்டு வருகிறோம். அவர்கள் முடிவாக இல்லை என்று சொல்வார்களானால் அதற்குப் பிறகு மாநில அரசு என்னசெய்ய வேண்டும் என்பதுபற்றிச் சிந்திக்கும்.

தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்கான விதி முறைகள்

*வினா எண் 107—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழாசிரியர்கள் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி பெறுவதற்கு அரசு விதித்துள்ள விதிகளை தளர்த்த தமிழ்நாடு மேனிலை தமிழ்மொழி ஆசிரியர் கழகம் அரசைக் கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) : தமிழாசிரியர்கள் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற அவர்கள் பி. டி. பட்டம் பெற்றபின் உள்ள பணிக் காலமே கணக்கில் எடுக்கப்படுகிறது. இதை மாற்றி, முதனிலைத் தமிழாசிரியர்களாக பணியாற்றிய காலத்தையும் சேர்த்து கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என திருச்சி மாவட்டம் இலால்குடி தமிழகத் தமிழாசிரியர்கள் கழகம் மற்றும் சேலம் மாவட்டத் தமிழாசிரியர்கள் கழகம் கோரிக்கை அனுப்பியது. இக்கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு அது ஏற்க இயலாது என முடிவு எடுக்கப்பட்டது.



டாக்டர் கே. சமரசம் : இன்றையதினம் இந்தியத் துணைக் கண்டத்தில் இந்தி படித்தால் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் பணிக்கு வாய்ப்பிருப்பதாகவும் ஆங்கிலம் படிக்கிற நிலையில் அத்தகைய வாய்ப்பு மிகவும் அதிக அளவில் இருப்பதாகவும் இருக்கிற அதே நேரத்தில் தாய்மொழியாம் தமிழ் படிப்பதற்கு ஊக்கம் அளிக்கிற வகையில் மற்ற விதிகளை தளர்த்தி முன்னுரிமை அளிக்க ஏன் பரிசீலனை செய்யக்கூடாது என்பதற்கு விளக்கம் அளிக்க வேணடுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :ஒரு பொறுப்புக்கு என்றிருக்கிற தகுதிகளின் அடிப்படையில் அவர்களுடைய அனுபவத்தின் அடிப்படையில் சமமான தகுதி உடையவர்களுக்கு, சமமான அனுபவம் உடையவர்களுக்கு தரப்படுகிற வாய்ப்புகள் பற்றித்தான் அந்த அடிப்படையில்தான் பரிசீலிக்கிறோமே தவிர தமிழ், ஆங்கிலம், கணக்கு என்ற நிலையில் நாம் வைத்து பரிசீலிப்பதில்லை. தமிழ் சொல்லித் தருகிறவர்களும், தமிழன் தான், ஆங்கிலம் சொல்லித் தருகிறவர்களும் தமிழன்தான், கணக்கு சொல்லித் தருகிறவனும் தமிழன்தான். ஆகவே தமிழ் ஆசிரியர் பதவி என்பது தமிழனைப் பொருத்ததேதவிர வெறும் மொழியைப் பொறுத்ததல்ல, அல்லது கணக்கு. அல்லது ஆங்கிலத்தைப் பொருத்ததும் அல்ல,

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, படிப்புக் காலமும் பயிற்சிக் காலமும் மற்ற ஆசிரியர்களுக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கும் ஒரேபோல் இருக்கிற காரணத்தினால்தான் தமிழ் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர் பதவி ஏற்பதற்கு அதிகக் காலம் வேண்டுமென்று சொல்வது தவிர்க்கப்படுமா என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படி சம்மந்தம் இல்லாததுதான் இந்தப் பிரச்சினை எழும்பவே காரணம். குறிப்பாக பி.டி. பயிற்சி என்பது ஒரு ஆண்டுக் காலம், அதே நேரத்தில் தமிழ் ஆசிரியருக்கான பயிற்சிக் காலம் ஆறு மாத காலம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்களில் தமிழ் சொல்லித் தருபவர்களும் தமிழன்தான் இந்தி சொல்லித் தருபவர்களும் தமிழன்தான், ஆங்கிலம் சொல்லி தருபவர்களும் தமிழன் தான் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவி கொடுக்க வேண்டுமென்ற கருத்தை நமது இதய தெய்வம் அண்ணா அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புனர்பரிசீலனை செய்து தமிழ் ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவி கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 மார்ச் 7

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: நமது இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்குப் பின்னால் நீங்கள் ஏழாண்டுக் காலம் ஆட்சியில் இருந்தபோது இந்தக் கோரிக்கையை நாங்கள் ஏற்றுக்கொண்ட அளவிற்குக்கூட நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பேருந்துகளைத் தாக்குவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க தனிச் சட்டம்

*வினா எண். 304—திருவேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவு — சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பயணிகள் செல்லும் பேருந்து மீது கல்லெறிவோர் மீதும், பேருந்தை தாக்குவோர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க தனிச் சட்டம் கொண்டு வரப்படுமா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: இது குறித்து புதிதாகக் கொண்டுவரப்பட்ட சட்டம், சட்டம் 29/82, 15—5—1982 ஆம் நாளிலிருந்து அமலில் உள்ளது.

திரு கோவைத்தம்பி: இப்படிப்பட்ட பயணிகள் செல்லும் பேருந்துகள் மீது ஆர்ப்பாட்டங்கள், ஸ்ட்ரைக் என்ற பெயரால் கல் எறிபவர்கள் மீது சிறை தண்டனை விதிப்பதோடு கூட அந்தப் பேருந்துகளுக்கான தொகையை, நஷ்டமான தொகையை அவர்கள் சொந்த சொத்தை ஜப்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: 1982 ஆம் ஆண்டு 29-வது சட்டத்தில் ஐந்தாவது பிரிவில் அதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திரு என். எஸ். வி. சித்தன்: பொதுச் சொத்துக்களை நாசம் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமே. தற்போதுள்ள சட்டத்தில் அதற்கு வழிவகை இருக்கிறதா? நமக்கு இன்று இருக்கிற புதிய சட்டம் மாதிரி இந்தியாவில் வேறு ஏந்த மாநிலத்திலாவது இயற்றப் பட்டிருக்கிறதா?



1983 மார்ச் 7]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற இந்தியன் பீனல் கோட் சட்டத்தில் இதுபோன்ற தவறுகளுக்கெல்லாம் தக்க நடவடிக்கை எடுக்க போதிய ஷரத்துக்கள் இல்லை என்ற காரணத்தினால் தான், இந்தப் புதிய சட்டம் கொண்டு வரப் பட்டது. மற்ற மாநிலங்களில் இப்படி இருக்கின்றதா என்றால், அதற்கான தகவல் என்னிடம் தற்போது இல்லை.

(முற்பகல் 9-30)

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் சட்டமன்றத்திலே கொண்டுவந்த காலத்தில், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் நடக்கும்போது, அவர்கள் ஊர்வலம் நடத்தும் போது, ஏற்படுகின்ற பிரச்னையாக, அப்போது பேருந்துகள் போகின்ற போது, கற்களை எடுத்து தாக்குதல் நடத்துவதை தடுப்பதற்காகவும், பயணிகளின் பாதுகாப்புக்காகவும் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்பட்டது. எந்தத் தொழிலாளர்களும், ஊர்வலங்கள் நடத்துகின்ற போது, பொது ஜன சொத்தின் மீதோ, ஓடுகின்ற பேருந்துகள் மீதோ கற்களை எறிவது அவர்கள் வேலையல்ல. ஆனால், பொது ஜனங்களுக்கும், போலீசாருக்கும் இடையே தகராறு ஏற்படும்போது, அந்தத் தகராறு அடிதடியாக மாறும்போது, கல் எறி நடக்கும்போது, அவைகள் பஸ்கள் மீது விழுகின்றன. அப்படியானால், ஜனங்கள் மீது மட்டும் நடவடிக்கை என்றில்லாமல், அதற்குக் காரணமாக இருக்கின்ற அந்தப் போலீசார்கள் மீதும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகின்ற போது, பேருந்துகளின் மீது கல் எறிவது, அப்போது தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் இரண்டாவது பிரிவில், whoever commits the mistake என்றிருப்பதால், தொழிலாளர்கள் வன்முறையில் இறங்கி, பேருந்துகளைத் தாக்குகின்றபோது, பயணிகளுடைய சொத்துக்களுக்கும், உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கின்றபோது, அது காவல் துறையைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, மற்றவர்களாக இருந்தாலும் சரி, சட்டப்படி பொதுச் சொத்துக்களுக்கும், உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்துகின்ற வன்முறையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதே ஒழிய, தொழிலாளர்கள் மீது அல்ல.

திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகள் செல்லும், பேருந்துகள்மீது தாக்குதல் நடத்துவோர் மீது நடவடிக்கை எடுக்க சட்டம் கொண்டு வரப் பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால், நாளதுவரையில் இந்தச் சட்டத்தின்படி ஏதாவது வழக்குகள் தொடரப்பட்டிருக் கின்றனவா ? தொடரப்பட்டிருக்குமானால், எத்தனை வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 9 மாவட்டங்களில் ஒட்டு மொத்தமாக இதுகாறும் 54 வழக்குகள் பதிவு செய்யப்பட் டுள்ளன.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982, ஜனவரி 19 ஆம் தேதி ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., ஆகிய இரண்டு சங்கங்களும் இந்தியா முழுவதும் பந்த் நடத்தின. அப்போது எந்தப் பேருந்தும் சேதம் அடைய வில்லை. ஆனால், பல்வேறு போராட்டங்கள் நடத்தும் போது, சொத்துக்கள் சேதம் அடைந்திருக்கின்றன. எந்தெந்தக் கட்சி கள் போராட்டங்கள் நடத்தும்போது, சொத்துக்கள் சேதம் அடைந்தன என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட முன்வருவார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிலாளர்கள் இதுபோன்று சொத்துக்களுக்கு சேதம் விளை விக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். அரசியல் கட்சிகளின் மீது நடவடிக்கை எடுக்க சாத்தியமில்லை. வன்முறையாளர் கள்மீது, அதாவது சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்போர், அல்லது உயிருக்கு ஆபத்து விளைவிப்போர்மீது நடவடிக்கை எடுப்பதற்காக கொண்டு வரப்பட்ட சட்டம் இது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் பயிர்பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம்

*வினா எண் 305—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யுளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் அமுல் படுத்தப்படுகின்றதா ?

(ஆ) இல்லையெனில், உடனடியாக மேற்படி திட்டம் அமுல்படுத்தப்படுமா ?



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தை தமிழகம் முழுவதும் அமுல்படுத்துவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக மொத்தம் 42 வட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. படிப் படியாக இந்தத் திட்டம் மேலும் பல பகுதிகளுக்கு விரிவாக்கப் படும்.

இ. எஸ். ஐ. திட்டத்தை விஸ்தரிக்கும் திட்டம்.

* வினா எண் 306—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி புறநகர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டத்தை நீட்டிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா—

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

(இ) எப்பொழுது செயல்படும் ?

(ஈ) எவ்வளவு பேர்கள் பயன் அடைவார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி புறநகர் பகுதிக்கு ஈட்டுறுதி திட் டத்தை நீட்டித்து அங்குள்ள தொழிலாளர்களை நாகர்கோயி லில் ஏற்கனவே இயங்கிவரும் இ.எஸ்.ஐ. மருந்தகத்தோடு இணைத்து அவர்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக 5–8–1981 ஆம் நாள் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(இ) இத் திட்டம் 25–4–1982 முதல் செயல்பட்டு வருகின்றது.

(ஈ) சுமார் 663 தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத் தினரும் பயன் அடைவார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி புறநகர் பகுதிக்கு இத்திட்டத்தை அமுல் நடத்துவது போன்று, இதன் பக்கத்தில் இருக்கக் கூடிய, வேறுசில தொழிலாளர்கள் இருக்கக்கூடிய பகுதிகளையும் இந்த திட்டத்தின்கீழ் கொண்டு வர, குறிப்பாக தக்கலை, மேட்டுக்கலை போன்ற இடங்களிலுள்ள தொழிலாளர்களையும், இதன்கீழ் கொண்டு வர அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாக கவனிக்கலாம்.

* **வினா எண் 307—திரு. ஜே. ஹேமச்சந்திரன்** : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ.எஸ்.ஐ. திட்டம் 1982 ஆம் வருடத்தில் எந்தெந்த பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும் ?

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தின் எந்தெந்த பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இ.எஸ்.ஐ. திட்டத்தை கீழ்க்கண்ட பகுதிகளுக்கு விஸ்தரித்து அரசு ஆணைகள் வெளியிடப்பட்டன :—

(1) திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டம்.

(2) மானாமதுரை, இராமநாதபுரம் மாவட்டம்.

(3) வீரவநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.

(4) உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.

(5) அரியூர், வடஆற்காடு மாவட்டம்.

(6) செங்குன்றம், செங்கல்பட்டு மாவட்டம்.

(7) ஓசூர், தர்மபுரி மாவட்டம்.

வட ஆற்காடு மாவட்டத்தில் வாலாஜா பகுதிக்கு இத்திட்டத்தை நீட்டிக்கும் ஆணை விரைவில் வெளியிடப்படும்.

(ஆ) கன்னியாகுமரி புறநகர் பகுதிக்கு ஈட்டுறுதி திட்டம் விரிவு படுத்தப்பட்டு 25–4–1982 முதல் செயல்பட்டு வருகின்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏறத்தாழ 25,000-க்கும் அதிகமான முந்திரித் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதேபோல கயிறு தொழிலிலே ஈடுபட்டிருக்கக்



கூடிய பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதேபோல மெக்கானைஸ்டு பேக்டரியும் அங்கே இருப்பதன் காரணமாக அதில் பணிபுரியும் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஆகவே, அந்தப்பகுதியிலுள்ள தொழிலாளர்களையும் இந்த ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி ஆழ்ந்து பரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் கொண்டு வந்திருக்கும் பகுதிகளில் ஆரல்வாய் மொழி பகுதியில் உள்ள நூற்பு ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் மருத்துவ வசதிகள், இன்றையதினம் அருகில் உள்ள மருத்துவமனைகளிலிருந்து மொபைல் வேன் மூலமாக வழங்கப்படுகிறது. அது அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. ஆகவே, அந்தத் தொழிலாளர்களுக்கு அந்தப் பகுதிகளிலேயே, அதாவது ஆரல்வாய் மொழி, தக்கலை போன்ற பகுதிகளிலேயே தனியாக, தொழிலாளர் நல மருத்துவமனைகளை, இந்த ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னவாறு படிப்படியாக விரிவாக்கிக் கொண்டு வரும்போது, அவ்வப்போதுள்ள நிதி நிலைமைகளுக்கு ஏற்ப மத்திய அரசினுடைய அந்தக் கழகத்தின் ஒப்புதலுக்கேற்ப இந்த திட்டம் அந்தப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1982 ஆம் வருடத்தில் ஈ.எஸ்.ஐ, திட்டம் விஸ்தரிக்கப்படும் பகுதிகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் வீரவநல்லூரும் ஒன்று. திருநெல்வேலி மாவட்டத்தில் பேட்டை என்னுமிடத்தில் இருக்கக்கூடிய மருத்துவமனையிலிருந்துதான் ஒரு ஊர்தி மூலமாக அந்த வீரவநல்லூர் பகுதி தொழிலாளி மக்களுக்கு மருத்துவ வசதிகளைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அது போதுமானதல்ல. சரியுமல்ல. ஆகவே குறிப்பாக வீரவநல்லூர், பகுதியிலேயே ஒரு மருத்துவமனையை இந்த இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் அமைக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றியும் நிதானமாக பரிசீலிக்கலாம்.

## சிவகாசியில் தொழிலாளர் நல மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்.

* வினா எண். 308—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல மருத்துவமனை எப்போது துவங்கப்படும் ?

(ஆ) அதற்கான மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எந்த ஆண்டில் மருத்துவமனை கட்டி முடிக்கப்படும் ?

(ஈ) பூர்வாங்க வேலைகள் உடன் துவங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ—இ) 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை ஒன்று கட்டுவதற்காக சிவகாசி அருகில் சாத்தூர் வட்டம் அணையூர் கிராமத்தில் 2.90 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி, பொதுப்பணித்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது, பொதுப்பணித்துறை மருத்துவமனை கட்டிடம் கட்ட 83.765 லட்ச ரூபாய்க்காக மதிப்பீடும் பணியாளர் குடியிருப்பு சலவை நிலையம், மிதிவண்டி நிறுத்துமிடம் முதலியவற்றிற்காக 41.30 லட்ச ரூபாய்க்கான மதிப்பீடும் அனுப்பியுள்ளது. இந்த இரண்டு மதிப்பீடுகளும் புது டில்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு இருக்கின்றன. அக்கழகத்தின் ஒப்புதல் கிடைத்தவுடன் கட்டுமான பணிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு கூடிய விரைவில் கட்டிடங்கள் முடிக்கப்படும்.

## தூத்துக்குடி நகருக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

* வினா எண். 309—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி நகரத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) ரூ. 119.00 லட்சம் மதிப்பீட்டில் தூத்துக்குடி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்து, இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு 23—9—81-ல் முதல் முன்னோடியாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரம் சமீபகாலத்தில் மிக வளர்ச்சி அடைந்துக் கொண்டிருக்கிறது. இப்போது குடிதண்ணீருக்கு மிக தட்டுப்பாடான நிலைமை அங்கே இருப்பதால், இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த 119 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் குடிதண்ணீர் அளிக்கப்படும் திட்டம் எங்கேயிருந்து கொண்டு வரப்படுகிறது? வல்லநாடு என்ற பகுதியிலேயிருந்துதான் இது வரையில் அந்தப் பகுதிக்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டது. அங்கேயிருந்துதான் தற்போதும் தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படுகிறதா அல்லது வேறு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரிவான திட்டமாக ஏற்பாடு செய்து ஒரு 7 அம்சம் கொண்ட திட்டமாக விரிவு செய்திருக்கிறார்கள். இது போதாது என்று கருதி இந்த நகரில் இதுவரையில் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமல் இருக்கும் தெருக்களுக்கு குழாய்கள் அமைக்கவும் அதன்படி கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நகரில் அமைப்பது பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : தலைவர் அவர்களே, குடிநீர் தட்டுப்பாடு இப்போது மிகவும் கடுமையாக இருக்கின்றது. ஏற்கனவே தூத்துக்குடி போன்ற பல ஊர்களைப் பொறுத்தவரையில் 10 ஆண்டுகளுக்கு முன்பாக ஆய்வுப் பணம் கட்டியதற்குப் பிறகும் குடிநீர் வழங்காத நிலைமை இருக்கின்றது. எனவே, 10 வருடங்களுக்கு முன்பாக ஆய்வுப் பணம் கட்டிய பேரூராட்சிகளுக்கு இந்த வருடத்திலாவது குடிநீர் கிடைப்பதற்குத் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, குடிநீர் கொடுக்கவேண்டியது இந்த அரசினுடைய முக்கியமான கடமை என்று இந்த அரசு கருதுகிறது. அதன் வழியில் மத்திய அரசு கொண்டுவந்திருக்கிற 20 அம்ச திட்டத்தில் 8-வது ஐட்டம் All problem villages should be supplied with potable drinking water என்று அருமையாகத் திட்டத்தைச் சொல்லி இருக்கிறார்கள்.

** ** ** **

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு இருக்கக்கூடாது என்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, குற்றச் சாட்டு சொல்வது என்பது வேறு, நிலைமை விளக்கம் என்பது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** ** ** ** எல்லாம் வந்ததாக இப்போதுதான் நான் கேள்விப்பட்டேன். அது தேவையில்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டுவிட்டு தவறுதலாக இருந்தால் தாங்கள் எக்ஸ்பஞ்ச் பண்ணலாம். டெல்லி என்று சொன்னவுடனே எழுந்துவிடுகிறார்கள், இந்திரா காங்கிரஸ் என்றே சொல்லக்கூடாது என்றால் என்ன அர்த்தம். . (குறுக்கீடு) ........8-வது ஐட்டத்தில் குடிதண்ணீர் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. 20 அம்ச திட்டத்தைச் செயல்படுத்த முழுமையாக இந்த அரசு ஏற்றுக்கொண்டு இருக்கின்றது. இன்னும் பல செய்யும். அப்படி இருக்கும்போது 170 கோடி ரூபாய் திட்டத்திற்கு வேண்டும். 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் பிரச்சினைக்குரிய தண்ணீர் இல்லாத கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுக்க 170 கோடி ரூபாய் வேண்டும். இதிலே எல்லாமே மாநில அரசு செய்துவிட முடியாது. பட்ஜெட்டிலே கூட பார்த்திருப்பீர்கள், இந்த ஆண்டு 43 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அடுத்த ஆண்டுக்கு 60 கோடி தருகிறேன் என்று கூறி இருக்கிறார்கள். நாவலரிடமிருந்து பணம் வாங்குவது அவ்வளவு சுலபம் அல்ல.. (சிரிப்பு)......சிரமப்பட்டுத்தான் பணம் வாங்குகிறோம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சருக்கு இருக்கின்ற சிரமங்கள் பூராவும் சபைக்குத் தெரியவேண்டிய அவசியம் இல்லை. கேட்கப்பட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொன்னால் போதும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போல எல்லா கிராமங்களுக்கும் உடனடியாக குடிதண்ணீர் கொடுக்க இந்த அரசு காட்டுகின்ற அக்கறையோடு மத்திய அரசு ஒத்துழைத்து நாங்கள் கேட்டிருக்கின்ற ரூ. 55 கோடி ரூபாயினை விரைவிலே கொடுத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது போன்று விரைவிலே அத்திட்டங்கள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது நாவலர் அவர்கள் பணம் தரமாட்டார்கள் என்று சொல்கிறார்கள். இப்படி ஒரு கருத்து வேற்றுமை அமைச்சர்களுக்குள்ளே இருக்கின்றது என்பதை................

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசினை எப்படிக் குற்றம் சாட்டக்கூடாதோ அப்படி மாநில அமைச்சரையும் குற்றம் சாட்டக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

**1981-82-ஆம் ஆண்டில் நஞ்சை நிலங்களாக மாற்றப்பட்ட புஞ்சை நிலங்கள்.**

* வினா எண். 310—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1981-82-ஆம் ஆண்டில் எத்தனை ஏக்கர் புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளதா? மாவட்ட வாரியாக எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 1981-82-ஆம் ஆண்டில் பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டத்தின் கீழ் புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்றப்படவில்லை. ஆனால் 1981-82 ஆம் ஆண்டு சிறுபாசனத் திட்டத்தின் கீழ் புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்றப்பட்டன. அவ்வாறு மாவட்டவாரியாக மாற்றப்பட்ட நிலப் பரப்புகளின் விவரங்கள் பின்வருமாறு :—

| | | ஏக்கர் |
|---|---|---|
| 1 | செங்கல்பட்டு மாவட்டம் .. .. .. | 53 |
| 2 | வட ஆற்காடு மாவட்டம் .. .. .. | 401 |
| 3 | தென் ஆற்காடு மாவட்டம் .. .. .. | 5 |
| 4 | திருச்சிராப்பள்ளி மாவட்டம் .. .. .. | 1,158 |

| | | ஏக்கர் |
|---|---|---|
| 5 | தஞ்சாவூர் மாவட்டம் .. .. .. | 818 |
| 6 | மதுரை மாவட்டம் .. .. .. .. | 954 |
| 7 | இராமநாதபுரம் மாவட்டம் .. .. .. | 323 |
| 8 | பெரியார் மாவட்டம் .. .. .. .. | 378 |
| 9 | சேலம் மாவட்டம் .. .. .. .. | 1,503 |
| 10 | நீலகிரி மாவட்டம் .. .. .. .. | 256 |
| 11 | தர்மபுரி மாவட்டம் .. .. .. .. | 492 |
| | மொத்தம் .. | 6,341 |

**திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய பாசனத் திட்டங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இன்னும் கூடுதலாக புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்ற அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுத்தர, பெரிய பாசனத் திட்டங்கள் பல திட்டங்கள் இப்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதிலே பல்லாயிரக்கணக்கான புன்செய் நிலங்கள் ஒரு போகத்திற்காவது வசதி பெற்று இன்றைக்கு விவசாயங்கள் நடைபெற்று வருகின்றன. இங்கே எவ்வளவு புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன என்று நான் பதில் சொல்லியிருக்கிறேன்.

**திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய ஏரி பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது அந்த ஏரி கட்டுமானப் பணியில் இருக்கின்ற திட்டங்களை வரையும் போது குறிப்பிட்ட அளவுக்கு நன்செய் நிலங்களை அடையும் என்ற நிலை இருந்தால் தான் சிறிய பாசன திட்டங்களை எடுத்துக் கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. அதே போல் சிறிய பாசன திட்டங்கள் இந்த ஏரியில் குறிப்பிட்ட அளவுக்கு கிடைக்காமல் பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப் படாத நிலை இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றி சிறிய பாசன திட்டங்களை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன் ?



**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றியதை மாவட்டம் வாரியாகச் சொன்னார்கள். அதிலே மிகவும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தளவில் மழைக் காலங்களில் அதிகமான நீர் சமுத்திரத்தில் போய் வீணாகக் கூடிய நிலை இருக்கிறது. அந்த இடங்களில் போதிய கண்மாய்களை அமைப்பதற்கு வாய்ப்பு இருந்தாலும் கூட 1981-82 ஆம் ஆண்டு ஒரு ஏக்கர் கூட புன்செய் நிலங்கள் நன்செய் நிலமாக மாற்றப்படவில்லை. அதற்கு என்ன காரணம்? அந்த நிலையை மாற்றி வரக் கூடிய காலத்திலாவது புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றுவதற்கு குளம், குட்டைகள், கண்மாய் போன்ற பாசன வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியைப் பொறுத்த அளவில் பெரிய நடுத்தர பாசன திட்டங்களை நிறைவேற்றுகின்ற போது இப்போது அரசு புதிய கொள்கையை பின்பற்றி வருகிறது. டிரை லேண்டு என்றால் அது இரிகேட்டடு டிரையாக இருக்க வேண்டும். அது புன்செய் நிலமாகத்தான் இருக்க வேண்டும். புன்செய் பயிர் தான் பயிரிட வேண்டும் என்ற அடிப்படையில் மாற்றிக் கொண்டிருக்கிறோம். அப்படி செய்வதன் மூலமாக 2 மடங்கு, 3 மடங்கு நீர் பரப்புகள் விவசாயத்திற்கு கொண்டு வரக்கூடிய சாத்தியம் இருக்கிறது. இதை குறிப்பிடுவதற்குத் தான் நான் இப்படி சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சிவப்பிரகாசம் அவர்களும் இதே கேள்வியைத் தான் கேட்டார்கள். நீர் நிலைகளை இப்போது நாம் அளவிட்டுக் கொண்டு இருக்கிற போது சிறிய ஏரிகளாக இருந்தாலும் குளங்களாக இருந்தாலும் அது எந்த அளவுக்கு குறைந்த அளவுக்கு விவசாயத்திற்கு பயன்படக் கூடியதாக இருந்தாலும் இப்போது அதை நன்செய்யாக மாற்றக் கூடிய அளவுக்கு சில திட்டங்களை மேற்கொள்ளலாம் என்று அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. ஆர். தியாகராசன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றியதாக கணக்குச் சொன்னார்கள். அதே போல் அந்த அணைகளைக் கட்டும்போது அந்த பகுதியில் இருந்த எவ்வளவு நன்செய் நிலங்கள் புன்செய் நிலங்களாக மாறியிருக்கின்றன என்ற கணக்கை அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

[1983 மார்ச் 7

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு நிலை ஏற்படக் கூடாது என்று தான் நாங்கள் கருதுகிறோம். அதற்கு ஒரு தனிக் கேள்விப் போட்டால் தகுந்த பதிலைச் சொல்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்துளை குழாய் கிணறு வாரியத்தின் பணியில் புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றும் திட்டம் எந்த நிலையில் உள்ளது? இந்த வாரியத்தின் மூலம் எவ்வளவு ஏக்கர் பயனடையும் நிலையில் உள்ளது?........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்செய், புன்செய் நிலங்களைப் பற்றிப் பேசும்போது வாரியத்திற்கு போகக் கூடாது. இதற்கு தனிக் கேள்விப் போடவும்.

[முற்பகல் 9-50]

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே ஆற்று நீர் பாசனத்திலே நாம் கடுமையான கஷ்டத்தைச் சந்தித்துக் கொண்டு இருக்கிறோம். தமிழ் நாட்டிலே விவசாயம் நடைபெறுகிற நிலங்களிலே இன்னும் நாலில் மூன்று பங்கு புஞ்சையாகவே இருக்கின்றன. ஆகவே சிறு பாசனத் துறையை அபிவிருத்தி செய்யக் கூடிய முறையிலே குட்டைத் திட்டங்கள், சிறிய சமுதாயக் கிணறு திட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுகின்ற முறையில் 5 ஆண்டுக் காலத்திற்கான ஒரு மாஸ்டர் பிளானை தயாரிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு சிறிய பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்றுவதற்கான வாய்ப்பு இருப்பதை அறிந்து கூடுதலான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இப்போது அதிக நிதியை ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர் அவர்கள் சொல்கிற போது புஞ்சை நஞ்சையாக்கப்பட்டது என்று கணக்கைச் சொன்னார்கள். ஆனால் தண்ணீர் கொடுக்கிற நிலையைப் பார்த்தால் இன்னும் அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்றவர்கள் ரிக்கார்ட் பூர்வமாக புஞ்சையிலிருந்து நஞ்சையாக்கப்பட்டதாக ரெகுலரைஸ் பண்ணாததால் அந்த நிலங்களுக்கு அந்த ஆயக்கட்டுதாரர்களுக்கு தண்ணீர் கொடுக்கப்படாத அவல நிலை ஏற்பட்டு அதனால் பல ஏக்கர் புஞ்சையாகவே காட்சியளிக்கின்ற நிலைமை இருக்கிறது என்பது பற்றிய ரிப்போர்ட் அரசுக்கு வந்திருக்கிறதா? அதன்மீது உடனடியாக நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா?



1983 மார்ச் 7]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாற்றப்படுகிற போது பதிவு செய்யப்படுகிறது. சில நேரங்களில் இடைப்பட்ட நிலங்களும் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவை பதிவுக்கு வருவதில்லை. இப்போது மேலேயோ அல்லது கீழேயோ இருக்கக் கூடிய நஞ்சை நிலங்களின் ஆயக்கட்டுதாரர்களுடைய தயவிலே அவர்கள் விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. அதை எல்லாம் மறு பரிசீலனை செய்து தான் புதிய உத்திரவு போடுவதை அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

அரியலூர் தொகுதியிலுள்ள கண்டிரா தீர்த்தம் ஏரியின் உள் வாயிலில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள்

* வினா எண். 311—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதியிலுள்ள கண்டிரா தீர்த்தம் ஏரியின் உள் வாயிலில் தனியார்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இவ்வேரியின் உள் வாயிலில் 11 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தார்கள். இதில் 10 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டன. மீதமுள்ள ஒரு நபர் ஏரியில் உள்ள ஒரு மாமரத்தை ஆக்கிரமித்துள்ளார். அதையும் அகற்றி, அந்த மரத்தை விதி முறைகளின்படி பொது ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. த. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கண்டிரா தீர்த்த ஏரியில் 11 பேர்கள் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த ஏரியின் விஸ்தீரணம் எவ்வளவு? ஆக்கிரமிப்பு இன்னும் அகற்றப்படவில்லை. துரித நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அந்த விஸ்தீரணம் பற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. ஆனால் ஆக்கிரமிப்பு எல்லாம் அகற்றப்பட்டு இருப்பதாக இப்போது தகவல் தரப்பட்டிருக்கிறது. அது குறித்து ஏதாவது ஐயப்பாடு இருக்குமானால் மீண்டும் விசாரித்து பதில் சொல்கிறேன்.

[1983 மார்ச் 7

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் எல்லா ஏரிகளின் உள்வாயில்களிலும் ஆக்கிரமிப்பு நிகழ்ந்திருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளின் விளைவாக ஏரிகளில் நிற்கக் கூடிய தண்ணீரின் அளவு குறைந்து விவசாயத்திற்கு பாசனத்திற்கு போதுமான நீர் கிடைக்கவில்லை என்ற புகார் எல்லா மாவட்டங்களிலிருந்தும் வந்திருக்கிறது. ஆகவே அரசாங்கம் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இப்போது ஏரி, குளங்களின் உள் வாயில்களில் ஆக்கிரமிப்புகள் இருக்குமானால் அதை அகற்றி வனத்துறையிடம் நாம் ஒப்படைத்து விடுகிறோம். அவர்கள் அந்த உள் வாயில்களில் கருவேல மரம் போன்றவற்றைப் பயிரிடுகிறார்கள். அதன் பிறகு விவசாயிகள் உள்ளே வந்து ஆக்கிரமிப்பதற்கு வாய்ப்பு தடுக்கப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 30 சதவீதம் குளங்கள் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பருவ காலத்திலேயும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

சக்தி—தலைமலை வனச்சரகங்களுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் ஆதிவாசிகள்

*வினா எண். 238 —திரு. கு. ரமணி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் தாலுகா சக்தி—தலைமலை வனச்சரகங்களுக்குட்பட்ட பகுதிகளில் முகாம்களில் (செட்டில்மெண்டுகள்) வசித்து வருகிற ஆதிவாசிகளுக்கு கல்வி உறைவிடப்பள்ளி, சுகாதாரம், குடிநீர் கிணறுகள், மின்விளக்குகள், கூட்டுறவு கடனுதவி போன்ற எந்த வசதியுமில்லாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆமெனில் மேற்படி வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி ; (அ) இதுபற்றிய விவரங்கள் சேகரிகபட்டுள்ளன.

(ஆ) அவசியமான தேவைகளைச் செய்து கொடுக்க தக்க நடவடிக்கைஎடுத்துக்கொள்ளப்படும்.



1983 மார்ச் 7]

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடும் நாட்களாக சத்தியமங்கலம் வனசரகப் பகுதிகளில் வசித்து வரும் ஆதிவாசிகளுக்கு, நான் கேட்டுள்ள கேள்வியில் சொல்லப்பட்டுள்ள வசதிகள் இல்லாமல் இருந்து வருவதை ஏன் அங்கே இருக்கிற அதிகாரிகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரவில்லை. இந்த அசட்டையான நிலைக்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச்சொன்னதைப்போல இந்த பகுதிகளில் இருக்கக்கூடிய ஆதிவாசிகளுக்கு பல பிரச்னைகள் இருப்பதை உணர்ந்திருக்கிறோம். ஆனால் அதிகாரிகள் ஏன் தகவல் தெரிவிக்கவில்லை என்று கேட்கிறார்கள். அதன் மீது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு என்னென்ன பிரச்னைகள் இருக்கின்றன என்பதை கேள்வியில் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிவாசிகளுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் நமது அரசாங்கம் செய்யவேண்டிய உதவிகள் மற்றும் எடுக்க வேண்டிய அபிவிருத்தி வேலைகளுக்காக மத்திய அரசாங்கம் குறிப்பிட்ட பணத்தை சட்டப்பூர்வமாக தரவேண்டிய கடமையில் இருக்கிறார்களா? இல்லையா? அது இந்த அரசிற்கு கிடைக்கிறதா ? இல்லையா? அப்படி கிடைக்கும்போது, இப்படிப்பட்ட இடங்களில் அரசு நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், எப்படி அவர்களுக்கு அந்தப் பணம் தொடர்ந்து கிடைக்கும்? அதனால் இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக உடனடியாக ஒரு அறிக்கையைப்பெற்று நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சொன்ன அந்த பகுதிகளுக்கு அண்மையில் நான் சென்றிருந்த போது நிலைமைகளை நேரில் கண்டிருக்கிறேன். சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இது குறித்து தெரிவித்து இத்தகைய பிரச்சனைகள் எழாத வகையில் தமிழகம் முழுவதும் ஆதிவாசிகள் வசிக்கக் கூடிய மலைப் பகுதிகளில் அதிக கவனத்தைச் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று அரசு அறிவுறுத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய சர்க்கார் உதவி கிடைக்கிறதா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அது குறித்த பதில் இருந்தால் அமைச்சர் அவர்கள் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஏற்கெனவே ட்ரைபில் டெவலப்மெண்ட் புரொகிராமில் (ஐ.டி.டி.சி.) தமிழகத்தில் ஒன்பது பகுதிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்த பகுதிகள் அதில் வரவில்லை. தேர்வு செய்யப்படுகிற பகுதிகளுக்குத் தான் மத்திய அரசிடமிருந்தும், மாநில அரசிடமிருந்தும் அதிகமான தொகை அளிக்கப்பட்டு அங்கே தேவைப்படுபவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற பகுதிகளில் இருக்கிற பிரச்னைகளை அரசு தனியாக ஆராய்ந்து ஆவன செய்யும்.

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம்—தலைமலை பகுதிகளில் வசிக்கிற ஆதிவாசிகளுக்காக இப்போது ஐந்து உறைவிடப் பள்ளிகள் நடந்து வருகின்றன. ஒரு நடுநிலைப் பள்ளியும் அவர்களுக்காக நடக்கிறது. ஆசனூரில் இருக்கிற அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றவேண்டுமென்ற கோரிக்கை அரசிற்கு வைக்கப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடன் நான் அந்த பகுதிகளுக்கு சென்றிருந்த போது அவர்கள் இந்த கோரிக்கையை என்னிடத்தில் தெரிவித்திருக்கிறார்கள். அரசு இது குறித்து பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது விவரங்களை சேகரிக்கிறேன் என்று சொன்னார்கள். குறிப்பாக நான் கேட்க விரும்புவது, சத்தியமங்கலம் தாலுக்கா, சத்தியமங்கலம் தலைமலை பகுதிகளில் இருக்கிறமலைவாழ் மக்களுக்கு தற்போது குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கிறதா ? இல்லையா ? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற சத்தியமங்கலம் வட்டத்தில் எட்டு செட்டில்மெண்டுகளை குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த எட்டு செட்டில்மெண்டுகளில் தற்போது இருக்கக்கூடியவர்கள் ஆறு செட்டில்மெண்டுகளில்தான் இருக்கிறார்கள் என்று என்னிடத்தில் விவரமான அறிக்கை தரப்பட்டுள்ளது. குடிதண்ணீர் பிரச்னை பொறுத்தவரையில், அங்கே ஒரு சில இடங்களில் குடிதண்ணீர் வசதி இல்லை என்று தகவல் இருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் ஏற்கெனவே பதில் அளித்திருக்கிறேன்.



## கொடைக்கானல் வட்டத்திலுள்ள கொத்தடிமைகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட்டம்

*வினா எண். 239. திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள கொடைக்கானல் வட்டாரத்தில் உள்ள கொத்தடிமைகளுக்கு புனர்வாழ்வு கொடுக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மேற்படி திட்டத்திற்கு ஏற்கனவே அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல் வட்டத்தில் 232 விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு நபர் ஒன்றுக்கு ரூபாய் 1,603 வீதம், ரூபாய் 3,71,896 செலவில் கோதுமை, வாழை முதலியவைகளை பயிரிடுவதற்கும், ஆப்பிள், பிளம் பயீன் போன்ற பழவகை செடிகளை பயிரிடுவதற்கும் நபருக்கு ரூபாய் 700 வீதம் 100 கொத்தடிமைகளுக்கு ரூபாய் 70,000 செலவில் கறவை மாடுகள் வாங்குவதற்கும் ஆக மொத்தம் ரூபாய் 4,41,896 அல்லது ரூபாய் 4.42 இலட்சங்களுக்கான திட்டங்களை மைய மாநில அரசு சமத்தொகை பங்கீட்டு (50:50) முறையில் 1980—81 ஆண்டில் செயற்படுத்த 28—2—1981 நாளிட்ட சமூக நலத்துறையின் அரசு ஆணை (நிலை) எண். 112ம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் பகுதியிலுள்ள கொத்தடிமைகள் கண்டுபிடிக்கப்பட்டு புனர்வாழ்வு கொடுத்திருப்பதுபோல் தமிழ்நாட்டில் வேறு எங்காவது எத்தனை கொத்தடிமைகள் கண்டு பிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டு புனர் வாழ்வு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, என்னிடத்திலேயுள்ள குறிப்புகள் படி இதுவரை தமிழகம் முழுவதும் 27,874 கொத்தடிமைகள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே கொடைக்கானல் பகுதியிலுள்ள கொத்தடிமைகள் கொடைக் கானல் மலையில் குறுக்குப் பாதையில் செல்வதற்கு கோவேறு கழுதைகளையும் குதிரைகளையும் சரக்குகள் வாங்கவும் போக்கு வரத்துக்கும் உபயோகப்படுத்தி வருகின்றனர். அவற்றை வாடகைக்குத்தான் வாங்குகின்றனர். ஆகவே, புனர்வாழ்வு திட்டத்தின்கீழ் பழங்குடி மக்களுக்குக் குதிரைகள் இனாமாக வழங்குவதுபோல இவர்களுக்கும் இனாமாக வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினரைப் பொறுத்தவரை மலைப் பகுதியிலே இருப்பவர்களுக்கு அந்தவகையான வசதி செய்து கொடுக்கப்பட் டிருக்கிறது. கொத்தடிமைகளுக்கு இதுவரை செய் யப்படவில்லை. வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் தாலுகாவில் 232 கொத்தடிமை களுக்கு உதவி செய்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கொடைக்கானல் தாலுகாவில் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இன்றும் கொத்தடிமைகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள் அவர்களை நிலப்பிரபுக்களிடமிருந்து மீட்டு அவர்களுக்கு, நிலங் கள் அளித்து மற்ற வீட்டு வசதிகள் செய்து கொடுக்க இந்த அரசு, கடுமையான வறட்சிக் காலத்திலேயாவது ஒரு விஷேச சட்டத் தைக் கொண்டு வந்து அவர்களைப் பாதுகாக்க முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் பகுதியில் நான் சொன் னதைத் தவிர மேலும் பலர் இருப்பதாக உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற சில பிரச்சினைகளின்மீது மட்டும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் அதிகமான கொத்தடிமைகள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எங்கே என்ற விவரத்தை உறுப்பினர் அவர்கள் அளிப்பார்களானால் அரசு நிச்சயமாக அதிகாரிகளை அனுப்பி, தகுந்த நடவடிக்கைகளை எடுத்து, அவர்களை விடுவித்து, தகுந்த புனர்வாழ்வு அளிக்க முன்வரும்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொத்தடிமைகளை விடுவித்து, அவர்களுக்குப் புனர் வாழ்வு அளிப்பதற்கான திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். எந்த, எந்த முறையில், அந்த விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கு விடுவிக்கப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை அமைச்சர் அவர் கள் அறிவிப்பார்களா?



**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனர் வாழ்வு அளிப்பதற்கு அந்த மக்கள் வசிக்கக் கூடிய பகுதிகளில் அவர்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கச் செய்கின்ற உணர்வோடு அரசினுடைய பல்வேறு வளர்ச் சித் திட்டங்கள் மூலமாக, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. அது மட்டுமன்றி, கறவை மாடுகள் வழங்கு தல் போன்ற பலவற்றையும், ஸ்டோன் கிரஷிங் யூனிட்ஸ் என்று சொல்கின்ற அந்த யூனிட்டுகளையும் அளித்து, அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அரசு அளித்து கொண்டிருக்கிறது. அது குறித்து முழு விவரம் இல்லை என்றாலும் அந்த மக்கள் இருக்கும் பகுதியிலே அவர்களுக்கு நிரந்தரமான வருமானம் கிடைக்கும் வழிவகையை செய்கின்ற திட்டத்தை அரசு வைத் திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** முன்பு தள்ளிவைக்கப் பெற்ற வினா எண். 240-ஐ இப்போது எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** ஒரு விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பெற்றுள்ளது.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** தலைவர் அவர்களே, அவை முன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர் கள் கூறினார்கள். ஆனால் இங்கே அறிக்கை வைக்கப்படவில்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** அறிக்கை இல்லாமல் எப்படிக் கேள்விகள் கேட்கமுடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே இந்தக் கேள்வி அமைச்சர் அவர்கள் வராத காரணத்தால் தள்ளிவைக்கப் பட்ட ஒன்றாகும். அன்றைக்கு இந்தச் சபையிலே அந்த அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வைக்கவில்லை என்று சொல்வது தப்பு. ஏற்கெனவே கொடுத்தாகிவிட்டது. அதைப் பார்க்கவில்லை என்று வேண்டுமானாலும் சொல்லுங் கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** அதைத் தேட முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வியைத் தள்ளி வைத்துவிட்டு, மீண்டும் எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவரவர்களே, இந்தக் கேள் வியை மாற்றுவதற்கு ஃப்ளோரின் கன்சென்டை வாங்க வேண்டும். ரூல்படி அவ்வாறு வாங்க வேண்டும். நான் ரூலைப் படிக் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினரவர்கள் மூலைப் படிப்பதற்கு முன் நான் சொல்கிறேன். இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலை என்னவென்றால், 240ஆம் எண்ணுள்ள கேள்வி எடுக்கப்பட்டது, இந்தக் கேள்வி முன்னர், அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பட்டது. அன்றைக்கு அந்த அறிக்கையை வைத்திருக்கிறார்கள். அன்றைக்கு வைக்கப்பட்டது இன்றைக்கு நினைவு இருக்கும் என்பது முடியாத காரியம். உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்க முடியாதுதான். எனவே அந்த அறிக்கை இல்லாத நிலையில் இதை எடுத்துக் கொண்டால் எப்படி விவாதிக்க முடியும் என்ற பிரச்னையை உறுப்பினர்கள் எழுப்பினார்கள். ஆகவே, இந்தக் கேள்வியைப் பிறகு திரும்ப எடுத்து கொள்ளலாம். அப்படித் தீர்ப்பளிப்பதற்கு எனக்கு உரிமை உண்டு. ஆகவே, இதிலே பிரசினை இல்லை.

சங்கரன்கோவில் நகரில் ஆதிதிராவிடர் மாணவர்
மாணவியர்களுக்கான உணவு விடுதிகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 241—**திரு. பி. துரைராஜ் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் நகரில் ஆதிதிராவிடர் மாணவர், மாணவிகளின் அரசினர் உணவு விடுதிகளுக்கு கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் நகரில் மாணவியர் உணவு விடுதிக்கு 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டிடம் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் இக்கட்டிட வேலையானது தொடங்கப்பட்டு விட்டது என்றும், இன்னும் 6 மாதங்களுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்கள். மேற்படி நகரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்ட முன்மொழிவுகள் எதுவும் நிலுவையில் இல்லை என்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.



**திரு. பி. துரைராஜ் :** பேரவைத் தலைவரவர்களே, சங்கரன்கோவில் நகரில் உள்ள மாணவர் விடுதிக்குக் கட்டிடம் தேவை என்று தற்போது கோரிக்கை வைக்கப்பட்டு, கடந்த சில நாட்களுக்கு முன்னால் அதுகுறித்து அதிகாரிகள் அரசுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதை வரவழைத்து, விரைவில் அந்தக் கட்டிடத்தை கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாணவர் விடுதிக்கு அவர்கள் அனுப்பி இருப்பதாக உறுப்பினரவர்கள் தெரிவிக்கிறார்கள். அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

டெல்லியில் கூடும் அணி சேரா நாடுகளின் மகாநாட்டிற்கு வாழ்த்து

* **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, பாரதத்தின் நெடிய வரலாற்றிலே இன்றைக்கு ஒரு சிறப்புக்குரிய நாள். உலகத்தில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தொகை கொண்ட அணி சேராத 100 நாடுகளின் 7-வது உச்சி மாநாடு இன்றயைதினம் டெல்லியிலே கூடுகிறது. பாரதத்தின் பெருமைக்குரிய பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இந்தக் கூட்டுச் சேராத நாடுகளின் தலைவர் பொறுப்பை அடுத்த மூன்றாண்டுகளுக்கு இன்னும் சற்று நேரத்திலே ஏற்க இருக்கிறார்கள். உலக சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், பொருளாதார மேம்பாடுகளுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் இந்த மாநாடு வெற்றி பெறவும், பாரதத்தின் முயற்சி வெற்றி பெறவும் அவை முன்னவரவர்களும், தாங்களும் வாழ்த்துக் கூறுவது இந்த நேரத்திலே பொருத்தமாக இருக்கும் என்று நான் கூறுகிறேன்.

(முற்பகல் 10—10).

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில் பாராளுமன்றமே கூடவில்லை. ஒரு வார காலத்திற்கு ஒத்தி வைத்திருக்கிறார்கள். அதைப்போல் ஏதாவது நமக்கும் சலுகைகளை அளித்தால் சௌகரியமாக இருக்கும். அப்படிச் செய்தால் பாராளுமன்றத்தைப் பின்பற்றியதாகவும் இது அமையும் என்று ஆலோசனை சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னையிலே அணி சேரா நாடுகள் மாநாடு நடத்தப்படும்போது கட்டாயம் இந்தச் சபை ஒத்தி வைக்கப்படும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உள்ளபடியே இந்தியாவிற்கு பெருமை சேர்க்கின்ற வகையில் 101 நாடுகளுக்கு மேற்பட்ட நாடுகள் அணி சேராத நாடுகளாக அமைந்து இந்தியாவினுடைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இந்தியாவிற்குப் பெருமை தேடித் தரும் வகையில் அமைந்துள்ள இந்த மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறவும், அதன் மூலமாக உலக அரங்கில் இந்தியா பெறுகின்ற பெருமையும் புகழும் மேலும் மேலும் ஒங்கும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கிறது. அந்த வகையிலே இன்று இந்த மாநாடு கூடப்பெறுவது நமக்கு எல்லாம் பெரு மகிழ்ச்சி அளிக்கிறது என்பது மட்டுமல்லாமல், அந்த மாநாட்டுக்கு இந்தச் சட்டமன்றப் பேரவையின் சார்பாக, தமிழகத்திலே உள்ள $4\frac{3}{4}$ கோடி மக்களின் பிரதிநிதிகளாக அமைந்து இருக்கின்ற இந்தச் சட்டமன்றம் தன்னுடைய உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது என்ற வகையிலே இந்த மாநாடு எல்லா வகையிலேயும் வெற்றிபெற வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவிக்கிற வகையிலேயும் நம்முடைய உணர்வை வெளிப்படுத்துவது மிகப் பொருத்தமாக அமையும். அந்த வகையிலே இந்த அவையிலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களின் சார்பாகவும், எல்லாக் கட்சித்தலைவர்களின் சார்பாகவும், அவையினுடைய முன்னவர் என்ற முறையிலே இந்த மாநாட்டுக்கு வாழ்த்துக்களை அளிப்பதோடு இந்த மாநாடு எல்லா வகையிலேயும் வெல்க வெல்க என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் அணி சேரா மாநாடு பற்றி இங்கே குறிப்பிட்டு, பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்த நேரத்திலேயிருந்து இன்னும் 3 ஆண்டுக் காலத்திற்கு தலைமைப் பொறுப்பை ஏற்கின்ற இந்த விழாவைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இந்த மாநாடு உலகச் சரித்திரத்திலே இந்தியாவினுடைய முக்கியத்துவத்தை மிகவும் உயர்த்துகின்ற ஒரு மாநாடாக அமைந்திருக்கிறது. எதிர்பார்க்கிற வகையிலே எல்லா அணி சேராத நாடுகளின் பிரதிநிதிகள் நேற்றே வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே இது உலகம் பூராவிலும் பரவி மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற காலகட்டத்திலே இந்த மாநாடு இன்றைக்குக் கூடுகிறது. டாக்டர் ஃபிடெல் காஸ்ட்ரோ அவர்கள் தலைமைப் பொறுப்பை பாரதப் பிரதமர் இந்திராகாந்தி



அம்மையார் அவர்களிடத்திலே அளித்திருக்கிறார்கள். இப்போது இந்த மாநாட்டினுடைய பொருளாதாரத் துறைத் தலைவராக இருக்கும் எல். கே. ஜா அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டு இருப்பதை நீங்கள் எல்லாம் பார்த்து இருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஏழை நாடுகள், வளருகின்ற நாடுகள் என்று சொல்லப்படுகிற, நம்முடைய இந்தியா உட்பட—எவ்வளவு கோடி கடனுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு வரலாற்று உண்மையை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 20 லட்சம் கோடி கடன் இத்தனை நாடுகள் வாங்கியிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். சில நாடுகளிலே ஒரு மாதத்திற்கு மேல் உணவுப் பண்டங்களை கூட வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, சில நாடுகளிலே எண்ணெய் இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்ற ஒரு அபாயகரமான குறிப்பைச் சொல்லி, 1930-ம் ஆண்டு இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டபோதுதான் உலக யுத்தம் மீண்டும் ஏற்பட ஆரம்பித்தது என்ற வரலாற்று உண்மையை நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த மாநாடு எதிர்காலத்திலே உலகத்திலே அமைதியையும், சமாதானத்தையும், நிரந்தரமான ஒரு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு வழிகாட்டியாக அமையக் கூடியதாக அமைந்திருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமை பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு மாநாட்டை பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் கூட்ட கனவு கண்டார்கள் என்று சொல்லலாம். அவர்கள் இந்தோனேசியாவிலே, பாண்டுங் என்ற இடத்தில் பஞ்ச சீலத்தை உலகத்திற்கு அறிவித்தவர் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள் என்று நான் நம்புகிறேன். அப்படிப்பட்டவர்களுடைய வழியைப் பின்பற்றி இன்றைக்கு நம்முடைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் உலக சமாதானத்திற்கு ஒரு பெரிய மாநாட்டைக் கூட்டியிருக்கிறார்கள். அதற்கு அவை முன்னவர் அவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதோடு என்னுடைய வாழ்த்தையும் நான் இந்த மாநாட்டிற்குத் தெரிவிப்பதோடு இந்த மாநாடு வெற்றிகரமாக நடைபெற்று உலகத்திற்கு திற்கு சிறந்த வழிகாட்டியாக அமைய வேண்டுமென்ற எண்ணத்தையும் உங்களின் சார்பிலேயும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: இந்த மாநாடு சம்பந்தப்பட்ட விஷயத்தை பற்றி உண்மையிலேயே எல்லாக் கடசித் தலைவர்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்பு தரவேண்டும். ஏனென்றால் இது முக்கியமானது. அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்க கூடிய அந்தக் கூட்டுச் சேரா நாடுகளுடைய மாநாட்டிலே இதுவரை சீரும் சிறப்புமாக அதனுடைய தலைவராயிருந்த காஸ்ட்ரோ இன்று காலைதான் இந்தியாவினுடைய பிரதம அமைச்சரி

டத்தில் இந்தக் கூட்டுச் சேரா நாடுகளுடைய தலைமைப் பதவியை ஒப்படைக்கிறார்கள். உலகத்திலே ஏகாதிபத்தியங்கள் பயங்கரமான அணு ஆயுத யுத்தத்திற்கு தயார் செய்து கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் இந்த மூன்றாவது உலகத்தைச் சேர்ந்த நாடுகள் தங்களுடைய அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், பொருளாதார சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் தங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இந்தக் கூட்டுச் சேரா நாடுகளுடைய மாநாடு மிக முக்கியமானதாகும். 1962 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம், இன்றைய தினம் புதியதாக சேர்த்துக் கொள்கிற நான்கு நாடுகளோடு 101 நாடுகளைக் கொண்டதாக இந்த மாபெரும் இயக்கம் ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே இது ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்கக் கண்டங்களிலே இருக்கக்கூடிய புதியதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் அனைத்திலும் உள்ள பிரச்சினைகளை இந்த மாநாடு கலந்தாலோசிக்க இருக்கிறது. இந்த நாடுகள் கடந்த காலத்திலே, அதனதன் வளர்ச்சிக்காக பல அவதிக்கு உள்ளாகி இருக்கின்றன. அதன் விளைவாக, அவர்களுடைய பொருளாதார நிலை நசுங்கி இருந்தது. பின்னர் விடுதலை அடைந்த பிறகு பொருளாதார வளர்ச்சிக்காக அவர்கள் பாடுபட்டதற்குப் பிறகு, உலகத்திலுள்ள முற்போக்கு நாடுகள் எல்லாம் அவற்றுக்கு உதவி இருக்கின்றன. கூட்டு சேராத நாடுகளின் மாநாடு இந்தியாவிலே நடைபெறுவது நம் அனைவரின் பெருமைக்குரிய ஒரு விஷயம் என்ற காரணத்தால் தமிழகத்திலே உள்ள அனைத்து மக்களின் சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் அந்த கூட்டு சேரா மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற தீர்மானத்தையொட்டி நாங்களும் எங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இப்போது டில்லியிலே கூடியுள்ள அணிசேரா நாடுகளின் மகாநாட்டில் 101 நாடுகள் கலந்து கொள்கின்றன. அணிசேரா நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து கூடுவது ஒரு மாபெரும் இயக்கமாகும். இந்த மகாநாட்டில் நம்மைப்போன்று வளர்ந்து வரக்கூடிய நாடுகளுடைய பல கோரிக்கைகள் முன்வைக்கப்பெற்று இருக்கின்றன. அதிலும் குறிப்பாக இன்றைக்கு நம்மைப்போன்று நாடுகள் எல்லாம் வளர முடியாதபடி ஏகாதிபத்திய நாடுகள் போடும் முட்டுக்கட்டைகள், ஏற்றுமதி இறக்குமதி என்று சொல்லக் கூடிய இவ்விரண்டும் வகையிலும் ஏற்படுத்துகிற



தடைகள், வளரும் நாடுகளுடைய கழுத்தை நெரிக்கக் கூடிய அவர்களது திட்டங்கள் ஆகியவற்றை எதிர்த்து, இந்த வளர்கின்ற நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தங்களுக்குள்ளாக "நாம் எப்படி முன்னேறுவது, எப்படி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உலகத்தில் யுத்தம் என்றும் ஏற்படாதவாறு, அமைதியை நிலை நிறுத்தும்படி செயல்படுவது" என்று ஆலோசிக்கும் முறையிலே இந்த மகாநாடு நடைபெற்று வருகிறது.

ஏகாதிபத்தியத்திற்கு சிம்ம சொப்பனமாக இருக்கக்கூடிய கியூபாவினுடைய தலைவர் காஸ்ட்ரோ இதுவரை அணிசேரா நாடுகளின் தலைவராக இருந்தார். அவர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த மாபெரும் வீரன். இன்றைய தினம் இந்தியாவில் கூடி இருக்கிற அணிசேரா நாடுகளின் 7-வது உச்சமகாநாட்டில், தம்முடைய தலைமைப் பொறுப்பை பாரதப் பிரதமரிடம் ஒப்படைக்க இருக்கிறார்கள்.

இந்த மகாநாடு இன்றைக்கு உலகத்திலுள்ள அதிலும், குறிப்பாக சுதந்திரம் பெற்று, இப்போது வளர்ந்துகொண்டுவருகிற நாடுகளுக்கெல்லாம் ஒரு நல்ல வழியைக் காட்ட பல பிரச்சினைகள் பற்றி விவாதிக்க இருக்கிறது; நம்மைப் போன்ற நாடுகள் எல்லாம் ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்காது எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று முடிவு செய்ய இருக்கிறார்கள்.

இப்போது நம்முடைய தமிழகமக்கள் அத்தனை பேர் சார்பிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும், அந்த மகாநாடு இனிது நடைபெற நான் எனது வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

* திரு ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இப்போது டில்லியிலே 101 நாடுகள், அணிசேரா நாடுகள் நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தலைமையிலே கூடியிருக்கிறது. இது இந்தியாவுக்கு பெருமை அளிக்கிற ஒரு மகத்தான விஷயம் என்பது மட்டும் அல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக உலகத்தின் அமைதியை நிலை நாட்டச் செய்கிற மாபெரும் பொறுப்பினை, அணி சேரா நாடுகளுக்குத் தலைமை தாங்குகிற பாரதப் பிரதமர் ஏற்று இருக்கிறார்கள் என்பது உலகம் பூராவும் இருக்கக்கூடிய சமாதானத்தை விரும்புகிறவர்களுக்கு எல்லாம் மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக இருக்கும்.

அணி சேரா நாடுகளில் அமைப்புக்கு அடித்தளம் அமைத்த மனிதருள் மாணிக்கம் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களை இந்த நேரத்திலே நாம் எண்ணி பார்க்க வேண்டியது இந்தியனாகப் பிறந்த ஒவ்வொருவரின் மகத்தான கடமையாகும்.

**1946** ஆம் ஆண்டிலே இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னதாகவே, அன்றைக்கு உலகம் பூராவும், ஆசியா, ஆப்ரிக்கா நாடுகள் எல்லாம் காலனி நாடுகளாக, அடிமைப்பட்டுக் கிடந்த நிலையிலே, இதே புது டில்லியிலே, 'ஆசிய மாநாடு' என்ற பெயரிலே நேருஜி அவர்கள் ஒரு மகாநாட்டைக் கூட்டினார்கள்.

(முற்பகல்10.20)

அன்றைக்குத் தொடங்கி, இன்று நடைபெறும் அந்த அணி சேரா மாநாடு வரையில், இந்த அணி சேரா நாடுகள் அமைப்பு உலகத்திலே உள்ள அனைத்து ஏகாதிபத்தியத்தையும், காலனி ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடும் ஒரு அமைப்பாக உரு வாக்குவதற்கு இந்தியா செய்து வந்து இருக்கும் முயற்சிகளையும் நாம் இந்த நேரத்தில் பாராட்ட வேண்டியவர்களாக இருக் கிறோம். குறிப்பாக, நேருஜி அவர்களை மீண்டும் மக்களுக்கு நினைவுபடுத்தி, நம்முடைய மகிழ்ச்சியையும் பாராட்டுக்களை யும் தமிழக மக்களின் சார்பாகவும், எங்களுடைய இயக்கத்தின் சார்பாகவும் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கும் அணி சேரா நாடுகளின் அதிபர்களுக்கும் தெரிவித்துக் கொள் கிறேன்.

* திரு. பி. **முகமது இஸ்மாயில்** : பேரவைத் தலைவர் அவர்களே, அணி சேரா நாடுகளின் மாநாடு, ஆரம்பக் கட்டத்தில் தோற்றுவித்த சில சிக்கல்களைத் தவிர்த்து, மிக வெற்றிகரமாக, மகிழ்ச்சிகரமாக ஆரம்பமாகியிருக்கிறது. உலக வல்லரசுகள் ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு, உலக நாடு களுக்கு பெரும் அபாயத்தைத் தோற்றுவித்து, மக்கள் சமுதா யத்தை அழித்து விடுமோ என்ற அச்ச உணர்வு ஏற்பட்ட காலத் தில், இந்த இரண்டு சக்திகளுக்கும் எதிராக ஈடுபட்டு இருந்த நாடுகளை ஒன்றாக இணைத்து, ஒரு நடுநிலை இயக்கம் தோற்று வித்த பெருமை, நம்முடைய நாட்டினுடைய அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களைச் சாரும்.

அன்றைய தினத்தில் இருந்து நாளுக்கு நாள் அது வலுப் பெற்று இன்றைக்கு 101 உறுப்பினர்களைக் கொண்ட மிகப் தெரிய சக்தியாக அது வளர்ச்சி பெற்று இருக்கிறது. உலக வல்லரசுகளும், ஏகாதிபத்திய நாடுகளும், அதே நேரத்தில் சர்வாதிகார நாடுகளும், சிறிய நாடுகள் தாக்குதலில் இருந்து தம்மைத் தற்காத்துக் கொள்வதற்கும், அவர்களுடைய ஆதிக்கப் யிடியிலிருந்து ஏனைய நாடுகள் தற்காத்துக் கொள்வதற்கும், இந்த நடுநிலை இயக்கம் பெரிதும் பயன் தருவதாக இருக்கிறது.

எங்களுடைய இயக்கத்தின் சார்பில் அந்த மாநாடு வெற்றி பெற வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலக மக்கள் சமுதாயத்திற்கு நம்பிக்கையூட்டும் வண்ணம் அந்த இயக்கம் வலுப்பெற்று, வளர்ச்சியடையத்தக்க அளவிற்கு



டெல்லியில் நடைபெறுகின்ற அந்த மாநாடு சிறப்புற வெற்றி யடைய வேண்டும் என்று நான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். **நவநீதகிருஷ்ணபாண்டியன்** : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே இன்றைக்கு கூட்டு சேரா நாடுகளின் மாநாடு ஆரம்பமாகியிருக்கிறது. மற்ற கட்சித் தலைவர்கள் கூறிய கருத்துக்களோடு என்னுடைய கருத்துக் களையும் இணைத்து, அந்த மாநாடு சிறப்பாக வெற்றி அடைய காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பிலே நான் வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* THIRU K. S. G. HAJA SHAREEF : Mr. Speaker, Sir, I rise to join with all my colleagues and leaders of various parties in wishing the Seventh Non-Aligned Conference, which has commenced at 8.30 a.m. in New Delhi, a unique success.

We are all aware that this has been taken as a challenge by our country after some difficulties experienced by Iran. Within six months to make these tremendous arrangements, I would certainly say that this is going to be a feather in the Indian cap under the leadership of our Prime Minister Mrs. Indira Gandhi. It is not going to be merely a conference, it is represented by 101 countries, where all the Prime Ministers, Presidents and Kings have come to discuss the common problems—economic, social and various other problems. You have rightly quoted Mr. Speaker, Sir, the speech of Mr. L. K. Jha, who has given the gravity of situation which then under-developed countries are facing under serious circumstances. I am sure, under the very able and distinguised leadership of our beloved Prime Mimister, Indira Gandhi, this conference will deliberate very useful problems and come to conclusion so that affluent countries will certainly help non-affluent countries.

On behalf of the Indian National Congress Party, I extend my fullest best wishes for the success of this Conference.

Thank You.

*திரு. க. **அன்பழகன்** : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலை வர் அவர்களே, அனைத்துக் கட்சிகளுமாகச் சேர்ந்து வாழ்த்து கூறுகிற இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் அணி சேரா நாடுகளுடைய மாநாட்டிற்கு என் வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உலக அமைதி, மனித உரிமைகள், நடுநிலைக் கொள்கைகள் இவை எல்லாம் நிறைவேறுவதற்கு இந்த மாநாடு மிகப் பெரும் அளவில் உதவிகரமாக இருக்கும் என்பதில் யாருக்கும் ஐயம்

இல்லை. 101 நாடுகள் ஒன்று சேர்ந்து உலகத்திற்கு சில கருத் துக்களை அறிவிக்கிறபோது, அந்தக் கருத்துக்கள் வலிமை பெறும்; அந்தக் கருத்துக்களுக்கு மேலும் மேலும் ஆதரவு பெருகும் என் பதிலே நமக்கெல்லாம் நம்பிக்கை இருக்கிறது.

காந்தியடிகள், தொடங்கிய அமைதி நெறி, அந்த நெறிக்கு உறுதுணையாக பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் மேற் கொண்ட பஞ்சசீல கொள்கை அடிப்படையிலே உருவான நடு நிலை கொள்கை என்பது அணி சேரா நாடுகள் மாநாடு மூலம் உலகத்தில் மேலும் மேலும் வலுவடையும். அத்தகைய ஒரு நிலையினால் இந்தியா போன்ற ஏராளமான மக்கள் தொகை கொண்ட நாடுகள் பல தங்களுடைய உரிமையைப் பாதுகாத்துக் கொள்வது மட்டுமல்ல ; மனித உரிமையைப் பாதுகாப்பதற்கான வழிவகைகள் மேலும் மேலும் உருவாகும் என்பதையும் நாம் எதிர்பார்க்கலாம்.

இந்த அணி சேரா நாடுகள் மாநாட்டுக்கு வரும் அண்டை நாடுகளின் தலைவர்கள் இந்தியாவைப்பற்றி கூறியுள்ள பல்வேறு நல்ல கருத்துக்கள் இந்தியாவைச் சூழ்ந்திருக்கிற வட்டாரத்தில் அமைதி நிலைபெறுவதற்கும், ஆக்கிரமிப்பு அகற்றப்படுவதற் கும், இந்தியாவைச் சூழ்ந்திருக்கிற கடற் பகுதியில் வல்லரசுகள் படைப் பெருக்கத்தை தடுத்து நிறுத்தவும் இது வழிகோலும் என்று நம்புகிறேன்.

இந்த உயர்ந்த நோக்கம், நல்ல முடிவுகள் உலக மக்களுக்கு பயன்படும் வகையில் இந்த மாநாட்டில் கலந்துக் கொண்டிருக் கின்ற அண்டை நாடுகளுடைய தலைவர்கள் என்ற முறையில், ஸ்ரீலங்காவின் தலைவராக விளங்குகிற ஜெயவர்த்தனே அவர்கள் இந்தியாவிலிருந்து ஸ்ரீலங்காவிற்குச் சென்று, அங்கே பல தலை முறைகளாக வாழ்கிற மக்களின் குடியுரிமை பாதுகாக்கப்படும், சிவில் ரைட்ஸ் வழங்கப்படும் என்னும் கருத்தை தெரிவித்திருக்கிற அந்தச் செய்தி அணி சேரா நாடுகள் மாநாடு மூலம் நமக்குக் கிடைத்திருக்கிற ஒரு நல்ல செய்தி என்று கருதுகிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி.)

ஸ்ரீலங்காவில் வாழ்கிற தமிழர்கள் மட்டுமல்ல. உலகத்தில் எந்த நாட்டில் வாழ்கிற இத்தகைய சிறுபான்மையராக இருந் தாலும் அவர்களுடைய நியாயமான உரிமை நிறைவேறுவதற்காக, ஆதிக்க சக்திகளிடமிருந்து அந்த மக்களுக்கு நியாயமான உரிமை கள் வழங்கச் செய்ய இத்தகைய மாநாடுகளில் உருவாகுகின்ற நல்ல கருத்துக்கள் பயன்படும் என்பதுடன் மனித இனம் முன் னேறுவதற்கு, வறுமைக்கு ஆளாகிற மக்கள் வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கு, முதலாளித்துவ ஆதிக்கத்திலிருந்து சமூகத்தைக் காப்பதற்கு இந்த அணி சேரா நாடுகள் மாநாடு மிகச் சிறந்த வெற்றி பெறவேண்டுமென்று விரும்பி, மாநாட்டிற்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## 3. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்.....

திரு. ப. பொன்னுரங்கம் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சி கள் சம்பந்தப்பட்ட பல சட்ட முன்வடிவுகள் விவாதத்திற்கு வரவிருக்கின்றன. அவற்றுக்கு நாங்கள் சில அமென்ட்மெண்டுகள் கொடுத்திருக்கிறோம். சட்ட முன்வடிவுகள் விவாதத்திற்கு வரும் போது அவற்றுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களும் அவையில் வைக்கப்படுவது பழைய வழக்கம். இன்றைக்கு அந்தத் திருத்தங்கள் வைக்கப்படவில்லை. வீட்டுக்கு அனுப்பி விட்ட தாகச் சொல்லலாம். கேள்வித்தாள் எல்லாம் வீட்டுக்கு வரு கின்றன. ஆனால் இங்கேயும் வைக்கப்படும் ; இன்றைக்கு வைக் கப்படவில்லை ; வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் உறுப்பினர் களுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டிருக்கின்றன. இதிலே ஒழுங்குப் பிரச்சினைக்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர் களே, தமிழ்நாட்டில் இன்றைய தினம் பரவலாக கிராமங்களில் காலரா நோய் பரவி, பலர் இறந்திருக்கிறார்கள். அதுபற்றி 3 ஆம் தேதியே ஒரு கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன். அது மிக முக்கியமான பிரச்சினை. ஆகவே, அதை இன்றைக்கே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–30)

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கரும்புக்கு சென்ற ஆண்டு அறிவித்த விலையை இவ்வாண்டு அரசு குறைத்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், எம். செல்லமுத்து, டி. மணி, கே. ஆர். சுந்தரம், என். வரதராஜன், என். சங்கரய்யா, என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி, வி. கிருஷ்ணமூர்த்தி, சோ. அழகர்சாமி, மு. அம்பிகாபதி ஆகி

யோர் '' கரும்பு உற்பத்திக்கான செலவுகள் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதிகம் பணம் செலவு ஆகியுள்ள சூழ்நிலையில் சென்ற ஆண்டு கரும்பு விலையை விட இந்த ஆண்டு டன்னுக்கு சுமார் இருபது ரூபாய்க்கும் அதிகமாக விலையைக் குறைத்து தமிழக அரசு அண்மையில் அறிவித்துள்ளதால் கரும்பு விவசாயிகளிடையே எழுந்துள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. சொரணத்திற்குப் பதிலாக திரு. வரதராஜன் அவர்கள் பேசுவதற்கு என் அனுமதி கேட்டிருக்கிறார்கள். திரு. வரதராஜன்

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் எங்களுக்கு முதன்மையிடம் கொடுப்பதுதான் மரபு. அவர்கள் முதலில் பேச வேண்டும் என்று கேட்டால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. தாங்கள் கடைசியில் பேச என்னை அனுமதித்தாலும் பேசி விட்டுப்போகிறேன்.......(குறுக்கீடு).

திரு. என். சங்கரய்யா : முதலில் எந்தக் கட்சி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அறிவிக்கையைக் கொடுத்திருக்கிறதோ, அந்தக் கட்சி அடிப்படையில்தான் இதுவரையில் தாங்கள் முதலில் பேச அனுமதித்து வந்தீர்கள். அப்படியே இப்போதும் இருக்கட்டும். மரபை மாற்ற வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படித்தான் இது வரையில் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, திரு. வரதராஜன் அவர்கள் பேசட்டும்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாட்டில் கரும்பை உற்பத்தி செய்கிற உற்பத்தியாளர்கள், விவசாயிகள் மிகக் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். கவலையடைந்துள்ளார்கள். இந்த ஆண்டு நாம் கரும்புக்கு நிச்சயித்திருக்கக்கூடிய விலை டன்னுக்கு 155 ரூபாய். கடந்த ஆண்டு நாம் நிச்சயித்த விலை ரூ.175 அதற்கு முந்தைய ஆண்டு நாம் நிர்ணயித்த விலை ரூ. 185 ஆகவே, 185 லிருந்து இரண்டாண்டுகளுக்குள்ளாகவே 155 ஆக விலை குறைந்திருக்கிறது.





ஆனால், கடந்த இரண்டாண்டுகளுக்குள்ளே உற்பத்தி செலவு அதிகரித்திருக்கிறது. உரத்தின் விலையும் கூடியிருக்கிறது. தேவையான இடுபொருள்களின் விலையும் கூடியிருக்கிறது. உற்பத்திச் செலவு உயர்ந்திருக்கிறது. ஆகவே, இப்படி உற்பத்திச் செலவு கூடிக்கொண்டே போகிற நேரத்தில் இந்த 155 ரூபாய் என்ற விலை குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. இது மிக கடுமையான நிலை. அப்படிப்பட்ட கடுமையான நிலைமைக்கு விவசாயிகள் உள்ளாகியிருக்கிறார்கள், ஆனால் அதே நேரத்தில் சர்க்கரை ஆலையில் இருக்கக்கூடிய இலாபமானது, இவ்வாறு இதன் அடிப்படையில் குறைந்திருக்கிறதா என்று சொன்னால், அது கூடிக்கொண்டே இருக்கிறது என்ற புள்ளி விவரம்தான் கிடைக்கிறது. இதை நாடே அறியும் ; நாமும் அறிவோம். ஆகவே, கரும்பை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளின் நிலைமை போன ஆண்டு கிடைத்த 175-க்கு கூட விலை கிட்ட முடியாது போகிறதே என்ற கவலைக்கிடமான நிலைமையாகத்தான் இருக்கிறது.

தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய சாதாரண மக்களுக்குக்கூட, இன்றையதினம் உள்ள விலைவாசி நிலைமை தெரியும். காட்டில் வெகு சாதாரணமாக கிடைக்கக்கூடிய காட்டு விறகுகளுக்குக் கூட இன்றைய தினம் ஒரு டன்னுக்கு 300 ரூபாய் வீதம் கொடுத்து நம்முடைய தமிழ் மக்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இன்றையதினம் கண்ணீரை தண்ணீராகக் கொட்டி 10 மாதம் கஷ்டப்பட்டு பயிரிட்ட கரும்பை 150 ரூபாய்க்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அவர்கள் பெருமளவில் கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் உள்ளாக வேண்டியிருக்கிறது.

ஏற்கெனவே விவசாய விலைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் இதுகுறித்து கண்ணீர் விடுகிற நிலைமை இருந்து வருகிறபோது, கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு இந்த விலை குறைப்பு தனியாக தண்டனை வேறு கொடுப்பது போல் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழ் நாட்டினுடைய சர்க்கரை உற்பத்தி, அல்லது ஜீனி உற்பத்தி தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்ப்பதற்கு பதிலாக, உற்பத்தி செய்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு தண்டனை கொடுக்கும்படியான நிலைமையில்தான் இந்த விலை குறைப்பு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், பல ஆண்டுக் காலமாக விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகளை வற்புறுத்திக்கொண்டே வருகிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள், '' ஆலைகளுக்கு இதனால் இலாபம் குறையவில்லை அதிகரிக்கிறது என்பது மட்டுமல்ல, நாங்கள் கொடுக்கும்படியான கரும்புக்கு ஏற்ப விலைகள், அன்றாடம் கிடைப்பதே இல்லை. கொடுத்து 6 மாதங்கள் கழித்துதான் பணம் தருகிறார்கள். ஆனால், அதற்கான வட்டியை அவர்கள் கொள்ளை அடித்துக் கொள்கிறார்கள். எங்களுக்கு அதில் ஒரு இலாபமும் இல்லை.

அது மட்டும் அல்லாமல் ஆலைகளில் பிடித்தல் என்ற பெயரால் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் பிடித்துக் கொண்டு அவர்கள் இலாபம் அடைந்துகொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் உழைத்துக் கொண்டிருக்கும் எங்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லாத நிலையில், தண்டனை கொடுக்கும் படியான நிலையில் இப்படிப்பட்ட விலை குறைப்பு செய்வது ஏனோ '' என்று தமிழகத்தினுடைய கரும்பு விவசாயிகள் கண்ணீர் விடக்கூடிய காட்சி இருக்கிறது.

நெல்லை உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொன்னால் ஒரு குவிண்டாலுக்கு 150 ரூபாய் என்று கொடுக்கப்படவேண்டும் என்று விலை உயர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்நாளில் கரும்புக்கு மட்டும் இப்படிப்பட்ட விலை குறைவு இருப்பது சரியல்ல. அது மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் ஒரு டன்னுக்கு 250 ரூபாய்க்கு மேல் செலவு செய்ய வேண்டிய நிலையும் இருக்கிறது. மாநில அரசு இந்த விலை நிர்ணயித்திற்கு எப்படி கணக்கீடு செய்தார்களோ, நாம் அறியோம். ஆனால், நாம் மத்திய அரசை மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். நாள் தோறும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். மத்தியிலே இருப்பவர்கள் மாநிலங்களிலே உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளின் நிலை, மற்றும் உற்பத்தியாகக்கூடிய விளை பொருள்களின் உற்பத்திச் செலவு நிலைமை ஆகியவைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் ஆலை அதிபர்களை மட்டும் கவனத்தில் எடுத்துக் கொண்டு, நடவடிக்கைகளை எடுத்து வருவதால் உற்பத்தியாளர்களுக்கு போதுமான விலை கிடைக்கச் செய்ய முடியவில்லை.

அதனால், மாநிலங்களில் பல பிரச்சினைகள் எழுகின்றன. கடன் பட்டிருக்கக்கூடிய விவசாயியால் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாத நிலைமை இருக்கின்றது. கிராமப்புறத்திலே உள்ள அந்த விவசாயிகள் வறுமைக் கோட்டிற்குக் கீழே தள்ளப்படக்கூடிய நிலைமை ஏற்படுகின்றது. விவசாயிகள் இன்றைய தினம் உற்பத்தி செய்து பின் மறு உற்பத்தி செய்ய முடியாமல் திண்டாடுகிறார்கள். மாநிலங்களில் நாம் கொள்முதல் செய்யக் டிய நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுக்க வேண்டும் என்று சால்கிறோம். வறுமைக் கோட்டுக்குக் கீழே தள்ளப்படுகின்ற லைமை இருப்பதன் காரணத்தால் இன்றைக்கு நெல்லுக்குக் கூடுதலாக விலை கொடுக்கலாம் என்று அறிவித்திருக்கிறோம். அப்படிப்பட்ட நிலைமையில் இவ்வாறு கரும்புக்கு டன் ஒன்றுக்கு 155 ரூபாய் என்ற அறிவிப்பு மிகப் பெரிய பாதகமான ஒன்றாகும். எனவே, இன்றைக்கு நாம் நம்முடைய கஷ்டத்தையும், நஷ்டத்தையும் ஏற்றுக்கொண்டு தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிலைமையில் டன் ஒன்றுக்கு



250 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசினை மாநில அரசு வற்புறுத்த வேண்டும். மாநில அரசினைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு கொடுத்த 175 ரூபாயையாவது இந்த ஆண்டு உடனடியாகக் கொடுப்பதற்குரிய முயற்சியினை மேற்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தைப்பற்றி விவாதிக்க வேண்டி இருப்பதன் காரணத்தால் இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தி அமர்கிறேன்.

*திரு. எஸ். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகஅரசு இந்த ஆண்டு கரும்புக்கு 155 ரூபாய் டன் ஒன்றுக்கு விலை நிர்யணம் செய்திருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் சொன்னதைப்போல கழிந்த ஆண்டு கரும்புக்கு டன் ஒன்றுக்கு 175 ரூபாயாகவும் அதற்கு முந்தைய ஆண்டு 185 ரூபாயாகவும் இருந்திருக்கின்றது. நான் மிகுந்த அச்ச உணர்வோடு எண்ணிப் பார்க்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் கரும்பின் விலை குறைந்துகொண்டே போகின்றது என்ற நிலைமையில் வருகின்ற ஆண்டிலே இன்னும் அதன்விலை குறைந்துவிடுமோ என்று நான் அச்சப்படுகிறேன். எனவே 155 ரூபாய் என்பது மிக மிகக் குறைவு என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களும் அறிவார்கள். இதுகுறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் என்ன இனி சொல்வார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். வேளாண் விளைபொருள் கமிஷன் டன் ஒன்றுக்கு 155 ரூபாய் என்றும் இந்தியப் பேரரசு 130 ரூபாய் என்றும் நிர்ணயம் செய்திருக்கின்றது என்ற வாதத்தைச் சொல்லலாம் என்று நான் கருதுகிறேன். ஆனால் அண்மையிலே இருக்கின்ற ஆந்திரா மாநிலத்திலே காங்கிரஸ் கட்சியின் ஆட்சி இருந்தபோது அப்போது முதலமைச்சராக இருந்த திரு.விஜயபாஸ்கர ரெட்டி அவர்கள் 190 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருந்தார்கள். அதற்குப் பின்பு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த திரு. என். டி. ராமாராவ் அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டிருப்பதாக அறிகிறேன்.

இன்றைக்கு தமிழகத்திலே கரும்பு விவசாயம் செய்யும் பெரும்பாலான விவசாயிகள் ஏழை விவசாயிகளாக இருப்பதன் காரணத்தால் அவர்கள் மெத்த இடர்பாட்டுக்கு ஆளாகி இருக்கிறார்கள். வறட்சியோ வரலாறு காணாத அளவுக்கு இப்போது இருந்துகொண்டிருக்கின்றது. மின் தட்டுப்பாட்டைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை, அந்த அளவுக்குக் கடுமையாக இருக்கின்றது. ஒரு நாளில் 6 மணி நேரம், 5 மணி நேரம் தான் மின்சாரம் வரும் என்ற நிலைமையில் எப்போதுவரும், எப்போது போகும் என்பதே தெரியவில்லை. எப்போது மின்சாரம் துண்டிக்கப்படும் என்பது பற்றியும் யாருக்கும் தெரியவில்லை. எனவே, விவசாயிகள் தண்ணீரைப் பாய்ச்சி விவசாயம்

செய்யவில்லை, கண்ணீரையும், செந்நீரையும் பாய்ச்சித்தான் விவசாயம் செய்ய வேண்டிய பரிதாபமான நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் விவசாய உற்பத்திச் செலவு இன்று கடுமையாகக் கூடி இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையில் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 155 ரூபாய் என்று நிர்ணயித்திருப்பது வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போன்றதாகும். இது நியாயத்திற்கும் ஒத்துக்கொள்ளாது, தர்மத்திற்கும் ஒத்துக் கொள்ளாது. எந்தவிதமான முயற்சியும் இல்லாமல், தண்ணீர் பாய்ச்சாமல், உரம் இடாமல் வளர்க்கப்படுகின்ற வேலிக்கருவை விறகுகூட டன் ஒன்றுக்கு 300 ரூபாய் என்று இருக்கின்றது. ஆனால் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து, களை எடுத்து பயிர் செய்து அறுவடை செய்கின்ற விவசாயிக்கு டன் ஒன்றுக்கு கரும்புக்கு 155 ரூபாய் என்பது எப்படிப் பொருத்தமானதாகும்? எனவே உடனடியாக இதை எல்லாம் இந்த அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும். எத்தனையோ செலவுகளைச் செய்கின்றது இந்த அரசு. லட்சக்கணக்கான பணம் கூட அல்ல, கோடிக் கணக்கான பணத்தை எதற்கெல்லாமோ செலவிடுகின்றது. எனவே விவசாயிகள் நன்றாக வாழ்வதற்குக் கூட இல்லை, உயிரோடு இருப்பதற்காகவாவது டன் ஒன்றுக்கு 200 ரூபாய் என்ற வகையிலே நிர்ணயம் செய்ய தமிழக அரசு முன்வர வேண்டும். கரும்பு விவசாயம் செய்கின்ற விவசாயிக்கு டன்னுக்கு 200 ரூபாய் கொடுத்து மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறோம் என்ற பெயரைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

நான் சில நாட்களுக்கு முன்பு பார்த்தேன். தொழில் துறை அமைச்சர் அவர்கள் டன் ஒன்றுக்கு 155 ரூபாய் என்று அறிவித்தார்கள். தொழில்துறை அமைச்சர் தொழில்களுக்குச் சாதகமாகத்தான் அறிவிப்பார். ஆனால் வேளாண்மைத்துறை அமைச்சர் வேளாண்மைக்குச் சாதகமானவராக இருக்கவேண்டும். ஆனால் வேளாண்மைத்துறை அமைச்சரின் அறிவிப்பு வேளாண்மைப் பற்றி வருவதில்லை. வேண்டாத சில யோசனைகளைச் சொல்வதும், காங்கிரஸைச் சாடுவதும் என்ற நிலைமையில்தான் அவரது அறிக்கைகள் வருகின்றன.

[முற்பகல் 10-40]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வப்போது எந்த எந்த வைத்தியம் தேவையோ அவைகளைத்தான் செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேளாண்மை இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். 100-க்கு 80 சதவீத பெருமக்கள் இந்த வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கிற காரணத்தினால் அவர்களிடம்

அக்கறை காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் தமிழக மக்களின் கருத்தை அவர்கள் சார்பாக சொல்கிறேனே தவிர வேறு இல்லை. டன் ஒன்றுக்கு 200 ரூபாய்க்கு அதிகமாக இந்த அரசும் அறிவிக்க வேண்டும் என்று தொடர்ந்து கரும்பு விவசாயம் செய்கின்ற சாதாரண விவசாயி என்ற முறையில் தமிழக விவசாய பெருமக்கள் சார்பாக உங்கள் மூலமாக இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன். இது மெத்த அவசரமான நிலை. இதைக் காட்டிலும் அவசரமான நிலை தமிழகத்தில் எதுவும் கிடையாது. ஆகவே இதுபற்றி விவாதிக்க மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 21 சர்க்கரை ஆலைகளுக்கு பல இலட்சக்கணக்கான கரும்பு விவசாயிகள் கரும்பினை சப்ளை செய்கிறார்கள். அவர்களுக்கு உரிய விலை நடப்பு கரும்பு பிழியும் சீசனில் கிடைத்தால்தான் அடுத்த ஆண்டுக்கு ஆலைக்கு தேவையான கரும்பினை அவர்கள் நடுவார்கள். இந்த ஆண்டு போதுமான விலை கிடைக்கவில்லை என்றால் கரும்பு விவசாயிகள் அடுத்த ஆண்டுக்கு நடக்கூடிய சாத்தியம் இல்லாமல் போய்விடும். ஏறக்குறைய 21 சர்க்கரை ஆலைகள் இன்றைக்கு ஆடக்கூடிய கரும்பிலே பாதி அளவுக்கு கூட கரும்பு கிடைக்காமல் மூடக்கூடிய சூழ்நிலைதான் இன்றைய தினம் தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அக்டோபர் மாதத்திலே கரும்பு சீசன் ஆரம்பிக்கிறது. மற்றைய மாநிலங்களில் என்ன செய்கிறார்கள், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசாங்கத்தை நடத்தக்கூடியவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். ஆந்திராவில் நவம்பர் மாதம் 28 ஆம் தேதி விலையை நிர்ணயித்து அறிவித்து இருக்கிறார்கள். 196 ரூபாய் என்று மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னது போல். ஒரு டன்னுக்கு 196 ரூபாய் என்று நவம்பர் மாதத்திலே சொல்லிவிட்டார்கள். அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் அந்த 196 ரூபாய் போதுமான விலை என்று கருதினால் அவர்கள் மீண்டும் கரும்பு நடுவார்கள். அது குறைவாக அங்கே சொல்லியிருந்தால் அவர்கள் அதை விட்டு விட்டு வேறு மகசூலுக்குச் சென்று விடுவார்கள். அக்டோபர் மாதம் போய், நவம்பர் மாதம் போய் டிசம்பர் மாதம் போய் ஜனவரி மாதம் 8ஆம் தேதி கரும்பு விவசாயிகளுடைய உயர் மட்ட குழுவினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்களும் கூட்டினார்கள். நானும், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அருமை சகோதரரும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். அவர்கள் சொன்னார்கள் இன்னும் ஒரு வாரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கலந்து கொண்டு அன்றைய தினம் எடுத்த முடிவுகளை நாங்கள் அறிவிக்கிறோம் என்று சொன்னார்கள், ஜனவரியும் போய்விட்டது. பிப்ரவரியும்

போய்விட்டது. இன்றையதினம்வந்து 155 ரூபாய்தான் கரும்பு விவசாயிகளுக்கு கொடுப்போம்என்கிற நிலையில் இந்த அரசாங் கம் அறிவித்து இருக்கிறார்கள் என்றால் விவசாயிகள் மீண்டும் கரும்பு நட வேண்டாமா ? அப்படி நடப்படாததன் மூலமாக அடுத்த ஆண்டுக்கு கரும்பு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு கிடைக்காத அளவுக்கு நீங்கள வழிவகைகளைத்தான் செய் கிறீர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் சில மாதங்களுக்கு முன்னதாக சொன்னார்கள், மத்திய அரசாங்கம் நாங்கள் அதிகமாக விலை கொடுப்பதற்கான முயற்சிகளில் எங்களுடைய கைகளை கட்டி விட்டார்கள் என்று. 130 ரூபாய் என்று அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் அவர்கள் சொல்லியிருப் பதற்கு மேலாக நாங்கள் அறிவிக்க வேண்டுமானால் மத்திய அர சாங்கத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் அறிவிக்கவேண்டும் என்றும் எங்களை அறிவிக்கமுடியாமல் எங்கள் கைகளை கட்டி விட்டார்கள் என்று மேடையிலோ எங்கேயோ பேசியதாக பத்திரிக் கையில் வந்தது. இப்போது அந்த நிலமை கூட கிடையாது. எங்களை கலக்காமல் உரிய விலையை, நியாயமாக விலையை விவசாயிகளுக்கு பெற்றுத்தரலாம், விலையை அறிவிக்கலாம் என்று அண்மையில் மத்திய அரசாங்கம் முன்பு இருந்ததை தளர்த்து சொல்லியிருக்கிறார்கள். இப்படி சொன்ன பிறகு கூட என்ன காரணத்திற்காக நீங்கள் 155 ரூபாய் என்று அறிவித்து இருக்கிறீர் கள் என்பதை எங்களால் புரிந்துக்கொள்ளமுடியவில்லை.

அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் 130 ரூபாய் என்று சொல்லியிருக் கிறார்கள். அதுவே தப்பு தான். அதை நாங்கள் ஒத்துக் கொள்ளவில்லை. ஏன் என்றால் மத்திய அரசாங்கம் நிர்ணயித்து இருக்கக்கூடிய அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் சென்ற ஆண்டிலே யும் சரி இந்த ஆண்டிலேயும் சரி மினிமம் பிரைஸ் 155 என்று அவர்கள் சிபாரிசு செய்தார்கள். ஆனால் மத்திய மந்திரி சபை யில் 130 ரூபாய்க்கு மேல் ஏற்றினால் அது மத்திய அரசுக்கு பஞ்சப் படி, நிவாரணப்படி கொடுப்பதற்கு 300 கோடிக்கு அதிகமாக வரும் என்ற காரணத்தினால் ரூபாய் 130ஐ வைத்துவிட்டு அதை உயர்த்தாமல் அந்த உயர்த்தும் பொறுப்பினை மாநில அரசின் தலையில் கட்டியிருக்கிறார்கள். அந்த சிரமம் எங்களுக்குப் புரிந்தது தான். இருந்தாலும் இந்த ரூ. 155 என்று சொல்வது இந்த விவசாயிகளுக்கு கட்டுப்படி ஆகாது. ஏற்கெனவே வறட்சி நிலையாக இருக்கிறது. ஏற்கெனவே 40 டன் 45 டன் ஒரு ஏக்கருக்கு கிடைத்தது என்றால் இன்றைய தினம் 30 டன் தான் ஒரு ஏக்கருக்கு கிடைக்கக்கூடிய நிலமை இருக்கிறது. வறட்சியால் கரும்பு காய்ந்து போய்விட்டது. யீல்டு குறைந்துவிட்டது. சென்ற ஆண்டு தமிழ்நாட்டிலே 80 லட்சம் 82 லட்சம் டன் கிரஷ் பண்ணி னார்கள். இந்த ஆண்டிலே 68 லட்சம் டன்னைக்கூட எட்டமுடியாத அளவுக்கு இன்றையதினம் நிலமை இருக்கிறது. அதோடு மட்டும்



அல்ல. சென்ற ஆண்டு இந்த மாதத்தில் எவ்வளவு கரும்பு நட்டார் கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஆலைகளில் எவ்வளவு கரும்பைப் பிழிந்தார்கள். அதேபோல் இந்ததேதி வரை இன்றைய தினம் தமிழ்நாட்டில் எவ்வளவு கரும்பை நட்டு இருக்கிறார்கள். எாவளவு கரும்பை சர்க்கரை ஆலையில் பிழிந்தார்கள் என்ற கணக்கைப் பாருங்கள். இதற்கு உரிய விலை நியாயமான விலை கிடைத்தால் தான் இந்த துறையைக் காப்பாற்ற முடியும். விவசாயிகளைக் காப்பாற்றமுடியும். இந்த விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களைக் காப்பாற்ற முடியும் என்கிற நிலமைக்கு நீங்கள் வரமுடியும்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். மாநில அரசாங்கமே, மத்திய அரசாங்கத்திற்கு கரும்புக்குக் குறைந்த பட்ச விலையாக 200ரூபாய் நிர்ணயிக்க வேண்டுமென்று எழுதி யிருக்கிறீர்கள், முதலமைச்சரே பரிந்துரை செய்ததற்குப் பிறகு இந்த அரசாங்கமே 200 ரூபாய் கரும்புக்கு குறைந்த பட்ச விலையாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி 8.5 பர் சன்ட் ரிக்கவரி கொடுக்கவேண்டுமென்று பரிந்துரை செய்த தற்குப் பிறகு 155 ரூபாய் என்று நிர்ணயித்து இருக்கிறீர்களே இது எந்த விதத்திலே நியாயத்தின்பாற்பட்டது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் கேட்க விரும்புகிறேன்.

இதனைச் சற்று உயர்த்துவது விவசாயிகளுக்கு மட்டுமல்ல பல நூற்றுக்கணக்கான கோடிக்கணக்கான ரூபாய்களை அந்தத் தொழிலிலே போட்டிருக்கிறீர்களே, அரசாங்கத்தின் சார் பில் 8 சர்க்கரை ஆலைகளும், தனியார் சார்பாக 9 சர்க்கரை ஆலைகளும் நடக்கின்றனவே, அடுத்த ஆண்டு முழுவதும் அந்த ஆலைகள் எல்லாம் வேலை செய்யவேண்டுமென்றால் உடனடியாக நீங்கள் மத்திய அரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறீர்களே, அந்த 200 ரூபாயாவது பெற்றுத் தரவேண்டும். அப்படிப் பெற்றுத் தருவதற்கு என்ன வழிவகை? இப்போது மில்களிலே 155 ரூபாய் கொடுக்கமாட்டேன், அவர்களே நஷ்டப்படுகிறார்கள் என்ற வாதங்களையெல்லாம் கூட அரசாங் கத்தின் சார்பிலே சொல்லமுடியும். நான் அதற்காக இந்த அவையை ஒத்திவைத்துப் பேசவேண்டுமென்று நினைக்கிறேன். அந்தக் கருத்துக்களை இப்போதே நான் சொல்கிறேன். மாநில அரசாங்கம் கரும்பு விவசாயிகளிடமிருந்து பர்ச்சேஸ் டாக்ஸ் ஆகவும் கரும்பு செஸ் ஆகவும் ஆண்டு ஒன்றுக்கு 25 கோடி ரூபாய் வசூலிக்கிறார்கள். கரும்பு விவசாயிகளின் அந்தப் பணத்தி லிருந்து தான் சர்க்கரை ஆலை அதிபர்கள் கட்டுகிறார்கள். இந்த ஆண்டு ரோடு போடுவதற்கு மட்டும் 2½ கோடி ரூபாய் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். மீதியிருக்கக்கூடிய 22½ கோடி ரூபாயை வறட்சி நிவாரணப் பணியாகக் கருதி இந்த ஆண்டு 70 லட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 30 ரூபாய் மாநில அரசாங்கம் கொடுக்கச் செய்து விவசாயி களுக்கு ரீப்ளோ என்ற முறையிலே மீண்டும் கொடுப்பீர்களானால்

அந்த 155 ரூபாயோடு மேலும் ஒரு 30 ரூபாய் அவர்களுக்குக் கிடைக்கும். திரு என். டி. ஆர். ஆந்திராவிலே சொல்கிறார் 196 ரூபாய் கொடுக்க வில்லையென்றால் நான் சர்க்கரை ஆலைகளை எடுத்துக்கொள்வேன் என்று மிரட்டுகிறார். இங்கே முதலமைச்சர் அ. இ. அ. தி. மு. க அமைச்சர்கள் நீங்கள் சொல்லக்கூடிய விலையை கொடுக்கவில்லை என்றால் மில்களை எடுத்துக்கொள்வோம் என்று மிரட்டுங்களேன், இந்த ஆண்டு ரிசர்வ் பண்டிலிருந்து ஒவ்வொரு ஆலையும் ஒவ்வொரு கோடி ரூபாய் கொடுக்கலாம், அப்படிக் கொடுப்பதன் மூலமாக 155 ரூபாயோடு 15 ரூபாய் மேலும் சேர்த்து கொடுக்கலாம். அரசாங்கத்தினுடைய பணத்திலிருந்து நாங்கள் கேட்கவில்லை. கரும்பு விவசாயிகளுக்கு, பர்ச்சேஸ் டாக்ஸ், செஸ் ஆகியவை மூலமாக கிடைக்கின்ற அந்தப் பணத்தை மட்டும் திருப்பிக் கொடுத்தால் விவசாயிகளுக்கு 200 ரூபாய் கிடைக்கும். அப்படிக் கிடைப்பதன் மூலமாக விவசாயிகள் பலன் அடைவார்கள், அதன் காரணமாக அடுத்த ஆண்டு கரும்பு உற்பத்தி பாதிக்கப்படாது, அதன் மூலமாக மில்கள் மூடப்படாமல் பொருளாதார சிக்கல்கள் ஏற்படாமல் பத்தில் ஒரு பங்கு உற்பத்தி செய்யக்கூடிய சர்க்கரை ஆலைகள் உள்ள நம் தமிழ் நாடு என்ற பெருமைக்கு குறைவு ஏற்படாமல், அது காப்பற்றப்படவேண்டும்—அந்த நிலையில் தமிழ்நாடு முன்னுக்கு வரவேண்டும், விவசாயிகள் காப்பற்றப்படவேண்டுமென்று கூறி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த அவையை ஒத்திவைத்து இன்னும் விரிவாக அதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நம் மாநில அரசு 155 ரூபாய் ஒரு டன் கரும்புக்கு என்று நிர்ணயித்து இருப்பது போதாது என்று கூறி பல காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். சென்ற ஆண்டு இருந்ததைவிட இந்த ஆண்டு உற்பத்திச் செலவு அதிகமானது என்பதைப் பல நேரங்களிலே இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். உற்பத்திச் செலவு அதிகமானதற்குக் காரணம் இந்த ஆண்டு பல விதமான செலவுகள் அதிகமாகியிருக்கின்றன, மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக பல இடங்களில் ஆயில் இஞ்சின் மூலமாக பயிர் செய்திருக்கிறார்கள் என்ற நிலமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே வறட்சியின் காரணமாக ஏக்கருக்கு 40 டன்னாக இருந்த கண்டுமுதல் 30 டன் என்ற அளவுக்குக்கூட விளையுமா என்று நினைக்கக்கூடிய அளவுக்கு கண்டுமுதல் குறையக்கூடிய நிலைமை

[முற்பகல் 10·50]

ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசு இப்போது மாநில அரசுகள் தங்களுடைய இஷ்டம் போல் ஆங்காங்கு இருக்கிற நிலைமைகளுக்கு ஏற்ப விலை நிர்ணயித்துக்கொள்ளலாம் என்ற அதிகாரத்தை வழங்கியிருக்கிறது. மற்ற மாநிலங்களை



ஒப்பிட்டுப் பார்த்தால் ஆந்திராவும் மகாராஷ்டிரமும், கர்நாடகமும் நம்மைவிட அதிகமான விலையை விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். இங்கே சொல்லக்கூடிய நேரத்தில் ஆலை முதலாளிகள், எங்களுக்கு கட்டுப்படியாகாது; கடந்த ஆண்டைவிட இப்போது லெவி சர்க்கரையின் விலையும், வெளி மார்க்கெட்டிலுள்ள விலையும் இரண்டும் ஒன்றாக இருப்பதின் காரணமாக 130 ரூபாய்க்கு மேலே விலை கொடுப்பதோ,150 ரூபாய்க்கு மேலே கொடுப்பதோ இயலாது என்று சொல்கிறார்கள். இது தவறோ, நியாயமோ அதற்குள் போக விரும்பவில்லை. இன்றைக்குக் கட்டுப்படியாக வில்லை என்று சொல்கிறபோது கடந்த ஆண்டுகளில் பெற்ற அதிகப்படியான லாபத்தைப் பற்றியும், அல்லது கூட்டுறவு ஆலைகளில் ரிசர்வ் நிதி என்று சொல்லக்கூடிய முறையிலே அதிகமான நிதி ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே விவசாயிகளுக்கு கட்டுப்படியாகவில்லை என்று சொன்னால் எப்படி அவர்கள் அடுத்த ஆண்டு பயிர் செய்வார்கள்? என்ற கேள்வி நம் அனைவரின் மத்தியிலும் பிரதானமான கேள்வியாக அமைந்திருக்கிறது. கடந்த காலங்களில் கரும்பு பயிர் செய்வது குறைந்து நெல்லுக்குச் சென்றார்கள். இப்போது கரும்பிற்கு அதிகமான விலை கிடைக்குமென்று அவர்கள் வந்தபோது கரும்பிற்கும் குறைந்த விலை கொடுப்பதன் காரணமாக வருகிற காலங்களில் கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகள் அறவே கரும்பு உற்பத்தியை நிறுத்தி விடுவார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. கடந்த ஆண்டில் கூட நாம் கொடுத்த 175 ரூ. விலை கட்டுப்படியாகாமல் ஈரோடு வட்டத்திலே திண்டல் என்ற கிராமத்தில் கரும்பு விவசாயம் செய்த பலபேர் விவசாயிகள் தங்களுடைய கரும்பைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் கட்டுப்படியாகவில்லை என்பது முக்கிய காரணம். ஆலைகளுக்கும் கொடுக்க முடியவில்லை; வெல்லமாக ஆக்கினாலும் கூட கட்டுப்படியாகாத நிலை ஏற்பட்டதற்கு பின்னால் அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போதுகூட வெட்டுக்கூலி லாரி வாடகை முதலியவைகள் அதிகமாக ஆனதற்கு பின்னால் கடந்த ஆண்டைவிட அதிகமான விலை வேண்டுமென்று அத்தனை சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகளும், அத்தனை அரசியல் கட்சிகளும் கூட, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் கூட கேட்கிறார்கள் 250 ரூபாய் ஒரு டன்னுக்கு கொடுத்தால் தான் விவசாயத்தில் கரும்பு சாகுபடி செய்கிறவர்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய ஒரு நிலை இருக்கும். அதற்கு குறைந்த விலை என்று சொன்னால் நஷ்டம் வரும்; அடுத்த ஆண்டு அந்தப் பயிரை செய்யமாட்டார்கள், என்ற நிலையை அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படியிருக்கிற போது 155 ரூபாய்தான் கொடுக்க முடியும் என்று நம்முடைய மாநில அரசு அறிவித்திருக்கிறது என்றால்,

அடுத்த ஆண்டிற்கு கரும்பே வேண்டாம், சர்க்கரை ஆலைகள் வேண்டாம், சர்க்கரை ஆலைகளை மூடிவிடலாம் என்று ஒரு நிலைக்கு அவர்கள் வந்திருக்கிறார்களா என்று நான் அறியவிரும்புகிறேன். கடந்த ஆண்டு கொடுத்த விலை கட்டுப்படியாகவில்லை என்ற நேரத்தில் இந்த ஆண்டு உற்பத்திச் செலவு அதிகரித்து இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் வறட்சி வேறு கடுமையாக பாதித்திருக்கிறது. கண்டுமுதலும் குறைந்து போயிருக்கிறது. இப்படியிருக்கிற நேரத்தில் 155 ரூபாய் தான் கொடுப்போம் என்று சொன்னால் எந்த விதத்தில் அது நியாயம்? மத்திய அரசு விலை நிர்ணயக் கமிஷன் விலை 155 ரூபாய் என்று சொல்கிறது. விலை நிர்ணயக் கமிஷனைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு ஆதரவாக அது இருக்கிறதா? அல்லது விவசாயிகளை கொள்ளையடித்து ஆலை முதலாளிகள் அதிகமான கொள்ளை லாபம் அடைவதற்கு அனுசரணையாக இருப்பதற்கு மத்திய அரசாங்கம் விலை நிர்ணயக் கமிஷனை ஏற்படுத்தியிருக்கிறதா? என்பதைப் பற்றியெல்லாம் சர்ச்சை இருக்கிறது. உற்பத்தி செய்யக்கூடிய நெல்லானாலும் சரி, கரும்பானாலும் சரி, விலை நிர்ணயம் செய்யக்கூடிய நேரத்தில், உற்பத்தி செய்கிற விவசாயிகளுடைய நலனைக்கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு யோசனையுடன்அந்தக் கமிஷன் செயல்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் இருக்கிற 21 சர்க்கரை ஆலைகளும் சீராகச் செயல்பட வேண்டுமென்று சொன்னால், அதிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை பெற வேண்டுமென்று சொன்னால், கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்கவேண்டும். அவர்கள் போட்ட முதலுக்கு நஷ்டமில்லாமல், போட்ட முதலை அவர்கள் எடுக்கக்கூடிய ஏற்பாட்டை மாநில அரசாங்கம் செய்துதர வேண்டும். அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்ற சர்ச்சைகுப் போக விரும்பவில்லை. ஏனென்றால் மத்திய அரசாங்கம் நீங்களே விலைநிர்ணயம் செய்து கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்கள். அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது ஆலை முதலாளிகள் கட்டுப்படியாகவில்லை என்று சொல்கிறார்கள் என்று சொல்வார்கள். இந்த வருஷம் அவர்கள் என்னதான் சொன்னாலும்கூட, கடந்த காலத்தில் அவர்கள் அதிகமான லாபம் சம்பாதித்த பணம் இருக்கிறது. ரிசர்வ் நிதி இருக்கிறது. ஒரு ஆண்டில் அவர்கள் கொஞ்சம் லாபம் குறைந்தாலும் கூட, விவசாயிகள் காப்பாற்றப்பட வேண்டும். ஆந்திராவில் ராமாராவ் அவர்கள் 196 ரூபாய் கொடுக்கவேண்டும், இல்லையென்றால் லைசென்ஸ் தர மாட்டேன்; அரசு அந்த ஆலைகளை எடுத்துக்கொள்ளும் என்று சொல்கிறார்கள். அந்த முறையில் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மையை அபிவிருத்தி செய்யக்கூடிய முறையிலே வழிவகை செய்யவேண்டும். நம்முடைய 21 ஆலைகளும் சரியாக இயங்க வேண்டும். கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகள்



நஷ்டம் இல்லாமல் கரும்பு உற்பத்தி செய்யவேண்டும். கரும்பை விட்டுவிட்டு வேறு பயிர்களுக்கு அவர்கள் சென்றுவிட்டால் கரும்பு கிடைக்காது. ஆலைகளை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுவிடும். வருகிற காலங்களில் விவசாயிகளுக்கு 250 ரூபாய் விலை கொடுக்கவேண்டும்; 155 ரூபாய் என்பது போதாது. இதுபற்றி ஆளும் கட்சியினரும் சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிற வகையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரம் முதலிய இடு பொருள் செலவு, டீசல் செலவு, கூலி உயர்வு முதலியவை உயர்ந்துள்ளதாலும், வறட்சியின் காரணமாகவும், கரும்புக்கு விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலையை நிர்ணயிக்கவேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் அவா, இலட்சியம். அதன் காரணமாகவே சாகுபடி செலவுக்கு ஏற்ப கரும்புக்கு விலையை நிர்ணயிக்கும்படி மைய அரசுக்குத் தமிழ்நாடு அரசு பரிந்துரைத்தது; வற்புறுத்தியது.

ஏ.பி.சி. எனப்படும் விவசாய விலை நிர்ணயக் குழு குறைந்தபட்ச விலையை டன்னுக்கு ரூ. 155 என நிர்ணயிக்கலாம் என மைய அரசுக்குப் பரிந்துரைத்தது. மைய அரசு, 1981–82-ல் நிர்ணயித்த டன்னுக்கு ரூ. 130 என்ற அதே விலையை 1982–83-க்கும் நிர்ணயித்து அறிவித்துள்ளது.

1981–82-ல் குவிண்டால் ரூ. 302.13 ஆக இருந்த 'லெவி' சர்க்கரை விலையை 1982–83-ல் ரூ. 309 ஆக மைய அரசு உயர்த்தியுள்ளது. அதே நேரத்தில் சென்ற ஆண்டில் குவிண்டால் ரூ. 450 ஆக இருந்த வெளிச் சந்தை சர்க்கரை விலை, கடந்த நவம்பர் 1982-ல் ரூ. 332 ஆகக் குறைந்துள்ளது.

மைய அரசின் ஆணைப்படி உற்பத்தியில் 65 சதவீதத்தை லெவிக்கும் 35 சதவீதத்தை வெளிச் சந்தைக்கும் கொடுக்க வேண்டியுள்ளது. வெளிச் சந்தை விலை குறைந்துவிட்ட நிலையில் தமிழக சர்க்கரை ஆலைகள் இடர்ப்பாட்டிலே இருக்கின்றன.

மைய அரசு அறிவித்த குறைந்தபட்ச விலை ரூ. 130-ஐக் கொடுப்பதென்றாலே தமிழகத்தைச் சேர்ந்த 2 ஆலைகளில் மொத்தம் ரூ. 70.11 இலட்சம் இழப்பு ஏற்படும் நிலை உள்ளது. ஆயினும் இந்த அரசு விவசாயிகள் நலன் காக்க வேண்டும் என்ற எண்ணத்திலேதான், ஏ.பி.சி. பரிந்துரைத்த ரூ. 155 என்ற விலையை அறிவித்தது. இந்த விலைப்படி கொடுக்கும் போது தமிழகத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகள் 12-ல் 10 ஆலைகளில் ஏறத்தாழ ரூ. 679·33 இலட்சம் இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பை ஈடுசெய்ய அரசு வழிவகை செய்ய வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது. எனவே, கரும்புக்கு டன்னுக்கு ரூ. 155-க்கு மேல் நிர்ணயிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாம் இந்த நேரத்தில் ஏதோ ஆலைகளின் பக்கம் பேசு கிறோம், அல்லது கரும்பு விவசாயிகளின் பக்கம் பேசுகிறோம் என்கிற நிலையில்லாமல் இந்த இரண்டு தரப்பையும் கருத் திலே கொண்டு விலை நிர்ணயிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது. ஆகவேதான் இதிலே நாம் நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா என்று பார்க்காமல் ஆலைகள் இயங்குகின்ற நேரத்திலேதான் கரும்பு விவசாயி களும் அதிலே பலன் அடைய முடியும். கரும்பு விவசாயிகள் கரும்பைப் பயிரிட்டால்தான் ஆலைகளும் தனது பணியை ஒழுங்குற நிறைவேற்ற முடியும். அதிலேயிருக்கிற பணியாளர் களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்க முடியும். ஆக, இந்த இரண்டையும் கருத்திலே கொண்டு நாம் இந்த விலையை நிர்ண யிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இது தொடர் பாக மைய அரசு நீங்களே அறிவித்துக் கொள்ளுங்கள் என்று அறிவித்திருக்கிறார்களே, இதற்காக ரிசர்வ் வங்கி கடன் கொடுக்குமா என்றால் நிச்சயமாகக் கடன் கொடுக்காது. ஆகவே நம்முடைய நிதி நிலைமைக்குள்ளேதான் இவைகளையெல்லாம் சரிக்கட்ட வேண்டிய நிலைமையிருக்கிறது. இருந்தாலும் இருக்கிற சூழ்நிலையை எண்ணிப் பார்த்து, மாண்புமிகு உறுப் பினர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்த கருத்துக்களை எண் ணிப் பார்த்து, கரும்பு விவசாயிகள் உற்சாகம் இழக்காமல் அவர்கள் மீண்டும் கரும்புப் பயிரிடத்தக்க நல்ல மன நிலையில் மகிழ்ச்சியோடு அவர்கள் ஆலைகளுக்குக் கரும்பை அனுப்பத்தக்க வகையில், அரசு இதைத் தனியாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். மேலும், பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஒத்திவைத்து விவாதித்ததைப்போன்ற அளவுக்குக் கருத்துக் கள் சொல்லப்பட்டுவிட்ட காரணத்தினால், இதை இனி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டியதில்லை யெனக் கூறி அமர்கின்றேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** 'டெசிஷன்' எப்போது என்று சொல்லவேண்டும் சார், 'டிலே' செய்யக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காலம் கடத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கத் திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.



## 5. அறிக்கை அளித்தல்

### உரிமைக் குழு

**மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9—2—1983 ஆம் தேதியன்று பேரவைத் தலைவர் அவர்களால் உரிமைக்குழுவுக்கு அனுப்பப்பட்ட பிரச்னை குறித்து உரிமைக் குழுவின் இடைக்கால அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 6 சட்ட முன்வடிவுகள் ஊராட்சிகள் பற்றி இருக்கின்றன. அவைகளை எல்லாம் ஒன்றாக எடுத்துக் கொண்டு விவாதித்தால் கடைசியாகப் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவற்றைத்தனித் தனியாக நீங்கள் மொழியுங்கள். அதற்குப் பிறகு விவாதத்தை பொதுவாக வைத்துக் கொள்ளலாம்.

### (அ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1983.

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதி காரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் ''.

---

* 1983 ஆம் ஆண்டு மார்ச் 4-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(முற்பகல் 11-00)

(ஆ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 20/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ''.

(இ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'

(ஈ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 22/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

(உ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன் வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 23/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

* 1983ஆம் ஆண்டு மார்ச் 4ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



(ஊ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு. 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1983 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 24/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் மொழியப் பெற்ற சட்ட முன்வடிவு களின் மீது பொது விவாதம்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, திருத்தங் களை எப்பொழுது எடுத்துக் கொள்வது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு சட்ட முன் வடிவையும் தனித் தனியே பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்பொழுது அவைகளை எடுத்துக் கொள்ளலாம். இப்பொழுது பொது விவாதம்தான்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு பெ. க. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சிகள், சென்னை மாநகராட்சி போன்ற மக்களுடைய அமைப்புக்களில் மக்களுடைய பிரதிநிதி கள் இல்லாமல் பல்லாண்டு காலமாக தனி அதிகாரிகளினுடைய நிர்வாகத்தின் கீழே நிர்வாகம் சீர்குலைந்து இருக்கின்ற நிலையைப் பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்திலே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் அறிந்திருந்தாலும் இந்த அரசாங் கத்திற்கு இந்த நேரத்தை நான் பயன் படுத்திக் கொண்டு, விரைவிலே நீங்கள் தேர்தலை நடத்த வேண்டிய ஒரு கடமை யிலே இருக்கிறீர்கள் என்பதை உணர்த்துவதற்காக நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

* 1983 ம் ஆண்டு மார்ச் 4ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

நான் ஏற்கெனவேகூட இந்தப் பேரவையிலே சொல்லியதைப் போன்று, பல்லாண்டு காலமாக, பேரவை கூடுகிறது என்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இந்த மசோதாக்களைத் தாக்கல் செய்வார்கள். ஆண்டுக்காண்டு ஜமாபந்தி நடைபெறும், அந்த ஜமாபந்தியைப் போல, அந்த ஜமாபந்தியிலேயாவது ஏதாவது மக்கள் பிரச்சனை தீருமா என்றால் தீராது, அதைப் போல, பேரவைக் கூட்டம் வருகிறது என்றால் இங்கே, தனி அதிகாரிகளினுடைய பதவிக் கால நீட்டிப்பு மசோதா கட்டாயம் வரும்.

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள், இளைஞர் தான். அவர்கள் இப்பொழுது தனது மகளுக்குத் திருமணம் செய்கின்ற வயதை எய்தியிருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் குடும்பப் பொறுப்பை நன்கு உணர்ந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆனால் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லையே, சீரழிக்கப்படுகின்றனவே என்பதைப் பார்க்க வேண்டும். அரசாங்கம் ஏதோ சில நல்ல திட்டங்களைப் போட்டாலும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு அது போய்ச் சேரவில்லையே என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தாலும், இந்தப் பேரவையில் அவர்கள் தங்களுக்கு உள்ள சாமர்த்தியத்தை வைத்து ஏதோ மக்கள் இந்தத் திட்டத்தால் சுபிட்சத்தோடு வாழ்வதைப் போல ஒரு மாயையை உண்டாக்குவதற்கு முயற்சிக்கிறார்கள். ஆனால் இந்த மாயை விரைவில் அகல வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே எல்லா மாவட்டங்களிலேயும் கடும் வறட்சி ஏற்பட்டிருப்பதைப் பற்றி பேரவையில் எங்களைப் போன்ற சட்டப் பேரவை உறுப்பினர்கள் சொல்கிறோம் ; மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலேயும் சொல்கிறோம்; குடிக்கத் தண்ணீர் இல்லை. பல கிராமங்களில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் இருந்தாலும், கிணற்றில் நீர் இருந்தாலும், அந்த மோட்டார்களைப் பழுது பார்க்கக்கூட நாதியில்லை.

பல்வேறு கிராமங்களிலே அரிஜனங்களினுடைய காலனிகளிலே இருக்கின்ற தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டிகளில் ஏற்பட்டு இருக்கின்ற ஒரு சிறிய பழுதைக் கூட கவனிப்பதற்கு ஆட்கள் இல்லை என்று சொன்னால், அமைச்சர் அவர்கள் தங்களுக்கு இருக்கின்ற வசதியையும் வாய்ப்பையும் வைத்துக் கொண்டு ஏதோ இவைகள் எல்லாம் நடைபெறுவதாகச் சொல்லலாம். அண்ணா அவர்கள் கூட ஒரு முறை சொன்னார்கள். ஜனநாயகத்திலே தங்களுக்கு மெஜாரிட்டி இருக்குமேயானால் பறப்



பது வெள்ளைக் காக்கை என்று சொன்னால், ஆமாம் அது வெள்ளைக் காக்கை என்று ஒத்துக் கொள்வார்கள் என்று சொன்னார்கள். ஏன் என்றால் தங்களுக்கு மெஜாரிட்டி இருக்கின்ற காரணத்தாலே, இங்கே நாங்கள் ஒத்துக் கொள்ளலாம், இந்த அவையிலே மெஜாரிட்டி இருக்கின்ற காரணத்தால், ஆனால் நாட்டிலே இருக்கின்ற மக்கள் நடைபெறுகின்ற விவாதத்தைக் கவனிக்கிறார்கள். இது என்ன உண்மையை விவாதிக்கின்ற பேரவையா ? அல்லது உண்மைக்கு மாறானவற்றைத்தான் அங்கே பேசுவார்களா என்று மக்கள் எல்லோரும் சிந்திக்கின்ற ஒரு சூழ்நிலையை இன்றைய தினம் தமிழகத்திலே இருக்கின்ற கிராம மக்கள் எண்ணிப் பார்க்கின்ற ஒரு சந்தர்ப்பத்திலே இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. என்ன நிலைமை ? இங்கே கூட நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வறட்சிக்காக இத்தனை கோடி ரூபாயை, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு ரூபாய் என்ற முறையிலே ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அவைகள் எல்லாம் முறையாக செலவழிக்கப்பட்டதா ? கிராமங்களிலே இருக்கின்ற குடி தண்ணீர்க் கிணறுகள் ஆழப்படுத்தப் பட்டனவா ? ஆழப்படுத்தப்படவில்லை. என்ன காரணம் ? நீங்கள் கிணறுகளை ஆழப்படுத்த நிர்ணயித்திருக்கின்ற தொகை கட்டுப்படியாகக் கூடியதாக இல்லை என்று ஒப்பந்தக்காரர்கள் வரவில்லை. இதை யாரிடத்திலே சொல்வது. மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலே சொன்னால் என்ன சொல்கிறார். நாங்கள் அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம் என்று சொல்கிறார். அரசாங்கத்திற்குச் சொன்னால் அரசாங்கம் என்ன சொல்கிறது? தொகையை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கிறது. இப்படிப் பட்ட ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை தமிழகத்திலே இன்றைய தினம் நிலவுகிறதை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். காரணம் மக்களுடைய பிரதிநிதிகள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள், நகர மன்றத் உறுப்பினர்கள், ஒன்றியத்தினுடைய பெரும் தலைவர்கள் இருப்பார்களேயானால், பல நேரங்களிலே சட்டமன்ற உறுப்பினர்களைப் போன்று அவர்களும் அக்கறையோடு மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அமைச்சர்களையோ, அதிகாரிகளையோ அணுக முடியும். இன்னும் விரைவாக இந்தப் பணி நடைபெறும்.

நான் ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். எவ்வளவு கிராமங்களிலே, நடை முறையிலே இந்தத் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்திலே கிராமங்கள் சீரழிந்து இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக என்னுடைய தொகுதியிலே நடந்த ஒன்றிரண்டு விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே, கலசப்பாக்கம் தொகுதியிலே கடலாடி என்ற கிராமம் இருக்கிறது. பேரூராட்சியாக அது இல்லை என்றாலும், அதிகமாக மக்கள் தொகை கொண்ட

ஒரு கிராமம். அங்கே மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இருக்கிறது. ஓரளவிற்கு இந்த நேரம் வரையிலும்கூட தண்ணீர் அதிக அளவிலே இல்லாமல் இருக்கிறது. மின்சாரம் இல்லை. ஏற்கெனவே அந்த ஊராட்சியிலே தலைவர் இருந்த நேரத்திலே ஒரு ஆயில் என்ஜின் வாங்கப்பட்டது. இப்போது அது பழுதடைந்திருக்கிறது. அதை ஒரு மணி நேரத்திலே யாராவது ஒரு மெக்கானிக்கை கூட்டி வந்தால் அதைப் பழுது பார்த்து இருந்தால் இந்தக் கிராமத்திற்கு தண்ணீர் தர முடியும். நான் 3 மாத காலமாக கோட்ட வளர்ச்சி அதிகாரியிலேருந்து, ஊராட்சி ஆணையர் வரையிலே நேரடியாகவும்,. தொலைபேசி மூலமாகவும், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும் எடுத்துச்சொல்லியும், இந்தத் தேதி வரையிலேயும், அந்த ஆயில் என்ஜின் பழுது பார்க்கப்படவில்லை. என்ன காரணம்? அந்தக் கிராமத்திற்கு என்று தலைவர் இருந்திருப்பாரானால், 24 மணி நேரத்திற்குள்ளாக அந்த ஆயில் என்ஜினைப் பழுது பார்த்திருக்க முடியும். அந்த கிராம மக்களுக்கு குடி தண்ணீர் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தியிருக்க முடியும். ஆனால் இன்றையதினம் இப்படிப்பட்ட ஒரு அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அதைப்போன்று இன்னொரு விஷயம். துரிஞ்சாபுரம் தொகுதியிலே இன்னொரு ஒன்றியும் இருக்கிறது. நார்த்தாம்பூண்டி என்ற அந்தக் கிராமத்திலே தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி —நான் தலைவராக இருந்த காலத்திலே அப்போது அமைச்சராக இருந்தவர்களை வைத்து திறந்து வைத்திருக்கிறேன்.— அந்தத் தொட்டியிலேகூட ஓரளவு தண்ணீர் இருக்கிறது. மின் சார மோட்டார் இருக்கிறது. இப்போது ஓரளவிற்கு மின்சாரம் வந்தாலும்கூட அதிலிருந்து தண்ணீர் இறைக்க முடிகிறதா? இல்லை ஏன்? அந்த மின்சாரமோட்டாரின் தண்ணீர் இறைக்கமுடியவில்லை அங்கே இருக்கின்ற பைப்புகளிலே காற்று ஏறிக்கொண்டால் சில நேரங்களிலே தண்ணீர் அது எடுக்காது. அந்த சிறிய ரிப்பேரைக் கூடஅங்கே இருக்கின்ற அதிகாரிகள் பழுதுபார்க்க முடியவில்லை. எத்தனை மாதங்களாக என்றால், $1\frac{1}{2}$ ஆண்டுகளாக. சட்டமன்றப் பேரவை உறுப்பினர் என்ற முறையிலே போகின்றபோது மக்கள் என்னிடம் சொல்லுகிறார்கள். நான் சம்பந்தப்பட்ட ஆணையரிடத்திலே சொல்லியிருக்கிறேன். கோட்ட வளர்ச்சி அதிகாரிகள் இடத்திலே சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு அதற்கு 'பணம் கூட அந்த ஊராட்சி நிதியிலேயிருந்து 500 ரூபாய் பணம் எடுக்கப் பட்டுவிட்டன. இதுதான் வேடிக்கை. ஆனால் பழுது பார்கக்ப் பட்டுவிட்டதா? இல்லை. நான் நேற்று, ஞாயிற்றுக்கிழமை ஊருக்குச்சென்ற அந்த நேரம் வரையிலும் அந்த 'தரைமட்ட



நீர்த்தேக்க தொட்டி பழுதுபார்க்கப்படவில்லை. இப்படிப்பட்ட
ஒரு அவல நிலைமை இருக்கலாமா? இதற்கு ஒரு ஆட்சி தேவையா?
ஒரு அமைச்சர் தேவையா? ஒரு சட்டமன்றம் தேவையா?
எத்தனை பேர்கள் இருந்தாலும் காரியம் நடைபெறுகிறதா?
கேட்டால் நீங்கள் உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம் என்று
சொல்லக்கூடும். இவைகள் எல்லாவற்றிற்கும் நீங்கள் என்ன
செய்யப் போகிறீர்கள்? நாம் இவ்வளவு பேர்கள் இருந்
தாலும் காரியங்கள் நடைபெறவில்லை. இதற்கென்ன செய்யப்
போகிறீர்கள் என்றுஉங்கள் மூலமாக கேட்க விரும்புகிறேன்....

(முற்பகல் 11–10)

அதேபோல இன்றைய தினம் நம்முடைய ஊராட்சி
ஒன்றியங்களிலே வறட்சி காலங்களில் குடிதண்ணீர் கிடைப்ப
தில்லை. ஆங்காங்கே கைப் பம்புகள் போடவேண்டுமென்று
அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகள், மக்கள் பிரதிநிதிகள்
இல்லாத காரணத்தால் சரிவர நடைபெறவில்லை. பல கிராமங்
களில் ஏற்கனவே போடப்பட்ட கை பம்புகளில் பழுது ஏற்பட்டு
அவைகள் பழுது பார்க்கப்படவில்லை. நமது குடிதண்ணீர்
வடிகால் வாரியத்துறை அமைச்சர் அவர்கள்—தொழிலாளர்
நலத்துறை அமைச்சர் அவர்கள் சொல்வார்கள்—10 மணிக்கு
இங்கே சொல்லுங்கள் 11 மணிக்கு அங்கே பழுது பார்க்கப்
படும் என்று சொல்வார்கள். கேட்பதற்கு நன்றாகத்தான்
இருக்கிறது.

10 மணிக்கு அல்ல, நீண்ட காலமாகவே—6 மாத கால
மாகவே—பல மாதங்களாக எத்தனையோ முறை சொல்லி
யும் அந்த மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிபழுது பார்க்கப் படாத
நிலையில் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் அரிய
மங்கலம் என்ற கிராமம் இருக்கிறது. அங்கே ஏற்கனவே
குடிதண்ணீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ஒரு மேல்
நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஏற்படுத்தப்பட்டது. அதனுடைய
மோட்டார் பழுது அடைந்துவிட்டது. 1977–லிருந்து நான்
சட்டப் பேரவை உறுப்பினராக இரண்டாவது முறை வெற்றி
பெற்று அதைப் பற்றி இங்கேயும் எடுத்துச் சொன்னேன்.
அதிகாரிகளிடத்திலும் சொல்லி இருக்கிறேன். ஆனால் என்ன
சொல்லியும் அது பழுது பார்க்கப்படவில்லை. இதற்கு எப்
போதுதான் விடிவுக்காலம்? எங்களுக்கு உச்ச நீதிமன்றமோ
உயர் நீதி மன்றமோ தேவை இல்லை. தேர்தல் தேவை.
அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். அதைப்போன்று எத்த
னையோ பிரச்சினைகள். சில இடங்களில் நகரங்களில்
பாருங்கள்—எத்தனையோ கைப்பம்புகள் போடப் பட்டுள்ளன.
ஓர் இடத்திலே நீரோட்டங்களைப் பார்த்து, கைப்பம்புகள்
அமைக்கின்றபோது அங்கே தண்ணீர் கிடைக்கிறது. அதிலே
யோர் பம்பைப் போட்டுத் தண்ணீரைத் தாருங்கள் என்று
அவர்களிடத்திலே சொல்லுகிறோம் ........ (குறுக்கீடு).

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் மானியக் கோரிக்கை மீது விவாதத்தை நடத்திக்கொண்டிருப்பது போல் தெரிகிறது. சட்டமுன்வடிவின் மீது விவாதத்தை நடத்துவதுபோல் தெரியவில்லை. ஆகவே தயவுசெய்து சட்டத்தைப் பற்றி வாதம் நடத்தினால் நல்லது. இப்போதே விளக்கம் வேண்டாம். 17 ஆம் தேதி மானியம் வரப்போகிறது. அப்போது விவாதித்துக் கொள்ளலாம். இப்போது சட்டத்திலே பேசினால் ஏதுவாக இருக்கும்.

திரு பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்திலே ஒன்றுமே இல்லை. தேர்தல் நடக்கப் போவது இல்லை. நீங்கள் தனி அதிகாரி பதவியை நீட்டித்துக் கொண்டே போகிறீர்கள், அப்படி நீட்டிப்பதானால், கிராமங்களிலுள்ள ஏழை எளிய மக்கள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும் என்பதற்காகத் தான் இந்த தகவலை் சொல்கிறேன். சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. இதைச் சொல்வதற்கு நீங்கள் அனுமதிக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டத்தைப் பற்றி பேசுங்கள்.

திரு பெ. சு. திருவேங்கடம் : சட்டம் ஒரு இருட்டறை என்று அண்ணாவே சொல்லியிருக்கிறார். என்னுடைய வாதம் அதற்கு விளக்காக இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அதேபோல கிராமங்களிலே குடிதண்ணீர் பிரச்சினை நியாயமான நிலையிலே போக்கப்படவில்லை. ஆனால் இவைகள் எல்லாம் தனி அதிகாரியுடைய தாமதத்தினால் சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லை என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி பல முறை சொல்லியிருக்கிறார்கள். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. இரு முறை அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்திருந்தார்கள். அன்றைய தினம் 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம்—சட்டம் சட்டம் என்று சொல்கிறார்களே அந்த சட்டத்திலே சொல்கிறேன், 1960-ஆம் ஆண்டிலே சமுதாய வளர்ச்சித் திட்டம் என்ற பெயரிலே கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. இன்றைய தினம் அதனுடைய நிலைமை என்ன? இந்தத்தனி அதிகாரிகளுடைய நிர்வாகம் நீடிக்குமானால், அரசாங்கம் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்



தவறான பல உள்ளாட்சி நிர்வாகங்களை அதனுடைய அமைப்பு முறைகளை மாற்றுகின்ற முறையில் எத்தனையோ சீர்கேடுகள் நடைபெறுகின்றன.

ஒரு காலத்திலே ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ் கல்வியைச் சேர்த்தார்கள். துவக்கக்கல்வி ஊராட்சிகளின் மூலம் நல்லமுறையில் செய்யப்பட்டு வந்தநிலையில், ஊராட்சி ஒன்றியங்களிடம் அவை ஒப்படைக்கப்பட்டு, அவைகள் செயல்பட்டு வந்தன. ஆனால், இன்றையதினம் கல்வி ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் இருந்து நீக்கப்பட்டு, கல்வித் துறைக்கு மாற்றப்பட்டு விட்டது. காரணம், இதைத் தட்டிக்கேட்க நாதியில்லை. ஊராட்சி ஒன்றியப் பெரும் தலைவர்கள் இருந்து இருந்தால்—378 பெரும் தலைவர்கள் இருந்து இருந்தால்—உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை இதற்காக நெருங்கி, இத்தகைய சட்டம் கொண்டுவருவதைத் தடுத்து இருப்பார்கள். இன்றைக்கு அவர்கள் அங்கேயில்லாததால் பல்வேறு சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து கால்நடை நிர்வாகம் போய்விட்டது. கல்வி நிர்வாகம் போய்விட்டது. விவசாயம் பறிக்கப்பட்டு விட்டது. இன்னும் சொல்லப்போனால், உணவு உற்பத்தி, குடிநீர் பிரச்சினை போன்றவற்றைக்கூட அதன் நிர்வாகத்தில் இருந்து எடுத்து விட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் ஏற்கனவே குறுக்கிட்டுக் கூறியதுபோல, மாண்புமிகு உறுப்பினர் மானியக் கோரிக்கை மீது பேசுவதுபோல் பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. இந்தச் சட்டமுன்வடிவின்மீது மட்டும் பேசவேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இப்படிப்பட்ட நிலையில் ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து பணிகள் கொஞ்சம் கொஞ்சமாக பறிக்கப்பட்டு, அந்த அமைப்புகளே அழிந்துவிடுமோ என்ற அச்சம் தரத்தக்க வகையில் செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை.

தேசீய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பல வேலைகள் செய்யப்படுகின்றன. ஆனால் அதில் நடக்கின்ற உண்மை நிலை என்ன? தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் * *

---

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் மிகச்சிறந்த முறையில் தமிழ் நாட்டில்தான் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று மைய அரசே சமீபத்திலே கூட தெரிவித்து இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், கடந்த ஆண்டு மைய அரசு கொடுத்த தொகையை ஒழுங்காக, முறையாக செலவழித்துக் கணக்குக்காட்டிய மாநிலம் தமிழ் மாநிலம்தான் என்றும் மத்திய அரசு நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறது. இந்த ஆண்டுகூட அதற்காக ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேல் 155 சதவீதம் இந்த தேசீய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் நாம் ஒழுங்கான முறையில் செலவுகள் செய்து இருக்கிறோம் என்று மத்திய அரசாங்கம் தெரிவித்து இருக்கிறது. இந்த நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

* * *

இந்த மாதிரி குற்றச்சாட்டுகள் கூறுவதாக இருந்தால், அதற்கான விவரங்களையும், விளக்கங்களையும் தயவு செய்து இந்த மன்றத்தில் அவர்கள் தெரிவிக்கவேண்டும். இந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்தின் திட்டம். மைய அரசு 50 சதவிகிதமும், மாநில அரசு 50 சதவிகிதமும் என்று கொடுத்து, இந்தத் திட்டம் சிறந்த முறையில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்திலே ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், அவற்றைக் குறிப்பிட்டுக் கூறினால், விளக்கமாக எடுத்துத்தெரிவித்தால் நல்லது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டு, அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பெறவேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : அதைப் பற்றி ஒரு விளக்கம் அளிக்க வாய்ப்புக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்டபிறகு, அதைப் பற்றி விளக்கம் கோருவதற்கு அனுமதி அளிக்க இயலாது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆதாரம் இருந்தால், என்னிடத்தில் காட்டிவிட்டு, அனுமதிபெற்று, அதன் பிறகு பேசலாம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மற்ற மாநிலங்களை விட தமிழ் நாடு நல்லமுறையில் செய்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

* * *

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : * * * மத்திய அரசாங்கம் நம்முடைய மாநிலத்திற்கு நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறது. ஆகவே, இதிலே தவறுகள் இருக்கிறது என்று சொன்னால் அதைப்பற்றி இங்கே விளக்கவேண்டும். நமக்கு மத்திய அரசாங்கம் ஒதுக்கிய தொகை 30 கோடி ரூபாய். ஆனால் நாம் 46 கோடி ரூபாய் இதற்காகச் செலவழித்து அந்த அளவிற்கு வேலைகள் நடைபெற்று இருக்கின்றன.

திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் கூறிய குற்றச்சாட்டுகளை நீக்கியதுபோல், மாண்புமிகு அமைச்சர் கூறிய அந்த வாசகங்களையும் நீக்க உத்தரவிடுவீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுவும் நீக்கப்படுகிறது.

(முற்பகல் 11-20)

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் தமிழ்நாட்டிலே இந்த தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தில் நாம் பல்வேறு தொல்லைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். சொல்லமுடியாத அளவுக்கு பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகள் நடைபெறுகின்றன. அதற்கு அமைச்சரவர்கள் ஆதாரம் கேட்டார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறோம்.

முக்கியமாக பணம் எடுக்கின்ற அதிகாரம் ஆணையரிடம் இருக்கிறது. சாதாரணமாக 1,500 ரூபாய் வரையில் பணம் எடுத்தால் ஏற்கெனவே, ஆணையாளர் தலைவர் என்ற பெயரால், தலைவர் மெஷர்மென்ட் புக்கில் ரிக்கார்டு பண்ணலாம். இந்த டிபார்ட்மெண்டில் இருக்கிற மேற்பார்வையாளர் செக்மெஷர் செய்யலாம், இப்படி செலவிடலாம் என்ற விதி இருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் சொன்னார்கள். ஆணையாளர் தலைவராக ஆனபிறகு அதை செக்மெஷர் பண்ணுகிற அதிகாரம் மேலான

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ருக்கு இருக்கலாமா என்று கேட்டார்கள். ஒன்றிய ஆணையாளருக்குக் கீழே இருக்கிற மேலாளர் செக்மேஷர் செய்வது சரியாக இருக்குமா என்று சொன்னார்கள். அப்போது அதை மாற்றுகிறோம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். சொல்லி இத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன; மாற்றினார்களா? இன்னும் மாற்றவில்லை. அதனால்தான் ஊழல் ஏற்பட வழிவகை உண்டாகிறது. தேர்தலுக்கு முன்னாலாவது அந்த மாற்றத்தை செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரி நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, நகராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, மாநகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவுகள் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் கொடுத்திருக்கிற திருத்தங்களையொட்டி ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

திருச்செந்தூர் தேர்தலிலிருந்து ஒரு பழமொழி தமிழ் நாட்டில் பிரபலமாகி வருகிறது. ''யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே'' என்ற அந்தப் பழமொழியைப் போன்று தமிழ்நாட்டில் ''சட்டமன்றக் கூட்டம் வரும் முன்னால்; ஊராட்சிகள், நகராட்சிகள் அதிகாரிகள் பதவி நீட்டிப்பு மசோதா வரும் பின்னால்'' என்று சொன்னால் அது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் ஒவ்வொரு சட்டமன்ற கூட்டத் தொடரிலும் இந்த தனி அதிகாரிகள் பதவிக்கால நீட்டிப்பு மசோதா வந்துகொண்டே இருக்கிறது.

நான் ஒரு வார ஏட்டிலே பார்த்தேன்; அமைச்சர் அவர்களும் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். தூக்குத் தண்டனைப் பெற்ற ஒரு கைதி சிறையிலே இருக்கிறான், அவனைப் பார்க்க சிறையின் தனி அதிகாரி வருகிறார், அந்தக் கைதியைப் பார்த்து உன்னுடைய கடைசி ஆசை என்ன என்று கேட்கிறார். இந்த ஊராட்சி ,நகராட்சித் தேர்தலை ஒருமுறை பார்த்துவிட வேண்டுமென்று அவன் சொல்கிறான். உடனே அந்த அதிகாரி 'இது நடக்க முடியாத காரியம்' என்று சொல்வது போல அந்த வார இதழில் கேலிச் சித்திரம் போடக்கூடிய நிலைமை இன்றைக்கு தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.



பொதுவாக ஊராட்சிகள், ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள் எல்லாம் ஜனநாயகத்தின் தொட்டில் என்று சொல்வார்கள். ஜனநாயக முறைப்படி இந்த அமைப்புகள் செயல்பட்டால் தான், இந்த அமைப்புகளிலே பணியாற்றி, பயிற்சி பெற்று, பின்னால் நம்முடைய சட்டமன்றம் போன்ற பெரிய அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாக பணியாற்ற முடியும் என்பதால் அப்படிச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டில் 6, 7 ஆண்டுகளாக இந்த ஜனநாயகத் தேர்தல் அமுக்கப்பட்டிருக்கிறது, ஜனநாயகத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது என்று நான் கருதுகிறேன். முதலிலே, இந்த அரசு பதவியேற்றத்திற்குப் பின்னாலே அன்றைய நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு காளிமுத்து அவர்கள் ஒவ்வொரு முறையாக இந்த தனி அதிகாரிகளின் பதவி நீட்டிப்பை நீட்டித்துக் கொண்டே வந்தார்கள். இரண்டாவது, முறையாக இந்த கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகும் தற்போது நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கிற மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள், அந்தத் தனி அதிகாரிகளின் பதவி காலத்தை நீட்டிக் கொண்டே வருகிறார்கள். இதில் எங்களுக்கு இருக்கும் கவலையும், வேதனையும் என்னவென்றால், தேர்தலை தள்ளிப் போடுவது சரியில்லை, விரைவிலே தேர்தல் நடக்குமேயானால், பல ஆயிரக்கணக்கான மக்களின் பிரதிநிதிகள் அந்த மன்றங்களிலே போய் அமர்வார்கள். அங்கே நேரிடையாக மக்களின் பிரச்சனைகளை எடுத்துச் சொல்வதற்கும், தீர்வு காண்பதற்கும் ஏதுவாக இருக்க முடியும். ஆனால் தற்போது அப்படிப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகள் அந்த மன்றங்களில் இல்லாத காரணத்தால், சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நாங்கள், ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தாலும் சரி, எதிர் கட்சி உறுப்பினராக இருந்தாலும் சரி, கிராமங்களுக்குச் செல்ல முடியவில்லை.

காரணம், கிராமங்கள் தோறும் இன்று வரலாறு காணாத வறட்சி. கடுமையான குடிதண்ணீர் தட்டுப்பாடு, மின்சார தட்டுப்பாடு, சாலைகள் சரியாக இல்லை—இப்படி ஒவ்வொரு இடத்திலும் பிரச்சனைகள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அவருடைய தொகுதியின் கீழ் ஏறத்தாழ 300 வரையில் கிராமங்கள் வரலாம். ஒரு கிராமத்திற்கு 10 பிரச்சனைகள் என்று வைத்தாலும் கூட, ஆயிரக்கணக்கில் பிரச்சனைகள் விஸ்வரூபம் எடுக்கின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால், நேரிடையாக ஒவ்வொரு பிரச்சனையிலும் ஈடுபட்டு, சட்டமன்ற உறுப்பினராகிய நாங்கள், தொகுதி பணியிலே ஈடுபட முடிவதில்லை. இப்படி உள்ளாட்சி, மாநகராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் வருவார்களேயானால் இப்படிப்பட்ட பிரச்சனைகளில் பாதிக்குமேல் அங்கே எடுத்துச்

சென்று விவாதிக்க முடியும் என்ற காரணத்தால்தான், இந்த
தனி அதிகாரிகளின் பதவியை நீடிக்கக் கூடாது என்று நாங்கள்
வற்புறுத்துகிறோம்.

அதுமட்டுமல்ல. அந்த மன்றங்களில் மக்களுடைய பிரதிநிதி
கள் இல்லாத காரணத்தால் ஊராட்சி ஒன்றியங்களிலும், மாநக
ராட்சிகளிலும் ஆளும் கட்சியில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள்
சொல்கிற காரியங்கள்தான் நடைபெறுகின்றன. எங்களைப்
பொறுத்தவரையில் அந்த இடங்களில் எங்களுக்கென்று ஒரு
அறை இருக்கிறது. அங்கே மேசையிருக்கிறது. மேலே காற்
றாடி இருக்கிறது. அத்தோடு திருப்தி படவேண்டியதுதான்.
ஆனால் முக்கியமான நடவடிக்கைகளும் முக்கியமான வளர்ச்
சிப் பணிகளும் எப்படி நடைபெறுகின்றன என்று பார்த்தால்,
உள்ளபடியே சொல்வதற்கும் வேதனையாகத்தான் இருக்கிறது.
இதுவரையில் வேறு எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு
ஆளும் கட்சியினருடைய தலையீடு அதிகமாக இருக்கிறது
என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும். உடனே நம்
முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்பார். இப்படி
பொதுப்படையாக பேசலாமா? ஆதாரம் உண்டா? ஆதா
ரம் இருந்தால் எடுத்துச் சொல்லலாம் என்றெல்லாம் கேட்பார்.
(குறுக்கீடு) உங்கள் மூலமாக பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, நான் அவருக்குச் சொல்ல விரும்புகிறேன், நம்முடைய
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மதிய
உணவு திட்டத்தில் பொறுப்பாளரை நியமனம் செய்வதற்கு
தேர்வு தமிழகம் பூராவிலும் நடைபெற்றது. பல்வேறு ஊர்
களில் இருந்தும் அந்த தேர்வில் கலந்து கொள்வதற்கு வந்
திருந்தார்கள். ஆனால் அந்தத் தேர்தல் எப்படி நடந்தது என்
றால் ....(குறுக்கீடு)

தனி அதிகாரிகளுடைய பதவி நீட்டிப்பு செய்யக்கூடாது என்
பதற்காகத்தான் இவைகளையெல்லாம் அரசின் கவனத்திற்கு
கொண்டு வர விரும்புகிறேன். அந்த தேர்வில் ஆளும் கட்சியினைச்
சேர்ந்தவர்களிடமிருந்து ஒரு பட்டியலைப் பெற்று அந்த
பட்டியலின் அடிப்படையில்தான் அந்த பொறுப்பாளர்கள்
சத்துணவு திட்டத்தின்கீழ் நியமனம் செய்யப்பட்டார்கள். இம்
மாதிரியான முறைகள் இங்கு அங்கு என்றல்ல, எல்லா இடங்
களிலும் நடைபெற்றிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலை
மைகள் உருவாகாமல் தடுக்கும் காரியங்களில் அரசு கவனம்
செலுத்தாவிட்டால், எப்படி நல்ல நிர்வாகம் தமிழகத்தில் அமைய
முடியும். எப்படி தூய்மையான நிர்வாகம் அமைய முடியும் என்கிற
வேதனையான என்னுடைய உணர்வினை இங்கே சொல்லிக்
கொள்ளாமல் என்னால் இருக்க முடியவில்லை.

எங்களுக்குப் பெயர் சட்டமன்ற உறுப்பினர்கள், ஆனால்,
எங்களால் எந்த நல்ல பணிகளையும் விரைவாகச் செய்ய முடிவ
தில்லை. வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்குப் போகிறோம். அங்கே



தீர்மானங்களையும் நிறைவேற்றுகிறோம். தொடர்ச்சியாக
நூற்றுக் கணக்கில் அங்கே தீர்மானங்களை நிறைவேற்றுகிறோம்.
ஆனால், அந்தத் தீர்மானங்கள் என்னவாயிற்று ? ஒன்றிரண்டா
வது நிறைவேற்றப்பட்டிருக்கின்றதா ? இல்லை. ஊராட்சி
ஒன்றிய ஆலோசனைக் குழு என்று ஒரு குழு போடப்பட்டிருக்
கிறது. அது எங்கே நடைபெறுகிறது ? எவ்வாறு கூடுகிறது ?
வாரத்திற்கு ஒரு முறையா ? மாதத்திற்கு ஒரு முறையா ?
6 மாதங்களுக்கு ஒரு முறையா அல்லது ஒரு ஆண்டுக்கு ஒரு
முறையா ? அந்தக்குழு எப்படி கூடுகிறது? என்ன நடவடிக்கை
களை எடுத்து வருகிறது ? அந்த நடவடிக்கைகளின் பின் விளைவு
கள் என்ன ஆகிறது என்று பார்த்தால், எல்லாமும் வெறும்
சம்பிரதாயமாகவும், சடங்காகவும்தான் இருக்கிறதே தவிர
மக்களுக்கு தேவையான பணிகளில் முழுமையான பலன் கொடுப்ப
தாக எதுவும் இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே
தான் இன்று எடுத்துக் கொண்ட இந்த மசோதாவை அரசாங்கம்
திரும்பப் பெற்றுக் கொண்டு, தேர்தலை உடனடியாக நடத்து
வதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று நாங்கள்
கேட்கிறோம். உடனேயே நம்முடைய மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் தடை இருக்கிறது என்ற காரணத்
தைச் சொல்லி தப்பித்துக் கொள்வார்கள். வெகுசௌகரியமான
சாக்கு அது. தடையை திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கை
களில் முழுமையாக அரசு முயற்சி எடுக்கலாமே............

மாண்புமிகு திரு, ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் ஏற்கென
வே 4-ஆம் தேதியன்று நடைபெற்றது. அப்போதே நான் பதில்
சொன்னேன். உங்களுடைய கட்சிக்காரரர் வெங்கடாசலம்
வழக்கறிஞர், அவர்களுடைய மேல் முறையீட்டை வாபஸ்
பெற்றுவிட்டால், எந்தப் பிரச்சினையும் இருக்காது என்று.
தயவு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் காரி
யத்தைச் செய்யலாம். அப்படி அவர் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு
மீறி செயல்படுவாரேயானால், கட்சியிலிருந்து அவரை நீக்க
உங்களுக்கு அதிகாரம் உண்டு. ஆகவே, அப்படிப்பட்ட நிலை
மைகளை எடுக்காமல், இங்கே விவாதம் செய்துக் கொண்டிருப்
பது பயன் இல்லை என்று அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் அதைத்தான் முன் எச்சரிக்கை
கையாகச் சொன்னேன். உங்களுக்கு நல்ல வேளையாக உச்ச
நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது என்று. ஆனால், அதற்கு
முன்னாலேயே இங்கே நீங்கள் சொல்லவில்லையா, யாராவது
டெல்லியிலே உச்சநீதி மன்றத்திலே தடை வாங்காமல் இருந்தால்
நாங்கள் தேர்தல் நடத்துவோம் என்று எத்தனை தடவை
அதை சொல்லியிருக்கிறீர்கள். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த

வரையில் டெல்லியிலே சுப்ரீம் கோர்ட்டிலே இதற்கென தடை உத்தரவு வாங்குவதற்காக, யாருக்கும் அனுமதி கொடுத்தது கிடையாது. விரைவாக தேர்தல் நடத்த வேண்டும் என்று தான் நாங்கள் விரும்புகிறோம். அதுதான் எங்கள் கட்சியினுடைய கொள்கைகளில் ஒன்றாகவும் இருந்திருக்கிறது. அதிலிருந்து நாங்கள் ஒரு அணுவளவும் பின் வாங்கவில்லை. நீங்கள் தான் அவ்வப்போது வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் எதையாவது சொல்லி தள்ளிப் போட்டுக் கொண்டேயிருக்கிறீர்கள்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது எப்படி இருக்கின்றது என்று சொன்னால், பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுவதுபோல் இருக்கின்றது. இங்கே தேர்தலை நடத்து என்று சொல்வதும், நெமிலி பஞ்சாயத்து யூனியனின் முன்னால் தலைவராக இருந்த திரு. வெங்கடாசலம் பிள்ளையை உச்சநீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்யச் செய்து தடையைப் பெறவேண்டும் என்று சொல்வதும் எப்படிச் சரியானதாகும் ? ஆகவே, அப்படிப்பட்ட நிலைமையில் இரட்டை வேடம் போட்டுக் கொண்டு இந்திரா காங்கிரஸ் கட்சியின் நண்பர்கள் பேசுவது எப்படிச் சரி ?

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் இது மேடைப் பேச்சுக்குச் சரியானது. ஆனால் உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். யாரோ ஒருவர் பெயரைச் சொல்லி, அவர் கட்சிக் கட்டுப்பாட்டினை மீறி இருக்கிறார் என்று சொல்லி அவர்மீது நடவடிக்கை எடு என்று சொல்வது நியாயத்திற்கு சரியாக இல்லை. எங்களுடைய கட்சி யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை. அவர் தனிப்பட்ட முறையிலே போட்டால் என்ன செய்வது ? ஆகவே இது ஊராட்சி ஒன்றியங்கள் பற்றிய பிரச்சினை. ஆனால் நகராட்சிக்கும், மாநகராட்சிக்கும் என்ன கோர்ட் தடை வந்தது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே' நான் ஏற்கெனவே சொன்னேன். 4-ஆம் தேதியன்று சொன்னேன், பஞ்சாயத்துத் தேர்தல் இந்த நிலையில் இருக்கின்றது. நகராட்சி, மாநகராட்சி தேர்தல் பற்றி முடிவு செய்வதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்ட இருக்கிறோம் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதே மன்றத்தில் சொல்லி இருக்கிறார்கள். அந்த முடிவினை நான் அறிவிக்க இருக்கிறேன். நகராட்சி, மாநகராட்சித் தேர்தலை எப்போது நடத்தலாம் என்று ஆலோசனை செய்கின்ற வகையில் அந்தக் கூட்டத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம் என்று முடிவை நான் அறிவிக்கப் போகிறேன்.



திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, எங்களுக்கு இருக்கின்ற கவலை எல்லாம் விரைவாகத் தேர்தலை

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெமிலி பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்தவர் வழக்கு போட்டிருக்கிறார் என்று சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் பிரிக்கின்றபோது சுயநலமும், கட்சிக் கண்ணோட்டமும் இல்லாமல் பிரித்திருந்தால் அது இவ்வளவு தூரத்திற்கு இழுத்துக் கொண்டு போய் இருக்குமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இப்போது திரு சித்தன் அவர்களுக்கும் எனக்கும் மத்தியிலே அம்மையார் அவர்கள் புகுந்திருக்கிறார்கள். உண்மையிலேயே நான் அம்மையார் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன். இப்போது மேல்முறையீடு செய்தது நெமிலி பஞ்சாயத்து பெண்களுக்கா அல்லது ஆண்களுக்கா என்ற பிரச்சினைக்காக அல்ல. பெண்களுக்கு என்று ஒதுக்கீடு செய்தது தவறு என்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்தது தவறு என்றும் அந்த கோட்பாட்டின் அடிப்படையிலே மேல் முறையீடு செய்திருக்கிறார்களே தவிர வேறல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே ஜனநாயகத்தின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்கள் மேல் முறையீடு செய்வதற்கு உரிமை இருக்கின்றது. எனவே, அதிலே ஏன் கட்சியைக் கொண்டு வர வேண்டும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, உரிமை இருக்கின்றது. பாதிக்கப்பட்டவர்கள் கோர்ட்டுக்குப் போகலாம். அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் உரிமை இருக்கின்றது என்ற அதே சமயத்தில் ஒரு கட்சியிலே இருந்துகொண்டு கட்சிக் கட்டுப்பாட்டை மீறி ஒருவர் செய்கிறார் என்றால் ஏன் அந்த நபரைக் கண்டிக்கக் கூடாது என்ற கேள்வியைத்தான் நான் எழுப்பக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே கட்சி என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும், யார் கட்சியில் இருக்கிறார்கள் என்பதெல்லாம் கட்சிக்குத் தெரியும். ஆகவே இந்தப் பிரச்சினையைச் சொல்லி விஷயத்தை திசை திருப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது ? திரு. வெங்கடாசலம் பிள்ளையைச் சஸ்பெண்ட் செய்திருக்கிறீர்களா ? தற்காலிகமாக அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறாரா ? (குறுக்கீடு). . . . . .

[1983 மார்ச்

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஒன்று கேட்க விரும்புகிறேன். இந்தப் பேரவையில் இல்லாத ஒருவரைப்பற்றிச் சொல்லி குற்றச்சாட்டு சொல்லக் கூடாது என்ற மரபு இருக்கின்றதே........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது குற்றச் சாட்டு இல்லை கோர்ட்டுக்குப் போனவருடைய பெயரைச் சொன்னார்கள் அவ்வளவுதான்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தலை நடத்தவேண்டும். மத்திய அரசிலும், மாநில அரசிலும் ஆளக்கூடியவர்கள் ஒத்துழைத்து தேர்தலைச் சீக்கிரமாகநடத்துவதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும், அதைவிட்டுவிட்டு........

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்திரா காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் திரு. சித்தன் அவர்களும், சுவையான வாதம் புரிந்தார்கள். நான் ஒன்றை உங்கள் மூலமாக அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருப்பவர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால் உச்ச நீதிமன்றத்திலே இந்த ரிசர்வேஷனை எதிர்த்து வழக்கு போட்டிருப்பவர் யாராக இருந்தாலும் அந்த வழக்குகளை வாபஸ் வாங்கவேண்டும் என்று எல்லா கட்சித் தலைவர்களும் சேர்ந்து அறிக்கை கொடுக்கலாம். அப்படி ஒரு அறிக்கை கொடுப்பதற்கு இந்த இரண்டு கட்சித் தலைவர்களும் ஒத்துக் கொள்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவும் கூட ஏற்கெனவே அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டத்தில் பேசப்பட்டது. நாம் எல்லா கட்சிகளும் ஒன்று சேர்ந்து அந்த வெங்கடாசலம் பிள்ளை செய்து இருக்கின்ற மேல் முறையீட்டை வாபஸ் பெறச் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் உண்மையிலே அதற்குரிய நடவடிக்கையை யார் முனைப்பாக செய்ய வேண்டுமோ அவர்கள் அதை முனைப்பாக இதுவரையில் செய்யவில்லை. நான் ஏற்கெனவே அந்தக் கூட்டத்திலும் சொன்னேன். திண்டிவனம் ராமமூர்த்தி அவர்கள் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அவர்களிடத்திலும் சொன்னேன். அந்த வெங்கடாசலம் பிள்ளை அவர்களை நீங்களே அழைத்து உடனடியாக அந்த மேல் முறையீட்டை வாபஸ் பெறச் செய்யுங்கள் என்று சொன்னோம். இதுவரை செய்யவில்லை.



1983 மார்ச் 7]

திரு. எல். இளையபெருமாள்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது வெங்கடாசலம் பிள்ளைப் பற்றி சொன்னார்கள். உச்ச நீதிமன்றத்திற்கு போக யாருக்கும் உரிமை இருக்கிறது என்பது ஒன்று. மற்றொன்று எந்த அடிப்படையில் பெண்களுக்கோ அல்லது அரிசன மக்களுக்கோ, அல்லது மலைவாசிகளுக்கோ இந்த கவுன்சிலர் மூலமான வழியில் பிரிக்கப் பட்டது என்பதை ஆதாரமான முறையில் என்ன ரேஷியோ பிரகாரம் செய்தார்கள். அவர்கள் பாப்புலேஷன் என்ன? ஜெனரல் பாப்புலேஷன் என்ன? என்ன பாப்புலேஷன் பிரகாரம் அல்லது என்ன கணக்கீட்டு பிரகாரம் என்ன ரேஷியோ வைத்து இந்த தொகுதிகள் பிரிக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கினால் உண்மையில் யார் செய்த தவறு என்று இந்த சபை தெரிந்துக்கொள்வதற்கு உசிதமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் விவாதத்தை முடுக்கி விடப் பார்க்கிறார். மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள். நான் அதற்கு பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த மன்றம்ஏற்றுக்கொண்டால், இந்த விவாதத்தை இப்போது நடத்தலாம் என்று துணைத் தலைவர் அவர்கள் கட்டளையிட்டால் நான் அதற்கு பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. இளையபெருமாள் அவர்கள் பேசியது பாயிண்டு ஆப் ஆர்டரில் வராது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக இந்த பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மலைவாழ் பகுதியினருக்கும் ஒதுக்கீடு செய்யப் பட்டதில் முறைகேடுகள் நடைபெற்று இருக்கின்றன. எங்கே அதிகமாக வாழ்கிறார்களோ அந்த பகுதியில் இல்லாமல் வேறு பல பகுதிகள் அங்கே சேர்க்கப்பட்டிருக்கின்றன, என்பது பல்வேறு இடங்களில் இருக்கின்றன. நான் கூட ஒரு ஊராட்சி மன்றத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்தேன். மேல் முறையீடு போடுவது என்பது பாதிக்கப்பட்டவருக்குள்ள பிரச்சனை. நான் வேண்டி விரும்புவது எல்லாம் நகராட்சி, மாநகராட்சி தேர்தல் பற்றி சொன்னார்கள், இந்தக் கூட்டத்தொடர் முடிவதற்குள் அனைத்துக் கட்சி தலைவர்களையும் அழைத்து அதற்கான தேதி நிர்ணயம் செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள். இது உறுதியானதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இதில் அனைத்துக்கட்சித் தலைவர்கள் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஜனநாயக மரபில் விரைவாக தேர்தலை நடத்தவேண்டும் என்று தான் ஆர்வமாக இருப்பார்கள். அதற்காக இந்தக் கூட்டத்தொடர் முடியும் வரை காத்து இருக்க வேண்டியது இல்லை. இந்த தேர்தல்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1983 மார்ச் 7

தேதியை அவர்கள் விரைவில் அறிவிக்க வேண்டும். இந்த ஊராட்சி ஒன்றியங்களின் தனி அதிகாரிகளின் கால நீட்டிப்பு மசோதா இனியும் வரக்கூடாது என்கின்ற என்னுடைய ஆதங்கத்தையும், ஆர்வத்தையும் சொல்லி வெகு விரைவில் தேர்தலை நடத்துவதன் மூலமாக மக்களுக்கு நல்ல பயனை இனியாவது செய்ய வேண்டும் என்று சொல்லி என் திருத்த தீர்மானத்தை வலியுறுத்தி அமைகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-40)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் ஊராட்சிகள், ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றில் உள்ள தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீட்டிக்கின்ற மசோதாவை சட்டமாக்குவதற்காக இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த மசோதாவின் பேரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களை ஆரம்பத்திலே கலைக்கிறபோது ஒரு சில ஊராட்சி ஒன்றியங்கள் தவறு செய்வதாகச் சொல்லி 1977 ஆம் ஆண்டிலே அனைத்து ஊராட்சி ஒன்றியங்களையும் கலைத்தார்கள். இரண்டு ஆண்டுக் காலத்திற்குப் பிறகு 1979ஆம் ஆண்டிலே ஊராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டன. 5 ஆண்டுகள் ஆகிவிட்டன, இந்த ஐந்தாண்டுக் காலத்திலே எந்த அளவுக்கு நாம் ஜனநாயகத்தை மேலும் மேலும் பாதுகாத்து வருகிறோம் என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும். ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு இடைத் தேர்தல் அல்லது முழுமையாக தேர்தல் வந்தால்கூட 6 மாத காலத்திற்குள்ளாக தேர்தல் நடத்தவேண்டும். ஆனால் இன்றைக்கு கிராமப்புறங்களிலே நகராட்சி மன்றங்களாகட்டும், ஊராட்சி ஒன்றியங்களாகட்டும், மாநகராட்சியாக இருக்கட்டும் இன்னும் பல்வேறு துறைகள் அனைத்திலும் தேர்தலே நம் ஆட்சியிலே கேலிக்கூத்தாக ஆக்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு நீதிமன்றத்தை நாம் சொல்லி வருகிறோம். பெண்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் இடம் ஒதுக்கீடு செய்கிறபோது தேர்தல் அறிவிக்கப்பட்டதற்குப் பின்னால் உயர் நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். தமிழ்நாட்டில் உள்ள நீதிமன்றத்தில் முடிந்து இப்போது சுப்ரீம் கோர்ட்டிற்கு சென்றிருக்கிறார்கள். மேற்கு வங்கத்திலே தேர்தல் நடந்தபோது வாக்காளர் பட்டியல் சரியல்ல என்று சொல்லி உச்ச சென்றார்கள். அப்போது உச்ச நீதிமன



1983 மார்ச் 7] [திரு. பொ. உத்திராபதி]

றத்திலே அழகான தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். என்னவென்றால் ஜனநாயக முறையில் மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்வதற்காக தேர்தலை நடத்தவேண்டுமே தவிர அதற்கான காரணங்களைச் சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது என்று சுட்டிக்காட்டி ஸ்டே கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு மக்கள் பக்கம் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி தமிழக அரசும் வெங்கடாசலம் போன்றவர்கள் தேர்தலை நிறுத்திவைக்கவேண்டுமென்று சொன்னாலும் ஒரு நபர் கொடுத்ததை ஏற்கக்கூடாது என்ற முறையிலே நீதிமன்றத்திலே துரிதமாக வேகமாக நடவடிக்கை எடுக்கச் செய்து அதைத் தள்ளுபடி செய்யக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகளை அரசு எடுத்து ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல்களைக் கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாமல் மக்கள் குழு, மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இருந்தும் இல்லாததுபோல் இருக்கின்றன. மக்கள் குழு இருக்கிறதே தவிர மக்கள் குழு வழங்கக்கூடிய தீர்மானங்கள் செயல்படுத்தப்படவில்லை. மக்கள் குழு கூடுவதில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாம் நூற்றுக்கணக்கான தீர்மானங்களைக் கொடுக்கிறோம், விவாதிக்கிறோம், ஏதாவது நிறைவேற்றப்படுகிறதா என்றால் இல்லை. நிறைவேற்றுவதற்கு அதிகாரிகள் இருக்கிறார்கள், ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. அதிகாரிகள் ஆளக்கூடிய ஆட்சி இருக்கிறதா என்று ஐயப்படக்கூடிய நிலையில் மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். குடிநீரை எடுத்துக்கொண்டாலும், சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆகியும்கூட இரண்டு தினங்களுக்கு ஒரு முறை தண்ணீர் வழங்கக்கூடிய நிலைதான் இருக்கிறது, காசுக்கு தண்ணீர் வழங்கக்கூடிய அபாயம் வளர்ந்து கொண்டிருக்கிறது. கிராமங்களிலே உள்ள குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க அதிகாரிகள் தயாராக இல்லை. தீர்க்கப்படுவதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லை.

ஏதோ சில சாலைகள் போடுவதாகச் சொல்கிறார்கள். தன்னிறைவுத் திட்டம், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் என்று சொல்கிறார்கள், ஆனால் அந்த வேலைகள் எல்லாம் எந்த அளவுக்கு செம்மையாக நடக்கின்றன என்பது ஆளுங் கட்சியினருக்கே கூட தெரியும், வெளியே சொல்லமுடியாமல் இருக்கிறார்கள், அந்த அளவுக்கு மோசமாக நடந்துகொண்டிருக்கிறது காண்டிராக்டர்கள் மூலமாக. மின் விளக்குகள் எரிவதில்லை, கிராமங்கள் இருட்டறைகளாக இருக்கின்ற நிலைமையில் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை மூலமாக பல்புகள் எரியாவிட்டாலும் நிதியைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

பஞ்சாயத்துக்களிலே நிதி இல்லை. என்னுடைய தொகுதியை நான் சுற்றிப்பார்த்தபோது எந்தக் கிராமத்திலேயும் மின் விளக்கு எரியவில்லை. சாலைகளைப் போடுவதாகச் சொல்கிறார்களே தவிர உண்மையிலேயே என்ன நடக்கிறது என்றால் அதிகாரிகள் கணக்கு காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பேசியபோது கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் தமிழ்நாட்டில் நன்றாக இருக்கிறது என்று மத்திய அரசு பாராட்டியதாகச் சொன்னார்கள், நம் அதிகாரிகள் கணக்கு சரியாகக் காட்டியிருப்பதாகச் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். அதிகாரிகள் சரியாக கணக்கு எழுதியிருப்பார்கள், காண்ட்ராக்டர்கள் மூலமாக வேலைகள் நடக்கின்றன, எந்த அளவுக்கு அவைகள் நடக்கின்றன என்பதை ஆராய்ந்தோமானால் முழுமையும் நடைபெறவில்லை என்பது தெரியும், அதற்குக் காரணம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லை என்பதுதான். அதிகாரிகள் தங்கள் இஷ்டம் போல் செயல்படுகிறார்கள். குறிப்பாக கை பம்புகள் 100-க்கு 70 வேலை செய்யாமல் ரிப்பேராகி இருக்கிறது. அதை செய்யச் சொன்னால் வேலை செய்வதாகச் சொல்கிறார்களே தவிர ரிப்பேர் செய்வதில்லை. ஆனால் கணக்கு எழுதப்படுகிறது. 5 ஆண்டுக்காலமாக மின் விளக்கு இல்லை, குடிநீர் இல்லை, சாலை வசதிகள் இல்லை, கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் போன்றவற்றின் பலன்கள் முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. மக்கள் அவற்றை முழுமையாக அனுபவிக்கவேண்டுமானால் இனி மேலும் காலத்தைக் கடத்தாமல் உச்ச நீதிமன்றத்திலே உள்ள வழக்குகளை உடனடியாக பைசல் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரிசனங்கள், பெண்கள் இடப்பிரிவினை, பிறகு வாக்காளர்கள் சேகரம் செய்வது போன்ற மூன்று விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் ஆட்சியினர் நினைத்தால், அதிகாரிகள் கையில் ஒப்படைத்தால் வேகமாக முடிந்துவிடும். இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு இந்த மசோதாதான் கடைசி மசோதாவாக இருக்க வேண்டும். இனி மேல் இந்த மன்றத்தில் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் மேலும் காலத்தை நீட்டிக்காமல் இந்த மசோதா தான் கடைசியாக நிறைவேற்றக்கூடிய மசோதா என்ற அளவிற்கு அமைச்சர் அவர்கள் இருக்க வேண்டுமென்று கூறி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த மசோதாவை கண்டித்து என் உரையை முடிக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக்கூடிய, உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட மசோதாக்களின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் ஒரு சில கருத்துக்களைக் கூற முன்வருகிறேன்.



ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி என்று இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளில் தேர்தலை நடத்தவேண்டும் என்பதில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஒருமனதாகவும், முழுமனதாகவும் விரும்புகிறது. இந்த தேர்தலை நடத்தினால் அது மிக நல்லமுறையில் ஜனநாயகத்தை காக்கமுடியும் என்று அரசு உணர்ந்திருப்பதை என்னாலும் இங்கே சுட்டிக்காட்ட முடிகிறது. அதே நேரத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான், ஆதிதிராவிடர்களுக்கும், பெண்களுக்கும் ஆள்வதற்கு வாய்ப்பினை தரவேண்டுமென்று ஒரு சட்ட திருத்தத்தைக்கொண்டு வந்து, அதை சட்டமன்றத்தில் நிறைவேற்றி, அதை வருகிற உள்ளாட்சித் தேர்தல்களில் கடைப்பிடிக்கவேண்டுமென்று முழுமுயற்சியோடு ஈடுபட்ட போது, எந்தெந்த கட்சிகள் இந்தத் தேர்தலை வரவேண்டுமென்று இங்கே வற்புறுத்துகின்றனவோ, அவற்றில் இருப்பவர்கள்கூட நீதிமன்றத்திற்குச் சென்று தேர்தல் வரவிடாமல் தடுப்பது, எதிர்ப்பது அல்லது முட்டுக்கட்டைப் போடுவது என்பது துரதிஷ்டவசமாகும். உயர்நீதிமன்றமும், உச்ச நீதி மன்றமும் உங்களுக்கு ஒரு சாக்காக அமைந்து விட்டது என்று கூட சிலர் சொன்னார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் பேசுகிறவர்கள் எல்லாம், மொட்டை அடித்து தான் ஆகவேண்டுமென்று சொல்லிவிட்டு, பூ வைத்துக் கொள்ளவில்லையே என்று ஏங்குவது சரிதானா என்று பார்க்கிறபோது வேதனையாகத் தான் இருக்கிறது. இங்கே இன்னொரு உறுப்பினர் அவர்கள் பேசுகிற போது சொன்னார்கள். சட்டம் ஒரு இருட்டறை என்று அண்ணாவே சொல்லிவிட்டார் என்று குறிப்பிட்டார்கள். சட்டம் ஒரு இருட்டறை என்று அண்ணா அவர்கள் தான் சொன்னார்கள். வழக்கறிஞர்களின் வாதமும் அதிலே ஒரு விளக்காக, வெளிச்சம் தரவேண்டும் என்பதாக இருக்கவேண்டும் என்பதல்ல; சட்டமன்ற உறுப்பினரின் வாதம் ஒரு விளக்காகவும் வெளிச்சம் தரத்தக்கதாகவும் இருக்கவேண்டுமே தவிர, இருக்கிற விளக்கை அல்லது வெளிச்சத்தை அணைத்து விடக்கூடியதாக இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்தாகும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு ஏற்பட்ட பிறகு தான், மதுரை மாநகராட்சி தேர்தலை கூட சந்தித்து மிகப் பெருமையான வெற்றியை அதில் பெற்றது என்று சொன்னால் அது மிகையாகாது. தேர்தலை நடத்துவதில் அல்லது அதில் ஈடுபடுவதில் அரசுக்கோ அல்லது அரசை உருவாக்கிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ எந்தவிதமான பிற்போக்கும் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், "செற்றலரை வென்ற திருமலைராயன் கரத்தில் வெற்றிபுரியும் வாளே, வீரவாள்; மற்றைய வாள்— போவாள்—வருவாள்—புகுவாள்—புறப்படுவாள் ஆவாளிவாளாம்" என்ற அளவிற்குதான் எங்களுடைய வெற்றி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெளிவாக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகு உள்ளாட்சித்துறை தேர்தல் நடைபெறாமல் இருந்த காலத்தில் கூட இந்தியாவிலே தன்னிகரற்ற பணிகளை உள்ளாட்சித்துறையில் செய்து காட்டியிருக்கிறது என்று சொன் னர்ல் அது மிகையாகாது. கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக மத்திய, மாநில அரசுகள் இணைந்து, 100 சதவீதம் தான் குறிக்கோள் என்று சொன்னால் 155 சத வீதம் என்ற அளவிற்கு மிகச்சிறப்பாக செய்து காட்டியிருக் கிறோம். சத்துணவுத் திட்டமானலும் சரி, கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டமானாலும் சரி, தன்னிறைவுத் திட்டமர்னாலும் சரி, கிராம அபிவிருத்தித் திட்டமானலும் சரி; இவைகளில் எல்லாம் இந்தியா சுதந்திரம் பெற்று 35 வருடங்களாகியும் கிராமப்புற மக்கள் எண்ணிப்பார்க்காத பல்வேறு பிரச்னைகளில், நாம் முன்னேற்றத்தை ஐந்தாண்டுகளில் செய்து காட்டியிருக் கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு எடுத்துச்சொல்லக் கடமைப் புட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11—50]

ஒரு ஊராட்சியின் மொத்த வருவாய் ஒரு அரசுக்கு ரூ. 500 தான் என்று சொன்னால், 5 இலட்சம் ரூபாய்களுக்கு மேலாக அந்தப் பகுதியிலே நாம் செலவு செய்திருக்கிறோம். அந்த அளவுக்கு இன்றையதினம் கிராம அபிவிருத்தி ஏற்பட்டிருக் கிறது. கிராமம், நகரம் என்ற பாகுபாடுகள் கொஞ்சங்கொஞ்ச மாக மறைந்து சிறு நகரம், பெரு நகரம் என்று சொல்லத் தக்க வகையிலே முன்னேற்றம் க்ண்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, எனது தொகுதியிலே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். அவர்கள் அடிக்கல் நாட்டியது அப்படியே இருந்தது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசில்தான், 1983 ஆம் ஆண்டிலே தான் அந்தப் பிரச்னையிலே முன்னேறி, முடித்து, இன்றைய தினம் குடிநீர் வழங்கக்கூடிய மிகப் பெரிய பெருமையை, நாகரசம்பட்டி என்ற கிராமத்தில், காவேரிப்பட்டினம் தொகுதி யில், தர்மபுரி மாவட்டத்தில் செய்நு காட்டியிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்த பல்வேறு பிரச்னைகள், செக்கசமுத்திரம் என்கிற இடத்திலே ஒரு பாலம் வேண்டுமென்று, அதுவரையிலும் போராடி, எந்தக் கட்சி யும் நிறைவேற்றாமல், உள்ளாட்சி மன்றத்தில் இருந்த தலைவர் கள் எல்லாம் நிறைவேற்றாத அந்தப் பிரச்னையில், உள்ளாட்சித் தேர்தல் இல்லாத நேரத்திலேகூட இந்த அரசு நிறைவேற்றி யிருக்கிறது என்பதை பெருமையோடு வரவேற்கக்கூடிய ஒரு விஷயம்தான்.



ஆனால், அதே நேரத்தில் எவ்வளவுதான் நாம் செய்திருந் தாலும்கூட, எவ்வளவுதான் நாம் வளர்ச்சி பெற்றிருந்தாலுங் கூட, எவ்வளவுதான் கிராம அபிவிருத்தி திட்டங்கள் இருந்து கொண்டிருந்தாலும்கூட, தனது பெண் குழந்தைக்குத் தாய் தந்தையர் சேலை வாங்கிக் கொடுத்து, பூ வாங்கிக் கொடுத்து, வேண்டிய உணவு போட்டு, எவ்வளவுதான் வளர்த்தாலுங்கூட ஒரு கணவனிடத்திலே சென்று அவனுடைய அரவணைப்பிலே வளர்வதில் ஒரு இன்பம் அந்தப் பெண்ணுக்கு எப்படி இருக் குமோ, அதுபோல், தேர்தலிலே வரக்கூடிய ஒரு தலைவரை வைத்து அந்தக் கிராமத்திலே சில காரியங்களை முடித்துக் கொள்ளக்கூடிய ஒரு உணர்வு இப்பொழுது இல்லையென்கிற ஒரு சங்கடம் இருப்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உணர்கிற காரணத்தினால் அரசு இந்தத் தொடர் கூட்டத்திலேயே சகல கட்சித் தலைவர்களையும் கலந்து, தேர்தல் தேதியினை சட்டமன்றத்திலே அறிவிக்க வேண்டும். நீதிமன்றத்தாலே பாதிக்கப்படுமானால், பாதிக்கப்படுகின்ற ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் போன்றவற்றை விடுத்து, ஊராட்சி நகராட்சி, மாநகராட்சி, போன்றவற்றிற்கு உடனடியாகத், தேர்தலைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த சகல கட்சியினரையும் அழைத்துப் பேசி, தேதியை அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்கள் என்று அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நம்பு கிறது. ஆகவே, தேர்தல் என்பதை நீங்கள் மட்டுமல்ல, நாங் களும், வரவேற்கிறோம். எதிர்கட்சிகள் சொல்லி மட்டுமே வர வேற்க வேண்டுமென்பது அல்ல. ஆளுங்கட்சியேகூட வற்புறுத்து கின்றது. அரசாங்கமேகூட, எப்பொழுதும் தேர்தலைக் கண்டு அஞ்சாத பயப்படாத அரசு என்பதையும், இந்த அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஏற்பட்ட பிறகு எதிலும் எந்த வகையிலும் தோல்வியே பெறவில்லையென்பதை மனதிலே வைத்து, இன்றிருக்கிற சூழ்நிலையில் இந்தத் தொடர் கூட்டம் முடிவதற்குள் நல்ல ஒரு தேர்தல் தேதியினை அறிவிக்கக் கூடிய முறையில் சகல கட்சிகளையும் அனுசரித்து, தெரிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை, விரும்பி, வேண்டிகேட்டுக்கொண்டு, அந்தத் தேர்தலை நடத்தும் காலம் வரை, தனி அலுவலர்கள் தேவை என்பதால், இந்த சட்ட முன் வடிவுகளை வரவேற்று முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, ஆய்விலிருக்கிற சட்டமுன்வடிவுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆட்சேபணையையும் எதிர்ப்பையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் இந்தச் சட்ட முன்வடிவை அரசு முன் மொழிகிறபொழுது, நிலைமைகள் முழு வதையும் ஆய்ந்து உடனடியாகத் தேர்தலுக்கான முயற்சியை மேற்கொண்டிட வேண்டுமென்று நான் வற்புறுத்துகின்றேன்.

இன்று ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தல் நடத்துவதற்கு உச்ச நீதிமன்றத்தினுடைய தடை இருக்கிறது என்ற நிலையிருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அது சம்பந்தமாக, ஏற்கனவே கூட்டப்பட்ட அனைத்துக் கட்சியின் கூட்டத்திலே இந்தத் தடையை நீக்குவதற்கான விரைவு முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அந்த முயற்சியை மேற்கொண்டிட வேண்டும். அவவாறு இருக்கும்போது நகராட்சிகளில்—கோவை மாநகராட்சி, சென்னை மாநகராட்சி போன்ற பகுதிகளில்—தேர்தல் நடத்துவதற்கு இப்பொழுது எந்தவிதமான தடையும் இல்லை.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் பெண்களுக்கு, ஆதி திராவிடர்களுக்கு, ஆதிவாசிகளுக்கு ரிசர்வேஷன் என்பதை ஏற்றுக்கொள்கிறது. ஆனால், நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் இந்த ரிசர்வேஷனைக் கொண்டு வருகிறோம் என்ற காரணத்தினாலே தாமதப்படுத்த தேவையில்லை. அதைக் கொண்டு வருவதற்கு நாம் முயற்சி செய்யலாம். ஆனால், அதே நேரத்தில், இன்றைக்கிருக்கக்கூடிய சட்டத்தை உபயோகப்படுத்தி, 1983 ஜனவரியிலே 18 வயதானவர்களுக்கு ஓட்டுரிமையையும், ஜனக் கணக்கெடுப்பின்படி வார்டு பிரிவினையையும் மேற்கொண்டு, இந்த 3, 4 மாத காலத்திற்குள்ளேயே நகராட்சிகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான ஆலோசனை, மேற்கொள்ள வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆலோசனையை எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

அதற்கான தேதியை இந்தக் கூட்டத்திலேயே அறிவித்தாலும் சரி அல்லது அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி அதிலே இந்தத் தேர்தல் தேதியை அறிவித்தாலும் சரி, அது உதவியாக இருக்கும். கிட்டத்தட்ட நம்முடைய மாநிலத்தில் உள்ள பல சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் இந்தத் தேர்தல்களை நடத்திட சர்க்கார் முன்முயற்சி எடுக்க வேண்டுமென்று கட்சியின் சார்பாக ஆலோசனை கூற விரும்புகிறேன்.

இந்த நிலையில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. எந்தக் கட்சி தேர்தலை நடத்தச் சொல்கிறது என்ற சர்ச்சையில் ஈடுபட வேண்டாம். 1969 ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலுள்ள மக்கள் நகராட்சித் தேர்தலில் ஓட்டுப் போட்டார்கள். 1971 ஆம் ஆண்டில்தான் இந்தத் தமிழ் நாட்டிலுள்ள கிராமப்புறத்து மக்கள் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றிற்கு ஓட்டளித்தார்கள். இன்னும் இந்த



நிலைமை நீடித்தால், இப்படிப்பட்ட தேர்தல்களில் ஓட்டளிக்க வேண்டுமா என்ற நினைவைக்கூடத் தமிழ்நாட்டு மக்கள் மறந்துவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டு விடும். 12 வருடங்கள், 11 வருடங்களாக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாத அவல நிலைமை இருக்கிறது என்பது ஜனநாயகத்தை எவ்வாறு பாழ்படுத்தும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்குப் பல கட்சிகள் குரல் கொடுக்கிறார்கள் என்றால் நாம் அதைக் கண்டு அதிசயப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். பரவாயில்லை, ஜனநாயகத்தைப் பாதுகாக்க இப்பொழுதாவது குரல் கொடுக்கிறார்களே என்று அதிசயப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இதிலே பல கோடி ரூபாய்த் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தால், மாநில அரசு பல கோடி ரூபாய் செலவழிக்கிறது என்று சொன்னால், சட்டசபை இல்லாமல் இருந்தால் பரவாயில்லை அல்லவா என்ற இப்படிப்பட்ட வாதத்தை வேறொருவர் கேட்கக் கூடும். எனவே, இருக்கின்ற திட்டங்களைச் சரியாக நடத்துவதற்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற அமைப்புகள் கண்காணிக்க வேண்டும் என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய மிகப் பெரிய ஜனநாயக உண்மையாகும். அவைகள் இன்றைக்குச் சரியாக அமல் நடத்தப்படவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். ஆகவே, அரசை நான் வற்புறுத்த விரும்புவதெல்லாம், இன்றைக்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

தமிழ்நாட்டில் குடிதண்ணீர் நிலைமை எல்லை கடந்து போய்க் கொண்டிருக்கிறது. விளக்குகள் கிராமங்களில் மட்டுமல்லாமல் நகராட்சிப் பகுதிகளிலேயும் சரியாக எரிவதில்லை. ரோடு வசதி, தண்ணீர் வசதி, கழிப்பிட வசதி ஆகியவை பல பகுதிகளில் இல்லாமல் இருக்கின்ற காட்சி இருக்கிறது. சானிடேஷனைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா பூராவும் மோசமான நிலைமைதான் இருக்கிறது; இதில் தமிழ் நாட்டில் மட்டும்தான் மோசமாக இருக்கிறது என்று சொல்லவில்லை. இப்படிப்பட்ட பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு, நகராட்சிகளிலேயும், பேரூராட்சிகளிலேயும், ஊராட்சி மன்றங்களிலேயும் நிதி ஆதாரம் இல்லை. அந்த உண்மையைப் பேசாமல் தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிப் பேசிப் பிரயோசனம் இல்லை.

பல பேரூராட்சிகளில் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்குக்கூடப் பணம் இல்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு அவைகளுக்கு மானியத்தொகை ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது ஜனத்தொகை பெருகியிருக்கிறது; தொழில்கள் பெருகியிருக்கின்றன; நகரங்கள் பெரிதாகியிருக்கின்றன. அதனால்

சுகாதாரக் கேடுகள் மலிந்து கிடக்கின்றன. எனவே, அந்தச் சுகாதாரத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும். பல நகராட்சிகளில் மூன்று நான்காண்டுகளாக வற்புறுத்தியும்கூட ஒரு நபரைக்கூட உயர்த்த முடியாத நிலையிருக்கிறது. அப்படிப்பட்ட நகராட்சிகளில் இந்தப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க முடியவில்லை. பிறகு எப்படி அந்த இடம் துப்புரவாக இருக்கும்; சுத்தமாக இருக்கும் ?

திண்டுக்கல் பகுதியில் இன்னும் ஒரு மாதத்தில் கடும் தண்ணீர் நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய நிலைமையிருக்கிறது. அதற்குப் பக்கத்தில் உள்ள சின்னாளப்பட்டி நகரத்தையும் சேர்த்தால் கிட்டதட்ட மூன்று இலட்சம் மக்கள் கடும் குடிதண்ணீர் நெருக்கடியில் சிக்கித் தவிக்கவிருக்கிறார்கள். அவர்கள் கேட்கிறார்கள், வைகைப் பேரணையிலிருந்து முன்னோடித் திட்டத்தை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று. சில மைல்களுக்கு அப்பால் உள்ள தனியார் தண்ணீர்க் கிணறுகளை அரசோ அல்லது நகராட்சியோ குத்தகைக்கு எடுத்துக்கொண்டு லாரிகள் மூலமாகத் தண்ணீரை விநியோகித்திட வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆழ்குழாய்களை சின்னாளப்பட்டியில் பெரிதும் போட வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இன்னும் இருப்பதைச் சொல்ல வேண்டுமென்றால், அதிகாரிகள் நம்மிடத்திலே சொல்கிறார்கள், இத்தனை ஆழ்குழாய்களைப் போட்டிருக்கிறோம் என்று லிஸ்டைக் கொடுக்கிறார்கள். ஆனால் நாம் அவைகளைச் சுற்றிப் பார்த்தால் 100-க்கு 50 சதவீதம் அல்லது 60 சதவீதம் பழுதுபட்டிருக்கின்றன. அந்தப் பழுதைப் பார்த்து ரிப்பேர் செய்வதற்குத் தொழிலாளர்கள் ஏத்தனைப் பேர் என்று பார்த்தால், ஒரு யூனியனுக்கு ஒருவர் இருக்கிறார். அவர் இந்த வேலைகளையெல்லாம் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். பல கோடி ரூபாய்களைச் செலவு செய்து குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாகக் குழாய் கிணறுகளை அமைக்கும் பொழுது டெக்னிகல் நுணுக்கத்தோடு பார்த்தால், குழாய் 200 அடி இருக்கிறது; ஆனால் ராடு 60 அடிதான் இருக்கிறது, ஆகவே தண்ணீர் வற்றி விட்ட நிலையில் ராடைக் கூடுதலாகப் போட்டால் தண்ணீர் கிடைக்கும். ஆகவே, இப்படிப்பட்ட டெக்னிக்கல் பிரச்னைகளைப்பற்றிக் கூட அதிகாரிகள் கவனிப்பதற்கு மறுக்கிறார்கள் என்பது நாம் போகும் இடங்களில் நடக்கும் விவாதங்களில் இருந்து உண்மை தெரிகிறது. இதை அவர்கள் எங்கே போய்ச் சொல்ல முடியும் ? நகராட்சிகளோ, ஊராட்சி மன்றங்களோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களோ இருந்தால் அப்படிப்பட்ட கூட்டங்களில் இந்த வாதத்தை வைப்பார்கள். அதன் மூலம் அதிகாரிகளின் அலட்சியப் போக்கைத் தடுத்து நிறுத்தவும் முடியும்.

அமைச்சரவர்களுக்கே தெரியும். மதுரை மாநகராட்சி தேர்ந்தெடுக்கப்பெற்ற அமைப்பாக இருப்பதால் அங்கு கருத்துப் பரிமாற்றம் நடைபெறுகிறது.



[நண்பகல் 12.00]

எவ்வாறு சொத்து வரி விதிக்கவேண்டுமென்பது சம்பந்தமாக கூட அங்கே சர்ச்சைகள் எழுகின்றன. இதையெல்லாம் நம்முடைய அரசு கூர்ந்து கவனிக்கவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை இல்லாததால் பல இடங்களிலே இந்தப் பணிகள் சரியாக நடைபெற முடியாமல் தடுக்கப்படுகிறது. சில இடங்களிலே அது ஊதாரித்தனமான செலவுகளுக்கு இட்டுச்செல்கிறது. அப்படிப்பட்ட தனி அதிகாரிகளுடைய போக்கு எவ்வாறு இருக்கும் அவர்கள் இன்று மக்கள் ஆட்சி இல்லாத இடங்களிலே தன்னிச்சையாக காரியங்கள் செய்வதாலே பலவிதமான தவறுகள் நடைபெறுகிறது. அந்தத் தவறுகளிலே பலர் சம்பந்தப்படுகிறார்கள். அதற்கான காரணம் என்ன ? நான் மதுரை மாவட்டத்தினுடைய அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலே சொன்னேன். ஒரு ஓடையைக் கட்டுகிறார்கள், அந்த ஓடையிலே கட்டவேண்டிய பாலத்திற்குப் பதிலாக இன்னொரு இடத்திலே கட்டுவிட்டு, அதற்கு பில்லைப் போட்டு பணத்தை வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். அப்படிப்பட்ட காரியங்கள் கூட பல இடங்களில் நடைபெறுகிறது. இவைகளையெல்லாம் கண்காணிக்க, ஏற்படும் தவறுகளைக் கண்டிக்க, திருத்த, இப்படிப்பட்ட முயற்சிகள் தேவைப்படுகிறது.

அதேபோல்தான் இன்றைக்கு ஆலோசனைக் குழுக்கள் என்று அமைத்திருக்கிறார்கள். அந்த ஆலோசனைக் குழுக்களை அந்த அதிகாரிகள் இஷ்டம்போல் கூட்டுவார்கள். இதற்கு என்று ஏதாவது ஒரு நிகழ்ச்சி குறிப்புகள் உண்டா ? இந்தந்த மாதத்திற்குள் அது கூட்டப்பட வேண்டும் என்று ஏதாவது கட்டாயம் உண்டா ? சட்டம் உண்டா ? இல்லை. அப்படி கூடி விவாதித்தாலும் அது பெயரளவில்தான் இருக்கும். அதில் நிறைவேற்றப்படுகிற தீர்மானங்கள், ஆலோசனைகள் அமுல்படுத்தப்படுகிறதா? இந்த சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறபோது, ஆட்சேபணை எழுப்புகிறபோது மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் கூடச் சொன்னார்கள். கோவை மாநகராட்சியிலே 44 கோடி ரூபாய்க்கு திட்டங்கள் நிறைவேற்றுகிறோம் என்று சொல்லி, பிரயோஜனம் இல்லை. அந்த மாநகராட்சிக்கு என்று ஒரு ஆலோசனைக் குழு ஏன் அமைக்கக்கூடாது? அதனுடைய பொறியாளரும் அங்கே இருக்கக்கூடிய கமிஷனரோ அங்கே நடக்கக்கூடிய மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலே வந்து ஏன் கலந்து கொள்ளக் கூடாது. அவர்களை எல்லாம் கட்டுப்படுத்துகிற அதிகாரங்கள் யார் கையிலே இருக்கிறது ? அவர்களை எல்லாம் கட்டுப்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை இல்லையா? அவர்கள் எல்லாம் தனிக்காட்டு ராஜாக்களா ? அப்படி இவர்கள் எல்லாம் அந்த மாநகராட்சியைச் சேர்ந்தவர்களோ, நகராட்சியைச் சேர்ந்தவர்களோ, ஊராட்சியைச் சேர்ந்தவர்களோ, ஒன்றியக் குழுக்களிலே இருக்கக்கூடிய கமிஷனர்களோ, யாராக இருந்தாலும்

அவர்கள் இந்த மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்திற்கு
வரவேண்டும். இந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் கூட சட்ட
ரீதியாக உள்ள ஆலோசனைக் குழுவாக மாற்றப்பட வேண்டும்.
பல கோடி ரூபாய் மானியமா என்று அமைச்சர் அவர்கள் கேட்
டார்கள். மானியத்தை விட இது முக்கியமானது. மானியம்
மீது இன்றைக்கு நாம் என்ன செலவழித்திருக்கிறோம் என்பதை
பற்றித்தான் பேசமுடியும். அந்த மானியத்தை கண்காணிக்கக்
கூடிய ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும். என்று வற்புறுத்து
கிறேன். இப்படி பல கோடிக்கணக்கான ரூபாய்களை செல
வழிக்கிறபோது அந்தச் செலவு உண்மையிலே செலவழிக்கப்படு
கிறதா, தேவையான முறையிலே செலவழிக்கப்படுகிறதா என்
பதை நீங்கள் கண்காணிக்கவேண்டும். ஆகவேதான் இந்த சட்டத்
திருத்தம் என்பது தமிழகத்தினுடைய ஜனநாயகத்திற்கு நாம்
வைக்கக்கூடிய ஒரு வேட்டாக முடியும். இது நீடிக்க நீடிக்க
இன்னும் பல காலத்திற்கு இந்த அமைப்புக்களிலே யார் எல்லாம்
தவறான நபர்கள் இன்னும் நுழையவேண்டுமோ—ஆளும் கட்சியை
சேர்ந்தவர்களுக்கும் சொல்வேன்—அவர்கள்
வாய்ப்பு ஏற்படும். தமிழ்நாட்டிலே உங்களை நுழைவதற்கு
மிகப் பெரிய பத்திரிகை ஒன்று நேற்றைக்கு கூட ஆதரிக்கக்கூடிய
சொல்லியிருக்கிறது. ஏதோ நாங்கள் வெற்றி ஆலோசனை
றோம் என்ற மமதையிலே கூட இருக்காதீர்கள், உங்கள் பெற்றிருக்கி
குள்ளே கூட மக்கள் என்ன நினைப்பார்கள் என்று கட்சிக்
கூட இருக்கக்கூடிய நபர்கள் தோன்றக்கூடும் என்று கருதாமல்
ஆதரிக்கும்படியான பத்திரிகைகூட நேற்று உங்களை
சனை சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது உங்களுக்கு ஆலோ
மறந்துவிடக்கூடாது. ஆகவே, எதிர் என்பதை நாம்
நாயக பூர்வமாக சொல்லுகின்ற தரப்பிலேயிருந்து ஜன
சாய்க்கவேண்டும். இன்றைக்கு ஆலோசனைகளுக்குச் செவி
கள் நடைபெறுகிறது. பல்வேறு நியமனங்களிலே தவறு
போது அதற்கு செவி ஆளும் கட்சிக்காரர்கள் தலையிடுகிற
கள். அவர்களுக்கு சாய்க்கக்கூடிய அலுவலர்கள் இருக்கிறார்
சொல்லித்தான் பல நோக்கங்கள் இருக்கும். அமைச்சர்
இவ்வாறு இவ்வாறு செய்தார்கள். அரசு சொல்லித்தான்
செய்திருக்கிறது என்றெல்லாம் சொல்வார்கள். இன்
றைக்கு அவர்கள் பல தவறுகளைச் செய்தால் அந்த வட்டாரத்
திலே இருக்கக்கூடிய சட்ட மன்ற உறுப்பினர்களையோ அல்லது
வேறுசில நபர்களையோ அவர்கள் தாஜாபடுத்தி போகலாம் என்ற
எண்ணம் இருக்கலாம். ஆகவே கூடுதலாகத் தவறுகள் செய்யலாம்.
அப்படிப்பட்ட தவறுகள் இன்றைக்கு நடப்பதை தடுக்க வேண்டு
மென்று சொன்னாலும் நீங்கள் தேர்தல் நடத்த வேண்டும். அதன்
மூலம் தலையீடுகள் குறைக்கப்படும். அது இல்லாத காரணத்
தாலே பல இடங்களிலே நிச்சயமாகத் தவறுகள் குறைவதற்குச்
சாத்தியபாடுகள் உண்டு, இருக்கிறது என்பதை நான் சொல்ல
விரும்புகிறேன்.



அதே போல்தான் இன்னொன்றையும் நான் உங்களின்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்குச் செய்ய
வேண்டியது ஒரு முக்கியமானது. போதுமான நிதி வசதிகள்
இல்லாத ஒரு பெரிய குறைபாடுகள் இருக்கின்றன. பல ஊராட்சி
களிலே பேரூராட்சிகளிலே நிதி இல்லாமல் மிக நெருக்கடியான
நிலைமையில் இருக்கிறது. அது ஏனோ தெரியவில்லை. இந்த
உண்மையை நாம் உலகறியச் சொல்லித் தீரவேண்டும். அவைகள்
தங்களுடைய சிப்பந்திகளுக்கு சம்பளம் போடுவதோடு சரி. ஒரு
காரியத்தைக் கூட செய்ய முடியாது. ஒரு ரோட்டைப் போட
முடியாது. அதைப் பழுது பார்க்க முடியாது. அப்படிப்பட்ட
நிலையில் இன்றைக்கு இருக்கிறபோது, அதற்கு நிதி ஆதாரத்தை
நாம் உடனடியாக கொடுக்கவேண்டும்.

நான் கடைசியாக அரசை வற்புறுத்த விரும்புவது, நகர
சுத்தி தொழிலாளர் பற்றி திரும்ப சொல்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டினுடைய சுகாதாரத்தில் பாதுகாப்பு
பிலே மிக முக்கியமானது. மதுரையிலோ, திண்டுக்கல்லிலோ
கோயம்புத்தூரிலோ, சென்னையிலோ பல நகராட்சிகளிலிருந்து
உங்களுக்கு மனு வந்திருக்கிறது என்று நினைத்துக்கொண்டிருக்கி
றோம். நகர சுத்தி தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை
ஏற்றுக்கொண்டு ஒரு 50 பேர், 30 பேர் தான் நகராட்சிகளில்
கூடுதலாக்க வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். நகரம்
அபிவிருத்தி அடைந்திருக்கிறது. நகரத்திலே பலவிதமான
பகுதிகள் வளர்ந்திருக்கிறது. எல்லைக்கு அப்பாற் கூட வேண்டிய
நிலையிலே நகரம் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது. அந்த
எக்ஸ்டென்ஷன் ஏரியாக்களில் எல்லாம் முழுவதும் தண்ணீர்
இல்லை, ரோடு இல்லை, லே அவுட் கூட போடப்படவில்லை
என்று கமிஷனர் சொல்லி விடுகிறார். அந்த சாக்கடைத் தண்ணீர்
அங்கே தேங்கிக் கிடக்கிறது. தமிழ்நாட்டில் எது உற்பத்தி ஆகி
றதோ இல்லையோ, இந்திராகாந்தி அவர்கள் உற்பத்தி ஆண்டு
என்று சொன்னார்கள்-தமிழ்நாட்டிலே கொசு உற்பத்தி அதிகமாக
பெருகி இருக்கிறது. அதைத் காணிக்கையாக இந்திரா காந்திக்கு
சமர்ப்பிக்கலாம். (குறுக்கீடு) இருங்க சார், அவதி படுவீங்க—
கஷ்டப்பட்டுத்தான் தீரணும். இந்த கஷ்டத்தை இந்திரா

காந்தி காங்கிரஸ் (குறுக்கீடு) தாங்குவது சுலபம். ஏதாவது
சொல்ல வேண்டும் என்றிருந்தால் எழுந்து சொல்லலாம். அவர்
சொன்னால் நல்லது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவரவர்
களே, இங்கு பிரதம அமைச்சர் அவர்கள் உற்பத்தி ஆண்டு
என்று சொன்னது தமிழ்நாட்டிலே கொசு உற்பத்தி அல்ல. கொசு
உற்பத்தி அதிகமாக இருக்கிறது. எனவே, அதை அவர்களுக்கு
காணிக்கையாக அளிக்கவேண்டுமென்று இந்திய மார்க்கிஸ்ட்
கட்சி உறுப்பினர் வரதராஜன் அவர்கள் சொன்னார்கள். இதை
அவர்களுக்கு ஏன் காணிக்கையாக அளிக்க வேண்டும்? தொழில்
உற்பத்தி என்று சொன்னால், உணவு உற்பத்தியைப் பற்றி
சொன்னார்கள். கொசுவைப் பொறுத்தவரைக்கும் மாநில
அரசின் கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்கிறது. அவலை நினைத்துக்
கொண்டு உரலை இடிக்கவேண்டாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன்) :
இதையெல்லாம் நகைச்சுவையாக சொல்வதாக எடுத்துக்கொள்ள
வேண்டும்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு தற்காலிகத் தலைவர்
அவர்களே, நகைச்சுவைக்காகப் பேசும்போது கூட தமிழ்நாட்டி
னுடைய உண்மையான விவரங்களைப் பேசுவது நல்லது தான்.
நாமும் இந்த சட்டப் பேரவையில் இருக்கக்கூடிய மற்ற உறுப்பி
னர்களும், தமிழ்நாட்டினுடைய இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு
பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். அவர் சொன்னார். உரலுக்கு
ஒரு பக்கம் இடி. மத்தளத்துக்கு இரு பக்கம் இடி என்று இந்திரா
காங்கிரஸ் கட்சி இடி வாங்கிக் கொண்டு சமாளிக்கிறதே, அதற்
காக நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, இன்றைக்கு மத்திய
அரசினிடம் நாம் போதுமான நிதி ஆதாரங்களை வேண்டுமென்று
கேட்டு வருவதை வற்புறுத்தி வருகிறோம். அதனாலேயே நமக்கு
நகராட்சி, ஊராட்சிகளுக்கு நிதி ஆதாரங்களை கொடுக்க முடியா
மல் தவிக்கிறோம். கொசு அதோடு சேரும். ஆகவே,
இன்றைக்கு சிரமங்கள் இருந்தாலுங்கூட, இந்த கொசுத் தொல்
லையை நாம் ஒழித்துக்கட்டுவதற்காக புது முயற்சியை மேற்
கொள்ள வேண்டும்.

மொத்தம் ஒரு லட்சம் மக்கள் திண்டுக்கல்லில் தூங்குவது
இல்லை. அதைத் தான் நான் சொல்ல முடியும். அதிலே இட்டுக்
கட்டி சொல்வதோ அல்லது அண்ணா தி.மு.க. அரசுக்கு கெட்டப்
பெயர் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்வதாகவோ நீங்கள்
கருதாதீர்கள். உண்மை நிலையை உண்மை நிலை என்று
சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட காரியங்கள்
கூட நிறைவேற்ற முடியாத ஒரு துயரமான நிலையில் நம்முடைய



நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சி
கள், மாநகராட்சிகள் இருக்கின்றன. இந்த உண்மையை நீங்கள்
எடுத்துக்கொண்டால், அதற்கான காரியத்தை நிறைவேற்றிட
நாம் தேர்தலைக் கொண்டுவர முனைப்பாக செயலாற்ற வேண்
டும் என்பதை வற்புறுத்தி அமர்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஐ ஆம் ஆன் எ பாய்ன்ட் ஆப்
ஆர்டர் சார். சற்றைக்கு முன்னாலே எனக்கு ஒரு மகிழ்ச்சியான
செய்தி கிடைத்திருக்கிறது. தமிழகம் பெரிதும் எதிர்ப்பார்த்துக்
கொண்டிருக்கிற அரிசியும், கோதுமையும், இந்தியப் பேரரசு
அனுப்பி இருப்பதாக எனக்கு ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.
அந்தச் செய்தியை அரசின் சார்பிலே உறுதிப்படுத்துவார்களே
யானால், அந்த மகிழ்ச்சியிலே நாமும் சேர்ந்துகொள்ளலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன்) :
அதாவது இந்த நேரங்களில் பாய்ன்ட் ஆப் ஆர்டரை எழுப்
பக் கூடாது. இருந்தாலும் கேட்டு விட்டீர்கள். அரசு தரப்பிலே
ஏதாவது தகவல் இருந்தால் அமைச்சரவர்கள் தெரிவிக்கலாம்.
(குறுக்கீடு) அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர் வந்த பிறகு
விசாரித்துச் சொல்லலாம்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு சித்தன் அவர்களுக்கு அவை
முன்னவர் செய்யக் கூடிய இந்த வேலைஎப் போதிலிருந்து
ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பட்டசெய்திகள் வந்தால் அவை
முன்னவர் சொல்ல வேண்டுமே தவிர, இப்படிப் பட்ட செய்திகள்
எங்களுக்கு கிடைத்திருக்கிறது. நாங்கள் கொடுத்துக் கொண்டே
இருப்போம். பேசிக்கொண்டே இருப்போம். என்றால் அவை-
யினுடையகட்டுப்பாட்டை காப்பாற்ற முடியாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இதைச் சொல்வதனால் அவர்
கள் எந்த விதத்தில் பாதிக்கப்படுகிறார்கள். தமிழ்நாடு முழு
வதற்கும் தெரிய வேண்டிய செய்தி.

(பிற்பகல் 12-10).

திரு கு. ரமணி : அரசாங்கம் கேட்டு இருக்கிற அரிசிக்கு
மத்திய அரசாங்கத்திடமிருந்து உத்தரவு வந்து இருந்தால்,
அரசாங்கத்திற்கு அது தெரியும். பத்திரிகைகளில் செய்தி வந்து
இருக்கிறது என்று அவையில் சொல்லிவிட்ட பிறகு, நாளைக்கு
அரிசி கிடைக்கவில்லை என்று சொன்னால், மாண்புமிகு உறுப்
பினர் கொடுக்கப் போகிறரா ?

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உறுப்பினர்
ரமணி அவர்கள் அரிசி வேண்டும் என்று சொல்கிறரா, அல்லது
வேண்டாம் என்று சொல்கிறாரா என்று எனக்குத் தெரியவில்லை.

என் கவனத்திற்கு வந்த செய்தியை நான் இங்கே தெரிவித்தேன். அரசாங்கத் தரப்பில் அவர்களுக்குச் செய்தி வந்திருந்தால் அதை அவர்கள் தெரிவிக்கட்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன்):** அது பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள், முனிசிபாலிட்டிகள், கோயம்புத்தூர், சென்னை மாநகராட்சிகள் ஆகியவற்றில் தனி அதிகாரிகள் நியமனத்தை நீட்டிப்பதற்கான வகையில் கொண்டு வரப்பட்டுள்ள மசோதாக்கள் மீது நான் தந்து இருக்கின்ற திருத்தங்களை வலியுறுத்திப் பேச விரும்புகிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் இதே மசோதாவை திரும்பத் திரும்ப ஆண்டுக்காண்டு இந்த அவைமுன் வைக்கின்ற காரியத்தை தொடர்ந்து செய்து வருகிறார்கள். இதற்கு முன்னாலே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த திரு. காளிமுத்து அவர்கள் இந்தப் பணியைச் செய்து வந்தார்கள். இப்படி ஒவ்வொரு அமைச்சரும் அந்தத் துறையைப் பொறுப்பேற்றுக் கொள்கிற நேரத்தில் ஆண்டுக்காண்டு இத்தகைய மசோதாக்களை இந்த அவையின் முன் கொண்டு வருவது வழக்கமாகி விட்டது. இந்த தனி அதிகாரிகள் நியமனத்திற்கு நீட்டிப்புக்கேட்டுக் கொண்டு வருவது எப்படி இருக்கிறது என்று சொன்னால்— என்னுடைய தந்தை ரொம்பவும் பக்திமான். நான் 4—5 வயது சிறுவனாக இருந்த போது, என்னுடைய தந்தையார் என்னை பார்த்தசாரதி கோவிலுக்கு ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதத்தில் அழைத்துச் செல்வார். நான்காவது வாரம் கருட சேவை வருகிற போது ஒரு புத்தகத்தை எடுத்து சில வாசகங்களைப் படிக்கச் சொல்வார். இது ஒவ்வொரு ஆண்டும் நடக்கும்— அந்த மாதிரி நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்த ஸ்பெஷல் ஆபீசர் நியமனத்திற்கான எக்ஸ்டென்ஷன் கேட்டுக்கொண்டு வருவது வாடிக்கையாகிவிட்டது.

சென்னை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்துவது குறித்து நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். போன வருஷம் இந்த மசோதா சென்னைக்கு என்று கொண்டுவருகிற போது, என்ன காரணம் சொன்னீர்கள்? அதற்கு முன்னாலே இதே போன்ற மசோதா கொண்டு வந்தபோது என்ன காரணம் சொன்னீர்கள்? இப்போது என்ன காரணம் சொல்கிறீர்கள்? இது தான் வினோதமாக இருக்கிறது. முன்னால் சென்னைக் கார்ப்பரேஷனுக்கு எக்ஸ்டென்ஷன் கேட்டபோது என்ன சொன்



னீர்கள் என்றால், மஸ்டர்ரோல் வழக்கு இருக்கிறது, அது தீர வேண்டும் என்று 2—3 வருஷம் இழுத்தீர்கள். அதற்கு அடுத்த ஆண்டும், போன ஆண்டும் என்ன சொன்னீர்கள் என்றால், Census work has to be done by the Commissioner, Corporation of Madras. The Government of India has requested the State Govt. not to entrust any important work to the Commissioner, Corporation of Madras. என்று சொல்லி எக்ஸ்டென்ஷன் கேட்டீர்கள். அதைக் கூட நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இப்போது ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசன்சில் என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்று சொன்னால், அது தான் வினோதமாக இருக்கிறது. முதலமைச்சர் தந்து இருக்கிற வாக்குறுதி மீறப்படுமோ என்ற அச்சம் இருக்கிறது. இதைக் கிளியர் செய்ய வேண்டியது சம்பந்தப்பட்ட அமைச்சரின் பொறுப்பு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எஸ். சி. எஸ். டி. மற்றும் பெண்களுக்கு ரிசர்வேஷன் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அது இருக்கட்டும். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால், அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி கருத்துத் தெரிவிக்கின்ற நேரத்தில், இந்தப் பிரச்னை சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் வராது என்று சொல்லி இருப்பதாக நான் அறிகிறேன். ஆனால், இன்றைக்கு அதையும் காரணம் காட்டியிருக்கிறார்கள்.

Reservation will be examined as far as Corporation is concerned and Municipality is concerned.

என்று சொல்கிறார்கள். இதை எடுத்துக்கொள்வீர்கள் என்றால் நீங்கள் தந்து இருக்கின்ற வாக்குறுதி பிரகாரம், அனைத்துக் கட்சித் தலைவர்கள் எடுத்துச் சொன்னாலும் கூட, தேர்தல் நிச்சயமாக நடைபெறுமா என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டு இருக்கிறது.

அது மட்டுமல்ல. இன்னொன்றையும் சேர்த்திருக்கிறார்கள். அதில் ஒரு வினோதம். உரிய வயது வந்தவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை வழங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். 1—1—1983 முதல் 21 வயது அல்லது 18வயது வந்த அனைவரையும் வாக்காளர் பட்டியலில் சேர்த்து, அவர்களுக்கெல்லாம் வாக்குரிமை தர இருக்கிறோம் என்று சொன்னால், வாக்காளர் பட்டியல் தயார் செய்ய பல நாள் ஆகலாம், மாதங்கள் ஆகலாம். இதிலே பட்டவர்த்தனமாகத் தெரிவது என்னவென்றால், பஞ்சாயத்துத் தேர்தல் சம்பந்தமாக உச்சநீதி மன்றத்திலிருக்கும் வழக்கைக் காட்டி, தேர்தலை நடத்துவதில் காலம் தாழ்த்துவதைப் போல வாக்காளர் பட்டியல் தயார் செய்ய வேண்டும்; ரிசர்வேஷன் செய்ய வேண்டும் என்று காரணம் காட்டி கூட நீங்கள் காலம் தாழ்த்தலாம் என்ற அச்சம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதை நிவர்த்தி செய்கிற பொறுப்பு அமைச்சருக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. ப. நெடுமாறன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு
முழுவதும் எல்லா ஏரிகளின் உள்வாயில்களிலும் ஆக்கிரமிப்பு
நிகழ்ந்திருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளின் விளைவாக ஏரி
களில் நிற்கக் கூடிய தண்ணீரின் அளவு குறைந்து விவசாயத்திற்கு
பாசனத்திற்கு போதுமான நீர் கிடைக்கவில்லை என்ற புகார்
எல்லா மாவட்டங்களிலிருந்தும் வந்திருக்கிறது. ஆகவே அரசாங்
கம் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற என்ன நடவடிக்கை எடுத்து
இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்
களே, காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இப்போது ஏரி, குளங்
களின் உள் வாயில்களில் ஆக்கிரமிப்புகள் இருக்குமானால் அதை
அகற்றி வனத்துறையிடம் நாம் ஒப்படைத்து விடுகிறோம். அவர்
கள் அந்த உள் வாயில்களில் கருவேல மரம் போன்றவற்றைப்
பயிரிடுகிறார்கள். அதன் பிறகு விவசாயிகள் உள்ளே வந்து
ஆக்கிரமிப்பதற்கு வாய்ப்பு தடுக்கப்பட்டு வருகிறது. கிட்டத்
தட்ட 30 சதவீதம் குளங்கள் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில்
இருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பருவ காலத்தி
லேயும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு
வருகிறோம்.

### சக்தி—தலைமலை வனச்சரகங்களுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் ஆதிவாசிகள்

*வினா எண். 238 —**திரு. கு. ரமணி :** மாண்புமிகு ஆதி
திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் தாலுகா சக்தி
—தலைமலை வனச்சரகங்களுக்குட்பட்ட பகுதிகளில் முகாம்களில்
(செட்டில்மெண்டுகள்) வசித்து வருகிற ஆதிவாசிகளுக்கு கல்வி
உறைவிடப்பள்ளி, சுகாதாரம், குடிநீர் கிணறுகள், மின்விளக்கு
கள், கூட்டுறவு கடனுதவி போன்ற எந்த வசதியுமில்லாமல்
இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆமெனில் மேற்படி வசதிகளைச் செய்து கொடுக்க
நடவடிக்கை எகடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி ;** (அ) இதுபற்றிய விவ
ரங்கள் சேகரிகபட்டுள்ளன.

(ஆ)க்அ சியமான தேவைகளைச் செய்து கொடுக்க தக்க
நடவடிகைகருத்யவகாள்ளப்படும்.



**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நீண்ட நெடும் நாட்களாக சத்தியமங்கலம்
வனசரகப் பகுதிகளில் வசித்து வரும் ஆதிவாசிகளுக்கு, நான் கேட்
டுள்ள கேள்வியில் சொல்லப்பட்டுள்ள வசதிகள் இல்லாமல்
இருந்து வருவதை ஏன் அங்கே இருக்கிற அதிகாரிகள் அரசாங்
கத்தின் கவனத்திற்கு கொண்டு வரவில்லை. இந்த அசட்டை
யான நிலைக்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்
துச்சொன்னதைப்போல இந்த பகுதிகளில் இருக்கக்கூடிய ஆதி
வாசிகளுக்கு பல பிரச்னைகள் இருப்பதை உணர்ந்திருக்கிறோம்.
ஆனால் அதிகாரிகள் என் தகவல் தெரிவிக்கவில்லை என்று கேட்
கிறார்கள். அதன் மீது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் இருப்பவர்
களுக்கு என்னென்ன பிரச்னைகள் இருக்கின்றன என்பதை கேள்வி
யில் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். அதன்மீது அரசு
நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, ஆதிவாசிகளுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் நமது
அரசாங்கம் செய்யவேண்டிய உதவிகள் மற்றும் எடுக்க வேண்டிய
அபிவிருத்தி வேலைகளுக்காக மத்திய அரசாங்கம் குறிப்பிட்ட
பணத்தை சட்டப்பூர்வமாக தரவேண்டிய கடமையில் இருக்கிறார்
களா? இல்லையா? அது இந்த அரசிற்கு கிடைக்கிறதா ?
இல்லையா? அப்படி கிடைக்கும்போது, இப்படிப்பட்ட இடங்
களில் அரசு நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், எப்படி அவர்
களுக்கு அந்தப் பணம் தொடர்ந்து கிடைக்கும்? அதனால் இது
குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக உடனடியாக ஒரு
அறிக்கையைப்பெற்று நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சொன்ன அந்த பகுதி
களுக்கு அண்மையில் நான் சென்றிருந்த போது நிலைமைகளை
நேரில் கண்டிருக்கிறேன். சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலை
வர்களுக்கு இது குறித்து தெரிவித்து இத்தகைய பிரச்சனை
கள் எழாத வகையில் தமிழகம் முழுவதும் ஆதிவாசிகள் வசிக்
கக் கூடிய மலைப் பகுதிகளில் அதிக கவனத்தைச் செலுத்தி
ஆவன செய்ய வேண்டுமென்று அரசு அறிவுறுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மத்திய சர்க்கார் உதவி
கிடைக்கிறதா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அது
குறித்த பதில் இருந்தால் அமைச்சர் அவர்கள் தெரிவிக்கலாம்.

அது மட்டுமல்ல. இப்போது சென்னை மாநகராட்சியின் நிலைமையை நாம் பார்க்கிறோம். கவர்னர் உரையிலும் சரி, நிதிநிலை அறிக்கையிலும் சரி, கிராமப்புறங்களில் கழிப்பிடம் கட்ட 20 கோடி ரூபாய்க்கு மேல் நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். மகிழ்ச்சி ; கட்டுங்கள் ; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் சென்னையில் ஏற்கனவே இருக்கிற கழிப்பிடங்கள் கதி என்ன ? எப்படி இருக்கின்றன தெரியுமா? சைனா பஜாரில் போனால் மல்லிப்பூ வாடை, சென்னை நகரில் எங்கே போனாலும் மல வாடை, இன்றைக்கு சென்னை மாநகரின் நிலைமை இது தான். ஆகவே, முதலிலே கட்டப்பட்ட கழிப்பிடங்கள் பராமரிப்பு, மெயின்டனன்ஸ் ஒர்க், ஒழுங்காக இருக்க வேண்டும். அதற்கு இந்த இலாகாவில் என்ன ஏற்பாடு செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. நான் இலாகாவினரை குறை சொல்லவில்லை. இன்றைக்கு மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப மாநகராட்சியில் தொழிலாளர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நானும் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நேரத்தில் கூட அவரிடம் சுட்டிக்காட்டினேன்.

உள்ளாட்சி நிறுவனங்களின் தேர்தலைத் தள்ளிப் போடுவதினால், மக்களுக்கு ஏற்படும் கஷ்டம், அவதி, சுகாதார கேடு ஏராளம். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் சொன்னார். கொசு பெருகி விட்டது, கொசுத் தொல்லை அதிகரித்துவிட்டது, தாங்க முடியவில்லை என்று சொன்னார். அது மட்டுமல்ல. எங்கு பார்த்தாலும் குப்பைக் கூளங்கள் பெருகிவிட்டன. சாக்கடை ஸ்டிரைக் செய்கிறது. ''நான் உள்ளே ஓடமாட்டேன், வெளியே தான் ஓடுவேன்'' என்று ஸ்டிரைக் செய்கிறது.

ஆனால் சில நேரங்களில் மட்டும் பராமரிப்பு முறையாக இருக்கிறது. என்ன காரணம் ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ''மெட்டர்னிட்டி அன்ட் சைல்டு வெல்பேர் சென்டர்'' ஒன்றுக்கு கால்கோள் விழாவிற்காக வந்தார்கள். அந்த நிகழ்ச்சி நடைபெற்றபோது நானும் அதிலே கலந்து கொண்டேன். அந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னால் அங்கே ரோடு வசதி இல்லை ; சாக்கடை சரியாக இல்லை ; ஆங்காங்கே குப்பைக் கூளங்கள் காட்சியளித்தன. உள்ளாட்சித் துறை அமைச்சர் அந்த நிகழ்ச்சிக்கு வரப்போகிறார் என்று சொன்னவுடனே அந்த மேடைக்கு முன்னால் வரை ரோடு ''பேச் ஒர்க்'' செய்யப் படுகிறது ; லைட் எரிகிறது ; சாக்கடை சரியாக ஓடுகிறது ; குப்பைக் கூளங்கள் இல்லை. ஆனால் மேடைக்குப் பின்னாலே ரோடு சரியாக இல்லை ; ரோட்டின்மேலே சாக்கடை பெருக்கெடுத்து ஓடுகிறது, லைட் கிடையாது. அதே நேரத்தில் மேடைக்கு முன்னாலே ரொம்ப சீராக, அழகாகத் தெரிகிறது. ஆக, அமைச்சர்கள் வந்தால்தான் அந்த இடம் சீராகும் நிலைமை இருக்கிறது ; வரவில்லை என்றால் ஆங்காங்கே குண்டும், குழியும், சாக்கடை நாற்றமும்தான்.



என்னுடைய தொகுதியில் தண்டையார்பேட்டை, வண்ணாரப்பேட்டை போன்ற பகுதிகளில் பல இடங்களில் குப்பை எடுப்பதில்லை. கேட்டால் வண்டியில்லை என்கிறார்கள் ; வண்டி இருந்தால் மாடு இல்லை என்கிறார்கள் ; வண்டியும் மாடும் இருந்தால் ஆள் இல்லை என்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைதான் இன்றைக்கு சென்னையில் இருந்து கொண்டு இருக்கிறது.

அடுத்து ஒரு வினோதம் என்னவென்றால், மெட்ராஸ் கார்ப்பரேஷன் மேயரைப் பார்த்திருக்கிறது ; இன்றைக்கு தமிழ்நாட்டில் மூன்று மாநகராட்சிகள் இருக்கின்றன ; மூன்றிலும் மேயரையே பார்க்காத மாநகராட்சி ஒன்று இருக்கிறது. அது தான் கோவை மாநகராட்சி. மாநகராட்சி என்றால் மேயர் இருக்க வேண்டும். ஆனால் ''நாங்கள் மேயரைக் காட்ட மாட்டோம் ; ரகசியமாக வைத்துக் கொள்வோம் ; அதனால் தேர்தலை நடத்த மாட்டோம்'' என்று இந்த சர்க்கார் ஒரு முடிவு செய்திருக்கிறது.

இன்றைக்கு கோவை மக்கள், ''நாங்கள் மாநகராட்சியில் தானே இருக்கிறோம் ; எங்களுக்கு ஒரு மேயரைக் காட்டக் கூடாதா ; சீக்கிரம் மேயரைக் காட்டுங்கள்'' என்று கேட்டார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். அவரும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான். அவரை மேயர் வரவேற்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டும். அதை செய்வார் என்று நினைக்கிறேன்.

இன்னொன்று. இன்றைக்கு சுகாதார வசதி, விளக்கு வசதி, ரோடு வசதி, சாக்கடை வசதி எப்படி இருக்கிறது என்றால், அதைப்பற்றி சொல்லி முடியவில்லை. என்னுடைய தொகுதியில் மக்கள் என்னைக் கேட்கிறார்கள். என்னுடைய டெலிபோன் செலவில் மூன்றில் இரண்டு பகுதி என்னுடைய தொகுதி மக்களுக்காக போன் செய்வதாகத்தான் இருக்கும். அதிலும் குறிப்பாக இந்த கார்ப்பரேஷன் வாட்டர் போர்டு பற்றியதாகத் தான் இருக்கும்.

(பிற்பகல் 12–20)

நானே அது சம்பந்தமாக அடிக்கடி பலரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசுவதன் காரணமாக, பல ஆயிரக் கணக்கில் எனக்கு செலவாகிறது. என்னுடைய தொகுதியில் நடைபெற்ற பல கூட்டங்களில் மக்களிடத்தில் சொன்னேன் உங்களுக்கு சுகாதார 'வசதி வேண்டுமா,' நல்ல மின்சார விளக்குகள் வேண்டுமா, சரியான ரோடு வசதி வேண்டுமா அதற்கு முதலில் நான் சாகவேண்டும். சட்டமன்ற உறுப்பினராகிய நான் சாகவேண்டும். செத்தால் தான் பை-எலக்ஷன் வரும். பை-எலக்ஷன் வந்தால் தான் ஓட்டுக் கேட்க வருவார்கள். வரும்

போது சும்மா வரமாட்டார்கள். போரிங் பம்ப் வேண்டுமா.
ரிக்ஸ் போடவேண்டுமா, புதியதாக ரோடுகள் போட வேண்டுமா,
லைட்டுகள் வேண்டுமா என்று கேட்டு கேட்டு போடுவார்கள்.
குழாய் இந்த இடத்தில் போடப்பட்டிருக்கிறது ஐயா என்றுசொன்
னாலும் கூட, மேல் இடத்தில் பக்கத்திலேயே குழாய் போடச்
சொன்னார்கள் என்று பக்கத்திலேயே இன்னொரு குழாயையும்
போட்டுவிட்டுப் போவார்கள்.

ஆக ஒரு உறுப்பினர் செத்தால்தான் அந்த தொகுதி மக்க
ளுக்கு ,குடிநீர் வசதியும், சுகாதார வசதியும் கிடைக்கமுடியும்
என்ற சூழ்நிலை இருக்கிறது. அப்படி ஒரு அவல நிலைமை இருக்
கிறது. அதற்கு என்ன காரணம்? மக்கள் பிரதிநிதிகள்—மக்க
ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை என்பதுதான்,
நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பேசும்போதே சொன்னேன்.
எங்களுக்கு சட்டமன்ற உறுப்பினருக்குரிய மரியாதையே இல்லை.
எங்களை பஞ்சாயத்து உறுப்பினராகவும், மாநகராட்சி உறுப்பின
ராகவும் நடத்துகிறார்கள். சாக்கடை அடைத்துக் கொண்டு
விட்டதா, எம். எல். ஏ. விடம் போய் கேள். குழாயில் தண்
ணீர் வரவில்லையா எம். எல். ஏவிடம் போய் கேள். விளக்கு
எரியவில்லையா எம். எல். ஏவிடம் ஓடிப்போய் கேள். இதற்
கெல்லாம் எம். எல். ஏ. என்ன செய்ய முடியும் என்றால், அதற்குத்
தானே நாங்கள் ஓட்டுப்போட்டோம் என்கிறார்கள். இங்கே
சட்டமன்றத்தில் வந்து சட்டபிரச்னைகளை, மக்களுடைய வளர்ச்
சித் திட்டங்களில், சட்டப்பிரச்னைகளில் பங்கு பெற்று பணி
யாற்றவேண்டிய எங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால்
எங்களை ஒரு கவுன்சிலரைப்போல நினைத்து ஒவ்வொரு உள்ளூர்
பிரச்னைகளுக்கும் எங்களிடம் ஓடி வருகிறார்கள். ஆகவே, சீக்
கிரம் தேர்தலை நடத்துங்கள். இல்லை என்றால் எங்களை சட்ட
மன்ற உறுப்பினராக நடத்தவேண்டும் என்பது அவர்களுக்கு
மறந்தே போய்விடும். கவுன்சிலராகத்தான் நடத்துவார்கள். இப்
படி கேவலமாக நினைக்க வைக்க ஒரு ஆட்சி இருக்க வேண்டுமா?
அதற்கு ஒரு சட்டமன்றம் வேறு இருக்கவேண்டுமா என்கிற
கேள்வியை நான் இரண்டாண்டுகளுக்கு முன்பே இங்கே எழுப்பி
யிருக்கிறேன் . . . . .

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவை
மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்னு
ரங்கம் அவர்கள் தான் இறந்தால்தான் தன்னுடைய தொகுதி
கவனிக்கப்படும் என்பது போன்ற கருத்துக்களையெல்லாம் சொன்
னார்கள். உண்மையிலேயே அவர் இறக்கக்கூடாது. பல ஆண்டு
காலம் வாழ வேண்டும். பன்னெடுங்காலம் அவருடைய சேவை
இந்த நாட்டுக்குத் தேவை. அப்படிப்பட்ட கருத்தினை அவர்
சொல்வது கூட இந்த மாமன்றத்திற்கு ஏதுவாக இருக்க முடியாது
என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



அதே நேரத்தில் ஒரு தொகுதியிலே காரியங்கள் நடைபெறு கின்றன என்று சொன்னால், அங்கே இடைத் தேர்தல் வந்தால் தான் நடைபெறும் என்பது போன்ற தவறான கருத்தை இந்த மாமன்றத்திற்கு சொல்வது சரியாக இருக்க முடியாது. இன்று ஏறத்தாழ 378 ஊராட்சி ஒன்றியங்களுக்கு தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அப்படி செயல்படுத்தப்பட்டபோது அதில் எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் இருக்கக்கூடிய பகுதிகளுக்கும் அந்தத் திட்டம் போய்ச் சேர்ந்தது. அந்த திட்டத்தின் நடைமுறைகள் கட்சி வேறுபாடின்றி, எந்தவித மாச்சரியங்களும் இன்றி நடைபெற்றன. அந்தப் பகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் இருக்கின்றனர், இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் இருக்கின்றனர், கம்யூஸ்னிட் கட்சி உறுப்பினர்களும் இருக்கின்றனர், கா. கா. தே. கா. கட்சியினரும் இருக்கின்றனர். அப்படிப்பட்ட நேரத்திலே கூட இந்தப் பணிகள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆகவே, தயவுசெய்து அவர் இறக்க வேண்டும் என்று சொன்ன அந்த வார்த்தையை மட்டும் அவைக்குறிப்பிலேயிருந்து எடுத்துவிட்டால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஏனென்றால், அவர் பல 100 ஆண்டுக்காலம் நன்றாக வாழ வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். அவர் எந்த இறைவனை வேண்டுகிறாரோ, அதே இறைவனையே வேண்டி அவர் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அந்த வார்த்தையை எடுத்துவிட வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் தொகுதியில் தாம் பல இடங்களில் அவ்வாறு பேசி வருவதாக கூறுகிறார், தொகுதி வேறு, இந்த மன்றத்தில் பேசுவது வேறு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. ஆர். டி. கோபாலன்): நடவடிக்கைக் குறிப்பைப் படித்து பார்த்துவிட்டு பின்னர் வேண்டுமானால் நீக்குவதற்கு உத்தரவிடலாம் என்று கருதுகிறேன். (குறுக்கீடுகள்)

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேறு யாரையாவது சொன்னால், அவர்கள் சண்டைக்கு வரக்கூடும் என்பதற்காகத்தான் அவர் தன்னையே சொல்லிக் கொண்டிருக்கிறார். பை-எலக்ஷன் வந்தால்தான் வளர்ச்சிப்பணி காரியங்கள் நடக்கும் என்பதுதான் அவர் சொன்ன கருத்து.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நான்என்னைத்தானே சொல்லிக்கொண்டேன் வேறு யாரையும் சொல்லவில்லையே, அது மட்டுமல்லாமல் இதை நான் தொகுதி பூராவும் சொல்லிக் கொண்டு வருகிறேன். பை-எலக்ஷன் வந்தால்தான் இந்தப் பணிகள் நடைபெற முடியும். பை-எலக்ஷன் வருவதற்கு சட்டமன்ற உறுப்பினர் சாக வேண்டும். அது நானாகவும் இருக்கலாம், வேறு யாராக இருக்கலாம் என்றாலும், என்னையே சொல்லிக்கொள்வதில் தவறு இல்லை என்பதால் அப்படிக் குறிப்பிட்டேன். . . . . .

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்மிபுகு மாற்றுத் தலைவர் அவர்களே, இறந்தால்தான் இடைத்தேர்தல் வரும் என்பது அல்ல. அந்தத் தொகுதியினுடைய உறுப்பினர் ராஜினாமா செய்தாலும்கூட வரும்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த மட்டில் ராஜினாமா செய்கிற உறுப்பினர் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி செய்திருந்தாலும்கூட, ஏதாவது ஆதாயம் இருந்தால்தான் பண்ணியிருப்பார்கள். அது வேறு விவகாரம் . . . . .

**திரு. ஆர். மணிமாறன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொது மக்களுடைய நன்மையைக் கருதி, நீங்களே ஒரு முன் உதாரணமாக விளங்கலாம்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தொகுதியினைப் பொறுத்தவரையில் திருப்திகரமாகப் பணியாற்றுகிறேன். தொகுதியை விட்டுவிட்டு வேறு எங்கேயாவது சுற்றுகின்றவர்களுக்கு வேண்டுமானால் அது பொருத்தமாக இருக்கலாம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பொறுத்தவரையில் அவரவர்கள் அன்றாடம் தொகுதி மக்களைச் சந்திக்கின்ற பணியினைத் தான் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. எஸ். இராசு:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அண்மையில் வெளிவந்த பத்திரிகையில் ஒரு பக்தன் ஆண்டவனிடம் வரம் கேட்கிறான், அதற்கு என்னவரம் என்று ஆண்டவன் கேட்கிறான். நூறாண்டு வாழ்க என்ற விஷயத்திற்காகச் சொல்கிறேன் . . (குறுக்கீடு) . . அமைச்சர் அவர்கள் அனுமதித்தால் சொல்கிறேன். அண்மையில் ஒரு பத்திரிகையில் ஒரு கார்ட்டூன் வந்திருக்கின்றது . . . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன் :)** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. எஸ். இராசு அவர்கள் அமரவேண்டும். உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் கார்ப்பரேஷனுடைய ஸ்பெஷல் ஆஃபீஸருடைய பதவிக்காலம் எப்போது முடிகின்றது என்றால் 11–6–1983 அன்று. சென்னையைப் பொறுத்தவரையில் ஸ்பெஷல் ஆஃபீஸரின் பதவிக் காலம் 30–5–1983 அன்று முடிகின்றது. சட்டமன்றம் கூடுகின்ற இந்தக் காலக்கட்டத்திலே அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசுவது என்று மாண்புமிகு முதலமைச்சர்கூட



அறிவித்தார்கள். நீங்கள் மனது வைத்தால் இந்த காலக்கட்டத்திற்குள்ளேகூட தேர்தலை அனவுன்ஸ் பண்ணலாம். மாநகராட்சித் தேர்தலைப் பொறுத்தவரையிலே இந்த ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசனைச் சுட்டிக்காட்டிச் சொன்னபோதுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்பது மாதிரி தலையாட்டினார்கள்.

As far as Corporation is concerned, Scheduled Castes, Scheduled Tribes and Women Reservation.

அந்த ரிசர்வேஷன் இல்லை என்பது மாதிரி தலையாட்டினார்கள். அதுபற்றி எக்ஸாமின் பண்ணப்போவதில்லை என்ற மாதிரி தலையாட்டினார்கள். மேலும் 1–1–1983 வரையிலான வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படும் என்று ஜாடை காட்டியதிலிருந்து நம்பிக்கை வருகின்றது. எனவே இன்னும் இரண்டு மூன்று திங்கள் பதவியில் இருக்கலாம் என்ற எண்ணம் ஸ்பெஷல் ஆஃபீஸருக்கு இருக்கின்றது. ஆனால் ஒரு திங்களுக்குள்ளாகவே இந்த சட்டமன்றம் நடைபெறுகிற காலக்கட்டத்திலேயே அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப்பேசி தேர்தலை நடத்தியாக வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் கூடச் சொன்னார், ‘எதிர் கட்சியினைச் சேர்ந்த நீங்களும், திரு. ஹாஜா செரீஃப் அவர்களும் தேதியைச் சொல்லுங்கள், தேர்தலை நடத்தலாம்’ என்று சொன்னார்கள். ஆகவே நான் கேட்டுக் கொள்வது இதற்குள்ளாகத் தேர்தலை நடத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். எனவே தேவையில்லாமல் இதுபோன்று ஸ்பெஷல் ஆஃபீஸர்களுக்கு எக்ஸ்டென்ஷன் கொடுத்துக்கொண்டே போய் மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க முடியாத நிலையினை உருவாக்காதீர்கள் என்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. வெ. இராஜசேகரன் :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டினுடைய ஊராட்சிகள், நகராட்சி மன்றங்கள், மாநகராட்சிகள் ஆகியவற்றின் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதைப் பொறுத்த வரையில் சில தினங்களுக்கு முன்பு சட்ட முன் வடிவுகள் கொண்டுவரப்பட்டு அதற்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய எதிர்ப்பையும் கருத்துக்களையும், அன்றைக்கே எடுத்துச் செல்லியிருக்கிறேன். அது தொடர்பாக இன்றைக்கு கொண்டுவரக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றியும் சில விளக்கங்கள் மூலம் சில விவரங்களின் மூலம் அமைச்சரும், அரசும் நாட்டுமக்களுக்கு தெரிவிக்கவேண்டியது கடமை என்ற காரணத்தால் சில விளக்கங்களைப் பெற முயலுகிறேன். எதிர்க்கட்சி என்பதற்காக இந்தச் சட்ட முன்வடிவை எதிர்ப்பதாகவோ அல்லது ஆட்சேபணை சொல்வதாகவோ நீங்கள் கருதினால் அது உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்வதாகத்தான் அர்த்தமாகும். சில காரணங்களுக்காக

பொதுமக்களின் நன்மை கருதி தேர்தல் நடத்துவதை ஒத்தி வைத்திருந்தால் அதன் காரணமாக காலக்கெடுவை நீட்டிக் கேட்கின்றபோது ஆட்சேபணையும் எதிர்ப்பும் செய்வோமேயானால் அது முறையாக இருக்கமுடியாது என்று நாட்டுமக்கள் கருதுவார்கள்.

(பிற்பகல்—12–30)

ஆனால் 1979 ஆம் ஆண்டில் இருந்தே சென்னை மாநகராட்சியின் தேர்தலையும், 1971 ஆம் ஆண்டிலிருந்தே ஊராட்சி ஒன்றிய, பஞ்சாயத்து தேர்தல்களையும் நடத்தப்படாமல் இருக்கின்ற காரணத்தைப் பார்க்கின்ற போது உங்களுக்கு தேர்தல்களை நடத்துகின்ற ஒரு முடிவு இல்லாத அந்த அடிப்படையில் இருக்கிறது. நிச்சயமாக 5 ஆண்டு கால ஆட்சியில் ஊராட்சி மன்றத் தேர்தலையும் மாநகராட்சி தேர்தலையும் நடத்த மாட்டோம் என்ற உள்நோக்கத்தோடு ஒரு நிரந்தரமான முடிவோடு நீங்கள் இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு விதமான காரணத்தை நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். முதலிலே சொன்ன காரணம் 100 வட்டமாக இருந்த சென்னை மாநகராட்சி 150 வட்டமாக மாற்றப்பட்டிருக்கிறது, ஆகையால் புதிதாக சேர்த்த 50 வட்டங்களுக்கு அதனுடைய வாக்காளர் பட்டியல் எடுக்க வேண்டும் என்று சொல்லி தள்ளி வைத்தீர்கள். அடுத்து இடையில் கேட்கின்றபோது சென்னை மாநகராட்சியினுடைய மஸ்டர் ரோல் வழக்கு இருக்கிறது. அந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அந்த வழக்கு முடிந்ததும் தேர்தலை நடத்தலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த சட்டமன்றத்தில் கூறியிருக்கிறார்கள், ஒரு காலக்கெடுவை நீட்டிக்கும் போது சொன்னார்கள் 21 வயது வந்தவர்களுக்கு ஓட்டு போடும் உரிமை பொதுத்தேர்தலில் இருக்கிறது. இளைஞர்கள் அதிகமாக நாட்டின் மேல் பற்றுக்கொண்டு இருக்கிற காரணத்தால் அவர்களுக்கும் வாக்களிக்க வாய்ப்பு கொடுக்க இந்த அரசு முன் வருகிறது. அந்த அடிப்படையில் 18 வயதான இளைஞர்கள், மாநகராட்சி, நகராட்சி, உள்ளாட்சி தேர்தலில் வாக்களிக்க சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி மீண்டும் ஒரு முறை தள்ளி வைத்தீர்கள்.

அதற்கு பின்னால் கடந்த ஆண்டு நீங்கள் சொன்ன காரணம் மக்கள் தொகை கணக்கெடுப்பு மத்திய அரசு கணக்கு எடுத்துக் கொண்டு இருக்கிறது. அந்த புள்ளி விவரங்களை அடிப்படையாக வைத்து ஒரு வாக்காளர் ஜாபிதா கிடைத்தால் நிச்சயமாக அது ஒழுங்காக இருக்கும் என்ற காரணத்திற்காக அந்த சென்ஸஸை வைத்து ஒரு முறை தள்ளி வைத்தீர்கள். அடுத்து பின்னால் இப்போது சொல்லுகின்ற காரணம் பெண்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கும் இட ஒதுக்கீட்டில் உயர்நீதி மன்றத்தில் வழக்கு உச்ச நீதி மன்றத்திற்கு சென்று இருக்கிறது. ஆகையால் தான் அந்த தேர்தல் நடத்தப்படமுடியவில்லை என்றும் இப்போது நீங்கள் கூறுகிறீர்கள். உள்ளாட்சி, நகராட்சி தேர்தல்களுக்கு வேண்டுமானால் அந்த வெங்கடாசலம்பிள்ளை அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு சென்று இருக்கலாம். மாநகராட்சியை பொறுத்த அளவில் எந்த வழக்கும் எந்த தரப்பிலும் எந்த நீதிமன்றத்திலும் இல்லை. அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அந்த வெங்கடாசலம்பிள்ளை ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்றும் கட்சியின் மேலிடம் அவரிடம் சொல்லி வழக்கை வாபஸ் பெறச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் தேர்தலை விரைவாக நடத்தலாம் என்று சொன்னார்கள். வெங்கடாசலம் பிள்ளை அவர்கள் உச்ச நீதி மன்றத்திற்கு சென்று இருக்கிறார் என்று நீங்கள் கூறுகிறீர்கள். சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக்கூட்டி அவரை அந்த வழக்கை வாபஸ் பெறச் செய்யுங்கள் என்று சொன்னதாக கூறுகிறீர்கள். ஆனால் நீங்கள் சொல்லுகின்ற அந்த வெங்கடாசலம் பிள்ளை உச்ச நீதி மன்றத்திலிருந்து வழக்கை நிச்சயமாக வாபஸ் பெறவே மாட்டார் என்று சொல்லுகிறீர்கள். எனக்கு ஏற்படுகிற சந்தேகம் எல்லாம் அந்த வெங்கடாசலம்பிள்ளை வழக்கை உச்ச நீதி மன்றத்திலிருந்து வாபஸ் வாங்க மாட்டேன் என்று அவர் கூறுவதற்கு பதிலாக அமைச்சர் அவர்கள்



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவையின் மாற்று தலைவர் அவர்களே, வெங்கடாசலம்பிள்ளை அவர்கள் வழக்கை வாபஸ் பெற மாட்டார் என்று நான் சொல்லவில்லை. இந்த மாமன்றத்தில் அந்த குறிப்புகள் இல்லை என்று நான் நினைக்கிறேன். ஏன் என்றால் வெங்கடாசலம்பிள்ளை அவர்கள் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர் இருக்கின்ற கட்சி இந்திரா காங்கிரஸ் கட்சி. அந்த இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர் இந்த மேல் முறையீட்டை உச்ச நீதி மன்றத்தில் செய்திருக்கிறார். ஆகவே, கட்சியில் இருக்கின்றவர்கள், தலைவர்களாக இருக்கின்றவர்கள் உடனடியாக அப்படிப்பட்ட உறுப்பினரைப் பார்த்து இந்த வழக்கை நீ வாபஸ் வாங்கு என்று சொல்லி வாபஸ் பெறச் செய்தால் உடனடியாக பஞ்சாயத்து தேர்தலை நடத்தமுடியும் என்ற கருத்தைத்தான் நான் சொன்னேன். தவிர அவர் வாபஸ் பெற மாட்டார் என்று நான் சொல்லவில்லை. இப்போதும் வாபஸ் பெறுவதற்கு அவர் தயாராக இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் இராஜசேகரன் அவர்கள் அந்த கருத்தை இங்கே வெளியிட்டால் நலமாக இருக்கும்,

திரு. வெ. இராஜசேகரன் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன கருத்து பல முறை அவரை நீங்கள் கேட்டுக் கொண்டாகிவிட்டது. அவர் அந்த வழக்கை வாபஸ் பெறுவதாக தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இங்கே இருக்கின்ற இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் யாரும் அந்த கூட்டத்திற்கு வரவில்லை, ஆனால் மேல் சபை உறுப்பினராக இந்திரா காங்கிரஸ் தலைவராக இருக்கக்கூடிய திண்டிவனம் ராமமூர்த்தி அவர்கள் அந்த கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அவர்களிடத்தில் நாங்கள் உடனடியாக இந்த வழக்கை வாபஸ் பெறுவதற்கான முயற்சியில் நீங்கள் ஈடுபடவேண்டும் என்று சொன்னோம். ஒரு கட்சியைச் சேர்ந்தவர் உச்ச நீதி மன்றத்திற்கு சென்று இருக்கிறார். ஆகவே அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒரு தலைவர் அவரைக் கேட்பது நலமாக இருக்கும் என்ற கருத்தைத்தான் நாங்கள் அங்கே வெளியிட்டோம்.

திரு. வெ. இராஜசேகரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையிலே வழக்கு மன்றத்திலே கிடையாது. ஆகவே அவர்கள் வெங்கடாசலம் பிள்ளையைக் காரணம் காட்டுவதற்கு அதிலே நியாயம் கிடையாது. ஆனால் ஏன் தேர்தல் நடத்தவில்லை என்று கேட்கிறபோது அமைச்சர் பதிலிலே உடனே அலகாபாத்தைப் பாருங்கள், அகமதாபாத்தைப் பாருங்கள், ஹைதராபாத்தைப் பாருங்கள் என்று சொல்கிறார், உதாரணங்களைக் கூறுகிறார். அலகாபாத், அகமதாபாத், ஹைதராபாத் ஆகிய இடங்களிலே தேர்தல் நடக்கவில்லை என்றால் அந்த மாநகராட்சிகளின் மக்கள் மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களைப் பார்த்து ஏன் தேர்தல் நடத்தவில்லை என்று கேட்கமாட்டார்கள். அந்த மாநிலத்தினுடைய உள்ளாட்சித் துறை அமைச்சரைப் பார்த்துத்தான் ஏன் தேர்தலை நடத்தவில்லை என்று கேட்பார்கள்.

அவர்கள் இன்னொன்றையும் கேட்கிறார்கள். ஹைதராபாத்திலே தேர்தல் நடத்தாமல் இருந்தாலும் ஆந்திர மாநிலத்திலே உள்ள அத்தனை பஞ்சாயத்துக்களுக்கும் நகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டு அங்கே தேர்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்தான் ஒன்றியங்களுடைய தலைவர்களாக இன்றைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணம் சொல்கிறபோது தமிழ்ப் பண்பாடு, தமிழ் முறை, தமிழ்ப் பற்றுக் கொண்ட நல்ல உதாரணங்களாகச் சொல்ல வேண்டுமென்று



கேட்டுக் கொள்கிறேன். ஒன்றைக் கேட்டால், நடக்காத மாநிலத்தை நீங்கள் சுட்டிக்காட்டுவது எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்று கேட்கிறேன்.

திருமண நிகழ்ச்சிகளிலே புராணம் படித்தவர்கள் வாழ்த்துகிறபோது கூட ராமனும் சீதையும் போல் வாழுங்கள் என்று வாழ்த்துவது கிடையாது. காரணம் ராமனும் சீதையும் 14 ஆண்டுக்காலம் வாழ்க்கையிலே பிரிந்திருந்தவர்கள். அதைப்போலவே காப்பியத்திலே ஈடுபட்டுள்ள நீங்கள் சிலப்பதிகாரத் தலைவனும் தலைவியும், கண்ணகியும் கோவலனும் போல் வாழுங்கள் என்று வாழ்த்துவது இல்லை, காரணம் அந்தக் காப்பியத்திலே கணவனும் மனைவியுமாக அவர்கள் வாழ்ந்த காலம் குறைவு. ஆனால் நீங்கள் ஏன் செய்யவில்லை என்றால் அமைச்சர் அலகாபாத்தைச் சொல்கிறார். சொல்கிற உதாரணங்கள் காட்டுகிற மேற்கோள்கள் பழமொழிகள் நல்லவைகளாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். அமைச்சர் வேண்டுமானால் திருமண நிகழ்ச்சியைச் செய்கின்ற போது இவைகளை எல்லாம் விடுத்து ரிச்சர்ட் பர்ட்டனையும் எலிசபெத் டெய்லரையும் போல் நீங்கள் வாழவேண்டுமென்று வாழ்த்துவாரோ என்னவோ எனக்குத் தெரியாது. காரணம் அவர்களுடைய உதாரணங்கள் முரண்பாடாக இருக்கின்றன.

திரு. ஜி. மூர்த்தி : இப்போது எல்லாம் திருமணங்களிலே வாழ்த்துகிறவர்கள் காங்கிரஸையும் காங்கிரஸ் கட்சித் தலைவரையும் போல் என்று வாழ்த்துவது கிடையாது.

திரு. வெ. இராஜசேகரன் : அவர்களுடைய உதாரணங்கள் முரண்பாடானவை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் சொன்னேன். சென்னையிலே ஏன் கற்பழிக்கிறார்கள் என்று கேட்டால் உடனே அமைச்சர் அவர்கள் பதிலிலே டெல்லியிலே கற்பழிக்கவில்லையா என்று கேட்பார்.....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன்) : தாங்கள் பில்லைப்பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. வெ. இராஜசேகரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்கள் சற்று முன்னே சொன்னீர்கள், நகைச்சுவையாக சொன்னார் என்று. அதைப்போல் நகைச்சுவைக்காக என்று நீங்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர்கள் சொல்கிற கருத்துக்கள் முரண்பட்ட கருத்துக்களாக இருக்கின்றன என்பதற்காக நான் சொன்னேன். உங்களுடைய கொள்கைகளிலே மாறுபட்ட கருத்துக்கள் எங்களுக்கு உண்டு. உங்களுடைய கருத்துக்களுக்கு வேறுபாடான எண்ணங்கள் எங்களுக்கு உண்டு. ஆனால் தேர்தலில் அதிகப்

படியான இடங்களை நீங்கள் பெற்றிருக்கிற காரணத்தினால்
ஆட்சி பீடத்தில் இருக்கிறீர்கள். நாங்கள் தேர்தலிலே தோற்று
விட்டதால் எதிர்க்கட்சியில் இருக்கிறோம். எங்களுக்கும் உங்
களுக்கும் வேறுபாடு இருக்கிற காரணத்தினால் உங்களுக்கு
வரி கொடுக்கமாட்டோம் என்று நாங்கள் சொல்வதில்லை.
அதைப்போல் எங்களுடைய கொள்கைக்கு எதிர்ப்
புடையவர்கள் நீங்கள். ஆகவே உங்களுடைய வரி
யைப் பெற்று நாங்கள் ஆட்சி நடத்தமாட்டோம் என்று
நீங்கள் சொல்வதும் இல்லை. தமிழ்நாட்டினுடைய, சென்னை
மாநகராட்சியினுடைய குடிமகன் என்ற முறையிலேயும் சட்ட
மன்ற உறுப்பினர் என்ற முறையிலேயும் வரிகொடுப்பவன்
என்ற முறையிலேயும் அமைச்சரைப் பார்த்துக்கேட்கிறேன்.

(பிற்பகல் 12-40.)

நீங்கள் வாங்குகிற சம்பளம், இல்லையென்றால்கூட, நீங்கள்
வாங்குகின்ற ஒரு நாள் படி, அந்தப் படியிலே இருக்கிறது எங்
களுடைய வரிப்பணம். ஆகவே நான் கேட்கிறேன். சென்னை
நகரத்தில் வரி கொடுப்போன் என்ற முறையில், ஏன் நீங்கள்
தேர்தலை தள்ளி வைக்கிறீர்கள்? பதில் சொல்ல வேண்டியது
உங்கள் கடமை. கேட்பது என்னுடைய உரிமை. ஆரம்பத்தில்
ரேட் பேயர்ஸ் இன்ஸ்டிடியூஷன் என்று இருந்த அமைப்பு
இன்றைக்கு சிவிக் அமெனிட்டிஸ் பாடி என்று பெயர் மாற்றப்
பட்டிருக்கிறது. அதற்கு முழுமையான பொருள், மக்களுடைய,
வரி கொடுப்போருடைய அடிப்படை உரிமைகள்; அடிப்படைத்
தேவைகள்; அத்யாவசிய தேவைகள்; உயிர்நாடியான தேவை
கள்; இவைகளை செய்து கொடுக்க வேண்டிய பொறுப்புதான்
முனிசிபல் கார்ப்பரேஷனுக்கு இருக்கிறது. அந்த அடிப்படை
யிலே இன்றைக்கு இருக்கிற சென்னை மாநகராட்சி அடிப்படை
யான தேவைகளை வரி கொடுப்போருக்கு செய்து கொடுக்
கிறதா? என்றால் நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல
முடியும். இதுபற்றி ஆங்கிலப் பத்திரிகைகளிலும், தமிழ்
பத்திரிகைகளிலும், சென்னை மாநகராட்சியின் சீர்கேடுகள்,
சுகாதார அவலநிலை, மின் விளக்குகள் பற்றாக்குறை, இருக்கிற
கம்பங்களில் எரியாத விளக்குகள், இவற்றைப் பற்றியெல்லாம்
விமர்சனங்கள், ஆசிரியருக்கு கடிதங்கள் என்று நூற்றுக்
கணக்காக வருகின்றன. அமைச்சர் அவர்களுடைய பார்வைக்
கும் அந்த கடிதங்கள் வந்திருக்கலாம். ஆனால் எதற்கும் உரிய
நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அடுத்து மாண்புமிகு உறுப்
பினர் பொன்னுரங்கம் அவர்கள் கூறியதைப் போல சென்னை
மாநகராட்சியின் இருக்கிற கழிப்பறைகள்—இப்போது வேண்
மானால் தண்ணீர் பற்றாக்குறை இருக்கலாம்—சுத்தம் செய்யப்
படாமல் இருக்கின்றன. செப்டிக் டாங்க் அப்ஸ்ட்ரக்ஷன் என்பது
சென்னை மாநகராட்சியின் எல்லா கழிப்பறைகளிலும் இருக்கக்
கூடிய ஒரு நிகழ்ச்சி. அதனுடைய காரணமாக மக்கள் கழிப்



பறைகளின் உள்ளே செல்ல முடியாத நிலை. அவர்கள் சுவற்றுப் பகுதியிலே போகிற காரணத்தால் காலரா நோய் எங்கும் பரவு கிற முறையிலே அந்த கழிப்பறைகள் இருக்கின்றன. இன்றைக்கு கூட காசு கொடுத்து வெளியே போகக் கூடிய அளவிலே சென்னை மாநகராட்சியினுடைய நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக் கின்றன.

சாலைகளைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்களுக் கும், எம்.ஆர்.எப்க்கும், மோடி கான்டினென்டல் கம்பெனிக்கும் தொடர்பு இருக்கிறதோ என்று சந்தேகப்படுகிற அளவிலே ரோடுகள், பள்ளமும், மேடுமாக இருக்கின்றன. சாலைகள் அப்படி இருப்பதால் டயர்கள் அதிகமாக பழுதுபடுவதற்கு காரணமாக இருக்கிறது. அதே நேரத்தில் அண்ணா பெயரால் இருக்கிற சாலையையும், பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பெயரால் இருக்கிற சாலையையும் நீங்கள் அடிக்கடி செப்பனிடு கிறீர்கள். 6 அங்குலம், 9 அங்குலம், 12 அங்குலம் என்று சாலை களை உயர்த்திக் கொண்டே போகிறீர்கள். ஒரு தலைவர் ஏழை யின் சிரிப்பிலே இறைவனை காண்கிறேன் என்று சொல்லியவர். இன்னொருவர் ஏழைகளின் பங்காளன் என்று பெயர் பெற்ற தலைவர். அவர்களுடைய எண்ணங்களை 6 அங்குலம், 9 அங்கு லம் 12 அங்குலம் என்று உயர்த்தி, மேலே ரோடு ரோலர்களைப் போட்டு சமாதி கட்டுகிறீர்கள். உங்களுடைய பார்வையெல் லாம் அண்ணா சாலையில் இருப்பதைப் பற்றி எனக்கு ஆட் சேபணை இல்லை; பெருந்தலைவர் சாலையில் இருப்பதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. சற்று வட சென்னை பக்கத்தில் உள்ள சாலைகளின் மீது உங்கள் கண் திரும்புமா என்று தான் கேட்க ஆசைப்படுகிறேன். அங்கே இருக்கிற ரோடுகளை பார்த்து இருக்கிறீர்களா? அங்கு சந்துப் பகுதிகளில் இருக்கிற சாலைகள் எந்த ஆண்டு போடப்பட்டது என்று உங்களுக்குத் தெரியுமா? என்று தான் கேட்க ஆசைப்படுகிறேன். அந்த அளவிற்கு அந்த சாலைகள் பராமரிக்கப்படாமல், பழுது பார்க்கப்படாமல், நடந்து போகிறவர்கள் தடுக்கி விழக்கூடிய அளவிற்கு அங்கே இருக்கின்றன. விளக்குக் கம்பங்களில் இருக்கிற விளக்குகள், எரிந்து பல நாட்கள் ஆகிவிட்டன. சென்னை மாநகராட்சியின் தென் பகுதி மட்டும் தினந்தோறும் பௌர்ணமியாகவும்; வட சென்னை பகுதிகள் தினந்தோறும் அமாவாசையாகவும் இருக்கிற நிலை இருக்கிறது. குறிப்பாக எனது பகுதியில் திருவொற்றி யூரில் வியாபாரிகளுக்கு கிராமப் பகுதியிலிருந்து மாநகராட்சிப் பகுதிக்கு வந்து விட்டோம் என்ற நினைவே இல்லை. காரணம் விளக்கு பொருத்துவதற்கு முன்னால் பெட்ரோமாக்ஸ் லைட்டை பொருத்தி வைத்துக் கொண்டு தான் மின் சுவிட்சையே போடு கிறார்கள். கையில் வைத்திருக்கிற விசிறிகளை தான் உப யோகப் படுத்துகிறார்கள். மின் விசிறிகளைப் பற்றிய நினைவே அவர் களுக்கு கிடையாது. அந்த அளவிற்கு அந்தப் பகுதியிலே இருக்கிற வியாபாரிகள் சிரமப்படுகிறார்கள்.

அன்றாடம் நிர்வாகத்தை பார்ப்பதற்குத் தான் விசேஷ
அதிகாரிகளுக்கு நேரம் இருக்கிறது. வளர்ச்சிப் பணிகளை செய்
வதற்கு வேண்டிய பொருளாதார வசதி கிடையாது. 23 கோடி
ரூபாய் வருமானமுள்ள மாநகராட்சி 22 இலட்சம் ரூபாய்க்கு
செலவு செய்து, வளர்ச்சிப் பணிகளில் நாட்டத்தை செலுத்த
முடியாமல் இருக்கிறது.

என்னுடைய பகுதியில் கொருக்குப்பேட்டைக்கு அருகில்
மேல்நிலைத் தொட்டி கட்ட வேண்டுமென்று மூன்று ஆண்டு
களுக்கு முன்னால், குடிநீர் வடிகால் வாரியமும், மாநகராட்சியும்
ஒன்றாக இருந்தபோது, அதற்காக எஸ்டிமேட் போடப்பட்டு,
இன்றுவரையில் அந்த மேல்நிலைத் தொட்டி கட்டப்படவில்லை.
அந்த மேல்நிலைத் தொட்டிக்குப் பதிலாக இப்போது 'சப்-வெல்'
என்று எஸ்டிமேட்டை மாற்றக் கூடிய அளவிற்கு அங்கே நிலைமை
இருக்கிறது. அதேபோல தொண்டையார்பேட்டை மணிக்
கூண்டை ஒட்டி, ஜீவா பூங்கா என்று ஒன்று இருக்கிறது. அந்த
பூங்கா இன்று ஜீவனற்று இருக்கிறது. அமைச்சர் அவர்கள்
சென்னை மாநகராட்சியில் 440 பூங்காக்களை சீர் படுத்துவேன்
என்று சொன்னார்கள். ஆனால் என்ன நடந்தது? இன்னும்
அந்த ஜீவா பூங்கா பணிகளை துவக்காமல் பயனற்று கிடக்கிறது
நீங்கள் உங்களை பாப்புலர் கவர்ன்மெண்டாக.....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. சோபாலன்) :
இன்னும் 5 பேர்கள் பேசவேண்டும். அமைச்சர் வேறு பதில்
சொல்ல வேண்டும். சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. வெ. இராஜசேகரன் : தேர்தலை தள்ளி வைப்பதன்
மூலம் நீங்கள் உங்கள் அரசாங்கத்தை பாப்புலர் கவர்ன்மென்ட்
டாக ஆக்கிக்கொள்ள விரும்புகிறீர்கள். எல்லா காரியங்களை
யும், அமைச்சர் அவர்களே, ஆளுங் கட்சியே செய்ததாக ஒரு
மாயையை, ஒரு பிரம்மையை, தமிழக மக்கள் மத்தியிலே உண்டு
பண்ணப் பார்க்கிறீர்கள். நாடகங்களில் வருவதைப் போல,
'சிங்கிள் பிளே', 'ஒன் மான் ஷோ' நடத்திக் காட்ட முயற்சி
பண்ணுகிறீர்கள். காரணம் அமைச்சர் அவர்கள் நினைத்தால்
சுடுகாட்டிலே இருக்கிற காவலாளிக்குக் கூட தான்தான் உத்திரவு
போட வேண்டுமென்ற அளவிலே இன்றைக்கு நிர்வாகத்தைத்
தன் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். கொக்கிரகுளம்
பஞ்சாயத்தினுடைய உறுப்பினராக நானே இருக்க வேண்டும்,
கோமாளிப்பட்டி பஞ்சாயத்து தலைவராகவும் நானே இருக்க
வேண்டும், கோவை மாநகராட்சியினுடைய மேயராகவும்
நானே இருக்க வேண்டுமென்ற எண்ணம்தான் உங்கள் மத்தியி
லிருக்கிறது. அதன் காரணமாகத்தான் நீங்கள் தேர்தலைத்
தள்ளி வைக்கிறீர்கள். விசேஷ அதிகாரியினுடைய காலத்தை
நீட்டிக்கிறீர்கள்.



மேலும் ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. முதல்வர் அவர்களும்,
வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் சில நேரங்களில், சில
விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். சென்னை நகரத்தினு
டைய தலை நகரம் திருச்சிக்கு மாற்றப்படும்—மாற்றக் கூடிய
ஒரு சூழ்நிலை வரும் என்று சில கருத்துக்களையும் ஐயப்பாட்டை
யும் தெரிவித்தார்கள். (மணியடிக்கப் பெற்றது).

முதல்வர் சொன்னார், வருவாய்த்துறை அமைச்சரும் சில
கேட்புகளிலே சொன்னார். புதிய மாவட்டங்கள் ஆரம்பிக்கப்
படும்போது முதலமைச்சருடைய ஒப்புதலும் வருவாய்த்துறை
அமைச்சருடைய ஒப்புதலும் இருந்தால்தான் புதிய மாவட்டங்
கள், தலை நகரங்கள் உருவாகும் என்பது பட்ஜெட்டினுடைய
நிலைமை. அந்த அடிப்படையிலே, அவர்கள் சொன்னதை
வைத்து, ஒருவேளை அமைச்சர் அவர்கள், முதல்வரும், வரு
வாய்த்துறை அமைச்சரும் சொல்கின்ற காரணத்தால், சென்னை
நகரம் திருச்சிக்கு மாற்றப்படுமா என்ற ஐயத்தில் இந்தத்
தேர்தலை இப்பொழுது நடத்தி, வரிப் பணத்தை, சென்னை
நகரத்தினுடைய தேர்தலுக்காக செலவழிக்காமல், அந்தத் தலை
நகரத்தை மாற்றுகின்ற பிரச்சினைக்கு முடிவு வந்ததற்குப்
பிறகு சென்னை நகரத்தை செங்கல்பட்டோடு இணைத்து, பல்ல
வர்களுடைய நினைவுச் சின்னமாகிய சென்னைப் பட்டணம் என்று
மாற்றி, பஞ்சாயத்து யூனியன் தேர்தலோடு சென்னை
நகரத்தினுடைய ஊராட்சி ஒன்றியத் தேர்தலையும் நடத்தலாம்
என்ற எண்ணத்தில் இந்தத் தேர்தலை தள்ளி வைக்கிறார்களோ
என்ற எண்ணம் சென்னை நகர மக்களுக்கு இருக்கிறது.

கடைசியாகச் சொல்கிறேன், அடுத்த ஆண்டு 1983–84 ஆம்
ஆண்டு—ஒரு ஆண்டு மீதம் இருக்கிறது—தேர்தலைத் தள்ளி
வைத்து, நீங்கள் கூறுவீர்கள். அப்பொழுது நீங்கள் ஒரு காரணம்
சொல்வீர்கள். அந்தக் காரணம் நான் சொல்வதாகக் கூட இருக்
கலாம். அல்லது, அதற்கு மேலே கூட ஒரு நல்ல காரணத்தை
அமைச்சர் தேர்ந்தெடுத்து வைத்திருக்கலாம்.... (மணியடிக்கப்
பெற்றது).

திரு. எஸ். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள், நகராட்சி, மாநக
ராட்சி மன்றங்களின் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்
கிற இந்த மசோதாவை முதலிலே, ஆரம்பத்திலேயே, கொண்டு
வருகிறபொழுதே, எங்களுடைய கட்சியின் சார்பிலே நாங்கள்
எதிர்த்தோம். இன்றைய தினம் அதற்குச் சட்ட உருவம் தருகிற
நிலையில், அமைச்சர் அவர்கள் நம் முன்னால் கொண்டு வந்
திருக்கிறார்கள். இந்தத் தேர்தலை ஒத்தி வைப்பதற்காகச் சொல்
லப்படுகிற காரணங்கள், ஊராட்சி மன்றத் தேர்தல் வழக்கு
நீதிமன்றத்தில் இருக்கிறது என்பது. மற்றொன்று, வாக்காளர்
கணக்கெடுப்பு என்பது. இப்படி, பல்வேறு காரண காரியங்களை

சொல்லி இருக்கிறார்கள். ஊராட்சி மன்றத் தேர்தலுக்குக்
கோர்ட்டில் தடையிருக்கிறது என்பது ஒன்று. அதைக் கோர்ட்
டிலே சந்திக்க வேண்டும். அங்கே நம்முடைய அரசு வேகமாகச்
செயல்பட்டு, உடனடியாக, எப்படித் தீர்க்க வேண்டுமென்று
பார்த்து, அதற்கேற்ற நிலையை உருவாக்கி, தடையை நீக்க
அங்கே முயற்சிக்க வேண்டும். மதுரைக்குத் தேர்தலை நடத்திய
நம்முடைய மாநில அரசு மெட்ராசுக்குத் தேர்தலை நடத்த ஏன்
மறுக்கிறார்கள் என்பதை நம்மால் புரிந்துக் கொள்ள முடிய
வில்லை. மதுரையிலே தேர்தல் நடத்தினார்கள். இங்கே இல்லை,
அது ஒன்று, இரண்டாவது, இந்தத் தேர்தல் தடை சம்பந்தமாக
விவாதங்கள் வருகிறபொழுதே, மாணபுமிகு அமைச்சர் அவர்கள்
சற்று உணர்ச்சி வசப்படுகிறார்கள். அன்பாக பேசக் கூடியவர்,
முக மலர்ச்சியோடு இருக்கக் கூடியவர் அவர். எங்கள் கட்சியின்
தோழர் திரு. மு. அம்பிகாபதி அவர்கள் தேர்தலை ஒத்தி வைப்
பது சம்பந்தமாக ஒரு பிரச்சினையை விளக்குவதற்காக, எடுத்துச்
சொல்வதற்காக, தெளிவாகப் புரிய! வைப்பதற்காக, உங்கள்
தேர்தல் சின்னம் இரட்டை இலையாக இருக்கிறது. இந்த
நிலையில் ஏன் இரட்டை நிலைக்குப் போகிறீர்கள் என்று பேசி
னார்கள். நகராட்சிகளுக்குத் தேர்தலை நடத்தத் தடையில்லை,
மாநகராட்சிகளுக்குத் தேர்தலை நடத்தத் தடையில்லை.
படியிருக்க ஏன் தேர்தலை நடத்தவில்லை என்பதற்காக அப்படிச்
சொன்னார்கள். உடனடியாக, அமைச்சர் அவர்கள் உணர்ச்சி
வசப்பட்டு நாங்கள் அப்படி இல்லை, உங்கள் கட்சியில்தான்
இரட்டை வேறுபாடு என்று சற்று வேகமாகச் சொன்னார்கள்.

(பிற்பகல் 12–50)

நான் இந்தப் பேரவையில் என்றைக்கும் அப்படி பார்க்க
வில்லை. ஆனால், அன்றைக்கு அவர்கள் அப்படிச் சொன்
னார்கள். உங்களுக்கு ஒரு நல்ல அருமையான கருத்தைச்
சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும் உட
னடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று வற்புறுத்துகிறார்
கள்; ஆளுங் கட்சியின் சார்பில் அநேக காரணங்களைச் சொல்லி
இல்லை என்று சொல்கிறார்கள். இப்பொழுதுள்ள எதிர்க்கட்சி
யும், ஆளுங்கட்சியும் ஒன்றாக இருந்த நேரத்தில், திராவிட முன்
னேற்றக் கழகமாக ஒன்றாக இருந்த நேரத்தில் ஒரு திரைப்
படத்தை எடுத்தார்கள். திரும்பிப்பார் என்ற அந்தத் திரைப்
படத்திலே சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.
தொழிற்சங்கத்தைப் பலகீனப்படுத்தும் வகையில், அதன் தலை
மையைக் கேவலப்படுத்தும் நிலையில் உள்ள கதையைக் கொண்ட
படம் அது. இதை நான் ஏன் இப்பொழுது சொல்கிறேன் என்
றால், ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் நகரசபைகளைக் கலைத்தார்
கள். அது காங்கிரஸ் ஆட்சிக் காலம். அவர்கள் இப்பொழுது
தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். பிறகு,
ஆளுங்கட்சிக்காரர்களாகிய நீங்கள் ஊராட்சி மன்றங்களைக்
கலைத்தீர்கள். கேட்டால், '' ஸ்டே '' என்று சொல்கிறீர்கள்.



தேர்தலை விரைவில் நடத்த வேண்டுமென்று நாங்கள் சொல்
வதற்கான அடிப்படைக் காரணம், நாடு முழுவதும், குறிப்
பாகத் தமிழ்நாட்டில் கடும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. எல்லாக்
கிராமங்களிலேயும் அநேகமாக மக்கள் வேலைவாய்ப்பின்றி, விவ
சாயத் தொழிலையும் செய்ய முடியாமல் அவர்கள் நகர்ப்புறங்
களுக்குச் செல்ல ஆரம்பிக்கிறார்கள். நகர்ப்புறங்களுக்குச்
சென்று கூலி வேலை செய்தோ, மூட்டை சுமந்தோ தங்கள்
பிள்ளைக் குட்டிகளைக் காப்பாற்றலாம் என்று வருகிறார்களா
அதனால், நகரங்களுக்கு வரும் மக்கள் எண்ணிக்கை அதிகமா
கிறது. நகரங்களில் மக்களின் எண்ணிக்கை கூடுவதால் அங்கே
குடிநீர்ப் பஞ்சம் ஏற்படுகிறது : அதனால் சுகாதாரக் கேடு
கள் ஏற்படுகின்றன. நகரங்களில் மக்கள் வாழ்வதற்கு இட
மில்லை என்ற அவல நிலை பல நகராட்சிகளில் ஏற்பட்டிருக்
கிறது. இது அமைச்சரவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அப்
படியிருந்தும் ஏன் நகராட்சி தேர்தலை நடத்துவதற்கு மறுக்கிறார்
கள் என்பது புரியவில்லை. இந்த ஜனங்கள் கிராமங்களைவிட்டு
நகரங்களை நோக்கி வருவதற்கான காரணம், அங்கே பஞ்சம்
வேலையில்லை, குடிநீர் இல்லை, எனவே, நகரங்களுக்குச் சென்
றால் வாழ முடியும் என்ற நிலையில் அவர்கள் வருகிறார்கள்.
இந்தியாவில் வாழும் மக்கள் என்ற முறையில் அவர்கள் அப்படி
வருகிறார்கள். அந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக நாம் விரை
வில் அந்தத் தேர்தல்களை நடத்த வேண்டும்.

கோயம்புத்தூர் நகராட்சி மாநகராட்சியானதற்குப் பிறகு
இதுவரையில் தேர்தல் நடைபெறவே இல்லை. மற்ற நகராட்சி
களிலும் உரிய நேரத்தில் தேர்தல்கள் நடைபெறவில்லை. அண்
மையில் நடைபெற்ற தேர்தலில் நீங்கள்தான் ஜெயித்தீர்கள்.
அப்படியிருந்தும் தேர்தலை நடத்துவதற்கு ஏன் தயங்குகிறீர்கள்
என்பது எனக்கு விளங்கவில்லை. தேர்தல்களை ஒத்திவைப்பது
நாட்டின் நலனுக்கு உகந்தது அல்ல. நகராட்சி மன்றங்களை
அவர்கள் கலைத்தார்கள், 13,000-த்துச் சொச்சம் ஊராட்சி மன்
றங்களை நீங்கள்தான் கலைத்தீர்கள். இப்படி கலைத்துவிட்டு
இப்பொழுது தேர்தல் நடத்த வேண்டுமென்றால் வாய்ப்பு
இல்லை, நேரம் இல்லை, என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.
இந்த நிலைமை மாறி உடனடியாகத் தேர்தல் நடத்துவதற்கு
ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விழுப்புரத்தில் காலரா நோய் ஏற்பட்டு, நான்கு பேர் செத்
துப் போனதாகவும் செய்தி வருகிறது. இப்படிப்பட்ட நிலைமை
தமிழகம் முழுவதும் பரவும் நிலைக்கு வந்துவிடக்கூடாது. எல்லா
நகராட்சிகளிலேயும் சுகாதார ஊழியர்கள் குறைவாக இருக்கி
றார்கள். முப்பதாண்டுக் காலத்திற்கு முன்னால் எந்த அள
விற்கு இருந்தார்களோ அதே எண்ணிக்கையில்தான் ஊழியர்
கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். அவர்களை அதிகரிக்க வேண்
டும் என்பது ஒன்று. இரண்டாவதாக, தொழிலாளி என்று எடுத்

துக்கொண்டால் எங்கள் நகராட்சியில் ஒரு டெம்பரரி தொழி லாளிக்கு 7 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆற்காட்டில், சின்ன நகரம், அங்கே 9 ரூபாய் கொடுக்கிறார்கள். இரண்டு ஊர்களுக் கும் வித்தியாசம் இருக்கிறது என்று எழுதிக் கொடுத்திருக்கிறேன். அதற்குப் பிறகு பதில் சொல்வார்கள் என்று கருதுகிறேன். ஆனால், சட்டமன்ற விடுதியில் பணியாற்றுகின்ற பெண் ஊழி யருக்கு 4½ ரூபாய் தான் தருகிறார்கள். இது என்ன நியாயம்? இது என்ன நீதி? இது என்ன தர்மம்? நகராட்சியிலேயே ஒரு ஊரில் 9 ரூபாயும், இன்னொரு ஊரில் 7 ரூபாயும் அங்கே யிருக்கின்ற அதிகாரிகள் தருகிறார்கள். இங்கே இப்படி நிலை மை இருக்கிறது. சுகாதார ஊழியர்கள் குறைவாக இருப்பதால் காலரா வருகிறது. இத்தனைக்கும் அடிப்படைக் காரணம் தேர்தல் இல்லாததுதான். தேர்தல் விரைவில் வரவில்லை என்றால் இந்த நிலைமைகள் தொடர்ந்து நீடித்துக்கொண்டுதான் இருக்கும். இந்த நிலைமைகள் போக்கப்பட வேண்டுமென்றால், தமிழகத்திலே, நல்லாட்சி நடைபெற வேண்டுமென்றால், நாம் போடும் திட் டங்களும், எல்லாத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட வேண்டு மென்றால், அதன் பலன்கள் மக்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டுமென்றால் பஞ்சாயத்து போர்டு மெம்பர்கள் இருக்க வேண்டும்.

தொகுதி முழுவதும் லைட் சரியாக இல்லை. நான் வேலூ ரில் இருக்கிறேன். நான் அமைச்சரிடம்கூடத் தெரிவித்திருக்கி றேன். காட்பாடியில் இறங்கி காரில் போய் விட்டால் ரேடு நன்றாகத்தான் தெரியும். முதலமைச்சர் வருகிறார் என்ற நேரத் தில் ஆயிரக்கணக்கான லைட்டுகளைப் போட்டார்கள், ரோட்டை அகலப்படுத்தினார்கள். என்னுடைய தொகுதியில் 50-க்கும் மேற் பட்ட முறை அமைச்சர்கள் வந்தால் அங்கேயுள்ள எல்லா ஊராட்சிகளுக்கும் நல்ல ரோடு வரும் என்ற முறையில் எல்லா அமைச்சர்களையும்கூடக் கூப்பிட்டேன்.

நான் கூப்பிடாத அமைச்சரே கிடையாது. முதல் அமைச் சரைக் கூப்பிட்டேன். ஊள்ளாட்சித்துறை அமைச்சரைக் கூப் பிட்டேன் பல தடவை. ஏன் வர மறுக்கிறார்கள், என்பது தெரியவில்லை. வந்து பாருங்கள் என் தொகுதியை என்று கூப் பிட்டேன். என்னுடைய தொகுதியில் தண்ணீர் இல்லை. லைட் இல்லை. வைத்திய வசதி இல்லை. (குறுக்கீடு). இல்லை இல்லை. வரவில்லை. மறுத்துவிட்டார்கள். தேதி கொடுத்து நிறுத்திக்கொண்டார்கள். அதே போல் இராஜா முகமது அவர் களும் மறுத்துவிட்டார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர் கள் வருவதாகச் சொன்னார்கள். ஆனால், வரவில்லை. அன் றைக்கு ஒரு வேகத்திலே ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். மன்னார்குடிக்கும், மெட்ராசுக்கும் என்ன சம்பந்தம் என்ற வினா வை எழுப்பினார்கள். மன்ற உறுப்பினர் என்ற முறையிலே கேட்கிறேன். நீங்கள் தமிழ்நாட்டுக்கும் அமைச்சர். ஒரு



தொகுதிக்கு மட்டும் அமைச்சர் அல்ல. இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள், பிரச்சினைகளை எடுத்துச் சொல்கிறார்கள். சட் டப்படிச் சொல்கிறார்கள். நீங்கள் தொகுதிகளுக்கு வரவேண் டும். மக்கள் குறைகளைத் தீர்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் வேலூ ரிலே நடைபெற்ற பள்ளிக் கட்டிட திறப்பு விழாவிற்கு வந்து கலந்து கொண்டிருக்கிறோம். அந்தப் பகுதி அவருடையத் தொகுதியைச் சேர்ந்ததா இல்லையா? என்பதை அவர்கள் தயவு செய்து சொல்ல வேண்டும். நான் எல்லாத் தொகுதிகளுக்கும் போய் வரவேண்டுமென்ற எண்ணம் உடையவன்தான். நான் பல்வேறு தொகுதிகளுக்குச் சென்றிருக்கிறேன். தொடர்ந்து தொகுதிகளுக்குப் போக வாய்ப்பு எப்போது கிடைக் கிறதோ அப்போதெல்லாம் நான் போகிறேன். உங்களுடைய தொகுதிக்கும் வந்திருக்கிறேன். அது இல்லை என்று மறுக்கமுடி யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. என். ஏ. பூங்காவனம்:** விழாவிற்கு வந்து கலந்து கொண்டார்கள். அது என்னுடைய தொகுதி அல்ல. வி. என். தேவராஜ் தொகுதியில் உள்ள செவ்வாய்ப்பேட்டை. அது என் னுடைய தொகுதி அல்ல.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தொகுதிக்கெல்லாம் போகாதீர்கள். பில்லை ஒட்டிப் பேசுங்கள்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** பேரவைத் தலைவர் அவர் களே, நான் ஏதோ விமர்சனம் செய்ய வேண்டுமென்று நான் இவைகளைச் சொல்லவில்லை. தொகுதியிலே இருக்கின்ற உண் மையான, யதார்த்தமான நிலைமையைத்தான் நான் சொல்கி றேன். எனவே, இன்றைக்கு கொண்டுவந்து இருக்கிற திருத்தச் சட்டத்தை வாபஸ் பெற்று உடனடியாக சட்டப் பேரவைக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்னாலே நீங்கள் தேர்தலுக்கான தேதியை அறிவிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சியினுடைய சிறப்பு அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை மேலும் ஓர் ஆண்டுக்கு நீடிக்க வேண்டும் என்று கொண்டு வந்திருக்கிற இந்த மசோதா மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றி கூறிக் கொள்கிறேன், இந்த மசோதா கொண்டு வந்து இருப்பது

It is only administrative compulsicn

அதாவது நிர்வாகத்திற்கு அவசியமும், அவசரமும் ஆக இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர இதிலே வேறு எந்தவிதமான பிரச்சினையும் நாம் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. தேர்தல் நடத்த முடியவில்லை, தேர்தல் நடக்கவில்லை என்ற ஒரு காரணத்தினால், அவசரமாகவும், அவசியமாகவும் இந்தச் சிறப்பு அதிகாரிகளுடைய பதவிக்காலத்தை நீட்டிக்க வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு இந்த அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது. இது பாராளுமன்றத்திற்கானாலும் சரி, சட்ட மன்றங்களுக்கானாலும் சரி, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தியே தீர வேண்டுமென்பது,

It is a constitutional obligation.

அதேபோல் 5 ஆண்டுகளுக்குள்ளாக நடத்த முடியாமல் போகுமானால் ஜனாதிபதியினுடைய ஆட்சி 6 மாத காலத்திற்கு வரும். தேவைப்பட்டால் மீண்டும் ஒரு 6 மாதத்திற்கு நீட்டிக்க முடியும். அதற்குள்ளாகவே இந்த மாநிலங்களுக்கும், பாராளுமன்றத்திற்கும் தேர்தலை நடத்தியே தீர வேண்டும் என்று அடிப்படை அரசியல் சாசனத்தில் விதி உள்ளது, ஆனால், இவர்கள் இதையெல்லாம் மறந்துவிட்ட காரணத்தால், இந்த அரசியல் சட்டத்திலே உள்ள ஓட்டையின் அடிப்படையிலே புகுந்து கொண்டு இந்த மாநிலத்தை ஆளுங்கின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் காலம் காலமாக இந்தப் பஞ்சாயத்துக்கள் அல்லது மாநகராட்சிகளுடைய தேர்தலை நடத்தாமல், தங்களுடைய சௌகரியத்தை, தங்களுடைய வசதிக்காக, தாங்கள் எப்போது வைத்தால் தேர்தலில் ஜெயிக்க முடியும் என்ற அளவிற்கு அதை பிரயோகப்படுத்தக்கூடிய, அதை உபயோகப்படுத்தக்கூடிய அளவிற்கு இன்று ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், உள்ளபடியே நாம் அனைவரும் வருத்தப்படவேண்டிய ஒரு விஷயமாகும். அதுவும் குறிப்பாக சிவிக் பிராப்ளம்ஸ் என்று வருகின்ற நேரத்திலே இது கேலிக் கூத்தாக மாறிக்கொண்டிருக்கிறது. மற்ற இடங்களைப் பற்றி அவர்கள் மேற்கோள் காட்டலாம். ஆனால், அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஜனநாயகத்திலே நம்பிக்கை உடைய மக்கள் இங்கே வாழ்கிறார்கள். அதிலும் குறிப்பாக பஞ்சாயத்து நிர்வாகங்களிலே அல்லது மாநகராட்சி நிர்வாகங்களிலே, தேர்தல்கள் ஜனநாயகத்தின் அடிப்படையிலே நடக்க வேண்டும் என்ற உணர்வு உள்ள மக்கள் அதிகமாக இருக்கும் காரணத்தால் ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக ஆக்கக் கூடாது என்ற காரணத்தால் அதிலும் குறிப்பாக ஆளும் கட்சியில் உள்ளவர்கள் பொறுப்பாக இருக்கக்கூடாது என்ற அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



[பிற்பகல் 1-00]

மாநகராட்சியே ஏலம் போய் விடும் அல்லது கடனுக்கு ஆளாகிவிடும் என்று சொல்லி அதைக் கலைத்துவிட்டார்கள். 73-ஆம் ஆண்டிற்குப் பிறகு அது அரசாங்கத்தினுடைய நேரிடைப் பொறுப்பில் இருந்து வருகிறது. கிட்டத்தட்ட 9 ஆண்டு காலங்கள் பூர்த்தியாகி இருந்தபோதும் கூட ஒரு காரியம் செய்கின்ற போது அதனுடைய விளைவுகள் நல்ல பயனளிக்கக் கூடிய விளைவாக இருந்திருக்க வேண்டும். 73-க்கு முன்பு இருந்த ஊழல் அல்லது 73-ல் நடந்த ஊழல், இன்று வரை நடக்கவில்லை என்று அமைச்சர் உத்தரவாதம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்களா? அந்த ஊழல்கள் அப்படியே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருந்துகொண்டிருக்கிறது. மாநகராட்சியைப் பொறுத்தவரையில், அன்று வேண்டுமானால் மக்களுடைய பிரதிநிதிகள் 150பேர் அதில் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள், என்று குற்றம் சாட்டினார்கள். ஆனால் அந்த 150 மக்கள் பிரதிநிதிகளை வெளியே

தள்ளிவிட்டு : மாநகராட்சி அதிகாரிகளே நீங்கள் ஊழலை கன்டிநியூவஸ்-ஆக தொடர்ந்து நடத்திக் கொண்டிருங்கள் என்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்த நிலையில் தான் இன்று இந்த அரசாங்கம் இருக்கிறது என்பதை — அந்தக் கடமையில் நீங்கள் தவறிவிட்டீர்கள், என்று நான் இங்கே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநகராட்சியைப் பொறுத்தவரையில், ரோடு போடுவதி லிருந்தும் சரி, மற்றும் தெரு விளக்கு எரிவதிலிருந்தும் சரி, கக்கூஸ், கழிவறைகளை கழுவுவதிலிருந்தும் சரி, எந்த காரி யத்தை எடுத்துக் கொண்டாலும் கூட, சாதாரணமாக ஒரு பிளான் வாங்குவது என்ற நிலைமையை எடுத்தாலும், ஊழல் இல்லாத ஆட்சி நடைபெறுகிறதா, ஊழல் இல்லாத நிர்வாகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறதா, இந்த ஊழல்களைத் தடுப்ப தற்காகவே உறுப்பினர்களுடைய கஸ்டோடியன்ஸ், அவர்களு டைய விஜிலன்ஸ், அவர்கள் பார்த்திருந்தார்கள். சிலர் சம்பந் தப்பட்டிருந்தார்கள். ஆனால் பலர் சம்பந்தப்படவில்லை. அவர்கள் ஒரு மேற்பார்வையாளராக இருந்துகொண்டு ஒரு பாதுகாப்பாக ., அதிகாரிகள் தவறு செய்வதைத் தடுப்பதற்கு இருந்துகொண்டு இருந்தார்கள். ஆனால் இன்று நிலைமை என்ன ? சென்னை நகரில் இருந்து 14 சட்டமன்ற உறுப்பினர்கள் வந்திருக்கிறோம். கேவலம் இன்றைக்கு நகராட்சி பட்ஜெட் என்ன என்று கூட தெரியாமல் இருக்கிறோம். மாநகராட்சியினுடைய வரவு-செலவுத் திட்டத்தை அப்போ தெல்லாம் இந்த பிப்ரவரி-மார்ச் மாதங்களில் எப்படி சட்ட மன்றத்தில் வைக்கிறார்களோ அதைப்போல மாநகராட்சியிலே வைப்பது வழக்கம். இன்று இந்த மாநகராட்சியினுடைய வருமானம் என்ன ? இந்த மாநகராட்சியினுடைய செலவு என்ன ? பற்றாக்குறை என்ன ? எது எதற்காக நிதிகள் ஒதுக்கீடு செய்கிறார்கள் என்பது கூட தெரியாத நிலைமையில் இன்று 14 சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னை நகரில் இருந்து கொண்டிருக்கிறோம் — சென்னை நகரத்திலிருந்து— மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம் என்று சொன்னால், நாங்கள் உள்ளபடியே வெட்கி தலை குனிந்து கொண்டிருக்கிறோம்.



மக்கள் எங்களிடம் வந்து கேட்கின்ற இந்த நேரத்தில், இன்று மாநகராட்சி உறுப்பினர்கள் இல்லை என்ற காரணத்தால் அவர்கள் அடிக்கடி சட்டமன்ற உறுப்பினர்களை, மாநகராட்சி உறுப்பினர் கள் என்று நினைத்துக்கொண்டு எங்கள் வீட்டு சாலைகளில் கூட் டம் கூட்டமாக நின்று, அடிப்படைத் தேவைகள்—எங்களுக்கு ரோடு போடவில்லை, இந்த கக்கூஸ் சரிவர எடுக்கப்படவில்லை என்றெல்லாம்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே திரு. பொன்னுரங்கம் அவர்கள் எல்லா பாயிண்ட்ஸ்-ம் பேசிவிட்டார் கள்.

**டாக்டர் கே. சௌரிராஜன்:** எங்களுக்கு பட்ஜெட் புரவி ஷன் காப்பி கூட, கொடுக்கப்படவில்லை. நாங்கள் பட்ஜெட் புரவிஷன் என்ன என்று கூடத் தெரியாமல் தத்தளித்துக் கொண் டிருக்கிற துர்பாக்கியமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக் கிறோம் என்பதை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக மாநகராட்சி நிதிவசதியைப் பற்றி மாண்பு மிகு புரட்சித் தலைவர், முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன் னார்கள். 18 கோடி ரூபாய் வருமானம். இதில் 11 கோடி ரூபாய் அவர்களுக்குச் சம்பளமாக கொடுக்க வேண்டிய நிலைமை என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்த நிலைமை ஏன் உருவாகியது என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாநகராட்சிக்கு உள்ள ஒரே வருமானம் சொத்து வரி. அந்தச் சொத்து வரி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை 'குவின் குவினியல் ரிவிஷன்' என்று சொல்வார்கள். அதன் மூலமாக அவை மாற்றி அமைக்கப்பட வேண்டும். கடைசியாக சொத்து வரி எப்போது மாற்றி அமைக்கப்பட்டது என்று எங்களுக்குத் தெரியவில்லை. அதே நேரத்திலே இந்த மாநக ராட்சியினுடைய வருவாயைப் பெருக்குவதற்கு என்னென்ன வழிமுறைகளைச் செய்ய வேண்டுமென்று இருக்குமேயானால்,— இது ஒரு எலெக்டட் பாடி—ஒரு மாநகராட்சி—ஒரு கார்ப்பரேஷன் இருக்குமேயானால், நிச்சயமாக அது அவர்களுடைய தலை வலி·

அவர்களைத் தான் குறை கூறுவார்கள். அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் செய்து கொண்டிருப்பார்கள். அதை விடுத்து நாம் சக்தியும் இல்லாமல், நம்மிடத்திலே வசதியும் இல்லாமல், இந்த அரசாங்கம் கூடுதல் சுமையை எதற்கு தங்களுடைய தலையிலே சுமத்திக் கொண்டிருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஊரிலே தண்ணீர் வரவில்லை என்றால் — அண்ணா தி.மு.க. அரசாங்கம்—ரோட்டில் தண்ணீர் வராமல் குட்டையும் குளமுமாக இருந்தால் அண்ணா தி.மு.க. அநியாயமாக நீங்கள் வேண்டாத தொந்தரவை வம்பை விலைக்கு வாங்கிக்கொண்டு இந்த நிலமைக்கு ஆளாகி இருக்கிறீர்கள் என்பதை உங்களுக்கு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். உடனடியாக மாநகராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் (மணியடிக்கப்பெற்றது.)

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி, மாநகராட்சி ஆகியவற்றின் தனி அதிகாரியின் பதவியை நீடிக்கக் கோரும் இந்த மசோதாக்களின் மீது காந்தி காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால், நிர்வாகத்தை நடத்துவதற்காக அந்த அதிகாரிகளின் பதவிகளை நீடிக்க வேண்டும் என்று சொன்னாலும் கூட, இன்றைக்கு அங்கேயுள்ள அதிகாரிகள் எந்த முறையில் நடந்து கொண்டு வருகிறார்கள் என்பதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு வருகிறோம் என்ற முறையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அதிகாரிகள் தன்னிஷ்டம்போல், சர்வாதிகாரத்தனமாக நடந்து கொண்டு இருக்கிறார்கள். நாம் எந்தப் பகுதியில் சாலை போட வேண்டும், பாலம் கட்ட வேண்டும் என்று சொல்கிறோமோ அந்தப் பகுதியை விட்டுவிட்டு, அதிகாரிகளுக்குச் சாதகமாக, அந்தக் கான்ட்ராக்டர்களுக்குச் சாதகமாக எந்தப் பகுதி இருக்கிறதோ அந்தப் பகுதியில் சாலை போடுகிறார்கள்.,



பாலம் கட்டுகிறார்கள். மேலும், ஒரு சட்டமன்றத் தொகுதியில் 60 பஞ்சாயத்துகள், 250 சிற்றூர்கள், 300 சிற்றூர்கள் இருக் கின்றன. அவற்றிற்கெல்லாம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி கள் இல்லாத காரணத்தால், சட்டமன்ற உறுப்பினரிடம் தான் மக்கள் குறைகளை வந்து சொல்கிறார்கள். ஆனால், சட்ட மன்ற உறுப்பினர் ஒவ்வொரு இடத்திற்கும் சென்று அவற்றை நிவர்த்தி செய்ய முடியாது. அதற்கான வாய்ப்பும், வாகன வசதியும் அவருக்குக் கிடையாது.

அதிகாரிகள் இஷ்டம்போல் பணி செய்வது மட்டுமல்ல. அரசாங்கப் பணத்தையும் சுரண்டும் வாய்ப்பு இன்றைய தினம் ஏற்பட்டு இருக்கிறது. இங்கே எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னார்கள். தன்னிறைவுத் திட்டம் சிறப்பாக நடைபெறுகிறது என்று ஆளும் கட்சியினர் விவாதிக்கலாம். ஆனால் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக, வறட்சிப் பணி மூலமாக இணைப்புச் சாலைகள் போடுதல், ஆழ்குழாய் கிணறுகள் போடுதல் போன்ற பணிகள் செய்யப்பட்டதாகச் சொல்லலாம். ஆனால் எத்தனை இடங்களில் சாலைகள் உண்மையிலேயே போடப்பட்டன எத்தனை ஆழ்குழாய் கிணறுகள் இன்றைக்கு நல்ல நிலையில் பணி செய்கின்றன என்பதைப் நாம் பார்க்க வேண்டும். போடப் பட்ட ஆழ்குழாய் கிணறுகளில் 75 சதவீதம் சரியாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவரின் அனுமதியோடு, நான் ஒன்றை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன். இன்றைக்கு 'தினமலர்' பத்திரிகையில் ஒரு செய்தி வருகிறது. 'சாலை போடாமலேயே பணம் பெற்ற மோசடி' என்று தலைப்பிட்டு ஒரு செய்தி வந்துள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்தில், திருத்தணி தாலுக்காவில் மாலூர் என்ற கிராமத் திற்கு 1981 ஆம் ஆண்டிலே வறட்சி நிவாரணப் பணியின்கீழ் மாலூர்-கூனார் இணைப்புச் சாலைக்காக 25,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும், அதற்காக 1982 ஆம் ஆண்டில் 22,700 ரூபாய் அதிகாரிகள் பெற்றுக்கொண்டார்கள் என்றும் புள்ளிவிவரம் தரப்பட்டுள்ளது.

(பிற்பகல் 1·10)

ஆனால் சாலை போடப்படவில்லை. இன்று பத்திரிகையில் அதுபற்றி வந்திருக்கிற செய்தியை நீங்கள் பார்த்திருக்கலாம். அந்த அளவுக்கு, அரசாங்கம் நல்ல எண்ணத்தோடு ஏழை எளிய மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று எண்ணி காரியங்கள் செய்தாலும் அந்தப் பணம் கிராம மக்களுக்குப்

போகாமல் தனி அதிகாரிகளின் கைகளுக்குப் போய்விடுகிறது
என்ற காரணத்தால் இந்த பதவி நீட்டிப்பு சட்டத்தை மேலும்
கொண்டு வராமல் இன்னும் 2, 3 மாதங்களுக்கு உள்ளாகத்
தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
வணக்கம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு சபாநாயகர் அவர்
களே, சென்னை மாநகராட்சி ஸ்பெஷல் ஆபீசர் பதவிக்
காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் கொண்டு
வந்திருக்கிற இந்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்கள்
சிலவற்றைக் கூற விரும்புகிறேன். அதோடு கூட ஆதிதிராவிடர்,
மலைவாழ் மக்கள், பெண்கள் ஆகியோருக்கு ஸ்தானங்கள் ஒதுக்கு
வது பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய நினைவு
சரியாக இருக்குமானால், ஏற்கெனவே ஒருமுறை அமைச்சரவர்
கள் முனிசிபாலிட்டிகளிலும் கார்ப்பரேஷன்களிலும் அவர்களுக்கு
இட ஒதுக்கீடு இல்லை என்று சொன்னதாக கருதுகிறேன். இப்
போதாவது அரசாங்கம் நினைந்து, அவர்களுக்கு ரிசர்வேஷன்
கொடுக்குமானால், நல்ல எண்ணம் கொண்டு அதைச் செய்தால்
வரவேற்கத் தயராக இருக்கிறேன். ஆனால் கொடுப்பதாகச்
சொல்லி, பிறகு இல்லை என்று ஏமாற்றுகின்ற அவலநிலை ஏற்
படாது என்று அமைச்சர் அவர்கள் உறுதியளிக்க வேண்டும்.

இன்னொன்று கோடிக்கணக்கான ரூபாயை நாம் வரவு-செலவுத்
திட்டமாக வைத்திருக்கிறோம்; வரி விதிக்கிறோம். மக்கள்
பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் இதிலே சில தவறுகள்
நடக்கின்றன என்பது அமைச்சருக்கும் தெரிந்திருக்கிறது.
அப்படி இருக்கும்போது ஒரு ஆலோசனைக் குழு போடுவதிலே
என்ன கஷ்டம் இருக்கிறது? 2, 3 மாதத்திற்குள் தேர்தல் நடக்கும்
என்றால் ஆலோசனைக் குழு தேவையில்லை.

அமைச்சரவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் ஒரு
கேள்விக்கு பதில் சொல்லும்போது சென்னை மாநகராட்சியில்
150 டிவிஷன்கள் இருக்கின்றன; ஆலோசனைக் குழு போடு
வதாக இருந்தால் 150 பேர்களைப் போட வேண்டுமென்று சொன்
னார்கள். ஒரு பஞ்சாயத்து யூனியனில் 40, 50, 60 பஞ்சாயத்துக்
கள் இருக்கின்றன. ஆனால் மக்கள் குழுவில் 7, 10, 12 பேர்
களுக்குமேல் போடவில்லை. அதைப்போல இங்கேயும் 150
டிவிஷன்கள் இருந்தாலும் 5 பேர் அல்லது 10 பேர் அல்லது கட்சிக்கு
ஒருவர் என்ற முறையிலே போட்டாலும் போதும். அந்தவகையில்
எது சரியென்று தோன்றுகிறதோ அந்தவகையில் ஆலோசனைக்
குழுவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக நகரின் அவலநிலைபற்றி பல பிரச்சனைகளைச்
சொல்லியிருக்கிறேன்; முடிந்ததை செய்வோம் என்று சொல்லி
யிருக்கிறார்கள். ஆனால் ஒரு முக்கியமான பிரச்சனை. பள்ளிக்
கூடங்களில் போதுமான அளவுக்கு மேசை, நாற்காலிகள் இல்லை:

பிள்ளைகள் உட்கார இடம் இல்லாத ஒரு அவலம் இருக்கிறது
புத்தகங்கள் கொடுக்கப்படவில்லை. புரசவாக்கத்திலே லாசர்
நகரில் ஒரு கட்டிடம் கட்டுவதாகச் சொல்லி இரண்டாண்டுகள்
ஆகியும் இன்னும் கட்டப்படவில்லை. அந்தப் பள்ளிக்குப் போய்
பிள்ளைகள் படிக்கமுடியவில்லை. எனக்கு கமிஷனரும் வேண்டிய
வர்தான்; ஸ்பெஷல் ஆபீசரும் வேண்டியவர்தான்; எஜுகேஷனல்
ஆபீசரும் வேண்டியவர் தான். அப்படி இருந்தாலும் இரண்டரை
ஆண்டுக்காலம் ஆகிவிட்ட பிறகும் அந்தப் பள்ளிக்கூடம் கட்டப்பட
வில்லை. அதற்கு என்ன காரணம்? அங்கே ஆலோசனைக்
குழுவும் இல்லை; தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும்
இல்லை. அதிகாரிகளுக்கு இருக்கிற பல வேலைகளில் இந்த வேலை
விடுபட்டுப்போகிறதா என்பது தெரியவில்லை. அல்லது பணம்
இல்லையா என்றும் தெரியவில்லை. இந்த அவல நிலைகளை
மாற்ற அங்கே ஆலோசனைக் குழு இருக்க வேண்டும். அப்படி
யானால்தான் எந்தக் காரியமும் நடைபெறும்.

அதைப்போன்று பஞ்சாயத்து யூனியன்களுக்கு தேர்தல் நட
காமல் காங்கிரஸ் நண்பர்கள் தடை வாங்கிவிட்டார்கள் என்று
சொன்னார்கள். அவர் யாராக இருந்தாலும் தவறு நடக்காமல்
பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கம்தான். ஆனால் கார்ப்ப
ரேஷனுக்கும் முனிசிபாலிட்டிக்கும் யாரும் தடை வாங்கவில்லை.
அவற்றுக்காவது உடனடியாகத் தேர்தலை வைக்கலாம். 1973ஆம்
வருஷத்திலிருந்து 1983 வரை தேர்தல் நடக்கவில்லை; மக்கள்
பிரதிநிதிகள் அங்கே இல்லை என்கிற அவலநிலைமை இருக்கிறது.

கோவை மாநகராட்சி மட்டுமல்ல ; எந்த மாநகராட்சிக்கும்
ஆலோசனைக் குழு போடப்படவில்லை. ஆளும் கட்சியாக இருந்
தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக
இருந்தாலும் சரி, டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்திற்கு வர
வில்லை என்றால் கண்காணிக்க வேண்டும். குறைந்த எண்ணிக்கை
உறுப்பினர்கள் இருந்தாலும் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று
கலெக்டருக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். பல இடங்களில்
கூட்டம் நடக்கவில்லை. இந்த அவலத்தைப் போக்க விரைவிலே
தேர்தலை நடத்துவதைத் தவிர வேறு வழி ஒன்றும் தெரிய
வில்லை.

கோவை மாநகராட்சிக்கு 44 கோடி ரூபாய் செலவிடுகிறோம்.
ஒரு ஆலோசனைக் குழு போடுவதிலே எத்தனை கோடி செலவாகி
விடப் போகிறது? அல்லது யாருக்கு அந்தப் பணம் போய்விடப்
போகிறது? ஆகவே, உடனடியாக அங்கே ஆலோசனைக் குழு
போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்
பெற்றது).

இப்போது சென்னை மாநகரில் பல இடங்களில் பள்ளிக்கட்டி
டங்கள் சரியாக இல்லை; கழிப்பிடங்கள் இல்லை. சாக்கடை
வசதி இல்லை, தண்ணீர் வசதியும் இல்லை. பல கட்டிடங்கள்
கட்டப்பட்டும் அவை திறக்கப்படவில்லை. இதை எல்லாம் உடனடி
யாக சீர்செய்ய வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர் களால் கொண்டு வரப்பட்ட இந்த தனி அதிகாரிகளின் பதவி நீட்டிப்பு சம்பந்தமான திருத்த மசோதாவிலே ஒன்றிரண்டு வார்த் தைகளைச் சொல்வதற்கு அனுமதி வழங்கியதற்காக முதலிலே தலைவருக்கு நன்றியைக் கூறி, என்னுடைய உரையை ஆரம்பிக் கிறேன்.

இப்போது ஒன்றியங்களிலேயும், நகராட்சிகள், ஊராட்சி களிலேயும் தற்போது பதவியில் இருக்கிற தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை இன்னும் நீட்டித்துக் கொண்டே போவோமே யானால், எந்த அளவுக்கு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், இன்னும் பாதிக்கப்படுவார்கள் என்பதற்கு மாத்திரம் ஒன்றிரண்டு உதாரணங்களைக் கூறிவிட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு).

இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் 4 மாதங்களுக்கு முன்னால் நான் என்னுடைய தொகுதியில் சம்பந்தப்பட்ட பிளாக் அதிகாரி களை அழைத்துக்கொண்டு பார்வையிடச் சென்ற போது மட்டப் பாறை என்ற ஊரில் ஒரு புகார் வந்தது. பல லட்சம் ரூபாய் செலவு செய்து, மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டி, அதன் மூலமாக அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதிலே லீக்கேஜ் ஏற்பட்டு வீணாக வெளி யேறிவிடுவதால் தண்ணீர் கிடைப்பதில்லை என்ற புகாரை ஊர் பொது மக்கள் திரண்டுவந்து முறையிட்டனர். அப்போது உடனேயே என்னோடு வந்திருந்த என்ஜீனியர், ஈ. ஓ., கமிஷனர் போன்ற வர்களை எவ்வளவு நாளைக்குள் இதைச் சீர் செய்வீர்கள் என்று கேட்டபோது, '' அக்கா 15 நாட்களுக்குள்ளேயே அதை செய்து முடித்து விடலாம்'' என்று சொன்னார்கள். சரி, அதைச் செய்து விடுங்கள் என்று சொல்லிவிட்டு, சென்று விட்டேன். ஆனால் சென்ற மாதம் நான் மீண்டும் அங்கே போனபோது, அந்தத் தொட்டியில் இருந்து லீக்கேஜ் வழியாக இன்னமும் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்த நிலை தான் இருந்தது. தண்ணீர் மக்களுக்கு வரவில்லை. அந்த மக்கள் சொல்கிறார்கள், பஞ்சாயத்தில் பணம் 50,000-க்கு மேல் இருக்கிறது. ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்தக் குழாய்களை மாற்றிப் போடும் சூழ்நிலையில் இல்லை. இதன் விளைவு நாங்கள் தண்ணீர் இல்லாமல் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம், நீங்கள் பார்த்தாவது இதை உடனடியாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று முறையிடுகிறார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவர், யூனியன் தலைவர் இருந்தால், இந்த அளவுக்கு ஒரு குழாயை ரிப்பேர் செய்வதற்கு காலதாமதம் காட்ட மாட்டார்கள் என்ற முறையிலேதான் இதைக் குறிப்பிட்டுச் சொன்னேன்.





நான் இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரியிடத்தில் சென்று கேட்டபோது, குழாய்களை எல்லாம் வாங்கிவிட்டோம், அதற்குத் தேவையான மற்றச் சாமான்களையும் வாங்கிவிட்டோம். அவை களை டிரான்ஸ்போர்ட் செய்து கொண்டு வருவதிலேதான் கால தாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இந்த அவல நிலை ஏன் இருக்கிறது என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் அந்த மன்றங்களிலே இருப்பார்களேயானால் இதுபோன்ற குறைபாடு கள் ஏற்பட வழியேயில்லை என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும் சற்று சிந்திக்க வேண்டும். எவ்வளவு சீக்கிரத்தில் தேர்தலைக் கொண்டு வர முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல இன்னொரு பிரச்னை. அதே மட்டப்பாறையில் பஞ்சாய்த்து யூனியன் ஆஸ்பத்திரி ஒன்று வேண்டும் என்று 1973 ஆம் ஆண்டில் ரூ. 5,000-ம் கட்டி அந்தப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நானும் சட்டமன்றத்தில் எனக்கு நேரம் கிடைத்த போதெல்லாம் இது குறித்து எடுத்துச் சொல்லியிருக் கிறேன். மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களின் அறைக்குச் சென்று நேரில் இது பற்றி பேசியபோது, அதற்குரிய பணத்தை கட்டிவிடச் சொன்னார்கள். அவருடைய அறையிலேயே உட் கார்ந்துக் கொண்டு நானும் டிரங்கால் புக் பண்ணி, கமிஷனரிடம் சொல்லி, அந்தப் பணத்தை அன்றே கட்டுவதற்கு ஏற்பாடு செய்யச் சொன்னேன். அதற்கான பணமும் கட்டியாகிவிட்டது. அங்கே ஆஸ்பத்திரி கட்டவேண்டும் என்பதற்காக 5 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டது. அப்படி இருந்தும் கூட இதுவரையில் அங்கே ஆஸ்பத்திரி கட்டி முடிக்கப்படவில்லை. இவ்வளவும் ஏன்? அங்கே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பிரதிநிதிகள் இருந்தால் அந்த யூனியன் அதாவது அந்தக் கவுன்சில் இன்னும் யோசித்துக் கொண்டிருக்காது. அவர்கள் உங்களை கேட்க வேண்டிய அவசியம் கூட இல்லை. இன்-ஆன்டிசிபேஷன் ஆப் சாங்ஷன் என்று எழுதி அனுப்பி விட்டு, ஆஸ்பத்திரியைக் ஆரம்பித்து இருக்கலாம். அப்படி ஒரு அமைப்பு இல்லாத காரணத்தாலேதான், இந்த வேலைகள் இப்படிதாமதப் படுகின்றன. (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உள்ளாட்சி மன்ற தனி அதிகாரிகள் சட்ட மசோதாவில் ஆஸ்பத்திரியைப் பற்றி எல்லாம் சொல்லிக் கொண்டே போகிறீர்களே. சீக்கிரம் முடித்துக் கொள் ளுங்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அதை சொல்லி முடித்துவிட்டு இந்த பாயின்ட்டிற்கு வந்துவிடுவேன். ஐ வில் கம் டு தி பாயின்ட். இப்படி வேலைகள் காலதாமதம் ஆவதைத் தவிர்க்க வேண்டும் என்றுதான் அந்த மன்றங்களின் தேர்தல்களை உடன டியாக நடத்த வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். தனி

அதிகாரிகளின் பதவியை அவர்களின் காலத்தை நீட்டித்துக்
கொண்டே போவதில் அர்த்தம் இல்லை என்று குறிப்பிட
கிறேன். காலையில் கூட காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்த ஒரு
பெரிய பிரமுகர் ஒருவர் இது சம்பந்தமாக வழக்கு மன்றத்திற்குச்
சென்றது பற்றி இந்த அவையிலே குறிப்பிடப்பட்டது (மணி
யடிக்கப் பெற்றது).

ஆகவே இவைகளையெல்லாம் தவிர்த்து, சீக்கிரத்தில் பெண்
களுக்கு கொடுக்க வேண்டிய ஒதுக்கீட்டையும், முன் உரிமையையும்
கொடுத்து, அரிசனங்களுக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்டதை
யும் முறையாக அளித்து, வெகு விரைவில் தேர்தலை நடத்த
வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்
துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1—20)

**திரு. சு. பாலன் :** பேரவைத்தலைவர் அவர்களே, இந்த
மாமன்றத்திலே ஊராட்சி, நகராட்சி, சென்னை மாநகராட்சி,
கோயம்புத்தூர் மாநகராட்சி போன்றவற்றின் தனி அதிகாரி
களின் பதவிக் காலத்தை நீடிக்கக்கூடாது என்றும் தேர்தலை
உடனடியாக நடத்தவேண்டும் என்றும் பல உறுப்பினர்கள்
கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். நான்
சென்னை மாநகராட்சியினைப் பற்றி ஒரு சில வார்த்தை
களைச் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.
சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு கிட்டத்
தட்ட 7,8 தனி அதிகாரிகள் மாறி மாறி பதவி ஏற்றிருக்கிறார்கள்.
சென்னை மாநகராட்சி கலைக்கப்படுகின்றபோது திரு.
டி. வி. அந்தோணி என்பவர் தனி அதிகாரியாக இருந்தார்.
அவர் இரண்டு ஆண்டுகள் 7 மாத காலம் பணி புரிந்தார்.
அவரால் சில நல்ல காரியங்களை ஆற்ற முடிந்தது. அதன்
பின்னர் திரு. சி. தங்கராஜ் ஓராண்டுகாலம் இருந்தார். தனி
அதிகாரியாக வருபவர்கள் மாநகராட்சியின் மேயர் பதவியின்
அந்தஸ்தைப் பெற்றவர்கள். அந்த முறையிலே பார்க்கின்ற
போது சென்னை மாநகராட்சியிலே பணி புரிபவர்களுக்குத்
தனிச் சிறப்பு இருக்கின்றது. திரு. தங்கராஜ் அவர்கள்
ஓராண்டுகாலம்தான் பதவியில் இருக்கக்கூடிய நிலைமை
இருந்தது. எனவே அவரால் எந்தத் திட்டத்தையும் ஆற்ற
முடியவில்லை. அதன் பின்னர் திரு. ஆர். ஏ. சீத்தாராமதாஸ்
என்பவர் 10 மாத காலம்தான் இருந்தார். அவர் மாஸ் கான்
டாக்ட் ப்ராகிராம் என்ற திட்டத்தை உருவாக்கினார்.
மக்களை நேரடியாகச் சந்தித்து சட்டமன்ற உறுப்பினர்
களின் கருத்துக்களைப் பெற்று நல்ல முறையிலே பணி
யாற்றக்கூடிய நிலைமையை உண்டாக்கினார். ஆனால் அவரால்
நீண்டகாலம் பதவியில் இருக்க முடியவில்லை. 10 மாத காலத்
திலேயே அவர் மாற்றப்பட்டு விட்டார்.



அதன் பின்னர் திரு. சி. ராமதாஸ் என்பவர் வந்தார். அவர்
இரண்டாண்டுகாலம் இருந்தார். அவர் 6 மாத காலத்திலே
நிலைமைகளை எல்லாம் தெரிந்து கொண்டு அதன் பிறகு திட்டங்
களை நல்லமுறையில் நிறைவேற்றினார். அதன் பின்னர் திரு.
டீ. ராமச்சந்திரன் என்பவர் வந்தார். அவர் 10 மாத காலம்
தான் இருந்தார். அதன் பின்னர் திரு. முருகராஜ் என்பவர்
வந்தார். அவர் ஓராண்டுகாலம் இருந்தார். இப்படி இவர்கள்
எல்லாம் இருந்து நல்ல திட்டங்களை நிறைவேற்றுகின்ற
நேரத்திலே மாற்றப்பட்டு விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை
சென்னை மாநகராட்சியினைப் பொறுத்த வரையில் இருக்
கின்றது. இப்போது கடைசியாக திரு. டி. டீ. சுந்தரராஜ்
பதவி ஏற்றிருக்கிறார். நாங்கள் அடிக்கடி தனி அதிகாரிகளை
யும் பார்க்கிறோம். சம்பந்தப்பட்ட மற்ற அதிகாரிகளையும்
பார்க்கிறோம். அவர்கள் எல்லாம் சென்னை மாநகராட்சி
யினைப் பொறுத்தவரையில் காரியங்கள் ஆற்றவேண்டும் என்
றால் போதிய வருவாய் இல்லை என்று சொல்கிறார்கள்.
குடிநீர் மூலம் கிடைக்கின்ற வருவாய் நிறுத்தப்பட்டுவிட்டது.
ஆகவே இங்கே மாண்புமிகு பெரியவர், வயதான அமைச்சர்
மாண்புமிகு திரு. எஸ். ராகவானந்தம் அவர்கள் பேசுகின்ற
போது மத்திய சர்க்கார் சில திட்டங்களை தீட்டுகின்றபோது
பணத்தையும் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொண்டார்கள். 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு
மத்திய அரசு அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டும் என்று
சொன்னார்கள். நான் இந்தச் சர்க்காரைக் கேட்டுக் கொள்
கிறேன். சென்னையைப் பொறுத்தவரையில் பல காரியங்
களை நிறைவேற்ற வேண்டும் என்றால் மாநகராட்சிக்குப்
போதிய நிதியினை இந்த அரசு அளிக்க வேண்டும். சென்னை
மாநகராட்சியின் நிதி நிலைமை சரியாக இல்லாததன் காரணத்
தால்தான் அவர்களால் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல்
இருக்கின்றது. ஆகவே அரசு உடனடியாக போதிய நிதியுதவி
களை மாநகராட்சிக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

**தனி** அதிகாரிகளை அடிக்கடி மாற்றாமல் அடுத்த தேர்தல்
**நடைபெறு**கிற வரையிலே இருக்கின்ற ஒரே அதிகாரியை மாற்
**றாமல்** வைத்துக்கொண்டு காரியங்களை ஆற்றுவதற்கு உதவி
**யாக** இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சென்னை மாநகரின் சூழ்நிலை எப்படி இருக்
கின்றது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதுபற்றி
அதிகாரிகளும் அறிவார்கள். அமைச்சரும் அறிவார். சென்
னையிலே படித்தவர்களின் கருத்தரங்கு நடைபெற்றிருக்கின்
றது. அதிலே சில காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

சென்னையை நோக்கி கிராமங்களிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்து குடியேறிக் கொண்டிருக்கிறார்கள். இது நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டல் இந்த சென்னைப் பெருநகர் மக்கள் வாழக்கூடிய இடமாக இருக்காது, இந்த நகரம் நகரமாகக் காட்சியளிக்காது, நரகமாகத் தான் காட்சியளிக்கும் என்ற கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள்.

மேலும் அதிகாரிகளை மாற்றாமல் மக்களுக்கு நன்மை அளிக்கின்ற வகையில் திட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய வகையில் உதவி புரிய வேண்டும். மேலும் அதிகப்படியான நிதியினை மாநகராட்சிக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்திற்கு உரிய மசோதா பற்றி ஒரே ஒரு கருத்தைத் மட்டும் இந்த மன்றத்திற்கு சொல்லி என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். இங்கே பஞ்சாயத்து தேர்தலை தள்ளிப்போட வேனடும் என்ற வகையில் வருகின்ற மசோதாவுக்கு சுட்டிக்காட்டப்படுகின்ற காரணம் தேர்தல் நடத்துவதற்கு உச்ச நீதி மன்றம் தடை விதித்து இருக்கின்றது என்று, ஒருவேளை உச்ச நீதி மன்றத்தில் இருக்கின்ற கேஸ் வாபஸ் ஆன பிறகும் அல்லது உச்ச நீதி மன்றத்திற்கு சென்று இருக்கிறவர் தன்னுடைய அப்பீலை வாபஸ் பெற்றுக் கொண்ட பிறகும் தேர்தல் நடைபெறுமா என்று எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. காரணம் ஒரு வேளை இந்த கேஸ் பைசல் ஆனபிறகும் கூட உயர்நீதி மன்றத்தில் தந்து இருக்கின்ற ஜட்ஜ்மெண்டைப் பார்க்கின்றபோது இட ஒதுக்கீடு செய்தற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறது அரசு செய்தது சரிதான் என்று சொல்லியிருக்கிறதே. இட ஒதுக்கீடு செய்த வழிமுறையை உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொள்ள வில்லை. எனவே மீண்டும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது. அப்படி இருக்கும்போது இட ஒதுக்கீடு செய்வது எல்லோருக்கும் திருப்தி அளிக்கும் வகையிலும் குறையற்ற முறையிலும் இந்த அரசு செய்து முடித்துவிடுமா என்று சந்தேகம் இருக்கிறது. ஒரு வேளை குறையற்ற முறையில் செய்தாலும் கூட இட ஒதுக்கீடு காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் இதை வழக்கு மன்றத்திற்கு எடுத்துச் செல்லலாம். அப்படி செல்வதாக இருந்தால் உயர்நீதிமன்றம் அதற்கு அடுத்தபடியாக உச்ச



நீதி மன்றம் இப்படி பல ஆண்டுகளை கடந்து வரக்கூடிய நிலை ஏற்படுமோ என்று நான் எண்ணுகிறேன். அப்படி வருகின்றபோது எந்தப் பிரிவினருக்கு இட ஒதுக்கீடு செய்யவேண்டும் என்பதற்குசட்டம் கொண்டு வந்தோமோ அந்த எண்ணம் நிறைவேறாமல் பல ஆண்டுகள் போய்விடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. எனவே நான் கேட்டுக்கொள்வது எல்லாம் ஏற்கனவே திருத்தத்திற்கு முன்பு இருந்த சட்டத்தின் அடிப்படையில் தேர்தலை இப்போது நாம் முடித்துவிடுவோம். அடுத்த தேர்தலுக்கு இடைபட்டு கிடைக்கின்ற சமயத்தை பயன்படுத்திக்கொண்டு இட ஒதுக்கீடு பற்றிய பிரச்சனைகளை முழுமையாக தீர்த்து விடுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதற்கு பிறகு பஞ்சாயத்து தேர்தலை வைத்துக் கொள்வோம் என்ற நிலை இல்லாமல் ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையில் பஞ்சாயத்து தேர்தலை நடத்தி முடிக்கும்படி நான் இந்த அரசை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

ஹைகோர்ட்டில் அல்லது உச்ச நீதிமன்றத்தில் நகராட்சி தேர்தலைப் பொறுத்த அளவிலும் மாநகராட்சி தேர்தலுக்கு தடை கிடையாது. எனவே தடை இல்லாத மாநகராட்சி தேர்தல்களை நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் நகராட்சியைப் பொறுத்த அளவில் அரசு சொல்லுகின்ற காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இடம் விஸ்தரிக்கப்படுகிறது எனவே வார்டுகள் மாற்றி அமைக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஏனைய அமைப்புகளுக்கு தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். எத்தகைய அதிகாரிகளை வைத்து எவ்வளவு நல்ல ஆட்சியாக இருந்தாலும் நிச்சயமாக அதை சிறந்த ஆட்சியாக யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை உணர்ந்து உடனடியாக உள்ளாட்சிக்களுக்கு தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்து கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் 6 மசோதாக்கள் கொண்டுவரப்பட்டு 6 மசோதாக்களின் மீதும் எல்லா கட்சியையும் சேர்ந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர்களும் விரிவாகவும் , விளக்கமாகவும் பஞ்சாயத்து தேர்தல்கள், நகராட்சி, மாநகராட்சி தேர்தல்களை பற்றி பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே 4-ம் தேதி நடந்த விவாதத்தின் போதும் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டு அதற்குப் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதிகமான நேரத்தை எடுத்துக் கொள்ளாமல் தேர்தலை நடத்துவதற்கு உண்டான நிலைமைகளை மட்டும் நான் இங்கே எடுத்துச் சொல்லி உடனடியாக முடித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக் ஊராட்சி மன்ற தேர்தல்கள், பஞ்சாயத்து
தேர்தல்களை பொறுத்த அளவில் உச்ச நீதிமன்றத்தில் மேல்
முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டு அது அந்த வழக்கு மன்
றத்தில் இருக்கின்ற நிலை காரணமாக அந்த தேர்தலை நடத்த
முடியாத நிலையில் இருக்கிறோம். கடந்த 26—11—82-ல்
நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இந்த
நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி உடனடியாக அந்த
வழக்கை எவ்வளவு சீக்கிரம் நடைமுறைப்படுத்த முடியுமோ
அவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்தி அந்த வழக்கின்
மூலமாக தீர்ப்பினை பெறமுடியுமோ அதற்குரிய நடவடிக்கை
களை எடுக்க வேண்டும் என்று அனைத்துக் கட்சித் தலைவர்
களும் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் கேட்டுக் கொண்ட
அடிப்படையில் கடந்த 15—12—82 அன்று இதை உடனடியாக
விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற எக்ஸ்
பெடிஷன் பெட்டிஷன் அங்கே தாக்கல் செய்து இருக்கிறோம்.
ஆகவே உடனடியாக வழக்கு மன்றத்திலும் அதை எடுத்துக்
கொண்டு சீக்கிரமாக தீர்ப்பு உரை கூறுவார்கள் என்று நாம் எதிர்
பார்க்கிறோம். ஆகவே பஞ்சாயத்து தேர்தல்களைப் பொறுத்த
அளவில் மேல் முறையீடு மீது என்ன தீர்ப்பினை, வழிமுறைகளை
அவர்கள் சொல்கிறார்களோ அந்த தீர்ப்புகளின் அடிப்படை
யில் எவ்வளவு சீக்கிரமாக அதை நடைமுறைப் படுத்த
முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்தப்படும்
என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சி, மாநகராட்சி தேர்தல்களை பொறுத்த அளவில்
1—1—83 அன்று 18 வயது வந்தவர்களை எல்லாம் சேர்த்து
மீண்டும் வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டிய நிலை
இருக்கிறது. நமக்கு அந்த கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1—30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்
அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆகவே இவை
களையெல்லாம் தயார் செய்ய வேண்டுமென்று
சொன்னால் ஏறத்தாழ இரண்டு மாதங்களாவது பிடிக்கும்
என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டு மாதங்கள்
வாக்காளர்கள் பட்டியல்களைத் தயார் செய்வதற்கு எடுத்துக்
கொண்டு அதே நேரத்திலே இருக்கக்கூடிய வார்டுகளைப் பிரித்து,
அதன் மூலம் வார்டுகளின் எண்ணிக்கையை கூட்டுவதா குறைப்
பதா என்ற நிலைமைகளையெல்லாம் பரிசீலிப்பதாக இருக்கி
றோம். இதையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு நக
ராட்சிகள், மாநகராட்சிகள் தேர்தல்களை எப்படி வைத்துக்
கொள்ளலாம், எந்தத் தேதியில் வைத்துக் கொள்ளலாம் என்று
முடிவு எடுக்க அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை
வருகின்ற 13—3—1983 அன்று, அதுவும் இங்கே செயலகத்திலே
பத்தாவது மாடியிலே காலை பத்தரை மணிக்கு அந்தக் கூட்டம்
நடைபெற இருக்கிறது. ஆகவே அனைத்துக் கட்சித் தலைவர்
களும்கூட அந்தக் கூட்டத்திலே என்ன முடிவுகளை எடுக்கிறார்
களோ அந்த முடிவுகளுக்கு ஒப்ப நகராட்சிகள் மாநகராட்சிகள்
தேர்தல்களை எவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப் படுத்த முடி
யுமோ அவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்த இருக்கிறோம்.
ஆகவே இந்தத் தேர்தல்களை தள்ளிக் போடவேண்டுமென்றோ
அல்லது நடத்துவதற்கு பயம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது
என்றோ யாராவது கனவு கண்டால் நான் அவர்களுக்குத் தெரி
வித்துக் கொள்வேன், கடல் எல்லாம் வற்றி கடலில் இருக்கிற மீனை
கருவாடாக்கித் தின்ன வேண்டும் என்று யாராவது கனவு கண்
டால் அவர்கள் குடல் வற்றி சாவதைப் தவிர வேறு வழியில்லை.
ஆகவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தைப் பொறுத்தவரையில் எந்தத் தேர்தலுக்கும் நாங்கள்
பயந்தவர்கள் அல்ல, தேர்தலைக் கண்டு பயந்து போனவர்கள்
எல்லாம் யார் யார் எந்தப் பக்கத்திலே இருக்கிறார்கள் என்பது
எங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜசேகரன் அவர்கள் கூடச்
சொன்னார்கள். நான் ஊராட்சி மன்றத்திற்குச் தலைவராக
வேண்டுமென்று நினைக்கிறேன் என்றும் ஒன்றியத்திற்குத் தலைவ
ராக வரவேண்டுமென்று நினைக்கிறேன் என்றும் நகராட்சியி
னுடைய தலைவரவாக வரவேண்டுமென்று நினைக்கிறேன்
என்றும் மாநகராட்சியினுடைய மேயராக வரவேண்டுமென்று
நினைக்கிறேன் என்றும் எல்லாம் சொல்லி கோமாளிபட்டி,
கோணங்கிப்பட்டி போன்றவற்றை எல்லாம் எடுத்துச் சொன்னார்
கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன், வேண்டு
மானால் அடுக்குமொழிக்கு கோமாளிபட்டியும் கோவையும் ஒன்றாக
தெரியுமே தவிர எங்களுக்கு அந்த எண்ணம் கிஞ்சித்தும் இல்லை
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உடனடியாகத் தேர்தலை
நடத்த வேண்டுமென்ற முஸ்தீபு செய்து உடனடியாகத் தேர்தலுக்
குண்டான தேதிகளைக் குறிப்பிட்ட நேரத்திலே தான் இந்திரா
காங்கிரஸ் கட்சிதான் இதற்குத்தடை பெறுகின்ற முயற்சியிலே ஈடு
பட்டு இன்று மேல்முறையீடு செய்திருக்கிறது என்பதை நான்
விவரமாகவும் விளக்கமாகவும் சொல்லியிருக்கிறேன் (குறுக்கீடு).
உண்மைகளைத்தான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

திரு. வே. இராஜசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,
ஆரம்பத்திலிருந்தே அமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர்களுக்கும்
பெண்களுக்கும் கொடுத்த தேர்தல் தனித்தொகுதி முறையைப்
பற்றி வெங்கிடாசலம்பிள்ளை என்ற காங்கிரஸ்காரர் ஆட்சேபித்து
உயர்நீதி மன்றத்திற்கு, உச்சநீதி மன்றத்திற்குப் போகிறார்
என்று குற்றச்சாட்டைச் சொல்லி, காங்கிரஸ் காங்கிரஸ் என்று
சொல்லிக்கொண்டிருக்கிறார். இந்திய நாட்டினுடைய பாராளு
மன்ற உறுப்பினர்கள் இந்தியாவிலே இருக்கக்கூடிய 21 மாநில

சட்டமன்றங்களுக்கு உறுப்பினர்கள்-அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தனித் தொகுதி வருவதற்கு முன்னாலே, சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னாலே—ஆகியோர்களுக்கு தனித் தொகுதி களைக் கொடுத்த பெருமையைப் பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர் களே, ஆதிதிராவிடர்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் பெண்களுக் கும் இடம் ஒதுக்கியதிலே யாருக்கும் வித்தியாசம் கிடையாது. ஆனால் இட ஒதுக்கீடு அரசாங்கம் செய்தது எந்த முறையில் செய்தது எப்படிச் செய்தது என்று அறிவிக்காத ஒரே காரணம் தான் இந்த நாட்டு மக்களிடத்திலே சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது. தனிப்பட்ட முறையிலே இருந்தாலும் கட்சிக்கார ராக இருந்தாலும் அவர்களுக்கு கோர்ட்டு முறையிலே அணுகு வதற்கு வாய்ப்பு சட்டப்படி உரிமை இருக்கிறது. நான் அர சாங்கத்தை கேட்டுக் கொள்வது எல்லாம் பெண்களுக்கும் மலை வாழ் மக்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் நீங்கள் எந்த வகை யிலே இடம் ஒதுக்கினீர்கள்? அந்த முறையற்ற செயலால் கோர்ட் டிற்கு போக வேண்டிய அவல நிலை ஏற்பட்டதே தவிர, இதற்கு அரசாங்கம்தான் பொறுப்பே தவிர, தனிப்பட்ட மனிதரையோ அல்லது ஒரு கட்சியையோ சொல்வது சரியல்ல, அதற்கு சரியான பதிலை அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலே இந்த வழக்குகள் எல்லாம் பதிவாகி அதன் மீது தீர்ப்புகள் கூறப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த அந்த புரட்சிகரமான சட்டம் செல்லும் என்ற தீர்ப்பினை தான் உயர்நீதிமன்றம் அளித்திருக்கிறது. பெண்களுக்கென்று 15 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது செல்லும் ; ஆதிதிராவிடர், மலைவாழ் மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கீடு செய்தது செல்லும் என்ற தீர்ப்பினை கொடுத்தார்கள். இதிலே எந்தெந்த ஒன்றியங்கள், யார் யாருக்கு ஒதுக்குவது என்பதிலே தான் சில சிக்கல்கள் ஏற்பட்டு, அதற்கும்கூட சில வழிமுறைகளை இன்றைக்கு உயர்நீதிமன்றம் நமக்கு கொடுத்திருக்கிறது. ஆகவே அந்த வழிமுறைகளின் அடிப்படையில் ஒதுக்கீடுகளை இனிமேல் நாம் செய்ய இருக்கிறோம். ஆகவே நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் தான் இந்த ஒதுக்கீடுகளை செய்ய விருக்கிறோம். அதிலே மாறுதல் இல்லை. ஆகவே இன்று உச்சநீதிமன்றத்திற்கு போன காரணத்தினால் தான் உச்சநீதி மன்றத்தினுடைய தீர்ப்பினை எதிர்பார்க்க வேண்டிய ஒரு சூழ் நிலை, கட்டாயம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நகராட்சி, மாநகராட்சி தேர்தலைப் பொறுத்தவரையில் வருகிற 13—3—1983 அன்று காலை 10-30 மணிக்கு அனைத்துக் கட்சி களின் தலவர்களின் கூட்டத்தில் முடிவெடுக்க இருக்கிறோம்.



அந்த முடிவிற்கேற்ப தேர்தலை நடத்த இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆறு மசோதாக் களின் மீது உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் பதில் சொல்லமுடியாத நிலையில் இருக்கிறேன். ஆனாலும் மானியம் வருகிற நேரத்தில் இவைகளுக்கு பதில் சொல்வேன் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த ஆறு மசோதாக்களையும் தனித் தனியே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பணி வோடு கேட்டுக் கொள்கிறேன்.

### ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

### பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

''பிரிவு 2-ல், 'நான்கு ஆண்டு' என்னும் சொற்களுக்குப் பதிலாக 'மூன்று ஆண்டுகள் ஒன்பது திங்கள்' என்ற சொற் களைச் சேர்க்கவும்''.

திருத்தம் முறையே வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்குப் விடப்பெற்று, தோல்வி யுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

[1983 மார்ச் 7

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1983) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 20/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

''பிரி 2-ல், 'ஆறு ஆண்டு எட்டு திங்கள்' என்ற சொற்களுக்குப் பதிலாக 'ஆறு ஆண்டுகள் நான்கு திங்கள்' என்ற சொற்களைச் சேர்க்கவும்.

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, தோல்வியுற்றது.



1983 மார்ச் 7]

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 201/983) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 1-40)

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

**''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.**

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

**''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.**

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன். :

**''பிரிவு 2-ல், 'ஆறு ஆண்டு இரண்டு திங்கள்'' என்ற சொற்களுக்குப் பதிலாக, ''ஆறு ஆண்டுகள்' என்ற சொற்களைச் சேர்க்கவும்''.**

திருத்தம் முறையே மொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்குப் விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண். 21/1983) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1983.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம் )திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 22/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.,'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

பிரிவு 2ல், உட்பிரிவு [ ] மற்றும் [ii]ல், ''ஏழு ஆண்டு ஒன்பது திங்கள் காலத்திற்கு'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''ஏழு ஆண்டுகள்'' என்ற சொற்களைச் சேர்க்கவும்.

திருத்தம் முறையே வழி மொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம் திருத்தச்சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 22/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''1983-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 23/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

''பிரிவு 2ல், ''ஒன்பது ஆண்டுகள் ஆறு திங்களுக்குள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''எட்டு ஆண்டுகள் ஒன்பது திங்கள்'' என்ற சொற்களைச் சேர்க்கவும்.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:, ''1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 23/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.





பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரியபகுதி யாக ஆக்கப்பெற்ற வேண்டும்.''

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

''பிரிவு 2-ல் 'மூன்று ஆண்டு காலம்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 'இரண்டு ஆண்டுகள் மூன்று திங்கள்' என்ற சொற்களைச் சேர்க்கவும்.''

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1983 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1983) நிறைவேற்றப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்டமுன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

---

*1983-ம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

T. N. L. A Debates

OFFICIAL REPORT

VOL: XLIII NO: 4 and 5

March 7 and 8 1983

DIGITIZED

V211,81 'N83
N83.43.4&5
135789

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
10 ஜன 1984
2678
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

[Issued 8-11-1983

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை மார்ச் 7, 1983—தொகுதி XLIII எண் 4
Monday 7th March 1983—Volume XLIII No. 4

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George
Madras-600009

135989

## உள்ளடக்கம்.

**7—3—1983.**


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 355—391 |
| 2. டெல்லியில் கூடும் அணிசேரா நாடுகளின் மகா நாட்டிற்கு வாழ்த்து .. .. .. | 391—398 |
| 3. தகவல் கோரல்— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 399 |
| 4. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| கரும்புக்கு சென்ற ஆண்டு அறிவித்த விலையை இவ்வாண்டு அரசு குறைத்துள்ளது | 399—412 |
| 5. அறிக்கை அளித்தல்— | |
| உரிமைக் குழு .. .. .. .. | 413 |
| 6. அரசினர் சட்ட முன் வடிவுகள்— | |
| (அ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983. | 413 |
| (ஆ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1983 .. .. .. .. | 414 |
| (இ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1983 .. .. .. .. .. | 414 |
| (ஈ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983 .. .. .. .. | 414 |
| (உ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1983 .. .. .. | 414 |
| (ஊ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983 .. .. | 415—489 |
| (எ) பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாப்பளித்தல்) சட்டமுன்வடிவு, 1983 .. .. | 501—489 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 501 |

135989
600 008

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**திங்கட்கிழமை 1983 மார்ச் 7**

**மாசி 23, துந்துபி, திருவள்ளுவர் ஆண்டு 2014**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் **தலைவர்:**

“ ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் ”.

ஒழுக்கமே எல்லார்க்கும் மேன்மையைத் தருவதாகும். எனவே அந்த ஒழுக்கத்தை உயிரைவிடச் சிறந்ததாகப் போற்ற வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### மீன்வளர்ப்போர் அபிவிருத்தி அமைப்புகள் ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண் 300—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை, பெரியார், கன்னியாகுமரி, வடாற்காடு ஆகிய மாவட்டங்களில் மீன் வளர்ப்போர் அபிவிருத்தி அமைப்புகள் ஏற்படுத்தும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இம்மாவட்டங்களில், கீழ்க்காணும் தேதிகளில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகின்றன :—

(1) புதுக்கோட்டை மாவட்டம் 19—6—1982.

(2) பெரியார் மாவட்டம் 1—7—1982.

(3) கன்னியாகுமரி மாவட்டம் 2—6—1982.

(4) வட ஆற்காடு மாவட்டம் 19—5—1982.

**திரு. இரா. தாமரைக்கனி** : பேரவைத் தலைவரவர்களே, மீன் வளர்ப்போர் அபிவிருத்தி அமைப்புகள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகின்றன ? இதனால் ஏற்படும் நன்மைகள் என்ன ? இதனால் அரசுக்கு எவ்வளவு செலவாகின்றது என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அர்ர்களே, தீவிர மீன் பிடிப்புத் திட்டத்தின் கீழ் மீன் உற்பத்தியை அதிகப்படுத்தவும், அதன் மூலம் அரசின் வருவாயைப் பெருக்கவும், கிராம மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தவும், மைய அரசு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அளிக்குமாறு அரசுக்குப் பரிந்துரை செய்தது. அதனுடைய அடிப்படையிலேதான் மைய அரசு, மாநில அரசு ஆகிய இரண்டினுடைய ஒத்துழைப்பினுடைய அடிப்படையில் இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எந்தெந்த ஊர்களிலே தண்ணீர் நிலையாக குளம் குட்டைகளிலே நிறைந்திருக்கும் என்று கண்டறிந்து எதிலே மீன் வளர்க்க முடியும் என்பதை அறிந்து ஆராய்ந்ததற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதியுடன் முகமைக்காக உறுப்பினர்கள் மீனவர் வகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பிறகு அவர்களுக்குப் பயிற்சி அளித்த பின்னர் இத்திட்டத்திற்கு என தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்கள், அவர்களுக்கு அதிகபட்சமாக பத்து ஆண்டுக் காலம் வரையில் குத்தகைக்கு விடப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல், அவர்கள் மீன் வளர்ப்பினைத் தீவிரப் படுத்துவதற்காகப். பல்வேறு வகைகளிலே உதவி செய்வதற்கும் அரசு பல்வேறு ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகின்றது. அவர்களுக்கு 75 சதவீத கடனாகவும், 25 சதவீத மானியமாகவும், 1977-78 முடிய 1,000 ரூபாய் அளித்தது. பிறகு 1978-79-லிருந்து 1981-82 முடிய 1,250 ரூபாய் அதிலே 75 சதவீதம் கடன், 25 சதவீதம் உதவி, அதைப்போன்றே 1982-83 ஆம் ஆண்டில் 2,000 ரூபாய் வழங்க முடிவெடுக்கப்பட்டு, 75 சதவீதம் கடனாகவும், 25 சதவீதம் மானியமாகவும் அமையும். ஆகவே, அவர்கள் இதைப் பயன்படுத்தி மீன்வளர்க்க வேண்டுமென்பதுதான் இதனுடைய முக்கிய நோக்கம். ஓரளவுக்கு அது பரவலாக நல்ல பலனை அளித்து வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி** : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கடும் வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் குடிப்பதற்கே போதிய தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற நேரத்தில் மீன் வளர்ப்பதற்குப் போதிய தண்ணீர் குளங்களிலேயும், ஏரிகளிலேயும் இருக்கிறதா ? இதனால் மீன் வளர்ப்பதற்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுகிறதா என்பதை அறிய விரும்புகின்றேன்,



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்மிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களே, குடிக்கவே தண்ணீர் இல்லை என்று சொல்லிவிட்டதற்குப் பிறகு மீனுக்கு மட்டும் எப்படித் தண்ணீர் கிடைக்கும் என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. ஆகவே, எந்தெந்த நீர் நிலைகளிலே மீன்வளர்ப் பதற்கேற்ற தண்ணீர் இருக்கிறதோ அங்கு இந்த முகமைகள் பணி யாற்றும். எங்கெங்கு வறண்ட நிலை ஏற்பட்டுள்ளதோ அங்கு மீன் வளர்ப்பு முகமைகள் பணியாற்ற இயலாது. வேறு வகைகளிலே தான், நீர் நிறைந்ததற்கு பிறகுதான் அதிலே பணியாற்ற முடியும்.

**திரு. டி. மணி**: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன் வளர்க்கும் தீவிரத் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திலே ஏற்கெனவே கடந்த ஆண்டு பல்வேறு குளங் களிலே, கல்குளம், தோவாளை போன்ற தாலுக்காக்களிலே எடுத்துக்கொள்ளப்பெற்று, நீர் வற்றாத குளங்கள் இருந்தது. ஆனால் இப்பொழுதுள்ள வறட்சியின் காரணமாக அந்தத் தண்ணீர் பூராவும் வற்றியிருக்கிறது. ஆகவே, அதைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் விவசாயிகள் அந்தப் பணத்தைத் திரும்பக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். எனவே, அந்தப் பணத்தைக் கட்டுவதற்கு நீண்ட காலக் கெடுவிலே ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய குறிப்பு தற்போது இல்லை. நிலைமையை விளக்கி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித் தால், அதை ஆராய்ந்து தக்க முடிவை எடுக்கலாம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்**: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே இந்த மீன் வளர்ப்பு பயிற்சி ஆரம்பிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த இடத்திலே அது ஆரம்பிக்கப்பட உள்ளது. அதற்காக ஒதுக்கப் பட்ட நிதி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே சென்ற ஆண்டு—நான் முதலிலே குறிப்பிட்டதுபோல் 19—5—1982 அன்று ஆரம்பிக்கப்பட்டது. எந்த எந்த இடம் என்று குறிப்பு இல்லை. ஆனால் நான் முதலில் கூறியபடி நிலையான நீண்ட நாள் தண்ணீர் தங்கக்கூடிய அளவிற்கு எந்தெந்த இடங்கள் இருக் கின்றதோ அந்த இடங்களிலேயும், மீன் வளர்ப்பதற்கு வாய்ப்பு வசதிகள் எங்கே இருக்கின்றதோ அங்கேயும், மீன் வளர்க்கும் உள்ளம் கொண்டவர்கள் யார் யார் இதற்காக முன்வருகிறார் களோ அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த வகை யிலே வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு, 4,07,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, மீன் வளர்ப்பு பயிற்சிக் கழகத்தின் மூலமாக குட்டைப் பகுதிகளுக்கு மட்டும் உதவி அளிப்பது பற்றிச் சொன்னார்கள். ஆனால் ஏரிப்பகுதிகளிலே உதவி அளிக்க முடியாது என்று சொல்கின்ற காரணத்தால் அதை மாற்றி ஏரிப் பகுதிகளுக்கும் உதவி அளிக்க அரசு ஆவன செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஆராயப் படவேண்டிய ஒன்று. அதைப் பற்றி ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச் சேர்ந்த காசிமேட்டுப் பகுதியிலே உள்ள கடற்கரைப் பகுதியிலே இறால் மற்றும் உள்ள மீன்களை வளர்ப்பதற்காக இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கான வேலைகளைச் செய்யாமல் நீண்டகாலமாக இருக்கிறது. ஆகவே உடனடியாக அங்கே மீன் வளர்ப்பதற்கான வழிவகைகளைச் செய்வதற்கு எந்த அளவுக்கு திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது உள்நாட்டு நீர் நிலைகளின் தன்மையை பொறுத்ததுதான். ஆகவே உள்நாட்டு குளங்கள், ஏரிகள், குட்டைகள் போன்றவற்றிற்காக முகமைகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. சென்னையைப் பொறுத்தவரை, 10 கோடி ரூபாய்ச் செலவில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டு பெரும்பாலான பணிகள் முடிவடைந்துள்ளன. மத்திய அரசின் உதவியோடு மாநில அரசும் சேர்ந்து இதிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறது. விரைவிலே இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இன்னும் சில பல மாதங்களில் முடியும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### சென்னையில் 1982 ஆம் ஆண்டு மே மாதத்தில் மீனவ மகளிர்களுக்கு அளிக்கப்பட்ட தனிப்பயிற்சி

*வினா எண் 301—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மீனளத்துறை இயக்குனர் அலுவலகத்தில் 1982 மே மாதத்தில் மீனவ மகளிர்களுக்கு தனிப்பயிற்சி அளிக்கப்பட்டதா?



(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) அதன் நோக்கமென்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் வங்கான விரிகுடா நிறுவனம் மற்றும் மீன் துறையும் சேர்ந்து 1982 மே திங்களில் மீனவ மகளிர்க்கென ஓர் பயிற்சி வகுப்பு துவங்கியது.

(ஆ) இப்பயிற்சியானது சமூக அமைப்பு உள்ளுரை பயிற்சி திட்டமாகும். மொத்த பயிற்சி காலம் 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் இரண்டு வாரகாலம் நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி காலத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் பற்றி கல்வியளிக்கப்படுகின்றது :—

1. மீனவர் சமுதாய அமைப்பு.
2. மீன்களை கையாளுவது மற்றும் மீன்களை பதப்படுத்துதல்.
3. சுகாதாரம் மற்றும் குடும்ப நல திட்டம்.
4. அரசு நடைமுறைப்படுத்தி வரும் மீனவர் நல திட்டங்கள்.
5. தலைமை பொறுப்பேற்கும் பயிற்சி.

(இ) மீனவ மகளிரிடையே விழிப்புணர்ச்சி உண்டாக்கி அரசாங்கத்திற்கும் மீனவ சமுதாயத்திற்கும் இடையே பாலமாக அமைந்து அரசுத் திட்டங்களை நன்கு புரிந்து பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ளவும், அவ்வப்போது அடிப்படை தேவைகளை அரசிடமிருந்து கேட்டுப் பெற அணுக வேண்டிய முறை பற்றியும் கற்பிப்பதுதான் இப்பயிற்சியின் நோக்கம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பயிற்சி சென்னையைத் தவிர தமிழ்நாட்டில் வேறு இடங்களில் நடத்த அரசுக்கு உத்தேசம் உண்டா ? அந்தப் பயிற்சிக் காலத்தில் ஏதாவது உதவித் தொகை அளிக்கப்படுகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னையிலே பரிட்சார்த்தமாக நடத்தப்பட்டு வருகிறது. ஓரளவுக்கு பலன் ஏற்பட்டது என்று ஆராய்ந்ததற்குப் பிறகு பிற இடங்களில் தொடங்குவது பற்றி ஆராய்வோம். ஆகவே இதிலே அவர்களுக்கு இலவசமாக 3 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியில் சேர விரும்புபவர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருக்க

வேண்டும். கல்யாணம் ஆனவர்களாக இருக்க வேண்டும். 40 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஏழை எளியவர்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டவர்களாக இருக்கவேண்டும். தங்கிப் படிப்பதற்கு விருப்பம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். பெண்கள் கூட்டத்திலே கலந்து கொண்டு புதியவற்றை கற்றுக் கொள்ள ஆர்வம் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அவர்களுக்கும் ஏதேனும் உதவித் தொகை தரப்படுகிறதா என்ற விவரம் என்னிடம் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற இடங்களிலே, குறிப்பாக ராமேஸ்வரம் போன்ற பகுதியிலே உள்ள கடற்கரைப் பகுதியில் இத்தகைய பயிற்சி நடத்தப்படுமா ? இன்னும் பெண்கள் ஆர்வத்தோடு கலந்து கொள்ளும் வகையில் இந்தப் பயிற்சிக் காலத்தில் உதவித் தொகை அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பிற இடங்களில் பெண்களுக்கும் இப்படிப்பட்ட பயிற்சி அளிக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆனால் இப்போது பிற இடங்களில் துவக்குவதற்கான செயற்குறிப்பு இல்லை. ஆகவே அவர்களுக்கு உதவித் தொகை இப்போது தரப்படுகிறதா என்ற விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

(முற்பகல் 9—10)

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீனளத் துறையின் மூலமாகப் பயிற்சி அளிப்பதற்குத் திருமணம் ஆனவர்கள் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்கவேண்டுமென்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அப்படி திருமணமானவர்கள் என்றால், திருமணமாகி கணவனை இழந்த விதவைகளும் இந்தப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். திருமணமாகி இருக்க வேண்டும் என்பது தான் கண்டிஷனே தவிர கணவன் உயிரோடு இருக்க வேண்டுமென்பது நிபந்தனையாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 302, 303 மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

வறுமை நிலையிலுள்ள கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டம்.

*வினா எண். 104—திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. எஸ். இராசாராமன், திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு சிரம நிலையில் உள்ள கலைஞர்களுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் எந்த தகுதி அடிப்படையில், வழங்கப்படுகிறது ?

(இ) எவ்வளவு பேர் பயனடைகிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இயல், இசை, நாடகம், நாட்டியம், கிராமியக் கலைகள், ஓவியம், சிற்பம், திரைப்படம், இசைக் கருவிகள் மற்றும் நுண் கலைகள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பணியாற்றி 58 வயது பூர்த்தியடைந்த கலைஞர்கள் வருமானமின்றி வறுமை நிலையிலிருந்தால், கலைத் தகுதியின் அடிப்படையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பரிந்துரையின்கீழ் அரசு உதவி மான்யம் அளித்து வருகிறது.

(இ) தற்பொழுது 1416 கலைஞர்கள் மாதம் ரூ. 150/ வீதம் உதவி பெற்று வருகிறார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே மொத்தம் 150 ரூபாய் வீதம் மான்யம் பெறுகிறார்கள் என்று அமைச்சரவர்கள் தெரிவிக்கிறார்கள். மொத்தம் இதற்கு ஏற்கெனவே விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர் ? அரசாங்கம் அந்த விண்ணப்பித்த அத்தனை பேருக்கும் இந்த உதவி அளித்திருக்கிறார்களா ? அல்லது அதிலே சிலரைத் தேர்ந்தெடுத்து அளித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதிலே நிறைய பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள். ஆனால் அத்தனை பேருக்கும் தருவதாக இல்லை. வறுமை நிலையில் இருக்கிறவர்கள் என்ற அடிப்படையில்தான் அவர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். இதுவரையில் வருமான அளவு ரூ. 150 என்று இருந்தது. 1980ஆம் ஆண்டுக்குப் பிறகு, இந்தத் திட்டம் மாநில அரசுத் திட்டமாக மாற்றி அமைக்கப்பட்டபிறகு, ரூ. 400 ஆக உயர்த்தியதன் மூலம் நிறைய பேருக்கு கிடைக்கிற வாய்ப்பை தந்திருக்கின்றோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : விண்ணப்பித்தவர்களை தேர்ந்தெடுப்பதற்கு, ஏதாவது தனியாக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு இருக்கிறதா அல்லது அரசு அந்த அதிகாரிகளைத் தனியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள் அல்லது பரவலாக கிடைக்க வேண்டியவர்களுக்கு கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. அதை அரசு கவனிக்குமா ? அதற்கு அரசுக்கு ஆண்டுக்கு என்ன செலவாகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நிறைய பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள். இதிலே குறிப்பிடத்தக்க ஒரு தகுதி என்று பார்க்கின்றபோது கலைத்துறையிலே ஈடுபாடு என்று இருக்கின்ற காரணத்தால் ஒரு நாளைக்கு ஒரு நாடகத்திலே நடித்தவர்கள் கூட கலைத்துறையிலே ஈடுபட்டதாக சொல்லக்கூடிய வாய்ப்பு எல்லாம் இருக்கிறது. விண்ணப்பங்கள் செய்யும் அத்தனை பேருக்கும் தர முடியாது. இதற்கு கமிட்டி வைத்திருக்கிறோம். அந்த கமிட்டியிலே தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற செயலாளர், தமிழ்நாடு திரைப்படக் கல்லூரியின் தலைவரை தலைவராகவும், தமிழ்நாடு நாடக நடிகர் சங்கத் தலைவர், தென்னிந்திய வண்ணங்கூட்டுதல் குழுவின் தலைவர், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவின் உறுப்பினர், செயலர் ஆகியவர்கள் அடங்கிய உறுப்பினர்கள் கொண்ட உயர்மட்டக் குழு பரிசீலனை செய்கிறது. அவர்களுடைய வறுமை நிலையைப் பற்றி அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் அறிக்கை தருகிறார்கள். இவர்களை வைத்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வறுமை நிலையிலே இருக்கின்ற கலைஞர்களுக்கு இந்த அரசு உதவி செய்து கொண்டிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர்களுக்கு 58 வயதுக்கு மேலே ஓய்வூதியம் கொடுப்பதாக அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். கலைஞர்கள் தாங்கள் திறமை மிகுந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு அதிர்ஷ்டம் இல்லாமலோ அல்லது வேறு வகையில் ஆதரவு இல்லாத காரணத்தினால், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்களுக்கு அதற்கு முன்னதாகவே வயது வரம்பைத் தளர்த்தி, அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. நாம் அவர்களுக்கு உதவி செய்வதே அவர்களுக்கு உதவி செய்கிறோம் என்பது மட்டுமல்லாது, அவர்களைப் பார்த்து இளைஞர்களாக இருக்கிறவர்கள், அவர்களே இப்படி இருக்கின்றார்களே, இனி நாம் இந்தத் துறையிலே போய் இறங்கக் கூடாது என்ற மனச் சோர்வு அடையாமல் இருக்க, அரசு காப்பாற்றும் என்ற ஒரு நம்பிக்கையைத் தருவதற்குத்தான் இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.





திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த பென்ஷனை பெறும் கலைஞர்களிலே, நம்முடைய தமிழ்நாட்டிலே புகழ்பெறும் கலையாக உள்ள வில்லிசைக் கலையில் ஈடுபட்டு இருந்து, இப்போது வறுமையில் இருக்கும் பலர் மனுசெய்து இருந்தும், அவர்களுக்குக் பென்ஷன் கொடுக்கப்படவில்லை. வில்லிசைக் கலைஞர்களுக்கும் பென்ஷன் தற்போது வழங்கப்படுகிறதா? இல்லையென்றால் இனியாவது அந்தக் கலையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அந்தப் பென்ஷன் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கிராமக் கலை என்ற அடிப்படையில் அவர்களும் பென்ஷன் பெறத் தகுதிபெற்றவர்கள்தான். அப்படிப்பட்டவர்களுக்குத் தரப்பட வேண்டுமென்ற விருப்பம் அரசுக்கும் இருக்கிறது. குறிப்பாக யாருக்காவது நியாயமான முறையில் கிடைக்க வேண்டிய நிலை இருந்து கிடைக்க வில்லை என்றால், அது பற்றிய விவரம் தெரிவித்தால் நான் அதைப்பற்றி பரிசீலனை செய்யச் சொல்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமை நிலையில் உள்ள தமிழ் எழுத்தாளர்களுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும், தமிழ் கலைஞர்களுக்கும் இந்தப் பென்ஷன் அளிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அவர்களுக்காக வேறு ஒரு திட்டம் செயல்பட்டு வருகிறது. தமிழ் அறிஞர்களுக்கு அதன் மூலம் பென்ஷன் தரப்பட்டு வருகிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிரம நிலையில் உள்ள கலைஞர்களுக்கு இப்போது பென்ஷன் 3 ஆண்டுகளுக்கு மட்டும் தான் வழங்கப்படுவதற்கு உத்தரவிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, அவர்கள் வாழ்நாள் முழுவதும் இந்தப் பென்ஷன் பெறுவதற்கு அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 1980ஆம் ஆண்டுக்கு முன்பு இது ஒரு ஆண்டுக்குத்தான் தரப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு முழுமையாக இதை மாநில அரசு திட்டமாக ஏற்றுக்கொண்ட பிறகு செய்த முதல் மாற்றம் அந்த ஓராண்டு என்பதை 3 ஆண்டு என்று கொண்டு வந்து இருக்கிறோம். அந்த 3 ஆண்டுகாலத்திற்குப் பிறகு அவர்கள் மறுபடியும் விண்ணப்பித்தால், அந்த நேரத்தில் அவர்களுக்கு உதவி அளிக்கவேண்டிய நிலை இருக்கிறது என்று அரசு கருதினால், மறுபடியும் அதை அளிக்கலாம்.

[1983 மார்ச் 7

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, தெருக்கூத்து கலைஞர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை விண்ணப்பிப்பது என்பது முடியவில்லை. அவர்கள் படிப்பு அறிவு இல்லாதவர்கள். அதனால் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்குத் தொடர்ந்து கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு அவர்களிடமிருந்து என்னென்ன விவரங்கள் தேவையோ அதை அரசு பெறுவதற்கு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் இதற்காகப் பெரிய அளவிலே விண்ணப்பங்கள் எதையும் பூர்த்தி செய்யவேண்டும் என்று இல்லை. எங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்காக சில விவரங்களை அவர்கள் கலெக்டருக்கு தெரிவித்தால் அவர்கள் அவர்களைப் பற்றிய தகவல்களை சேகரித்து, அவர்கள் வறுமைநிலையில் இருக்கிறார்களா என்பதைப் பரிசீலனை செய்து, அந்த அடிப்படையில் அவர்களுக்கு உதவி செய்யப்படுகிறது. அந்த அளவிற்குக் கூட விவரங்கள் தர முடியவில்லையென்றால், அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்யும் வாய்ப்பைத் தரமுடியாது. அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் இன்று கிராம அளவில் இருந்துகொண்டு, பொதுச்சேவை செய்துவருகிறார்கள். அப்படிப்பட்ட நண்பர் அந்தக் கலைஞர்களுக்கு கிடைக்காத நிலை இன்று இல்லை என்பது என்னுடைய திண்ணமான எண்ணமாகும்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்தில் உள்ள வறுமைக்கோட்டிற்குக் கீழேவாழும் கலைஞர்கள் இந்தப் பென்ஷன் பெறுவதில் கஷ்டமான நிலை இருக்கிறது. ஆகவே, மாவட்ட அளவிலே இந்த நிதியுதவி செய்யக்கூடிய அளவிற்கு ஒரு குழு அமைத்து, அதன் மூலம் இந்த உதவியைச் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது மாநில அளவிலே இந்தக் குழு இருந்து செயல் பட்டு வருகிறது. இப்போது கலை வளர்ச்சிக்காக இருக்கும் இயல், இசை, நாடக மன்றமும் மாநில அளவிலே இருந்து செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவிலே ஒரு குழு இருந்து செயல்பட்டு இந்தக் கலைகளை வளர்ப்பதற்காக ஒரு குழு இருக்க வேண்டும் என்று அரசும் கருதுகிறது. அதைப்பற்றி இப்போது நாம் பரிசீலித்து வருகிறோம். ஒரு வேளை அந்தக் குழு அமையுமானால் இத்தகைய குறைகளைப் போக்குவதற்கு முடியும்.



1983 மார்ச் 7]

**மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்களை மாவட்டத்திற்கு ஒன்று வீதம் ஏற்படுத்தும் திட்டம்.**

* வினா எண் 105—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அதிக பள்ளிகளை தன் ஆளுகையில் வைத்துள்ள மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலங்களை வருவாய் மாவட்டத்துக்கு ஒன்று வீதம் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : புதுக்கோட்டை, தர்மபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்கள் ஏற்கனவே திறக்கப்பட்டுவிட்டன. இந்த மாவட்டங்களில் மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்படும் கருத்துருக்கள் வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப ஆராயப்படும்.

**திருப்புவனத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி துவங்கும் திட்டம்.**

* வினா எண் 106—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுகா திருப்புவனத்தில் அரசு உயர் நிலைப்பள்ளி ஒன்று நிறுவ செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) : திருப்புவனத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி ஒன்றை 1982-83-ம் கல்வியாண்டு முதல் துவக்க தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுமதி வழங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(முற்பகல் 9-20)

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, இது ஓராண்டுக்கு முன்னால் எழுப்பப்பட்ட கேள்வி. தற்போது அந்தப் பள்ளி நடைபெற்றாலும் போதிய கட்டிட வசதி, விளையாட்டு மைதானம் இல்லாத நிலை இருக்கிறது. அதற்கு அருகாமையில் 'சிப்காட்' நிறுவனத்திற்கு என்று 100 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. தற்போது அந்த நிறுவனம் அதில் ஒரு ஏக்கர் நிலத்தைதான் பயன்படுத்தி வருகிறது. எனவே, அந்த இடத்தில் அந்தப் பள்ளிக்கான விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒரு பள்ளி ஆரம்பிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால்தான் பள்ளி தொடங்க அனுமதி அளிக்கிறோம். ஆனால், இப்படிப்பட்ட சில சந்தர்ப் பங்களில் அந்த நிபந்தனைகளை பின்னால் பூர்த்தி செய்துவிடு வார்கள் என்று கருதி, அனுமதி அளிக்கப்படுகிறது. ஒரு பள்ளிக் கூடம் தொடங்க வேண்டுமென்றால் போதிய இடவசதி, கழிப்பிட வசதி செய்து தரவேண்டும்; அந்தப் பள்ளிக்கு புதிய கட்டிடம் தேவைப்பட்டால் அதைக் கட்டுவதற்கு இடவசதி செய்து தர வேண்டும்; விரிவாக்க இட வசதிக்காகவும் மற்ற வசதிகளுக் காகவும் 12,500 ரூபாய் கட்ட வேண்டும்; அந்தப் பள்ளியின் நிர்வாகப் பங்கு தொகையாக 10,000 ரூபாய் கட்ட வேண்டும்; விளையாட்டு மைதானத்திற்கு இடவசதி செய்துதர வேண்டும்; 5 ஏக்கர் நிலத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிபந்தனைகளின் பேரில்தான் பள்ளி தொடங்க அனுமதி தந்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிலே ஆர்வம் எடுத்துக்கொண்டு, நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, திருபுவனம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்து அந்தச் சங்கத்தின் பெயரை அந்தப் பள்ளிக்கு வைக்க வேண்டுமென்று கேட்டு கோரிக்கை ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா ? அப்படி வந்திருந்தால் அந்தப் பணத்தை உடனடியாகப் பெற்றுக்கொண்டு, அந்தப் பெயரை வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ? அது மட்டுமல்லாமல் அந்தப் பள்ளிக்கு கணித ஆசிரியர், அறிவியல் ஆசிரியர் பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளன. அந்த இடங்கள் உடனடியாக நிரப்பப் படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர் களே, அவைபற்றி பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, ஒரு உயர் நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்படுவதற்கு 5 ஏக்கர் நிலம், 12,500 ரூபாய் எல்லாம் அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் கொடுக்க வேண்டுமென்று விதி இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார் கள். சில இடங்களில் 5 ஏக்கர் நிலம் பெறுவதில் பெரும் சிரமம் இருக்கிறது. 12,500 ரூபாய் கட்டுவதும் சிரமமாக இருக்கிறது. அதனால் பல கிராமங்களில் உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்க முடியவில்லை. அதைப் போக்க, அரசு அந்த உதவி களை நேரடியாக செய்கின்ற வகையிலே உத்தரவு பிறப்பிக்கப்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட பிரச்சனைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த சட்டமன்றத்திலே வந்தபோது அவ்வப்போது நான் ஒரு பதிலை தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். மக்களுடைய ஈடு பாடு. மக்களுடைய பங்கு அதிலே இல்லை என்றால் அந்தப் பள்ளிகூடத்தினால் அந்த மக்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லாமல் போய் விடும். அந்தப் பள்ளிகூடத்திற்கும் அங்கே இருக்கிற பொதுமக்களுக்கும் தொடர்பு இல்லாமல் போய்விடும். ஆகவேதான் பள்ளிக்கூடம் தொடங்க அந்தப் பகுதியில் உள்ள மக்களே ஒரு குழு அமைத்து, அந்தக் குழுதான் அதற்கான ஏற் பாடுகளைச் செய்ய வேண்டுமென்ற ஒரு முறையை நாம் வைத் திருக்கிறோம். இதுவரையில் அந்த முறை வெற்றிகரமாகத் தான் இருக்கிறது. எங்காவது ஒரு இடத்தில் ஒரு பிரச்சனை இருந்தால் அதை தனிப்பட்ட முறையில் ஆராய்ந்து பார்த்து, அதற்கு உரிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு ஊரின் பிரச்சனையை எடுத்துக்கொண்டு, இப்போது நல்லமுறை யில் நடைபெற்று வரும் ஒரு நடைமுறையை மாற்றியமைக்க வேண்டுமென்று விரும்புவது சரியல்ல.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, பொதுமக்கள் பங்கு கொண்டால் நிச்சயமாக இப்படிப்பட்ட திட்டங்கள் நிறை வேறும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பொதுமக்கள் சார்பிலே 20,000 ரூபாயும், 10 ஏக்கர் நிலமும் கொடுத்து பல லாண்டு காலம் ஆனபிறகும் ஒரு பள்ளி ஆரம்பிக்கப்படாமல் இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அதற்கு வேறு என்ன ஏற் பாடு செய்ய வேண்டும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதற்கு இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று சொல்லுகின்ற போது, பள்ளிக் கூடம் ஆரம்பிக்கப்படுகின்ற சூழ்நிலையில் நாங்கள் ஆங்காங்கே இருக்கிற சூழ்நிலைமைகளையும் ஆராய்ந்து பார்த்துதான் அனு மதி தரவேண்டிய நிலை இருக்கிறது. ஏனென்றால் அதற்குப் பக்கத்திலே ஏற்கெனவே ஒரு பள்ளிக்கூடம் இருந்து, இந்தப் பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதினால் அந்தப் பள்ளிக்கூடம் பாதிக்கப் படக்கூடிய நிலை, மாணவர்கள் எண்ணிக்கை குறையக் கூடிய நிலை ஏற்படுமானால் வீணாக இந்த இரண்டு பள்ளிக்கூடங்கள் வகையிலும் இரண்டு செலவுகள் அரசுக்கு ஏற்படும். இப்படிப் பட்ட சூழ்நிலையும், வேறு ஏதாவது காரணமும் இருந்தால் அதன் அடிப்படையிலேதான் அனுமதி நிறுத்தி வைக்கப்படுகின்ற நிலைமை ஏற்படுகிறதே தவிர மற்றபடி கேட்கின்ற பள்ளிகளுக்கு தேவையிருந்தால் தருகிறோம். சென்ற ஆண்டு கூட 50 பள்ளி களுக்கு அனுமதி தந்திருக்கிறோம்.

திரு. இ. ரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் உயர்நிலைப்பள்ளி கீற்றுக் கொட்டகைகளில் இயங்குகின்றன. அரசாங்கத்தில் போதுமான நிதி ஒதுக்கப்பட்டு, அவற்றுக்கு நிரந்தரமான கட்டிடம் கட்டிக்கொடுக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இதை நாம் வேறு வகையில் கடனாகப் பெறுவதற்கு ஒரு முயற்சி மேற்கொண்டு வருகிறோம். இப்போதிருக்கிற நிலைமையில் நமக்கு 100 கோடி ரூபாய் தேவைப்படுகிறது, குறைந்த பட்ச வசதிகளை மட்டும் செய்து தருவதற்காக. அவ்வளவு பெரிய தொகையைக் கடனாகப் பெறுவதற்கு மத்திய அரசு எல். ஐ. ஸி. நிறுவனமோ அல்லது வேறு ஏதாவது நிதி நிறுவனமோ முன்வருமேயானால் நாம் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளமுடியும் என்று கருதி அவர்களை அணுகிக்கொண்டு வருகிறோம். அவர்கள் முடிவாக இல்லை என்று சொல்வார்களானால் அதற்குப் பிறகு மாநில அரசு என்னசெய்ய வேண்டும் என்பதுபற்றிச் சிந்திக்கும்.

தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்கான விதி முறைகள்

*வினா எண் 107—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழாசிரியர்கள் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி பெறுவதற்கு அரசு விதித்துள்ள விதிகளை தளர்த்த தமிழ்நாடு மேனிலை தமிழ்மொழி ஆசிரியர் கழகம் அரசைக் கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) : தமிழாசிரியர்கள் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற அவர்கள் பி. டி. பட்டம் பெற்றபின் உள்ள பணிக் காலமே கணக்கில் எடுக்கப்படுகிறது. இதை மாற்றி, முதனிலைத் தமிழாசிரியர்களாக பணியாற்றிய காலத்தையும் சேர்த்து கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என திருச்சி மாவட்டம் இலால்குடி தமிழகத் தமிழாசிரியர்கள் கழகம் மற்றும் சேலம் மாவட்டத் தமிழாசியர்கள் கழகம் கோரிக்கை அனுப்பியது. இக்கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு அது ஏற்க இயலாது என முடிவு எடுக்கப்பட்டது.

டாக்டர் கே. சமரசம் : இன்றையதினம் இந்தியத் துணைக்
கண்டத்தில் இந்தி படித்தால் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்
களில் பணிக்கு வாய்ப்பிருப்பதாகவும் ஆங்கிலம் படிக்கிற நிலை
யில் அத்தகைய வாய்ப்பு மிகவும் அதிக அளவில் இருப்பதாகவும்
இருக்கிற அதே நேரத்தில் தாய்மொழியாம் தமிழ் படிப்பதற்கு
ஊக்கம் அளிக்கிற வகையில் மற்ற விதிகளை தளர்த்தி முன்னுரிமை
அளிக்க ஏன் பரிசீலனை செய்யக்கூடாது என்பதற்கு
விளக்கம் அளிக்க வேணடுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரு பொறுப்புக்கு
என்றிருக்கிற தகுதிகளின் அடிப்படையில் அவர்களுடைய அனு
பவத்தின் அடிப்படையில் சமமான தகுதி உடையவர்களுக்கு,
சமமான அனுபவம் உடையவர்களுக்கு தரப்படுகிற வாய்ப்புகள்
பற்றித்தான் அந்த அடிப்படையில்தான் பரிசீலிக்கிறோமே தவிர
தமிழ், ஆங்கிலம், கணக்கு என்ற நிலையில் நாம் வைத்து பரி
சீலிப்பதில்லை. தமிழ் சொல்லித் தருகிறவர்களும், தமிழன்
தான், ஆங்கிலம் சொல்லித் தருகிறவர்களும் தமிழன்தான்,
கணக்கு சொல்லித் தருகிறவனும் தமிழன்தான். ஆகவே தமிழ்
ஆசிரியர் பதவி என்பது தமிழனைப் பொருத்ததேதவிர வெறும்
மொழியைப் பொறுத்ததல்ல, அல்லது கணக்கு. அல்லது ஆங்கி
லத்தைப் பொருத்ததும் அல்ல.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, படிப்புக்
காலமும் பயிற்சிக் காலமும் மற்ற ஆசிரியர்களுக்கும் தமிழ்
ஆசிரியர்களுக்கும் ஒரேபோல் இருக்கிற காரணத்தினால்தான்
தமிழ் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர் பதவி ஏற்பதற்கு அதிகக்
காலம் வேண்டுமென்று சொல்வது தவிர்க்கப்படுமா என்று
கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படி சம்மந்த
இல்லாததுதான் இந்தப் பிரச்சினை எழும்பவே காரணம். குறிப்
பாக பி.டி. பயிற்சி என்பது ஒரு ஆண்டுக் காலம், அதே நேரத்தில்
தமிழ் ஆசிரியருக்கான பயிற்சிக் காலம் ஆறு மாத காலம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, இந்த
ஆசிரியர்களில் தமிழ் சொல்லித் தருபவர்களும் தமிழன்தான்
இந்தி சொல்லித் தருபவர்களும் தமிழன்தான், ஆங்கிலம் சொல்லி
தருபவர்களும் தமிழன் தான் என்ற ஒரு கருத்தைச் சொல்லி
யிருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர்
பதவி கொடுக்க வேண்டுமென்ற கருத்தை நமது இதய தெய்வம்
அண்ணா அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். எனவே
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புனர்பரிசீலனை செய்து தமிழ்
ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவி கொடுப்பதற்கு ஆவன
செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : நமது இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்குப் பின்னால் நீங்கள் ஏழாண்டுக் காலம் ஆட்சியில் இருந்தபோது இந்தக் கோரிக்கையை நாங்கள் ஏற்றுக்கொண்ட அளவிற்குக்கூட நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

### பேருந்துகளைத் தாக்குவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க தனிச் சட்டம்

***வினா எண். 304—திருவேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு கூட்டுறவு — சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பயணிகள் செல்லும் பேருந்து மீது கல்லெறிவோர் மீதும், பேருந்தை தாக்குவோர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க தனிச் சட்டம் கொண்டு வரப்படுமா ?

**மாண்புமிகு திரு சி. பொன்னையன் :** இது குறித்து புதிதாகக் கொண்டுவரப்பட்ட சட்டம், சட்டம் 29/82, 15—5—1982 ஆம் நாளிலிருந்து அமலில் உள்ளது.

**திரு கோவைத்தம்பி :** இப்படிப்பட்ட பயணிகள் செல்லும் பேருந்துகள் மீது ஆர்ப்பாட்டங்கள், ஸ்ட்ரைக் என்ற பெயரால் கல் எறிபவர்கள் மீது சிறை தண்டனை விதிப்பதோடு கூட அந்தப் பேருந்துகளுக்கான தொகையை, நஷ்டமான தொகையை அவர்கள் சொந்த சொத்தை ஜப்தி செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு சி. பொன்னையன் :** 1982 ஆம் ஆண்டு 29-வது சட்டத்தில் ஐந்தாவது பிரிவில் அதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**திரு என். எஸ். வி. சித்தன் :** பொதுச் சொத்துக்களை நாசம் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமே. தற்போதுள்ள சட்டத்தில் அதற்கு வழிவகை இருக்கிறதா ? நமக்கு இன்று இருக்கிற புதிய சட்டம் மாதிரி இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது இயற்றப் பட்டிருக்கிறதா ?





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற இந்தியன் பீனல் கோட் சட்டத்தில் இதுபோன்ற தவறுகளுக்கெல்லாம் தக்க நடவடிக்கை எடுக்க போதிய ஷரத்துக்கள் 'இல்லை என்ற காரணத்தினால் தான், இந்தப் புதிய சட்டம் கொண்டு' வரப் பட்டது. மற்ற மாநிலங்களில் இப்படி இருக்கின்றதா என்றால், அதற்கான தகவல் என்னிடம் தற்போது இல்லை.

(முற்பகல் 9-30)

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் சட்டமன்றத்திலே கொண்டுவந்த காலத்தில், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் நடக்கும்போது, அவர்கள் ஊர்வலம் நடத்தும் போது, ஏற்படுகின்ற பிரச்னையாக, அப்போது பேருந்துகள் போகின்ற போது, கற்களை எடுத்து தாக்குதல் நடத்துவதை தடுப்பதற்காகவும், பயணிகளின் பாதுகாப்புக்காகவும் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்பட்டது. எந்தத் தொழிலாளர்களும், ஊர்வலங்கள் நடத்துகின்ற போது, பொது ஜன சொத்தின் மீதோ, ஓடுகின்ற பேருந்துகள் மீதோ கற்களை எறிவது அவர்கள் வேலையல்ல. ஆனால், பொது ஜனங்களுக்கும், போலீசாருக்கும் இடையே தகராறு ஏற்படும்போது, அந்தத் தகராறு அடிதடியாக மாறும்போது, கல் எறி நடக்கும்போது, அவைகள் பஸ்கள் மீது விழுகின்றன. அப்படியானால், ஜனங்கள் மீது மட்டும் நடவடிக்கை என்றில்லாமல், அதற்குக் காரணமாக இருக்கின்ற அந்தப் போலீசார்கள் மீதும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகின்ற போது, பேருந்துகளின் மீது கல் எறிவது, அப் போது தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக இந்தச் சட்டம். கொண்டு வரப்படவில்லை என்று தெளிவாகச் சொல் லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் இரண்டாவது பிரிவில், whoever commits the mistake என்றிருப்பதால், தொழிலாளர்கள் வன்முறையில் இறங்கி, பேருந்துகளைத் தாக்கு கின்றபோது, பயணிகளுடைய சொத்துக்களுக்கும், உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கின்றபோது, அது காவல் துறையைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, மற்றவர்களாக இருந்தாலும் சரி, சட்டப்படி பொதுச் சொத்துக்களுக்கும், உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்துகின்ற வன்முறையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதே ஒழிய, தொழிலாளர்கள் மீது அல்ல.

திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகள் செல்லும், பேருந்துகள்மீது தாக்குதல் நடத்துவோர் மீது நடவடிக்கை எடுக்க சட்டம் கொண்டு வரப் பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால், நாளதுவரையில் இந்தச் சட்டத்தின்படி ஏதாவது வழக்குகள் தொடரப்பட்டிருக் கின்றனவா ? தொடரப்பட்டிருக்குமானால், எத்தனை வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 9 மாவட்டங்களில் ஒட்டு மொத்தமாக இதுகாறும் 54 வழக்குகள் பதிவு செய்யப்பட் டுள்ளன.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982, ஜனவரி 19 ஆம் தேதி ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., ஆகிய இரண்டு சங்கங்களும் இந்தியா முழுவதும் பந்த் நடத்தின. அப்போது எந்தப் பேருந்தும் சேதம் அடைய வில்லை. ஆனால், பல்வேறு போராட்டங்கள் நடத்தும் போது, சொத்துக்கள் சேதம் அடைந்திருக்கின்றன. எந்தெந்தக் கட்சி கள் போராட்டங்கள் நடத்தும்போது, சொத்துக்கள் சேதம் அடைந்தன என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட முன்வருவார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிலாளர்கள் இதுபோன்று சொத்துக்களுக்கு சேதம் விளை விக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். அரசியல் கட்சிகளின் மீது நடவடிக்கை எடுக்க சாத்தியமில்லை. வன்முறையாளர் கள்மீது, அதாவது சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்போர், அல்லது உயிருக்கு ஆபத்து விளைவிப்போர்மீது நடவடிக்கை எடுப்பதற்காக கொண்டு வரப்பட்ட சட்டம் இது.

### செங்கற்பட்டு மாவட்டத்தில் பயிர்பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம்

*வினா எண் 305—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் அமுல் படுத்தப்படுகின்றதா ?

(ஆ) இல்லையெனில், உடனடியாக மேற்படி திட்டம் அமுல்படுத்தப்படுமா ?





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தை தமிழகம் முழுவதும் அமுல்படுத்துவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக மொத்தம் 42 வட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. படிப் படியாக இந்தத் திட்டம் மேலும் பல பகுதிகளுக்கு விரிவாக்கப் படும்.

### இ. எஸ். ஐ. திட்டத்தை விஸ்தரிக்கும் திட்டம்.

* வினா எண் 306—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி புறநகர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டத்தை நீட்டிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா—

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

(இ) எப்பொழுது செயல்படும் ?

(ஈ) எவ்வளவு பேர்கள் பயன் அடைவார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி புறநகர் பகுதிக்கு ஈட்டுறுதி திட் டத்தை நீட்டித்து அங்குள்ள தொழிலாளர்களை நாகர்கோயி லில் ஏற்கனவே இயங்கிவரும் இ.எஸ்.ஐ. மருந்தகத்தோடு இணைத்து அவர்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக 5-8-1981 ஆம் நாள் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(இ) இத் திட்டம் 25-4-1982 முதல், செயல்பட்டு வருகின்றது.

(ஈ) சுமார் 663 தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத் தினரும் பயன் அடைவார்கள்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி புறநகர் பகுதிக்கு இத்திட்டத்தை அமுல் நடத்துவது போன்று, இதன் பக்கத்தில் இருக்கக் கூடிய, வேறுசில தொழிலாளர்கள் இருக்கக்கூடிய பகுதிகளையும் இந்த திட்டத்தின்கீழ் கொண்டு வர, குறிப்பாக தக்கலை, மேட்டுக்கலை போன்ற இடங்களிலுள்ள தொழிலாளர்களையும், இதன்கீழ் கொண்டு வர அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாக கவனிக்கலாம்.

*** வினா எண் 307—திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ.எஸ்.ஐ. திட்டம் 1982 ஆம் வருடத்தில் எந்தெந்த பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும் ?

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தின் எந்தெந்த பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) இ.எஸ்.ஐ. திட்டத்தை கீழ்க்கண்ட பகுதிகளுக்கு விஸ்தரித்து அரசு ஆணைகள் வெளியிடப்பட்டன :—

(1) திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டம்.

(2) மானாமதுரை, இராமநாதபுரம் மாவட்டம்.

(3) வீரவநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.

(4) உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.

(5) அரியூர், வடஆற்காடு மாவட்டம்.

(6) செங்குன்றம், செங்கல்பட்டு மாவட்டம்.

(7) ஓசூர், தர்மபுரி மாவட்டம்.

வட ஆற்காடு மாவட்டத்தில் வாலாஜா பகுதிக்கு இத்திட்டத்தை நீட்டிக்கும் ஆணை விரைவில் வெளியிடப்படும்.

(ஆ) கன்னியாகுமரி புறநகர் பகுதிக்கு ஈட்டுறுதி திட்டம் விரிவு படுத்தப்பட்டு 25–4–1982 முதல் செயல்பட்டு வருகின்றது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏறத்தாழ 25,000-க்கும் அதிகமான முந்திரித் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதேபோல கயிறு தொழிலிலே ஈடுபட்டிருக்கக்



கூடிய பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதேபோல மெக்கானைஸ்டு பேக்டரியும் அங்கே இருப்பதன் காரணமாக அதில் பணிபுரியும் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஆகவே, அந்தப்பகுதியிலுள்ள தொழிலாளர்களையும் இந்த ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி ஆழ்ந்து பரிசீலனை செய்ய வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் கொண்டு வந்திருக்கும் பகுதிகளில் ஆரல்வாய் மொழி பகுதியில் உள்ள நூற்பு ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் மருத்துவ வசதிகள், இன்றையதினம் அருகில் உள்ள மருத்துவ மனைகளிலிருந்து மொபைல் வேன் மூலமாக வழங்கப்படுகிறது. அது அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. ஆகவே, அந்தத் தொழிலாளர்களுக்கு அந்தப் பகுதிகளிலேயே, அதாவது ஆரல்வாய் மொழி, தக்கலை போன்ற பகுதிகளிலேயே தனியாக, தொழிலாளர் நல மருத்துவமனைகளை, இந்த ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னவாறு படிப்படியாக விரிவாக்கிக் கொண்டு வரும்போது, அவ்வப்போதுள்ள நிதி நிலைமைகளுக்கு ஏற்ப மத்திய அரசினுடைய அந்தக் கழகத்தின் ஒப்புதலுக்கேற்ப இந்த திட்டம் அந்தப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1982 ஆம் வருடத்தில் ஈ.எஸ்.ஐ, திட்டம் விஸ்தரிக்கப்படும் பகுதிகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் வீரவநல்லூரும் ஒன்று. திருநெல்வேலி மாவட்டத்தில் பேட்டை என்னுமிடத்தில் இருக்கக்கூடிய மருத்துவமனையிலிருந்துதான் ஒரு ஊர்தி மூலமாக அந்த வீரவநல்லூர் பகுதி தொழிலாளி மக்களுக்கு மருத்துவ வசதிகளைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அது போதுமானதல்ல. சரியுமல்ல. ஆகவே குறிப்பாக வீரவநல்லூர், பகுதியிலேயே ஒரு மருத்துவமனையை இந்த இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் அமைக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றியும் நிதானமாக பரிசீலிக்கலாம்.

## சிவகாசியில் தொழிலாளர் நல மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்.

* வினா எண். 308—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல மருத்துவமனை எப்போது துவங்கப்படும் ?

(ஆ) அதற்கான மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எந்த ஆண்டில் மருத்துவமனை கட்டி முடிக்கப்படும் ?

(ஈ) பூர்வாங்க வேலைகள் உடன் துவங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ—இ) 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை ஒன்று கட்டுவதற்காக சிவகாசி அருகில் சாத்தூர் வட்டம் அணையூர் கிராமத்தில் 2.90 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி, பொதுப்பணித்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது, பொதுப்பணித் துறை மருத்துவமனை கட்டிடம் கட்ட 83.765 லட்ச ரூபாய்க்காக மதிப்பீடும் பணியாளர் குடியிருப்பு சலவை நிலையம், மிதி வண்டி நிறுத்துமிடம் முதலியவற்றிற்காக 41.30 லட்ச ரூபாய்க்கான் மதிப்பீடும் அனுப்பியுள்ளது. இந்த இரண்டு மதிப்பீடுகளும் புது டில்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு இருக்கின்றன. அக்கழகத்தின் ஒப்புதல் கிடைத்தவுடன் கட்டுமான பணிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு கூடிய விரைவில் கட்டிடங்கள் முடிக்கப்படும்.

## தூத்துக்குடி நகருக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

* வினா எண். 309—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி நகரத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

**(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?**



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) ரூ. 119.00 லட்சம் மதிப்பீட்டில் தூத்துக்குடி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்து, இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு 23—9—81-ல் முதல் முன்னோடியாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரம் சமீபகாலத்தில் மிக வளர்ச்சி அடைந்துக் கொண்டிருக்கிறது. இப்போது குடிதண்ணீருக்கு மிக தட்டுப்பாடான நிலைமை அங்கே இருப்பதால், இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த 119 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் குடிதண்ணீர் அளிக்கப்படும் திட்டம் எங்கேயிருந்து கொண்டு வரப்படுகிறது? வல்லநாடு என்ற பகுதியிலேயிருந்துதான் இது வரையில் அந்தப் பகுதிக்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டது. அங்கேயிருந்துதான் தற்போதும் தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படுகிறதா அல்லது வேறு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரிவான திட்டமாக ஏற்பாடு செய்து ஒரு 7 அம்சம் கொண்ட திட்டமாக விரிவு செய்திருக்கிறார்கள். இது போதாது என்று கருதி இந்த நகரில் இதுவரையில் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமல் இருக்கும் தெருக்களுக்கு குழாய்கள் அமைக்கவும் அதன்படி கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நகரில் அமைப்பது பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : தலைவர் அவர்களே, குடிநீர் தட்டுப்பாடு இப்போது மிகவும் கடுமையாக இருக்கின்றது. ஏற்கனவே தூத்துக்குடி போன்ற பல ஊர்களைப் பொறுத்தவரையில் 10 ஆண்டுகளுக்கு முன்பாக ஆய்வுப் பணம் கட்டியதற்குப் பிறகும் குடிநீர் வழங்காத நிலைமை இருக்கின்றது. எனவே, 10 வருடங்களுக்கு முன்பாக ஆய்வுப் பணம் கட்டிய பேரூராட்சிகளுக்கு இந்த வருடத்திலாவது குடிநீர் கிடைப்பதற்குத் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, குடிநீர் கொடுக்கவேண்டியது இந்த அரசினுடைய முக்கியமான கடமை என்று இந்த அரசு கருதுகிறது. அதன்னியில் மத்திய அரசு கொண்டுவந்திருக்கிற 20 அம்ச திட்டத்தில் 8-வது ஐட்டம் All problem villages should be supplied with potable drinking water என்று அருமையாகத் திட்டத்தைச் சொல்லி இருக்கிறார்கள்.

** ** ** **

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு இருக்கக்கூடாது என்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, குற்றச் சாட்டு சொல்வது என்பது வேறு, நிலைமை விளக்கம் என்பது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** ** ** ** எல்லாம் வந்ததாக இப்போதுதான் நான் கேள்விப்பட்டேன். அது தேவையில்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டுவிட்டு தவறுதலாக இருந்தால் தாங்கள் எக்ஸ்பஞ்ச் பண்ணலாம். டெல்லி என்று சொன்னவுடனே எழுந்துவிடுகிறார்கள், இந்திரா காங்கிரஸ் என்றே சொல்லக்கூடாது என்றால் என்ன அர்த்தம்..(குறுக்கீடு) ........8-வது ஐட்டத்தில் குடிதண்ணீர் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. 20 அம்ச திட்டத்தைச் செயல்படுத்த முழுமையாக இந்த அரசு ஏற்றுக்கொண்டு இருக்கின்றது. இன்னும் பல செய்யும். அப்படி இருக்கும்போது 170 கோடி ரூபாய் திட்டத்திற்கு வேண்டும். 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் பிரச்சினைக்குரிய தண்ணீர் இல்லாத கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுக்க 170 கோடி ரூபாய் வேண்டும். இதிலே எல்லாமே மாநில அரசு செய்துவிட முடியாது. பட்ஜெட்டிலே கூட பார்த்திருப்பீர்கள், இந்த ஆண்டு 43 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அடுத்த ஆண்டுக்கு 60 கோடி தருகிறேன் என்று கூறி இருக்கிறார்கள். நாவலரிடமிருந்து பணம் வாங்குவது அவ்வளவு சுலபம் அல்ல.. (சிரிப்பு).......சிரமப்பட்டுத்தான் பணம் வாங்குகிறோம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சருக்கு இருக்கின்ற சிரமங்கள் பூராவும் சபைக்குத் தெரியவேண்டிய அவசியம் இல்லை. கேட்கப்பட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொன்னால் போதும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போல எல்லா கிராமங்களுக்கும் உடனடியாக குடிதண்ணீர் கொடுக்க இந்த அரசு காட்டுகின்ற அக்கறையோடு மத்திய அரசு ஒத்துழைத்து நாங்கள் கேட்டிருக்கின்ற ரூ. 55 கோடி ரூபாயினை விரைவிலே கொடுத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது போன்று விரைவிலே அத்திட்டங்கள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது நாவலர் அவர்கள் பணம் தரமாட்டார்கள் என்று சொல்கிறார்கள். இப்படி ஒரு கருத்து வேற்றுமை அமைச்சர்களுக்குள்ளே இருக்கின்றது என்பதை................

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசினை எப்படிக் குற்றம் சாட்டக்கூடாதோ அப்படி மாநில அமைச்சரையும் குற்றம் சாட்டக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

## 1981-82-ஆம் ஆண்டில் நஞ்சை நிலங்களாக மாற்றப்பட்ட புஞ்சை நிலங்கள்.

* வினா எண். 310—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1981-82-ஆம் ஆண்டில் எத்தனை ஏக்கர் புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளதா? மாவட்ட வாரியாக எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 1981-82-ஆம் ஆண்டில் பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டத்தின் கீழ் புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்றப்படவில்லை. ஆனால் 1981-82 ஆம் ஆண்டு சிறுபாசனத் திட்டத்தின் கீழ் புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்றப்பட்டன. அவ்வாறு மாவட்டவாரியாக மாற்றப்பட்ட நிலப் பரப்புகளின் விவரங்கள் பின்வருமாறு :—

| | | ஏக்கர் |
|---|---|---|
| 1 | செங்கல்பட்டு மாவட்டம் .. .. .. | 53 |
| 2 | வட ஆற்காடு மாவட்டம் .. .. .. | 401 |
| 3 | தென் ஆற்காடு மாவட்டம் .. .. .. | 5 |
| 4 | திருச்சிராப்பள்ளி மாவட்டம் .. .. .. | 1,158 |

| | | ஏக்கர் |
|---|---|---|
| 5 | தஞ்சாவூர் மாவட்டம் .. .. .. | 818 |
| 6 | மதுரை மாவட்டம் .. .. .. .. | 954 |
| 7 | இராமநாதபுரம் மாவட்டம் .. .. .. | 323 |
| 8 | பெரியார் மாவட்டம் .. .. .. .. | 378 |
| 9 | சேலம் மாவட்டம் .. .. .. .. | 1,503 |
| 10 | நீலகிரி மாவட்டம் .. .. .. .. | 256 |
| 11 | தர்மபுரி மாவட்டம் .. .. .. .. | 492 |
| | மொத்தம் .. | 6,341 |

**திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய பாசனத் திட்டங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இன்னும் கூடுதலாக புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்ற அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுத்தர, பெரிய பாசனத் திட்டங்கள் பல திட்டங்கள் இப்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதிலே பல்லாயிரக்கணக்கான புன்செய் நிலங்கள் ஒரு போகத்திற்காவது வசதி பெற்று இன்றைக்கு விவசாயங்கள் நடைபெற்று வருகின்றன. இங்கே எவ்வளவு புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன என்று நான் பதில் சொல்லியிருக்கிறேன்.

**திரு. சி. சிவப்பிரகர்சம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய ஏரி பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது அந்த ஏரி கட்டுமானப் பணியில் இருக்கின்ற திட்டங்களை வரையும் போது குறிப்பிட்ட அளவுக்கு நன்செய் நிலங்கள் பயன் அடையும் என்ற நிலை இருந்தால் தான் சிறிய பாசன திட்டங்களை எடுத்துக் கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. அதே போல் சிறிய பாசன திட்டங்கள் இந்த ஏரியில் குறிப்பிட்ட அளவுக்கு கிடைக்காமல் பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப் படாத நிலை இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றி சிறிய பாசன திட்டங்களை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன் ?



**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றியதை மாவட்டம் வாரியாகச் சொன்னார்கள். அதிலே மிகவும் கடுமை யான வறட்சியால் பாதிக்கப்பட்ட நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தளவில் மழைக் காலங்களில் அதிகமான நீர் சமுத்திரத் தில் போய் வீணாகக் கூடிய நிலை இருக்கிறது. அந்த இடங்களில் போதிய கண்மாய்களை அமைப்பதற்கு வாய்ப்பு இருந்தாலும் கூட 1981-82 ஆம் ஆண்டு ஒரு ஏக்கர் கூட புன்செய் நிலங்கள் நன்செய் நிலமாக மாற்றப்படவில்லை. அதற்கு என்ன காரணம்? அந்த நிலையை மாற்றி வரக் கூடிய காலத்திலாவது புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றுவதற்கு குளம், குட்டைகள், கண்மாய் போன்ற பாசன வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியைப் பொறுத்த அளவில் பெரிய நடுத்தர பாசன திட்டங்களை நிறைவேற்றுகின்ற போது இப்போது அரசு புதிய கொள்கையை பின்பற்றி வருகிறது. டிரை லேண்டு என்றால் அது இரிகேட்டடு டிரையாக இருக்க வேண்டும். அது புன்செய் நிலமாகத்தான் இருக்க வேண்டும். புன்செய் பயிர் தான் பயிரிட வேண்டும் என்ற அடிப்படையில் மாற்றிக் கொண்டிருக்கிறோம். அப்படி செய்வதன் மூலமாக 2 மடங்கு, 3 மடங்கு நீர் பரப்புகள் விவசாயத்திற்கு கொண்டு வரக்கூடிய சாத்தியம் இருக்கிறது. இதை குறிப்பிடுவதற்குத் தான் நான் இப்படி சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சிவப்பிரகாசம் அவர்களும் இதே கேள்வியைத் தான் கேட்டார்கள். நீர் நிலைகளை இப்போது நாம் அளவிட்டுக் கொண்டு இருக்கிற போது சிறிய ஏரிகளாக இருந்தாலும் குளங்களாக இருந்தாலும் அது எந்த அளவுக்கு குறைந்த அளவுக்கு விவசாயத் திற்கு பயன்படக் கூடியதாக இருந்தாலும் இப்போது அதை நன்செய்யாக மாற்றக் கூடிய அளவுக்கு சில திட்டங்களை மேற் கொள்ளலாம் என்று அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. ஆர். தியாகராசன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றியதாக கணக்குச் சொன்னார்கள். அதே போல் அந்த ஆணைகளைக் கட்டும்போது அந்த பகுதியில் இருந்த எவ்வளவு நன்செய் நிலங்கள் புன்செய் நிலங்களாக மாறியிருக்கின்றன என்ற கணக்கை அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு நிலை ஏற்படக் கூடாது என்று தான் நாங்கள் கருதுகிறோம். அதற்கு ஒரு தனிக் கேள்விப் போட்டால் தகுந்த பதிலைச் சொல்கிறேன்.

**திரு. ஏ. சி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்துளை குழாய் கிணறு வாரியத்தின் பணியில் புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ? இந்த வாரியத்தின் மூலம் எவ்வளவு ஏக்கர் பயனடையும் நிலையில் உள்ளது ?........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நன்செய், புன்செய் நிலங்களைப் பற்றிப் பேசும்போது வாரியத்திற்கு போகக் கூடாது. இதற்கு தனிக் கேள்விப் போடவும்.

*[முற்பகல் 9-50]*

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே ஆற்று நீர் பாசனத்திலே நாம் கடுமையான கஷ்டத்தைச் சந்தித்துக் கொண்டு இருக்கிறோம். தமிழ் நாட்டிலே விவசாயம் நடைபெறுகிற நிலங்களிலே இன்னும் நாலில் மூன்று பங்கு புஞ்சையாகவே இருக்கின்றன. ஆகவே சிறு பாசனத் துறையை அபிவிருத்தி செய்யக் கூடிய முறையிலே குட்டைத் திட்டங்கள், சிறிய சமுதாயக் கிணறு திட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுகின்ற முறையில் 5 ஆண்டுக் காலத்திற்கான ஒரு மாஸ்டர் பிளானை தயாரிக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு சிறிய பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்றுவதற்கான வாய்ப்பு இருப்பதை அறிந்து கூடுதலான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இப்போது அதிக நிதியை ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** அமைச்சர் அவர்கள் சொல்கிற போது புஞ்சை நஞ்சையாக்கப்பட்டது என்று கணக்கைச் சொன்னார்கள். ஆனால் தண்ணீர் கொடுக்கிற நிலையைப் பார்த்தால் இன்னும் அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்றவர்கள் ரிக்கார்ட் பூர்வமாக புஞ்சையிலிருந்து நஞ்சையாக்கப்பட்டதாக ரெகுலரைஸ் பண்ணாததால் அந்த நிலங்களுக்கு அந்த ஆயக்கட்டுதாரர்களுக்கு தண்ணீர் கொடுக்கப்படாத அவல நிலை ஏற்பட்டு அதனால் பல ஏக்கர் புஞ்சையாகவே காட்சியளிக்கின்ற நிலைமை இருக்கிறது என்பது பற்றிய ரிப்போர்ட் அரசுக்கு வந்திருக்கிறதா ? அதன்மீது உடனடியாக நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா?



**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாற்றப்படுகிற போது பதிவு செய்யப்படுகிறது. சில நேரங்களில் இடைப்பட்ட நிலங்களும் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாகப் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. அவை பதிவுக்கு வருவதில்லை. இப்போது மேலேயோ அல்லது கீழேயோ இருக்கக் கூடிய நஞ்சை நிலங்களின் ஆயக்கட்டுதாரர்களுடைய தயவிலே அவர்கள் விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. அதை எல்லாம் மறு பரிசீலனை செய்து தான் புதிய உத்திரவு போடுவதை அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

**அரியலூர் தொகுதியிலுள்ள கண்டிரா தீர்த்தம் ஏரியின் உள் வாயிலில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள்**

* வினா எண். 311—**திரு. த. ஆறுமுகம் :** மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதியிலுள்ள கண்டிரா தீர்த்தம் ஏரியின் உள் வாயிலில் தனியார்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) மற்றும் (ஆ) இவ்வேரியின் உள் வாயிலில் 11 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தார்கள். இதில் 10 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டன. மீதமுள்ள ஒரு நபர் ஏரியில் உள்ள ஒரு மாமரத்தை ஆக்கிரமித்துள்ளார். அதையும் அகற்றி, அந்த மரத்தை விதி முறைகளின்படி பொது ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. த. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, கண்டிரா தீர்த்த ஏரியில் 11 பேர்கள் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த ஏரியின் விஸ்தீரணம் எவ்வளவு ? ஆக்கிரமிப்பு இன்னும் அகற்றப்படவில்லை. துரித நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** அந்த விஸ்தீரணப் பற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. ஆனால் ஆக்கிரமிப்பு எல்லாம் அகற்றப்பட்டு இருப்பதாக இப்போது தகவல் தரப்பட்டிருக்கிறது. அது குறித்து ஏதாவது ஐயப்பாடு இருக்குமானால் மீண்டும் விசாரித்து பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஏற்கெனவே ட்ரைபில் டெவலப்மெண்ட் புரொகிராமில் (ஐ.டி.டி.சி.) தமிழகத்தில் ஒன்பது பகுதிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்த பகுதிகள் அதில் வரவில்லை. தேர்வு செய்யப்படுகிற பகுதிகளுக்குத் தான் மத்திய அரசிடமிருந்தும், மாநில அரசிடமிருந்தும் அதிகமான தொகை அளிக்கப்பட்டு அங்கே தேவைப்படுபவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற பகுதிகளில் இருக்கிற பிரச்னைகளை அரசு தனியாக ஆராய்ந்து ஆவன செய்யும்.

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம்—தலைமலை பகுதிகளில் வசிக்கிற ஆதிவாசிகளுக்காக இப்போது ஐந்து உறைவிடப் பள்ளிகள் நடந்து வருகின்றன. ஒரு நடுநிலைப் பள்ளியும் அவர்களுக்காக நடக்கிறது. ஆசனூரில் இருக்கிற அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றவேண்டுமென்ற கோரிக்கை அரசிற்கு வைக்கப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடன் நான் அந்த பகுதிகளுக்கு சென்றிருந்த போது அவர்கள் இந்த கோரிக்கையை என்னிடத்தில் தெரிவித்திருக்கிறார்கள். அரசு இது குறித்து பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது விவரங்களை சேகரிக்கிறேன் என்று சொன்னார்கள். குறிப்பாக நான் கேட்க விரும்புவது, சத்தியமங்கலம் தாலுக்கா, சத்தியமங்கலம் தலைமலை பகுதிகளில் இருக்கிறமலைவாழ் மக்களுக்கு தற்போது குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கிறதா ? இல்லையா ? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற சத்தியமங்கலம் வட்டத்தில் எட்டு செட்டில்மெண்டுகளை குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த எட்டு செட்டில்மெண்டுகளில் தற்போது இருக்கக்கூடியவர்கள் ஆறு செட்டில்மெண்டுகளில்தான் இருக்கிறார்கள் என்று என்னிடத்தில் விவரமான அறிக்கை தரப்பட்டுள்ளது. குடிதண்ணீர் பிரச்னை பொறுத்தவரையில், அங்கே ஒரு சில இடங்களில் குடிதண்ணீர் வசதி இல்லை என்று தகவல் இருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் ஏற்கெனவே பதில் அளித்திருக்கிறேன்.



## கொடைக்கானல் வட்டத்திலுள்ள கொத்தடிமைகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட்டம்

*வினா எண். 239. திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள கொடைக்கானல் வட்டாரத்தில் உள்ள கொத்தடிமைகளுக்கு புனர்வாழ்வு கொடுக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மேற்படி திட்டத்திற்கு ஏற்கனவே அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல் வட்டத்தில் 232 விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு நபர் ஒன்றுக்கு ரூபாய் 1,603 வீதம், ரூபாய் 3,71,896 செலவில் கோதுமை, வாழை முதலியவைகளை பயிரிடுவதற்கும், ஆப்பிள், பிளம் பயின் போன்ற பழவகை செடிகளை பயிரிடுவதற்கும் நபருக்கு ரூபாய் 700 வீதம் 100 கொத்தடிமைகளுக்கு ரூபாய் 70,000 செலவில் கறவை மாடுகள் வாங்குவதற்கும் ஆக மொத்தம் ரூபாய் 4,41,896 அல்லது ரூபாய் 4.42 இலட்சங்களுக்கான திட்டங்களை மைய மாநில அரசு சமத்தொகை பங்கீட்டு (50:50) முறையில் 1980—81 ஆண்டில் செயற்படுத்த 28—2—1981 நாளிட்ட சமூக நலத்துறையின் அரசு ஆணை (நிலை) எண். 112ம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் பகுதியிலுள்ள கொத்தடிமைகள் கண்டுபிடிக்கப்பட்டு புனர்வாழ்வு கொடுத்திருப்பதுபோல் தமிழ்நாட்டில் வேறு எங்காவது எத்தனை கொத்தடிமைகள் கண்டு பிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டு புனர் வாழ்வு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, என்னிடத்திலேயுள்ள குறிப்புகள் படி இதுவரை தமிழகம் முழுவதும் 27,874 கொத்தடிமைகள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே கொடைக்கானல் பகுதியிலுள்ள கொத்தடிமைகள் கொடைக்கானல் மலையில் குறுக்குப் பாதையில் செல்வதற்கு கோவேறு கழுதைகளையும் குதிரைகளையும் சரக்குகள் வாங்கவும் போக்குவரத்துக்கும் உபயோகப்படுத்தி வருகின்றனர். அவற்றை வாடகைக்குத்தான் வாங்குகின்றனர். ஆகவே, புனர்வாழ்வு திட்டத்தின்கீழ் பழங்குடி மக்களுக்குக் குதிரைகள் இனாமாக வழங்குவதுபோல இவர்களுக்கும் இனாமாக வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினரைப் பொறுத்தவரை மலைப் பகுதியிலே இருப்பவர்களுக்கு அந்தவகையான வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. கொத்தடிமைகளுக்கு இதுவரை செய்யப்படவில்லை. வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் தாலுகாவில் 232 கொத்தடிமைகளுக்கு உதவி செய்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கொடைக்கானல் தாலுகாவில் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இன்றும் கொத்தடிமைகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள் அவர்களை நிலப்பிரபுக்களிடமிருந்து மீட்டு அவர்களுக்கு, நிலங்கள் அளித்து மற்ற வீட்டு வசதிகள் செய்து கொடுக்க இந்த அரசு, கடுமையான வறட்சிக் காலத்திலேயாவது ஒரு விஷேச சட்டத்தைக் கொண்டு வந்து அவர்களைப் பாதுகாக்க முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் பகுதியில் நான் சொன்னதைத் தவிர மேலும் பலர் இருப்பதாக உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற சில பிரச்சினைகளின்மீது மட்டும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் அதிகமான கொத்தடிமைகள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எங்கே என்ற விவரத்தை உறுப்பினர் அவர்கள் அளிப்பார்களானால் அரசு நிச்சயமாக அதிகாரிகளை அனுப்பி, தகுந்த நடவடிக்கைகளை எடுத்து, அவர்களை விடுவித்து, தகுந்த புனர்வாழ்வு அளிக்க முன்வரும்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொத்தடிமைகளை விடுவித்து, அவர்களுக்குப் புனர் வாழ்வு அளிப்பதற்கான திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். எந்த, எந்த முறையில், அந்த விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கு என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?



**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனர் வாழ்வு அளிப்பதற்கு அந்த மக்கள் வசிக்கக் கூடிய பகுதிகளில் அவர்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கச் செய்கின்ற உணர்வோடு அரசினுடைய பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. அது மட்டுமன்றி, கறவை மாடுகள் வழங்குதல் போன்ற பலவற்றையும், ஸ்டோன் கிரஷிங் யூனிட்ஸ் என்று சொல்கின்ற அந்த யூனிட்டுகளையும் அளித்து, அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அரசு அளித்து கொண்டிருக்கிறது. அது குறித்து முழு விவரம் இல்லை என்றாலும் அந்த மக்கள் இருக்கும் பகுதியிலே அவர்களுக்கு நிரந்தரமான வருமானம் கிடைக்கும் வழிவகையை செய்கின்ற திட்டத்தை அரசு வைத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முன்பு தள்ளிவைக்கப் பெற்ற வினா எண். 240-ஐ இப்போது எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** ஒரு விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பெற்றுள்ளது.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** தலைவர் அவர்களே, அவை முன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் இங்கே அறிக்கை வைக்கப்படவில்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** அறிக்கை இல்லாமல் எப்படிக் கேள்விகள் கேட்கமுடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே இந்தக் கேள்வி அமைச்சர் அவர்கள் வராத காரணத்தால் தள்ளிவைக்கப் பட்ட ஒன்றாகும். அன்றைக்கு இந்தச் சபையிலே அந்த அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வைக்கவில்லை என்று சொல்வது தப்பு. ஏற்கெனவே கொடுத்தாகிவிட்டது. அதைப் பார்க்கவில்லை என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** அதைத் தேட முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வியைத் தள்ளி வைத்துவிட்டு, மீண்டும் எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவரவர்களே, இந்தக் கேள்வியை மாற்றுவதற்கு ஃப்ளோரின் கன்செண்டை வாங்க வேண்டும். ரூல்படி அவ்வாறு வாங்க வேண்டும். நான் ரூலைப் படிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினரவர்கள் ரூலைப் படிப்பதற்கு முன் நான் சொல்கிறேன். இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலை என்னவென்றால், 240ஆம் எண்ணுள்ள கேள்வி எடுக்கப்பட்டது, இந்தக் கேள்வி முன்னர், அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பட்டது. அன்றைக்கு அந்த அறிக்கையை வைத்திருக்கிறார்கள். அன்றைக்கு வைக்கப்பட்டது இன்றைக்கு நினைவு இருக்கும் என்பது முடியாத காரியம். உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்க முடியாதுதான். எனவே அந்த அறிக்கை இல்லாத நிலையில் இதை எடுத்துக் கொண்டால் எப்படி விவாதிக்க முடியும் என்ற பிரச்னையை உறுப்பினர்கள் எழுப்பினார்கள். ஆகவே, இந்தக் கேள்வியைப் பிறகு திரும்ப எடுத்து கொள்ளலாம். அப்படித் தீர்ப்பளிப்பதற்கு எனக்கு உரிமை உண்டு. ஆகவே, இதிலே பிரசினை இல்லை.

சங்கரன்கோவில் நகரில் ஆதிதிராவிடர் மாணவர் மாணவியர்களுக்கான உணவு விடுதிகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 241—**திரு. பி. துரைராஜ் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் நகரில் ஆதிதிராவிடர் மாணவர், மாணவிகளின் அரசினர் உணவு விடுதிகளுக்கு கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் நகரில் மாணவியர் உணவு விடுதிக்கு 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டிடம் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் இக்கட்டிட வேலையானது தொடங்கப்பட்டு விட்டது என்றும், இன்னும் 6 மாதங்களுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்கள். மேற்படி நகரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்ட முன்மொழிவுகள் எதுவும் நிலுவையில் இல்லை என்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.



**திரு. பி. துரைராஜ் :** பேரவைத் தலைவரவர்களே, சங்கரன்கோவில் நகரில் உள்ள மாணவர் விடுதிக்குக் கட்டிடம் தேவை என்று தற்போது கோரிக்கை வைக்கப்பட்டு, கடந்த சில நாட்களுக்கு முன்னால் அதுகுறித்து அதிகாரிகள் அரசுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதை வரவழைத்து, விரைவில் அந்தக் கட்டிடத்தை கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாணவர் விடுதிக்கு அவர்கள் அனுப்பி இருப்பதாக உறுப்பினரவர்கள் தெரிவிக்கிறார்கள். அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

டெல்லியில் கூடும் அணி சேரா நாடுகளின் மகாநாட்டிற்கு வாழ்த்து

* **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, பாரதத்தின் நெடிய வரலாற்றிலே இன்றைக்கு ஒரு சிறப்புக்குரிய நாள். உலகத்தில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தொகை கொண்ட அணி சேராத 100 நாடுகளின் 7-வது உச்சி மாநாடு இன்றயைதினம் டெல்லியிலே கூடுகிறது. பாரதத்தின் பெருமைக்குரிய பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இந்தக் கூட்டுச் சேராத நாடுகளின் தலைவர் பொறுப்பை அடுத்த மூன்றாண்டுகளுக்கு இன்னும் சற்று நேரத்திலே ஏற்க இருக்கிறார்கள். உலக சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், பொருளாதார மேம்பாடுகளுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் இந்த மாநாடு வெற்றி பெறவும், பாரதத்தின் முயற்சி வெற்றி பெறவும் அவை முன்னவரவர்களும், தாங்களும் வாழ்த்துக் கூறுவது இந்த நேரத்திலே பொருத்தமாக இருக்கும் என்று நான் கூறுகிறேன்.

(முற்பகல் 10—10).

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில் பாராளுமன்றமே கூடவில்லை. ஒரு வார காலத்திற்கு ஒத்தி வைத்திருக்கிறார்கள். அதைப்போல் ஏதாவது நமக்கும் சலுகைகளை அளித்தால் சௌகரியமாக இருக்கும். அப்படிச் செய்தால் பாராளுமன்றத்தைப் [illegible] பின் பற்றியதாகவும் இது அமையும் என்று ஆலோசனை சொல் [illegible] கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னையிலே அணி சேரா நாடுகள் மாநாடு நடத்தப்படும்போது கட்டாயம் இந்தச் சபை ஒத்தி வைக்கப்படும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உள்ளபடியே இந்தியாவிற்கு பெருமை சேர்க்கின்ற வகையில் 101 நாடுகளுக்கு மேற்பட்ட நாடுகள் அணி சேராத நாடுகளாக அமைந்து இந்தியாவினுடைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இந்தியாவிற்குப் பெருமை தேடித் தரும் வகையில் அமைந்துள்ள இந்த மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறவும், அதன் மூலமாக உலக அரங்கில் இந்தியா பெறுகின்ற பெருமையும் புகழும் மேலும் மேலும் ஓங்கும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கிறது. அந்த வகையிலே இன்று இந்த மாநாடு கூடப்பெறுவது நமக்கு எல்லாம் பெரு மகிழ்ச்சி அளிக்கிறது என்பது மட்டுமல்லாமல், அந்த மாநாட்டுக்கு இந்தச் சட்டமன்றப் பேரவையின் சார்பாக, தமிழகத்திலே உள்ள $4\frac{3}{4}$ கோடி மக்களின் பிரதிநிதிகளாக அமைந்து இருக்கின்ற இந்தச் சட்டமன்றம் தன்னுடைய உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது என்ற வகையிலே இந்த மாநாடு எல்லா வகையிலேயும் வெற்றிபெற வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவிக்கிற வகையிலேயும் நம்முடைய உணர்வை வெளிப்படுத்துவது மிகப் பொருத்தமாக அமையும். அந்த வகையிலே இந்த அவையிலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களின் சார்பாகவும், எல்லாக் கட்சித்தலைவர்களின் சார்பாகவும், அவையினுடைய முன்னவர் என்ற முறையிலே இந்த மாநாட்டுக்கு வாழ்த்துக்களை அளிப்பதோடு இந்த மாநாடு எல்லா வகையிலேயும் வெல்க வெல்க என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் அணி சேரா மாநாடு பற்றி இங்கே குறிப்பிட்டு, பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்த நேரத்திலேயிருந்து இன்னும் 3 ஆண்டுக் காலத்திற்கு தலைமைப் பொறுப்பை ஏற்கின்ற இந்த விழாவைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இந்த மாநாடு உலகச் சரித்திரத்திலே இந்தியாவினுடைய முக்கியத்துவத்தை மிகவும் உயர்த்துகின்ற ஒரு மாநாடாக அமைந்திருக்கிறது. எதிர்பார்க்கிற வகையிலே எல்லா அணி சேராத நாடுகளின் பிரதிநிதிகள் நேற்றே வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே இது உலகம் பூராவிலும் பரவி மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற காலகட்டத்திலே இந்த மாநாடு இன்றைக்குக் கூடுகிறது. டாக்டர் ஃபிடெல் காஸ்ட்ரோ அவர்கள் தலைமைப் பொறுப்பை பாரதப் பிரதமர் இந்திராகாந்தி



அம்மையார் அவர்களிடத்திலே அளித்திருக்கிறார்கள். இப்போது இந்த மாநாட்டினுடைய பொருளாதாரத் துறைத் தலைவராக இருக்கும் எல். கே. ஜா அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டு இருப்பதை நீங்கள் எல்லாம் பார்த்து இருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஏழை நாடுகள், வளருகின்ற நாடுகள் என்று சொல்லப்படுகிற, நம்முடைய இந்தியா உட்பட—எவ்வளவு கோடி கடனுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு வரலாற்று உண்மையை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 20 லட்சம் கோடி கடன் இத்தனை நாடுகள் வாங்கியிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். சில நாடுகளிலே ஒரு மாதத்திற்கு மேல் உணவுப் பண்டங்களை கூட வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, சில நாடுகளிலே எண்ணெய் இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்ற ஒரு அபாயகரமான குறிப்பைச் சொல்லி, 1930-ம் ஆண்டு இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டபோதுதான் உலக யுத்தம் மீண்டும் ஏற்பட ஆரம்பித்தது என்ற வரலாற்று உண்மையை நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த மாநாடு எதிர்காலத்திலே உலகத்திலே அமைதியையும், சமாதானத்தையும், நிரந்தரமான ஒரு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு வழிகாட்டியாக அமையக் கூடியதாக அமைந்திருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமை பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு மாநாட்டை பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் கூட்ட கனவு கண்டார்கள் என்று சொல்லலாம். அவர்கள் இந்தோனேசியாவிலே, பாண்டுங் என்ற இடத்தில் பஞ்ச சீலத்தை உலகத்திற்கு அறிவித்தவர் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள் என்று நான் நம்புகிறேன். அப்படிப்பட்டவர்களுடைய வழியைப் பின்பற்றி இன்றைக்கு நம்முடைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் உலக சமாதானத்திற்கு ஒரு பெரிய மாநாட்டைக் கூட்டியிருக்கிறார்கள். அதற்கு அவை முன்னவர் அவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதோடு என்னுடைய வாழ்த்தையும் நான் இந்த மாநாட்டிற்குத் தெரிவிப்பதோடு இந்த மாநாடு வெற்றிகரமாக நடைபெற்று உலகத்திற்கு திற்கு சிறந்த வழிகாட்டியாக அமைய வேண்டுமென்ற எண்ணத்தையும் உங்களின் சார்பிலேயும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: இந்த மாநாடு சம்பந்தப்பட்ட விஷயத்தை பற்றி உண்மையிலேயே எல்லாக் கடசித் தலைவர்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்பு தரவேண்டும். ஏனென்றால் இது முக்கியமானது. அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்க கூடிய அந்தக் கூட்டுச் சேரா நாடுகளுடைய மாநாட்டிலே இதுவரை சீரும் சிறப்புமாக அதனுடைய தலைவராயிருந்த காஸ்ட்ரோ இன்று காலைதான் இந்தியாவினுடைய பிரதம அமைச்சரி

டத்தில் இந்தக் கூட்டுச் சேரா நாடுகளுடைய தலைமைப் பதவியை ஒப்படைக்கிறார்கள். உலகத்திலே ஏகாதிபத்தியங்கள் பயங்கரமான அணு ஆயுத யுத்தத்திற்கு தயார் செய்துகொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் இந்த மூன்றாவது உலகத்தைச் சேர்ந்த நாடுகள் தங்களுடைய அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், பொருளாதார சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் தங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இந்தக் கூட்டுச் சேரா நாடுகளுடைய மாநாடு மிக முக்கியமானதாகும். 1962 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம், இன்றைய தினம் புதியதாக சேர்த்துக் கொள்கிற நான்கு நாடுகளோடு 101 நாடுகளைக் கொண்டதாக இந்த மாபெரும் இயக்கம் ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே இது ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்கக் கண்டங்களிலே இருக்கக்கூடிய புதியதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் அனைத்திலும் உள்ள பிரச்சினைகளை இந்த மாநாடு கலந்தாலோசிக்க இருக்கிறது. இந்த நாடுகள் கடந்த காலத்திலே, அதனதன் வளர்ச்சிக்காக பல அவதிக்கு உள்ளாகி இருக்கின்றன. அதன் விளைவாக, அவர்களுடைய பொருளாதார நிலை நசுங்கி இருந்தது. பின்னர் விடுதலை அடைந்த பிறகு பொருளாதார வளர்ச்சிக்காக அவர்கள் பாடுபட்டதற்குப் பிறகு, உலகத்திலுள்ள முற்போக்கு நாடுகள் எல்லாம் அவற்றுக்கு உதவி இருக்கின்றன. கூட்டு சேராத நாடுகளின் மாநாடு இந்தியாவிலே நடைபெறுவது நம் அனைவரின் பெருமைக்குரிய ஒரு விஷயம் என்ற காரணத்தால் தமிழகத்திலே உள்ள அனைத்து மக்களின் சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் அந்த கூட்டு சேரா மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற தீர்மானத்தையொட்டி நாங்களும் எங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இப்போது டில்லியிலே கூடியுள்ள அணிசேரா நாடுகளின் மகாநாட்டில் 101 நாடுகள் கலந்து கொள்கின்றன. அணிசேரா நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து கூடுவது ஒரு மாபெரும் இயக்கமாகும். இந்த மகாநாட்டில் நம்மைப்போன்று வளர்ந்து வரக்கூடிய நாடுகளுடைய பல கோரிக்கைகள் முன்வைக்கப்பெற்று இருக்கின்றன. அதிலும் குறிப்பாக இன்றைக்கு நம்மைப்போன்று நாடுகள் எல்லாம் வளர முடியாதபடி ஏகாதிபத்திய நாடுகள் போடும் முட்டுக்கட்டைகள், ஏற்றுமதி இறக்குமதி என்று சொல்லக் கூடிய இவ்விரண்டும் வகையிலும் ஏற்படுத்துகிற



தடைகள், வளரும் நாடுகளுடைய கழுத்தை நெரிக்கக் கூடிய அவர்களது திட்டங்கள் ஆகியவற்றை எதிர்த்து, இந்த வளர்கின்ற நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தங்களுக்குள்ளாக ''நாம் எப்படி முன்னேறுவது, எப்படி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உலகத்தில் யுத்தம் என்றும் ஏற்படாதவாறு, அமைதியை நிலை நிறுத்தும்படி செயல்படுவது'' என்று ஆலோசிக்கும் முறையிலே இந்த மகாநாடு நடைபெற்று வருகிறது.

ஏகாதிபத்தியத்திற்கு சிம்ம சொப்பனமாக இருக்கக்கூடிய கியூபாவினுடைய தலைவர் காஸ்ட்ரோ இதுவரை அணி சேரா நாடுகளின் தலைவராக இருந்தார். அவர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த மாபெரும் வீரன். இன்றைய தினம் இந்தியாவில் கூடி இருக்கிற அணிசேரா நாடுகளின் 7-வது உச்சமகாநாட்டில், தம்முடைய தலைமைப் பொறுப்பை பாரதப் பிரதமரிடம் ஒப்படைக்க இருக்கிறார்கள்.

இந்த மகாநாடு இன்றைக்கு உலகத்திலுள்ள அதிலும், குறிப்பாக சுதந்திரம் பெற்று, இப்போது வளர்ந்துகொண்டுவருகிற நாடுகளுக்கெல்லாம் ஒரு நல்ல வழியைக் காட்ட பல பிரச்சினைகள் பற்றி விவாதிக்க இருக்கிறது; நம்மைப் போன்ற நாடுகள் எல்லாம் ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்காது எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று முடிவு செய்ய இருக்கிறார்கள்.

இப்போது நம்முடைய தமிழகமக்கள் அத்தனை பேர் சார்பிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும், அந்த மகாநாடு இனிது நடைபெற நான் எனது வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

* திரு ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இப்போது டில்லியிலே 101 நாடுகள், அணி சேரா நாடுகள் நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தலைமையிலே கூடியிருக்கிறது. இது இந்தியாவுக்கு பெருமை அளிக்கிற ஒரு மகத்தான விஷயம் என்பது மட்டும் அல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக உலகத்தின் அமைதியை நிலை நாட்டச் செய்கிற மாபெரும் பொறுப்பினை, அணி சேரா நாடுகளுக்குத் தலைமை தாங்குகிற பாரதப் பிரதமர் ஏற்று இருக்கிறார்கள் என்பது உலகம் பூராவும் இருக்கக்கூடிய சமாதானத்தை விரும்புகிறவர்களுக்கு எல்லாம் மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக இருக்கும்.

அணி சேரா நாடுகளில் அமைப்புக்கு அடித்தளம் அமைத்த மனிதருள் மாணிக்கம் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களை இந்த நேரத்திலே நாம் எண்ணி பார்க்க வேண்டியது இந்தியனாகப் பிறந்த ஒவ்வொருவரின் மகத்தான கடமையாகும்.

## டெல்லியில் கூடும் அணி சேரா நாடுகளின் வாழ்த்து

[திரு. ப. நெடுமாறன்] [1983 மார்ச் 7

**1946** ஆம் ஆண்டிலே இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னதாகவே, அன்றைக்கு உலகம் பூராவும், ஆசியா, ஆப்ரிக்கா நாடுகள் எல்லாம் காலனி நாடுகளாக, அடிமைப்பட்டுக் கிடந்த நிலையிலே, இதே புது டில்லியிலே, 'ஆசிய மாநாடு' என்ற பெயரிலே நேருஜி அவர்கள் ஒரு மகாநாட்டைக் கூட்டினார்கள்.

(முற்பகல்10.20)

அன்றைக்குத் தொடங்கி, இன்று நடைபெறும் அந்த அணி சேரா மாநாடு வரையில், இந்த அணி சேரா நாடுகள் அமைப்பு உலகத்திலே உள்ள அனைத்து ஏகாதிபத்தியத்தையும், காலனி ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடும் ஒரு அமைப்பாக உருவாக்குவதற்கு இந்தியா செய்து வந்து இருக்கும் முயற்சிகளையும் நாம் இந்த நேரத்தில் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்பாக, நேருஜி அவர்களை மீண்டும் மக்களுக்கு நினைவுபடுத்தி, நம்முடைய மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தமிழக மக்களின் சார்பாகவும், எங்களுடைய இயக்கத்தின் சார்பாகவும் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கும் அணி சேரா நாடுகளின் அதிபர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. பி. முகமது இஸ்மாயில் : பேரவைத் தலைவர் அவர்களே, அணி சேரா நாடுகளின் மாநாடு, ஆரம்பக் கட்டத்தில் தோற்றுவித்த சில சிக்கல்களைத் தவிர்த்து, மிக வெற்றிகரமாக, மகிழ்ச்சிகரமாக ஆரம்பமாகியிருக்கிறது. உலக வல்லரசுகள் ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு, உலக நாடுகளுக்கு பெரும் அபாயத்தைத் தோற்றுவித்து, மக்கள் சமுதாயத்தை அழித்து விடுமோ என்ற அச்ச உணர்வு ஏற்பட்ட காலத்தில், இந்த இரண்டு சக்திகளுக்கும் எதிராக ஈடுபட்டு இருந்த நாடுகளை ஒன்றாக இணைத்து, ஒரு நடுநிலை இயக்கம் தோற்றுவித்த பெருமை, நம்முடைய நாட்டினுடைய அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களைச் சாரும்.

அன்றைய தினத்தில் இருந்து நாளுக்கு நாள் அது வலுப்பெற்று இன்றைக்கு 101 உறுப்பினர்களைக் கொண்ட மிகப் பெரிய சக்தியாக அது வளர்ச்சி பெற்று இருக்கிறது. உலக வல்லரசுகளும், ஏகாதிபத்திய நாடுகளும், அதே நேரத்தில் சர்வாதிகார நாடுகளும், சிறிய நாடுகள் தாக்குதலில் இருந்து தம்மைத் தற்காத்துக் கொள்வதற்கும், அவர்களுடைய ஆதிக்கப் பிடியிலிருந்து ஏனைய நாடுகள் தற்காத்துக் கொள்வதற்கும், இந்த நடுநிலை இயக்கம் பெரிதும் பயன் தருவதாக இருக்கிறது.

எங்களுடைய இயக்கத்தின் சார்பில் அந்த மாநாடு வெற்றி பெற வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலக மக்கள் சமுதாயத்திற்கு நம்பிக்கையூட்டும் வண்ணம் அந்த இயக்கம் வலுப்பெற்று, வளர்ச்சியடையத்தக்க அளவிற்கு

## டெல்லியில் கூடும் அணி சேரா நாடுகளின் மகாநாட்டிற்கு வாழ்த்து

1983 மார்ச் 7]] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

டெல்லியில் நடைபெறுகின்ற அந்த மாநாடு சிறப்புற வெற்றியடைய வேண்டும் என்று நான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே இன்றைக்கு கூட்டு சேரா நாடுகளின் மாநாடு ஆரம்பமாகியிருக்கிறது. மற்ற கட்சித் தலைவர்கள் கூறிய கருத்துக்களோடு என்னுடைய கருத்துக் களையும் இணைத்து, அந்த மாநாடு சிறப்பாக வெற்றி அடைய காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பிலே நான் வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* THRU K. S. G. HAJA SHAREEF : Mr. Speaker, Sir, I rise to join with all my colleagues and leaders of various parties in wishing the Seventh Non-Aligned Conference, which has commenced at 8.30 a.m. in New Delhi, a unique success.

We are all aware that this has been taken as a challenge by our country after some difficulties experienced by Iran. Within six months to make these tremendous arrangements, I would certainly say that this is going to be a feather in the Indian cap under the leadership of our Prime Minister Mrs. Indira Gandhi. It is not going to be merely a conference, it is represented by 101 countries, where all the Prime Ministers, Presidents and Kings have come to discuss the common problems—economic, social and various other problems. You have rightly quoted Mr. Speaker, Sir, the speech of Mr. L. K. Jha, who has given the gravity of situation which then under-developed countries are facing under serious circumstances. I am sure, under the very able and distinguised leadership of our beloved Prime Mimister, Indira Gandhi, this conference will deliberate very useful problems and come to conclusion so that affluent countries will certainly help non-affluent countries.

On behalf of the Indian National Congress Party, I extend my fullest best wishes for the success of this Conference.

Thank You.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிகளுமாகச் சேர்ந்து வாழ்த்து கூறுகிற இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் அணி சேரா நாடுகளுடைய மாநாட்டிற்கு என் வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உலக அமைதி, மனித உரிமைகள், நடுநிலைக் கொள்கைகள் இவை எல்லாம் நிறைவேறுவதற்கு இந்த மாநாடு மிகப் பெரும் அளவில் உதவிகரமாக இருக்கும் என்பதில் யாருக்கும் ஐயம்

இல்லை. 101 நாடுகள் ஒன்று சேர்ந்து உலகத்திற்கு சில கருத் துக்களை அறிவிக்கிறபோது, அந்தக் கருத்துக்கள் வலிமை பெறும்; அந்தக் கருத்துக்களுக்கு மேலும் மேலும் ஆதரவு பெருகும் என் பதிலே நமக்கெல்லாம் நம்பிக்கை இருக்கிறது.

காந்தியடிகள், தொடங்கிய அமைதி நெறி, அந்த நெறிக்கு உறுதுணையாக பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் மேற் கொண்ட பஞ்சசீல கொள்கை அடிப்படையிலே உருவான நடு நிலை கொள்கை என்பது அணி சேரா நாடுகள் மாநாடு மூலம் உலகத்தில் மேலும் மேலும் வலுவடையும். அத்தகைய ஒரு நிலையினால் இந்தியா போன்ற ஏராளமான மக்கள் தொகை கொண்ட நாடுகள் பல தங்களுடைய உரிமையைப் பாதுகாத்துக் கொள்வது மட்டுமல்ல ; மனித உரிமையைப் பாதுகாப்பதற்கான வழிவகைகள் மேலும் மேலும் உருவாகும் என்பதையும் நாம் எதிர்பார்க்கலாம்.

இந்த அணி சேரா நாடுகள் மாநாட்டுக்கு வரும் அண்டை நாடுகளின் தலைவர்கள் இந்தியாவைப்பற்றி கூறியுள்ள பல்வேறு நல்ல கருத்துக்கள் இந்தியாவைச் சூழ்ந்திருக்கிற வட்டாரத்தில் அமைதி நிலைபெறுவதற்கும், ஆக்கிரமிப்பு அகற்றப்படுவதற் கும், இந்தியாவைச் சூழ்ந்திருக்கிற கடற் பகுதியில் வல்லரசுகள் படைப் பெருக்கத்தை தடுத்து நிறுத்தவும் இது வழிகோலும் என்று நம்புகிறேன்.

இந்த உயர்ந்த நோக்கம், நல்ல முடிவுகள் உலக மக்களுக்கு பயன்படும் வகையில் இந்த மாநாட்டில் கலந்துக் கொண்டிருக் கின்ற அண்டை நாடுகளுடைய தலைவர்கள் என்ற முறையில், ஸ்ரீலங்காவின் தலைவராக விளங்குகிற ஜெயவர்த்தனே அவர்கள் இந்தியாவிலிருந்து ஸ்ரீலங்காவிற்குச் சென்று, அங்கே பல தலை முறைகளாக வாழ்கிற மக்களின் குடியுரிமை பாதுகாக்கப்படும், சிவில் ரைட்ஸ் வழங்கப்படும் என்னும் கருத்தை தெரிவித்திருக்கிற அந்தச் செய்தி அணி சேரா நாடுகள் மாநாடு மூலம் நமக்குக் கிடைத்திருக்கிற ஒரு நல்ல செய்தி என்று கருதுகிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி.)

ஸ்ரீலங்காவில் வாழ்கிற தமிழர்கள் மட்டுமல்ல. உலகத்தில் எந்த நாட்டில் வாழ்கிற இத்தகைய சிறுபான்மையராக இருந் தாலும் அவர்களுடைய நியாயமான உரிமை நிறைவேறுவதற்காக, ஆதிக்க சக்திகளிடமிருந்து அந்த மக்களுக்கு நியாயமான உரிமை கள் வழங்கச் செய்ய இத்தகைய மாநாடுகளில் உருவாகுகின்ற நல்ல கருத்துக்கள் பயன்படும் என்பதுடன் மனித இனம் முன் னேறுவதற்கு, வறுமைக்கு ஆளாகிற மக்கள் வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கு, முதலாளித்துவ ஆதிக்கத்திலிருந்து சமூகத்தைக் காப்பதற்கு இந்த அணி சேரா நாடுகள் மாநாடு மிகச் சிறந்த வெற்றி பெறவேண்டுமென்று விரும்பி, மாநாட்டிற்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## 3. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்.....

திரு. ப. பொன்னுரங்கம் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சி கள் சம்பந்தப்பட்ட பல சட்ட முன்வடிவுகள் விவாதத்திற்கு வரவிருக்கின்றன. அவற்றுக்கு நாங்கள் சில அமென்ட்மெண்டுகள் கொடுத்திருக்கிறோம். சட்ட முன்வடிவுகள் விவாதத்திற்கு வரும் போது அவற்றுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களும் அவையில் வைக்கப்படுவது பழைய வழக்கம். இன்றைக்கு அந்தத் திருத்தங்கள் வைக்கப்படவில்லை. வீட்டுக்கு அனுப்பி விட்ட தாகச் சொல்லலாம். கேள்வித்தாள் எல்லாம் வீட்டுக்கு வரு கின்றன. ஆனால் இங்கேயும் வைக்கப்படும் ; இன்றைக்கு வைக் கப்படவில்லை ; வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் உறுப்பினர் களுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டிருக்கின்றன. இதிலே ஒழுங்குப் பிரச்சினைக்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர் களே, தமிழ்நாட்டில் இன்றைய தினம் பரவலாக கிராமங்களில் காலரா நோய் பரவி, பலர் இறந்திருக்கிறார்கள். அதுபற்றி 3 ஆம் தேதியே ஒரு கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன். அது மிக முக்கியமான பிரச்சினை. ஆகவே, அதை இன்றைக்கே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—30)

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கரும்புக்கு சென்ற ஆண்டு அறிவித்த விலையை இவ்வாண்டு அரசு குறைத்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ் வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், எம். செல்ல முத்து, டி. மணி, கே. ஆர். சுந்தரம், என். வரதராஜன், என். சங்கரய்யா, என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி, வி. கிருஷ்ணமூர்த்தி, சோ. அழகர்சாமி, மு. அம்பிகாபதி ஆகி

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Company, Madras-4.
3. Higginbothams (Private) Limited, Madras-2.
4. P. Varadachary and Company, Madras-1.
5. C. Subbiah Chetty and Company, Madras-5.
6. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitharaman and Company, Madras 14.
8. Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts R. Madras-5.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Limited, Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1. A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2. Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3. P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4. Appar Book Stall, Thanjavur.
5. P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
   Palaniappa Bros., Tiruchirappalli-2
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8. B. Aruldoss, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10. Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12. Ganesh Stores, South Car Street, Sivakasi.
13. Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar & Sons, Salem 1.
15. Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16. Meenakshi Pathippagam, Pudukkottai.
17. K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18. Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19. Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20. Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18
21. Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22. Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23. Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24. Ajantha Book Centre, Salem-1.
25. Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-3.
26. Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai 1.

### IN OTHER STATES

1. Jain Book Agency, New Delhi.
2. International Book House, Trivandrum.
3. The Book Syndicate. Hyderabad-1.
4. Labour Law Publications, Hyderabad.
5. Puthaghaleyam, Pondicherry.
6. Prabu Book Service, Gurgaon, Haryana.
7. K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street. Calcutta-12.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

யோர் '' கரும்பு உற்பத்திக்கான செலவுகள் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதிகம் பணம் செலவு ஆகியுள்ள சூழ்நிலையில் சென்ற ஆண்டு கரும்பு விலையை விட இந்த ஆண்டு டன்னுக்கு சுமார் இருபது ரூபாய்க்கும் அதிகமாக விலையைக் குறைத்து தமிழக அரசு அண்மையில் அறிவித்துள்ளதால் கரும்பு விவசாயிகளிடையே எழுந்துள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. சொரணத்திற்றுப் பதிலாக திரு. வரதராஜன் அவர்கள் பேசுவதற்கு என் அனுமதி கேட்டிருக்கிறார்கள். திரு. வரதராஜன்

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் எங்களுக்கு முதன்மையிடம் கொடுப்பதுதான் மரபு. அவர்கள் முதலில் பேச வேண்டும் என்று கேட்டால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. தாங்கள் கடைசியில் பேச என்னை அனுமதித்தாலும் பேசி விட்டுப்போகிறேன்.......(குறுக்கீடு).

திரு. என். சங்கரய்யா : முதலில் எந்தக் கட்சி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அறிவிக்கையைக் கொடுத்திருக்கிறதோ, அந்தக் கட்சி அடிப்படையில்தான் இதுவரையில் தாங்கள் முதலில் பேச அனுமதித்து வந்தீர்கள். அப்படியே இப்போதும் இருக்கட்டும். மரபை மாற்ற வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படித்தான் இது வரையில் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, திரு. வரதராஜன் அவர்கள் பேசட்டும்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாட்டில் கரும்பை உற்பத்தி செய்கிற உற்பத்தியாளர்கள், விவசாயிகள் மிகக் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். கவலையடைந்துள்ளார்கள். இந்த ஆண்டு நாம் கரும்புக்கு நிச்சயித்திருக்கக்கூடிய விலை டன்னுக்கு 155 ரூபாய். கடந்த ஆண்டு நாம் நிச்சயித்த விலை ரூ.175 அதற்கு முந்தைய ஆண்டு நாம் நிர்ணயித்த விலை ரூ. 185 ஆகவே, 185 லிருந்து இரண்டாண்டுகளுக்குள்ளாகவே 155 ஆக விலை குறைந்திருக்கிறது.



ஆனால், கடந்த இரண்டாண்டுகளுக்குள்ளே உற்பத்தி செலவு அதிகரித்திருக்கிறது. உரத்தின் விலையும் கூடியிருக்கிறது. தேவையான இடுபொருள்களின் விலையும் கூடியிருக்கிறது. உற்பத்திச் செலவு உயர்ந்திருக்கிறது. ஆகவே, இப்படி உற்பத்திச் செலவு கூடிக்கொண்டே போகிற நேரத்தில் இந்த 155 ரூபாய் என்ற விலை குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. இது மிக கடுமையான நிலை. அப்படிப்பட்ட கடுமையான நிலைமைக்கு விவசாயிகள் உள்ளாகியிருக்கிறார்கள், ஆனால் அதே நேரத்தில் சர்க்கரை ஆலையில் இருக்கக்கூடிய இலாபமானது, இவ்வாறு இதன் அடிப்படையில் குறைந்திருக்கிறதா என்று சொன்னால், அது கூடிக்கொண்டே இருக்கிறது என்ற புள்ளி விவரம்தான் கிடைக்கிறது. இதை நாடே அறியும் ; நாமும் அறிவோம். ஆகவே, கரும்பை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளின் நிலைமை போன ஆண்டு கிடைத்த 175-க்கு கூட விலை கிட்ட முடியாது போகிறதே என்ற கவலைக்கிடமான நிலைமையாகத்தான் இருக்கிறது.

தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய சாதாரண மக்களுக்குக்கூட, இன்றையதினம் உள்ள விலைவாசி நிலைமை தெரியும். காட்டில் வெகு சாதாரணமாக கிடைக்கக்கூடிய காட்டு விறகுகளுக்குக் கூட இன்றைய தினம் ஒரு டன்னுக்கு 300 ரூபாய் வீதம் கொடுத்து நம்முடைய தமிழ் மக்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இன்றையதினம் கண்ணீரை தண்ணீராகக் கொட்டி 10 மாதம் கஷ்டப்பட்டு பயிரிட்ட கரும்பை 150 ரூபாய்க்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அவர்கள் பெருமளவில் கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் உள்ளாக வேண்டியிருக்கிறது.

ஏற்கெனவே விவசாய விலைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் இதுகுறித்து கண்ணீர் விடுகிற நிலைமை இருந்து வருகிறபோது, கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு இந்த விலை குறைப்பு தனியாக தண்டனை வேறு கொடுப்பது போல் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழ் நாட்டினுடைய சர்க்கரை உற்பத்தி, அல்லது ஜீனி உற்பத்தி தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்ப்பதற்கு பதிலாக, உற்பத்தி செய்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு தண்டனை கொடுக்கும்படியான நிலைமையில்தான் இந்த விலை குறைப்பு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், பல ஆண்டுக் காலமாக விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகளை வற்புறுத்திக்கொண்டே வருகிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள், '' ஆலைகளுக்கு இதனால் இலாபம் குறையவில்லை அதிகரிக்கிறது என்பது மட்டுமல்ல, நாங்கள் கொடுக்கும்படியான கரும்புக்கு ஏற்ப விலைகள், அன்றாடம் கிடைப்பதே இல்லை. கொடுத்து 6 மாதங்கள் கழித்துதான் பணம் தருகிறார்கள். ஆனால், அதற்கான வட்டியை அவர்கள் கொள்ளை அடித்துக் கொள்கிறார்கள். எங்களுக்கு அதில் ஒரு இலாபமும் இல்லை.

அது மட்டும் அல்லாமல் ஆலைகளில் பிடித்தல் என்ற பெயரால் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் பிடித்துக் கொண்டு அவர்கள் இலாபம் அடைந்துகொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் உழைத்துக் கொண்டிருக்கும் எங்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லாத நிலையில், தண்டனை கொடுக்கும் படியான நிலையில் இப்படிப்பட்ட விலை குறைப்பு செய்வது ஏனோ'' என்று தமிழகத்தினுடைய கரும்பு விவசாயிகள் கண்ணீர் விடக்கூடிய காட்சி இருக்கிறது.

நெல்லை உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொன்னால் ஒரு குவிண்டாலுக்கு 150 ரூபாய் என்று கொடுக்கப்படவேண்டும் என்று விலை உயர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்நாளில் கரும்புக்கு மட்டும் இப்படிப்பட்ட விலை குறைவு இருப்பது சரியல்ல. அது மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் ஒரு டன்னுக்கு 250 ரூபாய்க்கு மேல் செலவு செய்ய வேண்டிய நிலையும் இருக்கிறது. மாநில அரசு இந்த விலை நிர்ணயித்திற்கு எப்படி கணக்கீடு செய்தார்களோ, நாம் அறியோம். ஆனால், நாம் மத்திய அரசை மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். நாள் தோறும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். மத்தியிலே இருப்பவர்கள் மாநிலங்களிலே உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளின் நிலை, மற்றும் உற்பத்தியாகக்கூடிய விளை பொருள்களின் உற்பத்திச் செலவு நிலைமை ஆகியவைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் ஆலை அதிபர்களை மட்டும் கவனத்தில் எடுத்துக் கொண்டு, நடவடிக்கைகளை எடுத்து வருவதால் உற்பத்தியாளர்களுக்கு போதுமான விலை கிடைக்கச் செய்ய முடியவில்லை.

அதனால், மாநிலங்களில் பல பிரச்சினைகள் எழுகின்றன. கடன் பட்டிருக்கக்கூடிய விவசாயியால் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாத நிலைமை இருக்கின்றது. கிராமப்புறத்திலே உள்ள அந்த விவசாயிகள் வறுமைக் கோட்டிற்குக் கீழே தள்ளப்படக்கூடிய நிலைமை ஏற்படுகின்றது. விவசாயிகள் இன்றைய தினம் உற்பத்தி செய்து பின் மறு உற்பத்தி செய்ய முடியாமல் திண்டாடுகிறார்கள். மாநிலங்களில் நாம் கொள்முதல் செய்யக்கூடிய நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். வறுமைக் கோட்டுக்குக் கீழே தள்ளப்படுகின்ற நிலைமை இருப்பதன் காரணத்தால் இன்றைக்கு நெல்லுக்குக் கூடுதலாக விலை கொடுக்கலாம் என்று அறிவித்திருக்கிறோம். அப்படிப்பட்ட நிலைமையில் இவ்வாறு கரும்புக்கு டன் ஒன்றுக்கு 155 ரூபாய் என்ற அறிவிப்பு மிகப் பெரிய பாதகமான ஒன்றாகும். எனவே, இன்றைக்கு நாம் நம்முடைய கஷ்டத்தையும், நஷ்டத்தையும் ஏற்றுக்கொண்டு தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிலைமையில் டன் ஒன்றுக்கு



50 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசினை மாநில அரசு வற்புறுத்த வேண்டும். மாநில அரசினைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு கொடுத்த 175 ரூபாயையாவது இந்த ஆண்டு உடனடியாகக் கொடுப்பதற்குரிய முயற்சியினை மேற்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தைப்பற்றி விவாதிக்க வேண்டி இருப்பதன் காரணத்தால் இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தி அமர்கிறேன்.

*திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகஅரசு இந்த ஆண்டு கரும்புக்கு 155 ரூபாய் டன் ஒன்றுக்கு விலை நிர்யணம் செய்திருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் சொன்னதைப்போல கழிந்த ஆண்டு கரும்புக்கு டன் ஒன்றுக்கு 175 ரூபாயாகவும் அதற்கு முந்தைய ஆண்டு 185 ரூபாயாகவும் இருந்திருக்கின்றது. நான் மிகுந்த அச்ச உணர்வோடு எண்ணிப் பார்க்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் கரும்பின் விலை குறைந்துகொண்டே போகின்றது என்ற நிலைமையில் வருகின்ற ஆண்டிலே இன்னும் அதன்விலை குறைந்து விடுமோ என்று நான் அச்சப்படுகிறேன். எனவே 155 ரூபாய் என்பது மிக மிகக் குறைவு என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களும் அறிவார்கள். இதுகுறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் என்ன இனி சொல்வார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். வேளாண் விளைபொருள் கமிஷன் டன் ஒன்றுக்கு 155 ரூபாய் என்றும் இந்தியப் பேரரசு 130 ரூபாய் என்றும் நிர்ணயம் செய்திருக்கின்றது என்ற வாதத்தைச் சொல்லலாம் என்று நான் கருதுகிறேன். ஆனால் அண்மையிலே இருக்கின்ற ஆந்திரா மாநிலத்திலே காங்கிரஸ் கட்சியின் ஆட்சி இருந்தபோது அப்போது முதலமைச்சராக இருந்த திரு.விஜயபாஸ்கர ரெட்டி அவர்கள் 190 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருந்தார்கள். அதற்குப் பின்பு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த திரு. என். டி. ராமாராவ் அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டிருப்பதாக அறிகிறேன்.

இன்றைக்கு தமிழகத்திலே கரும்பு விவசாயம் செய்யும் பெரும்பாலான விவசாயிகள் ஏழை விவசாயிகளாக இருப்பதன் காரணத்தால் அவர்கள் மெத்த இடர்பாட்டுக்கு ஆளாகி இருக்கிறார்கள். வறட்சியோ வரலாறு காணாத அளவுக்கு இப்போது இருந்துகொண்டிருக்கின்றது. மின் தட்டுப்பாட்டைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை, அந்த அளவுக்குக் கடுமையாக இருக்கின்றது. ஒரு நாளில் 6 மணி நேரம், 5 மணி நேரம் தான் மின்சாரம் வரும் என்ற நிலைமையில் எப்போதுவரும், எப்போது போகும் என்பதே தெரியவில்லை. எப்போது மின்சாரம் துண்டிக்கப்படும் என்பது பற்றியும் யாருக்கும் தெரியவில்லை. எனவே, விவசாயிகள் தண்ணீரைப் பாய்ச்சி விவசாயம்